MINISTER FOR SOCIAL WE...
2-DEC1978
MADRAS-600 ...
GOVT. OF TAMIL NADU

# INDEX TO TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

**IFTY-THIRD SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA**

27th and 28th February, 1st and 2nd March 1978

VOLUME No. CXLVI (Nos. 1 to 4).

©
GOVERNMENT OF TAMIL NADU
978

*Legislative Council Department*
*Fort. St. George, Madras-600 009.*

PRICE: 1 *Rupee.*]

121.32 N78
N78-146,32
121943

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

## FIFTY-THIRD SESSION, OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME CXLVI (Nos. 1 TO 4).

*27th and 28th February, 1st and 2nd March* 1978.

## TABLE OF CONTENTS.

*Monday, 27th February* 1978.



| | ***Pages.*** |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu .. .. | i–iv |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council .. | v |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their constituencies .. .. .. .. .. | vii–x |
| 1 Questions and Answers .. .. .. .. .. | 1–23 |
| 2 Information *re* Absence of Chief Minister from the House. | 23–25 |
| 3 General discussion on the Budget for the year 1978–79—*cont.* | 25–75 |
| 4 Papers laid on the table of the House .. .. .. | 76 |

*Tuesday, 28th February* 1978.

| | |
|---|---|
| 1 Questions and Answers .. .. .. .. .. | 77–108 |
| 2 Information *re*— | |
| (1) Agitation by the Government servants .. .. | 108–109 |
| (2) Answer to a question .. .. .. .. .. | 109–110 |
| 3 Adjournment Motion *re* threatened boycott of examinations by College teachers .. .. .. .. | 111–114 |

PAGES

4 Announcement *re* decision of the Business Advisory Committee .. .. .. .. .. .. 114-115

5 Calling attention to agitation by agriculturists because of lowering of water table in irrigation wells consequent on sinking of giant size tube wells in Paralachi revenue firka in Aruppukottai Constituency .. .. .. 115-118

6 General discussion on the Budget for the year 1978-79 —*cont*. .. .. .. .. .. .. .. 118-165

7 Papers laid on the table of the House .. .. .. 167-16

*Wednesday*, 1*st March* 1978.

1 Questions and Answers .. .. .. .. .. 169-187

2 Adjournment Motion *re*

(1) Integration of the services of teachers and non-teaching staff of "A" and "B" wing schools .. 188-193

(2) Hunger strike by the staff of Revenue Department in Kanyakumari district .. .. .. .. .. 193-197

(3) Misbehaviour by the Police with a girl in Karaikudi South Police Station on 12th February 1978 .. .. 197-20

3 Information *re* Ismail Commission Report .. .. 188-18

4 Statement under rule 81 of the Council Rules *re* action on the allegations against the Chief Engineer of the Water and Drainage Board .. .. .. 202-204

5 General discussion on the Budget for the year 1978-79— *cont*. .. .. .. .. .. .. .. .. 204-23

*Thursday*, 2*nd March* 1978.

1 Questions and Answers .. .. .. .. .. 235-24

2 Adjournment Motion *re*

(1) Non-appointment of Vice-Chancellor in the Madurai University .. .. .. .. .. .. 250-

(2) Difficulties in exporting goods abroad by Handloom Weavers .. .. .. .. .. .. .. .. 252-





PAGES

Information *re*—Ismail Commission Report .. 246-249

4 Call Attention Notices—

(1) Hardship caused to Tamil Pandits, Grade I in the Government High Schools due to change in date of regularisation as 21st March 1974 .. 256-258

(2) Closure of Kothari Sugar Mills, Kattur .. 258-261

5 General discussion on the Budget for the year 1278-79 *cont*. .. 262-338

6 Paper laid on the table of the House .. 338

Indix .. 339-361

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

THIRU *PRABHUDAS PATWARI*

*Members of the Council of Ministers.*

1. THE HON. THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister in charge of Public, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Elections, Passport, Prohibition, Health, Medicine, Religious Endowments, Prevention of Corruption, Industries, Bhoodan and Gramdan, Ex-Servicemen, Mines and Minerals and Rural Industries Project.

2. THE HON. THIRU K. MANOHARAN, Minister in charge of Finance, Planning, Commercial Taxes and Excise, Revenue and Legislature.

3. THE HON. THIRU S. RAMACHANDRAN, Minister in charge of Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Iron and Steel Control and Electricity.

4. THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR, Minister in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Money Lending, Legislation on Chits and Registration of Companies.

5. THE HON. THIRU G. R. EDMUND, Minister in charge of Food, Food Production, Co-operation, Fisheries, Registration, Forest including Cinchona, Youth Service Corps and Price Control.

6. THE HON. THIRU R. M. VEERAPPAN, Minister in charge of Information and Tourism, Publicity, Film Technology, Tourism Development Corporation and Cinematograph Act.

7. THE HON. THIRU C. ARANGANAYAGAM, Minister in charge of Education including Technical Education, Official Language and Employment and Training.

8. THE HON. THIRU K. KALIMUTHU, Minister in charge of Local Administration, Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Union and Rural Indebtedness.

9. THE HON. THIRU S. RAGHAVANANDHAM, Minister in charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board and Town Planning.

10. THE HON. THIRU P. SOUNDARAPANDIAN, Minister in charge of Harijan Welfare, Backward Classes, Stationery and Printing, Government Press and Hill Tribes and Bonded Labour.

11. THE HON. THIRU C. PONNAIYAN, Minister in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Highways and Ports.

12. THE HON. SELVI P. T. SARASWATHI, Minister in charge of Social Welfare including Women and Children's Welfare, Animal Husbandry, Beggars' Home, Orphanages, Indians Overseas and Refugees, Evacuees and Correctional Administration.

13. THE HON. THIRU P. KOLANDAIVELU, Minister in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Engineering Wing, Milk, Dairy Development Corporation and Operation Flood Project.

14. THE HON. THIRU K. RAJA MOHAMMED, Minister in charge of Handlooms and Textiles, Accommodation Control, News Print Control, Agro-Service Co-operative Societies at Block, District and Apex Level including Federation, Waqfs, Yarn, Khadi and Village Industries.



தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

தமிழ்நாடு ஆளுநர்

திரு. பிரபுதாஸ் பட்வாரி.

**அமைச்சரவை உறுப்பினர்கள்**

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆளுகைப் பணியாளர், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், தேர்தல்கள், பயண இசைவுச் சீட்டு, மதுவிலக்கு, நல்வாழ்வு, மருந்துகள், அறநிலையத் துறை, இலஞ்ச ஒழிப்பு, தொழில் நிறுவனங்கள், பூமிதானம்-கிராம தானம், முன்னாள் இராணுவத்தினர், சுரங்கம்-கனிவளம், ஊரகத் தொழில் நிறுவனத் திட்டங்கள்.

2. மாண்புமிகு திரு. இ. மனோகரன் (நிதித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : நிதி, திட்டம், வணிக வரிகள், ஆயத் துறை, வருவாய், சட்ட மன்றம்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுப்பணி, சிறப்புச் சிறு பாசனத் திட்ட வேலை உட்பட்ட சிறு பாசனங்கள், இரும்பு—எஃகுக் கட்டுப்பாடு, மின்சாரம்.

4. மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் (சட்டத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல், சீட்டு நிதிச் சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு.

5. மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் (உணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : உணவு, உணவு உற்பத்தி, கூட்டுறவு, மீன் வளம், ஆவணப் பதிவுத் துறை, சிங்கோனா உள்பட வனங்கள், இளைஞர் அணி, விலைக்கட்டுப்பாடு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சிமொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊரகக் கடன்கள், சமுதாய வளர்ச்சி.

9. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடி நீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு.

10 மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், பிற்பட்ட வகுப்பினர், எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

11. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

12. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

13. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, அக்ரோ பொறியியல் பிரிவு, பால், பால் வள நிறுவனம், பால் பெருக்குத் திட்டம்.

14. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (கைத்தறி—ஆலைத் துணிகள் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: இட வசதிக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, கூட்டமைப்பு உள்ளிட்ட வட்டார—மாவட்ட தலைமை இடம் சார்ந்த வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், வக்ப், நெசவு, நூல், கைத்தறி, கதர், கிராமத் தொழில்கள்.

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

### மேலவைத் தலைவர்.

(அரசியலமைப்புச் சட்டத்தின் 184 (1)-வது பிரிவின்கீழ் தலைவரின அலுவல்களைத் துணைத் தலைவர் மேற்கொண்டிருக்கிறார்.)

### மேலவைத் துணைத் தலைவர்.

திரு. ம. பொ. சிவஞானம்

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. கோ. சி. மணி.
2. திருமதி சத்தியவாணிமுத்து.
3. திரு. ஆ. பாலசுப்ரமணியம்.
4. திரு. கே. எஸ். கணபதி.

### மேலவைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### சார்புச் செயலாளர்.

திரு. த. பி. டெல்லிதுரை, பி.எஸ்ஸி., பி.ஜி.எல்.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

### தலைமை நிருபர்.

திரு. எஸ். நடராஜன்.

**தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்ற உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.**

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அப்துல்வகாப், கே.எஸ். | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 2 அறிவழகன், க. எம்.ஏ. .. | சென்னை—செங்கற்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 3 வீராசாமி, ஆற்காடு நா. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 4 இளம்பரிதி, .. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 5 இராகவானந்தம், எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்) .. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 6 இராஜகோபால், சி. வி. .. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 7 இராமகிருஷ்ணத் தேவர், எஸ். .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 8 இராம சுப்பையா, காரைக்குடி. .. | நியமனம் |
| 9 இராமசாமி படையாச்சி, எஸ். எஸ். .. | தென் ஆற்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 10 இராஜா முகமது, கே. (கைத்தறி—ஆலைத்துணிகள் துறை அமைச்சர்) .. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 11 எல்லமந்தா, பி. .. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 12 கணபதி, கே. எஸ். .. | தஞ்சாவூர்—திருச்சிராப்பள்ளி ஆசிரியர்கள் தொகுதி |
| 13 சக்திமோகன், ஆர். .. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 14 சங்கரலிங்கம், எம். .. | திருநெல்வேலி—கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 15 சத்தியவாணி முத்து, | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 16 சந்தோஷம், டி. எம். ஏ., பி. எல்., | சென்னை தெற்கு பட்ட தாரிகள் தொகுதி. |
| 17 சாம்பசிவம், இரா. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 18 சிவஞானம், ம. பொ, (துணைத் தலைவர்) | நியமனம் |
| 19 சுந்தரேசத் தேவர், என். | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 20 சுவாமிநாதன், ஜி., பி.பார்மஸி. | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 21 தங்கப்பாண்டியன், வே. பி. ஏ., பி. டி. | இராமநாதபுரம் உள் ளாட்சி மன்றத் தொகுதி. |
| 22 தங்கவேல், ஏ. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 23 தமிழரசி, சி. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 24 தாமஸ், பி. ஆர். | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 25 தாமோதரன், ஏ. ஆர், பி. எஸ்ஸி., (ஆனர்ஸ்) | சென்னை வடக்கு பட்ட தாரிகள் தொகுதி. |
| 26 தாமோதரன், ஜி. ஆர். | சென்னை மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 27 திராவிடமணி, ஆ. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 28 டிமாண்டி டென்சில் வின்சென்ட் | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 29 தேவராஜ், வி. எம். | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |



| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 30 நடராசன், எம். கே. டி. | திருச்சிராப்பள்ளி உள் ளாட்சி மன்றத் தொகுதி. |
| 31 நாராயணசுவாமி முதலியார், கே. (சட்ட அமைச்சர்) | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 32 நீல நாராயணன், | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 33 பக்கர், எம். எம். | நியமனம் |
| 34 பலராமன், எல். | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| *35 பாலகுருசாமி ஆர். | நியமனம் |
| 36 பாலசுப்ரமணியம், ஆ. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 37 பாலசுப்பிரமணியம், கு. மா. | நியமனம் |
| *38 புலமைபித்தன் | நியமனம். |
| 39 பெரியண்ணன், வீ. ஆர். | சேலம்—தர்மபுரி உள் ளாட்சி மன்றத் தொகுதி. |
| 40 மணி, கோ. சி. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| *41 மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி | நியமனம் |
| 42 மாசிலாமணி, மு. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 43 மாணிக்கம், பி. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 44 முத்து, எஸ். | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 45 முத்துகிருஷ்ணன், டி. வி. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 46 முருகேசன், எச். எல், | நியமனம் |
| 47 வில்வம், ஏ. கே. | நியமனம் |
| 48 வில்சன் அப்பலோஸ், என். | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| *49 வீரப்பன், ஆர். எம். (செய்தி விளம்பரத் துறை அமைச்சர்) | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |

* 31—12—1977 அன்று நியமனம் செய்யப்பட்டார்கள்

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
| --- | --- |
| 50 வெங்கடேஸ்வர தீக்ஷிதர், ஒய், | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51 ஜார்ஜ் கோமகன், | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 52 வெற்றிடம் | சென்னை உள்ளாட்சிமன்றத் தொகுதி, |
| 53 வெற்றிடம் | சென்னை மாவட்ட பட்டதாரிகள். |
| 54 வெற்றிடம் | சென்னை மாவட்ட பட்டதாரிகள். |
| 55 வெற்றிடம் | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 56 வெற்றிடம் | சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 57 வெற்றிடம் | கோயம்புத்தூர்—நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 வெற்றிடம் | கோயம்புத்தூர்—நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59 வெற்றிடம் | செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61 வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 63 வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

# தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

---

திங்கட் கிழமை, 1978 பிப்ரவரி 27.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், காலை 10.30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*City Compensatory Allowance.*

*141 Q.—Thiru D. SANTOSHAM (on behalf of Thiru K. S. GANAPATHI): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the City Compensatory Allowance granted from 1st April 1975 to the employees serving in Aided High Schools located within a radius of 16 kilometres of the city limit of Tiruchirappalli, has not yet been paid in certain schools; and

(b) if so, the reasons for the delay?

### நகர ஈட்டுப்படி.

திரு. டி. சந்தோஷம் (திரு. கே. எஸ். கணபதி சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி நகரிலிருந்து 16 கிலோ மீட்டர் தொலைவிற்குள் அமைந்துள்ள, மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுவோருக்கு 1—4—1975 முதற்கொண்டு அனுமதிக்கப்பட்டுள்ள நகர ஈட்டுப்படி, சில பள்ளிகளில் இன்னும் வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், தாமதத்திற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

[1978 பிப்ரவரி 27

## *Pension to Teachers.*

* 142 Q.—Thiru D. SANTOSHAM (on behalf of Thiru P. R. THOMAS): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the teacher pensioners have given a representation that their pension be sent by Money Order to them throughout the State, as is done in the case of those in Madras City; and

(*b*) if so, the action taken thereon?

## ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம்.

**திரு. பி. ஆர். தாமஸ் (திரு. டி. சந்தோஷம் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரத்தில் உள்ள ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு பண அஞ்சல் மூலம் ஓய்வூதியம் வழங்கப்படுவதைப் போன்று, மாநிலம் முழுவதிலு முள்ள ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கும் பண அஞ்சல் மூலம் ஓய்வூதியம் கொடுக்குமாறு, ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்கள் முறையீடு ஏதும் செய் துள்ளனரா ?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ;

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஆம்.

(இ) நிதிவசதி அடிப்படையில் இது பரிசீலிக்கப்படும்.

Thiru D. SANTOSHAM: Mr. Deputy Chairman, Sir, in the case of other Government servants except teachers the pension amounts are being sent by money order. May I know why in the case of teachers alone, the pension is not being sent by money order?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அது பரிசீலனையில் இருக்கிறது. நிதி வசதியின் அடிப்படையில் அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** ஏனைய அரசு ஊழியர்களுக்கும் சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், இங்குள்ள ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் அரசு எந்த நீதியை வழங்குகிறதோ அதே நீதியை மாநிலத்தில் உள்ள ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் ஏனையவர்களுக்கும் வழங்க வேண்டியது கடமை யல்லவா? எனவே அரசு இதைக் கவனத்தில் கொண்டு விரைவில் இது குறித்துப் பரிசீலனை செய்து முடிவெடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1978 பிப்ரவரி 27]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவர் அவர்களே, அது பற்றிய முடிவை விரைவில் அரசாங்கம் எடுக்க இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. டி. சந்தோஷம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் நிதி அடிப்படையில் இந்தப் பிரச்சினை பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது என்று தெரிவித்தார்கள். நிதி அடிப்படையில் என்னும்போது, மணியார்டர் கமிஷனுக்காக ஆகும் செலவைக் கணக்கில் கொண்டு பரிசீலிக்கிறார்களா அல்லது வேறு ஏதாவது நிதிப் பிரச்சினையைக் கணக்கில் கொண்டு இதனைப் பரிசீலிக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மணியார்டர் கமிஷன் மூலமாக ஆண்டொன்றுக்கு ரூ. 7,88,000 செலவாகும் என்று கருவூலக் கணக்கு இயக்குநர் கூறியுள்ளார். பள்ளிக் கல்வி இயக்குநரும் கருவூலக் கணக்கு இயக்குநரும் தமிழகம் முழுவதும் ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்களுக்கும் குடும்பநல ஓய்வூதியம் பெறும் ஆசிரியர் குடும்பங்களுக்கும் இந்தப் பென்ஷன் பைலட் திட்டத்தை விரிவாக்க வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளனர். கல்வித் துறை இதனை ஒப்புக் கொண்டுள்ளது. நிதித்துறை பென்ஷன் பைலட் திட்டத்தை மறுஆய்வு செய்து வருவதாகவும் அதனால் தமிழகம் முழுவதும் ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்களுக்கும் குடும்பநல ஓய்வூதியம் பெறும் ஆசிரியர் குடும்பங்களுக்கும் இந்தத் திட்டத்தை விரிவாக்குவது குறித்து பின்னர் ஆராயலாம் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## *Employees of Local Library Authorities.*

* 143 Q.—Thiru V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the services of the employees working in Local Library Authorities in the State have been regularised;

(b) if not, whether there is any proposal under the considera-tion of the Government to regularise their services; and

(c) if so, the stage at which the matter now stands?

## நூலக ஆணைக்குழுக்கள் ஊழியர்கள்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநிலத்தில் உள்ள நூலக ஆணைக்குழுவில் பணியாற்றும் ஊழியர்களின் பணிக்காலம் முறைப்படுத்தப்பட்டுள்ளதா ?

(இ) இல்லையெனில், அந்த ஊழியர்களின் பணிக்காலத்தை முறைப் படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஈ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) தமிழ்நாட்டில் மொத்தம் 13 நூலக ஆணைக்குழுக்கள் உள்ளன. இவைகளில் உள்ள பணியாளர் தொகுதியில் மொத்தம் 3,055 பணியிடங்கள் உள்ளன. இவற்றில் 3,951 நிரந்தரப் பணியிடங்களும், 104 தற்காலிகப் பணியிடங்களுமாகும், 3,055 பணியிடங்களில், 99 நபர்கள் மட்டுமே பணிவரன்முறைப்படுத்தாமல் உள்ளனர். இந்த 99 நபர்களின் பணிடங்களில் பெரும்பாலானவை 1978-ம் ஜூலை முதல் வாரத்தில் நிறைவு செய்தவைகளாகும். கீழ்க்கண்ட அலுவலகக் காரணங்களுக்காகவே இவர்களின் பணி வரன்முறைப்படுத்தப்படாமல் இருக்கிறது.

1. பணியாளர் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையால்;

2. தனிக்கைத் தடையால்;

3. தாற்காலிகப் பதவி உயர்வு ஏற்பட்டதால்;

4. விடுப்புக் காலப் பணியிடங்களாய் இருப்பதால்.

5. தற்காலிகமானவை பணி வான்முறைப்படுத்தப் போதிய காலம் முடியாததால்.

(இ) விடை '(அ)'-ல் எடுத்துக்காட்டியபடி தற்போது 99 பணியிடங்களே பணி வரன்முறைப்படுத்தப்படாமல் உள்ளது. பொது நூலக இயக்குநரே இப்பணியிடங்களுக்கான நியமன அதிகாரியாதலால் பணிக் காலத்தை முறைப்படுத்துதலையும் அவரே செய்யலாம். இதற்கான செயற் குறிப்பு அரசுக்கு வரவேண்டிய அவசியம் இல்லை.

(ஈ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய நீண்ட பதிலிலிருந்தே இம்மாநிலத்தில் உள்ள நூலக ஆணைக் குழுக்களில் பணியாற்றும் பல்வேறு ஊழியர்கள் தங்களின் பணியில் நிரந்தரப்படுத்தப்படாமல் இருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது. எனவே இந்தப் பணியாளர்களை விரைவில் அவர்களுடைய பணியில் நிரந்தரப்படுத்துவதற்கான உத்தரவை அனுப்ப அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அதோடு இந்த நூலக ஆணைக்குழுக்களுக்குச் செலவிடுகிற பணத்தையும்



மாநில அரசின் வரவு-செலவுத் திட்டத்திலேயே (பட்ஜெட்டிலேயே) ஒதுக்கிவிட்டால், பலவகையான சிரமங்கள் இல்லாமல் போகும் என்பதால் அரசு இதைப் பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** நூலக ஆணைக் குழுக்களில் பணியாற்றுகிற ஊழியர்களையும் மற்றும் அந்த நூலகங்களையும் அரசின் கீழ் கொண்டுவர இருக்கிறோம். இப்போது இருக்கிற சட்டத்தைத் திருத்துவதன் மூலமோ அல்லது புதிய சட்டத்தைக் கொண்டு வருவதன் மூலமோ இவர்களுக்கெல்லாம் எப்படி பாதுகாப்பு அளிக்கலாம் என்பதைப்பற்றி அரசு யோசித்து வருகிறது. இதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவும் தனது அறிக்கையைத் தந்திருக்கிறது. இப்போது அரசு அந்தக் குழுவின் அறிக்கையை ஆய்ந்து கொண்டிருக்கிறது. அந்த அறிக்கையின்மீது அரசு நடவடிக்கை எடுக்கும்போது, இதுபோன்ற குறைபாடுகள் இல்லாத வகையில் நல்ல முடிவுகளை மேற்கொள்ளும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்:** துணைத் தலைவர் அவர்களே, மத்திய நூலக ஆணைக்குழுவிற்கு ஏற்கெனவே ஒரு தலைவர் நியமிக்கப்பட்டு, அவர் மூலமாக இதன் நிர்வாகம் செயல்படுத்தப்பட்டதாக அறிகிறேன். இப்போது அந்த மத்திய நூலக ஆணைக் குழுவின் தலைவர் பதவி காலியாக இருக்கிறது. ஏன் வெகுகாலமாக அந்தப் பதவிக்கு உரியர் ஒருவர் நியமிக்கப்படவில்லை ...

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உங்களுடைய துணைக் கேள்வி இந்தக் கேள்வியின்மீது வராது. உங்களுடைய கேள்வி தலைவர் நியமனம் பற்றியது. மூலக் கேள்வி நூலக ஆணைக்குழுக்களில் பணியாற்றும் ஊழியர்களின் பணி வரன்முறைப்படுத்துவது பற்றியது.

**திரு. எம். சங்கரலிங்கம்:** நூலக ஆணைக்குழுக்களில் பணியாற்றும் 99 ஊழியர்களின் பணி நிரந்தரப்படுத்தப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் தம் பதிலில் தெரிவித்தார்கள். அவர்களில் 2 ஆண்டுகளுக்கு மேலாகப் பணி புரிகிறவர்கள் எத்தனை பேர்? அந்த 2 ஆண்டுகளுக்கு மேலாகப் பணி புரியும் ஊழியர்களுடைய பதவியை நிரந்தரப்படுத்துவதில் வழக்குகள் ஏதாவது ஏற்பட்டு அவர்களுடைய பதவிகள் நிரந்தரப்படுத்தப்படாமல் இருக்கின்றனவா? அப்படி ஏதேனும் இருந்தால், அவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தமிழகம் முழுவதும் மொத்தம் 13 நூலக ஆணைக் குழுக்கள் செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. இதில் 104 இடங்கள் தற்காலிகப் பணியிடங்களாகும். தற்காலிகப் பணியாளர்களில் 77 பேர்களின் பணி இன்னும் வரன்முறைப் படுத்தப்பட்டுள்ளது.

[1978 பிப்ரவரி 27

நூலக ஆணைக் குழுக்களில் உள்ள மொத்தம் 3,055 ஊழியர்களில் 99 ஊழியர்கள் பணி மட்டும் இன்னும் பணி வரன்முறைப்படுத்த முடியாமல் இருக்கின்றது.

நூலக ஆணைக் குழுக்களில் புதிய பதவிகள் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள நிரந்தரம் மற்றும் தற்காலிக பணியிடங்கள் பற்றிய பணி வரன்முறைப்படுத்தப்பட உள்ளது.

இதில் தினக்கூலி அடிப்படையில் 13 நபர்களும் பகுதி நேர ஊழியர்களாக 158 நபர்களும் பணி புரிந்து வருகின்றனர். தற்போதுள்ள விதிமுறைகளின் அடிப்படையில் இவர்களை பணி வரன்முறைப்படுத்த இயலாது.

சில்லரை செலவின பட்டியலின் கீழ் பணி புரியும் 409 நபர்களைப் பொறுத்த வரையில், அவர்களைத் தகுதிக்குக் கொண்டு வருவது குறித்து பொது நூலக இயக்குநரின் கருத்துரை இந்த அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

தலைவர் அவர்களே, இங்கே மிகவும் விரிவான விவரங்கள் அளிக்கப் பட்டுள்ளன. அதில் செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில்,

முதல்நிலை நூலகர் தற்காலிகம்—1.

3 ஆம் நிலை நூலகர்—1.

உடனுளர்—1.

கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் :—

முதல் நிலை நூலகர் தற்காலிகம்—1.

உதவியாளர்—1.

இதுபோன்ற விவரங்கள் உள்ளன. தனிக் கேள்வி கேட்டால், விவரமாகப் பதிலளிக்கப்படும்.

## School Assistant.

* 144 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state.—

(a) whether the Government have received any representation from the teachers of the Government Aided High Schools, requesting them to sanction one post of Assistant to the Private Schools having a strength of more than one thousand students, as in the case of Government High Schools;

(b) if so, the action taken thereon?

**பள்ளி உதவியாளர்.**

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் **கீழ்க் கண்ட** வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—



978 பிப்ரவரி 27]

(அ) ஆயிரம் மாணவர்களுக்கு மேல் எண்ணிக்கை உள்ள அரசினர் யர்நிலைப் பள்ளிகளில் ஒரு உதவியாளர் (Assistant) பதவி அனுமதிக்கப் படுவது போல, தனியார் பள்ளிகளிலும் அனுமதி அளிக்கப்படவேண்டும் ான்று தமிழ்நாடு அரசு உதவிபெறும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களிடமிருந்து அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 10-40)

**திரு. எம். சங்கரலிங்கம் :** நான் கேட்ட கேள்வியில் ஆசிரியர்களிடமிருந்து அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளனவா என்று இருக்கிறது. ஆயிரம் மாணவர் களுக்கு மேல் எண்ணிக்கையுள்ள அரசினர் பள்ளியில் ஒரு உதவியாளருடன் கூட கூடுதலாக ஒருவர் இருப்பதைப்போல், தனியார் பள்ளி நிறுவனங் களிடமிருந்து முறையீடு வந்துள்ளதா என்றுதான் நான் வினா எழுப்ப எண்ணினேன். கேள்வி ஆசிரியர்களிடமிருந்து முறையீடு வந்ததா என்று தவறாக இருந்ததால், அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லியிருக் கிறார்கள். இப்போது அரசுப் பள்ளிகளைப்போல தனியார் பள்ளிகளில் ஆயிரம் மாணவர்களுக்கு மேல் இருந்தால், கூடுதல் உதவியாளர் கொடுக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தற்போது சென்னை நகர அரசு உதவி பெறும் உயர்நிலைப் பள்ளியில் இருக்கும் அலுவலர்கள் சங்கத்திலிருந்து முறையீடுகள் வந்துள்ளன. பள்ளிக் கல்வி இயக்குநர் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் உள்ள அரசுப் பள்ளிக்கு உள்ளதுபோல, கூடுதல் உதவியாளர் தனியார் பள்ளிக்குக் கொடுப்பதை ஏற்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது அரசின் நிதிநிலைமை காரணமாக அரசு பரிந்துரைக்க இயலவில்லை. அதனால் அந்த நடவடிக்கை கைவிடப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** அரசு உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள வேலைகளைப் போல்தான் தனியார் பள்ளிகளில் இருக்கும். அங்கே அரசு கேட்கின்ற பல்வேறு புள்ளிவிவரங்களைக் கொடுப்பதற்கு உதவியாளர்கள் இருக்கின்றார்கள். ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் இருக்கும்போது, கூடுதல் உதவியாளர் தேவைப்படுகிறது. அரசுப் பள்ளிகளுக்கு அளிக்கும் அதே உதவியை தனியார் பள்ளிக்கும் கொடுக்க வேண்டும். அரசு எதிர்பார்க்கின்ற புள்ளிவிவரங்களை அவர்கள் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டால், அரசினுடைய கொள்கைகளை

[1978 பிப்ரவரி 27

அமுல் நடத்துவது பாதிக்கப்பட்டுவிடும். ஆகையால் பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களுடைய பரிந்துரையினை ஆராய்ந்து பார்த்து, அரசு நல்ல முடிவு எடுத்து ஒரு கூடுதல் உதவியாளர் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இந்தப் பிரச்சினையைப்பற்றி இந்த அரசு மறு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### *Family Benefit Scheme.*

* 145. Q.—THIRU D. SANTOSHAM and Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the benefits of the Family Benefit Scheme are denied to teachers in Private Colleges, whereas they are applicable to teachers in Private Schools; and

(b) if so, the reasons therefor?

### குடும்ப நல நிதித் திட்டம்

**திரு. டி. சந்தோஷம் & திரு. பி. ஆர். தாமஸ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு குடும்ப நல நிதித் திட்டத்தின் பயன்கள் அளிக்கப்படும்போது, தனியார் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அத்திட்டத்தின் பயன்கள் மறுக்கப்படுகின்றனவா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஆம்.

(இ) ஆயுள் ஈட்டு கார்ப்பரேஷன் விதிகளுக்கு விலக்கு அளிக்காமல் குடும்ப நற்பயன் நிதி திட்டத்தை எல்லாத் தரப்பினருக்கும் விரிவுபடுத்தப்படுவது தவறு என்று மத்திய அரசு கருதுவதாகக் கூறப்படுகிறது. அதனால் இன்னமும் மேற்சொன்ன திட்டம் தனியார் கல்லூரி ஊழியர்களுக்கு விஸ்தரிக்கப்படவில்லை.

**திரு. டி. சந்தோஷம்:** தனியார் பள்ளியிலே பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இது அமுல்படுத்தப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் கிட்டத்தட்ட அதே நிலையில் உள்ள தனியார் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் இவர்களுக்கும் யாதொரு வித்தியாசமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இந்தத் திட்டம் அவர்களுக்கு ஏன் அமுல்படுத்தப்படவில்லை?



1978 பிப்ரவரி 27]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஆயுள் இன்ஷூரன்ஸ் சட்டத்திலிருந்து விதிவிலக்குப் பெற்றாலொழிய, அதை அவர்களுக்கும் விரிவுபடுத்த இயலாது. அதற்காக முயற்சிகளை அரசு ஆராய்ந்து மேற்கொள்ளலாம்.

**திரு. பி. ஆர். தாமஸ்:** தனியார் பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுக்கும் விரிவுபடுத்த ஆயுள் இன்ஷூரன்ஸ் சட்டத்திலிருந்து விதிவிலக்குப் பெற அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தனியார் பள்ளி ஊழியர்களுக்கு அந்தத் திட்டம் அமுல் நடத்தப்படுகிறது. ஆயுள் இன்ஷூரன்ஸ் சட்டத்திலிருந்து இன்னும் விதிவிலக்குப் பெறவில்லை. அதைப் பெறுவதற்குமுன் குடும்ப நல நிதித் திட்டத்தை அமுல்படுத்துவதில் சிக்கல் இருக்கிறது.

**திரு. எம். சங்கரலிங்கம்:** சர்விசிலே இருக்கும்போது இறந்தால்தான் நாம் பணம் கொடுக்கிறோம். அரசு அந்தத் திட்டத்தினால் அதிகப் பணம் செலவாகும் என்று அஞ்சி, அதை அமுல் நடத்தாமல் இருக்கிறதா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மத்திய அரசு ஆயுள் இன்ஷூரன்ஸ் சட்டத்தின் கீழ் ஆட்சேபணை தெரிவித்திருக்கிறது. அதனால்தான் விரிவாக்க முடியவில்லை. அந்த ஆட்சேபணையிலிருந்து விடுபட விதிவிலக்குப் பெற வேண்டும். அப்படி விதிவிலக்குப் பெற்ற பிறகுதான், விரிவுபடுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** இந்த மாநில அரசின் கீழ் வேலை பார்க்கின்ற மாநில அரசு ஊழியர்களுக்கு இந்த அரசு இத்தகைய திட்டங்களைக் கொண்டுவர முழு உரிமை இருக்கிறது. இதிலே மத்திய அரசு மாநில அரசு அதிகாரங்களில் தலையிடுவதாக இருக்கிறது. மாநில அரசு தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு இந்தத் திட்டத்தை அனுமதிக்கிறது. மத்திய அரசு அனுமதியில்லாது, மாநில அரசு மத்திய அரசின் தலையீட்டைத் தடுத்து நிறுத்தித் துணிவாக அதைச் செய்துகொடுக்கின்ற முறையில், கல்லூரி ஆசிரியர்களுக்கும் அந்தத் திட்டத்தை விரிவுபடுத்துமா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஆயுள் இன்ஷூரன்ஸ் சட்டம் என்பது இந்தியா முழுவதற்கும் இருக்கின்ற ஒரு மத்திய சட்டம். அதை ஒத்துக் கொண்டுதான் மாநிலம் கொண்டு வந்திருக்கிறது. முன்னாலே

[1978 பிப்ரவரி 21

ஆட்சேபணையை நாம் ஏன் தெரிவிக்கவில்லை என்று இப்போது கேட்க முடியாது. இப்போது ஆட்சேபணை தெரிவித்திருக்கிறார்கள். அந்த ஆட்சேபணைக்கு விதிவிலக்கு பெற்று நிறைவேற்ற அரசு முயற்சிக்கலாம். மாநில ஆட்சி மத்திய ஆட்சி என்பதுபோல பிரித்துப் பேசக்கூடாது. நாம் இங்கே சுதந்திர ஆட்சி நடத்திக் கொண்டிருப்பது போன்ற கருத்தை மக்களிடத்திலே பரப்புவது போல ஆகும். ஆயுள் இன்ஷூரன்ஸ் சட்டத்தை வடக்கே உள்ள மாநிலங்களும் அமுல் நடத்துகின்றன. அதுபோல நமக்கும் உரிமைகள் இருக்கின்றன. இங்கே சொல்லப்படுகின்ற முறையில் அமுல் நடத்தினால், அந்த காரணத்தை வைத்து, வடக்கே உள்ள மாநிலங்கள் செய்தால், சிக்கல் ஏற்படும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இறந்தால் பணம் தருவது என்பதுதான் ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் விதிகளின் கீழ் வருகிறது. அந்த அடிப்படையிலேதான் அவர்கள் ஆட்சேபணை செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜார்ஜ் கோமகன்:** இந்த ஆட்சேபணை முந்தைய மத்திய அரசு இருந்தபோது எழுப்பப்பட்டதா அல்லது இப்போது இருக்கின்ற மத்திய அரசால் எழுப்பப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இதுபற்றித் தனிக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்துச் சொல்கிறேன்.

## Plus 2 Courses.

* 146 Q.—THIRU A. R. DAMODARAN and Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state the number of High Schools and Colleges in Tamil Nadu where the proposed Higher Secondary Course (plus 2 courses) will be introduced in the academic year 1978–79?

## + 2. படிப்பு.

**திரு. ஏ. ஆர். தாமோதரன் & திரு ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

**1978-79 ஆம் கல்வியாண்டில் தமிழ்நாட்டில் எத்தனை பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் உயர் இடைநிலைக் கல்வித் திட்டம் (+2 படிப்பு), கொண்டுவரக் கருதப்பட்டுள்ளது?**



1978 பிப்ரவரி 27]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, 1978-79 ஆம் ஆண்டு முதல் ஹையர் செகண்டரி வகுப்புகளை நடத்த, 200 உயர்நிலைப் பள்ளிகளும், 14 ஆங்கில இந்தியப் பள்ளிகளும், 6 மெட்ரிகுலேசன் பள்ளிகளும் ஆக மொத்தம் 220 நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. கல்லூரிகள் சேர்க்கப்படவில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** இந்தச் செய்தி எவ்வளவு நாட்களுக்கு முந்தியது என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன். நேற்றையதினம் வந்த செய்தி 550 பள்ளிகள் என்று வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இப்போது கொடுத்திருக்கின்ற உத்தரவின்படி, இந்தக் கணக்கு. இனிமேல் அதை அதிகப்படுத்த உத்தேசம் இருக்கிறது. இப்போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** இந்த பிளஸ் 2 கல்வித் திட்டம்பற்றி பல்வேறான முரண்பாடான அறிக்கைகள் வந்திருக்கின்றன. அமைச்சரிடமிருந்தும் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களிடமிருந்தும் பல்வேறான அறிக்கைகள் வருகின்றன. வருகின்ற ஆண்டில் எத்தனை பள்ளிகளுக்கு இந்த பிளஸ் 2 கல்வித் திட்டம் வருகிறது? அதிலே தனியார் பள்ளிகளுக்கு, அரசுப் பள்ளிகளுக்கு என்று ஒதுக்கும்போது, தனியார் பள்ளிகளுக்கு அதிகமாக ஒதுக்கப்படுவதாகக் குறைபாடுகள் சொல்லப்படுகின்றன. அதைப்பற்றி அரசு மறுபரிசிலனை செய்து, அரசுப் பள்ளிகளுக்கு அதிகமாகக் கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இங்கே முரண்பாடு இல்லை. வேண்டுமானால் வேறுபாடுகள் இருந்தால், இருக்கலாம். அந்த எண்ணிக்கை இப்போது 220 பள்ளிகள் என்றுதான் தரப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு எவ்வளவு அதிகமான பள்ளிகளுக்குத் தருவது என்பதுபற்றிப் பரிசிலனை செய்து கொடுப்பதற்கு இருக்கிறார்கள். அரசுப் பள்ளிகள், தனியார் பள்ளிகள் என்று எந்தவிதமான வித்தியாசமும் காட்டுவது இல்லை. ஆனால் இந்தத் திட்டங்கள் நன்கு வெற்றிபெற வேண்டும் என்ற காரணத்தினாலும், அதிலே நமக்கு அதிகமான அளவுக்குப் பணச் செலவு இருக்காது என்ற காரணத்தினாலும், தனியார் பள்ளிகளுக்கு இப்போது அதிகமாகத் தந்திருக்கிறோம். நல்ல வசதிகள் தற்போது பெற்றுள்ளவைகளாக தனியார் பள்ளிகள் இருக்கின்றன. இந்தக் கல்வித் திட்டத்தினுடைய பலன்களை கிராம மக்கள் அனுபவிக்கட்டும், கிராமத்து மாணவர்கள் அனுபவிக்கட்டும் என்ற அளவில் செய்யப்படுகிறது. அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் எந்தெந்தப் பள்ளிகளுக்குக் கொடுப்பது என்பதைப்பற்றி ஆராய்ந்து கொடுப்பதற்கு அரசு முயற்சி செய்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1978 பிப்ரவரி 27

திரு. எம். சங்கரலிங்கம் : அடுத்த கல்வி ஆண்டு தொடங்க இன்னும் 3 மாத காலம் இருக்கிறது. அரசு இப்போது 220 பள்ளிகளை உயர் கல்வித் திட்டத்திற்காக, பிளஸ் 2 கல்வித் திட்டத்திற்காக ஒதுக்கியுள்ளது. இன்னும் 550 பள்ளிகளுக்கு வருவதாகவும் இருக்கின்றது. இன்னும் 400 பள்ளிகளுக்குக் கொடுப்பதாகவும் சொல்லப்பட்டு செய்திகள் வருகின்றன. இந்த மூன்று மாதத்திற்குள் இப்போதுள்ள ஆசிரியர்களுக்கு டிரெயினிங் அளிக்க வேண்டியதாக இருக்கிறது. இந்த நிலைமைகள் இருப்பதனால், முன்னதாகவே எத்தனை பள்ளிகள் என்று தேர்ந்தெடுத்து, அந்த ஆசிரியர்களுக்கு உடனடியாகப் பயிற்சி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மிக விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

திரு. ஜி. சுவாமிநாதன் : தனியார் பள்ளிகளில் பிளஸ் 2 ஸ்டேஜை ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லும்போது, அவர்களே அதற்குரிய முழுத் தொகையையும் செலவு செய்துகொள்ள வேண்டுமா அல்லது அரசாங்கம் பணம் கொடுக்க முடிவெடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு .செ. அரங்கநாயகம் : 'கிரான்ட்'-ப் பொறுத்த வரைக்கும் இப்போது உயர்நிலைப் பள்ளிகளுக்கு இருக்கும் நடைமுறை பின்பற்றப்படும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : பிளஸ் 2 வகுப்புகள் கல்லூரிகளில் இல்லையென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இதன் காரணமாக பல கல்லூரிகளை நடத்துவதிலே சிரமம் ஏற்படுமென்று கல்லூரி நிர்வாகிகள் சொல்கிறார்கள். எனவே ஒருசில கல்லூரிகளிலும் பிளஸ் 2 வகுப்புகளை ஆரம்பிக்க வேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் விடுத்திருக்கிறார்கள். அதுபற்றி அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஒரு சிரமத்தைப் போக்க ஒரேயொரு வழிதான் இருக்கிறதென்று பேசிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. அந்தச் சிரமங்களைப் போக்க வேறு வழிகள் இருக்கின்றன. அதைப்பற்றி அரசு ஆராயும்.

திரு. பி. ஆர். தாமஸ் : பிளஸ் 2 வகுப்புகளை வைப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சில தனியார் பள்ளிகள் அந்த வகுப்புகளை நடத்த முன்வரவில்லையென்ற கருத்து கூறப்படுகிறது. அத்தகைய சூழ்நிலையில், ஜூன் மாதத்தில் பள்ளிகள் திறக்கும்போது, மாணவர்களுக்குப் பல கஷ்டங்கள்,



1978 பிப்ரவரி 27]

சிக்கல்கள் உருவாகும். எனவே அந்தச் சிக்கல்களைப் போக்க, பக்கத்திலுள்ள நகராட்சி, மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளைத் தேர்ந்தெடுத்து, அங்கே பிளஸ் 2 வகுப்புக்களை அரசு வைக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றிய நடவடிக்கைகள் இப்போது எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: உயர் இடைநிலைக் கல்வித் திட்டமானது கிராமங்களிலே உள்ள பள்ளிகளில் எந்த அடிப்படையிலே ஆரம்பிக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன். ஆயிரம் மாணவர்களுக்கும் அதிகமாகப் படிக்கும் பள்ளிகளுக்கு முதல் உரிமை கொடுக்கப்படுமா, மேலும் 10 மைல் சுற்று வட்டாரத்தில் அப்படிப்பட்ட பள்ளிகள் இல்லையென்றால், அப்படிப்பட்ட இடங்களிலும் இந்த வகுப்புகள் ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாணவர்களின் எண்ணிக்கை, சுற்றுப் புறங்களிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை, பள்ளிகளிலே இருக்கின்ற ஆய்வுக்கூட வசதிகள், கட்டிட வசதிகள், விளையாட்டு இட வசதிகள் போன்றவைகளைக் கவனித்து, இந்த வகுப்புகள் திறக்கப்படுகின்றன. மேலும் ஒரு பள்ளிக்கும், இன்னொரு பள்ளிக்கும் இடையே இருக்கும் தூரத்தின் அளவையும் கணக்கில் எடுத்துக்கொண்டும் புதிய வகுப்புக்களைத் திறக்கப் போகிறோம்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : புதிய முறை வகுப்புக்களை ஏற்படுத்தக்கூடிய இடங்களில் கட்டாயமாக 25,000 ரூபாய் கொடுக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தப்படுவது உண்மையா? அப்படி 25,000 ரூபாய் பணத்தைக் கட்டவில்லையென்றால், அந்தப் பள்ளிகளில் புதிய முறை வகுப்புக்களை ஆரம்பிப்பது தவிர்க்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : புதிய பள்ளிகளை ஆரம்பிக்கும் நேரத்தில், புதிய கல்லூரிகளை ஆரம்பிக்கும் நேரத்தில் இப்படிப் பணத்தைக் கட்ட வேண்டுமென்ற ஒரு முறை இருந்து வருகிறது. அதற்கேற்பத்தான் இதைக் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் திரு. டி. சந்தோஷம் அவர்களைக் கூப்பிட்டார்).

Thiru D. SANTOSHAM: Sir, my Question has been answered.

[1978 பிப்ரவரி 27

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** புதிய பள்ளிக்கூடம் கட்டும்போது இப்படிப் பணம் கேட்பது முறையானது. ஆனால் இருக்கக்கூடிய பள்ளிகளிலே புதிய வகுப்புக்களைத் திறக்கப் போகிறோம். இதற்கு ஏறத்தாழ 50 லட்சம், 55 லட்சம் ரூபாய் வசூல் செய்ய வேண்டுமென்று சொல்லப்படுகிறது. 200 கோடி ரூபாய்களைச் செலவழிக்கின்ற நேரத்தில், இது பெரிய தொகையல்ல. பின்தங்கிய பகுதிகளிலே உள்ள பள்ளிகளால் இந்தப் பணத்தைக் கட்ட முடியவில்லை. எனவே அதை அரசு பரிசீலனை செய்து, அந்தச் செலவினத்தை அரசே ஏற்றுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** உயர்நிலைப் பள்ளி நல்ல முறையில் நடைபெற வேண்டுமானால், நல்ல முறையில் வளர வேண்டுமானால், அந்தப் பள்ளியின் வளர்ச்சியில் அந்தப் பகுதி மக்களின் ஈடுபாடும் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட ஒரு தொகையைக் கட்ட வேண்டுமென்று சொல்வது, மறைமுகமாக அந்தப் பகுதி மக்கள், மாணவர்களின் பெற்றோர்கள் தங்கள் ஆர்வத்தைக் காட்ட ஒரு வாய்ப்பாக இருக்குமென்பதால்தான். அந்த அடிப்படையிலே, 25,000 ரூபாய் என்று சொல்வது ஒரு சிறிய தொகைதான். அது நல்ல பல விளைவுகளைத் தருமென்று நான் கருதுகிறேன.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** அரசுப் பள்ளிகளுக்கும், அந்தப் பகுதியில் இருக்கிறவர்கள் 25,000 ரூபாயைக் கட்ட வேண்டுமா என்பதை அறிய விரும்புகிறேன். இப்போது பிளஸ் 2 வகுப்புகளை நடத்துவதற்கு ஆய்வுக்கூடங்களைக் கட்டவேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. எனவே இதைப்பற்றி அரசு விரைவாக முடிவெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அரசுப் பள்ளியாக இருந்தாலும், அந்தப் பகுதியில் உள்ள பெற்றோர்களின் அக்கறை இருக்க வேண்டுமென்றுதான் அரசு கருதுகிறது. ஆய்வுக்கூடங்கள் அமைப்பதுபற்றியெல்லாம் விரைவில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** பிளஸ் 2 வகுப்புகளைத் தற்காலிகமாக 5 ஆண்டுகளுக்குக் கல்லூரிகளில் வைத்துக்கொள்ளலாமென்று அரசு அறிவித்திருந்தது. அந்த நிலை இப்போது நீடிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால், அமைச்சரவர்கள் கல்லூரிகளில் அந்த வகுப்புகள் இல்லையென்று அறிவித்திருக்கிறார்கள். முதலில் தற்காலிகமாக 5 ஆண்டுகளுக்கு அந்த வகுப்புக்களை கல்லூரிகளில் வைத்துக்கொண்டு, பிறகு டிகிரி வகுப்புக்களை மட்டும் வைத்துக் கொள்ள வேண்டும் அல்லது பிளஸ் 2 வகுப்புக்களை மட்டும் வைத்துக்கொள்ள வேண்டுமென்று முன்னால் கூறியது அமுலில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** கல்லூரிகளிலே இந்த வகுப்புக்களை ஆரம்பிப்பதில்லை என்ற முடிவை எடுத்திருக்கிறோம். தற்காலிகமாகச் சில சமயங்களில் ஆரம்பிக்கப்படுபவை நிரந்தரமாகி விடுகின்றன. பி.யூ.சி. தற்காலிகமாகத்தான் ஆரம்பிக்கப்பட்டது. அதை இப்போது எடுத்துவிட்டு, புதிய முறையைக் கொண்டு வருவதில் பல்வேறு சிரமங்களைப் பெற்றிருக்கிறோம். அந்த அடிப்படையிலேகூட உயர்நிலைப் பள்ளிகளிலே இந்த வகுப்புக்களைக் கொண்டுவருவதுதான் நல்லது. இந்தத் திட்டத்தைத் தீட்டியவர்களின் எண்ணங்களையும் அது நிறைவேற்றுவதாக இருக்கிறது. மேலும் இந்த வகுப்புக்களைத் தனித்தனியாகக் கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் கொண்டுவந்த பல்வேறு மாநில அரசுகள், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் வெற்றி பெறாத அனுபவத்தின் அடிப்படையிலேயும், இந்தத் திட்டத்தை உயர்நிலைப் பள்ளிகளிலேயே கொண்டுவர இருக்கிறோம். இன்றைய பிரதமர் அவர்கள் 10 பிளஸ் 2 என்பதற்குப் பதிலாக 8 பிளஸ் 4 என்ற திட்டத்தைப் பரிசீலனைக்கு வைத்திருக்கிறார்கள். அதற்கேற்ப ஒரு மாறுதல் ஏற்பட்டாலும்கூட, இப்போது இந்தத் திட்டத்தை உயர்நிலைப் பள்ளிகளில் கொண்டுவருவதால், அந்தத் திட்டத்தை அமுல்படுத்தும்போது, சிக்கல்கள் ஏற்படாது. ஆனால் இப்போது கல்லூரிகளில் இந்த வகுப்புக்களைக் கொண்டுவந்தால், பின்னால் வருகின்ற மாற்றங்களுக்கு நாம் ஈடு கொடுக்க முடியாத நிலை ஏற்படும். எனவே உயர்நிலைப் பள்ளிகளிலே இதைக் கொண்டு வருவதுதான் நல்லதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**புலவர் புலமைப்பித்தன் :** ஏற்கெனவே இருக்கிற உயர்நிலைப் பள்ளிகள், உயர் இடைநிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படுகிற காரணத்தால், அந்தப் பள்ளியிலே இருக்கிற தலைமை ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாகவே இருப்பார்களா அல்லது கல்லூரி என்ற தகுதிக்கு அந்தப் பள்ளிகள் வந்துகொண்டிருப்பதால், முதல்வர் என்று அழைக்கப்படுகிற நிலைமைக்கு பள்ளித் தலைமை ஆசிரியர்கள் உயர்த்தப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தால், அதற்கென ஏதேனும் சிறப்பான கல்வித் தகுதி தேவைப்படுகிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ அரங்கநாயகம்:** தலைமை ஆசிரியர்கள்தான் அந்தப் பள்ளிகளிலே இருப்பார்கள். இப்போது இருக்கக்கூடிய தலைமை ஆசிரியர்களே இருப்பார்களா என்று கேட்டால், அதற்குரிய தகுதி இருந்தால் இருப்பார்கள். முதல்வர்களாக ஆக்கப்படுவார்களா என்ற கேள்விக்கு அப்படி ஆக்கப்பட மாட்டார்களென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Thiru D. SANTOSHAM: Mr. Deputy Chairman, Sir, is it one of the conditions precedent that only teachers with post-graduate qualifications should take up this plus two course? If so, are all the

schools selected for implementation of this course having teachers with post-graduate qualifications? In case, any of them do not have persons with post-graduate qualifications, will persons with such qualifications be transferred from other schools? What is the programme regarding that?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஆசிரியர்களின் தகுதிகளைப்பற்றிப் பார்க்கும்போது, உயர் செகண்டரிப் பள்ளிக்கு போஸ்ட் கிராஜுவேட் தகுதியோடு ஆசிரியர் பயிற்சியும் பெற்றிருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு முதல் உரிமை தர இருக்கிறோம். இரண்டாவது உரிமை, ஆசிரியர் பயிற்சி இல்லாத போஸ்ட் கிராஜுவேட் தகுதி பெற்றவர்களுக்குத் தரப்படும். அதற்குப் பிறகு முதலாவது, இரண்டாவது வகுப்பு பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள், ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களாக இருந்தால் அளிக்கப்படும். அதற்கடுத்து 15 ஆண்டுகள் அனுபவம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கும் அத்தகைய வாய்ப்பு தரவேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது. அதையும் அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. பி. ஆர். தாமஸ்:** புதிய உயர் இடைநிலைப் பள்ளிகளிலே இரண்டு பாலரும் சேர்ந்து படிக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் உண்டா? இன்று பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதைப் பார்க்கும்போது, நிறைய ஆண்கள் பள்ளிகள்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. பெண்கள் பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. எனவே பெண்களுக்கென்று தனியாகப் பள்ளிகளைத் தேர்ந்தெடுத்து, இந்த வகுப்புகள் ஆரம்பிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** கட்டாயம் எதுவும் இல்லை. ஆனால் இருபாலரும் சேர்ந்து படிக்க வேண்டிய இடங்களில் அப்படிப்பட்ட வாய்ப்புகள் தரப்படும். அந்த இடங்களில் இரண்டு பாலரும் சேர்ந்து படிக்கலாம். தனியாகப் படிக்க வாய்ப்புகள் இருந்தால், அதை அவர்கள் அனுபவிக்கலாம்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** புதிய கல்வித் திட்டத்தை அமுல்படுத்துவது குறித்து பல்வேறு விளக்கங்கள் தேவைப்படுகின்றன. ஆசிரியர்களின் குவாலிபிகேஷன்ஸ், சம்பள விகிதம், வேலை அளவு, பள்ளிகளின் எண்ணிக்கை ஆகியவை பற்றி விவரங்கள் சரிவரத் தெரிய வேண்டியிருப்பதால், கல்விக் கொள்கைக் குறிப்பின்மீது விவாதம் வருவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் ஓர் வெள்ளை அறிக்கையைத் தயாரித்து உறுப்பினர்களுக்குத் தந்து, அதன் மீது உறுப்பினர்கள் விவாதத்தைத் தொடர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** முடிந்த அளவுக்குத் தேவையான விவரங்களைத் தர அரசு முயற்சி எடுத்துக்கொள்ளும்.





(முற்பகல் 11-00)

**திரு. வி. ஆர். பெரியண்ணன்:** [illegible] பிளஸ் 2 ஸ்டேஜ் கல்வித் திட்டத்தைத் அமைக்கப் போகும் [illegible] 25 ஆயிரம் ரூபாயைக் கட்ட [illegible]. சேலம் மாவட்டத்தில், வேண்டுமென்று அமைச்சர் [illegible] ராசிபுரம், நாமக்கல் ஆகிய பகுதிகள் [illegible] முன்பு கல்லூரியைக் கட்டுகிற நோக்கில் [illegible] ரூபாயைச் செலவு செய்து நல்ல கட்டிடம் கட்டியிருக்கிறார்கள் [illegible] 25 ஆயிரம் ரூபாயைக் கட்ட வேண்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** 25 ஆயிரம் ரூபாய் கட்டிடம் கட்டுவதற்காக அல்ல. வைப்பு நிதியாக வைத்துக் கொள்ளுவதற்காகத்தான். 25 ஆயிரம் ரூபாய் தருவது என்பது அவர்களுக்கு ஒரு பெரிய காரியம் அல்ல.

**திரு. கே. எஸ். அப்துல் வஹாப்:** கல்லூரிகளில், அவர்கள் விரும்பினால் பிளஸ் 2 ஸ்டேஜை ஆரம்பிக்கலாம் என்று முன்பு அறிவிக்கப்பட்டது. ஆனால் இப்போது கல்லூரிகளில் இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே அந்தக் கல்லூரிகளில் [illegible] தொடர்ந்து நடக்குமா? அல்லது ஒரே ஒரு ஆண்டுக்கு மட்டும் [illegible] அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** [illegible] முறையின்படி ஒரே ஒரு ஆண்டுக்கு மட்டும் நடைபெறும். பிறகு அந்தக் கல்லூரிகள் வேறு பல வகுப்புகளை ஆரம்பிக்கும். அந்தக் கல்லூரியில் உள்ள ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புத் தருவதற்கான சாத்தியக் கூறுகளையும் பற்றி அரசு ஆராயும்.

Thiru G. SWAMINATHAN: Sir, may I know whether there are any private schools in which there are Headmasters who are only Graduates? Is it the policy of the Government that such persons should be reverted and post-graduate teachers should be posted as Headmasters?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** உயர் செகண்டரி பள்ளிகளின் தலைமையாசிரியருக்குள்ள தகுதிகளைப் பற்றிக் குறிப்பிட்டு, அந்த தகுதிகள் உள்ளவர்களை [illegible] தனியார் கல்லூரிகளுக்கு அனுப்புகிறோம். அந்த [illegible] தலைமையாசிரியராகத் தொடர்ந்து இருக்கலாம். அப்படி இல்லையென்றால், அதற்கு வேறு ஏற்பாடுகளை அந்தத் தனியார் பள்ளிகள் செய்ய வேண்டியதுதான்.

[1978 பிப்ரவரி 27

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** அரசு உயர்நிலைப் பள்ளிகள் முழுவதும், மாநிலத்தில் பின்தங்கிய பகுதியான கிராமங்களில் அமைந்திருக்கின்றன. 25 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டுமென்ற நிபந்தனை இருக்கிற காரணத்தால், அந்த வாய்ப்பு அரசாங்கப் பள்ளிகளுக்குக் கிடைக்காது என்ற நிலை ஏற்படும். ஆகவே இந்தப் பணம் கட்டுவதிலிருந்து அரசாங்கப் பள்ளிகளுக்கு விதி விலக்கு அளிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** விதிவிலக்கு என்று ஆரம்பித்தோமானால், பிறகு அதுவே விதியாக மாறிவிடும். ஆகவே மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டால், அதைக் கட்டுவது ஒன்றும் முடியாத காரியமல்ல.

**திரு. எம். சங்கரலிங்கம்:** இப்போது ஆரம்பிக்கின்ற கல்வித் திட்டத்தின் படி, பள்ளிகளில் இருக்கக்கூடிய தலைமையாசிரியர் முதுகலைப் பட்டம் பெறாமல் இருந்தால், அவருக்குப் பதிலாக வேறு ஒரு முதுகலைப் பட்டம் பெற்றவரைத் தலைமையாசிரியராகக் கொண்டு வருவதால், பிரச்னைகள் ஏற்படும். இதைத் தவிர்ப்பதற்காக, ஏற்கெனவே அந்தப் பள்ளியில் உள்ள தலைமையாசிரியரை நிர்வாகத் தலைமை ஆசிரியர் என்னும் Headmaster (Administration) புதிதாகக் கொண்டு வருபவரைத் தலைமையாசிரியர் (கல்வி) என்னும் Headmaster (Academic) நியமிக்க வேண்டுமென்ற கருத்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வைப்பட்டிருக்கிறதா? அதுபற்றி அரசு ஆராய்ந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அந்த அளவுக்கு இரண்டு தலைமையாசிரியர்களை நியமிப்பதென்பது நிதி வசதிக்கு ஒத்து வராது. அது சரியல்ல. தலைமை ஆசிரியர், உதவித் தலைமையாசிரியர் என்ற அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தைப் பரிசீலிக்கலாம்.

*Aduthurai Paddy Research Centre.*

* 147 Q.—Thiru K. S. MANI: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether 60 kilos of Paddy is given now for food to the staff of Aduthurai Paddy Research Centre, Thanjavur district and the cost thereof is recovered from their salary; and

(b) the quantum of paddy in kilograms given to the staff during the years 1972, 1973 and 1974?



1978 பிப்ரவரி 27]

ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையம்.

**திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தில் பணி புரியும் அரசு ஊழியர்களுக்கு மாதந்தோறும் சம்பளத்தில் பிடித்துக் கொள்ளும் அடிப்படையில் அறுபது கிலோ நெல் சாப்பாட்டுக்கென தற்போது கொடுக்கப்படுகிறதா?

(இ) 1972, 1973, 1974 ஆகிய ஆண்டுகளில் அரசு ஊழியர்களுக்கு முறையே எத்தனை கிலோ நெல் கொடுக்கப்பட்டு வந்தது?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) தஞ்சாவூர் மாவட்டம் ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் மாதந்தோறும் சம்பளத்தில் பிடித்துக் கொள்ளும் அடிப்படையில் நபர் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 18 கிலோ நெல் வழங்கப்படுகிறது. இதன் அடிப்படையில் குடும்பம் ஒன்றுக்கு குறைந்த பட்சம் 40 கிலோ நெல்லும் அதிக பட்சமாக 110 கிலோ நெல்லும் வழங்கப் படுகிறது.

(இ) 1972-73, 1973-74 மற்றும் 1974-75 ஆம் ஆண்டுகளில் உணவுக்காக வழங்கப்பட்ட நெல்லின் அளவு முறையே பின்வருமாறு:—

1972-73—90,990 மெட்ரிக் டன்.

1973-74—69,080 மெட்ரிக் டன்.

1974-75—75,345 மெட்ரிக் டன்.

**திரு. கோ. சி. மணி:** 18 கிலோ நெல் அந்த ஊழியருக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் எப்படி கட்டுப்படியாகும்? முன்பு 60 கிலோ, 80 கிலோ என்று வழங்கப்பட்டது. அதைப்போலவே இப்போது ஒரு குடும்பத்திற்கு 100 கிலோ என்று உயர்த்தும் எண்ணம் அரசுக்கு உண்டா? அது எப்போது முதல் அமுலுக்கு வரும்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** ஒரு குடும்பத்திற்கு என்று 40 கிலோ முதல் 110 கிலோ வரையிலும் வழங்கப்படுகிறது என்று ஏற்கெனவே சொன்னேன். எனவே அவர்களுக்குப் போதுமான அளவுக்குக் கொடுக்கப் பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) & (இ) இம்மாநில உழவர்களின் பொருளாதார நிலையை ஆராய்ந்திட ஓர் ஆணைக் குழு அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** நம் நாட்டினுடைய பொருளாதார வாய்ப்புகளை ஆய்வு செய்வதற்காக புதிய மத்திய அரசு முன் வந்து பல்வேறு கமிஷன்களைப் போட்டிருக்கிறது. அதுபோலவே நம்முடைய நாட்டில், குறிப்பாக ஏழை விவசாயிகளுடைய பொருளாதார மேம்பாடு குறித்து ஆய்வு செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** விவசாயிகளுடைய முக்கியமான கோரிக்கைகளைப் பரிசீலிப்பதற்காக, ஏற்கனவே ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. முக்கியமான கோரிக்கைகளை அந்தக் குழு ஆராய்ந்து வருகிறது. பொருளாதாரத்தினை அடிப்படையில் ஆராய என்று ஒரு குழுவை அமைக்கும் உத்தேசம் தற்போது இந்த அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** விவசாய நிலங்களில் சாகுபடி செய்யக் கூடிய பயிர்களின் சர்வே செய்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. தற்போது விவசாய நிலங்களில் என்னென்ன சாகுபடி செய்யப்படுகிறது என்பதை ஆராய அரசு முன்வருமா? இனவாரியாக, எங்கெங்கு, எவ்வளவு எவ்வளவு என்று ஆராய்ந்து தெரிவிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மூலக் கேள்வி, விவசாயிகளின் பொருளாதார நிலைமையினை அறிந்திட ஆணைக் குழு அமைப்பதுபற்றி. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விளைகின்ற பயிர்களின் நிலைபற்றிக் கேட்கிறார்கள். தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** விவசாயிகள் சம்பந்தமாக அரசு அமைத்திருக்கிற குழுவைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குழுவில் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் இருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த யாராவது இடம் பெறுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தஞ்சையைச் சேர்ந்த திருவாரூர் தென்கோவன் என்பவர் அக்குழுவில் இடம் பெற்றிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தஞ்சையைச் சேர்ந்த விவசாயி இருக்கிறாரா என்று கேட்டேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அவர் தஞ்சையைச் சேர்ந்த விவசாயிதான்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** அவரை அரசியல்வாதியாகத்தான் பார்த்தேன். விவசாயியாகப் பார்க்கவில்லை.

**திரு. ஜார்ஜ் கோமகன் :** அந்தக் குழுவில், சாப்பிடுபவர்களும் (கன்ஸ்யூமர்ஸ்) (consumers) இடம் பெறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இந்தக் குழுவில் அவர்கள் இடம் பெற முடியாது. ஏனென்றால் விவசாயிகளுடைய பிரச்சினைகளைப் பற்றித்தான் அதிலே ஆராயப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. கோ. சி. மணி :** இக்குழுவில் விவசாயிகளின் பொருளாதாரத்தை ஆராய்வதைவிட, இடையிலே அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற கடன் சுமையை ஆய்வு செய்து விரைவிலே அதுபற்றி ஒரு அறிக்கையை வைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** கூடுமான அளவிலே விவரமான அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்குண்டான ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. கோ. சி. மணி :** அந்த அறிக்கை வருவதற்குள், அவர்களுடைய கடன் சுமையைப்பற்றி மட்டும் ஆராய்ந்து ஒரு தனி அறிக்கையை வைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** விவசாயிகளுடைய ஒட்டு மொத்தப் பிரச்சினைகளில், கடன் சுமைப் பிரச்சினையும் ஒன்று. ஆகவே தனிப்பட்ட ஒரு பிரச்சினையை மட்டும் எடுத்துக்கொண்டு ஆய்வது சரியாகாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அறிவார்கள். ஆனாலும் தனியாக இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அந்தக் குழு ஒட்டு மொத்தமாகப் பிரச்னைகளை ஆராயும் போது அதிலுள்ள ஒவ்வொன்றையும் ஆராய்ந்து ஒட்டு மொத்தமாக ஒரு அறிக்கையை அளிக்கவிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### முதலமைச்சர் அவைக்கு வராமை குறித்து.

(பிற்பகல் 11-10)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அவை நடைபெறுகின்ற நேரங்களில் பெரும்பாலும் முதலமைச்சர் அவர்கள் வருவதில்லை. அவர்களுடைய இலாகா சம்பந்தப்பட்ட கேள்விகளில் விளக்கங்களை உறுப்பினர்கள் கேட்க வேண்டுமென்றாலும்கூட, அவரிடம் உள்ள ஒரு இலாகா கேள்விகள் கூட எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. பொதுத் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை, அறநிலையத் துறை பற்றிய கேள்விகள் கேட்க முடியவில்லை. ஆகையால் முதலமைச்சர் அவர்கள் இங்கே வருவதற்கு அவைத் தலைவராகிற தாங்கள் ஏற்பாடு செய்து அவருக்கான கேள்விகள் இந்த அவையில் வருவதற்கு வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முதலமைச்சர் அவர்கள் வரவில்லையென்றால், அவருக்காகப் பதில் சொல்லக் கூடிய பொறுப்பு அவை முன்னவருக்கு உண்டு. கேள்விகளைத் தள்ளிப்போடுவது நோக்கமாக இருந்தால், தலைவர் தலையிட்டுத் தவிர்க்க முடியும். கேள்வி தவிர்க்கும் முயற்சி வரவில்லை. விளக்கம் பெறவேண்டுமென்றால், முன்னவரிடம் பெற முடியும். அதற்கு எவ்விதத் தடையும் இருப்பதாகத் தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில நேரங்களில் சட்டப் பேரவையில் இருக்க வேண்டிய சூழ்நிலை வந்துவிடுகிறது. அதனால்தான் இரண்டு அவையிலும் ஏக காலத்தில் கலந்துகொள்ள முடியவில்லை. மேலும் முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசியதற்குப் பிறகு, அவர்களுக்கு வந்துள்ள கேள்விகளை இப்போதுதான் வாங்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். தொடர்ந்து அடுத்த கூட்டங்களில் கேள்விகளை எடுத்துக்கொள்வார்கள். முக்கியமான கேள்விகளுக்கு முதலமைச்சர் அவர்களே இங்கு வந்து விடையளிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

[1978 பிப்ரவரி 27

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** முதலமைச்சரை அவர் அடிக்கடி பார்க்க விரும்புகிறார்.

**திரு. கோ. சி. மணி:** மேலவை நேரத்தை மாலையிலிருந்து காலைக்கு மாற்றியதால் முதலமைச்சர் அவர்களுக்கு இங்கே வருவதற்கு சந்தர்ப்பம் இல்லாததுபோலத் தெரிகிறது. அப்படியென்றால் . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அப்படிப்பட்ட புகார் எதுவும் என்னிடம் வரவில்லை.

**திரு. கோ. சி. மணி:** இரண்டு அவைகளும் ஒரே சமயத்தில் நடைபெறுவதால், இங்கே முதலமைச்சர் அவர்கள் வர முடியவில்லை என்று சொல்கிறார்கள். முதலமைச்சர் வருவதாக இருந்தால், அவை நேரத்தை மாலைக்கேகூட மாற்றிக்கொள்ளலாம்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** அலுவல் ஆய்வுக் குழுவிலே அவை நேரத்தை காலையில் வைக்க வேண்டுமென்று குறிப்பைக் கொடுத்தவர்களில் நானும் ஒருவன். காலையில் கூடுவதால் உறுப்பினர்களுக்குப் பல பலன்கள் இருக்கின்றன. மாலை நேரம் என்றால், தலைவர் அவர்களுக்குக் கூட பொதுக் கூட்டங்களுக்குப் போவதற்கு இடையூறாக இருக்கிறது. எங்களுக்கும் பத்திரிகை நிருபர்களைச் சந்திக்க . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அதைச் சொல்லுங்கள். வீணாக தலைவரின் மேல் ஏன் சுமத்துகிறீர்கள்? (சிரிப்பு).

**திரு. ஜி. சுவாமிநாதன்:** துணைத் தலைவர் அவர்களே, தங்களை மட்டும் குறிக்கவில்லை. மற்ற தலைவர்களுக்கும் அந்தக் கவலை இருக்கிறது என்பதைத் தான் சொன்னேன். எங்களுக்கு மாலையில் வேறு வேலைகளைக் கவனிக்க வழி இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரே சமயத்தில் இரண்டு அவைகளுக்கும் வருவதற்குச் சிரமமாக இருக்குமென்று சொன்னார்கள். கூடுமான வரையில் வாருங்கள் என்று சொல்கிறோம். அதற்காக நேரத்தை மாற்றுவது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** காலையில் வைப்பதால் பல சௌகரியங்களும், சங்கடங்களும் இருக்கின்றன. மாலையில் வைத்தாலும் அப்படித்தான். ஆராய்ந்து பார்த்ததில் காலையில் வைப்பதுதான் பெரும்பாலும் நல்லது என்று முடிவு செய்தோம். அவசியமிருக்குமானால், நேரத்தை மாற்றுவதற்குத் தடை கிடையாது. குறிப்பிட்ட சில நாட்களில் மாலையில் வைத்துக்கொள்வதில்கூட சிரமம் இல்லை.



1978 பிப்ரவரி 27]

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு கூட்டத்திலும் இருக்க வேண்டுமென்பது என்னுடைய அவா. கூடுமான வரையில் அதிக நேரம் இந்த சபைக்கு அவர் வர வேண்டுமென்பது என்னுடைய ஆசை. சட்டப் பிரச்சினையைப் பார்க்கும்போது, நான் சில கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். திரு. காமராஜ் அவர்கள் இங்கே முதலமைச்சராக இருந்தார்கள். நான் இங்கே எம்.எல்.சி.யாக 1962-ல் வந்தேன். பதவிப் பிரமாணம் அன்றைக்கு இந்தச் சபைக்கு வந்தார். அவர் இருந்த போது, பத்து மாதம் நான் இங்கே இருந்திருக்கிறேன். ஒருநாள் கூட இந்த சபைக்கு அவர் வந்ததில்லை. அப்போது திரு. ஆர். வெங்கடராமன் அவர்கள் சபை முன்னவராக இருந்தார்கள். அவர்தான் பதில் சொல்வார். ஆகையால் முதலமைச்சர் வரவில்லை என்று குற்றம் சாட்ட முடியாது. வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளலாம். நானும் அவர் அடிக்கடி வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(சில உறுப்பினர்கள் எழுந்தனர்)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இதை அதற்கான விவாத நேரமாக எடுத்துக்கொள்ள வேண்டாம். அவை முன்னவர் தந்த விளக்கத்தோடு விட்டு விடுகிறேன்.

## 3. 1978-79 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின் மீது பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம் என்றும் முக்கியமாக மத்திய மாநில நிதி உறவுகளைப்பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்றும் எண்ணியிருந்தேன். ஆனால் அதற்கு முன்னதாக இன்றையதினம் அவை நடந்துகொண்டிருந்தபோது, உயர் செகண்டரி கல்வியைப் பொறுத்தவரையில், எவ்வளவு கேள்விகளுக்குக் கல்வி அமைச்சரவர்கள் பதில் சொல்வதற்கு உட்கார்ந்து எழுந்து சிரமப்பட்டார்கள் என்பதையும், சில சமயம் நாங்கள் கேட்டது என்ன என்று புரியாமல் எவ்வளவு சுருக்கமாக பதில் சொன்னார்கள் என்பதையும் நான் கவனித்துக் கொண்டிருந்தேன். கல்வியைப் பற்றியும் ஆசிரியர்களைப் பற்றியும் இங்கே பேசுகின்ற உறுப்பினர்கள் அவையின் பாதி நேரத்தை எடுத்துக் கொள்கிறார்கள் என்று மற்ற உறுப்பினர்கள் குறை சொல்வது வழக்கம். இந்த அவையிலுள்ள ஆசிரியர் பிரதிநிதிகள், பட்டதாரிகளின் பிரதிநிதிகளாகிய நாங்கள் அவர்களுடைய வாக்குகளைப் பெற்றுத்தான் இங்கே வந்திருக்கிறோம். அதன் அடிப்படையில் கேட்க வேண்டியிருக்கிறது. உறுப்பினர் திரு. வகாப் அவர்கள் சொல்லியதைப் போல, 1967 முதல் 1978 வரையில் நீண்ட நாட்களாக இந்த அவையில்

இருக்கிறோம் என்னும்போது அதிகமாக ஆசிரியர்களைப்பற்றிப் பேச வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அதிலும் இப்போது தங்களுக்கு ரொம்ப அவசியமும் கூட.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** எனக்கு இன்னும் இரண்டு வருஷங்கள் இருக்கின்றன. இப்போது தேர்தலில் நிற்கிறவர்களுக்கு ரொம்ப அவசியம். தேர்தலில் ஈடுபட்டிருப்பவர்களைக்கூட இங்கே காணோம், திரு. சந்தோஷம் அவர்களைத் தவிர. திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் பஞ்சாயத்து யூனியன் பிரதிநிதியாக இருந்தாலும், கல்வித் துறையில் பெற்ற அனுபவத்தை ஒட்டி கேள்விகளைக் கேட்டார்கள். இந்த உயர் இடைநிலைக் கல்வியைப் பொறுத்த வரையில், மக்களுக்கு எவ்வளவு தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வம் இருக்கிறது என்பது இதிலிருந்து தெரிய வருகிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த உயர் இடைநிலைக் கல்வியைப் பொறுத்தவரையில், ஒரு வெள்ளை அறிக்கையை அரசாங்கம் வைக்கக் கூடாதா என்று கேட்டார்கள். உறுப்பினர்கள் வெளியே சென்றால், அடுத்த ஆண்டு என்ன முறை, எப்படி நடக்கிறது என்ற கேள்வியை அவர்களை நோக்கி எல்லோரும் கேட்கிறார்கள். அடுத்த ஆண்டிலிருந்து ஆசிரியர்கள் நிலைமை என்ன என்று அவர்கள் கேட்கிறார்கள். உயர் படிப்புப் படித்தவர்கள் போஸ்ட் கிராஜுவேட்களுக்குப் பதவி வருமா என்று கேட்கிறார்கள். பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக உள்ளவர்கள் வெறும் பட்டதாரிகளாக இருக்கின்றவர்களின் நிலை என்ன என்கிறார்கள். தலைமை ஆசிரியர் பதவி இருக்குமா, கீழே இறங்க வேண்டி வருமா என்று ஐயப்படுகிறார்கள். முதுகலைப் பட்டம் பெற்றவர்களுக்குத் தலைமை ஆசிரியர் பதவி கொடுப்பார்களா? இரண்டுவிதமான தலைமை ஆசிரியர்கள் இருப்பார்களா என்பதைப் போன்ற பல பிரச்சினைகள் அதிலே வருகின்றன. அந்த வகுப்புகளுக்குத் தனியாகக் கட்டிடம் கட்டச் சொல்கிறார்கள். அதற்கு ரூ. 3 லட்சத்திற்கும் மேலாகுமே, அரசாங்கம் பணம் கொடுக்கப் போகிறதா என்று கேட்கிறார்கள். தனியாரை ரூ. 25 ஆயிரம் கட்டச் சொல்கிறார்களே, எங்கேயிருந்து கட்டுவது என்ற பிரச்சினை இருக்கிறது. குழந்தையைப் பெற்றவர்கள் அடுத்த ஆண்டு எந்தப் பள்ளியில் சேர்ப்பது என்று கவலைப்படுகிறார்கள். என்னுடைய மகனைப் பொறுத்தவரையில், நான் அதைப்பற்றி நினைக்க வேண்டியிருக்கிறது. அடிக்கடி பத்திரிகையில் வருகிற பகுதிச் செய்திகளைப் பார்த்தால், அதற்கு நேர்மாறான விளக்கங்கள் தரப்படுகின்றன. நேற்றைய தினம் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திருச்சியில் பேசியதாகப் பார்த்தேன். 587 பள்ளிகளில் இந்த உயர் வகுப்புகள் ஆரம்பிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார். கல்லூரியில் ஆரம்பிக்க மாட்டோம் என்றும்



சொல்கிறார். இங்கே அமைச்சர் பதிலில் 280 பள்ளிகளில் ஆரம்பிக்கப்படும் என்கிறார். பிளாக்குக்கு ஒரு பள்ளி, முனிசிபாலிட்டிக்கு ஒரு பள்ளி என்று சொல்லி 450 பள்ளியாவது வரும் என்று கணக்கிடுகிறார்கள். விஷயம் ஒரே குழப்பமாக இருப்பதால், நானும் மற்ற உறுப்பினர்களோடு சேர்ந்து அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி வெள்ளை அறிக்கையை இந்த சபையில் வைத்தால், அதைப்பற்றி விவாதிக்கவும் எங்கள் கருத்துக்களைச் சொல்லவும் வாய்ப்பாக இருக்குமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வெள்ளை அறிக்கை என்பது புது மாதிரியான விஷயமல்ல. முன்பு கல்லூரியில் போதனா மொழியாக ஆங்கிலமா, தமிழா என்ற பிரச்சினை வந்தபோது, டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டியைப் போட்டு, கல்வி அமைச்சராக இருந்த திரு. நெடுஞ்செழியன் அவர்கள் ஒரு வெள்ளை அறிக்கையை இந்த அவையில் கொடுத்திருக்கிறார்கள். இரண்டு மூன்று முறை வெள்ளை அறிக்கைகள் கல்விப் பிரச்சினை பற்றியதாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த விஷயம் குழப்பமாக இருப்பதால், இந்தப் பிரச்சினையை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். முக்கியமான சிறிய விஷயங்களைச் சொல்லிவிட்டு, என்னுடைய பேச்சைத் தொடருகிறேன். முதுகலைப் பட்டம் பெற்ற ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், அண்மையில் அரசாங்கத் தாக்கீது ஒன்று போயிருக்கிறது. இயக்குநர் அந்தத் தாக்கீதை அனுப்பியிருக்கிறார். அண்ணா அவர்கள் காலத்தில் தனிக் கலைப் பட்டம் பெற்ற ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அடுத்தபடியான இரண்டு இங்கிரிமெண்ட் கொடுக்கலாம் என்று வைத்திருந்தார்கள். ஆனால் இப்போதைய ஆணைப்படி யார் யார் 1969-லிருந்து வாங்கிக் கொண்டிருந்தார்களோ யார் யாருக்கு செகண்ட் கிளாஸ் இல்லையோ, அவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்ற ஆணை போயிருக்கிறது. அடுத்த மாதம் முதல் தேதியிலிருந்து பணத்தைத் திருப்பிக் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள்.

(முற்பகல் 11.20)

இதற்குக் காரணம் என்னவென்றால் அவர்களெல்லாம் 'கரெஸ்பாண்டென்ஸ் கோர்ஸ்' மூலமாக உட்கல் பல்கலைக் கழகம், வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகம் போன்றவற்றில் படித்து இரண்டாவது வகுப்பில் தேர்வு பெற்றிருக்கின்றார்கள். அங்கெல்லாம் 50 சதவிகிதம் வாங்கியிருந்தால், செகண்டு கிளாஸ் என்று அங்கீகாரம் செய்திருந்தார்கள். ஆனால் நமது பல்கலைக் கழகத்தைப் பொறுத்தமட்டில், 45-50 வாங்கியிருந்தாலும் அவர்களுக்கு சி-ப்ளஸ் என்று போட்டுவிட்டு, அவர்களை இரண்டாம் வகுப்பில் பாஸ் செய்தவர்களாக ஆக்காததன் காரணமாக, இப்போது 1969-லிருந்து பாஸ் செய்த நூற்றுக் கணக்கானவர்கள் இதுவரை வாங்கிய ஊதியத்தைத் திருப்பித் தரவேண்டும்.

அதுவும் அடுத்த மாதம் முதல் பிடிக்கப்படும் என்று சொல்லுவது சரியில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையைக் கவனிக்க வேண்டும். ஆசிரியர்களின் பிரதிநிதிகள்கூட அமைச்சர் அவர்களைப் பார்க்க வேண்டும் என்று கேட்டதற்கு, நாளைக்குப் பார்க்கலாம் என்று சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. எனவே இதைப் பரிசீலித்து நல்ல முடிவிற்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, இன்னுமொரு மிக முக்கியமான விஷயம், சென்னை நகரில் பல கல்லூரிகள் கிட்டத்தட்ட ஒருமாத காலமாக பூட்டப்பட்டுக் கிடக்கின்றன. இந்த மாதம் 8 அல்லது 9 தேதி முதல் அவை மூடப்பட்டிருக்கின்றன. ஐந்து கல்லூரிகள் நடைபெறுமல் இருக்கின்றன. வைஷ்ணவா கல்லூரியைப் பொறுத்தவரையில், இந்த மாதம் 8, 9 ஆம் தேதி முதல் மூடிக் கிடக்கிறது. இன்று வரையில் திறக்கப்படவில்லை. அங்கே படிக்கும் மாணவர்களுக்குப் பாதி பாடங்களுக்கு மேலே நடத்தப்படாமல் இருக்கின்றன. இதுபற்றிய காரணம் என்னவென்று அமைச்சர் அவர்களிடம் கேட்டதற்கு, கல்லூரியை நடத்துபவர்கள் மூடிவிட்டார்கள் என்றுர். ஆனல் அந்தக் கல்லூரி முதல்வரிடமிருந்து, மாணவர்களுக்கு ஒரு சுற்றறிக்கை வந்திருக்கின்றது, 'அரசாங்க ஆணைப்படி அந்தக் கல்லூரி மூடப்பட்டிருக்கின்றது' என்று. 'அண்மையில் நடைபெற்ற பல் தொழிலாளர்கள்-மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக கல்லூரி மூடப்பட்டுள்ளது, அநேகமாக அண்மையில் நடைபெற இருக்கும் பல்கலைக் கழகத் தேர்வுகள் வரையில்கூட கல்லூரி திறக்கப்பட மாட்டாது' என்றும்கூடச் சொல்லியிருக்கின்றுர்கள். கிட்டத்தட்ட பாதி அளவிற்குப் பாடங்கள் நடைபெறுமலிருக்கும் நிலைமையில், உடனடியாக அந்தக் கல்லூரிகள் மீண்டும் திறக்கப்பட வேண்டியதற்கான காரியங்களை கல்வி அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, நான் மிக முக்கியமாகக் கருதும் விஷயம், இந்த நிதி நிலை அறிக்கையின் வாயிலாகப் பார்க்கும் ஒரு விஷயம்—மத்திய மாநில நிதி வாயில்களைப் பகிர்ந்துகொள்ளுவது பற்றியதாகும். கேள்வி நேரத்தின்போது கூட இந்தப் பிரச்சினை வந்தது; சுயாட்சி பற்றி நமது நண்பர்கள் குறிப்பிடப்போய், சுயாட்சி என்பது மத்திய அரசோடு நாம் சண்டையிட வேண்டும் என்ற கருத்து அல்ல, மத்திய அரசும் நமது ஆட்சிதான் என்றுகூட கல்வி அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். சுயாட்சி என்றுல் மாநிலங்களுக்கும் மத்திய அரசுக்கும் இடையிலே பரவலான அதிகாரங்கள் இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். ஆனல் இப்போதுள்ள



நிலைமை என்னவென்று பார்த்தால், அது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாக இருந்தாலும் சரி, அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் ஆட்சியாக இருந்தாலும் சரி, மாநிலங்களின் நிதி நிலைமையைப் பொறுத்தவரையில், மாநிலத்தின தனி நபருடைய வருமானம், 'பெர்-கேபிடா இன்கம்' என்பதை உயர்த்துவதைப் பொறுத்த வரையில், இப்போது மத்திய-மாநிலங்களுக்கு இடையிலே நிதி வாயில்களைப் பகிர்ந்துகொள்ளும் முறையை வைத்துப் பார்த்தால், மாநிலங்களிலே யார் வந்தாலும், எப்படிப்பட்ட நிதிநிலை அறிக்கையைத் தயாரித்தாலும், மாநில மக்களின் வருவாயை உயர்த்துவது என்பது இயலாத காரியம் என்ற கருத்தினை அரசாங்கத்தின் கவனத்திற்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நமது மாநில முதலமைச்சர் அவர்கள் கூட, 'மாநிலத்தின் மொத்த வருவாயில் கிட்டத்தட்ட 52 சதவிகிதம் மத்திய அரசின் வாயிலாக வருகிறது' என்று சொன்னதாகப் பத்திரிகையில் பார்த்தேன். இப்படி மத்தியிலிருந்து வரும் பணம் திட்டங்களுக்காக ஒதுக்கீடாகவும், திட்டத்திற்கு அப்பாற்பட்ட ஒதுக்கீடுகளாகவும் வருகின்றன என்று அவர் குறிப்பிட்டதாகவும் பார்த்தேன். ஆனல் திட்டங்களுக்கு அப்பாற்பட்ட ஒதுக்கீடுகளாக மாநிலங்களுக்கு வருவது என்பது நிதி ஆணைக் குழுவின் மூலம் பகிர்ந்தளிக்கப்படுகிறது. சென்ற ஆருவது நிதி ஆணைக் குழு திரு. பிரம்மானந்த ரெட்டி அவர்கள் தலைமையில் இயங்கி நிதியினை மத்திய-மாநில அரசுகளுக்கு இடையே பகிர்ந்தளித்தது. இப்போது ஏழாவது நிதி ஆணைக்குழு தனது அறிக்கையில் நிதி வாயில்களைப் பெருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. இங்கே இன்னும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மதுவிலக்கினை அமுல்படுத்துவதனல் ஏற்படும் நிதி இழப்பினை மத்திய அரசு ஈடுகட்டித் தரவேண்டும் என்று நாம் அடிக்கடி கேட்டு வந்திருக்கிறோம். சென்ற முறைகூட, நிதி ஆணைக் குழுவிடம், திராவிட முன்னேற்றக் கழக அரசு எடுத்துச் சொல்லிற்று. 'நாங்கள் மதுவிலக்கினைக் கொண்டு வந்திருக்கிறோம். அதை ஈடு கட்ட எங்களுக்கு நிதி உதவி அளிக்க வேண்டும்' என்று கேட்டார்கள். அப்போதிருந்த நிதி ஆணைக்குழு அந்த முறையில் உதவி கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டது. 'இன்று நீங்கள் மதுவிலக்கைக் கொண்டு வரவில்லை, கொண்டுவருவதாகச் சொல்லி, அதனல் இழப்பு ஏற்படும் என்கின்றீர்கள். ஏற்படாத ஒன்றுக்கு நாங்கள் உதவி அளிக்க முடியாது' என்று சொல்லிவிட்டார்கள். மதுவிலக்கினைக் கொண்டுவந்த நேரத்தில், அதனல் ஏற்படும் நிதி இழப்பினைச் சமாளிக்க மாநில அரசு வரிகள் சிலவற்றைப் போட்டார்கள். அதையும் காட்டி, 'நீங்கள் நிதி இழப்பினைச் சமாளிக்க வரி போட்டுக் கொண்டுவிட்டீர்கள். எனவே நாங்கள் எதையும் தரமுடியாது' என்று சொல்லிவிட்டார்கள். இதுகுறித்து அப்போதே இராஜாஜி அவர்கள் கூட

'ஸ்வராஜ்யா' பத்திரிகையில் எழுதினார்கள். நண்பர் திரு. வீராசாமி அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். 'நீங்கள் மத்தியிலிருந்து நிதி உதவி பெறவேண்டும் என்றிருந்தால், மதுவிலக்கை இன்னும் கொஞ்சம் முன்னாலேயே கொண்டுவந்திருக்க வேண்டும். பின்னால் கொண்டுவந்தது தவறு' என்று எழுதியிருந்தார். மேலும் சொன்னார், 'நீங்கள் அதைக்காட்டி வரிகளைப் போடாமல் இருந்திருந்தால், மத்தியிலிருந்து வேண்டிய நிதி உதவியைப் பெற்றிருக்கலாம்' என்றும் இராஜாஜி அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏன் இவற்றைச் சொல்லுகிறேன் என்றால், மத்திய அரசு மதுவிலக்கினால் ஏற்படும் நிதி இழப்பினைச் சரிக்கட்ட எப்போதும் நிதி உதவி அளிக்கவில்லை. இப்போதுள்ள நிலைமையைப் பார்த்தால், ஏழாவது நிதி ஆணைக் குழுவினைப் பொறுத்தவரையில், இப்படிப்பட்ட நஷ்டஈட்டுக்கான பணம் ஒதுக்குவது பற்றி அதனுடைய 'டேர்ம்ஸ் ஆஃப் ரெபரன்ஸ்'-ல் இருப்பதாகத் தெரியவில்லை. ஒதுக்குவதும் ஒதுக்காமல் இருப்பதும், நிதி ஆணைக்குழுவிடமே விடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. எனவே, மத்திய அரசிடமிருந்து இந்த வகையில் அதிக நிதி பெறுவதில், திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்தத் தவறைச் செய்ததோ அதே தவற்றினை இந்த அரசும் செய்துவிட்டதாகவே எண்ணுகிறேன். நிதி உதவி கிடைக்கும் என்று அவர்கள் அன்றைக்கு பற்றாக்குறை பட்ஜெட்டைப் போட்டார்கள். மதுவிலக்கால் ஏற்படும் நஷ்டத்தைச் சரிக் கட்டுவதற்காக புதிதாக வரிகளையும் போட்டார்கள். ஆனால் நிதி ஆணைக் குழு அன்றைக்கு "நீங்கள் எப்படியாவது சரிக் கட்டிக்கொள்ளுங்கள், நாங்கள் ஏன் பண உதவி அளிக்கவேண்டும்?" என்று சொல்லிவிட்டார்கள். இப்போதும் அதையேதான் சொல்லுவார்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவரவர்களே, பற்றாக்குறை பட்ஜெட்டையும் போட்டுவிட்டு, மதுவிலக்கினைத் தீவிரமாக அமுல்படுத்தப் போகிறோம் என்று சொல்லும் நிலையில், அதற்கான வரியைப் போடாமலிருந்தால், கூடுதலாக ஏற்படும் நிதி இழப்பினை எப்படிச் சரிக்கட்டுவது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணுகின்றார்கள்? இராஜாஜி அவர்கள் அப்படி எழுதினார்கள் என்றால், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் இப்போதாவது என்ன செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டால், அரசுக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** துணைத் தலைவரவர்களே, எந்தெந்த மாநிலங்கள் பற்றாக்குறை பட்ஜெட்டுகளைப் போடுகின்றனவோ, எந்தெந்த மாநிலங்கள் நிதிவாயில்களைச் சரியாகப் பெற்று இருக்கவில்லையோ அல்லது எந்தெந்த மாநிலங்களின் ஜனத்தொகை மிக அதிகமாக இருக்கின்றதோ அல்லது எந்தெந்த மாநிலங்கள் பிற்பட்டதாக, தொழில்வளம் குன்றி அதன்



காரணமாக, நிதிவருவாயைப் பெருக்கிக்கொள்ள முடியாத நிலைமையில் இருக்கின்றனவோ அல்லது எந்தெந்த மாநிலங்களிலுள்ள மின்சார வாரியங்கள் பெரும் இழப்பில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றனவோ அல்லது நீர்ப்பாசன வளம் குன்றி விவசாயம் சீர்குலைந்திருக்கின்றனவோ, அப்படிப் பட்ட மாநிலங்களுக்கு நிதி வாயில்களைப் பெருக்கிக்கொள்ள உதவி செய்திடும் வகையில் நிதி ஆணைக்குழு கூடுதலான நிதியினை ஒதுக்கித் தந்திருக்கின்றது. அந்த முறையில் பார்த்தால், நமது மாநிலத்திற்கு நிதி ஆணைக் குழு எந்த அளவிற்கு நிதியை ஒதுக்கித்தந்திருக்கின்றது என்பதை இங்கே சற்று எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

பல மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நமது மாநிலம் சிறந்த முறையில் இருந்துவரும் ஒரு மாநிலமாகும். நமது மாநிலத்தில் தொழில்களைப் பொறுத்தவரையில், மிகச் சிறப்பான முறையிலேயே செயல்பட்டுவருகின்றன. மின்வாரியத்தைப்பற்றி வேண்டுமானால் சொல்லலாம், மிகக் கேவலமான முறையில் பெரும் நட்டத்தில் செயல்பட்டு வருகின்றது என்று சொல்லலாம். ஆனால் இதிலேகூட பிற மாநிலங்களின் மின் வாரியத்தோடு நமது மாநில மின்வாரியத்தை ஒப்பிட்டுப்பார்க்கும்போது, நான்கு சதவிகிதம் லாபம் காண்பிக்கலாம் என்ற நிலை இருக்கிறது. இந்த நிலையில் மொத்த ஒதுக்கீட்டில் தமிழகத்துக்காக ஒதுக்கியது. வருமானவரியிலிருந்து ஒதுக்கியது 7.94 சதவிகிதம்தான். ஆனால் அதே நேரத்தில் உத்திரப்பிரதேசத்துக்கு 15.23 சதவிகிதம் கொடுத்திருக்கின்றார்கள். பீகார் மாநிலத்துக்கு கிட்டத்தட்ட 9.61 என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. எக்சைஸ்—அதாவது கலால் துறையின் மொத்த வருவாயில் நமது மாநிலத்துக்கு 7.43 ஒதுக்கப்பட்டுள்ள அதேநேரத்தில் உத்திரப்பிரதேசத்துக்கு 17.03-ம் பீகார் மாநிலத்துக்கு 11.47-ம் கொடுத்திருக்கின்றார்கள். அடிஷனல் எக்சைஸ் ட்யூட்டியைப் பொறுத்த மட்டில், உத்திரப்பிரதேசத்துக்கு 16.10 என்று கொடுக்கப்பட்ட அதே நேரத்தில் நமது மாநிலத்துக்கு 7.267 என்றுதான் ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். அதைப் போலவே ரெயில்வே பாஸெஞ்சர் வரியிலிருந்து நமது மாநிலத்துக்கு வந்த பங்கு 5.14, ஆனால் பீகார் பெற்றது 10.58 இப்படித்தான் இருக்கிறது. மேலும் எல்லா மாநிலங்களும் அவ்வப்பொழுது மத்தியிலிருந்து கடன் பெற்றிருக்கின்றன. இதையொட்டி அனைத்து மாநிலங்களுமே நிதி ஆணைக் குழுவிடம் சொல்லியிருக்கின்றன, கடன்களைத் திருப்பிக் கொடுக்க இயலாத நிலைபற்றி. ஐந்தாண்டுத் திட்டங்களைச் செயலாற்றிக் கொண்டுள்ள இந்த நேரத்தில் அதைக் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது, எனவே கடன் தொல்லைகளிலிருந்து எங்களுக்கு 'ரிலீஃப்' கொடுக்க வேண்டும், 'டெட் ரிலீஃப்' கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். நமது

மாநிலத்திலும் கேட்டிருக்கின்றார்கள். அதற்குப் பிறகு ஒவ்வொரு மாநிலத்துக்கும் அந்த வகையில் பெட்டிஷன் கொடுத்திருக்கின்றார்கள். அந்த முறையில் தமிழகத்துக்குக் கொடுத்தது ரூ. 87.05 கோடி. அதே நேரத்தில் உத்திரப் பிரதேசத்துக்குக் கொடுத்துள்ளது ரூ. 150.77 கோடி.

(முற்பகல் 1-30)

இப்படி இதுவரையில் வந்திருக்கக்கூடிய நிதி ஆணைக் குழுக்களின் மூலமாக நம்முடைய மாநிலத்திற்கு எந்த அளவு உதவி வர வேண்டுமோ அந்த அளவுக்கு வரவில்லை என்பதுதான் உண்மை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். விற்பன்னர்களாக இருப்பவர்கள் இதற்குக் காரணம் சொல்லக்கூடும். நிதி ஆணைக்குழு எந்த அடிப்படையிலே நிதியை மாநிலங்களுக்கு ஒதுக்குகிறது என்று அவர்கள் விவரமாகச் சொல்ல முடியும். நானேகூட இந்த அவையிலே பலமுறை குறிப்பிட்டிருக்கிறேன். நிதி ஆணைக்குழு எந்த அடிப்படையில் மாநிலங்களுக்கு நிதி உதவியை ஒதுக்குகிறது என்று பார்த்தால், மாநிலங்களின் மக்கள் தொகை அடிப்படையிலேதான் நிதி ஒதுக்கப்படுகிறது. நம் மாநிலத்தைவிட உத்திரப் பிரதேசத்திலே அதிகமான மக்கள் தொகை இருக்கிறது. அதே போல பீகார் மாநிலத்தில் உள்ள மக்கள் தொகை, நமது மாநிலத்திலுள்ள மக்கள் தொகையைக் காட்டிலும் 10 சதவிதம் அதிகம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புள்ளி விவரங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். 5-வது 6-வது ஆகிய இரண்டு நிதி ஆணைக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டபோதும், நம் மாநிலத்தின் சார்பில் பேச்சு வார்த்தை நடத்தும்போது, தமிழ் நாடு கல்வித் துறையிலும், சுகாதாரத் துறையிலும் மற்ற எல்லாத் துறைகளிலுமே மற்ற மாநிலங்களைவிட மிகவும் முன்னேறி உள்ளதால், அதிகமாக நிதி ஒதுக்க முடியாது என்று சொல்லப் பட்டது. இந்தக் காரணத்தால்தான் தமிழ் நாடு பாதிக்கப்பட்டது. இப்படி ஒரு பக்கம் முன்னேற்றம் இல்லை, முன்னேற்றம் இல்லை என்று குற்றம் சாட்டப் படுகிறது. இன்னொரு பக்கத்திலே பார்த்தால், நிதி ஆணைக் குழுக்கள், தமிழ் நாடு மற்ற மாநிலங்களைக் காட்டிலும் எல்லாத் துறையிலும் அதிகமாக முன்னேற்றம் அடைந்துள்ளது, ஆகவே அதிகமாக நிதி ஒதுக்க இயலாது என்று சொல்லுகிறார்கள். இந்த நிலையில் மாநில அரசினர் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** எந்த மாநிலம் அதிகமான மக்கள் தொகையைப் பெற்றிருக்கிறதோ, எந்த மாநிலம் முன்னேறாமல் இருக்கிறதோ, எந்த மாநிலத்தில் தேவையான ரோடு வசதிகள் இல்லையோ, எந்த மாநிலத்தில்



மருத்துவ வசதி மிகக் குறைவாக இருக்கிறதோ, எந்த மாநிலத்தில் பிரைமரி எஜுகேஷன் மிகக் குறைவாக இருக்கிறதோ, எந்த மாநிலத்திற்கு அதிகமான கடன் பளு இருக்கிறதோ அந்த மாநிலத்திற்கு உதவி தரப்பட வேண்டும் என்ற 'கிரைடீரியா' வின் அடிப்படையில்தான் நிதி ஆணைக் குழு அமைக்கப் பட்டுள்ளது. மேற்சொன்ன இவைகளின் அடிப்படையில்தான் இன்றையதினம் நிதி மாநிலங்களுக்கு ஒதுக்கப்படுகிறது.

மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், தமிழகம் சற்றேறக்குறைய கருநாடக மாநிலத்திற்குச் சமமாக இருக்கிறது. பஞ்சாப் மாநிலத்தோடு நம் மாநிலத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், தமிழ் நாட்டு மக்களின் 'தனி நபர் வருமானம்' பாதியாக இருக்கிறது. அதாவது தமிழ் நாட்டை விட பஞ்சாப் மாநில மக்களின் 'பெர் கேப்பிட்டா இன்கம்' இரண்டு மடங்காக இருக்கிறது. அதேபோல மருத்துவத் துறையில், நம் தமிழ்நாட்டில் ஒரு இன்பேஷண்ட் என்கிற உள்ளுறை நோயாளிக்குச் செலவிடும் தொகையைவிட நமக்கு அண்மையில் இருக்கிற ஒரிசா மாநிலம் இரண்டு மடங்கு தொகையைச் செலவிடுகிறது. நான் நண்பர் திரு. வீராசாமி அவர்களுக்குப் புள்ளி விவரத்தோடு சொல்ல விரும்புகிறேன், புள்ளி விவரங்களைக் கையோடு கொண்டு வந்திருக் கிறேன்.

எனவே நம்முடைய மாநிலத்தைவிட ஒரிசா மாநிலத்தில் உள்ளுறை நோயாளிகளுக்கு அதிகமாகச் செலவிடுகிறார்கள். அந்த மாநிலத்தில் பார்த்தால், நாம் நோயாளிகளுக்குக் கொடுக்கும் மருந்துகளை விட, ஆகாரங்களை விட அதிகமான மருந்துகளையும் ஆகாரங்களையும் கொடுக்கிறார்கள்

இந்த நிலையில் அமைக்கப்பட்டுள்ள நிதி ஆணைக்குழுவின் கிரைடீரியா என்ன என்று பார்த்தால், இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களும் ஓரளவுக்குச் சமமான நிலைமைக்கு வரும் வகையில் அதிகமான அளவுக்கு முன்னேறியுள்ள மாநிலத்திற்கு உதவியைக் குறைத்து, முன்னேற்றம் குறைந்துள்ள மாநிலங்களுக்கு உதவிடும் வகையில் குறிக்கோளைக் கொண்டிருக்கிறது. அந்தக் குறிக்கோளைப்பற்றி நமக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் இந்தக் குறிக்கோள் காரணமாக நமக்கு என்ன பாதிப்பு ஏற்படுகிறது என்றால், நாம் இன்றைய நிலையில் தொடர்ந்து இருந்தால், இன்னும் 50 ஆண்டுகளானாலும் உத்திரப் பிரதேசமும், பீகாரும் நம்முடைய மாநிலத்தோடு ஒப்பிடும் அளவுக்கு அவர்கள் முன்னேறமாட்டார்கள். சில பேர் அவர்கள் நம்மோடு சமமாக வருவதற்கு இன்னும் 15 ஆண்டுகள் ஆகலாம் என்று சொல்லலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரையில், இன்னும் 50 ஆண்டுகளானாலும்கூட அவர்கள் நம்மோடு சமமாக முன்னேறி வர

மாட்டார்கள். விற்பன்னர்கள் வேண்டுமானால் 25 ஆண்டுகளில் அவர்கள் நம் அளவுக்கு முன்னேறிவிடுவார்கள் என்று சொல்லலாம். அப்படியானாலும் இந்த 25 ஆண்டுகள் வரை மத்தியிலே இருப்பவர்கள் நமக்கு அதிகமான பணம் ஒதுக்கீடு செய்ய மாட்டார்கள். நீங்கள் அதிகமாக ரோடுகளைப் போட்டால், மத்தியிலே உங்களுக்கான நிதி உதவியைக் குறைத்து விடுவார்கள். எனவே நீங்கள் என்ன செய்தாலும், மத்தியில் உள்ள நிதி ஆணைக் குழுவும், பிளானிங் கமிஷனும் உங்கள் கால்களைக் கட்டிப் போட்டுக் கொண்டுதான் இருப்பார்கள். நீங்கள் என்னதான் முயன்றாலும் மேலே உயர முடியாது.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டபோது இதைப் பற்றிப் பலர் மிகவும் புரட்சிகரமான பட்ஜெட் என்று குறிப்பிட்டார்கள். இதிலே நான் கருத்துவேறுபாடு கொண்டிருக்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை வேறுமாதிரியாக இருக்கும் என்று நான் எதிர்பார்த்து ஏமாந்தேன். இதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்களோடு பேசும்போது கூட குறிப்பிட்டிருக்கிறேன். எனவேதான் இந்த நிதிநிலை அறிக்கைபற்றி, பத்திரிகையாளர்கள் என்னுடைய கருத்தைக் கேட்டபோது "A routine Budget with the usual Sales Tax, of course, there is some relief for agricultural income" என்று சொன்னேன்.

இதுதான் என்னுடைய கணிப்பு. இதற்கு முன்னாலே ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் என்ன செய்தனவோ அதைத்தான் இன்றைய ஆட்சியாளர்களும் செய்திருக்கிறார்கள். நிதித் துறைச் செயலாளரான திரு. குகன் அவர்கள் காங்கிரஸ் ஆட்சியின்போது நிதித் துறைத் துணைச் செயலாளராக இருந்தார்; திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போதும் நிதித் துறைச் செயலாளராக இருந்தார். இப்போதும் இந்த ஆட்சியில் அவர்தான் நிதித் துறைச் செயலாளராக இருந்து வருகிறார். ஆகவே இந்த பட்ஜெட் ஒரே பேட்டர்னைத்தான் இருக்கிறது. இது இங்கே மட்டுமல்ல, எல்லா மாநிலங்களிலும் இதே நிலைமைதான். மத்தியிலும் இதே நிலைமைதான். ந மாநிலத்தில் கடந்த 10 வருஷங்களாக ஒரே மாதிரியான பட்ஜெட்டைத்தா போட்டு வருகிறோம். யாரும் இந்த நிலைமையைப்பற்றிச் சிந்தனை செய்வதோ யோசிப்பதோகூட கிடையாது. இதைப்போல பிரச்சினை வந்திருக்கிறதே இதற்கு முடிவு கட்டுவது எப்படி என்று யாரும் முன்வந்ததாகத் தெரியவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோதாவது அவர்க இதைப்பற்றிக் கொஞ்சம் யோசித்தார்கள். மத்தியிலே உள்ள அரசுக்கு மாநில அரசுகளுக்கும் இடையில் எப்படிப்பட்ட உறவுமுறை இருக்க வேண்டு மென்றும், இவைகளுக்கிடையில் அதிகாரங்கள் எப்படி பங்கிடப்பட



வேண்டுமென்றும் ஆராய்வதற்காக என்று டாக்டர் ராஜமன்னார் குழுவைப் போட்டார்கள். அந்தக் குழுவும் இவைகளைப்பற்றி நன்றாகச் சிந்தனை செய்து, ஒரு அறிக்கையைத் தயாரித்துத் தந்தது. நம்முடைய தலைவர் அவர்கள் நீண்ட நெடுங்காலமாக மத்திய, மாநில அரசுகளின் அதிகாரங்களைப்பற்றிப் பேசி வந்திருக்கிறார்கள். நீண்ட நெடுங்காலமாக சுமார் 25, 30 ஆண்டுகளுக்கு மேலாகவே நம் நாட்டில் இந்தப் பிரச்சினைபற்றிப் பேசிய முதல் தலைவரே நம்முடைய அவைத் தலைவர்தான். அவர் அதிகமாக ஈடுபட்டிருந்த இந்தப் பிரச்சினையில் டாக்டர் ராஜமன்னார் குழு தகுந்த கவனம் செலுத்தி தனது அறிக்கையை சமர்ப்பித்தது. அந்த அறிக்கை இங்கே அவைகளிலேகூட வைக்கப்பட்டது. டாக்டர் ராஜமன்னார் கமிட்டி அறிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசைக் கோரும் ஓர் தீர்மானத்தை நமது அவைகளிலேகூட நிறைவேற்றினோம். மாநில சுயாட்சி வேண்டுமென்று அப்போதே தீர்மானம் போட்டு, மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பினோம். ஆனால் அவர்கள் அந்த அறிக்கையை என்ன செய்தார்கள் என்பது தெரியவில்லை. மேஜையின்மேல் வைத்தார்களோ அல்லது அந்த அறிக்கையை வேறு எங்கேயாவது போட்டுவிட்டார்களோ தெரியாது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஒருவேளை அதனை 'லைப்ரரியில்' வைத்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** நானும் அப்படித்தான் கருதுகிறேன். அந்த அறிக்கையை லைப்ரரியில் வைத்திருப்பார்கள். நாம் தீர்மானம் போட்டனுப்பியும், எந்தப் பயனும் ஏற்படவில்லை. நான் இந்த நேரத்தில் இதைச் சுட்டிக் காட்டுவதற்குக் காரணம், இனியாவது, மத்திய அரசில் இருப்பவர்கள் இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். இல்லையென்றால், நம்மைப் பொறுத்த வரை, இதே நிலைமைதான் நீடிக்கும். நம்முடைய மாநிலத்து மக்களின் தனி நபர் வருமானத்தை பஞ்சாப் மாநிலத்தில் உள்ள மக்களின் தனி நபர் வருமானத்தைப் போல் அதிகமாக்குவதற்கு என்ன வழி? எப்படி அதைப் பெருக்குவது என்பதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். என்னைப் பொறுத்த வரையில், காங்கிரஸ் ஆட்சியானாலும் சரி, ஜனதா ஆட்சியானாலும் சரி, வேறு எந்த ஆட்சியாக இருந்தாலும் சரி, மத்திய அரசாங்கத்தில் போய் உட்கார்ந்து விட்டால், அவர்கள் மாநிலங்களின் தேவைகளைப்பற்றிக் கவலைப்படுவார்கள் என்றோ, மாநிலங்களின் தேவைகளைக் கவனிப்பார்கள் என்றோ எதிர்பார்க்க முடியாது.

மாநிலங்களில் நாம் கல்வித் துறையை வைத்திருக்கிறோம். நாம் ஒரு அக்ரிகல்சுரல் டிபார்ட்மெண்ட் வைத்திருக்கிறோம். கோவாப்பரேடிவ் டிபார்ட்மெண்ட் வைத்திருக்கிறோம். இப்படி நாம் வைத்திருக்கிற இதே

டிபார்ட்மெண்ட்களை மத்தியிலே இருக்கிற அரசாங்கமும் வைத்திருக்கிறார்கள். நம்முடைய தேவைக்கு அவர்கள் அங்கேயிருந்து பணத்தை ஒதுக்குகிறார்கள். இதுதான் கடந்த பல ஆண்டுகளாக நடந்துகொண்டு வருகிற முறை. இதைப் பற்றி நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அண்மையில் நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்கள் இதைப்பற்றி ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது மத்திய மாநிலங்களுடைய உறவைப் பொறுத்தவரையில், மேற்கு வங்க முதலமைச்சர் அவர்கள் ஒரு தாக்கீது அனுப்பி, இதைப்பற்றி எல்லா மாநில அரசாங்கங்களும் கலந்து பேச வேண்டும் என்று கேட்டதாகவும், நம்முடைய மாநில அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர்கள் போய் கலந்து கொள்வார்கள் என்றும் குறிப்பிட்டதாக அறிந்தேன். நாடாளுமன்றத்திலேயும் இதைப்பற்றிக் கேள்வி ஒன்றைக் கேட்டிருக்கிறார்கள். இதைப்பற்றித் தங்களுக்குக் கடிதம் வரவில்லை என்று இருந்தாலும், அந்தக் கூட்டத்திலே கலந்து கொள்ள இருப்பதாகவும் அப்போது பதிலளித்திருக்கிறார்கள்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதைப்பற்றிக் குறிப்பிட்டு இதற்காக மறுபடியும் ஒரு குழு அமைக்கலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். நான் சொல்லும் இந்தத் தகவல் சரியாகவும் இருக்கலாம், தவறாகவும் இருக்கலாம். அவையின் முன்னவர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். தவறு இருந்தால் சொல்லலாம். மத்திய மாநில உறவுகளைப் பொறுத்தவரையில், குழு அமைக்கலாமா என்று ஆலோசித்துக் கொண்டிருப்பதாக நமது மாநில முதலமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இதில் மீண்டும் ஒரு குழு அமைத்தால் என்ன நிலை ஏற்படும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். டாக்டர் ராஜமன்னார் கமிட்டிக்கு ஏற்பட்ட நிலைமைதான் இதற்கும் ஏற்படும். எனவே மாநில அரசு இதைப் பற்றித் தீவிரமாகச் சிந்தித்து நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் (தேசிய வளர்ச்சி சபை) கூட்டத்தில் பேசுகிறபோது எடுத்துப் பேச வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில், நம்முடைய மாநிலத்திற்கு ஒதுக்கீட்டை அதிகப்படுத்த வேண்டுமென்றால், அரசாங்கத்தினுடைய செலவுகளை எவ்வளவு குறைத்துக்கொள்ள முடியுமோ அந்த அளவுக்குக் குறைத்துக்கொள்ள வேண்டும். பஞ்சாப் மாநிலத்தின் தனி நபர் வருமானம் உயர்ந்திருப்பதற்குக் காரணமே இதுதான். அரசாங்கம் அங்கே தான் செய்யும் செலவுகளைக் குறைத்துக்கொண்டிருக்கிறது. எந்தெந்தத் துறையில் தனியார் செலவுகளை அதிகப்படுத்த முடியுமோ அதை அவர்கள் அதிகப்படுத்தியிருக்கிறார்கள். அந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில், அங்குள்ள விவசாயி தன்னுடைய விவசாயத்



தேவைகளுக்கு தன்னுடைய பணத்தையும், தன்னுடைய நண்பர்களுடைய பணத்தையும்தான் நம்பிக் காரியமாற்றுகிறார். தொழிலில் ஈடுபட்டவர்களானாலும் சரி, விவசாயத் துறையில் ஈடுபட்டவர்களானாலும் சரி, தங்களுடைய ஊக்கத்தையும் தங்கள் நிதி வசதிகளையும் மூலதனமாகக் கொண்டு செயல்படுகிறார்கள்.

சென்ற முறைகூட நான் இங்கே பேசும்போது, இதைக் குறிப்பிட்டேன். முன்னாள் நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களோடு தஞ்சைப் பகுதியில் அவருடைய காரில் சுமார் இரண்டு மணி நேரம் சேர்ந்து பயணம் செய்யவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. அப்போது திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். பஞ்சாப் மாநிலத்திற்குச் சென்று, அங்கே தொழில் நடத்துகிறவர்களை நேரில் போய்ப் பார்த்தேன். அவர்கள் தொழில் வளர்ச்சியடைந்திருப்பதைப் பார்த்து, நான் ஆச்சரியப்பட்டு, "இவ்வளவு சிறப்பாக தொழிலை நடத்துகிறீர்களே, உங்களுடைய தொழிலுக்கு இந்த அரசாங்கத்திலிருந்து என்ன ஆதரவு வேண்டும்?" என்று கேட்டாராம். உடனே அந்தத் தொழிற்சாலை முதலாளி "நீங்கள் ஒரே ஒரு உதவி மட்டும் செய்தால் போதும்" என்றாராம். என்ன உதவி என்றால், "அரசாங்கம் என்னுடைய அருகில் வராமல் இருந்தாலே போதுமானது" என்றாராம். "எதற்கு இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், இப்போதுகூட நான் லைசென்ஸ் வைத்திருக்கவில்லை, இருந்தாலும் இந்தத் தொழிற்சாலையை நல்ல விதத்தில் நடத்திக் கொண்டிருக்கிறேன்" என்றாராம். லைசென்ஸ் இல்லாமலேயே அவர்கள் அந்த அளவுக்குத் தொழிலை அபிவிருத்தி செய்திருக்கிறார்கள். காரணம் அவர்களுக்கு அங்கே அரசாங்கத் தலையீடு இல்லை என்பதால்தான். இதைச் சொல்லும்போது, லைசென்ஸ் முறையே இருக்கக் கூடாது என்று நான்

(முற்பகல் 11-40)

சொல்ல முன்வரவில்லை. அதே மாதிரி மருத்துவ மனைகளைப் பெருக்க, அவை வளர்ச்சியடைய ஊக்கம் அளிக்கிறார்கள். அதனால் அரசாங்கத்திற்குச் செலவு குறைகிறது. சென்ற நிதிநிலை அறிக்கையிலே கூட அரசாங்கம் சுகாதாரச் சீர்திருத்தத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. நிதி ஒதுக்கியிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். தனிப்பட்டவர்கள் ரூ. 6 ஆயிரம் செலவு செய்தால், அரசாங்கம் ரூ. 6 ஆயிரம் செலவு செய்து, மினி ஹெல்த் சென்டர்கள் வைக்கலாம் என்று சொல்லிற்று. தனியார்களுக்கு அப்படி அமைக்க ஊக்கம் அளித்தது. நானேகூட முயற்சி செய்து, 2 மினி ஹெல்த் சென்டர்கள் அமைத்தேன். அரசாங்கத்தினுடைய பங்கு 1/3 பங்கும், மத்திய அரசின் பங்கு 1/3 பங்கும், தனியார் பங்காக 1/3 பங்கும் பெற்று

அமைந்தேன். என்னுடைய முயற்சியில் கிட்டத்தட்ட ரூ. 5 லட்சம், மாநில அரசு கொடுத்தது ரூ. 2 லட்சம், மத்திய அரசாங்கம் கொடுத்தது 2 லட்சம் என்று சேர்த்து மருத்துவ மனை ஏற்பாடு செய்தேன். இப்படி மாநில அரசு மத்திய அரசு உதவிகளையும் பெற்றுச் செய்து கொண்டிருக்கிறார்கள். தனிப்பட்டவர்கள் அரசாங்க உதவியுடன் செய்கின்ற காரணத்தினாலே, அரசுக்குச் செலவு குறைகிறது. மருத்துவ மனைகள் ஆரம்பிக்கப் பணம் கேட்கின்ற போது, அவர்களுக்குக் கொடுக்க முடியவில்லை என்ற பிரச்சினை ஏற்படாது. எங்கு எங்கு தேவைப்படும் என்பதை அறிய வேண்டும். மத்திய மாநில அரசின் கீழ் ஒரு செலக்ட் கமிட்டி, சிர்க்கார் கமிஷன் என்று நினைக்கிறேன், அதுபோல கமிட்டி அமைத்து அந்தக் கமிஷனுடைய கருத்தைக் கோரலாம் என்று சொல்லிக்கொண்டு இன்னும் இரண்டொரு கருத்துக்களைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

கார்ப்பரேஷன் டாக்ஸ்பற்றி மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ரெயில்வே பாசஞ்சர் டாக்ஸ் பற்றியும் முன்னாலே பேசியிருக்கிறார்கள். அடிஷனல் எக்சைஸ் டியூட்டி பொறுத்தும் இதற்கு முன்னாலே பேசியிருக்கிறார்கள். கடந்த 5 அல்லது 6 ஆண்டுக் காலமாகவே இந்தப் பிரச்சினைகள் இருந்துகொண்டிருக்கின்றன. முன்பிருந்த மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. மதியழகன் அவர்கள்கூட மத்திய அரசிடம் கேட்டிருக்கிறார்கள். கார்ப்பரேஷன் டாக்ஸ்-ல் இருந்து, இன்கம் டாக்ஸ் சர்சார்ஜிலிருந்து கொடுக்க வேண்டும் என்று நம்முடைய மாநில அரசில் கேட்டிருக்கிறார்கள். மத்திய அமைச்சர் திரு. பிரம்மானந்த ரெட்டி அவர்கள் சொன்னார்கள். இந்த இன்கம் டாக்ஸிலிருந்து மாநிலத்திற்கு 80 சதம் ஒதுக்கியிருக்கிறார்கள். கார்ப்பரேஷன் சர்சார்ஜிலிருந்து நீங்கள் கேட்டால், கிடைக்கக்கூடிய பணத்திலிருந்து 40 சதம் கொடுப்போம் என்றார்கள். இன்கம்-டாக்ஸ் 80 சதம், கார்ப்பரேஷன் டாக்ஸ் 40 சதம் என்று கொடுத்தார்கள் என்றால், அது இரண்டும் ஒன்றாகத்தான் சேர்ந்து போகும். அந்த மாதிரி நிலைமைதான் இருக்கிறது. நம் அரசு தானாக விட்டுக்கொடுக்கின்ற அடிஷனல் எக்ஸைஸ் டியூட்டி என்பது, காங்கிரஸ் அரசு இருந்தபோதும் விட்டுக் கொடுக்கப்பட்டது. ரெயில்வே பாசஞ்சர் டாக்ஸையும் விட்டுக் கொடுத்தது. ரெயில்வே பாசஞ்சர் டாக்ஸ் முன்னாலேயே நாம் விட்டுக் கொடுத்தது. நமக்கு நிறைய கொடுக்கக்கூடிய வாய்ப்பிருக்கிறது என்று பிரம்மானந்த ரெட்டி கமிஷனிலே சொன்னார்கள். மாநில அரசுத் தேவைகளுக்கு அடிஷனல் எக்சைஸ் டியூட்டி இருக்கிறது. இன்டர்-ஸ்டேட் டாக்ஸ் என்று 40 சதவிகிதம் நாம் எடுத்துக்கொள்ளலாம் என்றெல்லாம் கருத்துக்களை அவர்கள் குறிப்பிட்டார்கள். இதில் மத்திய அரசும் மாநில அரசுகளும் இணக்கமான கருத்துக்களைத் தெரிவித்து அதை செயல்படுத்த வேண்டும்



என்று சொன்னார்கள். சிர்க்கார் கமிட்டி போல ஒரு மத்திய சமிட்டி போடுவதற்கு முயற்சிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது.

அடுத்ததாக, பைனான்ஸ் கமிஷன் பற்றியது. பைனான்ஸ் கமிஷனை, ஆஸ்ட்ரேலியன் கிராண்ட்ஸ் கமிஷன் போல, நிரந்தரமான கமிஷனாக வைக்க வேண்டும். ஐந்து வருடத்திற்கு ஒரு முறை கணக்கு முடித்துவிட்டு அறிக்கை கொடுத்தாகி விட்டது. அதற்கு இடையிலே வருகின்ற தேவைகளுக்கு நான் என்ன செய்வது என்று சொல்கிறார்கள். இருக்கின்ற பைனான்ஸ் கமிஷன் பர்மெனென்டாக இருக்க வேண்டும் என்று மத்திய அரசிடத்திலே நாம் கேட்கலாம். அடுத்ததாக பிளானிங் கமிஷன்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். பிளானிங் கமிஷன் ஒரு ஸ்டாட்டுட்டரி பிளானிங் கமிஷனாக இருக்க வேண்டும் என்று கேட்க வேண்டும். இன்டர் ஸ்டேட் கவுன்சில் என்பது நம்முடைய அரசியல் அமைப்பிலே கொடுக்கப்பட்ட ஒன்று. இது மத்திய மாநில அரசுகளின் பிரச்சினைகளுக்கு வழிவகைகளைக் காண்பதற்காக உள்ளது. இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமசாமி படையாச்சி அவர்கள் பேசும்போது, இந்த காவிரி நீர்ப் பிரச்சினை ஒரு தீராத பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். இதுபோல உள்ள மத்திய மாநில அரசுகளின் தாவாக்களை சுப்ரிம் கோர்ட்டுக்கு ஒரு தனிப்பட்ட ஆக்ட் போட்டுக்கொண்டு போக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பட்ஜெட்டிலே நாம் 15 ஆண்டுகளுக்கு நம்முடைய தனி நபருடைய வருமானத்தை ஏற்றவே முடியாது என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். அதைப்பற்றி நமது அரசு திறமையான நிபுணர்களை வைத்துக்கொண்டு ஆலோசனைகள் செய்து வழி காண வேண்டும். அவர்களை வைத்துக்கொண்டு, அங்கு இருக்கக்கூடிய பிளானிங் கமிஷன், பைனான்ஸ் கமிஷன் இவைகள் இரண்டிற்கும் இடையிலே சிக்கிக்கொள்ளாமல், தேவைகளைப் பெறுவதற்கு வேண்டிய ஆலோசனைகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழ் நாடு விற்பனை வரிக் குழு என்று போட்டிருப்பதாக நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சொன்னார்கள். இந்த வரிக் குழுவைப் பொறுத்தவரையில், விற்பனை வரியில் இருக்கின்ற விபரங்களைத் தெரிவிக்கவும், அதிலுள்ள குறைபாடுகளை நீக்குவதற்கு என்றும் அந்தக் குழுவைப் போட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்களும், திருச்சி மாயாண்டி என்பவரும் அதிலே உறுப்பினர்களாக இருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் குழு உறுப்பினர்களுக்கு என்ன அதிகாரம் கொடுக்கப்பட்

டிருக்கிறது? விற்பனை வரி விதிகளில் உள்ள குறைபாடுகள் என்ன என்ன, வரி வசூலை மேம்படுத்துவதற்கு என்ன என்ன வரைமுறைகள் வழிவகைகள் செய்யலாம், அதிலுள்ள அடிப்படையான குறைகளைப் போக்குவது எப்படி என்பதைப்பற்றி எடுத்துச் சொல்வதுதான். ஆனால் இந்த விற்பனை வரிக் குழு மிகவும் குறைவான அதிகாரங்களைக் கொண்ட ஒரு வரிக்குழுவாகத்தான் இருக்கிறது. லோகநாதன் கமிட்டி போட்ட மாதிரி, பி. சி. சீனிவாசன் கமிட்டி போட்ட மாதிரி, இப்போது முழுமையான அளவுக்குச் சீர்திருத்தங் களைச் செய்ய, விற்பனை வரி வசூல் பற்றிப் பரிசீலனை செய்து, சரியான முடிவுகள் எடுக்கக்கூடிய அளவுக்கு ஒரு மூன்று பேர் கொண்ட கமிட்டி போட வேண்டும். அக்கமிட்டி சேல்ஸ் டாக்ஸ் விதிகளில் உள்ள குறைபாடுகள் என்ன, சேல்ஸ் டாக்ஸ் அதிகாரிகள் எப்படி எப்படி வரி வசூல் செய்கின் றார்கள், அதில் வரி செலுத்துவோருக்கு ஏதாவது கஷ்டங்கள் இருக்கின் றனவா, அலுவலகங்களில் இருக்கக்கூடிய மேஜை நாற்காலி போன்ற வசதிகள் இருக்கின்றனவா, அப்பல்லேட் ஜுரிஸ்டிக்ஷன் என்ன என்பதைப் பற்றியெல் லாம் பார்க்க வேண்டும். இதற்காக ஒரு தனி கமிட்டி போட்டு ஆராய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒன்றும் சரியாகப் போடவில்லை என்ற கருத்தினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்து, லேண்ட் ரிபார்ம்ஸ் என்பதைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இன்னும் எவ்வளவு நேரம் தலைவர் என்னைப் பேச அனுமதிக்கிறார் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நீங்களே சீக்கிரம் வெளியே போகவேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையிலே, ஒரு தீர்வான நிலச் சீர்திருத்தச் சட்டம் வரும் என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த நிலச் சீர்திருத்தத்தைப் பற்றிப் பலமுறை பேசப்பட்டிருந்தாலும் முடிவாக என்ன சட்டம்தான் வரப் போகின்றது என்ற கருத்தினை இன்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்லவில்லை. மாநில அரசினுடைய கணிப்பு வேறு மாறாக இருக்கின்றது. மாநில அரசு 15 ஏக்கர் என்றும் மத்திய அரசு 10 ஏக்கர் வரை என்றும் சொல்லுகிறது. பஞ்சமார்கள் பெண்களுக்குக் கொடுப்பது 10 ஏக்கர் வரை இருக்கலாம். ஆனால் 5 ஏக்கருக்கு மேல் கொடுக்கக் கூடாது என்ற முடிவுக்கு வந்திருப்பதாகச் சொல்கிறார்கள். கிட்டத்தட்ட ஒரு 4 ஆயிரம் அல்லது 3 ஆயிரம் வரையில் கொடுக்கலாம் என்றும் அதற்கு மேல் கொடுக்கக்கூடாது



என்றும் நிர்ணயம் செய்திருக்கிறார்கள். இந்த மாதிரியான நிர்ணயிப்பு களினால் நிலச்சுவான்தார்களுக்கு மிகவும் சிரமமான நிலைமைகள் எல்லாம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப்பற்றி நமது மாண்புமிகு அங்கத்தினர் திரு. கோ. சி. மணி அவர்கள் பேசும்போதுகூட குறிப்பிட்டார்கள். தஞ்சையிலே புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கெல்லாம் நில வரி 25 சதவிகிதம் குறைக்கச் சட்டம் இருக்கிறது. அதை 50 சதவிகிதம் அளவுக்குக் குறைக்க வேண்டும் என்று நாங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கூறினோம். கவனிக்கலாம் என்று சொன்னார்கள். ஒரு மூட்டை ரூ. 54-க்கு வாங்குகின்ற நிலைமை இருந்தது. ஆனால் இங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது? யாராக இருந்தாலும், 3 கிலோ பிடித்துக்கொள்ள வேண்டும் என்று இங்கிருந்து உத்தரவு வந்திருக்கிறது. ரூ. 51.50-க்கு மேல் மூட்டைக்கு விலை கொடுக்கக் கூடாது என்று செயலாளர் அவர்களிடமிருந்து உத்தரவு வந்திருப்பதாகச் சொல்கிறார்கள். அந்தச் செயலாளர் அரசாங்கத்திற்குத் தெரிந்து செய்திருக் கிறாரா, தெரியாமல் செய்திருக்கிறாரா என்பதைப்பற்றியும் இந்த அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.50)

'சைக்ளோன் ரிலீஃப்' என்று எல்லோருக்கும் கொடுத்தார்கள். ஆனால் தஞ்சையில் உள்ள இராஜராஜன் சிலைக்கு மட்டும் கொடுக்கப்படவில்லை. திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த நேரத்தில் இராஜராஜன் சிலையை மிகச் சிறப்பாக நிறுவினார்கள். மதிப்பிற்குரிய மேலவைத் துணைத் தலைவர் அவர்களும் அங்கே வந்து, பிரசங்கம் செய்தார்கள். ஆனால் அண்மையில் ஏற்பட்ட புயலால் அந்தச் சிலையும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** கெட்டுப் போனதற்கு நான் காரணமில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** சிலையைத் திறக்கும்போது, தாங்கள் வந்திருந்து, சிறந்த சொற்பொழிவாற்றினீர்கள். அந்த மன்னனைப் பற்றிய செய்திகளை எடுத்துச் சொன்னீர்கள். அப்போது அங்கே ஒரு பெரிய மண்டபம் அரசாங்கச் சார்பிலோ அல்லது நகராட்சியின் சார்பிலோ கட்டு வதாகச் சொன்னார்கள். ஆனால் ஒரு கொட்டகையைத்தான் போட்டார்கள். இப்போது ஏற்பட்ட புயல் காரணத்தால், அந்தக் கொட்டகையும் அடித்துக் கொண்டு போய்விட்டது. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இதுபற்றிச்

சொன்னேன். இன்னும் ஒன்றும் செய்யவில்லை. எனவே எல்லோருக்கும்
கொடுத்ததைப்போல், இராஜராஜ சோழன் சிலைக்குப் புயல் நிவாரணம் அளிக்க
வேண்டுமென்று சொல்லி, சிறந்த மண்டபத்தை அங்கே ஏற்படுத்த வேண்டு
மென்று கேட்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. கோ. சி. மணி தலைமை)

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே,
எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள்
தேவையான விவரங்களையெல்லாம் சேகரித்து, இங்கே சொல்லி முடித்தார்கள்.
கிட்டத்தட்ட எல்லாவற்றையும் பற்றிச் சொல்லிவிட்டார்கள். அதையெல்லாம்
குறுக்கிட்டுப் பேசுவதற்கு நேரத்தைப் போக்க வேண்டியதில்லை என்று
நினைத்து, என்னுடைய ஜில்லாவைப் பொறுத்துப் பேசி முடித்து விடுகிறேன்.
ராமநாதபுரம் ஜில்லாவில், கிழக்கு ராமநாதபுரம், மேற்கு ராமநாதபுரம் என்று
இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. மேற்கு ராமநாதபுரத்தின் சீதோஷ்ண
நிலைமை வேறு; கிழக்கு ராமநாதபுரம் சீதோஷ்ண நிலைமை வேறு. பொதுவாக
கிழக்கு ராமநாதபுரத்தில் நெல் விவசாயம்தான். மேற்கு ராமநாதபுரத்தில்
பணப் பயிர் விவசாயம் அதிகம். விவசாய இலாக்கா பணப் பயிர் பயிரிடும்
விவசாயிகளுக்கு சிரமத்தை ஏற்படுத்திக்கொண்டே வருகிறது. விவசாய
இலாகாவினர், ஒவ்வொரு நாளும் ரேடியோவிலே செய்திகளைச் சொல்லிக்
கொண்டே வருகிறார்கள். அந்தந்த ஒன்றியங்களிலே இருக்கக்கூடிய துணை
விவசாய அதிகாரிகளை அணுகி, வேண்டுமென்கிற விதைகளை, உரங்களை
வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால் பணப் பயிர்களுக்
குரிய உரம், பூச்சி மருந்து ஒன்றியத்திலே கிடையாது. ஒவ்வொரு நாளும்
அவர்கள் ஏமாற்றமடைகிறார்கள். அதனால் பணப் பயிர் விவசாயத்திற்குக்
குந்தகம் ஏற்படுகிறது. கிழக்கு ராமநாதபுரத்திலும் இதே நிலைமைதான்.
அங்கேயுள்ள விவசாயிகள் அங்குள்ள ஒன்றியங்களை அணுகி, அவர்களுக்கு
வேண்டிய மருந்துகளை வாங்கிக் கொள்ளலாமென்று ரேடியோவில் தினமும்
சொல்கிறார்கள். ஆனால் அப்படி மருந்துகள் ஒன்றியத்தில் இருக்கிறதா
என்றால் இல்லை. ஒரு சில மருந்துகள் இருக்கின்றன. அவை அந்த
சந்தர்ப்பத்தில் உபயோகப்படுத்த முடியாத மருந்துகளாக இருக்கின்றன.
வேண்டிய மருந்துகள் டெப்போக்களில் இல்லை. நான் எங்கள் ஏரியாவைப்
பற்றிச் சொல்கிறேன். எங்கள் ஏரியாவில் கிடைக்கவில்லை. ஒவ்வொரு
நாளும் விவசாயத்தை அபிவிருத்தி பண்ண அன்பாக, ஆதாரவாக, அதிக
லாபம் அடையக்கூடிய முறையில் பிரச்சாரம் செய்கிறார்கள். அதுமாதிரி
அங்கே இருக்கிறதா என்றால் இல்லை. குறிப்பாக இப்போது அறுவடை நேரம்.



உளுந்து, பாசிப்பயிர், பருத்தி போடுங்களென்று அன்பாகச் சொல்கிறார்கள்.
அவர்கள் சொல்வதைப் பார்த்தால், ரொம்பவும் நன்றாக இருக்கிறது. அந்த
மாதிரி நடைமுறையில் இருக்கிறதா என்றால், இல்லை. கோ-9 உளுந்தை
வாங்கி விதையுங்களென்று சொல்லுகிறார்கள். விதை எங்கேயிருக்கிற
தென்றால், 100 மைல், 200 மைல்களுக்கு அந்தண்டை இருக்கிறது. என்னைப்
போன்றவர்களுக்கு, வாங்கிக் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். ஆனால்
சாதாரண ஏழை விவசாயிகளுக்குக் கிடைப்பது ரொம்ப கஷ்டமாக இருக்
கிறது. சொல்வது எளிதாக இருக்கிறது; அவற்றைக் கொண்டு வருவது
கஷ்டமாக இருக்கிறது. அந்த உளுந்தை வாங்கி, அதனுடன் நுண்
ணுயிர்களைக் கலந்து, ஒரு நாள் இரவு வைத்திருந்து, மறுநாள் விதைக்க
வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் நுண்ணுயிர் ஸ்டாக் இல்லை,
வருமென்று சொல்கிறார்கள். அது வரும் காலத்தில் தண்ணீர் இருக்காது.
விவசாய இலாக்காவினர் சொல்லும் விவசாயத்தைச் செய்கின்ற எங்களுக்கு,
அதற்குரிய விதைகள், உரங்கள், மற்றைய சாதனங்கள் அந்தந்த ஒன்றியங்
களில் கிடைக்க அரசு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

கிழக்கு ராமநாதபுரத்திற்குத் தண்ணீர் வசதி கிடையாது. இந்த வருஷத்
திலே ஏராளமான மழை பெய்திருப்பதால், தண்ணீர் வசதி இருக்கிறது. இருந்
தாலும், சில ஊர்களிலே தண்ணீர் இப்போதே இல்லை. அந்தப் பகுதியில்
ஆழ் துளைக் கிணறுகளை ஏற்படுத்த வேண்டுமென்று நான் சொல்லிக்கொண்
டிருக்கிறேன். முன்னாலே சில இடங்களுக்கு இன்ஜினியர்கள் வந்து, சுத்த
மாக அந்த இடங்களிலே தண்ணீர் கிடையாதென்று எழுதி வைத்துவிட்டுப்
போயிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஆழ் துளைக் கிணறுகளைத்
தோண்ட வேண்டுமென்று எடுத்துச் சொன்னால், முன்னாலேயே தண்ணீர்
இல்லையென்று எழுதி வைத்திருக்கிறார்களே, அங்கே எதற்காகப் பரிசோதனை
செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார். ஏதோ வம்பிற்காக தொடர்ந்து 4, 5
இடங்களிலே துளை போட்டார்கள். அங்கே தண்ணீர் கிடைத்தது. ஒவ்வொரு
கிணற்றிலிருந்து 50, 60, 100 ஏக்கர்வரை சாகுபடி பண்ணுகிற அளவிற்கு,
இயந்திரம் வைக்காமலேயே தண்ணீர் வருகிறது. யாரோ ஒரு காலத்தில்,
ஏதோ கோபத்தினால், அந்த ஏரியாவில் தண்ணீர் கிடைக்காதென்று எழுதி
வைத்துவிட்டார். ஆனால் இன்றைக்குத் தண்ணீர் நன்றாகக் கிடைக்கிறது.
எங்கள் ஊரில் குடி நீரே கிடையாது. 4, 5 இடங்களில் துளைக் கிணறுகளைத்
தோண்டியதில், தண்ணீர் வருகிற சூழ்நிலை உண்டாகியிருக்கிறது. ராமநாத
புரம் ஜில்லா மிகவும் வறண்ட பிரதேசம். 5 மைலுக்கு ஒரு ஆழ் துளைக்
கிணறு எடுக்க வேண்டும். ஒரு இலக்கிலே வெற்றி பெற்றால்கூட நல்லது.
ஆரப்பணம் போட்டு ஒரு கிணற்றை உருவாக்க ஒரு லட்சம் ரூபாய் செல

வாகிறது. தேவகோட்டையிலிருந்து தொண்டிவரை, 22 மைலுக்குத் தண்ணீர் தர 1 கோடி 6 லட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறது. ஆனால் 5 மைல், 8 மைல்களுக்குள் துளைக் கிணறுகள் மூலம் தண்ணீர் பெற்றால், மிகவும் சௌகரியமாக இருக்கும். இதற்குப் பணச் செலவும் அதிகமாகாது. 20 இடங்களில் துளைக் கிணறுகள் போட்டால், 20 லட்சம் ரூபாய்தான் செலவாகும். அதில் 4 இடங்களில் தண்ணீர் கிடைத்துவிட்டால், 1 கோடி ரூபாய்க்குச் செலவு வராது. எனவே உடனடியாக அரசு இதில் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

இப்போது தேவகோட்டையிலிருந்து எங்கள் ஊர் வரையில் 28 ஊர்களுக்குத் தண்ணீர் பைப் மூலம் கொண்டு வருகிறார்கள். தொண்டி ஏரியாவிலிருந்து 20 ஊர்களுக்குத் தண்ணீர் கொடுத்திருக்கிறார்கள். எங்கேயாவது மெஷின், மோட்டார் வேலை செய்யவில்லை என்றால், தண்ணீர் இல்லாமல் இருக்கும் நிலை ஏற்படும்.

(நண்பகல் 12-00)

அதனால் ஒரு ஐந்து மைலுக்கு ஒரு ஆழ் துளைக் கிணறு போட வேண்டும். அது வெற்றி பெற்றால், நன்மையாக இருக்கும்.

எங்களுடைய ஏரியா, கடற்கரை ஏரியா. அங்கே மீனவர்கள் அதிகம். முன்பெல்லாம் வெளிநாடுகளில் வியாபாரம் நடத்தி, பிழைத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது வெளிநாடு வியாபாரம் நின்று விட்டதால், அவர்களுக்கும் கஷ்டம். அவர்களுக்குக் குடிக்கவும் தண்ணீர் இல்லை. இரண்டாவது அவர்களும் விவசாயம் செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அரசு மகா சமுத்திரத்தில் போய் விழக்கூடிய தண்ணீரை இங்கே கொண்டுவர முயற்சி எடுப்பதாகச் சொல்லுகிறார்கள். இது ரொம்ப காலமாகச் சொல்லுகிறார்கள். அது மாதிரி ஏற்பாடு செய்தால், அதிக வசதியாக இருக்கும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நேர்மையாக, நன்றாக மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்று கருதுகிறார்கள் என்று நான் எண்ணுகிறேன். அது மாதிரி அவருடைய எண்ணத்தைப் பிரதிபலிக்கக்கூடிய நிலையிலே இல்லாமல் பிரச்சாரங்கள், செயல்கள் எல்லாம் தவறான முறையில் நடைபெறுகின்றன. அதனால் மக்கள் பாதிக்கப்படக்கூடிய நிலை இருக்கிறது.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், மதுவிலக்கைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். பழையபடியே போங்கள் என்று கையைக் காட்டி விடுங்கள். இல்லையென்றால் சரியாகச் செய்யுங்கள். ஏராளமான பணத்தைச் செலவு செய்து, அதனால் அதிகாரிகள்தான் ஆதாயமடைகிறார்கள். அவர்கள்



சும்மாயிருக்கிற மாமேறிகளைக் கூப்பிட்டுத் தூண்டிவிட்டு, "நீங்கள் செய்யுங்கள். அதற்கு மாமூலாக இவ்வளவு கொடுங்கள்" என்று சொல்வதைப்போல இருக்கிறது. இதுமாதிரிச் சொன்னால், நான் மதுவிலக்குக்கு ஆண்டி-பிராபகண்டா (Anti-propaganda) பண்ணுகிறேன் என்று எண்ணுவார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை. இந்த அரசோடு ஒத்துழைக்க நாங்கள் சித்தமாக இருக்கிறோம். எந்த வகையிலும் உதவத் தயாராக இருக்கிறோம். இப்படியெல்லாம் அரசுக்கு விரோதமான செயல்கள் நடக்கின்றனவே என்றுதான் நான் சொல்லுகிறேன்.

நாம் இங்கே கேள்வியைக் கேட்டால், அதற்குப் பதிலை, நாம் யார் மேல் குறை சொல்லுகிறோமோ அவரிடமே அனுப்பிப் பெறுகிறார்கள். பிறகு அதையே அமைச்சர்களும் பதிலாகச் சொல்லுகிறார்கள். அதைக் கேட்டால், எங்களுக்கு மனம் புண்படுகிறது. இவ்வளவு அநியாயமாக நடக்கிறதே, அமைச்சர் அவர்கள்கூட இப்படி பதில் சொல்லுகிறார்களே என்று எண்ணும்போது, எங்களுக்குச் சங்கடமாக இருக்கிறது. முன்புகூட நான் சொன்னேன், காலாவதியான மருந்துகள் கொடுக்கப்படுகின்றன என்று. அதை அங்குள்ள அதிகாரிகளே ஒப்புக்கொண்டார்கள். அவர்களே அங்கு தவறுகள் நடந்திருக்கின்றன என்று உணர்ந்தார்கள். 30 ரூபாய் மருந்தை 10 ரூபாய்க்கு விற்றார்கள். ஆனால் நான் கேள்வி கேட்டபோது, அமைச்சர் அவர்கள் அப்படி நடக்கவில்லை என்று சொன்னார்கள். பிறகு நான் என்ன சொல்ல முடியும்? எதற்காக நான் இப்படிப் பேசுகிறேன்? முன்பெல்லாம் சொல்லுவார்கள், ராவ் பகதூர் பட்டம் என்று. அதை வாங்குவதற்காகவா நான் அப்படிச் சொல்லுகிறேன். ஒருகாலும் நான் தவறாகச் சொல்லமாட்டேன். செய்யக்கூடிய காரியங்களில் தவறுகள் இருந்தால், அதை அமைச்சர்கள் புரிந்து கொள்ளட்டும் என்றுதான் எடுத்துச் சொல்லுகிறேன். கெடுதல் பண்ணக்கூடிய நோக்கம் எனக்கில்லை. இதையெல்லாம் இவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை என்று நினைக்கிறேன். இதே மாதிரி தவறுகள் எல்லாத் துறைகளிலும் நடக்கின்றன.

பஞ்சாயத்துக்களை நல்ல முறையில் ஊக்குவிக்க இந்த மின்சாரத் துறையை அவர்களிடமே ஒப்புவிக்க நினைத்திருக்கிறார்கள் என்று மின்சாரத் துறை அமைச்சர் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது சொன்னார். இது முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது. பஞ்சாயத்து நிர்வாகம் சரியாக நடக்கவில்லையென்று கிராம முன்சீப்பைத் தலைவராகப் போட்டு, ஒரு குழுவை அமைத்ததாக ஒரு அறிக்கையை வெளியிட்டார்கள். இது பஞ்சாயத்துத் தலைவர்களைக் கேவலப்படுத்துவது மாதிரி இருக்கிறது என்றுகூட சொன்னோம். பஞ்சாயத்துத் தலைவர் முன்சீப் அல்ல. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் இருக்கிறபோது, இன்னொருவர் ஏன் என்றுகூட கேட்டோம். அவரை விட்டுவிட்டு, பூர்வநல சிறப்புடைய ஒருவரைத் தலைவராக வைப்போம் என்று

சொன்னார்கள். பஞ்சாயத்துக்கு எலெக்ஷன் நடந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த தலைவரை விட்டுவிட்டு, வேறு யாரையோ போடுவதாகச் சொல்லுகிறார்கள். அவர்கள் பரம்பரையாக இருந்த குடும்பங்களில் இருந்து வருகிறார்களோ, என்னவோ, எங்களுக்குப் புரியவில்லை. இப்படிப்பட்டவை எல்லாம் நடக்கிறது என்று நான் சொல்லுகிறேன். தவறு நடக்கிறது என்று சொல்லவில்லை. ஆனாலும் இதைப்பற்றியெல்லாம் சிந்திக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். பஞ்சாயத்துப் பூராவும் உள்ள மக்களெல்லாம் சேர்ந்துதானே ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்தார்கள். அவர்களை விட்டுவிட்டு, இங்கேயிருந்து ஒரு தலைவரைப் போடுவது ஏன்? அப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து என்ன ஆவது? இதுமாதிரி செய்யக்கூடாது என்று சொல்லுகிறார்கள். தவறு பண்ணிவிட்டார்கள் என்று நான் பேசவில்லை. ஆனால் இதையெல்லாம் சிந்திக்க வேண்டுமென்று சொல்லுகிறேன். ஒரு முக்கியமான முதலமைச்சர் இருக்கிறார், அவர் உண்மை பேசுகிறார், சொன்னதைச் செய்வார் என்று நம்பிக் கொண்டிருக்கக்கூடிய எங்களுக்கெல்லாம் ஏமாற்றம் தரக்கூடிய சூழ்நிலைதான் இருக்கிறது.

மதுவிலக்கு, மின்சாரம் ஆகிய இரண்டு துறைகளிலும், இந்த அரசின் அஸ்திவாரத்தையே உடைக்கக்கூடிய திட்டங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆகவே அந்த இரண்டையும் சரியான முறையில் கவனித்து நடந்துகொள்ளவில்லையென்றால், மக்கள் இவர்களை வெறுப்பார்கள். அதுதான் என்னால் சொல்ல முடிகிறது. ஆகவே இந்த இரண்டு துறைகளையும் சரியான முறையில் பரிசீலனை செய்ய வேண்டும். முதலமைச்சர் இங்கே இல்லை. ராமகிருஷ்ணத் தேவர் இப்படிப் பேசினார் என்று முதலமைச்சரிடம் சொல்ல வேண்டும். நான் யாரையும் குறை சாணும் நோக்கத்தோடு பேசுவதாக நினைக்க வேண்டாம். உண்மையிலேயே, உணர்ந்து பேசுகிறேன். நான் வெறுப்படைந்து பேசவில்லை, விருப்புடன்தான் பேசுகிறேன். கெட்டுப்போய் இருக்கிற, மின்சார இலாக்காவையும், மதுவிலக்கு இலாக்காவையும் கவனிக்க வேண்டும்.

இந்த பட்ஜெட்டிலே உள்ளது அத்தனையும் என்னால் படித்துப் பார்க்க முடியவில்லை. எனக்கு ஆப்பரேஷன் பண்ணியதால், வாய் மூடிக்கொண்டு படிக்க முடியாமல் இருந்தேன். மரியாதைக்குரிய திரு. சுவாமிநாதன் அவர்கள் பூரா விவரத்தையும் நல்ல முறையில் படித்துவிட்டுப் பேசினார்கள். அவர் சொல்லுவது அத்தனையும் நியாயமாக இருக்கிறது. அதுமாதிரி நான் சொல்வதற்குரிய நிலையில் இல்லை. விவசாயத்தை நம்பி வாழ்ந்துகொண்டிருக்கிறவர்கள், கிழக்கு இராமநாதபுரத்தையும், மேற்கு இராமநாதபுரத்தையும் சேர்ந்தவர்கள். மற்றவர்களுக்குப் பணப் பயிர் அதிகம். ஆனால் இவர்



களுக்கு நெற்பயிர்தான் அதிகம். அவர்கள் முன்னுக்கு வர வேண்டுமென்றால், பெரிய பெரிய முயற்சிகளையெல்லாம் நாம் எடுக்க வேண்டும். ஒரு கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவு செய்து, 82 கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்கிறேன் என்று சொல்லுகிறார்கள். ஆனால் இருபது இடங்களிலே ஆழ் துளைக் கிணறுகளைப் போட்டாலே போதும் என்று நான் சொல்லுகிறேன். எங்கள் மாவட்டத்திலே பெரிய கண்மாய் இருக்கிறது. 18 கிலோ மீட்டர் நீளமுள்ளது அந்தக் கண்மாய். இதுபோன்று 18 கிலோமீட்டர் நீளமுள்ள கண்மாய் இந்த மாநிலத்தில் வேறு எங்கும் இல்லை. அப்படிப்பட்ட கண்மாய் இருந்தும்

(பிற்பகல் 12-10)

எங்களுக்குத் தண்ணீர் போதவில்லை. இந்த வருஷம் கோரமான மழை பெய்து கஷ்டப்படுத்தினாலும் கொஞ்சம் தண்ணீர் இருக்கிறது. அதை ஈவித்துப் போட்டால் தள்ளலாம். நாங்கள் பேசுகிறோம் என்பதற்காக விவசாய இலாகாவிடமிருந்து ஏதாவது பதிலை வாங்கிக் கொடுப்பதில் பயன் இல்லை. மேற்கு இராமநாதபுரத்தில் விளைவது பணப்பயிர். ஏதோ ஒரு விதையைக் கொடுக்கிறார்கள். அதைப் போட்டால் பயிர் முளைத்து செடிகள் வளர்ந்தாலும் காய்ப்பதில்லை. இதையெல்லாம் வேண்டுமென்றே சொல்லி எல்லோருக்கும் மாசு ஏற்படுத்துகிற நோக்கத்தில் சொல்லவில்லை. நாங்கள் சொல்வது சரியா என்று பாருங்கள். பருத்தி நெ. 9 என்று ஒரு விதை ஒரு ரூபாய்க்குக் கிடைக்கிறது. ஒரு கிலோ ரூ. 320 என்று விற்கிறது. இப்படி விற்றால், நாங்கள் எப்படி வாழ்வது? உறுப்பினர் அவர்கள் வரலட்சுமி என்று ஒரு விதை சொல்கிறார்கள். எனக்கு அதில் அனுபவம் இல்லை. ஒரு ஏக்கரில் போட்டால், அதற்கு ரூ. 5,000 செலவாகிறது என்றும், லாபமாக ரூ. 10,000 கிடைக்கும் என்றும் சொல்கிறார்கள். ஒரு விதை ஒரு ரூபாய்க்கல்லவா வாங்க வேண்டும்? இதையெல்லாம் சிந்திக்க வேண்டும். நான் பேசிய விவரங்களை இங்குள்ள அமைச்சர்கள் தயவுசெய்து முதலமைச்சர் அவர்களிடம் சொல்ல வேண்டும். எங்களுக்கு இன்னும் குடிநீர்ப் பஞ்சம் தீரவில்லை.

பெரிய துரதிருஷ்டமாக இருப்பது இந்த மதுவிலக்கு. இதைப்பற்றி வெளியே பேசினால், ஏன் ஐயா சும்மா அதைப்பற்றிப் பேசுகிறீர்கள் என்று சொல்லும் நிலைமை இருக்கிறது. அப்படி நிர்வாகம் இருக்கிறது. எங்கள் பகுதியில் மதுவிலக்குக் கூட்டங்களைக் கூட்டுவார்கள். கலெக்டர், சப்-கலெக்டர் எல்லாம் பேசுவதற்குக் கூப்பிடுவார்கள், போய் பேசுவேன். ஆளைப் பிடித்துக் கொடுங்கள் என்று என்னிடம் கேட்பார்கள். நானும், நாங்கள் தருகிறோம், நீங்களும் தயாராக இருங்கள் என்று சொல்லிவிட்டு வரு

வோம். இதைச் சொன்னவுடனே ராமகிருஷ்ணத் தேவர் இப்படிப் பேசினார் என்ற தகவல் அவர்களுக்குப் போய்விடும். நம்புதாரைக்குப் பக்கத்தில் ஒரு பெண் இந்த வியாபாரம் செய்கிறார். போலீஸ் ஸ்டேஷனுக்குப் பக்கத்திலேயே இந்த வியாபாரம் நடக்கிறது. தேவகோட்டையில் பெண்கள் அநேகம் பேர் இந்த வியாபாரம் செய்கிறார்கள். ஆகவே இதைப்பற்றி அதிகமாகப் பேச வேண்டியதில்லை. நான் பேசியது ரொம்பக் குறைவானது. இருந்தாலும் இதைப் பெரிதாக எடுத்துக்கொண்டு. தகுந்தபடி காரியங்களைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் வழங்குவதற்காக கண்ணங்குடி ஏரியாவில் ஆறு இடங்களில் குழாய் போட்டிருக்கிறார்கள். அதனால் ஒவ்வொன்றிலும் 20 ஏக்கர் பாயும். நெடுகப் போட்டால் என்ன? ஒரு கோடி ஆறு லட்சம் ரூபாய் செலவு செய்து, 85 கிராமங்களுக்குத்தான் தண்ணீர் கொடுக்கிறோம். அதையே பத்து இடங்களுக்குப் போட்டுச் செலவு செய்தால், இன்னும் அதிகமான பகுதிக்குத் தண்ணீர் கிடைக்கும். அதையெல்லாம் யோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, 1978-79 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டின் பேரில் சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த பட்ஜெட்டைப் பொறுத்து, என்னுடைய அபிப்ராயம் என்னவென்றால், அரசியல் கருத்து வேறுபாடு இல்லாத எல்லோராலும் பாராட்டப்படக்கூடிய பட்ஜெட் இது. ஏழையெளிய மக்களுடைய, கிராமங்களுடைய மேம்பாட்டைக் குறிக்கோளாக வைத்து அமைக்கப்பட்ட பட்ஜெட் இது. ஆனால் இந்த பட்ஜெட்டை 'நிக்நேம்' என்று ஆங்கிலத்தில் சொல்வதைப்போல 'நிக்நேம்' சொல்லி சிலர் அழைத்தார்கள். சிலர் இதைக் களிமண் மாம்பழம் என்றும் சிலர் காகிதப்பூ என்றும் சொன்னார்கள். இவர்களுக்கு ஆங்கில நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியர் பதில் சொன்னார். "Call a rose by whatever name, will smell sweet" ஆகையால் எந்தப் பெயரால் அழைத்தாலும், பட்ஜெட்டின் சிறப்பு குறையப்போவதில்லை என்று சொல்லிக் கொள்கிறேன். இவர்கள் ஐரு பெயர் வைத்தால், நானும் அதற்கு அதற்கு ஒரு பெயர் வைப்பது பொருந்தும் என்று நினைக்கிறேன். இதற்குச் சொல்லக்கூடிய பெயர் என்னவென்றால், "தீராத பிணியைத் தீர்த்து வைக்கும் மா மருந்து" என்று சொன்னால், மிகப் பொருத்தமாக இருக்குமென்று நினைக்கிறேன். பட்ஜெட் சமர்ப்பிக்கும்போது, கைதட்டல் இல்லை என்று சொல்லப்பட்டது. கை தட்டல் வாங்க முடியாதா? கட்சி உறுப்பினர்களிடத்தில் சொல்லிவிட்டால், கைதட்ட மாட்டார்களா? கை தட்டச்





சொல்லி வைத்து கை தட்டல் வாங்குவதெல்லாம் 'சீப் பாபுலாரிட்டி' என்று சொல்வார்கள். அப்படி எதுவும் கையாளாமல் திறந்த மனதோடு நிதி அமைச்சர் அவர்கள் சபையில் வந்து அறிக்கையைச் சமர்ப்பித்தது அவருடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது. அதை நான் பாராட்டுகிறேன்.

அடுத்து, கவர்னர் உரை இல்லாமல் பட்ஜெட்டைத் துவக்குவது தவறு என்று பலர் குறை கூறினார்கள். கவர்னர் உரை தவிர்க்கப்பட்டது எதற்காக? எதிர்க் கட்சிக்காரர்கள் கேட்கும் கேள்விகளுக்கு, எழுப்பும் பிரச்சினைக்குப் பதில் சொல்ல முடியாமல் திணறிப்போய் அதைத் தவிர்த்ததாகச் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட கேள்விகளை இந்த பட்ஜெட்டிலும் கேட்கலாம். எனவே அந்தக் காரணத்தைச் சொல்வது பொருந்தாது என்று சொல்லிக் கொள்கிறேன். ஏன் தவிர்க்கப்பட்டது என்று கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆரம்ப காலத்தில் தேர்தல் பின்னாலே வைக்கப்பட்டதால், எப்போதுமே பிப்ரவரி மாதத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டிய பட்ஜெட் சென்ற ஆண்டு ஜூலையில்தான் சமர்ப்பிக்கப்பட்டது. நான்கு மாதங்கள் அதில் காலாவதியாகிவிட்டது. எதிர்பாராமல் வீசிய புயல் காரணமாக அந்தப் புயல் நிவாரண வேலைகளைப் பார்த்ததால், இரண்டு மாதங்கள் அதில் காலாவதியானது. கிட்டத்தட்ட ஓராண்டில் 6 மாதங்கள் காலாவதியாகிவிட்டன. வருஷம் ஒன்றுக்கு 70 அல்லது 75 நாட்கள் சபை கூடும். இந்த சபை கூடுவதில் இந்த ஆண்டு ஐந்தாறு நாட்கள் குறைந்திருக்கலாம். இதை ஒரு குறையாகச் சொல்லி இவ்வளவு கூப்பாடு போடுவது எப்படிப் பொருந்தும்? சட்ட வரம்புகள் இருந்தாலும் சில சமயங்களில் விதி விலக்கு உண்டு.

"Every rule has got an exception"

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** தலைவர் அவர்களே, "கூப்பாடு" என்று குறிப்பிடுவது பாராளுமன்றச் சொல்லா? அல்லாத சொல்லா? கவர்னர் உரையில் பல கருத்துக்கள் இருக்கின்றன. அது வைக்காததுபற்றிப் பல கருத்துக்கள் இருக்கின்றன. கூப்பாடு போடுகிறார்கள் என்று சொல்வது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-20)

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** 'கூப்பாடு' என்ற சொல் முறையானது தானா? அவையில் உபயோகிக்கக்கூடியதுதானா?

**மாற்றுத் தலைவர் (திரு. கோ. சி. மணி):** உபயோகப்படுத்தக்கூடிய ஒன்று தான்.

[1978 பிப்ரவரி 27

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** 'கூப்பாடு' என்று சொல்லும்போது குறை சொல்லுவதாகத்தான் படுகிறது . . . .

**திரு. ஜார்ஜ் கோமகன் :** கூவி அழைப்பதிலிருந்துதான் 'கூப்பாடு' என்று வந்ததாக . . . .

**புலவர் புலமைப்பித்தன்:** 'கூப்பாடு' என்பது 'கூப்பிடுவது' என்பதிலிருந்து வந்ததாகக் கொள்ளலாம். அதிலே தவறு ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்:** நான் கவிஞன் என்ற முறையில் சொல்கிறேன். கூவி அழுகிற பாட்டுதான் கூப்பாடு.

**புலவர் புலமைப்பித்தன்:** மன்னிக்கவேண்டும். நான் புலவர், கவிஞர் என்ற முறையில் சொல்ல விரும்புவது, 'கூ' என்பதற்கே அழைத்தல் என்றுதான் பொருள். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூட இதை ஏற்கும் வகையில்தான் . . . .

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** நான் கேட்டதெல்லாம், 'கூப்பாடு' என்ற சொல் 'பார்லிமெண்டரி' வார்த்தையா அல்லவா என்பதுதான்.

**மாற்றுத் தலைவர் (திரு. கோ. சி. மணி):** வழக்குச் சொல். ஆகவே பயன் படுத்தலாம்.

**திரு. ஜார்ஜ் கோமகன் :** இது பார்லிமெண்டரி வார்த்தையா அல்லவா என்பதைத்தான் உறுப்பினர் கேட்கிறார்.

**மாற்றுத் தலைவர் (திரு. கோ. சி. மணி) :** 'பார்லிமெண்டரி' வார்த்தை தான்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** தற்காலிகத் தலைவர் அவர்களே, உறுப்பினர் என்ற முறையில் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள் எதிர்க் கட்சி என்றால் 'மூக்கணாங்கயிறு' என்று அண்ணா சொல்லியிருக்கின்றார் என்று. அது நல்ல உதாரணம். ஆனால் மூக்கணாங்கயிற்றைப் பிடிப்பவர்கள் மாட்டை அடிப்பவர்களாக மட்டும் இருப்பதில்லை. தட்டிக் கொடுப்பவர்களாகவும் இருப்பார்கள். ஆனால் இங்கே இப்போது மூக்கணாங் கயிற்றைப் பிடித்துக் கொண்டிருப்பவர்கள் அடிப்பவர்களாக மட்டும் இருக்கின்றார்களே தவிர, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இவ்வளவு சிறப்புக்கள் இருந்தும், ஒரு வார்த்தை கூடப் பாராட்டிப் பேசியதாகத் தெரியவில்லை. மற்றவர்கள் பேசியிருக்கின்றார்கள், ஆனால் பிரதான எதிர்க் கட்சியாக இருப்பவர்கள் பாராட்டிப் பேசவில்லை. அந்த நல்ல பண்பாட்டை உருவாக்க வேண்டும்.



1978 பிப்ரவரி 27]

**மாற்றுத் தலைவர் (திரு. கோ. சி. மணி):** அதற்கு நீங்கள் இருப்பதால் தான் அவர்கள் விட்டுவிட்டார்கள் போலிருக்கிறது.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** அந்தப் பண்பாடு இனியாவது உருவாக வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் என்னை மிகவும் கவர்ந்த அம்சம், மத்திய அரசிடமிருந்து வரும் ஐந்தாண்டுத் திட்டத்துக்கு என நமது மாநில அரசு கூடுதலாக ரூ. 45 கோடியைப் பெற்றதுதான். இது மிகப் பெரியதொரு சாதனை என்ற வகையில் நமது அரசினை நான் பெரிதும் பாராட்டுகிறேன். மேலும் இந்த பட்ஜெட்டில் பல நல்ல அம்சங்கள் இருக்கின்றன. குறிப்பாக தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டத்தைப் பெரிதுபடுத்துவது, நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத்தை வெட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து மேலும் மின்சாரத்தைப் பெருக்குவது, குடிநீர் வசதியை அனைத்துக் கிராமங்களுக்கும் அளிப்பது என்பது போன்ற நல்ல பல திட்டங்கள் இதிலே அடங்கியிருக்கின்றன. இது மட்டுமின்றி, விதவை மகளிர்க்கு 45 வயதில் கொடுக்கப்படும் மானியத் தொகை 40-வது வயதிலேயே கொடுக்கப்படும் என்று அறிவித்திருப்பதானது வரவேற்கத்தக்க ஒரு அம்சமாகும். மேலும் கூட்டுறவுத் துறையில் இரண்டு இடங்களிலே சர்க்கரை ஆலைகள் ஆரம்பித்தல், நடமாடும் மருத்துவ மனையை ஏற்பாடு செய்திருப்பது, கிராமப்புறங்களிலே நியாய விலைக் கடைகளைத் திறப்பது, மேலும் பல விவசாய மற்றும் பாசன அபிவிருத்தித் திட்டங்களையெல்லாம் பற்றி இதிலே எடுத்துச் சொல்லியிருப்பது இவற்றையெல்லாம் பார்க்கும்போது, இந்த பட்ஜெட்டைப் பாராட்டாமல் எப்படி இருக்கின்றார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.

மேலும் உமறுப் புலவர் பெயரால் மதுரைப் பல்கலைக் கழகத்தில் இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கி, தமிழ் ஆராய்ச்சியைப் பெரிதுபடுத்த வேண்டும் என்று செய்திருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும். இது இஸ்லாமியப் பெருமக்களின் பாராட்டுதலைப் பெறக்கூடிய ஒரு நல்ல செய்தியாகும். மேலும் வக்ஃப் போர்டுக்காக எப்போதும் கொடுக்கப்படும் மானியத்தைவிட மூன்று லட்சம் கூடுதலாக இந்த ஆண்டு கொடுத்திருப்பது குறித்து, இஸ்லாமியர்களின் சார்பில் இந்த அரசினைப் பெரிதும் பாராட்டுகிறேன். மேலும் பீடித் தொழிலில் முஸ்லீம் பெருமக்கள் நிறைய பேர் ஈடுபட்டிருக்கின்றார்கள். அத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் சுலபமாக டி.பி. வியாதியினால் பாதிக்கப்பட்டு விடுகின்றார்கள். அவர்களுக்குச் சில பாதுகாப்பு ஏற்பாடுகளை இந்த அரசு செய்திருப்பதற்காகவும் இஸ்லாமியர்கள் சார்பில் நான் நன்றி செலுத்துகிறேன்.

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [1978 பிப்ரவரி 27

அடுத்து, இந்த வரவு-செலவுத் திட்டத்தில், மேலும் பல சுற்றுலா இடங்களிலே சுற்றுலா மாளிகை கட்டுவதற்காக வகை செய்யப்பட்டிருப்பதைப் பார்த்தேன். தமிழ்நாட்டில் அப்படி முக்கியமாகக் கருதப்படும் சுற்றுலா இடங்களிலே நாகூர் ஒன்றாகும், நாகூரில் அடக்கம் செய்யப்பட்டுள்ள மகானைக் கருதி, அந்த ஊரைப் புனிதமானதாக, முக்கியமானதாகக் கருதுகின்றார்கள். ரொம்பப் பேர் அந்த இடத்துக்கு யாத்திரையாகச் சென்று வருகின்றார்கள். எனவே அங்கே ஒரு சுற்றுலா மாளிகை கட்டப்பட வேண்டும், அதுவும் இந்த ஆண்டிலேயே அதற்கான திட்டத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, இப்போது போடப்பட்டுள்ள டீஸல் மீதான வரியானது நேரடியாக இல்லாவிட்டாலும், மறைமுகமாக விவசாயிகளையும் பிறரையும் பாதிக்கிறது. எனவே இதை வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். சேல்ஸ் டாக்ஸைப் பொறுத்தவரையில், நிறைய புகார்கள் வருகின்றன. எவேஷன், வரி ஏய்ப்பு நிறைய இருக்கிறது. இதே சபையில் ஒரு எம்.எல்.சி. சில ஆண்டுகளுக்கு முன்பு பேசினார். அவர் ஒரு வியாபாரி. அவர் சொன்னார், "எல்லோரும் வரி ஏய்க்கின்றார்கள், நானும் ஏய்க்கிறேன்" என்று. காங்கிரஸ் ஆட்சிக் காலம் அது. நியாயமாக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அவர் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர். அப்போது நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. அவர் சொன்னதைப்போல விற்பனை வரி விஷயத்தில் வரி ஏய்ப்பு என்பது 100-க்கு 50 இருக்கிறது. குறிப்பாக 'ஒரு முனை' வரி என்றும், 'பல முனை' வரி என்றும் இருப்பதுதான், இப்படி வரி ஏய்ப்பிற்குக் காரணமாகிறது. பல வியாபாரிகள் அவர்களுடைய சங்கங்கள் சார்பிலே இப்படி பல முனை வரி என்று போடுவதை விட்டுவிட வேண்டும் என்று பலமுறை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. இப்போதுள்ள குறைகளையெல்லாம் நீக்கி ஒருமுனை வரி என்று போட்டால், இப்போது கிடைப்பதோடு மேலும் ஒரு 25 சதவிகிதம் கூடுதலாக அந்த இனத்தில் கிடைக்க வழி இருக்கிறது. அப்படி வந்தால், நமது பட்ஜெட் உபரி பட்ஜெட்டாக வரும் வாய்ப்புகூட இருக்கிறது. மேலும் புதிய வரி எதையுமே போடாமலேயே சமாளிக்கலாம். எனவே இப்போதுள்ள முறைகளை மாற்றி எல்லாவற்றுக்கும் சிங்கிள் பாயிண்ட் வரி என்று போட்டால், நல்லதாக இருக்கும். இதை அரசாங்கம் நன்றாகப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, திருச்சி நகரத்தில் உள்ள முனிசிபல் ரோடுகள் எல்லாம் இப்போது மிகவும் பாழடைந்து இருக்கின்றன. அவ்வளவும் படுமோசமாக இருக்கின்றன. சுமார் 50 வருஷமாகப் பார்க்கிறேன், இன்று உள்ளதைப்



1978 பிப்ரவரி 27] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

போல மோசமான நிலை எப்போதும் இருந்ததில்லை. சமீபத்தில் அங்கே வரும் ஒவ்வொரு அமைச்சரும் அதைப் பார்த்துவிட்டுத்தான் சென்றிருக்கின்றார்கள். எந்த அளவிற்கு மோசமாக அங்குள்ள சாலைகள் பாழடைந்துவிட்டன என்பது அவர்களுக்கே தெரியும். போகும் கார்கள் மற்ற வாகனங்கள் எல்லாம் 'ஹை ஜம்ப், லாங் ஜம்ப்' என்று செய்துகொண்டுதான் போக வேண்டிய நிலை. அதிலே கொஞ்சதூரம் சென்றால் போதும், உடம்பெல்லாம் வலி எடுத்து விடுகிறது. அவற்றையெல்லாம் செப்பனிட வேண்டிய பொறுப்பு முனிசிபாலிடியுடையதுதான் என்றாலும், அதிகாரிகள் அதற்கான பண வசதி முனிசிபாலிடியிடம் இல்லை என்று சொல்லுகின்றார்கள். அவர்கள், "கிடைக்கும் மொத்த வருமானத்தில் பாதிக்கு மேலே சம்பளமாகவும் கால் பகுதி வாங்கிய கடன்களுக்கு வட்டி கட்டவும் போய்விடுகிறது, மிச்சம் உள்ள கால் பகுதியில் என்ன செய்வது?" என்று கேட்கின்றார்கள். இந்த நிலையில் அவர்கள் அதை ரிப்பேர் செய்ய வேண்டுமானால், பத்து வருஷமாவது பிடிக்கும். எனவே அதை அரசாங்கமே ஏற்றுச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். திருச்சி மாவட்டத்தில் பல பகுதிகளில் அண்மையில் ஏற்பட்ட புயல்-வெள்ளம் காரணமாகப் பெரும் சேதம் ஏற்பட்டது. அதையொட்டி அந்த ஜில்லாவிற்குப் புயல் நிவாரண நிதி என்று ஒதுக்கிய தொகை ரூபாய் 2 கோடி. இந்த 2 கோடி ரூபாயில் ஒரு 50 லட்சத்தை திருச்சி நகர சாலைகளைச் செப்பனிடுவதற்காக, அதை கடனாகக் கூட இல்லை, ஒரு மானியமாகக் கொடுக்க வேண்டும். கடனாகக் கொடுத்தால் ஏற்கெனவே நிறைய கடன் பளுவினால் தொல்லைப்படும் அந்த முனிசிபாலிடி தாங்காது. ஆகவே அந்தத் தொகையை புயல் நிவாரணமாக, சாலைகளை ரிப்பேர் செய்வதற்காக என்றே கொடுத்து உதவ வேண்டும். இப்படி 50 ஆயிரம் ரூபாயை உடனடியாகக் கொடுத்து உதவி' வரும் ஆறு மாத காலத்துக்குள் எல்லா சாலைகளையும் சீர்திருத்தியாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** உறுப்பினர் அவர்கள் பேசும்போது முதலில் ரூ. 50 லட்சம் திருச்சி சாலைகளைப் பராமரிக்க வேண்டும் என்றார்கள். இப்போது ரூ. 50,000 தேவை என்கிறார்கள். எனவே இதில் எந்தத் தொகை சரி என்பதை அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-30)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** மன்னிக்க வேண்டும். ரூ. 50,000 என்று சொன்னது சரியல்ல. ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ரூ. 50,000 என்றால், ஒரு ரோட்டுக்குக்கூட போதாது.

அடுத்து, இன்றையதினம் மத்திய அரசின் சார்பில் இந்தித் திணிப்பு என்ற போக்கு தீவிரமடைந்திருக்கிறது என்பதை நான் நடைமுறையில் பார்க்க முடிகிறது. இந்திய ஜனாதிபதி அவர்கள் தம்முடைய அறிக்கையை நாடாளுமன்றத்தில் வாசித்தபோது, அது இந்தியில் வாசிக்கப்பட வேண்டும் என்று அங்கே அமளி செய்திருக்கிறார்கள். அதேபோல் ரயில்வே பட்ஜெட்டை மதிப்பிற்குரிய அமைச்சர் திரு. மது தண்டவதே அவர்கள் ஆங்கிலத்தில் சமர்ப்பித்தபோது, அதையும் இந்தியில்தான் வாசிக்க வேண்டுமென்று அங்கே அமளி செய்திருக்கிறார்கள். இன்னொரு சம்பவத்தையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். உறுப்பினர் ஒருவரால் ஆங்கிலத்தில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு அங்கே இருக்கிற அமைச்சர் ஒருவர் இந்தியில் பதிலளித்திருக்கிறார். அதை அந்த உறுப்பினர் ஆட்சேபித்து, "எனக்கு இந்தி தெரியாது. எனக்கு ஆங்கிலம்தான் தெரியும். ஆகவே பதிலை ஆங்கிலத்தில் சொல்ல வேண்டும்" என்று கோரியிருக்கிறார். அப்போது சபாநாயகர் அவர்கள், அமைச்சர் அவர்கள் எந்த மொழியில் பதில் சொல்ல விரும்புகிறாரோ அந்த மொழியில் பதிலளிக்கலாம் என்று தீர்ப்பளித்திருக்கிறார்கள். மிகச் சரளமாக ஆங்கிலத்தில் பேசக்கூடிய அமைச்சர் இந்தியில் தான் அங்கே பதில் சொல்லியிருக்கிறார். இதனால் கேள்வி கேட்ட உறுப்பினருக்கு ஒன்றும் புரியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இதெல்லாம் ஒரு திட்டமிட்ட போக்கு. பாராளுமன்றத்தைப் பொறுத்த வரையில், ஜனதா கட்சியினருக்கு அங்கே மெஜாரிட்டி இருக்கிறது. ஜனதா ஆட்சி அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஜனதா கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ள பெருவாரியான உறுப்பினர்கள் இந்தி பேசுகிற ஒரு ஆறு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள்தான் 90 சதவீத பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பதால், அவர்கள் இன்றையதினம் இந்தித் திணிப்பில் தீவிரம் காட்டுகிறார்கள். இதன் காரணமாக அவர்கள் பழைய வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டுவிட்டு, இந்தியைத் திணிப்பதில் தீவிரம் காட்டுகிறார்கள். அதிலும் சிலர் இந்தி வெறியர்களாக இருப்பதால், சபையிலே குழப்பம் ஏற்படும் நிலை ஏற்படுகிறது. நாம் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்தபோது, அவருக்கு ஒரு தபால் வந்தது. அந்தத் தபால் இந்தியில் எழுதப்பட்டிருந்தது. அந்தத் தபாலுக்கு அறிஞர் அண்ணா அவர்கள் பதில் எழுதும்போது, இனி இப்படித் தபால்கள் இந்தியில் வந்தால், நாங்கள் பதிலே எழுதமாட்டோம் என்று எழுதினார்கள். அது இன்னமும் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. ஆனால் இப்போது மத்திய அரசாங்கத்திலிருந்து இந்தியில் மாநில அரசாங்கங்களுக்குத் தபால்கள் வருகின்றன என்று அறிகிறேன். பத்திரிகையிலேகூட அப்படிப்பட்ட ஒரு செய்தியைப்





பார்த்தேன். நான் அரசுக்குச் சொல்ல விரும்புவது என்னவென்றால், மத்திய அரசாங்கத்திலிருந்து இந்தியில் கடிதம் வந்தால், நாம் தமிழில்தான் இனி பதில் எழுத வேண்டும். அந்த மந்த புத்தியைத் தெளிய வைக்க வேண்டும். அவர்கள் சொல்வதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தால், அது மேலும் மேலும் அதிகரித்து ஒரு அபாயகரமான நிலைமைக்குப் போய்விடும்.

அடுத்து, இந்த அவையிலே நான் முன்பே சொன்ன ஒரு கருத்தை மீண்டும் சொல்ல விரும்புகிறேன். இது தமிழ் நாடு. தமிழகத்திலே ஆங்கிலம் கட்டாயப் பாடமாக இருக்கிறது. தமிழகத்திலே தமிழ் கட்டாயப் பாடமில்லை. நான் மறுபடியும் கூற விரும்புகிறேன். ஆங்கிலம் எப்படி தமிழகத்திலே கட்டாயப் பாடமாக இருக்கிறதோ அதைப் போல் தமிழும் கட்டாயப் பாடமாக்கப்பட வேண்டும். முன்னாலே நான் ஒருமுறை பேசியிருக்கிறேன். இப்போது மறுமுறையும் இந்தக் கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, அப்பாஸ் இப்ராகிம் என்ற ஒருவர் 'புனித குரான்' என்று ஒரு புத்தகத்தை எழுதியிருக்கிறார். அந்தப் புத்தகத்தில் குரான் கருத்துக்கள் தப்பும் தவறுமாக இருக்கின்றன, என்று 'உலமாக்கள்' மார்க்க மேதைகள் சொல்லுகிறார்கள். திருமறை ஒரு புனித புத்தகம். அதனுடைய கருத்து எந்தக் காலத்திலும் மாறுபடாது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** தமிழ்ப் பள்ளிகளில் தமிழ் கட்டாய பாடமாகத்தான் இருக்கிறது. சில ஆங்கிலப் பள்ளிகளில் மட்டும் தான் தமிழ் கட்டாயப் பாடமாக இல்லை.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் ஆங்கிலம் கட்டாயப் பாடமாக இருக்கிறது. அதைப் போல் தமிழையும் கட்டாயப் பாடமாக ஆக்க வேண்டும் என்று உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். இது ஒரு பெரிய கொள்கைப் பிரச்சினை, ஒருவேளை மைனாரிட்டி சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் உருது, அல்லது தெலுங்கு, அல்லது மலையாளம் படிக்கின்றவர்கள் இதன் காரணமாக எங்கே கொண்டுபோய் நிறுத்தப்படுவார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இரண்டாவது மொழியாக ஆங்கிலத்தை எடுத்துப் படிக்கலாம். தாய்மொழி கட்டாயமாக இருக்கும். தமிழை கட்டாயப் பாடமாக ஆக்கினால் சிக்கல் இருக்கும். இதையெல்லாம் உறுப்பினர் கவனத்தில் எடுத்துக்கொண்டு அவர்கள் கருத்து தெரிவித்தால் நல்லது.

[1978 பிப்ரவரி 27

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** ஆங்கிலம் என்று இருக்கிற இடத்தில் தமிழ் இருக்க வேண்டும்.

**திரு. ஜார்ஜ் கோமகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது 'இந்தி வெறியர்கள்' என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். வெறியர் என்று சொல்லுவது பாராளுமன்ற வார்த்தையாக இருக்க முடியாது என்பதால் அதைத் தயவு செய்து அவைக் குறிப்பிலிருந்து எடுக்க தலைவர் அவர்கள் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** குறிப்பிட்டு ஒருவரை 'வெறியர்' என்று சொல்லாத வரையில் நீக்குகிற பிரச்சினைக்கிடமில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆயினும், அவை விரும்பினால் எனக்கு ஆட்சேபணையில்லை.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** உருது போன்ற மைனாரிட்டி வகுப்பைச் சார்ந்தவர்கள், தமிழ் கட்டாயப் பாடமாக்கப்படும்போது பாதிக்கப்படுவார்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவருடைய நல்ல கருத்துக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரையில், உருது எனக்குத் தாய்மொழி. என் குடும்பத்தில் அனைவரும் உருது தான் பேசுகிறோம். ஆனாலும் தமிழ் நாட்டில் பிறந்தவர்களாக இருப்பதால், தமிழையும் சுலபமாகப் பேசுகிறோம். தாய் மொழி உருதுதான். இதைத்தான் என் வீட்டில் எல்லோரும் பேசுகிறோம். பிள்ளைகள், குழந்தைகள் முதல் எல்லோரும் உருது மொழியில் பேசிக்கொண்டாலும், தமிழில் எல்லோரும் நன்றாகப் பேசுவோம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அதைத்தான் அவையின் முன்னவரும் சொல்லுகிறார்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** இதனால் மைனாரிட்டி மொழியினர் பாதிக்கப்படுவர் என்று சொல்வதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. தமிழைக் கட்டாயப் பாடமாக்கினால் மைனாரிட்டி வகுப்பைச் சார்ந்த தெலுங்கு, உருது மொழி பேசுவோர் பாதிக்கப்படுவார்கள் என்பதை நான் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தமிழைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்று நான் கூறும்போது உருது நீக்கப்பட வேண்டும் என்று சொல்லவில்லை. உருதுவை நீக்கிவிட்டு தமிழைப் படிக்க வேண்டும் என்று சொல்லவில்லை. விரும்புகிறவர்கள் படிக்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அப்படியென்றால் அவர்கள், உருது, தமிழ், ஆங்கிலம் ஆகிய எல்லாவற்றையும் படிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** திரும்பவும் உறுப்பினர் அவர்கள் மும்மொழிக் கொள்கையை தமிழகத்திலே அறிமுகப்படுத்த வேண்டுமென்று



1978 பிப்ரவரி 27] [திரு. கே. இராஜா முகமது]

கருதுகிறார்கள் என்று நினைக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் தமிழ்நாடு ஒரு தீர்க்கமான முடிவெடுத்திருக்கிறது. முதன்மொழி தாய்மொழி. தாய்மொழி தமிழாகக் கொண்டுள்ளவர்கள் தமிழை எடுத்துப் படிக்கிறார்கள். அதைப்போல தெலுங்கைப் படிப்பவர்கள் படிக்கிறார்கள். மைனாரிடியினர் தங்கள் தாய்மொழியில் படிக்க விரும்புகிறவர்கள் அதில் படிக்கிறார்கள். ஆங்கிலம் கட்டாயப் பாடமாக இருக்கிறது. இப்படி இருமொழிக் கொள்கைதான் நடைமுறையில் இருக்கிறது. அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** உருது தாய் மொழியாகக் கொண்டவர்கள் ஆங்கிலத்தைக் கட்டாயப் பாடமாகப் படிக்கிறார்கள். ஆனால் தமிழ் கட்டாயப் பாடமாக இல்லாததால், அவர்கள் தமிழைப் படிக்க வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. இந்த இருமொழிக் கொள்கை உருது மொழி போன்ற மைனாரிட்டி மொழியினரைப் பாதிக்கிறது. எனவே இதற்காக மூன்று மொழி படித்தால், தமிழ், ஆங்கிலம் மற்றும் உருது ஆகியவற்றையும் படிக்க முடிகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் நான் சொல்வதெல்லாம் இரு மொழிக் கொள்கையை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்; ஆனால், தமிழ் கட்டாயப் பாடமாக இருக்க வேண்டும். ஆங்கிலமும் கட்டாயப் பாடமாக இருக்க வேண்டும். மற்ற மொழிகள் படிப்பதற்கும் வாய்ப்பு இருக்கவேண்டும்.

**திரு. ஜார்ஜ் கோமகன் :** மும்மொழித் திட்டம் என்கிற பெயரில் இந்தி ஊடுருவி வந்துவிடும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அறிவாரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** விரும்புகிறவர்கள் தாங்களாகவே படிப்பது சரி என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. எம். எம். பக்கர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது இந்த மாநிலத்தில் வாழ்கிற மொழி மைனாரிட்டிகள் தமிழைக் கட்டாயப் பாடமாகக் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதுதான். மூன்றாவது மொழியாகப் படிக்க வேண்டும் என்பதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த மாநிலத்தில் வாழ்கிறவர்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். மைனாரிடிகளும் இந்த மாநிலத்தில் தமிழர்களோடு வாழ்கிற காரணத்தால், அவர்கள் வீட்டில் அவர்கள் மொழியைப் பேசலாம். ஆனால் பள்ளிகளில் தமிழை நன்றாகக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்து என்று இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

[1978 பிப்ரவரி 27

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** இங்கே வாழ்கிற மைனாரிடி சமுதாயத்தினர் தமிழ் மக்களோடு இந்த நாட்டோடு வாழ்ந்துகொண்டிருக்கிறவர்கள். தமிழை எடுத்துப் படிப்பது அவர்களுக்கு நல்லது. வீட்டில் வேண்டுமானால் அவர்களுடைய தாய் மொழியைத் தனியாகக் கற்றுக் கொள்ளலாம். உறுப்பினர் இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டால், நலமாக இருக்குமென்று கருதுகிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** இந்தப் பிரச்சினை விவாதத்தில் முடிகிற பிரச்சினையல்ல. ஒரு ரவுண்ட் டேபிள் கான்பரன்ஸ் போட்டு அறிஞர்கள் எல்லாம் உட்கார்ந்து பேசி ஒரு தீர்வு காணவேண்டும் என்பதை மட்டும் இப்போது தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 12-40)

அண்ணாமலை யுனிவர்சிடி ஆசிரியர்கள் ஒரு குறைபாட்டைச் சொன்னார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் சென்னை சர்வகலாசாலையிலே, மதுரை சர்வகலாசாலையிலே உள்ளவர்கள் பெறும் நிலைக்குக் குறைவாக இருக்கிறது. சுமார் 5 ஆண்டுக் காலமாக இந்த நிலை இருந்து கொண்டிருக்கிறது. யூ.ஜி.சி.-யின் புதிய ஸ்கேல்கள் அமுலுக்கு வரும்போது, அவர்களுடைய நிலையில் சரி சமமான நிலையில், சென்னை சர்வகலாசாலை ஆசிரியர்களுக்கு, மதுரை சர்வகலாசாலை ஆசிரியர்களுக்குக் கொடுக்கின்ற அளவுக்கு, சம்பளங்களை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் கேட்ட அந்தக் கோரிக்கையை நானும் இந்த அவையில் வைக்கிறேன். இந்த பட்ஜெட்டுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

Thiru D. SANTOSHAM: Hon. Deputy Chairman, Sir, before I proceed to make my remarks on the Budget under discussion, I request your permission to make a respectful but very strong submission with regard to a matter which was referred to just a few minues ago both by you, Sir, and by some other hon. Members of this House. It is with regard to the time of the meeting of this House. It is not merely a question whether this time is convenient or that time is convenient; but it is somewhat more serious than that. The question is whether the proceedings of this House are going to be deemed to be important or whether they are to be deducted to a mere frace. Sir, fortunately just now there are three Hon. Ministers present. During the last three days, I have been watching; and almost uniformly only one Minister has been present and that too, obviously under compulsion. Sir, if Members are



1978 பிப்ரவரி 27] [Thiru D. SANTHOSHAM]

called upon to address empty Treasury Benches, I think it is not only not courteous but it is merely treating this House as not sufficiently important. I know and I understand that when meetings are held in both the Houses at the same time, Hon. Ministers will have to give priority to the other House and they have to attend it. But this House has a purpose to serve. I beg to submit to you, Sir, Let us not have the meeting simultaneously, which will inevitably result in the importance of this House being lowered.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இங்கே கூறியதைக் கவனித்துக்கொண்டிருக்கிறேன். அவைக் கூட்டம் காலை நேரத்திற்கு மாற்றப்பட்ட பிறகு, ஒரு இரண்டு நாட்களுக்கு 9 அமைச்சர்கள் அல்லது 10 அமைச்சர்கள்கூட வந்திருக்கிறார்கள். மாலை நேரத்தில் நடக்கும்போதுகூட ஒருவர் இருவர் இருந்திருக்கிறார்கள். நமது மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னது மாதிரி, மாலையிலிருந்து காலை நேரத்திற்கு மாற்றப்பட்ட பிறகு எந்த அளவுக்கு இருக்கிறது என்று பார்த்துக்கொண்டிருக்கிறேன். 9 பேர்கள், 10 பேர்கள் என்ற அளவில் இருக்கிறார்கள். முழுவதுமாக இருக்கின்ற நிலைமை எப்போதும் இருக்க முடியாது. ஏதோ ஒரு நேரம்தான் அந்தமாதிரி நிலைமை இருக்கிறது.

**திரு. டி. சந்தோஷம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள், அவர்களுடைய அனுபவத்தை வைத்துச் சொன்ன கருத்தை நான் மதிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். நேற்றுகூட அமைச்சர்கள் 4 பேர் உட்கார்ந்திருந்தபோது, அந்த வரிசையிலே 2 பேர் தான் உட்கார்ந்திருந்தார்கள் என்பதைக் குறிப்பிட்டேன். மாண்புமிகு அங்கத்தினர் திரு. தாமோதரன் அவர்களுக்குச் சுட்டிக் காட்டினேன். இதை உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அங்கத்தினர் அவர்கள் அவருடைய கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி கவனிக்கலாம். இப்போது ஒரு மாறுதலுக்காகத்தான் செய்திருக்கிறோமே தவிர, வேறு ஒன்றுமில்லை.

**திரு. டி. சந்தோஷம் :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட என்னுடைய கருத்துக்கு ஆதரவாகத்தான் பேசியிருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். இங்கே 2 பேர் தான் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆகவே அதை மறுபரிசிலனை செய்ய வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அதற்குக் காரணம், பார்லி மெண்டரி அசோசியேஷன் கமிட்டி கூடியது. பெரும்பான்மையானவர்கள் அதிலே போய் கலந்துகொண்டார்கள். வேறு காரணம் இல்லை.

Thiru D. SANTOSHAM: Now looking at the Budget as a whole, I find that under 22 heads like the annual plan of agriculture and allied sectors, irrigation, power, large and medium industries and so on and so forth, the Hon. the Finance Minister has attempted to effect various improvements in allocating funds and initiating projects. Many of these proposals deserve appreciation and praise. In particular, in the matter of generation of power, I find that a very substantial sum has been allocated and we have been assured that power generation will keep pace with growing demands of both industry and agriculture. This assurance is most welcome and deserves our hearty congratulations. But even while expressing our appreciation for these good points in the Budget, it is our duty to point out that there is nothing new or revolutionary in these plans and projects. These proposals, at least most of these proposals, have always been there and only small improvements have been effected here and there. While, as they may be duty-bound, the Members of the Ruling Party and hon. Friends like the hon. Member Thiru Wahab have showered praises on these small improvements and boosted them as phenomenal achievements, we on the Opposition Benches cannot enthuse over them so immoderately and exaggerate their importance. Rather, it is our duty, as pointed out by the Hon. the Finance Minister himself in paragraph 75 of his speech, to offer constructive criticisms and suggestions for the help of the Government and it is to this task that I am now going to address myself.

It is quite gratifying to note that even at the very commencement of his speech, in paragraph 3, the Hon. the Finance Minister has set forth the objectives of the Budget. In these objectives, he has given the pride of place, the very first place, to a most important subject, namely, the removal of unemployment. We all agree and I, as representative of the Graduates, very much agree that this should be the most immediate objective for the Government because I know that there are innumerable unemployed Graduates who are requiring immediate attention. But has this been done in the whole Budget? It is true that in about half-a-dozen places in his speech, the Hon. the Finance Minister has stated that some of the projects envisaged and initiated in this Budget will provide employment opportunities. For instance, in paragraph 11, to quote the words





used by him, it has been stated that "the Fisheries Development Corporation will set up a number of retail outlets througout the State for marketing fish at reasonable prices. This scheme, besides assuring a steady market to fishermen, will create wide employment opportunities". I do not know how the mere Fisheries Development Corporation is going to provide wide employment opportunities. In the very next paragraph, in paragraph 12, he has stated: "We propose to set up processing industries based on sandalwood and other forest produce. These will be remunerative and will also provide employment". In a few other places also he has mentioned about providing employment. For instance, in paragraph 21, he has referred to the Government assistance for the reopening of three sick textile mills and claims that they would safeguard employment to about 1,500 persons. He has also referred to the reopening of the India Meters unit and has stated that by this he has restored employment to 276 persons and will provide further employment to 250 more persons. Thus we see that though the creation of employment opportunities has been rightly given the first importance when stating the objectives, yet he has formulated proposals only for a few hundred employments here and there. In Tamil, there is a proverb,

"யானைப் பசிக்குச் சோளப் பொரி கொடுத்தது மாதிரி"

Therefore, my complaint is that the magnitude and urgency of the problem of unemployment has not been understood and kept in view throughout the Budget.

(பிற்பகல் 12-50)

According to my information, there are several lakhs of educated unemployed and many of them are Graduates. Taking into account the uneducated unemployed also, the figure will easily run into millions. Now, as against these millions who are unemployed, the employment that is sought to be provided through this Budget is only for a few hundreds.

Sir, in order to present the magnitude and urgency of this problem, I would like to link it with another very important tragedy that is taking place in our State—strike by students in Madurai University area and particularly in Madurai City which poses such a serious threat to education that we cannot close our eyes to the problem. In some colleges, though it is now more than 8 months since they started functioning, the Colleges have actually worked for only about 30 or 40 days and this is particularly the case with Theagaraya

[Thiru D. SANTHOSHAM] [1978 பிப்ரவரி 27

College and the Law College, on account of the strikes by students. These students have got admission with great difficulty and recommendation and why should they strike? Have the students suddenly become so irresponsible in character and so indisciplined for no reason at all? Of course, there was the strike by the College teachers also. There have been clashes with the workers of the Pandian Roadways Corporation. All these matters have affected the students to some extent. This may explain a few of the strikes but this cannot explain away all the strikes that are taking place today. Nor can they be explained by saying that they have been induced and influenced by politicians. There is no truth in that. If we analyse the strikes, we will find that there has been no strike at all in the Medical Colleges at Madurai and at Tirunelveli. There have been no strikes in the Polytechnics and also in the Industrial Training Institutes. There are no strikes in the Engineering Colleges at Madurai and Karaikudi. All these strikes have happened only in the Arts and Law Colleges. Even in the case of Arts Colleges, we find that the strikes did not start in the Science or the Commerce sections. They had started in Economics and History sections and they had then spread to the other sections. What does this mean? It means that the Medical College students are confident that by getting the M.B., B.S., Degree, they are assured of some safe future. It also means that the students in Polytechnics and Engineering Colleges are also confident that when they complete their courses, they will get employment. It is only the students of Arts Colleges and Law Colleges who feel so uncertain and insecure about their future. After getting degrees, they may not get employment. Because of this, they develop a sense of frustration and are driven to these strikes to just give expression to their feeling of despair. I request the Government to appreciate the nature and magnitude of the problem of educated unemployment and the gravity of the situation caused by frequent strikes in the proper perspective and find a common solution for both the problems of educated unemployment and the students' strikes at the same time. Sir, it seems to me that this colossal problem of educated unemployment will have to be tackled without any further delay. I suggest that at least one major industry should be started in each one of our districts in addition to some medium and small scale industries, if this very grave problem is to be solved to some extent. In this context I wish to point out that the problem of the educated unemployed is very acute in Kanyakumari District. In every tiny village having about 20 or 25 houses, there are at least a dozen unemployed



1978 பிப்ரவரி 27] [Thiru D. SANTOSHAM]

Graduates, both men and women. I do not find in the Budget any major industry for this district.

Sir, I wish to make a proposal for the serious and immediate consideration of the Government. Just as a salt-based industrial and chemical complex was started in Tuticorin and Arumuganeri areas of Tirunelveli district, I suggest that a rubber-based industrial complex should be formulated and implemented with immediate effect in Kanyakumari district. I understand that fairly good quality rubber is extracted from thousands of acres of rubber cultivation and this rubber is being exported in its raw, unrefined stage to places like Kerala and other parts of the country, and manufactured there as finished goods for every day use. Why not the Government start a rubber factory in Kanyakumari district itself where they can provide employment to the innumerable unemployed in that district? What is more, such a rubber factory can bring in additional income to the Government. So also in Ramanathapuram and Tirunelveli districts, in Rajapalayam, Watrap, Sivagiri and other areas lying at the foot of the Western ghats, we all know that very fine fruits like the "Chappattai" and "Panjavarnam" mangoes, very good quality jack-fruits and very tasty guava fruits are grown in very great quantities. These fruits are of such superior quality that they are sure to find a ready and remunerative market even in countries overseas. While, so, I would suggest to the Government to explore the possibilities of starting a fruit-canning industry either in the public sector or on a co-operative basis. There are innumerable other potentialities for starting new industries in our State. It is not for me to give an exhaustive catalogue of all those industries. It is for the Government vigilantly and unceasingly to investigate into the potentialities and initiate dynamic action.

Sir, some weeks ago, I was travelling from Madras to Bangalore by the Brindavan Express. I got into a conversation with the passenger who happened to be sitting in the seat next to me. In the course of our talk he told me that he was going to Bangalore on behalf of his company to explore the possibilities of starting a new industry in Karnataka. I asked him, "Your company is based in Tamil Nadu and it is run by Tamilians. Then, why do you want to start the new industry in Karnataka and not in Tamil Nadu?" His reply was, "The Karnataka Government gives various kinds of incentives, subsidies and concessions which we do not get in Tamil Nadu." It is in his background tha tI wish to bring to the notice of the Government the significance of the loss of Rs. 140 crores

due to the Prohibition which we have. I am not saying anything about Prohibition because I know that the Government are committed to that policy and are bound to implement it. But, it is the loss of this huge revenue that should be a matter of serious concern to all of us. All the other States, particularly the neighbouring States like Kerala, Karnataka, Andhra Pradesh and Pondicherry do not have Prohibition. So, several of our people rush every week-end to these places and spend money lavishly on liquor and my estimate is that the loss to Tamil Nadu in this way will be not less than Rs. 10 crores. So, our total loss on Prohibition should be put as at last Rs. 150 crores and what is out loss becomes a gain to the neighbouring States. Now what happens? By this ill-gotten wealth which they secure by excise duty on liquor and with the money spent by our Tamilians who rush there every week-end, they are able to give subsidies and other attractions to tempt and take away industries from Tamil Nadu to their States. Now, by these means, they go on developing very fast industrially and they become prosperous economically. Conversely, if this process goes on for a few years, we will become more and more backward industrially and we will become a poverty-stricken State in a very short time. Therefore, I think our Government must act strongly and swiftly and get the Central Government to do one or two things if this danger is to be avoided. Firstly, the Central Government should induce all other States also to introduce Prohibition. It is a very desirable thing and it is there in the Directive Principles in the Constitution. In the alternative, the Central Government should be asked to give full financial compensation for the loss of this huge revenue. Our

(பிற்பகல் 1-00)

Governor has openly expressed himself against the State Government asking for compensation for the loss of revenue on account of implementation of Prohibition in the State. While so, let him take upon his shoulders the task of achieving the first of the above two alternatives and use his influence with the party in power at the Centre and get Prohibition introduced uniformly in all the States. Otherwise, we in Tamil Nadu will be paying a very heavy price and we will be practically ruining the future of our projects. Before I leave the subject of unemployment, I would like to refer to unemployment among young lawyers. Sir, there used to be only one Law College for the whole of Tamil Nadu in Madras. Now there are three Law Colleges, one at Madurai, one at Pondicherry and one at Madras. More than three times the original number of lawyers are being produced every year. What is the prospect of employment for this



increased number of men and women lawyers coming out of these Law Colleges? Of course, one lady lawyer has become a Minister, but that is not given to everybody. There is no prospect of employment for the young lawyers coming out of the Colleges. I have found them desperately trying for jobs even of the lowest rank. Though I have said it before, I want to say it again. It seems to me that this is one of the major causes why in all Law Colleges, there are very frequent strikes. Students in Law Colleges feel that after they get their Law Degrees also, there is no future for them. I have several proposals which we have discussed in our Bar Association meetings but I do not want to take the time of the House by mentioning all of them. But I want to place two suggestions before the House which the Government can very easily and immediately give effect to. The first suggestion I want to make is this: All documents like Sale Deeds, Mortgage Deeds, Settlement Deeds and Wills and other documents relating to the transfer of property are written and attested only by Document Writers who have no knowledge of law or training or responsibility. Very often the defective drafting of these documents itself leads to unnecessary and avoidable litigation. So, my first suggestion is that a law should be enacted under which at least title deeds involvind properties of the value of Rs. 20,000 and above should be drafted and attested by a lawyer and even such a lawyer should be having less than 10 years' standing, so that it will help the young lawyers and not the older lawyers. We can provide employment opportunities to these Law Graduates coming from the Law Colleges and at the same time, unnecessary and avoidable litigation can also be avoided.

The second suggestion which I want to make is this. There are several officers who are now discharging quali-judicial functions but who have no law degrees, qualification, experience or training. There are Deputy Registrars of Co-operative Societies and they are actually in charge of arbitration proceedings and give awards which are binding on parties, subject to a provision for revision by the District Court. There are Revenue Divisional Officers who have to decide disputes under the Cultivating Tenants Protection Act and they also act as Judges in proceedings under section 145, Cr. P.C. There are Commissioners and Deputy Commissioners for Disciplinary Proceedings. Formerly they used to be called Tribunals and the District Judges were posted to those offices. Now that has been taken away and I.A.S. officers have been put on those Tribunals? There are Labour Conciliation Officers and they are discharging duties which are more or less judicial in nature. They have to take evidence

[Thiru D. SANTOSHAM] [1978 பிப்ரவரி 27

and they are to come to conclusions and give judgments which are binding on parties. It seems desirable that these persons are made persons with law qualifications not only in theory but also in practice. Therefore, I would suggest that for offices like Deputy Registrar of Co-operative Societies, Revenue Divisional Officer, Commissioner for Disciplinary Proceedings and Labour Conciliation Officer, it is made necessary that the incumbents should have been lawyers with at least two years' practice at the Bar. I am sure this can be done immediately by passing administrative directions and giving instructions to the Public Service Commission and other appointing authorities. I respectfully request the Government to consider the possibility of making these appointments reserved appoinments for these young graduates with about two or three years' standing.

Sir. I now wish to pass on and congratulate our Hon. the Chief Minister on putting an end to the agitation by the N.G.G.Os., by releasing all of them on bringing them to the conference table. I understand that the talks will take place today and I wish and trust that an amicable settlement and a lasting and permanent understanding is arrived at between the Government and these N.G.G.Os. In this connection, I wish to invite the attention of the Government to the agitation that was resorted to by the Madurai University Teachers' Association just about October 1977. More than 1,000 College teachers, including about 50 women, were arrested and jailed and in consequence the examinations had to be cancelled or postponed, and several inconveniences were caused. What is the result of the cancellation of examination? Students lose one year and the parents lose hundreds of rupees. All these inconveniences were caused because of that. I know that after the agitation reached a certain stage, the representatives of the Madurai University Teachers' Association were called, negotiations were made and some understanding was reached. But if only the negotiations had started before the agitation took place, I am sure many of these unfortunate developments could have been avoided and many serious inconveniences and loss of the future of our youth could have been avoided. I am referring to this merely to state what has happened in the past. I am mentioning this also because in connection with the forthcoming examinations to be held in April, a similar situation seems to be developing. I request the Government to arrange for discussions with advance so that an amicable settlement is reached without the



1978 பிப்ரவரி 27] Thiru D. SANTOSHAM

unpleasant agitation and the disastrous consequences that followed the agitation of the Madurai University teachers in October—November last.

Sir, I have one other request to make to the Government. While deciding the question of Dearness Allowance that is going to be payable in respect of N.G.G.Os, I request the Government kindly to consider the case of pensioners also for enhancement of Dearness Allowance payable to them. This rise in prices has hit them just as hard as it has hit the N.G.G.Os. who are in service and these elderly persons find it difficult to carry on their livelihood. In these circumstances, I earnestly appeal to the Government to provide for an enhanced Dearness Allowance for these pensioners also.

Sir, I want to refer to a matter about which the Hon. the Minister for Education gave us an assurance even two days ago during Question Hour and that is with regard to the integration of 'A' wing and 'B' wing of schools. The Hon. the Education Minister said that it would be effected very soon but my missgiving is that previous Education Ministers also had been giving the same assurance for more than 8 or 10 years past. So, I am not able to believe him readily when he says that it will be done very soon. We konw that several complicated issues are involved in this integration process of 'A' and 'B' wings. Both the 'A' wing teachers and the 'B' wing teachers have very good reasons for taking up a firm and rigid stand which does not make it easy for an amicable settlement to be arrived at.

(பிற்பகல் 1-00)

If the Government find that there is an impasse and that an amicable settlement is not forthcoming, I would suggest that the matter be immediately referred to arbitration by a Judge of the High Court, with a definite understanding that whatever may be his award, both 'A' and 'B' wings should accept it and the Government should ruthlessly implement it. The Government should expedite this.

A fortnight back, I was touring Kanyakumari district in connection with my election to the Legislative Council from the Graduates' Constituency. A large number of friends met me and told me that the late reverted leader Kamaraj—Kala Gandhi—had captivated the imagination of not only the people of our country but even the people outside the country and that he was closely attached to Kanyakumari during the last period of his life. Still there is no proper and suitable

memorial for him in Kanyakumari. They suggested that a fitting life size statue should be set up in a central important place in Nagercoil. In fact, I am one of those who do not believe in having statues. I would rather suggest that a Government Rubber Factory should be set up there and should be named after their affectionate leader. It is not for me to decide these things. It is for the Government to consult the representatives of the people of Kanyakumari district and establish a suitable memorial, whether it is a statue or any other thing, for the late revered leader of our times. With these words, I close my speech.

(பிற்பகல் 1-10)

* திரு. ஆ. திராவிட மணி: துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் 1978-79 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்புத் தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் கிராமப் புறங்களுக்கு அதிகமாகச் செய்வதற்காக புதிய அரசு பல திட்டங்களைப் போட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். புத்தகத்தை முழுவதும் படித்துப் பார்த்தால், அதிகமாக கிராமங்கள் என்ற வார்த்தைகள் வருகின்றன. கிராமப் புறத்திற்கும் நகரப் புறத்திற்கும் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்கவும், நபர் வாரி வருமானம் கிராமங்களில் குறைவாகவும் நகரங்களில் அதிகமாகவும் இருப்பதால், அதைப் போக்குவதாகவும் கிராமங்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் இருப்பதை மாற்றவும், கிராமங்களில் உள்ள குளங்களில் மீன் வளர்ப்புப் பண்ணைகள் அமைத்து கிராமப் பொருளாதாரத்தை வளப்படுத்தவும், கிராமக் குடிசைத் தொழில்களை ஊக்குவிக்கவும், கிராமச் சிறுதொழில்களை அதிகமாகப் பெருக்கவும் என்று இப்படி கிராமம் கிராமம் என்று வார்த்தைகள் அதிகமாக வருகின்றன. ஏற்கெனவே முந்திய அரசில் இருந்த மதிப்பிற்குரிய காமராஜ் அவர்களும் அதற்குப் பின்னே வந்தவர்களும் கிராம மக்கள் மீது மிகுந்த பாசத்தோடு அவர்கள்தான் நகர மக்களுக்கு உயிரானவர்கள் என்ற அடிப்படையில் கிராமங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்ற எண்ணத்தில்தான் பல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அந்தக் கிராம மக்களின் மீது கொண்ட பாசத்தால்தான் திரு. காமராஜ் அவர்கள் ஆட்சிக் காலத்தில் அலங்காநல்லூர் என்ற கிராமத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அப்போதே அமைக்கப்பட்டது. கிராமப் பொருளாதாரம் வளருவதற்காகத்தான் பாண்டியராஜா சுகர் பாக்டரி கிராமத்தில் அமைக்கப்பட்டது



அமைக்கப்பட்டிருக்கிற கூட்டுறவு ஆலைகள் எல்லாம் கிராமங்களில்தான் இருக்கின்றன. தஞ்சை மாவட்டத்தில் மணல்மேடு என்ற கிராமத்தில் கூட்டுறவு ஆலை அமைக்கப்பட்டது. பாமணி கிராமத்தில் ஒரு உரத் தொழிற் சாலை அமைக்கப்பட்டது. நெல்லை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவு நூற்பாலை நாசரத்தில் இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நூற்பாலை ஆரல்வாய்மொழி என்ற கிராமத்தில்தான் அமைக்கப்பட்டிருக்கிறது. ஏழு கோடி ரூபாய் திட்டத்தில் கிராம மக்களுக்கு வேலை கொடுக்க வேண்டு மென்ற எண்ணத்தில் முன்பு தமிழக அரசு அமைத்த சிமிண்ட் ஆலை ஆலங் குளம் என்ற சிற்றூரில் இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைக்கப்பட்டது. அணைக்கரைப்பட்டி என்ற ஊர் சிங்கம்புணரிக்குப் பக்கத்தில் இருக்கிறது. அங்கே ராயல் என்ஃபீல்டு என்ற மோட்டார் தொழிற்சாலை அமைக்கப் யட்டிருக்கிறது. இவையெல்லாம் கிராம மக்களுக்கு வேலை கொடுக்கத்தான் ஆரம்பிக்கப்பட்டன. தீப்பெட்டிக்கு மூலப்பொருளாக உள்ள பொடாஷியம் குளோரைடை கோளாவிலிருந்துதான் வாங்க வேண்டியிருந்தது. அது தாராளமாகக் கிடைக்க வேண்டுமென்று பொடாஷியம் குளோரைடு தொழிற் சாலையை ஒத்தக்கடை என்ற கிராமத்தில் மதுரை மாவட்டத்தில் அமைத்தார்கள். வெளிநாட்டு உதவியோடு ஸ்பிக் உரத் தொழிற்சாலையை ஆரம்பித்தார்கள். தூத்துக்குடி தொழிற்சாலை என்ற பெயரில் இருந்தால்கூட முல்லைக்காட்டுக்குப் பக்கத்தில் உள்ள முத்தையாபுரம் என்ற கிராமத்தில்தான் அது அமைக்கப்பட்டிருக்கிறது. அப்படி காங்கிரஸ் அரசும், திராவிட முன்னேற்றக் கழக அரசும் கிராமங்களை மையமாக வைத்து தொழில்களை உருவாக்கியதைப்போல எதிர் காலத்தில் கிராமங்களை மையமாகக் கொண்டு திட்டங்கள் அமைக்கப்படும் என்று வகுத்திருப்பதை வரவேற்கிறேன். கிராமங்களின் மீது உண்மையிலேயே பாசம் கொண்டு செய்ய வேண்டிய காரியங்கள் பல இருக்கின்றன. பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச் சரானவுடனே குடுமியாமலையில் விவசாயப் பண்ணை அமைத்தார்களே, அதைப்போல தரிசு நிலங்கள் எங்கெங்கு எவ்வளவு இருக்கின்றன என்று கணக்கிட வேண்டும். முன்பு 11 லட்சம் ஏக்கர் தரிசு நிலம் தமிழகத்தில் இருப்பதாகக் கணக்குண்டு. அதைத் தொகுத்து பண்ணை விவசாயம் அமைத்து, அரசுச் செலவிலேயே நீர்ப்பாசன வசதிகளைச் செய்து பயிர்கள் வளருகிற விதத்தில் பண்படுத்தி நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு ஆளுக்கு ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று பகிர்ந்து அளித்து, பட்டா கொடுத்தால், கிராமத்தில் உள்ள ஏழை விவசாயிகளுக்கு உண்மையிலேயே நன்மை செய்தவர்கள் ஆவோம்.

[திரு. ஆ. திராவிடமணி] [1978 பிப்ரவரி 27

சாதாரணமாகக் கடன் வாங்குவதற்கு விவசாயிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், ஏதாவது சொத்து இருந்தால்தான், கடன் பெற முடியும் என்ற முறை வைத்திருக்கிறார்கள். சொத்து இல்லாதவர்கள் ரூ. 500 அல்லது ஆயிரம் வாங்க வேண்டுமென்றால், அவர்கள் சிரமப்படுகிறார்கள். அதனால் அரசாங்கமே கிராம பாங்குகளை அதிகமான அளவில் துவக்க வேண்டும். மத்திய அரசு ஏற்கெனவே கிராம பாங்குகள் அமைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இருக்கிறது. அந்த அடிப்படையில் மத்திய அரசாங்கத்தைக் கலந்து அவர்கள் தருகிற மூல தனத்தைக் கொண்டு மாநில அரசு கிராம வங்கிகளை ஒன்றியத்திற்கு ஒன்று என்று அமைத்தால், கிராம மக்கள் கடனுக்காக வட்டிக் கடை வேந்தர்களிடம் சென்று நிற்காமல் குறைவான வட்டியில் வேண்டிய கடன்களைப் பெற விவசாயிகளுக்கு வசதியாக இருக்கும். கிராமங்களில் உள்ள படித்த பட்ட தாரிகளை அழைத்து பணம் கொடுத்து தொழில்களை ஆரம்பிக்க உதவலாம். தொழில் செய்ய வேண்டுமென்ற ஆர்வத்தில் இருந்தாலும், கடன் வாங்குவதற்கு ஈடாகக் காட்டுவதற்கு சொத்து இல்லாமல் பட்டதாரி இளைஞர்கள் ஏராளமாகக் கிராமப்புறங்களில் இருக்கிறார்கள். படித்துப் பட்டம் பெற்றுவிட்டு, வேலைக்காக எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சில் பதிந்திருக்கிறவர்களையும், ஐ.டி.ஐ.யில் தொழில் கல்வி படித்துவிட்டிருக்கிறவர்களையும் அழைத்து கிராமப்புறங்களில் சிறு தொழில்களை அமைப்பதன் மூலமாக பட்டதாரிகளின் வேலைப் பிரச்சினையும் தீரும்; தொழில் பயிற்சி பெற்றவர்களுக்கும் வேலை வாய்ப்பு அளித்ததாகவும் இருக்கும். இதற்கு புரட்சிகரமான திட்டம் எதுவும் தேவையில்லை.

(பிற்பகல் 1-20)

கிராமத்தை மையமாகக் கொண்டு, கிராமப் பொருளாதார அடிப்படையில் செயல்பட வேண்டுமானால், இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே அரசினைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, நாம் பெரும் புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறோம். இது சம்பந்தமாக சேத மதிப்பீடுகள்பற்றி மிகத் தெளிவான அறிக்கையினை, மத்திய அரசுக்குக் கொடுத்திருக்கிறோம். மீண்டும் பாதிக்கப்பட்ட பகுதிகள் பழைய நிலையை அடைய வேண்டுமானால், குறைந்தது ரூ. 150 கோடிக்காவது தேவைப்படும் என்பது நமது மதிப்பீடு. அதையொட்டி மத்திய அரசு அனுப்பிய நிபுணர்களும் வந்து பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டுப் போனார்கள். அதற்குப் பிறகு பொது மக்களுடைய ஒத்துழைப்பினால், அதிகாரிகளுடைய சுறுசுறுப்பான செயல் திறனால் பாதிக்கப்பட்ட பகுதிகள் சீர்படுத்தப்பட்டன. ஆனால் மத்திய அரசாங்கம் நிவாரணமாக ரூ. 36 கோடி



1978 பிப்ரவரி 27] [திரு. ஆ. திராவிட மணி]

தான் தந்திருக்கிறது. மேற்கொண்டு நிதி உதவி கிடைக்கவில்லை. நமது முதலமைச்சர் அவர்களும் நிதி அமைச்சர் அவர்களும் டெல்லி சென்று, அங்கு பிரதமர் அவர்களையும் நிதி அமைச்சர் அவர்களையும் இது சம்பந்தமாகக் கண்டு பேசி வந்திருக்கின்றார்கள். ஆனாலும் இந்த 36 கோடிக்கு மேலே உதவி வருவதற்கான அறிகுறி எதையும் காணோம். நமது நிதி அமைச்சர் அவர்களும் ரூ. 36 கோடி கொடுத்ததற்காக மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்து விட்டார்கள். ஆக மேற்கொண்டு எதும் கிடைக்காது என்றுதான் தோன்றுகிறது. அந்த நிலையில் நமது தேவைகளைச் சரிக்கட்டிக்கொள்ள பல முறைகளை நாடவேண்டியுள்ளது. அந்த முறையில் 'நட்சத்திர இரவு' என்று விழா நடத்தி புயல் நிவாரண நிதி என்று பணம் திரட்டப்படுகிறது. இப்படி 'நட்சத்திர இரவு' என்று ஏற்பாடு செய்து குறிப்பிட்ட தொகையை வசூலிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்குத் தாக்கீது அனுப்பப்படுகிறது. நேரடியாக இல்லாவிட்டாலும் மறைமுகமாக அவர்களுக்கு தொகை இவ்வளவு என்று சொல்லப்பட்டுவிடுகிறது. டிக்கெட்டுகளை அதிகாரிகள் வைத்துக்கொண்டு சங்கடப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். சிறு சிறு கடைக்காரர்கள் கூட 100 ரூபாய் டிக்கெட்டு, 25 ரூபாய் டிக்கெட்டு என்று வாங்கவேண்டிய சூழ்நிலைக்குக் கட்டாயப்படுத்தப்படுகின்றார்கள். இப்படியெல்லாம் செய்கிறதை விட, எதிர்க் கட்சித் தலைவர்களையெல்லாம் அழைத்து, இப்படிப்பட்ட நேரங்களிலே அவர்களுடைய யோசனையைக் கேட்கலாம். முந்தைய முதலமைச்சர் அவர்கள்கூட முக்கியமான விஷயங்களிலே எதிர்க் கட்சித் தலைவர்களைக் கலந்துபேசி, அவர்களுடைய யோசனைகளையும் கேட்டு, நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அந்த முறையில் எதிர்க்கட்சித் தலைவர் களையும் கலந்து மத்திய அரசிடமிருந்து இந்தந்த விதத்தில் இவ்வளவு தொகைகளைப் பெறலாம் என்ற முறையில், சர்வ கட்சிகளையும் கலந்து இறை அணுகவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நாங்கள் அரசாங்கத்தில் இருக்கும்போது, இவர்களிடம் என்ன யோசனை கேட்பது என்ற வகையில், இதை ஒரு ப்ரெஸ்டீஜ் பிரச்சினையாக வைத்துக்கொள்ளாமல், அரசு பிரச்சினையை அணுக வேண்டும். அரசு என்பது அனைவருக்கும் பொதுவானது. பாதிக்கப்பட்டவர்கள் பொது மக்கள். எனவே இதுவிஷயத்தில் சர்வ கட்சி யினரையும் கலந்து பேச முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால் கசக்கிப் பிழிந்து நன்கொடை வாங்குவது என்றால், அதிகாரிகள் சங்கடப்படுகின்றார்கள். பெட்டிக் கடைக் காரர்களிடம்கூட ரூ. 25 என்று வசூலிக்கின்றார்கள். அரசு உத்தரவு என்று இல்லை. அதிகாரிகளுடைய தர்ம சங்கடமான நிலை அது. இதற்கெல்லாம்

முடிவு கட்டுவதற்காக, சர்வ கட்சியினரிடம் பிரச்சினைகளை எடுத்துச்சொல்லி— இப்படிப்பட்ட பிரச்சினைகளில் நல்ல முடிவினைக் காண வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, கொடிக்கால் விவசாயிகளைப்பற்றிச் சில பிரச்சினைகள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அண்மையில் ஏற்பட்ட புயலால், வெள்ளத்தால் கொடிக்கால் விவசாயிகள் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அதுபற்றி இந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்படவில்லை. அவர்களுடைய பிரச்சினைகளை சற்று அனுதாபத்துடன் அணுகி அவர்களுக்கு நிதிஉதவி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் மீண்டும் பழைய நிலைமைக்கு வரவேண்டுமானால், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து பெரும் கடன் வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தாக வேண்டும். குறிப்பாக கரூர் மற்றும் புகளூர் பகுதிகளிலிருந்து வந்த பதினைந்து கிராமங்களிலுள்ள கொடிக்கால் விவசாயிகள் மனு கொடுத்திருக்கின்றார்கள். குறிப்பாக, கரூர் வட்டத்தில் நொய்யல், மறவாப்பாளையம், சேமங்கி, முத்தனூர், நடையனூர், கோம்புபாளையம், நத்தமேட்டுப்பாளையம், திருக்காடுதுறை, காம்பாளையம், கட்டிப்பாளையம், தவுட்டுப்பாளையம் மற்றும் வேலாயுதம்பாளையம் பகுதியிலுள்ள விவசாயிகளும், புகளூர் பகுதியில் நன்னியூர் கிராமம், செவிந்திபாளையம், கரூரை ஒட்டியுள்ள வேடிச்சிபாளையம், பஞ்சமாதேவி, நெரூர், போன்ற பகுதியிலுள்ள கொடிக்கால் விவசாயிகளும் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். கிட்டத்தட்ட 15 ஆயிரம் கொடிக்கால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ரூ. 1½ கோடிக்கு மேலே பாதிப்பு அடைந்திருக்கின்றார்கள். இவர்களுக்கெல்லாம் வங்கிகளிலிருந்து தாராளமாகக் கடன்களைக் கொடுத்து உதவ வேண்டும். அந்த முறையில், யார் யாருக்கு உதவி அளிப்பது என்ற பட்டியலில் இவர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களையும் நிதி அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்ளுகிறேன். அது மட்டுமின்றி, துறையூரில் நெசவாளர்கள் கூட்டுறவு சொசைடியில் இப்போது வேலை நிறுத்தம் செய்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்குச் சீராக வேலை கொடுக்க அந்த சொசைடி முன்வரவில்லை. இது விஷயத்தில் அவர்களையும் கூப்பிட்டுப் பேசி, பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நேற்றையதினம் மரியாதைக்குரிய திரு. முத்து அவர்கள் பேசினார்கள். எப்போதும் நாங்கள் பேசுகிறோம் என்றால், 'விவகாரம் பற்றி மட்டும் சொல்லுங்கள், குறையை எடுத்துக்கூறும்போதும் கண்ணியமான முறையில் சொல்லுங்கள்' என்று எங்களுக்குப் பயிற்சி கொடுக்கின்றார்கள் எங்கள் தலைவர்கள். அப்படிப்பட்ட பயிற்சியினைக் கொடுக்க அங்கே யாரும் இல்லாத



காரணத்தினால், திரு. முத்து அவர்கள் இந்த மன்றத்தை ஒரு மேடை என்றே கருதிக்கொண்டு எதை எதையோ பேசி, கொஞ்சம் சத்தம் போட்டே பேசினார்கள். முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியின் போது விவசாயிகள் மின் கட்டணத்தில் ஒரு காசு ஏற்றியதாக அதை எதிர்த்து எந்த அளவிற்குப் போராட்டம் நடத்தினார்கள் என்பதை நாம் அறிவோம். அப்போதும் சரி, பிறகு திரு. மன்றாடியார் அவர்கள் தமது பெரும் நிலப் பரப்பினை மேய்ச்சல் நிலம் என்று போட்டு உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து விலக்குப் பெற்ற நேரத்தில், அதைத் தொடர்ந்து சிலர் கிளர்ச்சி செய்த போதும் சரி, பாதிக்கப்பட்ட அனைவரையும் கூட்டிவைத்துப் பேசி பிரச்சினைக்கு அன்று முடிவு காணப்பட்டது. அப்போது இதையெல்லாம் குறிப்பிட்டு, திரு. இராமசாமிப் படையாச்சி அவர்கள்கூட, அன்று முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் இப்படி அனைவரையும் கூட்டி வைத்துப் பேசி பிரச்சினைக்கு தீர்வு காண விழைந்ததை வரவேற்று பாராட்டி ஒரு அறிக்கையே கொடுத்தார். அந்த அறிக்கையில் சில பகுதிகளை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** படிப்பது என்றால் நீங்கள் முன்கூட்டியே என்னிடம் காண்பித்திருக்க வேண்டும்.

**திரு. ஆ. திராவிட மணி:** அன்றைக்கு எம்.ஜி.ஆர். வேலூர் கோட்டை வெளி மைதானத்தில் பேசும்போது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக போராட்டம் என்கின்றார். எதற்காகப் போராட்டம்? திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றைக் கடைப்பிடித்து, என்றைக்கும் வன்முறைக்கோ எந்தவிதமான தாக்குதல்களுக்கோ இடம் கொடுத்ததில்லை . . . என்றெல்லாம் அவர் அன்று குறிப்பிட்டிருக்கின்றார். எனவே விவசாயிகள் பிரச்சினை பற்றித் தவறான முறையில் புரிந்துகொண்டு பேச வேண்டாம் என்று தலைவர் அவர்கள் மூலம் அரசுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** நீங்கள் ஒரு கத்தை பத்திரிகை மேற்கோள்களை வைத்துக்கொண்டு பேசுகின்றீர்கள். அந்தப் பத்திரிகைக் குறிப்பை நீங்கள் முன்கூட்டியே என்னிடம் காண்பித்திருக்க வேண்டும். காண்பித்து அனுமதி பெற்றிருந்தால் ஆட்சேபணையில்லை.

**திரு. ஆ. திராவிட மணி:** கிருஷ்ணா நீரைக் கொண்டு வருவதைக் காட்டிலும் வீராணம் திட்டம்தான் சாலச் சிறந்தது என்று இதைத் தீட்டி செயல்படுத்தப்பட்டது. வாய்க்கால் மூலமாகக் கொண்டு வந்தால் இடையில்

[திரு. ஆ. திராவிட மணி] [1978 பிப்ரவரி 27

உள்ள வயல்களுக்கு தண்ணீரைப் பாய்ச்சுவோம் என்று விவசாயிகள் சொல்லு கிறார்கள். அதுமட்டுமல்ல. நீராவியாவதன் காரணமாக நிறையத் தண்ணீர் ஆவியாகப் போய்விடும். ஆகவே வாய்க்கால் மூலமாக வேண்டாம். எனவே சென்னைக்குக் குடிநீர் கொண்டுவர வீராணம் திட்டமே சரி என்று அப்போது கழக அமைச்சரவை முடிவு செய்து அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்தது. அடுத்து, வீராணம் திட்டத்தில் தமிழக அரசு பெரும் நட்டப்பட்டுவிட்டதாகக் கூட திரு. முத்து அவர்கள் குறிப்பிட்டார்கள். உண்மையில், அந்தத் திட்டத்தின் முழு விவரங்களும் அவருக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். இருந்தாலும் அவர் உண்மையைத் திரித்துச் சொன்னார்கள் என்றே எண்ணுகிறேன். வீராணத்திலிருந்து சென்னைக்கு நீர் வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, ரூ. 30 கோடி திட்டம் என்று திட்டம் தீட்டி, திட்டம் நிறைவேற்றப்பட்டால், சென்னை நகரம் மட்டுமின்றி இடையிலே பல பகுதிகளுக்கும் நன்மைகள் ஏற்படும் என்று கருதி திட்டம் தீட்டப்பட்டது. இதற்காக இடையிலுள்ள 6 பெரிய ஆறுகளை, 22 சிற்றோடைகளை, 42 சாலைகளை, மூன்று ரெயில்வே கிராசிங்குகளைக் கடந்து ஏறத்தாழ 136 மைல் நீளத்திற்கு குழாய்களை அமைத்து, நகரத்திற்கு நீர் கொண்டு வரவேண்டும் என்று திட்டமிட்டு, அதற்காக எல்லா ஏற்பாடுகளையும் செய்து, அவற்றுக்கான குழாய்களை அமைப்பதற்காக வழியில் இரண்டு இடங்களைத் தேர்ந்தெடுத்து அதற்கான தொழிற்சாலைகளையும் நிறுவி கிருஷ்ணாநீரைக் கொண்டுவருவதைக் காட்டிலும், வீராணம் திட்டம்தான் சாலச் சிறந்தது என்று இதைத் தீட்டிச்

(பிற்பகல் 1-30)

செயல்படுத்தப்பட்டது. வாய்க்கால் மூலமாகக் கொண்டு வந்தால், இடையில் உள்ள வயல்களுக்கு அந்தத் தண்ணீரைப் பாய்ச்சுவோம் என்று விவசாயிகள் சொல்லுகிறார்கள், அது மட்டுமல்ல, நீராவியாவதன் காரணமாக நிறைய தண்ணீர் ஆவியாகப் போய்விடும், ஆகவே வாய்க்கால் மூலமாக வேண்டாம், இது அருகாமையிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் திட்டம், வருகிற தண்ணீரும் உபரியாக இருக்கிறது, எனவே வீராணத்திலிருந்து தண்ணீர் கொண்டு வருவதுதான் முறை என்று அன்றைய அமைச்சரவை முடிவு செய்து, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, இத்திட்டத்திற்குத் தேவையான பெரிய குழாய்கள் உற்பத்தி செய்யப்பட்டு, பதிக்கப்பட்டு வருகிற நேரத்தில் அந்தப் பணியை காண்ட்ராக்ட் எடுத்த திரு. சத்தியநாராயணா அவர்கள் இறந்துவிடவே, அந்தக் கம்பெனியின் பொறுப்பை தமிழக அரசே ஏற்க வேண்டும் என்று தமிழக அரசும் முடிவு செய்தது. இது சம்பந்தமாக தமிழக அரசு மத்திய சர்க்காருக்கு எழுதி, மத்திய சர்க்காருடைய அனுமதி பெறுவதற்கு ஆறு மாதம் ஆனது. 6 மாதம் கழித்து அனுமதி வந்தது.



1978 பிப்ரவரி 27] [திரு. ஆ. திராவிட மணி]

இப்படி ஆறு மாதம் கழித்து மாநில சர்க்கார் இதனை ஏற்கலாம் என்று மத்திய அரசாங்கம் அனுமதி கொடுத்த மறுநாள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தமிழகத்திலே கலைக்கப்பட்டது. பிறகு ஆளுநருக்கு ஆலோசகர்கள் வந்து ஒரு குழு போட்டார்கள். ஆலோசகர்களும் இந்த வீராணம் திட்டம் நல்ல திட்டம், நிறைவேற்றப்பட வேண்டிய திட்டம் என்று சொன்னார்கள். அப்படி திராவிட முன்னேற்றக் கழகத்தால் தொடங்கப்பட்ட திட்டம், ஆலோசகர்களால் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டம் என்று சொல்லப்பட்ட திட்டம், மிக ஒழுங்காக மேல்நாட்டு நிபுணர்களைக் கொண்டு வந்து குழாய்கள் அமைக்கப்பட்டு வந்த திட்டம் நல்ல முறையிலே தொடங்கப்பட்டது. 6 பாலங்கள் கூட அமைக்கப்பட்டு விட்டன. ஆனால் இப்போது அந்தத் திட்டம் நல்ல திட்டம்தானா என்று பரிசீலனை செய்ய இருக்கிறோம் என்பது நியாயமல்ல. அமைந்திருக்கிற புதிய அரசு அந்தத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற முயற்சிக்க வேண்டுமே தவிர அந்தத் திட்டத்திலே குறை சொல்லிக்கொண்டிருப்பது நியாயமல்ல. அப்படிக் குறை சொன்னால்தான் அது கலைஞரைக் குற்றம் சொன்னதாகும் என்ற முறையிலே இன்றையதினம் குறை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட முறையிலே அரசியல் நடத்தப்படக் கூடாது என்பதை நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டத்திலே இந்த வகையிலே கோளாறு என்று சொல்லுங்கள், இந்த வகையிலே நட்டம் ஏற்படும் என்று விவரம் சொல்லுங்கள். கலைஞர் அவர்கள் காலத்திலேதான் அவருடைய முயற்சியாலே பரம்பிக்குளம்-ஆளியாறு தண்ணீரைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தார்கள். கடைசியில் ஆட்சியின் இறுதிக் காலத்தில் திரு. சாதிக் பாட்சா அவர்கள் இடுக்கியிலிருந்து உபரியாக வருகிற மின்சாரத்தைத் தமிழகத்திற்குத் தர வேண்டும் என்று ஒப்பந்தம் செய்து வந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இப்போது அமைந்துள்ள புதிய அரசு ஆந்திரத்தோடும், கேரளத்தோடும், கர்நாடகத்தோடும் பேச்சு வார்த்தை நடத்தி கிருஷ்ணா நதி நீரை சென்னைக்குக் கொண்டுவர எடுத்திருக்கும் முயற்சியைப் பாராட்டுகிறேன். கலைஞர் அவர்கள்கூட ஏற்கனவே இந்த வகையிலே முயற்சி எடுத்திருக்கிறார்கள் என்பதைக் கூறி, புதிய அரசு இன்னும் தீவிரமாக இதை நிறைவேற்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கூறி, புதிய அரசின் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 10-30 மணிக்குக் கூடும்.

(பிற்பகல் 1-35)

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

### 4. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

289. Second Annual Report of the Tamil Nadu Dairy Development Corporation Limited, Madras for the year 1973-74 containing the Audit Report and the comments of the Comptroller and Auditor-General of India. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

290. Third Annual Report of the Tamil Nadu Dairy Development Corporation Limited, Madras for the year 1974-75 containing the Audit Report and the comments of the Comptroller and Auditor-General of India. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

291. Fourth Annual Report of the Tamil Nadu Dairy Development Corporation Limited, Madras for the year 1975-76 containing the Audit Report and the comments of the Comptroller and Auditor-General of India. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

### *B. Reports, Notifications and Other Papers.*

**Nil**

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

---

செவ்வாய்க் கிழமை, 1978 பிப்ரவரி 28.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### *Sivakasi Division.*

* 149 *Q.*—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to bifurcate the Sivakasi Division and to constitute one of them as Aruppukkottai Division; and

(*b*) if so, when it will be implemented?

### சிவகாசி கோட்டாட்சி

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிவகாசி கோட்டாட்சிப் பகுதியை இரண்டாகப் பிரித்து, அதில் ஒன்றை அருப்புக்கோட்டை கோட்டாட்சியாக ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (மாண்புமிகு நிதி அமைச்சர் சார்பில்) : (அ) தற்போது இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய உப கேள்வியைக் கேட்பதற்கு முன்பு தலைவர் அவர்களுடைய அனுமதியோடு ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். இப்போது காலை நேரத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்குப் பதிலளிக்க 3 கேள்விகள் வைத்திருக்கிறீர்கள், அவர்களே இருந்து உறுப்பினர் களின் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். முக்கியமானவையாக நிதி,

வருவாய் சம்பந்தப்பட்ட கேள்விகளாக இருக்கின்றன. அந்த அந்த இலாகா அமைச்சர்களே பதிலளிப்பது நல்லது. ஆகவே மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்; குறிப்பிட்ட இலாக்கா அமைச்சர்கள் அவைக்கு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சிவகாசி கோட்டாட்சிப் பகுதியை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் மிக்க அவாவுடன் இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் 5 தாலுக்காக்களும், 11 ஊராட்சி ஒன்றியங்களும் இருக்கின்றன. அதைப் பிரிப்பது நிர்வாகம் செய்வதற்கு வசதியாக இருக்கும். அந்தப் பகுதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போட்டியிட்ட தொகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அதைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போட்டியிட்டிருக்கிறார் என்பதற்காகச் செய்ய வேண்டும் என்பதல்ல. ஏற்கெனவே பல்வேறு குழுக்கள், கோட்டாட்சி வட்டங்களைப் பிரிப்பதுபற்றிப் பரிந்துரைகள் செய்திருக்கின்றன. இது போன்று கோவை மாவட்டத்திலும் ஒரு பெரிய பிரச்சினை இருக்கிறது. இதுவும் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது. ஒருவேளை இந்தக் கருத்தையும் பரிசீலிக்க வேண்டுமென்றால், தேவையின் அடிப்படையில் பரிசீலனை செய்வதற்கு எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** மாண்புமிகு முன்னவர் அவர்கள், மாவட்டங்களைப் பிரிப்பதுபற்றி இப்போது சொன்னார்கள். பெரிய மாவட்டங்களாக இருப்பவைகளைப் பிரிப்பதை அரசு பரிசீலனை செய்ய இருக்கிறதா? பெரிய மாவட்டங்களின் பகுதிகளைப் பிரித்து சிறு மாவட்டங்களுடன் சேர்த்து அந்த மாவட்டங்களின் எல்லையை விஸ்தரிக்கும் திட்டம் இருக்கிறதா? குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில், சோழவந்தான் சப்-டிவிஷனைச் சேர்க்க வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அதைப்பற்றியும் அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** மூலக்கேள்வி, சிவகாசி கோட்டாட்சிப் பகுதி பற்றிய கேள்வி. மூன்றாவது கேள்வியாக முகவை மாவட்டம் சம்பந்தப்பட்ட கேள்வியும் இருக்கிறது. மாண்புமிகு தலைவர் அவர்கள் அனுமதித்தால், முகவை மாவட்டம் பற்றியும் சேர்த்துப் பேசலாம்





**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அந்தக் கேள்வி இன்னும் கொஞ்ச தூரத்தில் இருக்கிறது. தனியாகவே எடுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** இந்தக் கேள்வி சிவகாசி கோட்டாட்சியைப் பற்றியதாக இருக்கிறது. ஆகவே இதைப்பற்றித் தனிக் கேள்வி போட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Ownership Rights to Cultivating Tenants.*

*150 THIRU K. S. GANAPATHI (on behalf of Thiru G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have any proposal to confer ownership rights on the cultivating tenants?

## நிலத்தைப் பயிரிடும் குத்தகைதாரர்களுக்கு உடைமையுரிமை.

**திரு. கே. எஸ். கணபதி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்):** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

நிலத்தைப் பயிரிடும் குத்தகைதாரர்களுக்கே நிலத்தின் உடைமையுரிமையை வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (மாண்புமிகு நிதி அமைச்சர் சார்பில்):** இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கே. எஸ். கணபதி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக, தமிழக அரசு டெனன்ட்ஸ் பர்சேஸிங் ரைட்ஸ்பற்றி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. அதைக் கூட்டு ஆய்வுக் குழுவிற்கு பரிசீலனை செய்து பரிந்துரை செய்ய விட்டது. அதன் முடிவு அரசுக்கு வந்துள்ளது. அந்தச் சட்டத்தை மாற்ற அரசுக்கு ஏதேனும் உத்தேசம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** முந்தைய ஆட்சியில் குத்தகைதாரர்கள் நில உடைமை சம்பந்தமாக ஏற்கெனவே சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, ஜனாதிபதி அவர்களுடைய ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டபோது, ரிலிஜியஸ் இன்ஸ்ட்டிடியுஷனை, சாரிட்டபிள் இன்ஸ்ட்டிடியுஷனைச் சேர்ந்தவர்கள் எல்லாம் வேண்டுகோள் விடுத்தார்கள். ஆகவே அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று திருப்பி அனுப்பினார்கள். அது ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டது. தற்போது, இப்பிரச்சினை பரிசீலனையில் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்குக் கொண்டு போகப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சென்ற அவைக்கூட்டத்திலேயே ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்குக் கொடுக்கப்பட்டது. கொடுக்கப்பட்ட அந்தச் சட்டத்துக்கு ஜனாதிபதி ஒப்புதல் கொடுக்காததனாலே கைவிடப்பட்டது. மறுபடியும் அதை ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்குக் கொண்டுவர வேண்டும் என்று பிரச்சினை எழுந்தது. அதுவும் கைவிடப்பட்டது. சட்ட மன்றத்தில் மறுபடியும் அதைக் கொண்டுவந்து ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு விடுவதற்கு உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவரவர்களே, சட்ட மன்றத்திற்கு கொண்டுவந்து, பிறகு ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு விடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. பிறகு விடப்பட்டது. அப்போது ஜனாதிபதி ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டது. பிறகு சட்டமன்றம் கூட வாய்ப்பு இல்லாமல் போய் விட்டது. ஏற்கெனவே ஜனாதிபதி அவர்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டது. ரிலிஜியஸ் இன்ஸ்ட்டிடியுஷன்ஸ், சாரிட்டபிள் இன்ஸ்ட்டிடியுஷன்ஸ் வேண்டுகோளை மனதில் கொண்டு அந்தச் சட்டத்தை மறு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அரசு இருக்கிறது. இதைச் சட்டமன்றத்திலே கொண்டுவர அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : ஜாயின்ட் செலக்ட் கமிட்டி உறுப்பினர்களிலே நானும் ஒரு உறுப்பினன். கமிட்டி உறுப்பினர்கள் பல ஊர்களுக்குச் சென்று விசாரணை செய்து பரிசீலனை செய்த பிறகு பரிந்துரைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதைப்பற்றி முடிவு செய்ய வேண்டும். அதை 'பைனலைஸ்' செய்ய வேண்டும். அதை அப்படியே வைத்துவிட்டார்கள். ஜனாதிபதி அவர்களுக்கு அனுப்பிவிட்டார்கள் என்பது தவறு. அது அப்படியே கைவிடப்பட்டது. அந்தப் பரிந்துரைகளுக்கு முடிவு கொடுக்கக்கூடிய அவகாசம் முடிந்துவிட்டது. அதை கவனிக்கவில்லை. அதற்கான காலத்தை நீடிக்கவில்லை. ஆகவே கைவிடப்பட்டது. அரசாங்கம் கவனிக்க இயலுமா என்பதைப்பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சரியான தகவலைக் கொடுக்கவில்லை. ஜனாதிபதி அவர்களுக்கு அனுப்பப்பட்டது உண்மை. திருப்பி அனுப்பப்பட்டது உண்மை. நமது உறுப்பினர் அவர்கள் மறந்துவிட்டிருக்கிறார் என்று நினைக்கிறேன். திருப்பி அனுப்பப்பட்டது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. ஜி. சுவாமிநாதன் : அந்தச் சட்டம் கூட்டு ஆய்வுக் குழுவிற்கு விடப்பட்டு, முடிவு செய்யப்பட்டு, சட்ட மன்றத்திலே வைக்கப்பட்டு, பாஸ் செய்து அனுப்பப்பட்டு, ஜனாதிபதி அவர்கள் கையெழுத்துப்போட மறுத்து விட்டார்கள். ஆகவே அதை மறுபடியும் ஆய்வு செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். ஆறு மாதம் கழித்து கூட்டு ஆய்வுக் குழுவுக்கு விட்டுப் பரிசீலிக்கலாம் என்று சொன்னார்கள். மறுபடியும் ஆறு மாதம் கழித்து எடுத்தால், அதே செலக்ட் கமிட்டி இருக்க முடியாது. நமது சட்ட மன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டது. சட்டப் பிரச்சினை அதில் இருந்த காரணத்தினாலே, அப்படியே கைவிடப்பட்டது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, அந்த ரிலிஜியஸ் இன்ஸ்ட்டிடியுஷன், சாரிட்டபிள் இன்ஸ்ட்டிடியுஷன்கள் எல்லாம் மிகவும் சங்கடமான நிலைமையில் இருக்கின்றன. ஆகவே இந்தச் சட்டத்தை விரைவிலே கொண்டுவந்து, அவைகளின் சங்கடங்களைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : நான் ஜாயின்ட் செலக்ட் கமிட்டியிலே மத சம்பந்தமான சொத்துக்கள் பாதிக்கப்படுகின்றன என்று ஆட்சேபனை செய்திருக்கிறேன். பல உறுப்பினர்களும் ஜாயின்ட் செலக்ட் கமிட்டியிலே சொல்லியிருக்கிறார்கள். அதனால்தான் அது கைவிடப்பட்டது என்று நான் சொல்கிறேன். அதுதான் அதற்குக் காரணம். மீண்டும் கொண்டுவருவதாக இருந்தால் மத சம்பந்தமான நிறுவனங்களின் சொத்துக்கள் பாதிக்கப்படாமலிருக்க அரசு முயலுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : துணைத் தலைவரவர்களே, ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். ஜாயின்ட் செலக்ட் கமிட்டி மெம்பராக இருக்கும்போது, அந்தக் குழுவில் நிகழ்ந்த விவரங்களைச் சொல்லக்கூடாது என்ற மரபு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஜாயின்ட் செலக்ட் கமிட்டி நடந்து முடிந்துவிட்டது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மற்ற உறுப்பினர்களும் அப்படியே சொல்லுகின்ற நிலைமை வந்துவிடும் என்பதற்காகச் சொல்கின்றேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : கூடுமானவரையில் எப்போதுமே அந்த சம்பிரதாயத்தைக் கடைப்பிடிப்பது நல்லதுதான். அந்தக் கமிட்டி முடிந்துவிட்ட பிறகு, அரசாங்கத்திற்குப் பரிந்துரை அனுப்பப்பட்டிருக்கிறது. அதனால் எடுத்துச் சொல்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ஒன்றை எடுத்துச் சொன்னார்கள். அது தொடர்பாக நானும் சொல்கிறேன். அந்தக்' கூட்டு ஆய்வுக் குழுவிலே நானும் ஒரு உறுப்பினராக இருந்தேன். நானும் கடுமையான ஆட்சேபனை தெரிவித்திருக்கிறேன். அதனால் அதைக் கைவிட்டு விட்டார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : அந்த ஆட்சேபனையை எழுப்பியபோது, நன்றி தெரிவித்தது நினைவிருக்கும் என்பதையும் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி : மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்கள் மத ஸ்தாபனங்களை பாதிப்பதால் இந்தச் சட்டம் திருப்பி அனுப்பப்பட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை இந்த அவைக்குக் கொண்டுவந்து ஆராயலாமா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அமைச்சர்கள் கூட்டத்திலே இது பரிசீலிக்கப்பட இருக்கிறது. பல்வேறு விண்ணப்பங்களை மனதிலே வைத்துக் கொண்டு பரிசீலிக்கப்பட வேண்டும். உதாரணமாக குத்தகைதாரர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு 5 ஸ்டாண்டர்ட் ஏக்கர் நிலம் இருந்தாலோ, அவர்கள் குடும்பத்திற்கு 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் நிலம் இருந்தாலோ சட்டத்தின் பலன் கிடைக்காது. அது போலவே 'பேர் பிரைஸ் பிக்சேஷன்' எப்படிச் செய்வது என்பது பற்றியெல்லாம் பரிசீலிக்க வேண்டும். இதையும் நாங்கள் இணைத்துப் பரிசீலிக்க இருக்கிறோம். எல்லாவற்றையும் நாங்கள் பரிசீலனையில் எடுத்துக் கொள்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

திரு. வே. தங்கப்பாண்டியன் : இப்போது பல கோவில்கள் மூடப்பட்ட நிலையில் இருக்கின்றன. ஆராதனைகூட நடைபெறாத கோவில்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட கோவில்களுக்கு உதவி செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : கவனிக்கப்படும்.



திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : இதனால் பல கல்வி நிறுவனங்கள் பாதிக்கப்படுகின்றன. திருச்சி பாப்பம்மாள் சத்திரத்திலுள்ள நிறுவனத்திற்கு 200 ஏக்கர் நிலங்களுக்கான குத்தகை வருவதில்லை. அங்கே 300 பிள்ளைகள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிறுவனத்திற்கு வருமானமே இல்லை. அரசு சட்டம் கொண்டு வருகிற வரையில், அவர்களுக்கு ஏதாவது இடைக்கால நிவாரணம் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : குத்தகைதாரர்களுக்கு நில உடைமையாக்கும் சட்டத்திலே இவையெல்லாம் இடம் பெறக்கூடாதென்று அரசுக்கு விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அவற்றை அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும். மேலும் தனிப்பட்ட முறையில் புகார்கள் வந்தால், அவையும் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : நான் கூறுவது நில உடைமை பற்றி யல்ல. அவர்களுக்குக் குத்தகை வர வேண்டும். குத்தகை வராததால், அந்த இன்ஸ்டிடியூஷனே நடக்காமல் போய்விடும் போல் இருக்கிறது. எனவே அதற்கு இடைக்கால நிவாரணம் அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மூலக் கேள்விக்கும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்கும் கேள்விக்கும் தொடர்பில்லை. எனினும் உறுப்பினரவர்களின் கோரிக்கைகள் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

திரு. எம். சங்கரலிங்கம் : குத்தகைதாரர்களுக்கு நிலத்தின் உடைமையுரிமையை வழங்குவதற்கான சட்டம் முந்தைய அரசு இருக்கும்போது, கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டம் ராஷ்டிரபதியால் திருப்பி அனுப்பப்பட்டது. தமிழ் நாட்டில் ராஷ்டிரபதி ஆட்சி 2 ஆண்டுகள் நடைபெற்றிருக்கிறது. எனவே அந்தச் சட்டம் கொண்டு வந்து கிட்டத்தட்ட 3½ ஆண்டுகள் இடைவெளி ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேஸ்வர தீக்ஷிதர் அவர்கள் கூறியதுபோல், ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள ஒரு கல்லூரிக்கு தஞ்சையிலே கிட்டத்தட்ட 700 ஏக்கர் நிலம் இருக்கிறது. ஆனால் யாரும் குத்தகை கொடுப்பதில்லை. அவர்களுக்கே அந்த நிலங்களை வாங்கும் உரிமையைக் கொடுத்துவிட்டால், அவர்கள் நிலத்திற்காகக் கொடுக்கும் நஷ்ட ஈட்டுப் பணமாவது கல்லூரிக்குக் கிடைக்கும். ஆனால் சட்டத்தைக் கொண்டு வருவதில் இடைவெளி நீளும்போது, துன்பங்களும் தொடருகின்றன. எனவே அதற்கான சட்ட முன்வடிவை அடுத்த கூட்டத் தொடரிலேயே அரசு கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** அரசின் பரிசீலனையில் இருக்கிறதென்று சொன்னேன். விரைவில் அமைச்சரவைக் கூட்டத்தில் வைத்து, முடிவெடுக்கப்பட இருக்கிறது. அப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களை எல்லாம் பரிசீலித்து, ஆவன செய்யப்படும்.

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** அமைச்சரவர்கள், அமைச்சரவைக் கூட்டத்தில் பரிசீலிக்கப்படுமென்று சொன்னார்கள். ஏற்கனவே சிலர் வேறு பெயர்களில் எழுதி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே சட்டத்தைக் கொண்டுவரும்போது, 'ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட்' கொடுத்து, அந்தத் தேதியில் எவ்வளவு சொத்து இருக்கிறதென்று பார்த்து, நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்போது எல்லோரும் பிரித்து வைத்துக்கொண்டு விட்டார்கள். அப்படி மேலும் ஏற்படாமல் இருக்க அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினரவர்களின் யோசனை மனதிலே வைத்துக்கொள்ளப்படும். அவர்கள் 'ரெட்ராஸ்பக்டிவ் எபக்ட்' கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். நிச்சயமாக அதுபற்றியும் பரிசீலிக்கப்படும்.

*Headquarters of Ramanathapuram district.*

* 151 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to shift the headquarters of Ramanathapuram district from Madurai; and

(*b*) if so, the details thereof?

இராமநாதபுரம் மாவட்டத் தலைமையிடம்

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைமையிடத்தை மதுரையிலிருந்து மாற்றுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (மாண்புமிகு நிதி அமைச்சர் சார்பில்) :** (அ) ஆம்.

(இ) பரிசீலனையில் உள்ளது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** எந்த இடத்தில் அமைப்பதாகப் பரிசீலனையில் உள்ளது ? அந்தப் பரிசீலனை ஏன் செய்யப்பட்டு வருகிறது ?



**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று யோசனை நீண்ட நாட்களாக அந்தப் பகுதி மக்களாலே எழுப்பப்பட்டு வருகிறது. அந்த மாவட்டத்தை மேற்கு ராமநாதபுரம், கிழக்கு ராமநாதபுரம் என்று இரண்டாகப் பிரிக்க வேண்டும். அப்படிப் பிரிக்கும்போது, தலைநகரை எங்கே வைப்பது என்ற பிரச்சினை தான் நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. இதன் காரணத்தால், தமிழக அரசால் நிறுவப்பட்ட மாவட்ட வருவாய் நிர்வாகம் குறித்த குழு இதுபற்றிச் சில பரிந்துரைகளைச் செய்திருக்கிறது. ராமநாதபுரம் மாவட்டம் என்று ஒரு பகுதிக்குப் பெயர் வைத்து, அதை திருப்பத்தூர், திருவாடானை, சிவகங்கை, பரமக்குடி, முதுகுளத்தூர், ராமநாதபுரம் ஆகிய வட்டங்களைக் கொண்டதாக அமைப்பது ஒரு யோசனையாகும். இதனுடைய தலைநகரமாக மானாமதுரை அல்லது சிவகங்கை இருக்கலாமென்ற யோசனை இருந்து வருகிறது. அங்கே புள்ள மக்கள் வேறுசில யோசனைகளையும் சொல்லியிருக்கிறார்கள். மற்றொரு பகுதிக்கு விருதுநகர் மாவட்டம்—மேற்கு ராமநாதபுரத்திற்கு என்று நினைக்கிறேன்—என்று பெயரிட்டு திருவில்லிபுத்தூர், சாத்தூர், அருப்புக்கோட்டை, சங்கரன்கோவில் வட்டங்களை அந்த மாவட்டத்தில் இணைக்கலாமென்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதிலே தலைநகரை எங்கே வைக்க வேண்டுமென்ற பிரச்சினை மிக முக்கியமானதாக இருப்பதால், திரும்பவும் அந்தப் பிரச்சினை பரிசீலனையில் இருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சில பேர், ராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து விட்டு, தலைநகராக தாற்காலிகமாக மதுரையையே வைத்துக் கொள்ளலாமென்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய முதல்வரவர்கள் சமீபத்திலே முகவை மாவட்டத்தில் பேசும்போது, ராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகர் அந்த மாவட்டத்திலேயே, ஒரு மையப் பகுதியில் மாற்றப்படுமென்றும், இதனால் அந்தப் பகுதி மக்கள் மதுரைக்குச் செல்லும் நீண்ட பயணத்தைத் தடுக்கலாமென்றும் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் குறித்து விவாதிக்க வேண்டியிருக்கிறது. முதல்வரவர்களே மாவட்டத் தலைநகரை மாற்றியமைப்பது குறித்த பிரச்சினையை எழுப்பியிருப்பதால், சட்ட மன்றக் கூட்டம் முடிந்த பிறகு, இந்தப் பிரச்சினை குறித்து அமைச்சரவைக் கூட்டத்தில் பரிசீலிக்க வேண்டுமென்று கருத்து சொல்லியிருக்கிறார்கள். எனவேதான் பரிசீலனையில் உள்ளதென்று தெரிவித்தேன்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** சும்மா கிடந்த சங்கை பாரோ ஊதிக் கெடுத்தான் என்று பழமொழி சொல்லுவார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நல்ல வேளை, யார் என்று சொல்லாமல் விட்டீர்களே.

[1978 பிப்ரவரி 28

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** ராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து எத்தனை உறுப்பினர்கள் சட்டமன்றப் பேரவைக்கும், மேலவைக்கும் வந்திருக்கிறார்களோ அவர்கள் அனைவருடைய வேண்டுகோள், தங்கள் ஊரை அடுத்து ஜில்லாத் தலைநகர் இருக்க வேண்டுமென்பது. ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு யோசனை வரும். ஸ்ரீவில்லிப்புத்தூரைத் தலைநகராக்க வேண்டுமென்று ஒரு யோசனை இப்போது சொல்லப்படுகிறது. முதலமைச்சரவர்களும், அமைச்சரவையும் பரிசீலித்து, நியாயமான முடிவை எடுக்க வேண்டும். அந்த மாவட்டத்திலிருந்து வந்திருக்கிறவர்களிடையே தகராறு இல்லாமல், மேலும் காலத்தை நீட்டாமல், நியாயமான முறையில் செய்ய வேண்டும். ராமநாதபுரம் ஜில்லா மதுரை ஜில்லாவிலிருந்து பிரிக்கப்பட்டதாகும். எல்லாவற்றையும் நன்றாகப் பரிசீலித்து, நியாயமான முறையிலே, மையமான இடத்திலே தலைநகர் இருக்க வேண்டியது அவசியம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** என்ன கேள்வி கேட்கிறீர்கள் ?

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** இராமநாதபுரம் மாவட்டம் என்று இருக்க வேண்டுமென்பதுதான் அங்கே உள்ள எல்லோருடைய விருப்பம். தகராறுக்கு இடமில்லாமல் முடிவெடுக்க வேண்டும். நான் தேவகோட்டையில் தலைநகர் இருக்க வேண்டுமென்று சொல்லவில்லை. கூடுமானவரையில் மிகவும் காலம் தாழ்த்தாமல் அரசு இதுபற்றித் தக்க முடிவெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** மாண்புமிகு உறுப்பினரவர்களே, பிரச்சினையின் தன்மை எப்படிப்பட்டதென்பதை, அவர்களுடைய பேச்சிலே விளக்கியிருக்கிறார்கள். நிச்சயமாக அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தப் பிரச்சினை குறித்து தக்க முடிவெடுக்கப்படுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாவட்டம் பிரிக்கப்பட்டால் தலைநகர்களை மாற்றம் செய்வதில் உள்ள பிரச்சினைகளைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மேற்கு முகவையில் தலைநகரை அமைப்பதில் பிரச்சினையில்லை. மேற்கு மாவட்டத்தைப் பிரிப்பதை ஏற்றுக்கொள்ள அரசியல்வாதிகள் தயாராக இருக்கிறார்கள். ஆகவே அதுபற்றி பரிசீலனையை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** ஒரு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கிறபோது, இரண்டு இடங்களுக்கும் எங்கு தலைநகரை வைக்க வேண்டுமென்று தீர்மானிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஒரு பகுதியிலே பிரச்சினை இல்லையென்பதற்காக அதை மட்டும் பிரித்துவிட்டு, இன்னொரு பகுதியிலே எங்கே தலைநகரை வைப்பது என்று பார்ப்பதால் பிரச்சினைகள் வரும். ஆகவே இரண்டுக்கும் பொதுவாக முடிவெடுப்பதுதான் சரியாக இருக்கும்.



1978 பிப்ரவரி 28]

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** மாவட்டத்தைப் பிரிப்பது என்பது பெரிய பிரச்சினை. ஆனால் தலைநகரை மாற்றுவது என்பது சாதாரணமாக உடனடியாகச் செய்யக்கூடிய பிரச்சினை. மையமாக உள்ள இடத்தில் தலைநகரை அமைக்க வேண்டுமென்ற கருத்து சொல்லப்படுகிறது. மையமாக உள்ள எந்தெந்த ஊர்கள் பரிசீலனைக்குரியதாக அமைகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** நிர்வாகக் குழு கொடுத்திருக்கிற சிபாரிசின்படி சிவகங்கையும், மானாமதுரையும்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்னொரு கருத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். சிவகங்கைக்கும், மானாமதுரைக்கும் 10 கிலோமீட்டர் தூரம்தான் இருக்கிறது. அந்தப் பகுதிகளில் தலைநகரம் அமைக்கப்பட்டால், இரண்டு பகுதிகளும் வளர்வதற்கு வாய்ப்பு இருக்கிறதென்று சொல்கிறார்கள். இரண்டாவது, வைகை ஆறு ஓடுவதால் அங்கே குடி தண்ணீர்ப் பிரச்சினையும் வராது என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஏதாவது ஒரு ஊருக்குப் பக்கத்திலே இருக்க வேண்டுமென்ற கோரிக்கையும் இருந்து வருகிற காரணத்தால், அதையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம். மையப் பகுதி இன்னது என்று தெரிவித்து, அது பரிசீலனையில் இருக்கிறது என்றால், அந்த மையப் பகுதியில்தான் தலைநகரை வைப்பார்கள் என்று மக்கள் கருத ஆரம்பிப்பார்கள். தலைநகரைத் தேர்ந்தெடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** மதுரை மாநகரில் உள்ள இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகரை மாற்றுகிற பிரச்சினை இருக்கிறது. மேலும் அந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கிற பிரச்சினையும் இருக்கிறது. நமது மாநிலத்தில், நிர்வாக வசதியையொட்டி, பிரிக்கப்படுகிற மாநிலங்களுடைய எண்ணிக்கையை 20 மாவட்டங்களாக உயர்த்தும் செயற்குறிப்பை ஆராய ஒரு உயர் மட்டக் குழுவை நியமிக்க அரசு முன்வருமா ? திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு அபிவிருத்தி மாவட்டங்கள் இருக்கின்றன. அபிவிருத்திக் கூட்டம் கூடுவதாக இருந்தால், தெற்கு மாவட்டம் என்றும் வடக்கு மாவட்டம் என்றும் கூடுகிறோம். ஒரு அபிவிருத்தி மாவட்டமே நிர்வாக மாவட்டமாக அமைந்தால், சிறப்பாக இருக்கும். மாநிலங்களிலே 40, 60 என்று மாவட்டங்கள் இருப்பதால், நிர்வாக அபிவிருத்திக்கும் நிதி ஒதுக்கீட்டை மத்திய அரசிலிருந்து பெறுவதில் பயனுள்ளதாக அமைவதாலும், அந்தக் கருத்தை ஆராய ஒரு உயர் மட்டக் குழுவை அமைக்க அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய இந்த யோசனை ஒரு பயனுள்ள யோசனை என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. காரணம், புது டில்லியில் 1976 ஆம் ஆண்டு மே மாதம் 7, 8 ஆகிய தேதிகளில் நடந்த தலைமைச் செயலாளர்கள் மாநாட்டிலும், 1976 ஆம் ஆண்டு டிசம்பர் 9, 10 ஆகிய தேதிகளில் நடைபெற்ற பணியாளர் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் மாநிலச் செயலாளர்கள் மாநாட்டிலும், பெரிய அளவிலான மாவட்டங்களை, சிறியதாகவும், நிர்வகிக்கத்தக்க பிரிவுகளாகவும் பிரிக்க வேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. இது அகில இந்திய அளவிலே ஒட்டுமொத்தமாக நிர்வாக வசதியின் காரணமாகச் சிபார்சு செய்யப்பட்டிருக்கிற காரணத்தால், அந்தப் பரிவுரையை அரசு தனியாக ஆய்வு செய்யவிருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்த கருத்தும் அதனுடன் இணைத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : நிர்வாக வசதிக்கேற்ப மிகவும் சிறிய மாவட்டங்களாக இருப்பவைகளையும், நிர்வகிக்கும் அளவுக்கு அமைக்க வேண்டுமென்ற கருத்து சொல்லப்பட்டு வருகிறது. அப்படிப் பார்க்கிறபோது, கன்னியாகுமரி மாவட்டத்தை, திருநெல்வேலி மாவட்டத்தோடு இணைக்கலாமா என்றும் கருத்து தெரிவிக்கப்படுகிறது. அதுபற்றி அரசின் அபிப்பிராயம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சாத்தான்குளம்? — ராதாபுரம் தொகுதியில் இருக்கின்ற நாங்குனேரி தாலுக்காவை கன்னியாகுமரியோடு இணைக்க வேண்டுமென்ற ஒரு கருத்து இருக்கிறது என்று நினைக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தை, திருநெல்வேலி மாவட்டத்தோடு இணைக்க வேண்டுமென்ற ஒரு புதுப் பிரச்சினையை தயவுசெய்து உருவாக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : தற்போதுள்ள மாவட்டங்களைப் பிரித்து, எண்ணிக்கையை அதிகமாக்க மத்திய அரசின் அனுமதியைப் பெற வேண்டுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாவட்ட நிர்வாகப் பிரச்சினைக்கு மத்திய அரசின் அனுமதி தேவையில்லையென்று கருதுகிறேன். பொதுவாக இந்தியா முழுமைக்கும், நிர்வாகச் சீர்திருத்தமாக பரிந்துரையைச் செய்திருக்கிறார்கள். பணியாளர்கள் நிர்வாகச் சீர்திருத்தத் துறையில் செயலாளர்களும் இந்தப் பரிந்துரையைச் செய்திருக்கிறார்கள். இப்படி மாவட்டங்களைப் பிரிப்பது, மாவட்ட அபிவிருத்திக்கும், தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கும் நல்லதாக இருக்குமென்று சிபார்சு செய்திருக்கிறார்கள். இது மாநில அரசே முடிவு செய்ய வேண்டிய பிரச்சினை.





திரு. என். சுந்தரேசத் தேவர் : நம்முடைய மாநிலத்தில் பெரிய மாவட்டங்களாக இருப்பதைச் சிறிய மாவட்டங்களாகவும், மிகவும் சிறியதாக இருக்கும் மாவட்டங்களுடன் வேறு சில பகுதிகளையும் சேர்க்கக்கூடிய கருத்து இருப்பதாக அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் ஒரே முறையாக எல்லா மாவட்டங்களையும் எப்படிச் சீரமைக்கலாம் என்பதைப் பற்றிப் பரிசீலனை செய்தால், நல்லதாக இருக்கும் என்று நினைக்கிறேன். அதை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : ஏற்கெனவே சொன்னதைப் போல், அந்தச் சிபார்சுகளை எடுத்துக் கொண்டு, பொதுவாக தமிழ்நாட்டில் நிர்வாக வசதிக்காக பெரிய மாவட்டத்திலுள்ள சில பகுதிகளை சிறு மாவட்டத்தோடு இணைக்க வேண்டுமென்று ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். முகவை மாவட்டத்தைப் பொறுத்த அளவில், அரசின் பரிந்துரை ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்டு, அந்த ஆய்வுக் குழுவின் பரிந்துரையை ஏற்றுக்கொள்ளும் போது தலைநகரை எங்கே வைப்பது என்ற பிரச்சினை வந்ததால், அது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. நிச்சயமாக பெரிய மாவட்டத்தின் சில பகுதிகளை சிறிய மாவட்டத்தோடு இணைப்பது உள்ளிட்ட எல்லாப் பிரச்சினைகளையும் அரசு ஆய்வு செய்யவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : ஒரு பிரச்சினையிலே முடிவு ஏற்படவில்லையென்றால், அதைக் கிடப்பிலே போட வேண்டுமென்று உயர் மட்டக் குழுவுக்கு அனுப்புவது வழக்கம். இராமநாதபுரம் மாவட்டத்தின் பிரச்சினை அப்படி இல்லை. அமைப்பு ரீதியாக அது பிரிக்கப்பட வேண்டியதுதான். பேரறிஞர் அண்ணா காலத்திலே கூட செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகரை காஞ்சிபுரத்தில் வைத்தார்கள். சேலத்தைப் பிரித்து தர்மபுரி என்று ஆக்கினார்கள். இராமநாதபுர மாவட்டப் பிரச்சினை அத்தியாவசியமான பிரச்சினை. ஆகவே ஒரு திட்டவட்டமான முடிவை பாப்புலர் கவர்ன்மெண்ட் காலத்திலேயே விரைவில் செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்களுக்குச் சில விஷயங்களை நினைவுபடுத்த விரும்புகிறேன். 1974 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் நாள் அன்று, இந்தப் பிரச்சினை, முன்னாள் முதல்வர் தலைமையில் அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பிறகு ஒத்தி வைக்கப்பட்டது. 1975 ஆம்

ஆண்டு நவம்பர் மாதம் இதைச் செய்ய வேண்டுமென்று திரும்பவும் கேட்டார்கள். அதற்குப் பிறகு நெருக்கடி நிலை காலத்திலே மக்களாட்சி இல்லை. இப்போது நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு உடனடியாக இதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படுகிறபோது, இரண்டு இடங்களுக்கும் தலைநகரங்களை ஏககாலத்தில் தீர்மானித்தால்தான், பிரச்சினைகள் தீரும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தைத் திருநெல்வேலியோடு இணைக்கும் கருத்து இருப்பதாகச் சொன்னார். திருநெல்வேலி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று ஏற்கெனவே கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பிரிக்கும்போது திருநெல்வேலியில் உள்ள இராதாபுரம் தனைத் தாலுக்காவையும் கன்னியாகுமரியோடு இணைக்க வேண்டுமென்று கருத்து எழுந்தபோது, இராதாபுரத்தில் வருவாய் குறைவாக இருப்பதால், சேரன்மாதேவியையும் சேர்க்க வேண்டுமென்று அபிவிருத்திக் கூட்டத்திலே ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அது அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானம் அரசின் பரிசீலனைக்கு வந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இது குறித்துத் தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்லப்படும்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் ஒரு பார்லிமெண்ட் தொகுதிக்கும் குறைவான ஏரியாவை உடையதாக இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தினுடைய ஒரு பகுதியை அதனோடு இணைத்தால்தான், ஒரு பார்லிமெண்ட் தொகுதியாக ஏற்படுகிறது. முகவை மாவட்டத்தைப் பிரிக்கும்போது, திருப்பத்தூர் பகுதியை, புதுக்கோட்டை மாவட்டத்தோடு இணைக்க வேண்டுமென்ற கோரிக்கை இருந்தது. அது விடப்பட்டுப் போயிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டம் பிரிக்கப்படும்போது புதுக்கோட்டை மாநிலத்திற்கு அதிகமான பகுதி கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு உறுப்பினருடைய இந்த யோசனை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.





*Transfer of Non-teaching Staff.*

* 152 Q.—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that permission has been sought for, to transfer members of non-teaching staff serving in High Schools within the diocese of Madurai and Ramanathapuram; and

(b) if so, the action taken thereon?

ஆசிரியர் அல்லாத பணியாளர் மாற்றம்

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் கிறித்தவ திருச்சபை நிர்வாகத்தின் (diocese) கீழ் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியரல்லாத பிற பணியாளர்களை, அப்பள்ளிகளுக்குள்ளேயே மாற்ற அனுமதி கேட்கப்பட்டுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) உதவிபெறும் பள்ளிகளின் மேலாண்மைகளால் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்தல்) சட்டம் 1973-ஐ எதிர்த்து தொடுக்கப்பட்ட வழக்குகளின்மீது தீர்ப்பளிக்கையில், சென்னை உயர்நீதி மன்றம், மதுரை, ராமநாதபுரம் டயோசி சால் நடத்தப்படும் எல்லாப் பள்ளிகளும் சிறுபான்மை கல்வி நிலையங்களென அறிவித்து, மேற்படி சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் இப்பள்ளிகளுக்குப் பொருந்தாது என தீர்ப்பளித்துள்ளது. இத்தீர்ப்பின்படி மேற்படி டயோசி சால் நடத்தப்படும் பள்ளிகளின் உள் விவகாரங்களில் தலையிட அரசிற்கு உரிமையில்லை. ஆகையினால் மேற்படி டயோசிசின்கீழ் பணிபுரிபவர்களை ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்கு மாற்ற அரசின் அனுமதி தற்போது அமுலில் உள்ள விதிகளின் படி தேவையில்லை.

(முற்பகல் 11-00)

திரு. பி. ஆர். தாமஸ் : பொதுவாக மாறுதல் என்பது பதவி உயர்வு வாய்ப்பு ஏற்படும்போது வழங்கப்படுகிறது. ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்கு மாற்றும்போது, சேரும் காலம் "ஜாயினிங் டைம்" என்று சில நாட்கள் வழங்கப்படுகின்றன. இந்த நிறுவனங்களுக்கு அத்தகைய சலுகையை அரசு வழங்காத காரணத்தால், மாறுதல் பெற்றுச் சேருகிற

பணியாளர்களுக்கு அந்த நாட்கள் ஊதியம் கிடைக்காத அவல நிலை இருக்கிறது. ஜாயினிங் டைம் என்ற சலுகையை அரசாங்கம் அவர்களுக்கு வழங்க முன்வருமா? அந்தப் பணியாளர்கள் மாநில அளவில் அரசிற்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அதை அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அதை நான் கவனத்தில் எடுத்துக் கொள்கிறேன்.

**திரு. கே. எஸ். கணபதி:** நம்முடைய கான்ஸ்டிடியூஷனில் 30(1) ஆர்டிகிள் இருக்கிற வரையில், மைனாரிடிகளின் நிறுவனங்கள் எதைச் செய்தாலும் அரசாங்கம் அதைக் கண்டிக்க முடியாது என்ற நிலைமை உள்ளது. மைனாரிடி கம்யூனிடியைச் சேர்ந்தவர்களுக்கே அது பல சமயங்களில் பாதகமாக இருக்கிறது. மைனாரிடிகளே மைனாரிடிகளை அழிப்பதற்கான நிலைமைகள் உருவாகின்றன. ஆகையால் கான்ஸ்டிடியூஷனில் உள்ள அந்த ஆர்டிகிள் 30(1)ஐ மாற்றுவதற்கு அரசு மத்திய அரசிடம் கோரி முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, அந்தத் தீர்ப்பின் பேரில் மேல் முறையீடு செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உறுப்பினர் கருத்தைப் பரிசீலனை செய்யலாம்.

**திரு. பி. ஆர். தாமஸ்:** இந்த ஆட்சி ஆரம்பித்த அந்த நாளன்றுதான் இந்த அனுமதி இந்த நிர்வாகத்திற்கு வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அனுமதி வழங்கப்படுவதற்கு முன்பாக பள்ளியோடு ஒப்பந்தம் செய்துள்ளவர்களுக்கு விதி விலக்கு அளிக்க அரசாங்கம் முன்வருமா? ஒப்பந்தம் என்பது இரு சாராரும் சேர்ந்து செய்யவேண்டுமென்று அமைவது. அந்த அடிப்படையில் ஒப்பந்தம் செய்த பணியாளர்களுக்கு விதி விலக்கு அளிக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அவற்றையெல்லாம் பரிசீலித்து அரசினுடைய அதிகாரத்திற்கு உட்பட்ட தேவையான நடவடிக்கையை எடுக்கிறோம்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** அமைச்சர் சொன்ன பதிலிலிருந்து உயர்நீதி மன்றம் இதில் தலையிடுவதற்கு இல்லை என்று சொல்லியதாகத் தெரிகிறது. தனியார் பள்ளிகளில் குறிப்பாக மைனாரிடி பள்ளிகளில் செய்கிற தவறுகளைக் கண்டிக்கிற வகையில்தான் அரசாணை வழங்கப்பட்டிருக்கிறது. அது ஒழுங்கீனங்களைப் பாதுகாக்கும் நிலைமையில் இல்லை. மேல் முறையீட்டிற்கான





முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எவ்வளவு சீக்கிரம் எடுக்கப்படும்? இதற்கு மேல் உச்ச நீதி மன்றத்தில் அதற்கான அனுமதி பெற்றிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** வழக்கறிஞர் மூலமாக அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேற்கொண்ட விவரங்களுக்குத் தனிக் கேள்வி போட்டால், வசதியாக இருக்கும்.

**திரு. கே. எஸ். கணபதி:** இந்த நிர்வாகங்கள் ஒரு ஆசிரியரை இன்னொரு இடத்திற்கு மாற்றுவதையே தண்டனையாகத்தான் செய்கிறார்கள். கொத்தடிமை என்று சொல்கிறார்களே, அதைப்போல இந்த நிர்வாகத்தை எதிர்த்துப் பேசுகிறவர்களுக்கு, தங்கள் உரிமையைக் கேட்பதற்குக் கூட இதுபோன்ற இடங்களில் உரிமையில்லை. மாற்றுகிறார்கள் என்றால் என்ன காரணத்திற்காக மாற்றுகிறார்கள் என்பதை அரசாங்கத்திற்குத் தெரிவித்து அனுமதி பெற்ற பிறகுதான், மாற்ற வேண்டுமென்ற திருத்தத்தை அரசு கொண்டுவருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** சிறுபான்மையோர் நடத்துகிற இதுபோன்ற பள்ளிகளின் நிர்வாகத்தில் அரசு தலையிடுவதற்கில்லை என்று நீதி மன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. மேல் முறையீடு செய்து தீர்ப்புப் பெற வேண்டும். அல்லது அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். இரண்டில் ஒன்று ஏற்படுமானால், இதுபோன்ற குறைபாடுகள் நீங்குவதற்கு வசதியாக இருக்கும்.

### *Rest Houses for Teachers.*

* 153 *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the towns in which Rest Houses for teachers have been constructed under the "Rest Houses for Teachers Scheme";

(*b*) whether there is any proposal with the Government to construct such Rest Houses in all the District Headquarters; and

(*c*) whether the Government have sanctioned any grant to the Districts in which such Rest Houses for the teachers have been constructed?

### ஆசிரியர்கள் இல்லங்கள்.

திரு. எம். சங்காலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆசிரியர்கள் இல்லம் அமைக்கும் திட்டத்தின்கீழ் எந்தெந்த நகரங்களில் ஆசிரியர்கள் இல்லங்கள் அமைக்கப்பட்டன?

(இ) எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(உ) அவ்வாறு ஆசிரியர்கள் இல்லங்கள் கட்டும் மாவட்டங்களுக்கு அரசு மானியம் ஏதும் வழங்குகிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) வேலூர், கொடைக்கானல், மதுரை, ஊட்டி ஆகிய இடங்களில் ஆசிரியர்கள் இல்லங்கள் அமையப் பெற்றுள்ளன.

(இ) இல்லை.

(உ) வேலூர், கொடைக்கானல், ஊட்டி ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள ஆசிரியர் இல்லங்களுக்கு அரசு மான்யம் வழங்கியுள்ளது.

திரு. எம். சங்காலிங்கம் : ஆசிரியர்கள் இல்லங்கள் அமைக்கப்படுகிற இடங்களில் எந்த விதத்தில் அரசு மானியம் வழங்குகிறது? இப்போது ஆசிரியர் இல்லங்களுக்கு நிதி திரட்டுகிற பணி கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரம்பமாகி, ஆசிரியர் இல்லத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டுவிட்டதாக அறிகிறேன். ஆசிரியர்கள் எவ்வளவு நிதி வழங்க வேண்டும் அல்லது திரட்ட வேண்டும்? அரசு எவ்வளவு கொடுக்கிறது? மத்திய அரசு ஏதேனும் உதவி செய்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆசிரியர்கள் தாங்களே நிதி திரட்டுகிறார்கள். தங்களுடைய சம்பளத்திலிருந்து நன்கொடை தந்து குறிப்பிட்ட அளவு நிதியைச் சேர்த்துத்தான் ஆசிரியர் இல்லங்களைக் கட்டுகிறார்கள். ஆசிரியர் நல நிதி என்ற ஒரு நிதி அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கிறது. அதிலிருந்து மானியம் வழங்குகிறோம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : பல மாவட்டங்களில் ஆசிரியர் நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தாலும் கூட, தஞ்சை, திருச்சி போன்ற பெரிய மாவட்டங்களில் இதுவரையில் அமைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அதற்கு என்ன காரணம்? விரைவில் அங்கேயும் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆசிரியர்களே இதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.





திரு. கே. எஸ். கணபதி : பல மாவட்டங்களில் ஆசிரியர் இல்லங்கள் அமைப்பதில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் எந்த நிதியின் கீழ் மானியம் வழங்குகிறார்கள்? குறிப்பிட்ட அளவில் இந்த மாவட்டத்திற்கு இன்ன தொகை என்ற அடிப்படையில் வழங்கப்படுகிறதா? கேட்கிறவர்களைப் பொறுத்து வழங்கப்படுகிறதா? எந்த அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவர்கள் போட்டிருக்கிற திட்டங்களுக்கு ஏற்ப மானியம் அளிக்கப்படும்.

### *Earned Leave for Aided School Teachers.*

* 154 Q.—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that Government and Panchayat Union Teachers are eligible for Earned Leave benefits for their attendance in M.E.L.T. Training, whereas Aided School Teachers are not eligible for the same; and

(*b*) if so, the reasons therefor?

### அரசு மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு ஈட்டிய விடுப்பு.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசுப் பள்ளிகள் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் ஆசிரியர்கள் ஆங்கில மொழி பயிற்றுவிப்புப் பயிற்சிக்குச் செல்லும்போது ஈட்டிய விடுப்புப் பயனைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாய் இருக்கையில், அரசு மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்கள் இச்சலுகை பெறத் தகுதியுடையவர் அல்லர் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) & (இ) அரசு, ஊராட்சி மற்றும் தனியார் பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் ஆங்கில போதனை மையங்களில் பயிற்சி பெறும் காலத்திற்கு ஈட்டிய விடுப்பிற்குத் தகுதியுடையவர்களாவார்கள்.

### *Refund of Increments.*

* 155 Q.—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that different categories of teachers have been directed to refund the entire amount which they drew by way of increments prior to 1st January 1975; and

(*b*) if so, the reasons therefor?

**ஊதிய உயர்வுகளை திருப்பிச் செலுத்தல்.**

**திரு. பி. ஆர். தாமஸ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1-1-1975 ஆம் நாளுக்கு முன்னர் ஊதிய உயர்வாகப் பெற்ற தொகை முழுவதையும் திருப்பிச் செலுத்துமாறு வெவ்வேறு வகை ஆசிரியர் களுக்கும் ஆணையிடப்பட்டுள்ளது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஆம்.

(இ) அரசாணை நிலை எண் 765, கல்வித்துறை, நாள் 16—3—1974-ல், 1—4—1970-க்குப் பின் 'பி' பிரிவு பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்டு 21—3—1974-ல் ஒரு வருடத்திற்குக் குறையாமல் பணிக்காலம் நிரம்பப்பெற்ற இடைநிலை ஆசிரியர்கள், இரண்டாம் நிலைத் தமிழ் வித்துவான்கள் மற்றும் தனித்தேர்வு பெற்ற ஆசிரியர்கள் அனைவரின் பணியை 21-3-1974 முதல் வரன்முறைப்படுத்த ஆணையிடப்பட்டது. இவ்வாணை வெளியிடப்படுவதற்கு முன்பு வரை இவ்வாசிரியர்களுக்கு முறைப்படி ஊதிய உயர்வு அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் அரசாணை நிலை எண் 765, கல்வி, நாள் 16—5—1974-ன் படி இவ்வாசிரியர்களின் பணி 21-3-1974 முதல் வரன்முறைப்படுத்தப்பட்ட காரணத்தினால் இவர்கள் 1—1—1975-லிருந்துதான் ஊதிய உயர்வு பெற தகுதி யுடையவர்கள் ஆவார்கள். எனவே இவர்களுக்கு இதற்கு முன்பாக அளிக்கப் பட்ட அதிகப்படி தொகையை திருப்பிக் கொடுக்கும்படி ஆணையிடப்பட்டது.

**திரு. பி. ஆர். தாமஸ்:** தலைவர் அவர்களே, 1971 ஆம் ஆண்டு தொடங்கி நியமனம் பெற்று தொடர்ந்து பணியாற்றி ஆண்டுதோறும் பெறவேண்டிய ஊதிய உயர்வைப் பெற்று வழக்கம்போல் பெற்ற மூன்று, நான்கு ஊதிய உயர் வையும் இழக்கவேண்டிய நிலைமையும், பெற்றவற்றைத் திரும்பக் கட்டவேண்டிய நிலைமையும் உருவாகியிருக்கிறது. ஒழுங்காக, கிரமமாகத் தொடர்ந்து பணி யாற்றி தாங்கள் ஆற்றிய பணிக்காக பெற்ற ஊதிய உயர்வைத் திரும்பக் கேட்பது சரியா? அதைத் தவிர்க்கும் வகையில் மீண்டும் ஒரு அரசாணை வழங்கி திரும்பப் பிடித்தது தவறு என்ற முறையில், பிடித்ததைத் திரும்பக் கொடுக்கும் வகையில், நியமனம் ஆகிய தேதியிலிருந்து வரன்முறைப்படுத்தி அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை நிலை எண் 761, கல்வித்துறை, நாள் 16—5—1970-ல். 'பி' பிரிவிலிருந்து ஆசிரியர்களுக்கு பணி உயர்வு கொடுக்கமுடியாது போகும் பட்சத்தில், அரசுப் பணியில் அந்த இடம் எந்த விதிகளின் அடிப்படையில்





நிரப்பப்படுகிறதோ அவ்விதம் நிலையான பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்று ஆணையிடப்பட்டது. எனவே 1—4—1970-க்குப் பின்பு அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் அனைத்துப் புதிய நியமனங்களும் தமிழ்நாடு கல்விச் சார்புப் பணி விதிகளின் அடிப்படையில் செய்யப்பட்டது. ஆனால் இதற்கு மாறாக முதன்மைக் கல்வி அலுவலர், மற்றும் நியமன அதிகாரிகள், இடைநிலை ஆசிரியர்கள், இதர ஆசிரியர்களுக்கான பணியிடங்களை மாவட்டக் கழக சட்ட விதிகளின்படி நிரப்பினர். மாவட்டக் கழக சட்ட விதிகளிலும் தமிழ்நாடு கல்வி சார்புப் பணி விதிகளிலும் கூறப்பட்ட கல்வித் தகுதிகளில் சிறிது வேறுபாடு காணப்பட்டது. மற்றும் மாவட்டக் கழக சட்ட விதிகளின்படி நியமனத் திற்கு வயது வரம்பு கிடையாது. எனவே கல்வித் தகுதி, மற்றும் வயது வரம்பு சம்பந்தப்பட்ட விதிகளை மாவட்ட கழக சட்ட விதிகளின்படி நியமனம் செய்யப்பட்டவர்களுக்குத் தளர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனவே அந்த வகையில் அரசாணை நிலை எண் 765, கல்வித்துறை, நாள் 16—5—1974-ல் அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் 1—4—1970-க்குப் பின் நியமனம் செய்யப்பட்டு, 21—3—1974-ல் ஒரு வருட பணிக் காலம் நிரம்பப் பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் இரண்டாம் நிலைத் தமிழ் வித்துவான்கள் மற்றும் தனித் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் அனைவரின் சார்பாக, தமிழ்நாடு கல்விச் சார்புப் பணியின் 6, 7 விதிகளைத் தளர்த்தி இவர்களின் பணியை 21-3-1974 முதல் வரன்முறைப்படுத்த ஆணையிடப்பட்டது. இவ்வாணையில் அரசாணை நிலை எண் 42, கல்வித் துறை, நாள் 21—3—1974-ன் படி வரன்முறைப் படுத்தப்பட்ட ஆசிரியர்களும் அடங்குவர். எனவே இவ்வாணையின்படி 21—3—1974-ல் பணி வரன்முறைப்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் 21--3--1974-க்கு முந்தைய தேதி வரை எந்தவிதமான ஊதிய நிலுவையும் பெறத் தகுதி உடையவர்களாக மாட்டார்கள். இதன்படி இவர்கள் 1—1—1975-லிருந்து தான் ஊதிய உயர்வு பெறத் தகுதி உடையவர்கள் ஆவார்கள். எனவே இதற்கு முன்பாக இவர்கள் பெற்ற ஊதிய உயர்வுத் தொகை அனைத்தையும் திரும்பப் பெற ஆணையிடப்பட்டது.

(முற்பகல் 11.10)

**திரு. ஜி. சுவாமிநாதன்:** 1970-ம் ஆண்டுக்குப் பிறகு நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் பொறுத்து, இப்போது தேர்வு ஆணைக்குழுவானது, ஒரு தனித் தேர்வின் மூலமாக, 702 பேரை அவர்கள் முதன்முதலாக நியமிக்கப் பட்ட நாளிலிருந்து அவர்களுடைய பணிக்காலத்தை வரன்முறைப்படுத்தி, அவர்கள் மேற்கொண்டு ஊதிய உயர்வினையும் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போது வினா எழுப்பப்பட்டிருப்பது இடைநிலை ஆசிரியர்கள், இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்கள் பற்றியது. இவர்கள் மாவட்டக் கழகச் சட்டப்படி நியமிக்கப்பட்டவர்கள். எனவே இவர்

களுக்கும் தேர்வு ஆணைக் குழு விதிப்படி விதிவிலக்கு அளித்து ஆணை பிறப்பித்து, அவர்கள் வேலைக்குச் சேர்ந்த நாள் முதல் அவர்களுடைய பணிக் காலம் முழுவதையும் வரன்முறைப்படுத்தி அவர்களுக்கும் ஊதிய உயர்வு கொடுக்க அரசு உத்தரவிடுமா? அண்மையில் பிறப்பித்த உத்தரவின்படி, தற்போது கொடுக்கப்பட்ட சம்பளத்தைத் திரும்பப்பெறுவது என்ற முறையில், ஒவ்வொரு ஆசிரியரிடமிருந்தும் ரூ. 25 முதல் ரூ. 50 வரை பிடிக்கப்பட இருக்கின்றது என்று கூறுகின்றார்கள். அண்மையில் மேலே எழுப்பப் பட்டுள்ள பிரச்சினைகளை அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கிறேன் என்று கூறி யிருக்கின்றார்கள். இதைப் பரிசீலிக்கும் வரையில் அவர்களிடமிருந்து பிடித்தம் எதும் செய்யாமல் இருக்க அரசு உடனடியாக உத்தரவிடுமா? மேலும் ஒரு விதியில் இவர்கள் பஞ்சாயத்து பள்ளிகளில் மூன்றாண்டு காலம் வேலை பார்த்தால், 30 வயதுக்கும் மேலும் வேலையில் நீடிக்கலாம் என்ற விதி யிருக்கிறது. இவர்களில் பெரும்பாலோர் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் வேலை பார்த்துப் பதவி உயர்வு பெற்றவர்கள். எனவே இந்த மூன்றையும் கருத்தில் கொண்டு அவர்களுடைய ஊதியத்திலிருந்து இப்போதைக்கு வசூல் செய்யாமலிருக்க அரசு உடனடியாக உத்தரவிடுமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர் களுடைய யோசனையை நான் கவனத்தில் எடுத்துக் கொள்ளுகிறேன்.

**திரு. பி. ஆர். தாமஸ்:** இந்த நிலை ஒரு நிர்வாகத் தவறு காரணமாக ஏற்பட்டதனால், 1—4--1970-க்குப் பிறகு ஏற்பட்ட பணியிடங் களெல்லாம் 'ஏ' பிரிவினரைச் சாரும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. இதன் காரணமாக 'பி' பிரிவில் நியமனம் பெற்றவர்கள் இப்போது இந்த பாதிப்புக்கு ஆளாகியிருக்கின்றார்கள். எனவே அரசு ஆணை 2535, நாள் 21--12--1977-படி பட்டதாரி ஆசிரியர்கள், அதாவது 1-4-1970 முதல் 3-3-1977 வரையில் நியமிக்கப்பட்டவர்களுக்கெல்லாம் அந்த நாளிலிருந்து ஊதிய உயர்வு கொடுக்க அரசு முன்வந்துள்ளது. ஆனால் நிர்வாகத்தில் ஏற்பட்டதொரு தவறு காரணமாக, ஒரு அரசாணை பிறப்பிக்கப்பட்டு, இப்போது அவர்கள் பாதிப்புக்கு ஆளாகியிருக்கின்றார்கள். இந்த நிலையில், புதியதாக ஆணை ஒன்றினை அரசு பிறப்பித்து, முன்பு பிறப்பித்த ஆணை காரணமாக ஏற்பட்ட தவற்றைத் திருத்தி, இவர்களுக்கு பாதகம் ஏற்படாமலிருக்க அரசு உத்தர விடுமா என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர் களுடைய கருத்தினைப் பரிசீலிக்கலாம்.





**திரு. ஜி. சுவாமிநாதன்:** பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் 1-4-1970 முதல் அவர்களுடைய பணிக்காலம் வரன்முறைப்படுத்தப் படாமல் இருக்கின்றது. அவர்கள் ஊதிய உயர்வு பெறாமல் இருக்கின்றார்கள். இடைநிலை ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஊதிய உயர்வு பெற்று வருகின்றார்கள். ஆனால் இப்போதுள்ள ஆணை, அவர்களுக்குக் கொடுத்த ஊதிய உயர்வினைத் திரும்பப் பெறும் வகையில் அமைந்திருக்கிறது. எனவே இரண்டையும் பரிசீலித்து, பெற்ற பணத்தைத் திரும்பத் தரவேண்டாம் என்ற ஒரு உத்தரவினை உடனடியாக அரசு பிறப்பிக்க வேண்டும். இது ஒன்று. மற்றொன்று, ஏற்கெனவே கொடுக்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு இன்னும் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதற்கான உத்தரவினையும் அரசு பிறப்பிக்க வேண்டும். இந்த உத்தரவினைப் பிறப்பிக்கவில்லை யென்றால், இதனால் ஆசிரியர் களுக்குப் பெருத்த கஷ்டம் ஏற்பட இருக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டி உடனடியாக உத்தரவுகளை அரசு பிறப்பிக்குமா என்பதை அமைச்சர் அவர் களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** சட்டசபையிலேயே உத்தரவிட வேண்டும் என்று விரும்புகின்றார்போல இருக்கின்றது. முன்பே நான் சொல்லி யிருக்கிறேன், இது பற்றிப் பரிசீலிக்கலாம், யோசனை செய்யலாம் என்று.

## *Integrated Urban Development Programme.*

@ * 123 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to bring Madurai Metropolitan areas under the Integrated Urban Development Programme;

(b) if so, the details thereof; and

(c) the stage at which the matter now stands?

## ஒருங்கிணைக்கப்பட்ட நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்

**திரு. கே. எஸ். கணபதி (திரு. டி. சந்தோஷம் சார்பில்):** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை பெருநகர்ப் பகுதிகளை, ஒருங்கிணைக்கப்பட்ட நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கொண்டு வருவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

---

@ 24—2—1978 ஆம் தேதி வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப் பட்டது.

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) இவ்விஷயம் தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) ஆம்.

(இ) ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்படி சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் போல், மதுரை, கோயமுத்தூர் மாநகரங்களுக்கு பெருநகர் வளர்ச்சிக் குழுமங்கள் அமைக்க, நகர்-ஊரமைப்பு இயக்குநர் திட்டம் ஒன்றை அரசுக்கு அனுப்பியுள்ளார். குடிநீர் வசதி, வடிகால்கள், சாலைகள், குடியிருப்புகள் கட்டுதல், பள்ளி, பொது சுகாதாரம் மற்றும் மருத்துவமனைகள் வருவாய் தரக்கூடிய திட்டங்கள் போன்ற முக்கிய பணிகளை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. ஐந்தாண்டு காலத்தில் இத் திட்டங்களை மத்திய அரசு மற்றும் உலகவங்கி உதவியுடன் நிறைவேற்றுவதற்கு மொத்தம் ரூ. 94.79 கோடி செலவாகும். தண்ணீர் வசதி, வடிகால்கள், சாலைகள் போன்ற சில பணிகளை நடப்பு ஆண்டிலும் அதற்கு அடுத்த ஆண்டிலும், அத் திட்டத்தின் முக்கியத் துவத்திற்கு ஏற்ப, வரிசையாகச் செயல்படுத்த மாநில அரசு தேர்ந்தெடுத் துள்ளது. இதற்காகும் மொத்தச் செலவு ரூ. 3.99 கோடியாகும். மதுரைக்கு ரூ. 1.62 கோடி செலவும் கோயமுத்தூருக்கு ரூ. 2.37 கோடி செலவும் ஆகும்.

(உ) இத்திட்டங்களின் ஒப்புதலுக்காக மத்திய அரசுக்கு எழுதப் பட்டுள்ளது.

**திரு. க. அறிவழகன் :** தலைவரவர்களே, ஒருங்கிணைக்கப்பட்ட நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்படி, சென்னைப் பெருநகரில் அமைந்துள்ளதைப் போன்று மதுரைப் பெருநகரிலும் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அமைக்க ஆய்வுக் குழுவினால் ஆய்வு செய்யப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இந்த ஒருங்கிணைக்கப்பட்ட நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் நகர் மன்றங்கள் கொண்டுள்ள எந்தெந்தத் திட்டங்களைத் தன்னகத்தே எடுத்துக் கொள்ளுகின்றது, நகர மன்றங்களுக்குள்ள எந்தெந்த அதிகாரங்களை இந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழே அக்குழுமம் எடுத்துக்கொள்ளுகிறது? இப்படி ஏற்றுக் கொள்ளுவதனால் நகர மன்றங்களுக்கு ஏற்பட்டுள்ள தொல்லைகள், சிரமங்கள் எந்த அளவிற்குக் குறைய இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தனிக்கேள்வி போடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மதுரை நகர மேம்பாட்டுத் திட்டங்களுக்கென மத்திய அரசும் உலக வங்கியும் சேர்ந்து பண ஒதுக்கீட்டினைச் செய்வதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். அந்த மேம்பாட்டுத் திட்டம்பற்றி ஆய்வினை நடத்திட ஒரு நிபுணர் குழு மத்திய அரசிலிருந்து வந்து சென்றதாகவும் தெரிவித்திருக்கின்றார்கள். அந்த நிபுணர் குழுவின் பரிந்துரைகள் என்னென்னவென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** நிபுணர் குழு வந்தது உண்மை. பரிந்துரைகளைக் கொடுத்திருப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால் என்னென்ன பரிந்துரை என்பது தெரியாது.

*Drinking Water Supply Scheme.*

@ * 124 Q.—THIRU V. R. PERIANNAN : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) the stage at which the Drinking Water Sup[illegible] for (i) Kalappanayakkanpatti, (ii) Senthamangalam [illegible] (iii) Nama-giripet Town Panchayats in Senthamangalam [illegible] of Salem District, stands at present; and

(*b*) wherefrom it has been planned to bring water to them?

**குடிநீர் வழங்கும் திட்டம்**

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலம் மாவட்டம், சேந்தமங்கலம் ஒன்றியத்திலுள்ள காளப்ப நாயக்கன்பட்டி (ii) சேந்தமங்கலம், (iii) நாமகிரிப்பேட்டை பேரூராட்சி ஆகியவைகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(இ) அவைகளுக்கு எங்கிருந்து நீர் கொண்டு வரத் திட்டமிடப் பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) சேலம் மாவட்டம், சேந்தமங்கலம் ஒன்றியத்திலுள்ள காளப்ப நாயக்கன்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை பேரூராட்சி ஆகியவைகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையிலுள்ளது.

(இ) (i) காளப்ப நாயக்கன்பட்டி—

கருவட்டார் ஆற்றின் கரையில் ஒரு கிணறு தோண்டி அக்கிணற்றி லிருந்து நீர் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

@ 24—2—1978-ந் தேதி வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.

121943

[1978 பிப்ரவரி 28

(ii) சேந்தமங்கலம்—

பெரியார் ஆற்றிலிருந்து நீர்கொண்டு வரத்திட்டமிடப்பட்டுள்ளது.

(iii) நாமகிரிப்பேட்டை—

கோரையாற்றிலிருந்து நீர்கொண்டு வர இயலுமா என்பது பரிசீலனையிலுள்ளது.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** காளப்பநாயக்கன்பட்டி திட்டத்திற்காக கருவாட்டர் ஆற்றின் கரையில் திறந்த கிணறு ஒன்று தோண்டப்பட்டு அதிலிருந்து நீர் இறைக்கப்படுகிறது என்பது உண்மையா? அந்தத் திட்டம் வெற்றிகரமாக அமைந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு எஸ். இராகவானந்தம் :** கருவட்டார் ஆற்றிலிருந்து நீர் கொண்டுவர இயலுமா என்பதைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். It is under investigation அது பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** கொல்லிமலை அடிப்பகுதியில் கிணறு தோண்டப்பட்டு, இராமநாதபுரம் சேந்தமங்கலம் பகுதிகளுக்கு நீர் கொண்டு வர இயலும் என்று தெரிந்து, அதைப் பரிசீலிப்பதற்காக ரூ. 10 ஆயிரமும் டெப்பாஸிட் செய்தார்கள் அந்த நகராட்சிகள். 'இன்வெஸ்டிகேஷன்' முடிந்துவிட்டது. கிணறும் தோண்டப்பட்டது. ஆனால் என்ன காரணத்தினாலோ இந்த சேந்தமங்கலம் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்படாமலேயே இருக்கிறது. 'இன்வெஸ்டிகேஷன்' முடிந்து, இதற்கு இவ்வளவு செலவாகும் என்று பஞ்சாயத்திடம் சொல்லி, அவர்களும் அதற்கு ஒப்புதல் அளித்து பணத்தையும் கட்டியிருக்கிறார்கள். ஆறு மாத காலம் ஆகிறது. ஆனால் எந்தவிதமான வேலையும் ஆகாமல் இருக்கிறது. என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் :** இது சம்பந்தமாக இரு குடிநீர்க் கிணறுகளை எடுத்து அவற்றைப் படுகையில் குழாய்கள் மூலம் இணைத்து நீரைக் கொண்டுவருவதற்கான திட்டம் இப்போது உருவாகியுள்ளது.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** இது அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. ஒப்புதல் கிடைத்தவுடன் மேற்கொள்ளப்படும்.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** நாமகிரிப்பேட்டை திட்டத்தைப் பொறுத்த மட்டில், 'இன்வெஸ்டிகேஷன்' முடிந்துவிட்டது. அதன் பிறகு பஞ்சாயத்து 20 ஆயிரம் ரூபாய் டெபாஸிட் கட்ட வேண்டும் என்று கோரினார்கள்.



1978 பிப்ரவரி 28]

அதையும் கட்டியாகிவிட்டது. அதற்குப் பிறகு மேற்கொண்டு செயல்படுத்தப்படாமல் இருக்கிறது. ஆனால் அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டங்கள் எல்லாம் இன்வெஸ்டிகேஷனில் இருக்கின்றன என்று சொல்கின்றார்கள். ஆய்வு முடிந்துவிட்டது. ரூ. 50 ஆயிரம் பணமும் கட்டியாகிவிட்டது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

(பிற்பகல் 11-20)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** ஏற்பட்டுவிட்ட சிறிய தவறுக்காக வருந்துகிறேன். இந்தத் திட்டம் ரூ. 54,000 செலவில் நிறைவேற்றப்படுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேற்கொண்டு தேவைப்படும் வேலைகளுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, ஒப்புதல் வழங்கப்பட்டவுடன் இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படும். இந்தத் திட்டம்பற்றி 'இன்வெஸ்டிகேஷன்' முடிந்துவிட்டது. அரசாங்கத்தினுடைய அப்ரூவலும் கிடைத்திருக்கிறது. எனவே இனிமேல் வேலை துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** இராமநாதபுரம்-புதூர் வழியாக சேந்தமங்கலம் குடிநீர்த் திட்டத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அரசும் ஒப்புதல் அளித்துள்ளது என்றும் குறிப்பிட்டார்கள். எனவே இந்த நிதி ஆண்டிலேயே அதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டு, வேலை துவங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால் நிதிநிலை அறிக்கையிலேயே கிராமக் குடிநீர் வசதிபற்றி மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். எந்தக் கிராமத்திலும் குடிநீர்பற்றிய பற்றாக்குறையே இல்லாமல் இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே அரசு இந்தத் திட்டத்தை விரைவுபடுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** குடிநீர் கொடுப்பதற்காக, கிராமங்களை ஆறு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். அதில் முதல் இரண்டு பிரிவுகளுக்கு மட்டுமே இப்போது முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. முதல் பிரிவு என்பது, ஒரு குடியிருப்பிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்குள் குடி தண்ணீரே இல்லாத கிராமங்கள். இரண்டாவது பிரிவென்பது ஒரு குடியிருப்பிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்குள் குடி தண்ணீர் கிடைத்தும் அது குடிப்பதற்கு அருகதை அற்றதாக உள்ள கிராமங்கள் ( Non-Potable )—ஆக இப்படி வகைப்பட்ட கிராமங்களுக்கு மட்டுமே இப்போது முன்னுரிமை வழங்கப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், இது எந்தப் பிரிவின்கீழ் வருகிறது என்று என்னிடத்தில் தகவல் இல்லை. இருந்தாலும், 'இன்வெஸ்டிகேஷன்' முடிந்துவிட்ட காரணத்தால், இதற்குமேல் அந்தப் பேரூராட்சியின்

[1973 பிப்ரவரி 28

நிதியாதாரங்களைப் பொறுத்து அரசாங்கத்திலிருந்து ஆண்டிற்கு இவ்வளவு லட்சம் ரூபாய் பேரூராட்சி தர வேண்டும் என்று அறிவித்திருக்கும், அதைப் பேரூராட்சி மன்றம் ஏற்று செயல்படுத்த முன்வர வேண்டும். காரணம் இந்தத் திட்டத்திற்கு மொத்தம் இவ்வளவு செலவாகும், அதில் பேரூராட்சி இவ்வளவு தொகை செலவிட வேண்டும், ஆண்டொன்றுக்கு இவ்வளவு தர வேண்டுமென்றெல்லாம் அரசாங்கம் பேரூராட்சி மன்றத்தை அறிவுறுத்துகிறது. இதையெல்லாம் ஏற்றுக்கொண்ட பிறகே, திட்டத்தைச் செயல்படுத்தலாம் என்று அறிவிப்பு வரும். இந்த அறிவிப்புக்குப் பிறகே வேலை தொடங்கப்படும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வினா எண். 125.

(உறுப்பினர்கள் திரு. பெரியண்ணன் அவர்களும் திரு. ஆ. பாலசுப்ரமணியம் அவர்களும் இருக்கையிலிருந்து எழுந்து துணை வினாக்களைத் தொடர்ந்து வங்கினர்)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வினாக்களுக்கு அதிக நேரமாகி விட்டது. துணை வினாக்களைக் குறைத்துக் கொண்டால்தான், மற்ற கேள்விக்குப் போக முடியும்.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** நான் மூன்று தனித்தனிக் கேள்விகளை ஒன்றாக இணைத்துக் கேள்வி கேட்டிருக்கிறேன். இது முக்கியமான கேள்வி என்பதால், துணைக் கேள்விகளை அனுமதிக்க வேண்டுகிறேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** சேந்தமங்கலம் முன்னுரிமை கொடுக்கப்பட்ட பிரிவைச் சார்ந்த கிராமமா என்பதை அறிய விரும்புகிறேன். மலைவாழ் மக்கள் மற்றும் ஹரிஜன மக்கள் இருக்கிற பகுதிகளுக்குக் குடிதண்ணீர் வழங்குவதில் முன் உரிமை வழங்கப்படும் என்று அரசு முன்பு அறிவித்திருந்தது அமைச்சர் அவர்களுக்கு நினைவிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல, மலைவாழ் மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்குவதில் முன்னுரிமை ஏதுமில்லை. குடிதண்ணீர் வழங்குவதைப் பொறுத்த வரையில், கிராமங்கள் 6 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதில் முதல் பிரிவில் ஒரு குடியிருப்பிலிருந்து ஒரு கிலோ மீட்டருக்குள் குடி தண்ணீரே இல்லாத கிராமங்கள் அடங்கும். இரண்டாவது பிரிவில் குடியிருப்பிலிருந்து ஒரு கிலோ மீட்டருக்குள் தண்ணீர் கிடைத்தாலும் அந்தத் தண்ணீர் குடிப்பதற்கு அருகதையற்றதாக இருக்கும். மூன்றாவது பிரிவை சார்ந்த கிராமங்களிலிருந்து ஒரு கிலோ மீட்டருக்குள் தண்ணீரும் கிடைக்கும்; அந்தத்



1973 பிப்ரவரி 28]

தண்ணீர் குடிப்பதற்கு ஏற்றதாகவும் இருக்கும்; ஆனால் அந்தக் குடிநீர் ஆண்டு முழுவதும் கிடைக்காது (Not a perennial source) இதில் முதல் இரண்டு பிரிவுகளைச் சார்ந்த கிராமங்களுக்கு மட்டுமே குடிதண்ணீர் வசதி அளிப்பதில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அடுத்து, இந்தத் திட்டம் எந்தப் பிரிவில் வருகிறது என்பதுபற்றித் தகவல் இல்லை.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** சேந்தமங்கலம் எந்தப் பிரிவைச் சார்ந்திருக்கிறது என்றுதான் கேட்டேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அதுபற்றி தகவல் இல்லை.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** காளப்பநாயக்கன்பட்டி திட்டத்தை பொறுத்தவரை, அமைச்சர் அவர்கள் முதலில் 'இன்வெஸ்டிகேஷனில்' இருக்கிறது என்று சொன்னார்கள். இப்போது 'இன்வெஸ்டிகேஷன்' முடிந்து விட்டது என்று குறிப்பிடுகிறார்கள். எனவே அதன் விவரத்தை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** சேலம் மாவட்டத்தில் காளப்ப நாயக்கன்பட்டி ஊராட்சி 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்குப்படி 9,004 மக்களைக் கொண்டதாகும். நடுக்கொம்பை, நாச்சிப்புதூர் ஆகிய இரு வழியில் உள்ள கிராமங்களுக்கும் குடிதண்ணீர் வழங்க மேற்காணும் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் மொத்தம் 10,954 மக்கள் பயனடைவார்கள். கருவட்டாறு ஆற்றின் கரையில் ஒன்றோ அதற்கு மேலோ கிணறுகள் வெட்டி பின்னால் இதிலிருந்து நீர் கொண்டுவந்து வினியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

முன் ஆதார சோதனைத் திட்டத்திற்காக ஏற்கனவே கேட்கப்பட்டுள்ள நிதி ஒதுக்க ரூ. 54,000 அரசாங்கத்திடமிருந்து கிடைத்தவுடன் இந்த முன் ஆதார சோதனைத் திட்டம் தொடங்கப்படும். That is, investigation will commence.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவர் அவர்களே, வினாவே திட்டம் எந்த நிலையில் உள்ளது என்பதாகும். அமைச்சர் அவர்கள் தமது பதிலில் அது பற்றிய தகவல் இல்லை என்கிறார். இது எப்படி சரி என்று புரியவில்லை.

**திரு. ஜார்ஜ் கோமகன் :** ஹரிஜன மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் குடிநீர் வழங்குவதில் முன்உரிமை உண்டா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இது குறித்து தனிக்கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

## Offices of Magazines.

@ * 125 Q.—THIRU NEELA NARAYANAN: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the closure of the Offices of "Kalki" "Gokulam" and "Swarajya" magazines, has been brought the notice of the Government;

(b) if so, whether due prior notice was given to the employ[ees] working in such Offices; and

(c) the steps taken by the Government to reopen them or provide relief to the workers?

### பத்திரிகை அலுவலகங்கள்

**திரு. நீலநாராயணன்:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்[சர்] அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) "கல்கி, கோகுலம், சுயராஜ்யா" ஆகிய பத்திரிக்[கை] அலுவலகங்கள் மூடப்பட்டு இருக்கின்றன என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், இது குறித்து அவைகளில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு முறையான அறிவிப்பு அனுப்பப்பட்டதா ?

(உ) அவைகளை மீண்டும் திறக்கும்படி செய்யவும், இல்லையேல், அத்தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கவும் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் நிறுவனங்கள் மூடப்பட்டதுபற்றி தொழில் தகராறு சட்டம் பிரிவு 12 (3) கீழ் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தின்படி தொழிலாளர்களுக்குக் கிடைக்கவேண்டிய தொகைகள் கொடுக்கப்படுகின்றன.

@ 24—2—1978-ம் தேதி வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்ட



**திரு. நீலநாராயணன்:** இந்த நிறுவனங்களில் பணியாற்றிய தொழிலாளர்கள் அந்த நிறுவனத்தைத் தாங்களே ஏற்று நடத்த வேண்டும் என்றும், அதற்கு அரசாங்கம் அனுமதியும், நிதி வசதியும் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்களா ? அதற்கு அரசு ஒப்புதல் அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** அப்படி அந்தத் தொழிலாளர்கள் கேட்கவில்லை. அவர்கள் சார்ந்துள்ள தொழிற் சங்கத்தின் சார்பாக நான் ஏற்கனவே சொன்னபடி, தொழிற் தகராறு சட்டம் பிரிவு 12 (3)-ன் கீழ் ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டு காம்பல்சேஷன், ஈட்டுத் தொகையும் வாங்கிக் கொண்டார்கள். மொத்தம் பாதிக்கப்பட்ட 70 தொழிலாளர்களில் 40 பேரை திரு. டி. ஆர். ஆர். தாம் நடத்தும் 'அலிபாபா' இதழில் சேர்த்துக் கொண்டுள்ளார். மீதமுள்ள 30 பேரை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கோரி, அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களிடத்திலே மனு கொடுத்து, அது பரிசீலனை செய்யப்பட்டு, அவர்கள் வேலைக்கு அமர்த்தப்படும் வாய்ப்பு உருவாக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** நீண்ட பாரம்பரியம் மிக்க 'கல்கி' பத்திரிக்கை மூடப்பட்டது நிதி வசதி காரணத்தாலா அல்லது தொழிலாளர் தகராறு காரணத்தாலா என்று அறிய விரும்புகிறேன். அதே போல சுதேசமித்திரன் பத்திரிக்கையும் மூடப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிலாளர்களுக்கும் அரசாங்கத்திடம் முறையிட்டுக் கொண்டு, தங்கள் வேலைக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** 300 தொழிலாளர்களுக்குக் குறைவாக உள்ள தொழிற்சாலைகளை மூடுவதற்கு அரசு அனுமதி தேவையில்லை. எனவே அவர்கள் அவைகளைத் தங்கள் இஷ்டப்படி மூடிவிடுகிறார்கள். 50 பேருக்கு மேலிருந்தால் 25 (FFA) பிரிவின் கீழ் அறிவிப்பு கொடுத்தால் போதும். அறிவிப்பைக் கொடுத்துவிட்டு மூடிவிடுகிறார்கள். அது மூடப்பட்டதன் காரணம் 'financial crises' அதாவது பொருளாதார முடக்கம்—பொருளாதார சங்கடம் என்றுதான் கூறுகிறார்கள்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** சுதேசமித்திரன் பத்திரிக்கை மூடப்பட்டதற்கும் இந்தக் காரணம் பொருந்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மூடப்படுகிற எல்லாத் தொழிற்சாலைகளின் சொந்தக்காரர்களும், பத்திரிக்கைக்காரர்களும் இதைத்தான் காரணமாகச் சொல்லுகிறார்கள்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** சொல்லப்படுகிற காரணங்கள் உண்மையானவைதாஞ என்று அரசு ஆராய்கிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அரசு தனக்குள்ள அதிகாரத்திற்குட்பட்டு ஆராய்கிறது. அதாவது within its limitations.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 2. தகவல் கோரல்.

### (1) அரசு ஊழியர் மறியல் போராட்டம் குறித்து.

**திரு. எம். சங்கரலிங்கம் :** மேலவையில், என்.ஜி.ஓ.வினர் போராட்டத்தைப் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்தபோது, அவையின் முன்னவர் அது குறித்து பதிலளிக்கும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்ததும், என்.ஜி.ஓ.வினர் விடுதலை செய்து, பேச்சு வார்த்தை நடத்தி நல்ல சுமுகமான முடிவைக் காண்பார்கள் என்று சொன்ஞர்கள். அவர்கள் விடுதலை செய்யப்பட்டு பேச்சு வார்த்தைகளும் நடந்ததாக இந்த அவையிலே அறிவிக்கப்பட்டது.

ஆனல் இன்றையதினம் செய்தித் தாட்களைப் பார்த்தால் பேச்சு வார்த்தை முறிந்துவிட்டதாகவும் என்.ஜி.ஓ.வினர் தரப்பில் வைக்கப்பட்ட 15 கோரிக்கைகளில் ஒன்றுகூட ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றும், நிதியாதாரம் இல்லாத கோரிக்கைகள்கூட ஒப்புக்கொள்ளப்படவில்லை என்றும், எனவே அவர்களின் போராட்டம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவை நடந்து கொண்டிருக்கும்போது, அதிலும் குறிப்பாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரவேண்டிய முக்கியமுள்ள இந்தப் பிரச்சினையில் அரசாங்கத்தின் சார்பில் விவரம் தெரிவிக்கப்படும் என்று நினைத்தேன். எனவே முதலமைச்சர் அவர்களோ அல்லது முதலமைச்சரின் சார்பில் அமைச்சர்களில் யாரேனும் ஒருவரோ இதைப்பற்றித் தெளிவுபடுத்தியிருக்கலாம். இதைப்பற்றி நான் குறை கூறுவதாக நினைக்கக்கூடாது. பத்திரிக்கையில் வந்த செய்தியை வைத்து, இந்த அவைக்கு உண்மை நிலையை விளக்கி விவரம் தந்திருக்கலாம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



[illegible] 08]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இதைப்பற்றி அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், பேரவையில் அறிவிப்பு கொடுத்த பிறகு இங்கேயும் அவை முன்னவர் முதல்வரின் சார்பில் விவரம் சொல்லப்பட்டு, என்.ஜி.ஓ.வினர் விடுதலை செய்யப்பட்ட செய்தியும் அவைக்குத் தெரிவிக்கப்பட்டது. அதோடு அந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது.

பின் விளைவுகளைப் பற்றி உறுப்பினர் திரு. வே. தங்கப்பாண்டியன் அவர்கள் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதை தகவல் பெறுவதற்காக அனுப்பி வைத்துள்ளேன். அது கிடைத்தபிறகு அந்தத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படும் என்பதை மட்டும் இப்போது தெரிவித்துக் கொள்கிறேன்.

### (2) வினு நேரத்தில் கொடுக்கப்பட்ட ஒரு விடை குறித்து.

(முற்பகல் 11-30)

**திரு. கே. எஸ். கணபதி :** துணைத் தலைவரவர்களே, இதை ஒரு உரிமைப் பிரச்சினையாகக் கூட எடுத்துக்கொள்ளலாம். அவைத் தலைவர் அவர்களின் பாதுகாப்பை நான் வேண்டுகிறேன். 155 வது கேள்வி நேரத்தின் போது, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இந்தச் சட்ட சபையிலே அதைப்பற்றி உத்தரவிட வேண்டும் என்று விரும்புகிருரா என்று சொன்ஞர்கள். அது உறுப்பினர்கள் உள்ளத்தைப் புண்படுத்துவது போல, குத்தலாகப் பேசியது போல, அவமானப் படுத்துவதுபோல இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அந்த வார்த்தை எப்படி உள்ளம் புண்படுகிற அளவுக்கு இருக்கிறது என்பதை விளக்குங்கள்.

**திரு. கே. எஸ். கணபதி :** எதிர்க்கட்சித் தலைவர் சொன்னபோது சொன்ஞர்கள். அது தொடர்பாக நான் ஒரு துணைக் கேள்வி போடும்போது, அரசு உடனடியாக உத்தரவிடுமா என்பதைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறேன் என்று கேட்டேன். அப்போது அமைச்சர் அவர்கள் உடனடியாக இங்கேயே கையெழுத்துப் போட வேண்டுமா என்று சொன்ஞர்கள். இந்த நிலையிலே உறுப்பினர்கள் கேட்பதுபோல உத்தரவு பிறப்பிக்க வேண்டுமா என்று சொன்னதாக நினைக்கிறேன். இது இந்த அவை உறுப்பினர்களுக்கு வருத்தத்தைக் கொடுப்பதற்குரிய வார்த்தைகள் என்று எண்ணுகிறேன். இனிமேல் இதுபோல் ஏற்படாமலிருக்க, மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** என்னுடைய கருத்து, இந்தப் பிரச்சினை ஒரு முக்கியமான பிரச்சினை. ஒவ்வொரு ஆசிரியரிடமிருந்தும் ரூ. 50, ரூ. 80 என்று வசூலாகிக் கொண்டிருக்கிறது. உடனே 'ஸ்டே ஆர்டர்' பிறப்பிக்கப்படுமா என்று கேட்கிறோம். இப்படி மாதாமாதம் சம்பளத்தைப் பிடித்துக்கொள்வதை நிறுத்தவேண்டும் என்பதற்காகத்தான் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அமைச்சர் அவர்கள் அவையிலேயே உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று சொல்லவில்லை. அவையில் உடனடியாக உத்தரவிட வேண்டும் என்று கேட்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இந்தச் சட்ட சபையை பயன்படுத்தி கோரிக்கையைக் கொடுக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு அங்கத்தினர் திரு. கே. எஸ். கணபதி அவர்கள் உள்ளத்தைப் புண்படுத்த வேண்டும் என்ற நோக்கம் எனக்கு நிச்சயமாக இல்லை. மாண்புமிகு அங்கத்தினர் திரு. தாமஸ் அவர்கள் கேட்டார்கள், பிறகு திரு. கணபதி அவர்களும் கேட்டார்கள். இப்படி ஒருவர்பின் ஒருவராக மாற்றி மாற்றி கேட்டார்கள். நான் அப்போதும் சொன்னேன். பரிசீலித்துச் செய்யலாம் என்று சொன்னேன். விரைவாகச் செய்ய வேண்டும் என்று இவர்கள் சொல்லியது, என்னை வற்புறுத்துவதைப் போல இருந்ததால், அப்படிச் சொல்லவேண்டியதாகி விட்டது. அதுதானே தவிர, மாண்புமிகு உறுப்பினர்களைப்பற்றித் தவருகப் பேசவில்லை. அவர்களுடைய மனத்தைப் புண்படுத்த வேண்டும் என்று நான் விரும்பவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, என் பாதுகாப்பு மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தேவையில்லை என்று நினைக்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** இப்படி மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு கொடுத்திருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் அமைச்சர் அவர்கள் இப்படி வருத்தத்தைத் தெரிவித்திருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, அதை விட இப்போது எனக்கே பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறேன். நான் என் வருத்தத்தைச் சொன்ன பிறகும் அவர்கள் சொல்லும் வார்த்தைகள் மோசமானதாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## 8. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### கல்லூரி ஆசிரியர்கள் வரவிருக்கும் தேர்வுகளைப் புறக்கணிக்கப் போவதாக அச்சுறுத்தி இருப்பதைக் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் கே. எஸ். கணபதி அவர்களும், ஏ. ஆர். தாமோதரன் அவர்களும் ஒரே மாதிரியான ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையைப் பற்றி இந்த அவையை ஒத்திவைப்பதற்குரிய காரணங்களைச் சுருக்கமாக விளக்கிக் கூற வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. எஸ். கணபதி:** துணைத் தலைவரவர்களே, கடந்த 3, 4 மாத காலமாக கல்லூரிகளில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற ஆசிரியர்கள் அவர்களுடைய பல்வேறு குறைகளை முன் வைத்திருக்கிறார்கள். அரசாங்கம் அதற்கு ஒப்புதல் அளிக்காத என்ற நிலைமையில் அவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பொறுப்பாளருடன் பேச்சு வார்த்தை நடத்துவதாகவும், அந்தப் பேச்சிலே சமூகமான முறையில் தீர்வு காண முடியும் என்ற வகையிலேயும் கருத்துக்களை இந்த அவையிலே சொன்னார். இதுவரையில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும், தங்களுடைய 11 கோரிக்கைகளைப்பற்றி உடனடியாக அரசு தீர்வு காணவிட்டால், போராட்டம் தொடங்குவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். போராட்டம் என்று சொல்லும்போது, கல்லூரி ஆசிரியர்கள் முதலில் "பாய்காட்டிங் ஆப் எக்சாமினேஷன்ஸ்" என்று தொடங்கி வைக்க இருப்பதாகத் தெரிகிறது. அதைத் தொடர்ந்து முதல்படியாக 50 பேர் உண்ணாவிரதம் இருக்கப்போவதாகவும், அதன் பின் தொடர்ந்து 50, 50 பேர்களாகத் தொடர் உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் சொல்கிறார்கள். அவர்கள் கொடுத்திருப்பதில் பல நியாயமான கோரிக்கைகள் இருக்கின்றன. உண்ணாவிரதம் இருப்பது மாத்திரமல்ல, கல்லூரி மாணவர்கள், பகுதி வகுப்புத் தேர்வுகள் மார்ச் மாதம் 11 ஆம் நாள் எழுத இருக்கிறார்கள். அது இன்னும் 10 நாளில் நடக்க இருக்கிறது. அந்தத் தேர்வுகளுக்கு ஆசிரியர்கள் ஒத்துழைக்கா விட்டால், மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள். இந்தச் சூழ்நிலையில் இன்னும் பரவலாக ஏற்பட இருக்கிறது. அந்த ஆசிரியர்கள் குறைகளில் பல நியாயமான குறைகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களைச் சென்ற கூட்டத் தொடரிலேயே கேட்டேன். ஆசிரியர்கள் நேரடியாக ஊதியம் பெற வேண்டும் என்று சொல்கின்றார்கள். அந்த 11 கோரிக்கைகளிலே அது ஒரு முக்கியமான கோரிக்கை என்று சொன்னார்கள். பதில் சொல்லும்போது, குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்குத் தக்க நடவடிக்கை

எடுக்கலாம் என்று சொன்னார்கள். மதுரை மாவட்டத்திலே உத்தமபாளையம் என்ற ஊரில் உள்ள கல்லூரியில் ஆசிரியர்களுக்கு ஆறு மாத காலமாக ஊதியமே தாராமல் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது உண்ணாவிரதம் இருப்பதாக ஆசிரியர்கள் அறிவித்திருக்கிறார்கள். அவர்கள் ஊதியமே கிடைக்காததால் இப்போதே உண்ணா நோன்புதான் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எங்கெல்லாம் கடன் வாங்க முடியுமோ அங்கே வாங்கி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது கடைக்காரர்கள்கூட அவர்களுக்குக் கடன் தர மாட்டார்கள் என்ற நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் போராட்டத்தில் உண்ணாவிரதம் இருப்பதாகச் சொன்னாலும், அவர்கள் இப்போது உண்ணா நோன்புதான் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்ற அடிப்படையிலேதான் நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அது மாத்திரமல்ல. 10 பிளஸ் 2 பிளஸ் 3 என்று புதிய திட்டம் வருகிறது. இப்போது 12,216 ஆசிரியர்கள் பள்ளிகளிலே பணியில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படி திட்டம் வரும்போது, கல்லூரிகளிலே உள்ள ஆசிரியர்கள் 5,000 பேருக்கு வேலை வாய்ப்பை இழக்கின்ற நிலைமைகள் ஏற்படும் என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கும்போது, ஆசிரியர்களுக்கு எப்படி பணிப் பாதுகாப்பு கொடுக்கப்படும் என்பது தெரியவில்லை. இருக்கின்ற 1,90,000 மாணவர்களில் கிட்டத்தட்ட 85,000 மாணவர்கள் குறைத்து விட்ட நேரத்தில், 1979 ஜூன் மாதத்தில் எப்படி பணிப் பாதுகாப்புக் கொடுக்க முடியும் என்று தெரியவில்லை. அப்போது கிட்டத்தட்ட 1,15,000 மாணவர்கள்தான் இருப்பார்கள். ஆசிரியர்களுக்குப் பணிப்பாதுகாப்பு என்று சொல்லும்போது, அது எப்படிக் கொடுக்கப்படும்? அவர்கள் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டுவிட்டால், நிச்சயமாக அவர்களுடைய சூழ்நிலை மிகவும் மோசமாக ஆகிவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அங்கத்தினர் அவர்களை இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் எப்படி முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப்பற்றிச் சொல்லும்படி கேட்டேன். விஷயம் முழுவதையுமே சொல்லிவிட்டார்கள் என்று நினைக்கிறேன். விளக்கம் ரொம்ப அகலமாகவே கொடுத்துவிட்டார்கள்.

திரு. கே. எஸ். கணபதி: இது அடிப்படையான விஷயமாக இருக்கிறது. தலைவர் அவர்கள் விஷயம் அகலமாக இருக்கிறது என்றதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன், பாராட்டுகிறேன். இந்தப் பிரச்சினை



யின் தலைவர் அவர்கள் கூட தலையிட்டு ஆசிரியர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் நான் இவ்வளவு சொல்லுகிறேன்.

1—1—1977 முதல் ஆசிரியர்களுக்கு பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரைத்துள்ள ஊதியம் கொடுக்க வேண்டும் என்று கேட்கப்படுகிறது. இதை மாநில அரசு நிறைவேற்றவில்லை. 80 சதவிகிதம் நடுவண் அரசு கொடுக்கிறது. மாநில அரசு 20 சதவிகிதம் கொடுக்க வேண்டும். அந்த 20 சத விகிதம் இந்த அரசால் கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இந்த 20 சத விகிதத்தை வேண்டுமானால் எங்களுக்கு உடனடியாகத் தர வேண்டாம் என்றுதான் சொல்லுகிறோம். ஓய்வு பெறும்போது கொடுங்கள் அல்லது பாண்டாகக் கொடுங்கள் என்றுதான் சொல்கிறேன். நடுவண் அரசிலிருந்து கிடைக்கும் அந்த 80 சத விகிதத் தொகையை நாம் ஏன் இழக்க வேண்டும், அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட குறைபாடுகளை எல்லாம் பரிசீலித்து, தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும், நல்ல தீர்வுகளைக் காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, இவ்வரசு பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரைத்த ஊதிய விகிதங்களை அமல்படுத்துவதிலுள்ள பல்வேறு நிலைகளை விவரமாக ஆய்ந்தறிந்த பின்னர் கல்லூரி மற்றும் பல்கலைக் கழக ஆசிரியர்களின் ஊதியங்களை மாற்றியமைத்து 21—9—1977 அன்று ஆணைகள் பிறப்பித்துள்ளது. இவ்வாணைகளின்படி திருந்திய ஊதிய விகிதம் 1—4—1976 முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும். ஆயின் இதற்கான பணப்பயன் 1—1—1977 முதல் ஆசிரியர்கட்குக் கிட்டும். பின்னர் பயிற்றுநர் மற்றும் விளக்குநர்கள் விடுத்த கோரிக்கைகளை ஏற்று இவ்வரசு தமது ஆணை எண் 2659 கல்வி நாள் 28-12-1977-இல் திருந்திய ஊதிய விகிதங்களை அமுல்படுத்துவதில் பட்ட மேற்படிப்பு கல்வித் தகுதியும் 1—12—1977 அன்று 5 ஆண்டுகள் பணி நிறைவெய்தியுள்ள பயிற்றுநர் மற்றும் விளக்குநர்கள் உதவிப் பேராசிரியர்களாக நியமிக்கப் பெறுவர் என்ற ஆணையையும் வழங்கியுள்ளது.

பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம், மற்றும் மதுரை பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் ஆகியவைகள் பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரைத்துள்ள ஊதிய விகிதங்களை 1—1—1973 முதல் நடைமுறைக்குக் கொணர்தல் வேண்டுமென்று கோரி வருகின்றனர். தற்பொழுதுள்ள நிதிப் பற்றாக்குறை நிலையினால் 1—1—1973 முதல் திருந்திய ஊதிய விகிதங்களை நடைமுறைக்குக் கொணர இயலாத நிலையில் அரசு உள்ளது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1978 பிப்ரவரி 28

தற்பொழுது கல்லூரி ஆசிரியர் சங்கக் கூட்டு நடவடிக்கைக் குழு விடுத்துள்ள கோரிக்கைகளை அரசு மிக்க கவனத்துடன் பரிசீலித்து வருகிறது. மேலும் கல்லூரி மற்றும் பல்கலைக் கழக ஆசிரியர்களது முறையீடுகள் குறித்து அரசு இதுகாறும் பரிவுடன் பரிசீலித்து வந்துள்ளது. இனியும் அவர்களது குறைகளைப் போக்க ஆவன செய்ய வேண்டுமென்ற உறுதியும் பூண்டுள்ளது.

1977 டிசம்பர் திங்களில் மதுரைப் பல்கலைக் கழக ஆசிரியர்களின் தேர்வுப் பணி புறக்கணிப்பு நடவடிக்கைகளினால் மாணவர்கட்கு எண்ணிலடங்கா இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. இதனைக் கருத்தில் கொண்டும், ஆசிரியர்களின் இதர கோரிக்கைகள் அரசினரின் பரிசீலனையில் இருந்து வருவதாலும் தேர்வுப் புறக்கணிப்பினால் மாணவர் மற்றும் பெற்றோர்கட்கு ஏற்படும் இடர்ப்பாடுகளைத் தவிர்க்கும் பொருட்டும் கல்லூரி மற்றும் பல்கலைக் கழக ஆசிரியர்கள் தமது தேர்வுப் பணியைப் புறக்கணிப்பது என்ற முடிவினைக் கைவிட்டு, வரும் தேர்வுகள் சிறப்பான முறையில் நடைபெற ஒத்துழைப்பு நல்குவர் என்று அரசு நம்பிக்கை கொண்டுள்ளது.

திரு கே. எஸ். கணபதி : துணைத் தலைவரவர்களே, ஆசிரியர்கள் போராட்டத்தை முன் வைத்திருக்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : நீங்கள் கேட்கலாம். ஆனால் அந்தத் தீர்மானத்தை நான் இங்கு அனுமதித்தால்தான், அதைப்பற்றிப் பிரச்சினை எழுப்ப முடியும். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இந்த அவை நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதி, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.

(முற்பகல் 11-40)

4. அறிவிப்பு.

அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இன்று (28-2-1978) காலை 10 மணிக்குக் கூடிய அலுவல் ஆய்வுக் குழு கீழ்க்கண்டவாறு முடிவு செய்துள்ளது.

மேலவைக் கூட்டம் 2—3—1978 வரை நடைபெறும். மார்ச் 3 முதல் 14 ஆம் தேதி வரை கூட்டம் இல்லை.



15—3—1978 முதல் 25—3—1978 வரை கொள்கை விளக்கக் குறிப்புகள் விவாதிப்பதற்காகக் கூடும்.

15—3—1978 }
16—3—1978 } கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம்.

17—3—1978 வேளாண்மை மற்றும் பாசனம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள்மீது விவாதம்.

மேலவை வழக்கம்போல் காலை 10-30 மணி முதல் பகல் 1-30 மணிவரை கூடும்.

5. கவன ஈர்ப்பு.

அருப்புக்கோட்டை தொகுதியில் பாளச்சி ரெவின்யூ பிர்க்காவில் ராக்ஷச குழாய் கிணறுகள் அமைப்பதால் விவசாயக் கிணறுகளில் நீர் மட்டம் குறையக்கூடிய அபாயத்தால் விவசாயிகள் ஈடுபட்டுள்ள மறியல் போராட்டம் குறித்து.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் பாளச்சி ரெவின்யூ பிர்க்காவில் சுமார் ஒரு கோடி ரூபாய் திட்டத்தில் ராக்ஷச குழாய் கிணறுகள் ஆறு இடங்களில் அமைத்து குழாய்கள் மூலம் வேறு தாலுகாவிலுள்ள யூனியன் பகுதிகளுக்கு குடி தண்ணீர் வசதி செய்ய திட்டமிட்டுள்ளதால், இந்தப் பகுதிகள் தங்கள் விவசாயக் கிணறுகளில் நீர் மட்டம் குறைந்து, பஞ்சப் பகுதியாக மாறிவிடும் என அஞ்சி, விவசாயிகள் மறியல் நாளடைவில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதைக் குறித்து"

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

கடலாடி, சாயல்குடி, மற்றுமுள்ள 82 கிராமங்களுக்கும் ரூ. 101 இலட்சங்கள் செலவில் குடிநீர் வழங்குவதற்கான ஓர் ஒருங்கிணைந்த குடிநீர் திட்டத்தின் உத்தேச மதிப்பீடு (outline proposal) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டது. குடிநீர் வழங்கப்படவேண்டிய இடத்தில் [illegible] யையும், கடலாடிக்கு இருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் [illegible]

[திரு. எஸ். இராகவானந்தம்] [1978 பிப்ரவரி 28

அருகே ஓடும் மலட்டார் நதியையும் நீர் ஆதாரமாக (Source) கொள்வது சாத்தியமில்லை என்பது விரிவான ஆய்விற்குப் பின்னர் புலனாகியது. ஆகவே அருப்புக்கோட்டை வட்டத்தில் இருக்கும் கிழ்குடி கிராமத்தில் இருந்து நீர் கொண்டு செல்ல உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவ்விடத்தில் மொத்தம் 2,475 யூனிட்டுகள் நிலத்தடி நீர் ( Ground water ) இருப்பதாக கணக்கிடப் பட்டுள்ளது. இருக்கின்ற மொத்த நிலத்தடி நீர் 2,475 யூனிட்டுகளும் பயன் படுத்தப்படும் விதம் பின்வருமாறு :—

| | யூனிட்டுகள் |
|---|---|
| பயன்படுத்தப்படும் மொத்த நீர் அளவு | 1,500 |
| நீர்பாசனத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நீரின் அளவு. | 516 |
| பயன்படுத்துவதற்காக எஞ்சியுள்ள நீரின் அளவு | 459 |
| ஆக மொத்தம் | 2,475 |

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் உத்தேசிக்கப்பட்டுள்ள குடிநீர் திட்டத்தின் இறுதி கட்டத்தில் ஆண்டு ஒன்றுக்குத் தேவைப்படும் நீரின் அளவு, நாளொன்றுக்கு 4 இலட்ச காலன்கள் விதம் கணக்கிட்டால் 45 யூனிட்டு களுக்கு சமமான நிலத்தடி நீரே ஆகும் என தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார். இது எஞ்சியுள்ள மொத்த நிலத்தடி நீரின் அளவில் 10 சதவிகிதம் ஆகும். ஆதலால், இந்த அளவு நிலத்தடி நீரானது குடிநீர் வழங்கும் பணிக்காக ஒதுக்கப்படலாம். மேலும், ஆறு ஆழ்துளைக் கிணறுக்கும் சராசரி 60 மீட்டர்கள் அல்லது 200 அடி ஆழத்திற்குத்தான் தோண்டப்படும் என்றும் தெரிவித்துள்ளார். நிலத்தடி நீரின் அளவு ( (Ground Water) ) சராசரி 8 மீட்டர் அளவு நீர் மட்டம் இருந்தால், அத்தகைய இடங்களில் மேற்கூறிய ஆழத்திற்குத் தோண் டப்படும் துளைக் கிணற்றினால் அருகே உள்ள கிணற்று நீரில் நேரக்கூடிய ஊடுருவல் ஏறக்குறைய 100 மீட்டர் அளவுதான் இருக்கும். மேலும் இது நிலத்தடி நீரின் ஊற்றுத் தன்மையையும் பொறுத்ததாகும். இதைத் தவிர ஆழ்துளைக் கிணற்றில் நீர் இறைக்கும் அளவு நிமிடத்திற்கு 50 காலன்கள் விதமாகக் குறைத்துக் கொ[illegible]ட்டிருக்கிறது. ஆகவே, ஆழ்துளைக் கிணறு களுக்கு அருகே உள்ள கி[illegible] நீரில் ஊடுருவல் ஏதும் இருக்காது.



1978 பிப்ரவரி 22] [திரு. எஸ். இராகவானந்தம்]

மேற்கூறிய நிலையினால், கடலாடி, சாயல்குடி மற்றும் இதர 82 கிராமங் களுக்கு குடிநீர் வழங்குவதற்காகப் பாளச்சி ரெவின்யூ பிர்க்காவில் தோண்டப் படும் 6 ஆழ்துளைக் கிணறுகளினால், அருப்புக்கோட்டை வட்டத்தில் உள்ள விவசாயிகளின் நீர்ப் பாசன வசதிகள் பாதிக்கப்பட்டது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : துணைத் தலைவரவர்களே, தங்கள் அனுமதி யோடு, மாண்புமிகு அமைச்சரவர்களை இரண்டு வினாக்களுக்கு விளக்கம் கேட்க விரும்புகிறேன். ஏற்கனவே இதுபற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்கம் கூறியிருக்கிறார்கள். விவசாயிகளுக்குப் பாதுகாப்பு தேவை. இப்போது நிரந்தரமான குடிநீர்த் திட்டம் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் செலவில் செய்யப்படுகிறது. விவசாயிகள், விவசாயத்திற்காகத் தங்கள் கிணறுகளை விஸ்தரிக்கலாம். குடிநீர் வழங்கும் திட்டத்தால், அவர்கள் தங்கள் பாசன வசதியை விஸ்தரிக்க முடியாமல் போகிறது. அவர்களுக்கு எந்தவித பாதக மும் ஏற்படாதென்பதற்கு உத்தரவாதம் வேண்டும். ஏற்கனவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது, நிபுணர்களின் முடிவுப்படிதான் தொடர்ந்திருக்கிறார் களென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அது குறித்து 90 விவசாயிகள் போராட்டம் நடத்தி, மறியல் செய்து, சிறைச் சாலைக்குப் போயிருக்கிறார்கள். அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. அந்த வழக்குகள் எந்த நிலையில் உள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நிறுத்தி வைக்க வேண்டு மென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டது உண்மை. நிறுத்தி வைக்கப் படுமென்று கூறவில்லை. அதன் சார்பாக விவசாயப் பிரதிநிதிகள் என்னிடத்தில் வந்து பேசினார்கள். இரண்டு முறை கண்டார்கள். இந்தத் தண்ணீரைக் கொண்டு செல்வதால், விவசாயத்திற்குக் கொடுக்கக்கூடிய தண்ணீர் குறைந்து விடுமென்று அஞ்சினார்கள். ஆனால் அவர்கள் நிபுணர்களல்லர். நானும் நிபுணனல்ல, அதை அவர்களிடத்தில் சொல்லி, மீண்டும் 21 ஆம் தேதி வாருங்கள் ; நிபுணர்களுடன் கலந்து பேசி ஒரு முடிவெடுக்கலாமென்று சொன்னேன். அவர்கள் வரவில்லை என்று இரண்டு, மூன்று தினங்களுக்கு முன் சொன்னேன். அதையேதான் இப்போதும் சொல்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : குழாய்க் கிணறுகளைத் தோண்டுவதன் காரணமாக 90 விவசாயிகள் மறியலில் ஈடுபட்டு, இப்போது சிறைச்சாலையில் இருக்கிறார்கள். அதுதான் மிக முக்கியமான பிரச்சினை. அவர்களை விடுதலை செய்து, வழக்கை அரசு வாபஸ் பெறுமா?

[1978 பிப்ரவரி 28

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அதைப்பற்றிய முடிவெடுக்க வேண்டிய அமைச்சர் தகுந்த முடிவெடுப்பார்கள்.

6. 1978-79 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொதுவிவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : திரு. ஆ. பாலசுப்ரமணியம்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : மேலவை துணைத் தலைவரவர்களே, 1978-79 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை. . .

(திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் எழுந்தார்).

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவர் பேசட்டும். அவரை மாற்றுத் தலைவராக உட்காரவைத்துவிட்டு, உங்களைப் பேச அனுமதிக்கிறேன். அடுத்து நீங்கள் பேசலாம்.

* திரு. ஆ. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1978-79 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை குறித்த விவாதத்திலே கலந்து கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நிதிநிலை அறிக்கையின் முதல் பக்கத்திலே, மிக அழகான வார்த்தைகளாலே நிதியமைச்சரவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். "கடந்த அக்டோபர், நவம்பர் மாதங்களில் இயற்கையின் கொடுமை, கடும் புயலாய், பெரும் வெள்ளமாய், தொடர் மழையாய் தமிழகத்தைத் தாக்கியது. இந்தத் தாக்குதலை உறுதியுடனும் துணிவுடனும் நாம் சமாளித்திருக்கிறோம்" என்று நிதிநிலை அறிக்கையில் நிதியமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எங்கள் சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கடும் மழைக்கும், கடும் புயலுக்கும் உள்ளான பகுதி 250 ஏக்கர்களாகும். கொல்லி மலையில் பெய்த பெரு மழையால் அந்த 250 ஏக்கர்களில் பெரு வெள்ளம் ஏற்பட்டு, கிணறுகளும், நிலங்களும் மண்ணால் தூர்ந்துபோய்விட்டன. மின்சார மோட்டார்கள் தண்ணீரில் மூழ்கடிக்கப்பட்டன. நெற் பயிர்கள் சேதமடைந்துவிட்டன. விவசாயிகளுக்கு உண்ண உணவில்லை. கால்நடைகளுக்குப் புல் இல்லை. அந்த அளவுக்கு மண் மேடிட்டுவிட்டது. இது குறித்து மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்குத் தந்தி அனுப்பினேன். உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். இதற்கு முன்பு ஒரு மரபு இருந்தது. சட்ட மேலவை, பேரவை உறுப்பினர்கள் ஒரு அவசரப் பிரச்சினை குறித்து தமிழக முதல்வருக்கோ, பிற அமைச்சர்களுக்கோ தந்தி கொடுத்தால், ஒரு





கடிதம் எழுதி அனுப்பினால், உடனடியாக பதில் வரும். அந்த பதிலில் உங்களுடைய கோரிக்கை இன்ன அலுவலகத்திற்கு அனுப்பியிருக்கிறேன்— It is for necessary action என்று இருக்கும். அதற்குப் பின்னால் அதை வைத்துக்கொண்டு அந்த அலுவலர்களை நாங்கள் போய்ப் பார்ப்போம். 250 ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்டவர்கள் எல்லாம் பெரும் பட்டாதாரர்கள் அல்ல, மிட்டா மிராசுதாரர்கள் அல்ல. சாதாரணமான ஏழை குடியானவர்கள். விவசாயம் செய்து ஜீவிக்கக் கூடிய சிறு விவசாயிகள். இது குறித்து முதலமைச்சருக்கு இரண்டு தந்திகள் கொடுத்திருக்கிறேன். ஆனால் இதுவரையில் எந்தவிதமான பதிலும் இல்லை. ஜனவரி மாதத்தில் மாண்புமிகு மேலவைத் தலைவரின் அறையில் சந்தித்து ஒரு விண்ணப்பத்தைக் கொடுத்து, அதைப் பரிவுடன் கவனிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். ஆனால் இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. இது குறித்து ஒரு பதில் கூட வரவில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்ளுகிறேன். அந்தப் பகுதியிலே இருக்கக் கூடியவர்கள் வெள்ளத்தால், பெருமழையால் பாதிக்கப்பட்டு, மிகவும் மோசமான நிலையில் வாழ முடியாமல் இருக்கிறார்கள் என்று எடுத்துச் சொல்லியும் கூட, இது நாள் வரை பதில் வரவில்லை. அதோடு மட்டுமல்ல, இது குறித்து நான் பல அதிகாரிகளைப் பல முறை கேட்டிருக்கிறேன். சேலம் மாவட்டக் கலெக்டர் அவர்களைச் சந்தித்து 'ஏன் இதுவரையில் செய்யப்படவில்லை?' என்று கேட்டபோது, 'சாங்ஷனுக்காக அரசுக்கு எழுதியிருக்கிறேன். இதுவரை தகவல் ஒன்றும் வரவில்லை' என்று சொன்னார்கள். அங்கு பார்க்க வந்த அதிகாரிகளுக்காக ஆன பெட்ரோல் செலவைக் கொடுத்திருந்தால் கூட மண் மேடிட்ட அந்த நிலங்களைச் சீர் செய்திருக்கலாம். ஆனால் இதுவரையிலும் எந்தவிதமான வேலையும் நடக்கவில்லை. இது குறித்து மாண்புமிகு முதலமைச்சரிடம் மட்டுமல்ல, எல்லா அமைச்சர்களிடமும், விவசாய அமைச்சர், போக்குவரத்து அமைச்சர், இந்த அவையின் முன்னவர் ஆகியோரிடத்தில் சொல்லியும், இது வரையிலும் எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. இப்போது கூட இந்த மன்றத்திலே பேசுவதால், நாளையே வேலை நடக்கும் என்ற நம்பிக்கை எனக்கில்லை. நடக்காது என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். இருந்தாலும் இக்கருத்துக்களைப் பத்திரிகையின் வாயிலாகப் பார்க்கிற அந்தப் பகுதி மக்கள் நம் பகுதியைப்பற்றி எடுத்துச் சொல்லுகிறாரே என்று ஒரு ஆறுதலை பெறுவார்கள். இது குறித்து சென்ற சட்ட மன்றக் கூட்டத்திலேகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருந்தபோதே, பேசியிருக்கிறேன். இவ்வளவு நாள் ஆகியும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை மிகவும் வேதனையோடு இந்த மன்றத்திலே தலைவரின் வாயிலாகத் தெரிவிக்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில் 16 புல்டோசர்கள் இருக்கின்றன. அதிலே இரண்டு புல்டோசர்களைக் கொடுத்து, அங்கே இருக்கிற மண் மேடிட்ட நிலங்களைச் சீர் செய்து தாருங்கள். அங்கே நீர் வளம் இருக்கிறது. ஆகவே சீர் செய்து தந்தால், விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்குவார்கள் என்று கேட்டிருக்கிறேன். சாங்ஷன் செய்யவில்லை, சாங்ஷன் செய்யவில்லை என்றுதான் அதிகாரிகள் சொல்லுகிறார்கள்.

(முற்பகல் 11.50)

கொல்லி மலைப் பகுதியில் ஆறு தன்னுடைய போக்கை விட்டுவிட்டு, விளை நிலத்திலே போய்க் கொண்டிருக்கிறது. மிகவும் சிறு விவசாயிகள், அதுவும் கடன் தொல்லையில் இருப்பவர்கள் எப்படி அதைச் சீர்படுத்த முடியும்? வாயுறையில் என்ன சொல்லுகிறார்கள்? சிறு விவசாயிகள் 2 ஏக்கர் நஞ்சை நிலத்திற்கும், 5 ஏக்கர் புஞ்சை நிலத்திற்கும் குறைவாக இருந்தால் அரசே சீர்படுத்தித் தரும் என்று சொல்லுகிறார்கள். 5 ஏக்கருக்கு மேல் வைத்திருக்கும் நிலச்சுவாந்தாரர்களுக்கு 50 சதவீதம் மானியமாகத் தருவது என்றும் அறிவித்திருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், கரும்புப் பயிர், வாழைப் பயிர், வெற்றிலைப் பயிர் ஆகியவற்றைப் பயிரிடுபவர்களுக்கு அழிவு ஏற்பட்டிருந்தால், நஷ்ட ஈடாக ஏக்கர் ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் தருகிறோம், அதை வைத்துக்கொண்டு உற்பத்தி செய்யலாம் என்று சொன்னார்கள். இது வரையிலே சேலம் மாவட்டத்திலே, நாமக்கல் தாலுக்காவில் யாராவது ஒரு விவசாயிக்கு இந்த 100 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் அந்தப் பகுதியிலே இந்த நிவாரணம் இதுவரையிலும் அளிக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான்.

அடுத்ததாக, நியாய விலைக் கடைகளைப்பற்றிச் சொன்னார்கள். வருவாய் கிராமத்தில் எல்லா இடத்திலும் நியாய விலைக் கடைகளை ஏற்படுத்துகிறோம் என்று சொன்னார்கள். இன்றைக்கு அமைச்சராக இருக்கக் கூடியவர்கள் என்று முன்பு சொல்வார்கள். "வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது" என்று நான் சொல்லுகிறேன், இன்றைக்கு நம்முடைய மாநிலத்திலே, தென் பகுதிகள் வளர்கின்றன, வட பகுதிகள் தேய்கின்றன. சேலம் மாவட்டத்தில்தான் மலை வாழ் மக்கள் பகுதிகள் இருக்கின்றன. அங்கே நியாய விலைக் கடைகளைத் திறப்பது பற்றி ஒரு வரி கூட இந்த நிதிநிலை அறிக்கையிலே இல்லை. நியாய விலைக் கடைகளைத் திறப்பதிலே, எங்கள் மாவட்டம் புறக்கணிக்கப்படுவதைக் காட்சியைத்தான் காண முடிகிறது. அந்தப் பகுதியிலே சாதாரண ஏழை எளிய மக்கள், கடுமையாக உழைத்து விவசாயம் செய்யக் கூடிய மக்கள்





இருக்கிறார்கள். அவர்கள் வாழ்கிற வகையில் இந்த நிதிநிலை அறிக்கையிலே எதுவும் குறிப்பிடாதது, வருத்தம் தரக் கூடியதாகவும், வேதனையளிப்பதாகவும் இருக்கிறது.

அடுத்ததாக, மின்சாரத் துறையைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு மின் இணைப்புக் கொடுப்பது என்பது சாதாரண காரியமல்ல. பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வேண்டுமென்று இரண்டு இலட்சம் பேர்கள் மனுக் கொடுத்திருக்கிறார்கள். அந்த இரண்டு இலட்சம் பேர்களுக்கும் மின் இணைப்பு கொடுக்க முடியுமா என்றால், முடியாது. 35 ஆயிரம் பேர்களுக்குத்தான் கொடுக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிலேயும் சில சங்கடங்கள் இருக்கின்றன. ஒரு கதை கூட சொல்லுவார்கள். புத்தர் பெருமானிடம் போய் ஒரு தாய் கேட்டாராம், "நீங்கள் பெரிய மகான். என்னுடைய குழந்தை இறந்துவிட்டது. அவனை நீங்கள்தான் எழுப்ப வேண்டும்" என்று. அதற்கு அவர், "இறப்பு இல்லாத வீட்டிலே போய் திருநீறு வாங்கி வா. நான் எழுப்பி விடுகிறேன்" என்று சொன்னாராம். அந்தத் தாயும் வீடு வீடாக அலைந்து கிடைக்காமல் திரும்பினாராம். அதைப் போலவேதான் 35,000 பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கிறோம் என்று சொல்லி விட்டு, அதிலேயும் ஒரு சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதாவது நிலத்தடி நீர் சான்றிதழ் வாங்கி வர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதிலேயிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்ட ஏரியாக்கள் இருக்கின்றன. சொல்லப் போனால், சேலம் மாவட்டத்தில் மோகனூர் யூனியனுக்கு இந்தச் சான்றிதழ் வேண்டியதில்லை. கொல்லிமலை ஒன்றியத்திற்கும் வேண்டியதில்லை. அப்படிப்பட்ட பகுதியிலே உள்ள விவசாயிகளுக்கு மின் இணைப்புத் தாருங்கள் என்று கேட்டால், ஒரு கிணற்றுக்கும் மற்றொரு கிணற்றுக்கும் இடையிலே 750 அடி தூரம் இருக்க வேண்டும், ஆகையால் கிடையாது என்று சொல்லிவிடுகிறார்கள். பெரிய நிலச்சுவாந்தாரராக இருந்தால், அவர்களுக்கு 400, 500 ஏக்கர் என்று இருக்கும். அவர்களுக்கு நிலப்பரப்பு மட்டும் ஆயிரம் அடி, இரண்டாயிரம் அடி என்று இருக்கும். நில உச்ச வரம்பு வந்துவிட்ட பிறகு அப்படியில்லை. சிறு விவசாயிகள் ஒன்றரை ஏக்கர், இரண்டு ஏக்கர், இரண்டரை ஏக்கர் என்று வைத்திருக்கிறார்கள். அவர்கள் ஊற்று வருகிற இடத்திலேதான் கிணற்றைத் தோண்டுவார்கள். அதிலே 750 அடி, 900 அடி தூரம் இருக்க வேண்டுமென்று கண்டிஷன் போட்டால், இவர்கள் யாருக்கு மின்சாரம் கொடுக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை. இப்படிக் கண்டிஷன் போடுவதன் மூலம் ஒருவருக்கும் கொடுக்கப் போவதில்லை என்ற நிலைதான் இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அமைச்சர்கள் அந்த இடங்களுக்கு வரும்போது பொய்யான சில கணக்குகளைத் தருகிறார்கள். பெருமழை பெய்த காரணத்தால்,

உணவு அமைச்சர் அவர்கள் அங்கு வந்தார்கள். அப்போது அவரிடம், நிலத்தடி நீர் சான்றிதழ்பற்றிக் கேட்டேன். கண்டிப்பாக விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று சொன்னார்கள். நிலத்தடி நீர் சான்றிதழ் பெற வேண்டிய அவசியம் இருக்காது என்று சொன்னார்கள். ஆனால் உண்மை நிலைமை என்னவென்றால், கண்டிப்பாக அந்த நிலத்தடி நீர் சான்றிதழ் வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இப்படி ஒரு புறத்திலே பத்திரிகையின் வாயிலாக விவசாயிகளுக்குப் பெரிய நம்பிக்கையை ஏற்படுத்துகிறார்கள். விவசாயிகள் இதை நம்பிக்கொண்டு, "அமைச்சர்கள் தருகிறேன் என்று சொல்லுகிறார்கள். இவர்கள் வாங்கித் தரமாட்டேன் என்கிறார்கள்" என்று எங்களைத் தொல்லைப் படுத்துகிறார்கள். இப்படித் தலைகீழாக நடக்கிற ஒரு காட்சியை நாம் இன்று காணுகிறோம்.

எங்கள் மாவட்டத்தில் எருமைப்பட்டி ஒன்றியத்திலே, வடவத்தூர் கிராமத்தில் உள்ள கிணறுகளுக்கு ஒரு பம்புசெட் கூட இல்லை. அங்கே தெரு விளக்குகள் இருக்கின்றன. ஆனால் பம்புசெட்டுக்களே இல்லை, ஆனால் 35 ஆயிரம் மின் இணைப்புகளைக் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். இந்த 35 ஆயிரம் இணைப்புகளும், ஒரு கிணற்றுக்கும் மற்றொரு கிணற்றுக்குமிடையில் இருக்க வேண்டிய தூரத்தை வற்புறுத்தாமலும், நிலத்தடி நீர் சான்றிதழ் வாங்க வேண்டுமென்று கண்டிப்பு இல்லாமலும் கொடுக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படியெல்லாம் கண்டிஷன் போட்டுக் கணக்குப் பார்த்தாலும், மின் இணைப்பு ஒன்று கூட கொடுக்க முடியாது என்று இந்த நேரத்திலே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு விவசாயிகளிடத்திலே பெரிய கிளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. தமிழகம் எங்கும் போக்குவரத்து தடைப்பட்டுப் போகிற அளவுக்கு வழியில் இரட்டை மாட்டு வண்டிகளை நிறுத்திப் போராட்டங்களைச் செய்தார்கள். மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும், ரெண்டை எடுக்க வேண்டும், சர்சார்ஜைக் குறைக்க வேண்டும் என்று பல கோரிக்கைகளை அவர்கள் விடுத்தார்கள். நான் அப்போதே சொன்னேன், "வரும் முன் காப்போம்" என்று இருக்க வேண்டும், "வந்த பின் காப்போம்" என்று இருக்கக் கூடாது என்று சொன்னேன். ஆகவே கிளர்ச்சிக்கு முன்பே அவர்களை அழைத்துப் பேச வேண்டுமென்று சொன்னேன். இது குறித்து ஏதாவது பேச்சு வார்த்தை நடந்ததா? ஏதாவது முடிவு ஏற்பட்டதா என்றால், அது நமக்குத் தெரியாது. ஏனென்றால் அது குறித்து விவரங்களை இந்த மன்றத்திலே தெரிவிக்கவில்லை, அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகள் கட்டுப்பாடாக இருந்து, மின் கட்டணத்தை அரசுக்குச் செலுத்தக் கூடாது என்று முடிவு எடுத்திருக்கிறார்கள். இவர்



களுடைய கோரிக்கையை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்பதால் அவர்கள் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தவில்லை என்று சொல்லுகிறார்கள். இந்த நிலைமையால் மிக விபரீதமான நிலை ஏற்படும். இது மிகவும் முக்கியமான பிரச்சினை. ஆகவே அதை நல்ல முறையில் விரைவாகப் பரிசிலனை செய்ய

(நண்பகல் 12-00)

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் விவசாயிகளுக்கு என்ன இருக்கிறது? முதலமைச்சர் அவர்கள் கிராம மக்களிடம் பரிவோடு பேசுகிறார்கள், அன்போடு பழகுகிறார்கள், கிராம மக்களுக்கு எவ்வளவோ செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள்? ஆனால் இந்த பட்ஜெட்டில் என்ன இருக்கிறது? இந்தத் தமிழகத்தைப் பொறுத்த வரையில், கிராமங்களே இருக்கக் கூடாது. அவை யாவும் சிறு நகரங்களாக வர வேண்டுமென்று சொல்கிறார்கள். கிராமீயத்தொழிற் கூடங்கள் அமைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதைப்பற்றி யெல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையில் ஏதாவது குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. கல்லூரியில் கட்டுரைப் போட்டியில் மாணவர்களுக்குச் சொல்வார்கள். "நான் அமைச்சரானால்" என்பதுபற்றி எழுதச் சொல்லி, அந்த மாணவர்கள் எழுதுவதைப் போலத்தான் இந்த அறிக்கை இருக்கிறது. அந்தக் கட்டுரைக்கும் இந்த நிதிநிலை அறிக்கைக்கும் வித்தியாசம் தெரியவில்லை. இன்னது செய்யப் போகிறோம் என்றால், அதற்கான புள்ளிவிவரத்தைக் கொடுக்க வேண்டும். சேலத்தில் கொல்லிமலைப் பகுதியில் அலுமினியத் தாது கிடைக்கிறது. நிறைய பழங்கள் கிடைக்கின்றன. சேலம் மாவட்டத்தில் ஒரு அலுமினியத் தொழிற்சாலையை நிறுவலாம். அதற்கு வழி செய்ய வேண்டும். அந்தப் பகுதியில் உள்ள இரண்டாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு அதனால் கொடுக்க முடியும். தேர்தல் காலத்தில் சொன்னார்கள். கிராமங்களில் வேலை வாய்ப்புகளைப் பெருக்குவோம், தொழிற்கூடங்களை அமைப்போம் என்றால், எங்கே, எப்போது, எப்படி அமைக்கப் போகிறார்கள் என்ற புள்ளிவிவரம் வேண்டாமா? யாரிடம் போய் கேட்பது? தேர்தலின்போது சொன்னார்கள். லாரியில் போகிறார்கள், லாரி விபத்துக்கு ஆளாகிவிட்டால்; லட்சக்கணக்காக நஷ்டஈடு பெறுகிறார்கள், கை கால் போய்விட்டால், இரண்டாயிரம், மூவாயிரம் என்று பெறுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் பாதுகாப்பு இருக்கிறது, ஆனால் விவசாயிகளுக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லை. புயலால் கரும்பு போய்விடுகிறது, வெள்ளத்தால் நெல் பாழாகிறது. வறட்சியால் வாடுகிறார்கள், இவர்களுக்கெல்லாம் தக்க பாதுகாப்பைக் கொடுப்போம் என்று பேசினார்கள். புரட்சித் தலைவர் சொல்கிறாரே, எப்படியும் நமக்கு ஏதாவது செய்வார் என்று நம்பினார்கள். பயிர் பாதுகாப்புத் திட்டம் வருமென்று எதிர்பார்த்தார்கள். அப்படி விவசாயிகள், கிராம மக்கள் நம்பியிருக்கும்போது, அதைப்பற்றி ஏதாவது இதிலே சொல்லியிருக்கிறார்களா என்றால், இல்லை. விவசாயிகள் இதில் பெரிய ஏமாற்றத்தை அடைந்திருக்

[திரு. ஆ. பாலசுப்ரமணியம்] [1978 பிப்ரவரி 28

கிறார்கள் என்பதை தலைவர் வாயிலாக அமைச்சரவைக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கிராம மக்கள் மத்தியிலே சில வார்த்தைகளைச் சொல்லிவிட்டால், அவர்கள் மறப்பதில்லை. அதிலும் முக்கியமாகக் கருதப்படுகிறவர்கள் சொல்லிவிட்டால், அதையே எதிர்பார்க்கிறார்கள். 14 ஆம் தேதி சேலத்திலுள்ள ஏர்க்காட்டில் நடைபெற்ற விழாவிற்கு முதலமைச்சர் வந்தபோது, புதுமையான புரட்சிகரமான பட்ஜெட்டை நீங்கள் பெறப் போகிறீர்கள், எதிர்பாருங்கள் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டார். அங்கே ஒரே பரபரப்பாக இருந்தது. பஸ்காரர்கள் எல்லாம் சேர்ந்து கூடிப் பேசுகிறார்கள், ஒருவேளை பஸ்களைத் தேசியமயமாக்கப்போகிறாரோ என்று பேசினார்கள், விவசாயிகள் பயிர்ப் பாதுகாப்புக்குத் திட்டம் வந்துவிடும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் பட்ஜெட் வந்ததும், அதில் எந்தப் புரட்சியும் இல்லை. புரட்சி என்று சொல்வதற்குக் கூட ஒரு மரியாதை வேண்டும். எதைப் பற்றியாவது உத்தரவாதம் கொடுத்தால், அது நிறைவேற்றப்பட வேண்டும். வரி போடாமல் அரசை நடத்த முடியாது என்பதை ஒப்புக்கொள்கிறேன். வளருகிற குழந்தை அழத்தான் செய்யும், எழும், விழும். அப்போதுதான் குழந்தை வளருகிறது என்று பொருள். அதைப்போல வளருகிற அரசு வரி போடத்தான் வேண்டும். இருந்தாலும் யார் யாருக்கு எப்படிப் போட வேண்டுமென்று திட்டம் இருக்க வேண்டும். இந்த அரசு சாதாரண, ஏழை எளிய கிராமப் பகுதி மக்களால் வாக்களிக்கப்பட்டு வந்த அரசு. அவர்கள் உங்களிடம் அதிகமாக எதிர்பார்க்கிறார்கள். குப்பத்தில் வாழ்கிற குப்பனும், சுப்பனும் இந்த அரசைப் பெரிதும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் ஏமாற்றுகிற வகையில்தான் இந்த நிதிநிலை அறிக்கை வந்திருக்கிறது. உலக சரித்திரத்தில் பார்த்தால், இவ்வளவு குறைந்த காலத்தில் ஒரு கட்சி தோன்றி ஆட்சியைப் பிடித்ததாகப் பார்க்கவே முடியாது. காணுதலைக் கண்ட மயக்கத்தில் அவர்கள் ஓட்டுப் போடவில்லை. கிராமங்களுக்கு வந்த அத்தனை பேரும் அளித்த வாக்குறுதிகளை நம்பி, அந்த உத்தரவாதத்தை எதிர்பார்த்து ஓட்டுப் போட்டார்கள். டாக்டரிடம் ஒருவன் மருந்து கேட்டான். அவர் ஒரு சீட்டில் அவன் நோய்க்கான மருந்தை எழுதிக் கொடுத்து, இதை மூன்று வேளை சாப்பிடு என்று சொல்லியனுப்பினார். அவன் சென்றதும் அந்த சீட்டை மூன்றாகக் கிழித்துச் சாப்பிட்டுவிட்டு வந்தான். டாக்டர் அவனைப் பார்த்து மருந்தைச் சாப்பிட்டாயா என்றார். மருந்துக் கடைக்கே போகவில்லை, நீங்கள் கொடுத்த சீட்டைத்தான் சாப்பிட்டேன் என்றானாம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அப்படிப்பட்டவர்களை எந்த டாக்டருமே காப்பாற்ற முடியாது.



1978 பிப்ரவரி 28 ]

திரு. ஆ. பாலசுப்ரமணியம்: அவனுக்கிருந்த மன நிறைவில் நம்பிக்கையில், ஒரு தெம்பில் அந்த நோய் குணமாகிவிட்டது. அப்படிப்பட்ட தெம்பு கூட இதில் இல்லை. பேப்பரிலாவது தெம்பைக் கொடுத்திருக்கலாம். அதுகூட இல்லை.

கிராமச் சாலைகளைப்பற்றிச் சொன்னார்கள். சேந்தமங்கலத்திலிருந்து கொல்லிமலைக்கு ஒரு பாதை போகிறது. அதைச் சீரமைக்க வேண்டுமென்று 1974-லிருந்து அமைச்சருக்கும் அரசிற்கும் எழுதிக்கொண்டேயிருக்கிறேன். அதைப்பற்றியும் தாக்கீது வந்துகொண்டேயிருக்கிறது. சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை மோகனூரில் இருக்கிறது. அதன் வாயிலாகவாவது செய்யுங்கள் என்று சொன்னேன். தலைவர் அவர்கள் அங்கே வல்வில் ஓரி விழாவிற்கு வந்தபோது கூட, மாலை போட்டு வரவேற்று பெட்டிஷனைக் கொடுத்தேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: பெட்டிஷனைக் கொடுத்ததைச் சொன்னால் போதாதா? மாலை போட்டதையும் சொல்ல வேண்டுமா?

திரு. ஆ. பாலசுப்ரமணியம்: உங்களுக்கு நினைவு இருக்க வேண்டுமென்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இது அதைவிட மோசமானது. பெட்டிஷனை மறந்துவிடுவதாகவும் மாலையை நினைவில் வைத்துக் கொள்வதாகவும் படுகிறது. (சிரிப்பு)

திரு. க. அறிவழகன்: ஆனாலும் தலைவர் அவர்களுக்கு இவ்வளவு மகிழ்ச்சி கூடாது. (சிரிப்பு)

திரு. ஆ. பாலசுப்ரமணியம்: அந்த பெட்டிஷனுக்கு பதில் வந்தது. அதை டிபார்ட்மெண்டுக்கு அனுப்பியிருப்பதாகவும் சென்று பார்க்க வேண்டுமென்றும் வந்தது. நானும் சென்று பார்த்தேன். அந்தப் பகுதியில் செட்டி குளம் ஏரி பெரிய ஏரி. வெள்ளச் சமயத்தில் ஊர்ப் பக்கம் உடைத்துக்கொண்டு தண்ணீர் வந்துவிட்டது. அதைச் சமாளிப்பதற்காக ஊர் மக்கள் ரோட்டை வெட்டி விட்டார்கள். அதைப்பற்றிச் சொல்லப்பட்டது. இதுவரையில் அதற்காக ஒரு கல், மண் கூட அங்கே வரவில்லை. போடப்படவில்லை. இரவில் அந்தப் பக்கம் போக முடியவில்லை. யாரிடம் சொல்வது? பி.டி.ஓ., இன்சினியர் எல்லோரிடமும் சொல்லியாகிவிட்டது. போக்குவரத்து அமைச்சர் சேலம் வந்தபோது அழைத்தேன். அந்தப் பகுதியை வந்து பார்த்தால், நிலைமை தெரியும் என்பதற்காக அழைத்தேன். வருகிறேன் என்றார், வரவில்லை. மாடியில் வாழ்கிற சீமான்களைப் பார்க்கப் போகிறார்கள். குடிசையில் வாழ்கிற ஏழைகளைப் பார்க்க வருவதில்லை. பலமுறை கூப்பிட்டிருக்கிறேன்.

வரவில்லை. சேலம் மாவட்டத்தில் குமாரபாளையத்தில், திருச்செங்கோட்டில் என்ன நடந்தது? புயல் வந்ததா? வெள்ளம் வந்ததா? பாதிக்கப்பட்டதா? ஆனால் புயலால் பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள ஏழை எளிய மக்கள் அழைத்தும், பதினான்கு அமைச்சர்களில் யாருமே இதுவரையில் வரவில்லை. இராமர் பாதம் பட்ட இடம் புனிதமானதைப் போல . . .

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத் தலைவர் அவர்களே, சேலத்தில் ஏறத்தாழ நாற்பது, ஐம்பது கிராமங்களில் சென்று இன்ஸ்பெக்ஷன் செய்து, எங்கெங்கு ரோடுகளை அமைப்பது, எப்படி குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பது என்று சுற்றிப் பார்த்து வந்திருக்கிறேன். அந்தச் சுற்றுப் பயண விவரம் கூட மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வந்திருக்குமென்று கருதுகிறேன். அப்படிப் போன அந்தச் சமயங்களில் உறுப்பினர் அவர்கள் என்னைவந்து பார்க்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எந்த முறையீட்டையும் கொடுக்கவில்லை.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** அமைச்சர் அவர்கள் சுற்றுப் பயணம் வரவில்லை என்று சொல்லவில்லை. பாதிக்கப்பட்ட இடங்களுக்கு வந்தார்களா என்பதைத்தான் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** ஏறத்தாழ நாற்பது, ஐம்பது கிராமங்களில் காலை 6.30 மணியிலிருந்து இரவு 12 மணி வரையில் சுற்றி வந்திருக்கிறேன். சுற்றிப் பார்த்ததில் உறுப்பினரைக் காணவில்லை என்பதைத் தான் சொல்கிறேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** அமைச்சர் அவர்கள் இரவு முழுவதும் கூட சுற்றுப் பயணம் செய்யலாம். வசதி இருக்கிறது. அதற்கான உள்ளம் படைத்தவர்கள் அவர்கள். வரவேற்கிறேன். நான் குறிப்பிட்ட அந்த இடத்திற்கு வரவில்லை என்பதைத்தான் சொல்கிறேன். அமைச்சர் அவர்கள் சுற்றுப் பயணம்

(பிற்பகல் 12-10)

செய்யும் காலத்திலே திருச்செங்கோடு, பள்ளிபாளையம், குமாரபாளையம் பகுதிகளைப் பார்த்தார்கள். ஆனால் கொல்லிமலை அடிவாரத்தைப் பார்க்கவில்லை. சேலம் மாவட்டத்தில், புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடம் அது. புள்ளி விவரத்தைப் பார்த்தால், உங்களுக்குத் தெரியும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அமைச்சர்கள் யாரும் வரவில்லை, அவர்கள் விழாவிற்கும் விருந்துக்கும்தான் போகின்றார்கள் என்று சொல்லுகின்றார்கள். நானே சேலம் மாவட்டத்தில் 30, 40 கிராமங்களை—குறிப்பாக சேலம் தொகுதி, ஜனதா உறுப்பினர் தொகுதி, அங்கெல்லாம் போய்ப்பார்த்துவிட்டுத்தான் வந்திருக்கிறேன்.





**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிராமப்பகுதிகளுக்கு வரவே இல்லை என்று சொல்லவில்லை. கொல்லிமலைப் பகுதியும் பாதிக்கப்பட்ட இடம். அங்கே வரவில்லை என்றுதான் நான் கூறுகின்றேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத் தலைவரவர்களே, நான் சுற்றுப் பயணம் செய்யும்போது, அது சம்பந்தப்பட்ட ப்ரோக்ராமை உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைக்கிறேன். உறுப்பினர் அவர்கள் அந்த நேரத்தில் வந்து என்னைப் பார்த்திருந்தால், அவருடன் அந்தப் பகுதிகளுக்குச் சென்று இருப்பேன் . . .

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** அமைச்சர் அவர்கள் என்னைப் பார்க்க வேண்டிய அவசியம் ஒன்றுமில்லை. புள்ளிவிவரங்கள் அவரிடமே இருக்கின்றன, கொல்லிமலைப் பகுதியும் பாதிக்கப்பட்ட பகுதி என்பது உண்மை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** விவாதத்தின்பேரிலே பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத் தலைவரவர்களே, நான் சுற்றுப்பயணங்களை மேற்கொள்ளும்போது, அந்தத் தொகுதிகளிலுள்ள உறுப்பினர்களுக்கும் தெரிவிக்கிறேன். அந்த முறையில் சேலத்திற்குச் சென்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடம் வந்து சொல்லியிருந்தால், நான் அந்தப் பகுதிகளுக்கும் சென்று பார்த்திருப்பேன் என்று தான் வலியுறுத்திச்சொல்ல விரும்புகிறேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** ரொம்பப் பாராட்டுகிறேன். ஒருகால் அவர் புரோக்கிராம் போட்ட நேரத்தில், நான் ஊரில் இல்லை என்று நினைக்கிறேன். அடுத்து, கொல்லிமலையை ஒரு டூரிஸ்ட் சென்டராக ஆக்க வேண்டும் என்று பலகாலமாகக் கோரி வந்திருக்கிறோம். இதன் காரணமாக அங்குள்ள மலைவாழ் மக்களுக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** திருப்பித் திருப்பி அதே பிரச்சினையைப் பேசுகின்றீர்களே, விவாதத்துக்கு வாருங்கள்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** இது வேறு பிரச்சினை. முன்பு குறிப்பிட்டது புயல்—வெள்ள நிவாரணம் பற்றியது. இப்போது நான் சொல்லுவது டூரிஸ்ட் சென்டராக ஆக்குவது பற்றியது. நமது மாநிலத்திலேயே வெகு உயரமான இடத்திலிருந்து விழும் நீர் வீழ்ச்சி அங்கேதான் இருக்கிறது. பெருமைக்குரிய பெற்ற அறப்பளீஸ்வரர் கோவில் இருக்கிறது. சிறப்புமிகுந்த வல்வில் ஓரி ஆட்சி செலுத்திய பகுதி அது. எனவே இதைச் சுற்றுலாப்பகுதியாக ஆக்க

வேண்டும் என்று கோருகிறோம். ஒருமுறை போய்ப் பார்த்தவர்கள் மீண்டும் அந்தப் பகுதிக்குப் போய்ப் பார்க்க ஆசைப்படுவார்கள். ஆனால், அது விடுபட்டுப்போயிருக்கிறது.

இந்த முறையில் பார்க்கும்போது, சேலம் மாவட்டம் புறக்கணிக்கப் படுகிறது என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. எனவே இதை அரசு பரிசீலித்து வேண்டியதைச் செய்ய வேண்டும். சுற்றுலா இடமாக ஆக்கி சுகபோகம் பெற வேண்டும் என்பதற்காக இல்லை. இதனால் அந்தப் பகுதி முன்னேற்றம் அடையும். அங்கே 40 ஆயிரம் பழங்குடி மக்கள் இருக்கின்றார்கள். அவர்கள் முன்னேற்றமடைய ஏதுவாகும். அது மட்டுமின்றி கொல்லி மலைப் பகுதியில் அலுமினியத்துக்கான மூலப்பொருள் கிடைக்கிறது. அது இப்போது மேட்டூருக்கு எடுத்துச்செல்லப்படுகிறது. அதை அங்கேயே உபயோகிக்கத்தக்க முறையில் அரசு சார்பிலோ தனியார் சார்பிலோ ஒரு தொழிற்சாலை ஏற்பட்டால், அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும். மேலும் அப்பகுதி மக்களின் குழந்தைகள் படிப்பதற்கு ஏற்றவாறு, அங்கே ஒரு ஐ.டி.ஐ. பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவரவர்களே, நான் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும்போது, 'கலெக்டிவ் ரெஸ்பான்ஸிபிலிடி' இருக்கிறது என்ற முறையில் அனைத்துப் பிரச்சினைகளையும் கவனிக்கிறேன். என்னுடன் திரு. வெங்கடேஸ்வர தீக்ஷிதர் அவர்கள் வந்திருக்கிறார்கள். திரு. சுவாமிநாதன் அவர்கள் வந்திருக்கின்றார்கள். அந்த முறையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் எங்கள் சுற்றுப்பயணத்தின்போது கூட வந்தால் அவர்கள் குறிப்பிடும் பகுதிகளைப் பார்க்க இயலும். எங்கள் காரிலேயே வரலாம். அழைத்துச்செல்லுகிறோம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: நான் குற்றமே சொன்னதில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இப்போதுதானே எழுந்திருக்கின்றீர்கள். இனிமேல் தான் . . .

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: இப்போது அவைத் தலைவரவர்கள் மீதுதான் நான் குற்றம் சொல்லப்போகிறேன். கேள்வி போட வேண்டுமென்றால்கூட, மூன்றும்தரமாகக் கை தூக்கினால்தான் எனக்கு அனுமதி கிடைக்கிறது. அதேமாதிரி நான் ஒரு மணி பஸ்ஸுக்குப் போக வேண்டும் என்று நேரில் போய் சொல்லியிருக்கிறேன். நேரத்தில் பேச எனக்கு அனுமதி கிடைக்கவில்லை.

இப்போதுகூட சொல்லுகிறேன், அவர் காதில் விழவில்லை. இப்போது பேசுகிறதைக்கூட அவரால் கவனிக்க முடியவில்லை. அவர்பேரிலே குற்றம் சொல்லப்போகிறேன் என்கிறேன், ஆனால், இன்-சார்ஜை மாற்றிக்கொண்டிருக்



கின்றார்கள். தலைவராக உட்கார்ந்து விட்டால், எல்லாக் கட்சிகளையும் ஒரே மாதிரியாகப் பாவிக்க வேண்டும். ஒரு கட்சிக்கு அரை மணி நேரம் குறைந்து விட்டதால், அது பலவீனம் அடைந்துவிடவில்லை. இந்த பட்ஜெட் மீது முக்கால் மணி நேரம் பேசலாம். நல்லதையும் பேசலாம், குற்றங்குறைகளையும் சொல்லிப் பேசலாம். நான் ஜனதா கட்சியின் தலைவர் இங்கே. எனக்கு ஒரு மணி பஸ்ஸுக்குப் போக வேண்டும் என்று பல முறை சொல்லி விட்டேன். அதற்குப் பிறகு 'விப்' அவர்களிடமும் சொன்னேன். அதே மாதிரி பேச்சாளர்கள் பட்டியலில் என் பெயர் மேலே இருக்கட்டும் என்று மெம்பர்களும் நீங்களே முதலில் பேசுங்கள் என்றார்கள். ஆனால், அப்படிச் சொல்லியும் என்னை உட்கார வைத்துவிட்டார்கள். தலைவர் அவர்களுடைய போக்கைப்பற்றி எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஜனதா கட்சி சார்பில் குறையே சொல்லக் கூடாது என்று எண்ணுகிறாரா?

மாற்றுத் தலைவர் (திரு. ஆ. பாலசுப்ரமணியம்): என்னைப் பற்றிக் குறை சொல்லுகின்றீர்களா? விவாதத்தைப்பற்றிப் பேச வாருங்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: நான் ஒரு மணி பஸ்ஸுக்குப் போக வேண்டும் என்று சொன்னேன். இன்னும் நான் ஹாஸ்டலுக்குப் போய் சாப்பிட்டு விட்டுப் பிறகு போக வேண்டும். பட்ஜெட்டைப் பற்றிப் பேசலாம். வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றி மட்டும் பேசினால் நல்லதாக இருக்கும்; வரவு-செலவுத் திட்டத்திலுள்ள குறைகளை, குற்றங்களைப் பற்றி மட்டும் பேசினால் நல்லதாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஆனால் நேரமில்லை. இப்போது இதைவிட்டால், பிறகு 3½ மணிக்குத்தான் பஸ். வைகை எக்ஸ்பிரஸ் இன்று இல்லை. இல்லையென்றால் 2 மணிக்குப் போகலாம். சாப்பிடுவதற்குக்கூட நேரம் இல்லை.

மாற்றுத் தலைவர் (திரு. ஆ. பாலசுப்ரமணியம்): தயவுசெய்து சப்ஜெக்டுக்கு வாருங்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: இப்போது இந்த நிதிநிலை அறிக்கையின் மீது இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அறிக்கைப்படி ரூ. 680 கோடி வரவு, ஆனால், செலவு ரூ. 726 கோடிக்கு இருக்கிறது. ரூ. 150 கோடியிலிருந்த பட்ஜெட் இன்று ரூ. 680 கோடிக்கு மேலே போய்விட்டது. வருஷாவருஷம் வரிகளும் கூடிக்கொண்டே போகின்றன. அப்படியும் பற்றாக்குறை இருக்கிறது. வழக்கமானபடிதான் இருக்கிறது.

(பிற்பகல் 12-20)

இந்த பட்ஜெட்டில் புரட்சிகரமான மாறுதல்கள் எல்லாம் இருக்கும் என்று சொன்னார்கள். நான் கூட கொள்கை அடிப்படையில் பெரிய புரட்சிகரமான மாறுதல்கள் இருக்கும் என்றுதான் நினைத்தேன். ஆனால், என்ன புரட்சிகரமான

நடந்தது என்றால், இந்த ஆண்டு கவர்னர் உரையே இல்லை என்பதுதான். என்ன காரணத்தாலோ தெரியவில்லை, இந்த ஆண்டு கவர்னர் உரையே இல்லை என்று சொல்லிவிட்டார்கள். எனக்குத் தெரிந்தவரையில், கவர்னர் உரை இல்லாத சட்டசபைக் கூட்டத் தொடர் கிடையாது. அந்த வகையில் கவர்னர் உரை இருக்கும். அதன்மீது 10 நாள் விவாதம் எல்லாம் இருக்கும். அவர் தன் உரையில் இந்த அரசாங்கத்தின் கொள்கை இது, இந்த அரசாங்கம் மணலைக் கயிறாகத் திரிக்கப் போகிறது என்று சொல்லுவார். அப்படியெல்லாம் மணலைக் கயிறாகத் திரிக்க முடியாது என்று அதன்மீது பேசும்போது உறுப்பினர்கள் சொல்லுவார்கள். இதுதான் வழக்கம். எதிர்க் கட்சியினருக்கு இந்த வருடம் அந்த வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது. ஒருவேளை கவர்னர் மாட்டேன் என்று சொல்லிவிட்டாரோ அல்லது இவர்களே வேண்டாம் என்று சொல்லி விட்டார்களோ தெரியவில்லை.

இந்த ஆண்டு அளிக்கப்பட்டிருக்கிற வரவு-செலவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், எந்த வகையிலும் ஜனங்களுக்கு சௌகரியம் இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மொத்தம் ரூபாய் 9 கோடி. அளவுக்குத்தான் வரி போட்டிருக்கிறார்கள். பற்றாக்குறையை முழுவதும் சரிக்கட்ட வரி போடாமல் ஏதோ கொஞ்சம்தான் போட்டிருக்கிறார்கள். அதுவும் போடப்பட்டிருக்கிற வரிகள் கூட சாதாரண ஏழை எளிய மக்களை பாதிக்காது, பெரிய பணக்காரர்களைத் தான் பாதிக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், இந்த 1978 ஆம் வருடத்திலே நாட்டில் ஏழை பணக்காரன் என்ற பேதத்திற்கு இடமே கிடையாது. ஏழை பணக்காரன் என்ற வித்தியாசமே இல்லாமல் எல்லோரும் எல்லாப் பொருள்களையும் உபயோகப்படுத்துகிறார்கள்

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இப்போது இந்த பட்ஜெட்டிலே, சோப்பு மீது வரி போட்டிருக்கிறார்கள். அதாவது கையால் செய்யப்பட்ட சோப்பு தவிர, மற்ற சோப்புகள் மீது வரி போட்டிருக்கிறோம். இது ஏழைகளைப் பாதிக்காது, பணக்காரர்களைத் தான் பாதிக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது எந்த ஏழை சோப்பு உபயோகிக்காமல் இருக்கிறான். காலை முதல் மாலை வரை வேலை செய்கிற எல்லாத் தொழிலாளியும் கண்டிப்பாகச் சோப்பு போடுகிறான். அவன்போய் அவசரத்திற்கு கடையில் வாங்கும்போது, இது கையால் செய்யப்பட்ட சோப்பு, இது கையால் செய்யாமல் மிஷினில் செய்த சோப்பு என்று பார்த்து வாங்குவதில்லை. அவசரத்திற்கு ஏதோ ஒரு சோப்பு என்று கேட்டு வாங்கிக்கொண்டு போய் உபயோகப்படுத்துகிறான். மார்க்கெட்டில்போய்க் கேட்டால், கையால் செய்த சோப்பு கிடைப்பதில்லை.





ஒரு 60 பைசா கொடுத்து ஒரு ஏழை ஒரு சோப்பு வாங்கினால், அது 6 நாளைக்குக்கூட வருவதில்லை. இப்படி வாரத்திற்கு ஒரு சோப்பு வாங்குகிற தொழிலாளி, ஏழை எளிய மக்கள் இந்த வரி உயர்வால் பாதிக்கப்பட மாட்டார்கள் என்பது எப்படி என்றுதான் எனக்குப் புரியவில்லை. எனவே பணக்காரர்களுக்கு வரி போட்டால், பரவாயில்லை. பணக்காரர்களுக்கு வரி போடுகிறோம் என்று சொல்லிக்கொண்டு, ஏழையின் தலையில் வரியைப் போட்டால், அதற்கு என்ன அர்த்தம் என்றுதான் கேட்க விரும்புகிறேன். எனவே சோப்புமீது போடப்பட்டிருக்கிற வரியை நீக்கினால்தான், ஏழைகள் மீது போடப்பட்ட வரியை நீக்கியதாக ஆகும்.

அடுத்து, கண்ணாடிச் சாமான்கள் மீது வரி போட்டிருக்கிறார்கள். வண்ணப் பூச்சுகளின் மீது வரி என்று போட்டிருக்கிறார்கள். கண்ணாடிச் சாமானை உபயோகப்படுத்தாதவர்கள் யார்? இப்போது எல்லோர் வீட்டிலும் கண்ணாடிச் சாமான்கள்தான் இருக்கின்றன. கேட்டால் விலை மலிவாகக் கண்ணாடிதான் இருக்கிறது என்கிறார்கள். இப்போது அந்தக் கண்ணாடிச் சாமான்கள் மீதும் வரி போட்டுவிட்டார்கள். இந்த வரி ஏழை பாழைகளைப் பாதிக்காது என்றால், எப்படி ஏற்றுக்கொள்வது?

அடுத்து, வீட்டுக்குப் பூசுகிற பெயிண்ட். ஏழையாக இருந்தாலும், பணக்காரனாக இருந்தாலும், வீட்டுக்குப் பெயிண்ட் அடிக்காமல் என்ன செய்ய முடியும்? சுண்ணாம்பு பெயிண்ட் மாதிரிதான். இந்தக் காலத்தில் யார் வீட்டில் பார்த்தாலும் டிஸ்டெம்பர்தான் பூசுகிறார்கள். குடிசைகளில் கூட சுவற்றில் டிஸ்டெம்பர் பூசியிருக்கிறார்கள். வெள்ள நிவாரணப் பணிகளைப் பார்க்கும்போது, நானே நேரில் பார்த்தேன். டிஸ்டெம்பர் அடித்திருக்கிறதே இந்த வீட்டிற்கு. இந்த வீட்டிற்குப் போய் நிவாரணப் பணம் தருகிறீர்களே என்று கூட நான் கேட்டேன். எனவே இப்படிப்பட்ட கண்ணாடிச் சாமான்கள், பெயிண்ட் மீதான வரி உயர்வு மிக மிக அதிகமாக இருக்கிறது. கண்ணாடிச் சாமான்களை ஹோட்டலிலும் வாங்குகிறார்கள், வீடுகளிலும் நிறைய வாங்குகிறார்கள். காரணம் அதுதான் மிகவும் 'சீப்'. இப்போது அதன் மேல் வரியைப் போட்டால், இனி அவர்கள் கதியெல்லாம் என்னவது? ஏழைகள் எல்லாம் கண்ணாடி டம்ப்ளர் தான் உபயோகப்படுத்துகிறார்கள். அவர்கள் வெள்ளி டம்ப்ளர் உபயோகப்படுத்துவதில்லை. பணக்காரன் தான் வெள்ளி டம்ப்ளரை உபயோகப்படுத்துகிறான். அவனுக்கு எப்படியும் வருமானம் வந்துவிடுகிறது. அவனுக்கு எதைப்பற்றியும் கவலையில்லை.

அடுத்தபடியாக, பெட்ரோலுக்கும் விவசாயிகள் உபயோகப்படுத்துகிற டீசலுக்கும் வரியை உயர்த்தியிருக்கிறார்கள். பெட்ரோலுக்கு வரியை உயர்த்தியதுகூட ஒருவேளை பரவாயில்லை என்று விட்டுவிடலாம். கார் வைத்திருப்பவர்கள்தான் பெட்ரோல் பற்றிக் கவலைப்பட வேண்டும். அவர்கள்

அதிகமாகக் கொடுத்தாலும், பரவாயில்லை. ஆனால் பெரும்பாலான விவசாயிகள் தான் டீசலைப் பயன்படுத்துகிறார்கள். எங்கே பார்த்தாலும், மின்சாரப் பற்றாக் குறை. அதுவுமில்லாமல் ஆயிரக்கணக்கானவர்கள் பில்டர் பாயிண்ட் வைத்திருக்கிறார்கள். கிராமங்களில் ஏராளமான டீசல் பம்ப்செட் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் டீசலைத்தான் பயன்படுத்துகிறார்கள். இப்போதைய நிலையில் யாரும் எலெக்ட்ரிக் கனெக்ஷன் வாங்குவதென்பது முடியாது. இப்போது எலெக்ட்ரிக் கனெக்ஷன் வேண்டுமென்று அப்ளிகேஷன் போட்டால், இன்னும் 3 தலைமுறை கழித்துத்தான் கனெக்ஷன் கிடைக்கும் போல் இருக்கிறது. பேரன் காலத்தில்கூட வருவது கஷ்டமாக இருக்கிறது. இந்த நிலையில் எதன் மீது வரி போடுவது, எதன் மீது வரி போடுவதில்லை என்று பார்க்காமல், வரி போட்டிருக்கிறார்கள். சாதாரண ஏழை மக்களுக்குத் தான் அப்ளிகேஷன் போட்டால், உடனே எலெக்ட்ரிக் கனெக்ஷன் கிடைப்பு தில்லை. பணக்காரர்கள் எப்படியோ வாங்கிவிடுகிறார்கள். இப்போது நம் நாட்டில் சிபாரிசுதான் ஒரு குவாலிபிகேஷன். அது ஒரு மெரிட் மாதிரி. சிபாரிசு இருந்தால், எதையும் பெற்றுவிடலாம் என்ற நிலை ஏற்பட்டு விட்டிருக்கிறது. இப்படி எலக்ட்ரிக் கனெக்ஷன் கிடைக்காதவர்கள் எல்லாம் டீசல் எஞ்சின் வைத்துத்தான் பயிர் செய்கிறார்கள். இப்போது அதன் தலையில் போட்ட வரியால் விவசாயம் செய்கிறவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

தண்ணீர் கால்வாயில் வரவில்லை என்பதற்காக, பயிர் செய்யாமல் இருக்க முடியாது. காலாகாலத்தில் சாகுபடி பண்ணவில்லை என்றால், பலனிருக்காது. ஒரு மாதம் பின்தங்கி சாகுபடியைத் துவங்க முடியாது. எனவே தஞ்சை ஜில்லாவில்கூட டீசலை அதிகமாகப் பயன்படுத்தி நடவு நடுவதிலேயிருந்து நாற்று நடுகிற வரை பம்ப் செட் மூலம்தான் தண்ணீரைப் பெறுகிறார்கள். இதற்கெல்லாம் டீசல் தேவையாக இருக்கிறது. இந்த மாதிரி விவசாயிகள் அதிகமாக உபயோகப்படுத்துகிற டீசல்மீது இன்றையதினம் வரி போட்டிருக் கிறார்கள். இதிலே எந்த நியாயமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

இதுமட்டுமல்ல, இன்னும் லிப்ட் இரிகேஷன்—கிணற்றிலிருந்து பாசனம் செய்கிறவர்களுக்கு இது ரொம்பவும் கஷ்டத்தைத் தரும். இவர்கள் எல்லாம் டீசல் எஞ்சின் வைத்துத்தான் தண்ணீர் இறைக்க வேண்டியிருக்கிறது. இந்தத் தண்ணீரைக் கொண்டுதான், ஏதோ காய்கறியாவது பயிரிட முடிகிறது. இப்படி ஜெனரேட்டரிலிருந்து சாதாரண பயிர் சாகுபடி வரை எல்லோரும் டீசலைப் பயன்படுத்துகிறார்கள். எனவே இது பணக்காரர்களைப் பாதிக்காது, ஏழை களைத்தான் பாதிக்கும். பணக்காரன் எப்படியோ கோல்மால் செய்து காலத்தைத் தள்ளுகிறான்; இல்லாதவன்தான் எப்போதும் கஷ்டப்படுகிறான்.





எந்த வரியைப் போட்டாலும், அது வாங்குகிறவன் தலையில்தானே விழுகிறது. பெட்ரோலுக்கு வரி போட்டதுகூட பரவாயில்லை. ஆனால் டீசலுக்குப் போட்ட வரி எந்த வகையிலும் நியாயமில்லை. எனவே இந்த வரியை நீக்கினால்தான், விவசாயிகளுக்குச் சௌகர்யமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்னும் சில வரிகளைப் போட்டிருக்கிறார்கள். சீமை எண்ணை மீது வரியைக் குறைத்திருப்பது மிகவும் மகிழ்ச்சிக்கு உரியதாகும். இதை நான் வரவேற்கிறேன். எல்லோருமே எலெக்ட்ரிக் லைட் உபயோகப் படுத்துவதில்லை. எல்லோருக்கும் எலெக்ட்ரிக் கரண்ட் வசதி கிடைப்பதில்லை. இன்றைக்கும் ஸ்ரீரங்கத்தில் தினம் 500 பேரல் சீமை எண்ணெய் விற்பனை யாகிறது. அந்த அளவுக்குப் பொதுமக்கள் சீமை எண்ணெயை தினசரி உபயோகப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் 'ஹைட்ஸ் அண்டு ஸ்கின்ஸ்', அதாவது தோல் மீது வரி போட்டிருக்கிறார்கள். தோல்மீது வரி போட்டால், ஏழை மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள். இன்றையதினம் எல்லோருமே செருப்புப் போடு கிறார்கள். ஆட்டுத் தோலானாலும் சரி, மாட்டுத் தோலானாலும் சரி, அதைக் கொண்டுதான் செருப்பு தைக்கிறார்கள். மனிதன் தோலில் எதையும் தைக்க முடியாது. இப்போது வரி போட்டதன் காரணமாக செருப்பு விலை ஏறிவிடும். பணக்காரன் காரில் போகிறான். அதனால் அவன் செருப்பு சீக்கிரத்தில் தேய்வதில்லை. ஆனால் சாதாரண ஏழைத் தொழிலாளி, தள்ளுவண்டி தள்ளிக் கொண்டு போகிறவன் எல்லாம் செருப்பில்லாமல் நாள் முழுவதும் அலைய முடியாது. இப்போது அவர்கள் யாருமே செருப்பு இல்லாமல் வெளியே வருவதில்லை. இனிமேல் 2 ரூபாய் விற்ற செருப்பு ரூ. 3-50-க்கு ஏறிவிடும். இதை யார் தலையில் வைப்பது என்பது தெரியவில்லை. இனிமேல் காலில் போட்டுக்கொள்ள வேண்டியதைத் தலையில்தான் வைத்துக்கொள்ள வேண்டும். இதையும் எடுத்துவிட வேண்டும். விவசாயி நீர் இறைப்பதற்காக தோல் வாங்கியாக வேண்டும். இனிமேல் அதன் விலையும் ஏறத்தானே செய்யும். இதையெல்லாம் கவனித்துப் பார்க்க வேண்டும்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

தங்கத்திற்கு வரி போடுவது சரி. ஆனால் இப்போது எல்லோரும் தங்கத்தைத்தானே உபயோகப்படுத்துகிறார்கள். பணக்காரன் 1 பவுனில் தாலி செய்தால், ஏழை ¼ பவுனில் தாலி வாங்குகிறான். யாரும் வெள்ளியில் தாலி செய்துகொள்வதே இல்லை. எனவே அந்தத் தங்கத்தின்மீது வரி போடும் போது, இது பணக்காரர்கள் மீது போட்ட வரி என்று சொல்ல முடியாது.

கல்யாணத்திற்குத் தாலி வாங்க வேண்டுமென்றால், ஏழையும் வாங்கித்தானே ஆக வேண்டும். அவனுக்கு மட்டும் என்ன வரியில்லாமல் கொடுக்கப் போகிறீர்களா? இல்லாவிட்டால் இவன் பணக்காரன், இவன் ஏழை என்று சர்ட்டிபிகேட் வாங்கி வரச் சொல்லி அவர்களுக்கு வரி போடப் போகிறீர்களா?

இப்போது போட்ட வரிகளாலே இந்தப் பற்றுக்குறையைச் சரிக்கட்டப் போவதில்லை. இந்த வரிகளாலே இதை நிவர்த்தி செய்ய முடியாது. அப்படி இருக்கும்போது, இந்த வரிகளைப் போடாமல், மொத்தமே ஒரு பற்றுக்குறை பட்ஜெட் என்று வைத்துவிட்டிருக்கலாம்.

அடுத்து, சுற்றுலாபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நானும் பலமுறை இங்கே இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். திருச்சியை க்ஷேத்திரம் என்றால், ரொம்பப் பேர் சங்கடப்படுகிறார்கள். திருச்சியில் சுற்றுலா வசதி எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். திருச்சி ஸ்ரீரங்கத்திற்கு ஆயிரக் கணக்கான யாத்திரிகர்கள் வந்து போகிறார்கள். அவர்கள் தங்குவதற்கு அங்கு இடம் இல்லை. திருச்சி பக்கத்தில் ஸ்ரீரங்கம் பெரிய கோயில் இருக்கிற இடம். முனிசிபாலிடி கூட. லீடிங் முனிசிபாலிடி தான். ஆனால் கையில் பணம் இல்லை. அங்கிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப் பேரவை உறுப்பினர் திரு. சௌந்தரராஜனுக்கும் இது தெரியும். எங்கள் மாவட்டத்து அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். ஒரு 10 குடும்பம் வந்தால்கூட தங்க முடியாது. அந்த அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. ஆனால் இந்த பட்ஜெட்டில் அதைப்பற்றி கவனிக்கவே காணோம். ஒருவேளை அமைச்சர் அவர்கள் இதைப்பற்றிச் சொல்லாமல் விட்டுவிட்டாரோ என்றுகூட சந்தேகமாக இருக்கிறது.

எனவே ஸ்ரீரங்கத்தில் கோயிலை அடுத்துள்ள இடத்தில் கிளியர் பண்ணி விட்டாவது யாத்திரிகர்கள் தங்குவதற்கு என்று கண்டிப்பாக வசதிசெய்து தரவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

அடுத்தபடியாக, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அண்மையிலே புயலுக்காக, வெள்ளத்திற்காக ஏராளமான பணம் ஒதுக்கியிருப்பதாகச் சொன்னார்கள். அப்படி ஒதுக்கியிருப்பதைப்பற்றி நான் ரொம்ப சந்தோஷப் படுகிறேன். ஆனால் அதற்காகச் செலவழிக்கின்ற முறைகளைப் பார்க்கும் போது, அந்தப் பணம் ஒதுக்கவே தேவையில்லை என்று சொல்லவேண்டிய தாக இருக்கிறது. ரூபாய் 34 கோடிக்குப் பணம் ஒதுக்கியிருக்கின்றார்கள். இந்தத் தொகையை ஆளுங்கட்சி சார்பில் இருக்கும் கான்ட்ராக்டர்களுக்குத் தான் கொடுத்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.. இது சம்பந்தமாக பல பேர்களிடமிருந்து பெடிஷன்கள் வந்துகொண்டிருக்கின்றன. ஆளுங்கட்சியில்



இருப்பவர்களுடைய சொல்லின் பேரில் கொடுப்பார்கள் சொல்லுகிறார்கள். இவருக்குக் கொடு, அவருக்குக் கொடு என்று சிபாரிசுகள் செய்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு வேண்டிய விவரங்கள் என்னிடம் இருக்கின்றன. டெண்டர் முறையிலே இந்தப் புயல் நிவாரண வேலைகளுக்கு காண்ட்ராக்ட் விட்டுக் கொடுக்கலாம். எந்தக் கட்சிக்காரர்கள், ஆளுங்கட்சிக் காரர் மற்ற கட்சிக்காரர்கள் என்ற பிரச்சினை இல்லை. அதைப் பற்றி நாம் கவலைப்படவும் தேவையில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நமக்குத் தேவை எல்லாம் உண்மையான அளவுக்கு, சீக்கிரமாக அவர்களுக்கு, மக்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்பதுதான். காண்ட்ராக்ட் எடுப் பவர்களுக்கு ஏராளமான லாபம் இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன். ஒரு வாரம் 10 நாள் போய்க் கேளுங்கள். இவர்கள் அங்கே இருக்கிறார்கள். காண்ட்ராக்ட் கொடுப்பார்கள் என்று சிபாரிசுகளின் பேரில் கிடைக்கிறது. எத்தனை கோடி ரூபாய் ஒதுக்கினால்தான் என்ன பயன்? லட்சம் ரூபாய், 25 ஆயிரம் ரூபாய் என்று காண்ட்ராக்ட் விட்டுவிடுகிறார்கள். ஆளுங்கட்சி பொறுப்பாக இருக்க வேண்டும். அரசில் இன்ஜினியர்கள் இருக்கிறார்கள். சூப்பிரெண்ட்டெண்ட்டிங் இன்ஜினியர்கள், எக்சிக்யூட்டிவ் இன்ஜினியர்கள் எல்லாம் இருக்கிறார்கள். நாம் காண்ட்ராக்ட் கொடுக்கும்போது, பார்த்துக் கொடுக்கவேண்டும். எவ்வளவு பணம் இருந்தாலும், எத்தனை கோடி என்று வந்தாலும், என்ன பயன் இருக்கும்? குறிப்பிட்ட காரணத்திற்காகச் செல வழிக்க முடியாத நிலைமைகள் இருக்கின்றன. இப்போது மூன்று மாத காலம் ஆகிவிட்டது. குடியிருக்க இடமில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கின் றார்கள். நூற்றுக்கு 15 குடியிருப்புக்கள் தான் கட்டி முடித்திருக்கிறார்கள். மீதம் 85 சதவிகித குடியிருப்புக்கள் கட்டப்படவில்லை. எனக்கு நூறு ரூபாய் கொடுத்திருக்கிறார்கள், எனக்கு இருநூறு ரூபாய் கொடுத்திருக்கிறார்கள் என்று அங்கிருக்கின்றவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். வசதி உள்ளவர் கள். பல பேருக்கு இதைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பணத்தை எந்த அடிப்படையை வைத்துக் கொடுத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அந்த விவரம் இல்லை. திருச்சியில் குடியாம்பாளையத்தில் நூற்றுக்கு 99 குடிசைகள் அழிந்துவிட்டன. அதைப் பார்க்கும்போது, நமக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. வடக்குக் காவிரிப் பகுதியிலேகூட எல்லாம் போய்விட்டது. இதுவும் அரசுக்குத் தெரியும். அப்படிப்பட்ட இடத்திலே கதர் துணி கொடுத் திருக்கிறார்கள். அதிலேயும் பாரபட்சம் காட்டியிருக்கிறார்கள். இப்போது அங்கு விவசாயிகள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். கம்யூனிஸ்டுகள்தான் இந்த விஷயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அங்கு நிறைய பேர்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் பாகுபாடு [illegible] இல்லாமல் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கு பல பேருக்குக் கொடுக்கவே இல்லை என்று சொல்லுகின்றார்கள். [illegible]

உதவிகள் ஒரு சிலருக்குக் கொடுத்துவிட்டு பலருக்குக் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். வெள்ளத்திலே பாதிக்கப்பட்டவர்கள் பலர் வாங்கியிருக்கிறார்கள். மதுரையிலே சம்பந்தப்படாதவர்கள் நிறைய பேர் வாங்கியிருக்கிறார்கள். இதைப்பற்றியெல்லாம் ஒரு தனி கமிட்டி போட்டு 'ரெவ்யூ' பண்ணுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். காண்ட்ராக்ட் கொடுப்பது பற்றியும் விசாரித்துப் பார்க்க வேண்டும். இந்த வெள்ள நிவாரண காண்ட்ராக்ட் எப்படி விடப்பட்டிருக்கிறது, யார் யாருக்கு விடப்பட்டிருக்கிறது, அந்தப் பணம் எப்படி எப்படிச் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று பார்க்க வேண்டும். காண்ட்ராக்ட்டுகளிலே பல ஊழல்கள் நடந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெடிஷன்கள் கூட எங்களுக்கு வந்திருக்கின்றன. வேண்டுமானால் ப்ரூவ் கூட பண்ணுகிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன். காண்ட்ராக்ட் கொடுக்கும்போது, டெண்டர் காண்ட்ராக்டாகக் கொடுக்க வேண்டும். சிலருக்குக் கொடுக்கப்பட்ட காண்ட்ராக்டுகளை கான்சல் பண்ணியிருக்கிறார்கள். இதைப்பற்றியும் விசாரித்தறிய வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கட்சி சார்பானவர்களுக்குச் சிபாரிசு செய்து காண்ட்ராக்ட் விடக்கூடாது. ரூபாய் 34 கோடி வெள்ளத்திற்கு என்று ஒதுக்கி என்ன பிரயோஜனம்?

திருச்சியிலே காகிதத் தொழிற்சாலை அமைப்பதுபற்றிச் சொன்னார்கள். கரும்புச் சர்க்கரை ஆலைகள் 3 ஆலைகள் இருக்கின்றன. இன்னொரு ஆலை வரும்போல் இருக்கிறது. திருச்சியை சென்டராக வைத்து, ஒரு பேப்பர் உற்பத்தி ஆலை வைத்தால், நலமாக இருக்கும். திராவிட முன்னேற்றக் கட்சி ஆட்சி இருக்கும்போது, ஏராளமாக, ரூபாய் 43 லட்சம் வைத்தியக் கல்லூரிக்காக என்று திருச்சியிலே வசூலாகியது. வைத்தியக் கல்லூரிக்காக என்று அதிகாரிகள் மூலம் வசூலாயிற்று. பொது மக்கள்தான் கொடுத்தார்கள். அவ்வளவு ரூபாயும் ரங்கநாத சுவாமி நாமம் போல ஆகிவிட்டது. ஒன்றும் அமைக்கவில்லை. முதலில் திருச்சியில் வைத்தியக் கல்லூரி வைப்பதாகச் சொன்னார்கள்; பிறகு இல்லை என்று சொல்லிவிட்டார்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இத்தனை கிலோமீட்டர் தூரம் இருந்தால் தான், வைத்தியக் கல்லூரி அமைக்க வேண்டும் என்று மத்திய அரசு விதி முறைகள் சொல்லுகின்றன. மாநில அரசுக்கு உரிமையில்லை. நமது மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கட்சி ஆட்சிதான் அங்கு நடைபெறுகிறது. இந்த நேரத்திலே அதற்கு வேண்டிய விதிவிலக்கை வாங்கிக் கொண்டால், நல்லது. அந்த வைத்தியக் கல்லூரியை அமைத்துக் கொள்ளலாம்.





**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** இந்த விவரம் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு வசூல் பண்ணுவதற்கு முன் தெரியாதா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பின்னர்தான் தெரிந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால் தான் செய்ய முடியாமல் போய் விட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பின்னர் பேச இருக்கிறார்கள். முன்னே பேசுகின்ற உறுப்பினர் அவர்களுக்கு இப்போது நேரம் வேறு இல்லாமல் இருக்கிறது. அடுத்து அடுத்துப் பேசுகின்றவர்கள் விவரங்களைக் குறித்து வைத்துக்கொண்டு, அவர்கள் பேசுகின்ற நேரத்தில் விளக்கங்களைச் சொல்லிக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** ஒரு லட்சம் ரூபாய், இரண்டு லட்சம் ரூபாய் அல்ல. ரூபாய் 43 லட்சம். அதைக் கடைசியில் சினிமா பார்ப்பவர்களுக்கு என்று ஒரு சினிமாக் கொட்டகை கட்டிவிட்டார்கள். அதை நாம் கட்ட வேண்டிய அவசியமில்லை. அதைத் தனிப்பட்டவர்களே கட்டிவிடுவார்கள். மறுபடியும் வசூல் பண்ண வேண்டும் என்று சொன்னாலும், வசூல் பண்ணித் தருகிறோம். மருத்துவக் கல்லூரி ஒன்றை அங்கே கட்டித் தர வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன். இதை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நேரம் இல்லை ஆதலால் என்னுடைய உரையை முடித்துக்கொள்ள விரும்புகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேஸ்வர தீக்ஷிதர் அவர்கள் பேசும்போது, என்னைப்பற்றிக் குறை கூறினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எஸ் கணபதி அவர்கள்கூட உறுப்பினர்களுக்கு நான் ரொம்ப பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று சொன்னார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்கூட எனக்கும் தலைவர் அவர்கள் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். இப்போது மேலவைத் தலைவருக்கே பாதுகாப்பு அளிக்க வேண்டிய அவசியம் இருந்து கொண்டிருக்கிறது. உறுப்பினர் திரு. தீக்ஷிதர் அவர்கள் குறைபட்டுக் கொள்கிறார்கள். அவர் சொன்ன வார்த்தைகள் சரியானவை அல்ல. நான் ஏதோ பாரபட்சமாக நடத்துவதாக ஒரு குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறார்கள். அந்தத் தவறான எண்ணம் அவருக்கு வரத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. வெங்கடேஸ்வர தீக்ஷிதர் எழுந்தார்.)

[மேலவைத் துணைத் தலைவர்]

நான் சொல்வதை முதலில் சற்றுக் கேட்டுக்கொள்ளுங்கள். அப்புறம் நீங்கள் கருத்துச் சொல்லலாம். பட்ஜெட் கூட்டத்தில் 4 பேர்கள் முதலில் பேச வதற்கு கேட்கிருர்கள். அதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அதற்கு நியாயமான காரணம் இருக்கிறது. ஆனால் அந்த நான்கு பேர்களில் ஒரு வரைத் தான் அனுமதிக்க முடியும். அவரை முன்னதாகவே பேச விடுவ தாகவே முடிவு எடுத்திருந்தேன். நான் இங்கு மாற்று தலைவர் அவர்கள் வந்திருக்கவேண்டும் என்பதற்காக அவரைப் பேசச் சொல்லியிருந்தேன். பிறகு திரு. திக்ஷிதர் அவர்களைப் பேசச் சொல்லலாம் என்று இருந்தேன். கேள்வி கேட்கின்றபோது, 3 தரம் கேட்க விடுகிறேன் என்றும் சொல்கிருர்கள். பல பேருக்கு அப்படிப்பட்ட குறைகள் இருக்கும். அருப்புக்கோட்டை பற்றிப் பிரச்சினை வருகிறது. அந்தக் கேள்விக்கு உபகேள்வி திரு. தங்கப் பாண்டியன் அவர்கள் எழுந்து கேட்டார்கள். அவர் அருப்புக்கோட்டை வாசி. அதனால் அந்தப் பிரச்சினை அவருக்கு முக்கியமானது அல்லவா? அவர்கள் கேட்கிருர்கள். ஒரு கேள்வியில் ஒரு உறுப்பினருக்கு இரண்டு துணை வினாக் கள் எழுப்ப உரிமையிருக்கிறது. முதல் துணைக் கேள்வி கேட்ட உறுப்பின ருக்கு இரண்டாவது கேள்வி கேட்க உரிமை இருக்கிறது. இரண்டு கேள்வி கள் கேட்க உரிமை இருப்பதால், இரண்டு கேள்விகளையும் அடுத்து அடுத்துக் கேட்க வேண்டும் என்பதல்ல. கேள்வி நேரத்தில் எல்லோரும் கேட்கலாம். மாண்புமிகு திரு. தீக்ஷிதர் அவர்கள் விஷயத்தில் எனக்கு எந்தவிதமான காழ்ப் புணர்ச்சியும் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவரை நான் பாரபட்சமாக நடத்த வேண்டும் என்று எண்ணியதில்லை. இதுவரையிலும் அப்படி இல்லை. அவர்தான் இப்போது இப்படிச் சொல்கின்ருர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது தான் முதல் தடவையாகச் சொல்கிருர்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : நானும் இந்த மாதிரிச் சொல்வது இதுதான் முதல் தடவை. கடந்த இரண்டு நாட்களாகவே இப்படி இருந்து கொண்டிருக்கிறது. நான் கைதூக்கினுல்கூட கவனிக்காது வேறு ஒருவருக்கு அனுமதி கொடுத்துவிடுகிறீர்கள். மூன்று தடவைகள்கூட அனுமதி கொடுக்கி றீர்கள். குறையை மனதிலேயே வைத்துக்கொண்டிருக்கக் கூடாது என்பதற் காகத்தான் நான் இங்கே இப்போதே சொல்லிவிட்டேன். எடுத்துச் சொன் ஞல்தான், தங்களுக்கும் தெரியும் என்பதற்காகச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இயற்கையாகவே நமக்கும் பொறு மைக்கும். பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு.





திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : அப்படியிருந்தும் என்னைப் பேச விடாமல் விட்டுவிடுகிறீர்கள் மனதிலேயே வைத்து கொண்டிருக்கக்கூடாது என்பதற்காகச் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மனதிலேயே எதையும் வைத்துக் கொண்டு பேசக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். மனதை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். என்னைப்பற்றி உறுப்பினர் அவர்கள் தவறாக எண்ணிக்கொண்டிருக்கிருர்கள். அதற்காகச் சொல்கிருர்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : உங்களைப்பற்றித் தவருன எண்ணம் எனக்கு இல்லை. கட்சியைப் பொறுத்து நான் சொல்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : எனக்குக் கட்சிப் பாகுபாடு எதுவும் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே இருக் கின்ற கட்சிகளெல்லாம் ஒன்றுதான். வேறுபாடு கருதுவதில்லை.

(பிற்பகல் 12-40)

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர் களே, மாண்புமிகு நிதியமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்ட 1978-79 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை ஒட்டி என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இங்கே சொல்ல விரும்புகிறேன். நம்முடைய நிதியமைச்சரவர்கள் இந்த அவையிலே வைத்த நிதிநிலை அறிக்கைபற்றிச் சுருக்கமாகச் சொல்லப் போனால், விழாக் காலங்களில் விடும் புஸ் வாணம்போல் பார்ப்பதற்கு ஏதோ ஒளி மயமாக இருக்கிறதே தவிர, உள்ளே பார்க்கிறபோது வண்ண வெளிச்சத் திற்குப் பின்னல் வருகிற கரித் துண்டுகளாக இருக்கின்றன என்பதை வருத்தத் தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆளுங் கட்சிக் காரர்கள் இதைப் பாராட்டுவதற்கு உரிமையுடையவர்கள். அதைப்பற்றி நான் குறை சொல்லவில்லை. எதிர்க் கட்சித் தலைவர்கள் பாராட்டக்கூடாதா என்று கேட்டால், பாராட்டக்கூடிய அளவுக்கு ஏதாவது இருந்தால், பாராட்டுகிற மனம் படைத்தவர்கள்தான் நாங்கள் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். நம்முடைய நிதியமைச்சரவர்கள் பச்சையப்பன் கல்லூரியில் எம்.ஏ பொருளாதாரம் படித்தவர்கள். அவர்கள் ஒரு நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து, கொண்டு வருகிருர்களென்ற செய்தியைக்கேட்டு, உள்ளபடியே அந்த அறிக்கை புரட்சிகரமானதாக இருக்குமென்று எதிர்பார்த்தவர்களில் நானும் ஒருவன். முதலமைச்சரவர்கள்கூட, 10, 15 தினங்களாக "வருகிறது வருகிறது, புரட்சிகரமான நிதிநிலை அறிக்கை" என்று பேசி வந்தார்கள். இந்த நிதிநிலை அறிக்கையை நிதியமைச்சரவர்களே ஒரு சமயம் எழுதியிருந் தால், அது புரட்சிகரமாக இருந்திருக்குமோ என்ற ஐயப்பாடு வருகிறது.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1978 பிப்ரவரி 28

இந்த நிதிநிலை அறிக்கையின் முன்னுரையையும், முடிவுரையையும் பார்க்கும் போது, நிதியமைச்சரவர்கள் அதை எழுதியிருக்கிறார்களென்பது தெரிகிறது. அவருடைய கை வண்ணம் பிரமாதமாக இருக்கிறது. ஆனால் இடையிலே இருக்கிற திட்டங்களைப் பற்றிப் பார்க்கிற நேரத்தில், நிச்சயமாக அதை நிதியமைச்சரவர்கள் எழுதியிருக்க முடியாதென்ற முடிவிற்கு வர வேண்டியவனாக இருக்கிறேன். பேரவையில் வைத்த நிதிநிலை அறிக்கையின் 39 வது பாராவில், "முதியோர் எழுத்தறிவுத் திட்டம் நாடு தழுவிய இயக்கமாக வளர வேண்டுமென்பது அரசின் கொள்கை. இதனையொட்டி, இந்தத் துறையில் ஈடுபடும் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு உதவ புதிய திட்டமொன்று செயற்படுத்தப் படும். கல்வியின் பயன், கிராம முன்னேற்றத்திற்குத் தூண்டுகோலாக அமைய, எழுத்தறிவு பெறுவோருக்கு, வேளாண்மை, கிராம-குடிசைத் தொழில்கள், கூட்டுறவு இயக்கம், சுகாதாரம், சத்துணவு, குடும்ப நலத் திட்டம், கால்நடைப் பாரமரிப்பு இவை போன்ற பொருள்களைப் பற்றி எளிய நடையில் புத்தகங்கள் தயாரித்து வழங்கப்படும்" என்று சொல்லப் பட்டிருக்கிறது. நம்முடைய நிதியமைச்சரவர்கள் நிச்சயமாக இப்படிப்பட்டதொரு திட்டத்தை அவருடைய அறிக்கையிலே இணைத்திருக்க மாட்டார்கள். அதிகாரிகள் இப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் தயார் செய்து கொடுத்து, அமைச்சரவைக்கு அவை புரட்சிகரமான திட்டங்களென்று சொல்லிவிட்டார்களோ என்ற சந்தேகம் எற்படுகிறது. அதற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. மாண்புமிகு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் இங்கே நிதிநிலை அறிக்கையில் சொல்லிய திட்டங்கள் புரட்சிகரமான திட்டங்கள் என்று அறிவித்த போது, எனக்கு வியப்பாக இருந்தது. நிதியமைச்சரவர்கள் நிதிநிலை அறிக்கையை வைத்தது 20 ஆம் தேதி. அதற்கு முன்னாலேயே, கடந்த மாதமே—ஜனவரி 27-ம் தேதியே 'அலை ஓசை' பத்திரிகையில் "வருகிறது வருகிறது புதிய வரி" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வந்திருக்கிறது: அந்தக் கட்டுரையை முழுமையாகப் படிக்காவிட்டாலும், தலைவரவர்களின் அனுமதியோடு, சிலவற்றைப் படிக்கிறேன். தமிழ் நாட்டிற்கு 1974 முதல் 1979 வரையிலான ஐந்து ஆண்டுகளுக்குத் திட்ட அளவை 1,122 கோடி ரூபாய் எனத் தேசிய வளர்ச்சிக் குழு நிர்ணயித்திருந்தது. 1978-79 ஆம் ஆண்டில் திட்ட அளவு 305 கோடி ரூபாயாக இருக்குமென்று அவையிலே நிதியமைச்சரவர்கள், நிதிநிலை அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். 20 ஆம் தேதி கூறினார்கள். ஆனால் 27—1—1978-ல் "வருகிறது வருகிறது புதிய வரி" எற்ற தலைப்பில், "285 கோடி 305 கோடியாக வளர்ந்த வரலாறு" என்று சொல்லி, "இப்போது புது வரிகள் போட ஒப்புக்கொண்டு, சிக்கனத்தையும் கடைப்பிடிப்பதாக வாக்குறுதி கொடுத்த, 305 கோடி ரூபாயில் திட்டத்தை அமைத்திருக்கிறார்கள் நமது புரட்சிகள்" என்று சொல்லி, எந்தெந்தத் திட்டங்கள் என்ற விவரத்தையும் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே



1978 பிப்ரவரி 28] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

மின்சாரத்திற்கு 114 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஒரு மாத காலத்திற்கு முன்னாலே வெளி வந்த 'அலை ஓசை' பத்திரிகையிலே அந்த விவரங்களை வெளியிட்டிருக்கிறார்கள். மின்சாரத்திற்கு 114 கோடி ரூபாய்; நீர்ப் பாசனத்திற்கு 29.9 கோடி ரூபாய்; தொழிலுக்கு 13.92 கோடி ரூபாய் இப்படி எந்தெந்தத் துறைக்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்போகிறார்களென்பதை இங்கே நிதியமைச்சரவர்கள் படிப்பதற்கு முன்னாலே, ஒரு கட்டுரையாக 'அலை ஓசை' பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார்கள்.

* மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் ரொம்ப சாமர்த்தியமாக ஒரு தகவலை இங்கே தர விரும்புகிறார்கள். அலை ஓசையில் மாத்திரம் இந்தக் குறிப்பு வரவில்லை. நிதி ஆணைக் குழு இங்கே வந்து, முதல்வரவர்களுடனும், நிதியமைச்சரவர்களுடனும் பேசி, அலுவலர்களோடு விவாதம் செய்ததற்குப் பிறகு, மாண்புமிகு முதல்வரவர்களும், நிதியமைச்சரவர்களும் டெல்லிக்குச் சென்று திட்டக் குழுவைச் சந்தித்து, இவ்வளவு பணம் வேண்டுமென்று வாதிட்டு, முதலிலே 291 கோடி ரூபாய் கேட்டிருந்தாலும், இருக்கிற நிலைமைகளை வைத்து மேலும் வேண்டுமென்று கேட்டதற்குப் பிறகு, அதிகமாகப் பெற்றிருக்கிறார்கள். எந்தெந்த இனங்களுக்குக் கொடுக்க மத்திய அரசு ஒப்புக்கொண்டிருக்கிறதென்று தகவல் வந்திருக்கிறது. அலை ஓசையில் மட்டும் அந்தச்செய்தி வரவில்லை; மற்றப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. அப்படி வந்த செய்தியை, இவர்கள் கண்டுபிடித்ததாகச் சொல்கிறார்கள். அது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மொத்தத் திட்ட அளவு எவ்வளவு என்ற விவரம் வந்ததே தவிர, இலாக்கா வாரியாக இவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதென்று வரவில்லை.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: அது மற்றைய பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. மின்சாரத்திற்கு 114 கோடி ரூபாய்; தொழில் துறைக்கு இவ்வளவு என்று செய்தி வந்திருக்கிறது. அதை வைத்துத்தான் ஒரு கட்டுரையாக எழுதி, புதிதாகக் கண்டு பிடித்துவிட்டதாகச் சொல்ல வேண்டாம். அது பத்திரிகையில் வந்த செய்திதான். டெல்லியில் அறிவித்த பிறகு வந்த செய்தி.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: நிதிநிலை அறிக்கையிலே வருகின்ற விவரங்கள், இதற்கு முன்னாலே இப்படி பத்திரிகையில் வந்திருக்கிறதா என்று அரசாங்கம்தான் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 'அலை ஓசை' பத்திரிகை நிதிநிலை இரகசியங்கள் ஒன்றையும் சொல்ல வில்லை. தமிழக அரசு எவ்வளவு கேட்டது; திட்டக் குழு எவ்வளவு கொடுப்பதற்கு ஒத்துக்கொண்டது என்பதைப் புள்ளி விவரமாகப் போட்டிருக்கிறார்கள். இது நடைமுறையில் உள்ளதுதான். டெல்லியிலே, அவர்கள் ஒதுக்கீடு செய்த பணம் எவ்வளவு என்று சொல்லியதுதான் வந்திருக்கிறது. எனவே வேறு ஒரு நோக்கத்தோடு பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : எந்த நோக்கத்தோடும் நான் பேசவில்லை. பல செய்திகள் வந்திருக்கின்றன. அதற்குள்ளே போக நான் விரும்பவில்லை. 9.55 கோடி ரூபாய்க்குப் புதிய வரிகள் போடப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அறிவித்திருக்கிற வரி விகிதத்தின்மூலம் 20 கோடிக்கும் அதிகமாக வரிப் பணம் வர இருக்கிறதென்பதையும், அதை வெளியிடாமல், குறைத்து வெளியிட்டிருக்கிறார்களென்ற குற்றச்சாட்டையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசிடம் பேச்சு வார்த்தை நடத்திய போது. . . .

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது : நான் குறுக்கிடுவதற்கு வருந்துகிறேன். காரணம் உறுப்பினர்கள் நிதிநிலை அறிக்கையின்மீது ஒரு குற்றச்சாட்டு சொல்லும்போது, அதை மறுக்க வேண்டிய கடமையிருக்கிறது. 9½ கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறீர்கள். ஆனால் 20 கோடி ரூபாய் வரி வசூலிக்கப் போகிறீர்கள் என்று சொன்னால் எப்படி? புள்ளி விவரம் கொடுங்கள். குறித்துக்கொண்டு, பதில் சொல்கிறோம். 9 கோடி வரி மூலம் வருமென்று சொல்லப்பட்டிருக்கிறது. உறுப்பினரவர்கள் 20 கோடி ரூபாய் வசூலிக்கப் போகிறார்களென்று சொல்லுகிறார். எப்படி என்பதைப் புள்ளி விவரத்தோடு உறுப்பினரவர்கள் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : ஒவ்வொரு விவரத்தைப் பற்றிக் கூற ஆட்சேபணையில்லை. ஆனால் எனக்கு நேரம் வேண்டும். கொடுத்திருக்கிற வரி விகிதத்தைப் பார்க்கும்போது, 9.55 கோடி ரூபாய் எப்படி வருகிறதென்பதை மொத்தமாகத்தான் சொல்லியிருக்கிறார்கள். கமெர்ஷியல் டாக்ஸ் மூலம் இவ்வளவு, வாகன வரி மூலம் இவ்வளவு, டீசல் மூலம் இவ்வளவு என்று சொல்லாமல், பொதுவாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த அறிக்கையில் மட்டும் சொல்லவில்லை. 1976 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் பார்த்தால் கூடத் தெரியும். அந்த ஆண்டு இறுதியில் எவ்வளவு ரூபாய் அதிகம் கிடைத்திருக்கிறதென்பது ஒவ்வொரு அரசாங்க வரவு-செலவு திட்டத்தைப் பார்த்தால் தெரியும். ரூ. 20 கோடி என்பது ரூ. 25 கோடியாக இருக்கும். இந்த



ஆண்டும் 20 கோடி ரூபாய் வரி மூலம் கிடைக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சபையிலே நீங்கள் அந்த விவரத்தை வைக்கப் போகிறீர்கள் என்பதையும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். விவசாயிகளுக்கு அரசு கொள்முதல் விலையைக் கூட்டித் தந்திருக்கிறார்கள். அதற்காகப் பாராட்டுகிறேன். பாராட்டக்கூடாதென்ற எண்ணமில்லை. ஆனால் எப்போது கொடுத்தீர்கள்? திராவிட முன்னேற்றக் கழகம் கேட்டு ஊர்வலம், பேரணி நடத்திய பிறகு கொடுத்தீர்கள். இருந்தாலும் பாராட்டுகிறேன். சட்டப்

(பிற்பகல் 12-50)

பேரவையிலே, எவ்வளவு கொடுக்கப் போகிறீர்கள் என்று கேட்டபோது, முதலமைச்சர் அவர்கள், தி.மு.க. ஆட்சியில் கொடுத்ததைவிட அதிகமாகக் கொடுக்கிறோம் என்று சொல்லி 90 ரூபாய் கொடுத்திருக்கிறார். அதற்காக விவசாயிகளின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஆனால் கொள்முதல் விலை அறிவிக்கப்பட்ட பிறகு, இந்த நாட்டில் எந்த விவசாயிகளிடத்தில் அரசுத் தரப்பில் நெல்லை வாங்கினார்கள்? விவசாயிகளுடைய உண்மையான நிலைமை என்ன? தஞ்சை, வட ஆற்காடு, செங்கற்பட்டு, தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் இருக்கிற சாதாரண விவசாயிகள், தங்களுடைய தேவைக்காக, பணம் தேவைப்படுகிறது என்பதற்காக, நெல்லை விற்கலாம் என்றால், முடியவில்லை. அவர்கள் எல்லாம் நிலச்சுவான்தார்கள் அல்ல, சிறு விவசாயிகள், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் என்று வைத்திருக்கக் கூடியவர்கள். அவர்கள் தங்களுடைய நெல்லை விற்க முடியாமைக்குக் காரணம் இந்த அரசாங்கத்தின் தவறான கொள்முதல் கொள்கைதான். இந்த அரசாங்கம் அறிவித்த கொள்கையின் காரணமாக நெல்லை வாங்க வியாபாரிகள் போகவில்லை. லெவி கொடுத்துவிட்டுத்தான் நெல்லை விற்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகள் லெவி கட்டுப்படியாகவில்லை என்று சொல்லுகிறார்கள். கொள்முதல் விலையை நிர்ணயித்தார்களே தவிர, நெல்லைக் கொள்முதல் செய்வதற்கு எந்தவிதமான ஏற்பாட்டையும் இந்த அரசாங்கம் செய்யவில்லை. இதன் விளைவாக வட ஆற்காடு மாவட்டத்தில் உப்புப்பேட்டையிலிருந்து அவர்கள் உற்பத்தி செய்த நெல்லை விற்க வேண்டுமென்று ஆற்காட்டிற்கு எடுத்துச் சென்றார்கள். அங்கே வாங்க ஆளே இல்லையென்பதால், அந்த அரிசியை சென்னைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். சென்னைக்குக் கொண்டு வருகிற நெல்லைத் தடுத்து நிறுத்தி லாரியைப் பறிமுதல் செய்து, அவர்களையும் கைது செய்திருக்கிறார்கள். அவருடைய பெயர் எஸ். பழனி. மேலும் விவரங்கள் வேண்டுமானால், தருகிறேன். இந்த அரசினுடைய கொள்கை ஒன்று, சட்டம் ஒன்று, அதனால்

செய்வது ஒன்று. சம்பந்தா சம்பந்தமில்லாமல் ஆட்சியை நடத்துவது இந்த நாட்டு மக்களுக்கு நலன் பயக்குமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நியாய விலைக் கடைகளைத் திறப்போம் என்று சொன்னார்கள். ஏதோ மக்களுக்குப் பலன் கிடைக்குமென்று நினைத்தோம். அதற்கு இந்த ஆண்டு 2 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்களே தவிர, உள்ளபடியே இந்த 16 ஆயிரம் கடைகளையும் எப்போது, எங்கே திறக்கப் போகிறார்கள் என்று சொன்னார்களா என்றால், இல்லை. நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், விலைவாசி ஏறியிருக்கிறது, ஆனால் யாரையும் பாதிக்காது என்று சொல்லியிருக்கிறார். வீட்டில் போய்ப் பார்த்தால், கத்தரிக்காய் முதல் எந்தக் காய்கறியும் கிலோ இரண்டு ரூபாய்க்குக் கீழே கிடைப்பதில்லை. எண்ணெய் ஏழரை ரூபாய்க்கு விற்கப் படுகிறது.

உணவு அமைச்சர் அவர்கள், மேல் சபையில் பேசும்போது, காய்கறிகளின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த நடமாடும் காய்கறிக் கடைகள் வரும் என்று சொன்னார்கள். நான்கூட வீட்டிலே சொல்லிவைத்தேன், நடமாடும் காய்கறிகள் கடை வரும், விலைகள் குறைந்துவிடும் என்று. ஆனால் இப்போது அப்படிப்பட்ட கடைகள் வந்ததாகத் தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** நடமாடும் காய்கறிக் கடைகள், மக்கள் நடமாட்டம் உள்ள பகுதிகளிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. நடமாட்டம் இல்லாத விஸ்தரிப்புப் பகுதிகளுக்கும் வந்து சேரும். அதன் விளைவாக விலைகள் குறைந்துள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** வந்தால் சரி. அடுத்து ஏரி குளங்கள் ஆகியவற்றில் தூர் வாரிச் சீரமைக்க 111 கோடி ரூபாய் அளவில் ஒரு பெருந் திட்டம் வகுத்துள்ளோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த 111 கோடி ரூபாய் என்பது பயங்கரமாக இருக்கிறது. வரும் ஆண்டில் முதற்கண் 12 ஏரிகளில் இப்பணி முன்னோடித் திட்டமாக மேற்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த 12 ஏரிக்காக மட்டும் 111 கோடி செலவு செய்யப் போகிறார்களா? அதற்காக என்ன திட்டம் போட்டிருக்கிறார்கள்? எந்தெந்த மாவட்டங்களில் உள்ள ஏரி, குளங்களைப் பழுது பார்க்கப் போகிறார்கள்? இதற்கெல்லாம் விவரங்கள் இல்லை. ஆனால் 111 கோடி ரூபாய் இந்த ஆண்டு பட்ஜெட்டில் ஒதுக்கியிருக்கிறார்கள் என்று மட்டும் சொல்லியிருக்கிறார்கள். மக்கள் மத்தியிலே, இப்படி 100 கோடி 111 கோடி என்று திட்டம் போட்டிருக்கிறார்கள் என்று விளம்பரப்படுத்துகிறார்கள்.



இன்னொரு பக்கத்திலே 100 கோடி ரூபாயில் ஒரு காகிதத் தொழிற்சாலையை ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது ஜாயின்ட் செக்டாரா? பிரைவேட் செக்டாரா? கவர்ன்மென்ட் செக்டாரா அல்லது கொலாபரேஷனா? என்னவென்று தெரிவிக்கவில்லை. இப்படி 100 கோடி ரூபாய் என்று திட்டத்தை அறிவித்திருக்கிறார்களே தவிர, அந்தத் தொழிற் சாலையை ஆரம்பிக்க முடியுமா என்றால், நிச்சயமாக முடியாது. ஆரம்பிக்கக் கூடாது என்று நான் சொல்லவில்லை. அந்த அளவுக்கு இந்த நாட்டிலே அதற்கு வேண்டிய கச்சாப் பொருள்கள் இல்லை. கிராமத்திலே இருந்து கிடைக்கிற கரும்புச் சக்கையை வைத்துக்கொண்டு தயாரிக்கப்போகிறோம் என்றால், அது முடியுமா? எந்த டெக்னிஷியன் இப்படிச் சொன்னார்? கரும்புச் சக்கையை வைத்துக்கொண்டு காகிதம் செய்தால், அது எந்த அளவுக்கு இருக்கும்? அதை யார் வாங்குவார்கள்? இதையெல்லாம் ஆராய்ந்தார்களா? நாளொன்றுக்கு 250 டன் செய்தித்தாள் காகிதம் தயாரிக்க வேண்டுமென்றால், 75 ஆயிரம் டன் கரும்புச் சக்கை உற்பத்தியாக வேண்டும். நம்முடைய கரும்பு உற்பத்தியே 13 இலட்சம் டன்தான். அதற்கு எங்கே போவார்கள்? அதையெல்லாம் பார்க்காமல், புரட்சித் தலைவர் ஆட்சியாக இருக்கிற காரணத்தால். . . . .

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத் தலைவர் அவர்களே, கரும்புச் சக்கையிலிருந்து மட்டும்தான் பேப்பர் செய்யவேண்டுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ, மூங்கிலில் இருந்தும் வைக்கோலில் இருந்தும், இன்னும் பல பொருள்களில் இருந்தும் செய்யலாம் என்று. ஆனால் நிதிநிலை அறிக்கையில் கரும்புச் சக்கையிலிருந்து தயாரிக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவேதான் நான் அதைச் சொல்லுகிறேன்.

1978-79 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலே எங்கே பார்த்தாலும், கிராமம், கிராமம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் உள்ளபடியே, கிராமங்களுக்கு தி.மு.க. ஆட்சியில் செய்த அளவுக்கா இவர்கள் செய்யப் போகிறார்கள்? அனைத்து கிராமங்களுக்கும் அதாவது 99 சதவிதம் மின்சாரத்தைக் கொடுக்கவில்லையா? நாங்கள் கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்காக 18 கோடி ரூபாய் செலவு செய்யவில்லையா? எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் திரு. பாலசுப்ரமணியம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், அந்தக் கிராமங்களுக்கு உருப்படியான ஒரு திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையில் எங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள்? நான் தேடித் தேடிப் பார்த்தேன். இதை மூன்று முறை படித்தேன். இரவு பகலாகப் படித்தேன்.

அப்படியொரு திட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள், "நம்முடைய அடிப்படைத் தொழில் விவசாயம். விவசாயம் வளர வேண்டுமானால் மின்சாரத் துறையிலே நாம் கவனம் செலுத்த வேண்டும். காங்கிரஸ் ஆட்சியிலே 15 ஆயிரம் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுத்தார்கள். எனவே நாம் ஆண்டுக்கு 50 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க வேண்டும்" என்றார்கள். பிறகு திராவிட முன்னேற்றக் ககழ ஆட்சியில் 1973-74 ஆம் ஆண்டில் 63 ஆயிரம் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுத்தோம். இப்போது 35 ஆயிரம் பம்புசெட்டுகளுக்கு மின்சார இணைப்புக் கொடுப்போம் என்று தானே அறிவித்திருக்கிறார்கள். கிராமம், கிராமம் என்று சொன்னால், யாரை இவர்கள் ஏமாற்றுவதற்கு முயற்சிக்கிறார்கள் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சிறு தொழில்கள். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் கிராமத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றுக்குப் பரவலாக ஊக்கம் அளிப்பதுதான் இந்த அரசின் திட்டவட்டமான கொள்கை என்று சொல்லியிருக்கிறார். திட்டம் என்னவென்று சொல்லியிருக்கிறார்களா என்றால், இல்லை. ஆனால் அதற்கு எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறார்கள்? 13 கோடி ரூபாய். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வருவாய் 506 கோடி ரூபாயாக இருந்தபோது, இதற்கு ஒதுக்கியது 14 கோடி ரூபாய். இப்போது வருவாய் 680 கோடியாக இருக்கும்போது, இவர்கள் ஒதுக்கியிருப்பது 13 கோடி ரூபாய்தான். திராவிட முன்னேற்றக் கழக அரசு அந்தக் காலத்திலேயே 14 கோடி ரூபாய் ஒதுக்கி சிப்காட்டின் மூலமாக இராணிப் பேட்டையைத் தொழில் மயமாக ஆக்கியிருக்கிறது. ஆனால் 680 கோடியில் 18 கோடி, கிராமத் தொழிற்சாலைக்கு ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், இது ஒரு புரட்சியா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நம்முடைய மாநிலத்தில் தொழில்களைத் தொடர்ந்து வளர்ச்சி செய்வதில் ஈடுபட்டுள்ள பல்வேறு அரசுத் துறை நிறுவனங்களுக்காக ஆண்டு திட்டத்தில் 6,87 கோடி ரூபாயை ஒதுக்கிவிட்டு, கிராமத் தொழிலை வளர்க்கப் போகிறோம் என்று சொல்லுவது வேதனையாகவும், வேடிக்கையாகவும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப் போலவே கிராமம், கிராமம் என்று சொல்லிவிட்டு, இன்னொரு பக்கத்திலே நகரத்திற்குச் செய்கிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். வேடிக்கை என்னவென்றால், 680 கோடி ரூபாய் வருமானம் வருகிற இந்த நாட்டில், சென்னை, கோவை, திருச்சி, மதுரை ஆகிய நகரங்களில் இருக்கிற குடிநீர்த் திட்டம், வளர்ச்சித் திட்டம், கழிவு நீர்த் திட்டம் ஆகியவைகளுக்காகச் சேர்த்து



30, 48 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். நகரங்களில் இருப்பவர்கள் என்ன பாவம் செய்தார்கள்? அவர்கள், இவர்களுக்கு ஓட்டுப் போடவில்லை என்பது வேறு விவகாரம்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். நகரங்களிலே உள்ளவர்கள் ஓட்டுப் போடாததற்காக இந்தத் திட்டங்கள் தயாரிக்கப்படவில்லை. திருச்சி, கோவையிலே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றிருக்கிறது. சென்னை நகரத்திலேகூட $3\frac{1}{2}$ இலட்சம் வாக்குகளைப் பெற்றிருக்கிறது. இதையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு இந்த அரசு திட்டமிடாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளைப் பழுது பார்ப்பதற்காக சென்னை மாநகரத்திற்கு அவர்கள் 8 கோடி ரூபாய் வேண்டுமென்று சொன்ன நேரத்தில் எவ்வளவு பணம் கொடுத்தார்கள்? 75 இலட்சம் ரூபாய்தான் கொடுத்திருக்கிறார்கள். இந்தத் தொகையைக் கொண்டு சென்னையிலே இருக்கிற சாலைகளைச் சீர் செய்ய முடியுமா? சாலைகள் எல்லாம் எப்படி இருக்கின்றன? அமைச்சர்கள் போகிற சாலையல்ல, மக்கள் வாழ்கிற சாலைகள் எப்படியிருக்கின்றன? அண்ணா நகரில் சாலைகள் எப்படி இருக்கின்றன என்று பார்க்க வேண்டும். அங்கே எல்லா சாலைகளும் மோசமாக இருக்கின்றன. மாநகராட்சியைக் கேட்டால், நிதியில்லை என்று சொல்கிறார்கள். ரூபாய் 8 கோடி கேட்டிருக்கிறோம், எப்பொழுது வரும் என்று தெரியவில்லை என்று சொல்லுகிறார்கள். உண்மையிலேயே நல்ல அக்கறை இருக்குமானால், இப்படிப் புறக்கணிப்பார்களா?

(பிற்பகல் 1-00)

வேலை வாய்ப்பினைப்பற்றிச் சொல்கிறார்கள். திரு. புலமைப் பித்தன் அவர்கள்கூட ஒன்றுகூட இதில் பாராட்டுவதற்கென்று இல்லையா என்று கேட்டார்கள். பாராட்டுகிற இடம் வரும்போது, பாராட்டலாம். கிராமங்களைப் பற்றிச் சொல்லும்போது, பட்டு இழை நூற்பிற்காக கூட்டுறவுச் சங்கங்கள் 20 ஏற்படுத்தியிருக்கிறார்கள். திருநெல்வேலி, இராமநாதபுரம் போன்ற பின் தங்கிய பகுதிகளில் தீப்பெட்டித் தொழிற்சாலை என்று ஐம்பது கூட்டுறவுத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துகிறோம். உலகத்தில் தீப்பெட்டி செய்வதற்கு இதுவரையில் தொழிற்சாலையே இல்லையா? நீலகிரி மாவட்டத்தில் ஆறு தேயிலைக் கூட்டுறவுத் தொழிற்சாலைகள் ஏற்படுத்திவிட்டு, பங்கு மூலதனத்தைப் பிறகு தருகிறோம் என்கிறார்கள். ஏற்கனவே இவைகள் இருக்கின்றன. இப்படி இங்கே ஆறு கூட்டுறவுச் சங்கங்கள், பட்டு இழைக்கு

50, தீப்பெட்டிக்கு 20 என்று ஏற்படுத்துவதால், இவற்றின் மூலமாக எத்தனை பேருக்கு வேலை கிடைக்கப்போகிறது? இந்த மூன்று திட்டங்களை வைத்துக் கொண்டு கிராமப் பொருளாதாரத்தை வளர்த்துவிட முடியுமா? கைத்தறி, கதர், கிராமத் தொழில்களுக்காக ரூ. 4 கோடி கணிசமாக ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இதனால் லட்சக்கணக்கான விவசாயிகள் எப்படித் திருப்தி அடைந்துவிடுவார்கள்? தொழிலை வளர்ப்போம், வேலை வாய்ப்பைப் பெருக்குவோம் என்று சொல்லிக் கொண்டு ஏதோ சிலவேலைகளை கொடுப்பதால் பிரச்சினைகள் தீர்ந்துவிடுமா? அப்படி எழுப்பப்படுகிற ஒன்றிரண்டு வேலைகள் கூட இந்த நாட்டில் பிறந்து வளர்ந்த இளைஞர்களுக்குக் கிடைக்குமா என்ற ஐயம் எழுந்திருக்கிறது. உதாரணத்திற்காக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஈரோட்டில் அண்ணா-ஐயா நினைவகம் என்று அண்ணா காலத்தில் ஏற்பட்டு, கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள். மணி அம்மையார் அவர்கள் அதை அரசிடம் ஒப்படைத்தார்கள். அது பொதுப் பணித் துறையில் இருக்கிறது. அதற்கு வேலைக்கு எங்கேயிருந்து ஆள் வருகிறார் தெரியுமா? பாலக்காட்டிலிருந்து வருகிறார். 1—1—1978-ல் வருகிறார். 2—1—78-ல் அங்கே வேலை கொடுக்கப்படுகிறது. அவர் பெயர் விஜயன். இச்சாமியின் மகன். ஏழாவது படித்தவன். 'மதர் டங்' மலையாளம். இப்படிக் கிடைக்கிற ஒன்றிரண்டு வேலை வாய்ப்புகூட இந்த நாட்டிலே இருக்கிறவர்களுக்குக் கிடைக்காமல் எங்கோவிருந்து வந்தவர்களுக்குக் கொடுக்கப்படுமானால், இந்த நாட்டில் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று அமைச்சர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதுபோன்ற நிலைமைகள் நீடிக்கக் கூடாது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*** மாண்புமிகு திரு. ஆர். எம் வீரப்பன்:** துணைத் தலைவர் அவர்களே உறுப்பினர் தருகிற அந்த விவரத்தின்படி, வேலை பெற்றிருப்பவர் வேலை வாய்ப்பு நிறுவனத்தின் மூலம் வேலை பெற்றிருக்கிறாரா என்று சொன்னால் நன்றாக இருக்கும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அது அரசாங்கம் செய்ய வேண்டிய வேலை பெயர், விலாசம், இடம் எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறேன் இவ்வளவுக்கும் பிறகு உறுப்பினரே எல்லாவற்றையும் சேகரிக்க வேண்டுமென்று அரசாங்கம் . . . . .

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மன்னிக்க வேண்டும். இவ்வளவு பரந்த மாநிலத்தில் எங்கோ தேடிப்பிடித்து ஈரோட்டில் இருக்கிற ஒரு வேலைக்கு சேர்க்கப்பட்டவருடைய விவரங்களைக் கண்டுபிடித்து சேகரித்து இந்த அவைக்குத் தந்திருக்கிற உறுப்பினர் முறையாக வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதன் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாரா



என்பதையும் தெரிந்து சொன்னால்தான், அவர் கடமை உணர்வோடு சொல்கிறார் என்று ஏற்றுக்கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** கடமையை நிறைவேற்றுகிறோமா இல்லையா என்பது நாட்டுக்குப் பின்னால் தெரியும். இச்சாமியார் என்பவரின் மகன் பெயர் விஜயன் என்றெல்லாம் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மன்னிக்க வேண்டும். விஜயன் என்பவர் எங்கிருந்து வந்தார் என்பது பிரச்சினை இல்லை. எங்கே வாழ்ந்தார் எங்கே இருக்கிறார் என்பதல்ல பிரச்சினை. திரு. வீராசாமி அவர்களும் எங்கேயிருந்து வந்தார் என்ற ஆராய்ச்சியில் யாரும் ஈடுபட முடியாது. இந்த நாட்டின் குடிமகன் இந்த நாட்டில் வாழ்கிறவன் வேலை வாய்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்துகொண்டால், வேலை தரப்படுகிறது. அதற்காகத்தான் அப்படி தரப்பட்டிருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்வதற்காகக் கேட்டேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** வேலை வாய்ப்பு நிலையத்தில் பதிவு செய்யவில்லை. திரு. வீராசாமி எங்கே பிறந்தார் என்பது வேறு விவகாரம். நாட்டு மக்களுக்கு அது தெரியும். விஜயன் தமிழ் நாட்டில் பிறக்கவில்லை. வாழவில்லை. ஜனவரி 1 ஆம் தேதி தமிழகத்திற்கு வருகிறான். ஏழாவது வகுப்பு படித்திருக்கிறான். எம்பளாய்மெண்ட் எக்சேஞ்ச் மூலமாக இல்லாவிட்டாலும், உங்கள் ஆட்சியில் வேலை கொடுக்கப்படுகிறது என்பது இன்னொரு குற்றமாகும். இப்படி ஈரோட்டில் கொடுத்திருக்கிறார்கள். இதுதான் குற்றச்சாட்டு. இந்த நாட்டிலே பிறந்தவனுக்கு இங்கே ஏற்படுகிற ஒன்றிரண்டு வேலைகள்கூடப் போய்ச் சேருவதில்லை என்ற நிலை ஏற்பட்டால், இந்த அரசின்மீது எப்படி நம்பிக்கை வரும்? மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள், வேதனைப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறார்கள் என்று பார்த்தேன். கல்விக்கு ரூ. 180 கோடி இருக்கிறது. விவசாயத்திற்கு எவ்வளவு என்பது இல்லை. மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு எவ்வளவு என்பது இல்லை. முதலமைச்சர் இலாகாவாக இருப்பதால், பின்னால் கூட்டிக் குறைத்துக் கொள்ளலாம் என்று விட்டிருக்கலாம். 400 டாக்டர்களுக்கு வேலை கொடுக்கப் போகிறோம் என்று சொல்கிறார்கள். ஆண்டுக்கு ஆயிரம் டாக்டர்கள் படித்து விட்டு வெளிவருகிற நேரத்தில் இப்போதுதான் பப்ளிக் ஹெல்த் சென்டர்களில் மூன்றாவது டாக்டரைப் போடப்போகிறோம் என்று சொல்கிறார்கள். அதுவும் 100 இடங்களுக்குத்தான். இப்போது 1,500 பேருக்கு மேல் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் பேசுவதைக் கேட்கிறேன்.

உழைக்க வேண்டுமென்று சொல்கிறார். உழைப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். வேலை கொடுக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமை அல்லவா? ஒருவர் எம்.பி.பி.எஸ். படித்து முடிக்க அரசாங்கம் 90 ஆயிரம் ரூபாயைச் செலவு செய்கிறது. அவர்களுடைய சர்வீசைப் பயன்படுத்திக்கொள்வது அரசாங்கத்தின் கடமை அல்லவா? எங்கே அதற்கான திட்டம்? 1977-78 ஆம் ஆண்டில் 54 சிறு சுகாதார நிலையங்களைத் திறக்கிறோம். இந்த ஆண்டு 50 என்று சொல்லியிருக்கிறார்கள். கடந்த ஆண்டு 54 என்பது இந்த ஆண்டு 108 ஆக உயர்ந்திருக்க வேண்டாமா? அப்போதுதான் அது புரட்சியாக இருக்க முடியும்? ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்ன செய்துவிட்டது என்றுதான் சொல்கிறார்கள். நீங்களும் ஐந்தாண்டு காலம் ஆட்சியில் இருந்து, பிறகு இறங்கினாலும், அதற்குப் பின்னால் மக்கள் குறைதான் சொல்வார்கள். கல்விக்கு ரூ. 180 கோடி ஒதுக்கிவிட்டு கட்டடத்திற்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா? திண்ணையில், தெரு ஓரத்தில், மரத்தடியில் இன்னும் பள்ளிகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதற்கு ஒன்றரை கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். ஒரு சதவிகிதம்கூட கட்டடத்திற்கு நிதி இல்லை என்றால், மழை காலத்தில், புயல் காலத்தில் எகே போய் அந்தக் கிராம மக்கள் படிக்க முடியும்? அப்படிப்பட்ட நேரங்களில் கிராமப் பிள்ளைகளின் படிப்பு பாழாவதைத் தடுக்க வேண்டாமா? ஆகவே கட்டடத்திற்குக் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உறுப்பினர் திரு. முத்து அவர்கள், இதெல்லாம் புரட்சித் தலைவர் பட்ஜெட் என்றும் கருணாநிதி பட்ஜெட்டாக இருந்தால் எங்கு பார்த்தாலும் விளம்பரமாக இருக்குமென்றும், வள்ளுவர் கோட்டம், பூம்புகார், கட்டபொம்மன் கோட்டை போன்றவையெல்லாம் விளம்பரத்திற்காகச் செய்யப்பட்டதுதான் என்றும் சொன்னார்கள். புரட்சித் தலைவர் பட்ஜெட்டில் கம்பர், வள்ளலார் நினைவுச் சின்னங்கள் இடம் பெற்றிருக்கின்றன. ஆகவே, நாங்கள் செய்ததைத் தொடருகிறீர்களே தவிர, புதிதாக என்ன செய்கிறீர்கள்? கலைஞர் அதிகமாக விளம்பரம் செய்தார் என்று சொல்கிறீர்கள். நான் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஒன்பதாண்டு காலம் நடந்தது. அப்போதுகூட ஆள் உயர போஸ்டர் போடவில்லை. இப்போது மவுண்ட் ரோட்டில் ஆள் உயரப் போஸ்டர்களைப் போட்டிருக்கிறார்கள். கட்சி வளர்ச்சிக்காகச் செய்யவேண்டியதுதான். விளம்பரம் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் ஏன் பிறரைப் பார்த்து விளம்பரம் செய்கிறார்கள் என்று சொல்ல வேண்டும்? அரசாங்கத் தரப்பில் கலைஞர் விளம்பரம் செய்து கொள்ளவில்லையா என்றும் சொல்கிறார்கள். தமிழக அரசாங்கம் வெளியிடுகிற தமிழரசு பத்திரிக்கையில் புரட்சித் தலைவர் ஆட்சியில் விளம்பரமே இருக்காது என்று பார்த்தேன். பக்கத்திற்குப் பக்கம் பதினேழு புரட்சித் தலைவர் படங்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் எம்.ஜி.ஆர். வருகிறார். 1—1—78 இதழில் 24-வது பக்கத்தில் நம்முடைய சுற்றுலாத் துறை அமைச்சர், அதற்குக் கீழே எம்.ஜி.ஆர். அடுத்த பக்கத்தில் ஆளுனர் இப்படி 17 விளம்பரங்கள் இருக்கின்றன. இதெல்லாம் விளம்பரம் இல்லை. கலைஞர் செய்தால், அது விளம்பரம்.





(பிற்பகல் 1-10)

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் செய்ததைவிட இன்றைய ஆட்சியாளர்கள் 100 மடங்கு வேகத்தில் விளம்பரம் செய்கிறார்கள். அப்படி விளம்பரம் செய்துகொண்டதால்தான், கலைஞர் ஆட்சி இறக்கப்பட்டது என்று நீங்கள் சொல்லிக்கொண்டிருக்கின்றீர்கள், சொல்லிக்கொண்டு அதையே செய்கின்றீர்கள் என்றால், அந்த முடிவினை நீங்களும் சந்திக்க உங்களைத் தயாராக்கிக்கொள்ளுங்கள் என்று உங்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கிராமக் குடிநீர் திட்டம்பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். கிராமம் கிராமமாக இனி குடிநீர் வசதி செய்து தரப் போகிறோம் என்று சொல்லும் இந்த ஆட்சியாளர்கள் அதற்காக 1978-79 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கியது 7.9 கோடி ரூபாய். எவ்வளவு இடங்களுக்கு இந்தத் தொகை போதும் என்று கேட்டால், ஆட்சியாளர்களே, அதற்கும் புள்ளிவிவரம் கொடுத்திருக்கின்றார்கள், 3,126 குடியிருப்புகளுக்காக இத்தொகை என்று. அவற்றில் வாழும் 15 லட்சம் மக்களுக்கு ஒரு ஆண்டு காலத்துக்கு நீங்கள் செய்யப்போகின்ற திட்டங்களுக்கு இந்தத் தொகை என்றால், இதே ரீதியில் சென்றால், இந்த நாட்டின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க 30 வருட காலமாவது ஆகும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** துணைத் தலைவர்களே, ஒரு கிலோமீட்டர் சென்றால்தான் குடிநீர் என்று சொல்லக்கூடிய கிராமங்கள் பல இருக்கின்றன. அவற்றுக்கு முதலிடம் கொடுக்கிறோம். பிறகு 2 கல்லுக்கு அப்பாலுள்ள இடங்கள், 3 கல்லுக்கு அப்பாலுள்ள இடங்கள் என்ற அடிப்படையில் கிராமங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஏதோ எங்கள் ஆட்சியிலே கிராம மக்களுக்குக் குடிநீர் அடியோடு இல்லாததுபோலவும் இப்போது இவர்கள் அங்கெல்லாம் குழாய்களைப்போட்டு குடிநீர் கொடுப்பது போலவும் விளம்பரம் செய்யப்படுகிறது. ஆனால் உண்மை என்னவென்றால், 1974-75 மற்றும் 1975-76 ஆம் ஆண்டுகளில் ரூ. 46 கோடி குடிநீர் திட்டங்களுக்காக ஒதுக்கிச் செலவிட்டோம். முதலில் கிராமப்புறங்களுக்கு மின்சாரம், அடுத்து குடிநீர், அதற்குப்பின் இணைப்புச் சாலைகள் என்ற முறையில் செயல் திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றி வந்திருக்கிறோம்.

எல்லாம் அண்ணா தி. மு. க. காரர்கள்தான் வரிசையாக உட்கார்ந்துகொண்டு வேலையை வாங்கிக்கொண்டு போகின்றார்கள். வேறு ஒரு நபருக்கு ஒரு வேலையைக் கொடுத்துவிட்டார் என்பதற்காக ஒரு ஏ. இ. மாற்றப்பட்டிருக்கின்றார். இந்த நிலைமைதான் இருக்கிறதே தவிர, ஆளும் கட்சிக்காரர்களுக்கு வேலை கொடுக்கப்படவில்லை என்றால், அதிகாரிகள் மாற்றப்படுகின்றார்கள். நிர்வாகத்தில் தலையீடு இல்லை என்று சொல்லுகின்றார்கள். சில காலம் வரையில் பத்திரிகைகள்கூட இப்படிப்பட்ட விளம்பரத்துக்கு ஆதரவாகத் தான் எழுதிக்கொண்டிருக்கும். ஆனால் ஒரு காலம் வரும், அப்போது எல்லாவற்றையும் பத்திரிகைகள் எழுதும் என்பது உறுதி. ஆளும் கட்சிக்காரர்களுடைய தலையீடு நிர்வாகத்தில் பெருமளவில் இருக்கிறது என்பது தான் உண்மை. குறிப்பாக புயல் நிவாரண வேலைகளை 100-க்கு 90 ஆளும் கட்சிக்காரர்கள்தான் எடுத்துச் செய்கின்றார்கள். வேண்டுமென்றால், அரசாங்கம் பட்டியலை எடுத்து வைக்கட்டும், நான் நிரூபிக்கிறேன்.

இப்படியெல்லாம் இருக்கும்போது, நிதி நிலை அறிக்கையில் நமக்கு மதுவிலக்கினால் ரூ. 140 கோடிக்கு நிதி இழப்பு, ஊதிய உயர்வினால் கணிசமான செலவு என்றெல்லாம் சொல்லுகின்றீர்கள். சொல்லிவிட்டு, 7-வது நிதி ஆணைக்குழு நமது மாநிலத்துக்குக் கணிசமான தொகையைத் தரும் என்றும் நம்பிக்கையைத் தெரிவித்திருக்கிறீர்கள். 6-வது நிதி ஆணைக்குழுவிலேயே சொல்லிவிட்டார்கள், தமிழகம் முன்னேறிய மாநிலம், ஆகவே உதவியாக எதையும் கொடுப்பதற்கு இல்லை என்று. ஆனால் அதை நீங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. காரணம், முன்னேறிய மாநிலம் என்று அவர்கள் சொல்லுவதை நீங்கள் ஏற்றுக்கொள்ளுவதானால், அத்துடன் ஒன்பதாண்டு கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இணைந்து நிற்கின்றது. ஆகவே அதை ஒப்புக்கொள்ள மாட்டீர்கள். ஆனால் நிதி ஆணைக் குழு, கல்வித் துறையில், போக்குவரத்துத் துறையில், சுகாதாரத் துறையில், தொழிற் துறையில் என்று தமிழகம் அநேகமாக ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றமடைந்திருக்கிறது, ஆகவே அதற்கு எந்த உதவியும் தருவதற்கு இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் இன்னும் வரும் என்று எண்ணிக்கொண்டிருக்கின்றார்கள். நான் பணிவோடு சொல்லிக்கொள்ளுகிறேன், 6-வது நிதிக் கமிஷன் ஏதும் கிடையாது என்று சொல்லிவிட்டார்கள். நீங்கள் அடிமைகளைப் போல இருந்தால், ஒன்றுமே கொடுக்க மாட்டார்கள். நீங்கள் மத்திய அரசோடு மோதுங்கள் என்று நான் சொல்லவில்லை. உரிமைக் குரலை எழுப்புங்கள். நாங்கள் மாநில சுயாட்சி என்கிறோம். உடனே இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சுலோகம் என்று சொல்லிவிடுகின்றீர்கள். அதிக அதிகாரம் வேண்டும் என்று புரட்சித் தலைவர் கேட்கின்றார். அது மட்டும் போதாது. நிதிக் கமிஷனிடமிருந்து நாம் கணிசமான தொகையைப் பெற்றாக வேண்டும்.



இல்லையென்றால், சில ஆண்டுகளில் நமது மாநிலம் மிகவும் பிற்பட்டதொரு மாநிலமாகப் போய்விடும் அபாயம் இருக்கிறது என்று மட்டும் இந்த நேரத்தில் எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வரிகளைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வரி போடக்கூடாது என்று நாங்கள் சொல்லமாட்டோம். நாங்களும் ஆட்சியாளர்களாக இருந்தவர்கள் தான். போடுங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் எவற்றுக்குப் போட வேண்டும்? டீசல் எண்ணெய்க்குப் போட்டிருக்கின்றார்கள். அதைப் பற்றி திரு. முத்து அவர்கள் குறிப்பிட்டுப் பேசினார்கள். பாவம், அவருக்கு விவசாயிகளின் கஷ்டங்கள் தெரியாது. நான் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: துணைத் தலைவரவர்களே, திரு. முத்து அவர்கள் சொந்தமாக விவசாயம் செய்பவர்தான், இப்போதுகூட அங்கே அறுவடைகாலமாக இருப்பதால்தான் அவர் இங்கே வர முடியவில்லை. அவரும் விவசாயிதான்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: அவர் அங்கே அறுவடை செய்து கொண்டிருக்கட்டும், அதுபற்றி எங்களுக்குக் கவலையில்லை. நான் சொல்வது வட ஆற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களில் நில அடிநீர் சான்றிதழ் பெற முடியாதவர்கள் ஆயில் எஞ்சினை வைத்துதான் விவசாயம் செய்துகொண்டிருக்கின்றார்கள். தஞ்சை நண்பர்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது. ஆற்றுப் பாசனத்தில் பயிரிடுகின்றவர்களுக்கும் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 90. அதே நேரத்தில் டீசல் எண்ணெய் எஞ்சின்களை வைத்துப் பயிர் செய்கின்றவர்களுக்கும் 90 ரூபாய் என்றால், எப்படி கட்டுப்படியாகும் என்று யோசித்துப் பார்க்க வேண்டும். ஏழைகள் இதனால் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இதையெல்லாம் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். அடுத்து, வரிவசூலித்தல்பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். நமது நிர்வாகத்தால் வரிகளை ஒழுங்காக வசூலிக்க முடிகிறதா என்று பாருங்கள்.

(பிற்பகல் 1-20)

பல பெரிய ஆலை அதிபர்களிடத்திலேயிருந்து இந்த அரசாங்கம் வரிகளை வசூல் செய்வதே இல்லை என்ற குற்றச்சாட்டை நான் சுமத்துகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பதவி ஏற்ற 8-வது நாளே சொன்னார். மால்கோ என்ற ஒரு நிறுவனம் சுமார் 9 கோடி ரூபாய் வரியாகச் செலுத்த வேண்டும். ஆனால் இன்னும் செலுத்தாமல் இருக்கிறது என்று சொன்னார். உடனே வசூலித்துவிடுவார் என்று எதிர்பார்த்தேன். அதைப்பற்றி சென்ற முறை மின்சார வாரியத்தின்மீது பேசும்போதுகூட பேசினேன். அப்போது மால்கோ நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு டெம்பரரி இஞ்ஜங்ஷன்

கோர்ட்டிலே வாங்கிவிட்டார்கள், எனவே வரியை வசூலிக்க முடியவில்லை என்று சொன்னார்கள். இது சொன்னது ஆகஸ்ட் 21-ஆம் தேதி. இன்றைக்கு, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரி ஆகியவற்றைத் தாண்டி, பிப்ரவரியில் இருக்கிறோம். இது வரை அது vacate செய்யப்படவில்லை. இதற்குள் அவர்கள் இப்போது Absolute stay வாங்க விண்ணப்பம் போட்டிருக்கிறார்கள். அதன் விளைவு இன்னும் 2, 3 ஆண்டுக் காலத்திற்கு இந்த 9 கோடி ரூபாய் வரி பாக்கியை நீங்கள் வசூலிக்கப் போவதில்லை. இது எங்களுக்குக் கிடைக்கிற தகவல். அரசாங்கத் துறையிலிருந்து அட்வகேட் ஜெனரல் என்ன சொல்கிறார் தெரியுமா? நீங்கள் Compromise ஆகப் போகலாமா என்கிறார்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** அந்த நிறுவனம் தர வேண்டிய 9 கோடி ரூபாய் பாக்கி யார் காலத்தில் ஏற்பட்டது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால், நலமாக இருக்கும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அமைச்சர் அவர்களுக்கு இதுபற்றி நான் பலமுறை சொல்லியாகிவிட்டது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேதான் இந்த வரி போடப்பட்டது. இது எனக்குத் தெரியாமல் இல்லை. நான் கேட்பதெல்லாம் இதை வசூலிப்பதிலே நீங்கள் தயக்கம் காட்டுவது ஏன் என்பதுதான்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** நீங்கள்தான் போட்டீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். எதற்குப் போட்டீர்கள் என்பதும் தெரியும், அதற்குப் பின்னாலே நடந்த கதைகளும் எனக்குத் தெரியும். வரிபோட்ட போது, அப்போதே நீங்கள் ஏன் அதை வசூல் செய்யவில்லை என்பதுதான் நான் கேட்கும் கேள்வி. இப்போது பொறுப்பேற்றுக் கொண்டுள்ள இந்த அரசு காலத்தில் ஏதோ 9 கோடி ரூபாய் அளவுக்கு வரி பாக்கி ஏற்பட்டு விட்டதைப் போலப் பேசுவதும், அதை இந்த அரசு வசூலிக்க முடியாது இருப்பதைப் போலவும் குற்றம் சாட்டிப் பேசுவதால், அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஏன் வசூலிக்கவில்லை என்பதையும் சேர்த்துப் பேசினால், இந்த நாட்டுக்கும், இந்த மன்றத்திற்கும் விஷயத்தைத் தெரிவித்துக்கொள்ள ஏதுவாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** எதற்காகப் போட்டோம் என்று அமைச்சர் அவர்கள் சந்தேகக் குறியை எழுப்புகிறார். அதைவிட சந்தேகத்திற்குரியது நீங்கள் ஏன் இன்னும் வசூலிக்காமல் இருக்கிறீர்கள் என்பது. நாங்கள்தான் வசூலிக்காமல் இருந்துவிட்டோம். சரி, ஒப்புக்கொள்கிறேன். நீங்கள் ஏன் இன்னும் வசூலிக்காமல் இருக்கிறீர்கள்? அதைச் சொல்லுங்கள்.





**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** வரியை வசூலிப்பது என்பது போய் அடித்துப் பிடுங்கிக்கொண்டு வந்துவிடுவதல்ல. சட்ட பூர்வமாகத்தான் வசூலிக்க முடியும். நாம் வசூலிப்பதற்காக நடவடிக்கை எடுக்கும்போது, அவர்கள் வழக்கு மன்றத்திற்குப் போய் விடுகிறார்கள். நாம் அங்கே போய் உடனே அந்த ஸ்டேயை Vacate செய்யுங்கள், எடுத்துவிடுங்கள் என்று சொல்ல முடியாது. அதற்கும் போதிய காலம் வேண்டும். அதைத்தான் இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அதைத்தான் சொல்லுகிறேன். நீங்கள் நினைத்தால் மற்றவர்கள் விஷயத்தில் முடியும். ஆனால் இந்த விஷயத்திலே ஏன் அது முடியாமல் இருக்கிறது. 'அலைஓசை' விவகாரத்தில் ரூ. $1\frac{1}{2}$ லட்சம் பாக்கி என்றால், சிட்டி சிவில் கோர்ட்டுக்கு அட்வகேட் ஜெனரலே ஓடி வருகிறார்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** 'அலைஓசை' விவகாரத்தில் இப்போது 'ஸ்டே' வாங்கியிருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** 'அலை ஓசை' விஷயத்தில் அவர்கள் ஸ்டே கேட்ட உடனேயே ஹைக்கோர்ட்டிலேயிருந்து அட்வகேட் ஜெனரல் சிட்டி சிவில் கோர்ட்டுக்கு ஓடுகிறார். இதுவரை வரலாற்றிலேயே இல்லாத ஒரு நிகழ்ச்சி அது. அட்வகேட் ஜெனரல் சிட்டி சிவில் கோர்ட்டுக்குப் போய் நின்று வழக்காடியது கிடையாது. இப்படி அட்வகேட் ஜெனரல் அந்தக் கோர்ட்டிலே போய் நின்ற உடனே அவர்கள் கட்டைத் தூக்கிக் கொடுத்து விட்டு போங்கள் என்று சொல்லிவிட்டார்கள். நாங்கள் ஹைக்கோர்ட்டிக்குப் போய் 'ஸ்டே' கேட்டோம். அங்கே 'ஸ்டே' கொடுக்கவில்லை. ஆனால் அவர்கள் ஒரு கண்டிஷனல் ஸ்டேதான் கொடுத்தார்கள். அதாவது மாதந் தோறும் ரூ. 15,000 பணம் கட்ட வேண்டும். இந்த அடிப்படையில்தான் 'கண்டிஷனல் ஸ்டே' கொடுத்திருக்கிறார்கள். நான் கேட்கிறேன். இந்த முறை ஏன் மால்கோவுக்குப் பொருந்தவில்லை? என்ன விவகாரம் என்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** விவகாரம் என்ன என்பது இந்த அரசில் இருப்பவர்களைக் காட்டிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். இந்த நிறுவனத்தின்மீது வரியைப் போடுகிறபோதே, சிக்கலாகப் போட்டுவிட்டு, வசூலிக்க முடியாதபடி வில்லங்கங்களை ஏற்படுத்திவிட்டு, இப்போது வசூலிக்கப் போனால், அவர்கள் அந்த வில்லங்கங்களைக் காட்டித்தான் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இந்தத் தகராறுபற்றி விவாதித்துக் கொண்டே போனால், நேரம் இருக்காது. நீங்கள் வசூலிக்கப் போவதில்லை. அது நிச்சயம். உங்களாலே முடியாது. உங்களுக்குத் தெரியவில்லை என்றால், நான் வழி சொல்லித் தருகிறேன். அந்த நிறுவனத்திற்கு ஒரு disconnection notice கொடுத்துப் பாருங்கள். அந்த நிறுவனத்திற்கு ஒரு disconnection notice போனால் அந்த மால்கோ நிறுவனம் உங்கள் காலடியில் வந்து நிற்குமே. பிறகு நீங்கள் கனடியன் பேசலாம்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை நாங்கள் ஏற்கத் தயாராக இல்லை. அந்தத் தொழில் மின்சாரத்தால் நடைபெறுகிற ஒரு தொழில்.

அதுவும் வெளிநாட்டு நிறுவனத்தோடு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிற ஒரு கூட்டுத் தொழில் நிறுவனம். அந்தத் தொழில் நிறுவனம் ஒரு மணி நேரம் நின்றால்கூட, எத்தனையோ லட்சக்கணக்கான ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்படும் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். அப்படியே இந்த அரசு அந்த நிறுவனத்தை நெருக்கினால், உடனே தொழிலாளர்களைத் திரட்டிக்கொண்டு வருவதிலும் உறுப்பினர்தான் தலைமை வகிப்பார் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு ஆற்காடு நா. வீராசாமி:** அது எப்படிப்பட்ட நிறுவனம் என்பது எனக்கு மிக நன்றாகத் தெரியும். disconnection notice கொடுங்கள் என்று சொல்லும்போது, ஒரு எச்சரிக்கையாகத்தான் சொல்லுகிறேன். disconnection செய்யத் தேவையில்லை. நான் சொல்லுவதை நன்றாகக் கவனிக்க வேண்டும். அந்த ஆலை அதிபர்களை இப்படி ஒரு மிரட்டு மிரட்டினாலொழிய, பணத்தை உங்களால் வசூலிக்க முடியாது.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மன்னிக்க வேண்டும். அடிக்கடி குறுக்கிடுகிறேன் என்று எண்ணக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, தமது நோக்கத்தைக் குறிப்பிட்டார்கள். எப்பொழுதும் நோக்கம் நல்ல நோக்கமாக இருக்க வேண்டும். மிரட்டலுக்காக என்று நோட்டீஸ் கொடுக்கும் முறையை இந்த அரசு ஏற்றுக்கொள்ளாது, நாங்கள் நோட்டீஸ் கொடுத்தால், முடிவு செய்து இறுதிவரை போராடுகிற வகையிலேதான் கொடுப்போம். ஒரு பக்கம் நோட்டீஸ் கொடுத்து மிரட்டுவது. இன்னொரு பக்கம் மேஜைக்கு அடியில் கையை நீட்டுவது என்ற பழக்கம் இந்த அரசாங்கத்தில் இருப்பவர்களுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.





**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நீங்கள் கையை நீட்டுகிறீர்களா இல்லையா என்பதெல்லாம் எனக்குத் தெரியும். மேஜைக்குக் கீழே கையை நீட்டுவது யார், மற்ற இடங்களிலே கையை நீட்டுவது யார் என்பதையெல்லாம் நாங்களும் நன்றாகத் தெரிந்துதான் வைத்துக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இருவரும் வரம்பைத் தாண்டிப் போகிறார்கள் என்பதை நினைவுறுத்த விரும்புகிறேன். இரண்டு கைகளும் வரம்பை மீறாமல் இருக்க வேண்டும். (சிரிப்பு)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மிரட்டலுக்காக என்றால், இந்தப் பணத்தை வசூலிக்க வேண்டும் என்ற நோக்கத்திலே நான் சொல்லுகிறேன். நீங்கள் அந்த மாதிரி ஒரு நோட்டீஸ் கொடுக்காவிட்டால், 'நம் அமைச்சர் பெருமக்கள் இருக்கிறார்கள், நாம் வரியைக் கட்டாவிட்டால், அவர்கள் எல்லாம் கோபித்துக் கொள்ளப் போகிறார்கள்' என்று ஆலை அதிபர்கள் யாரும் பணத்தைக் கொண்டு வந்து கட்டிவிடப் போவதில்லை. ஒன்பது கோடி ரூபாயை வசூல் செய்வதை 1½ வருஷமாக டிலே செய்தால், இன்டரஸ்ட் போகிறது.

(மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் எழுந்து பேச முனைந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** தயவுசெய்து உறுப்பினர் தமது பேச்சை முடிக்க விடுங்கள். அடிக்கடி குறுக்கிட்டால் எப்படி அவர் பேச்சை முடிப்பது?

* **மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** இப்போது உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் தான் கை நீட்டி பேசிக்கொண்டிருக்கிறார்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் கையை நீட்டுவது சரி. அமைச்சர் அவர்கள் கையை நீட்டிய சமாச்சாரம் நீதி மன்றத்திற்கே வந்துவிட்டதே.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** தயவுசெய்து தனிப்பட்ட முறையில் ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசிக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** நீதி மன்றத்திற்கு அது மீண்டும் வழக்காக வர இருக்கிறது. அதில் யார் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள், குற்றவாளி யார் என்பது இனிமேல் தான் தெரியும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அடுத்து, மோட்டார் வாகன வரி மூலம் கிடைக்கும் மொத்த வருவாயில் ஒரு சதவீதத்தை முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்குச் சேர்ப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது மிகவும் ஆபத்தான யோசனை. 'லம்ப் சம் கிராண்ட்' என்று ஏதாவது எடுத்துக்

கொள்ளுங்கள். ஆண்டுக்கு ரூ. 20 லட்சம் என்று ஒதுக்கிக்கொள்ளுங்கள். இப்படி பர்செண்ட்டேஜ் மூலம் நிதி ஒதுக்கினால், எதிர்காலத்தில் இந்த அவைகளின் அனுமதி இல்லாமலேயே முதலமைச்சர் எவ்வளவோ பணத்தை எடுத்துச் செலவு செய்யலாம் என்ற தவறான எண்ணம் வந்துவிடும். ஆகவே, இந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டு, ஏதேனும் ஒரு 'லம்ப் சம் கிராண்ட்' வாங்கிக் கொள்ளுங்கள் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஜஸ்டிஸ் இஸ்மாயில் கமிஷன் அறிக்கையைப்பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சிறையிலே அடிபட்டவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களாக இருக்கிற காரணத்தினாலோ அல்லது நாங்கள் துன்பப்பட்டதை எண்ணி மகிழ வேண்டும் என்ற காரணத்தாலோ என்னவோ தெரியவில்லை, ஒரு ஜட்ஜ் கொடுத்த அறிக்கையைக்கூட இந்த அரசாங்கம் நீண்ட காலமாகத் தாமதப்படுத்திக்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** ஜஸ்டிஸ் இஸ்மாயில் கமிஷனுடைய அறிக்கையைப் பொறுத்தவரை ஏதோ வேண்டுமென்றே காலம் தாழ்த்திக் கொண்டிருப்பதுபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். ஒரு கமிஷனுடைய அறிக்கை பெறப்பட்டு, 6 மாதத்திற்குள் அவை முன் வைக்கப்பட வேண்டும் என்பது மரபாக இருக்கிறது. அதைத் தொடர்ந்து இந்த அரசு விரைவாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. அந்த அறிக்கை இப்போது அச்சாகிக்கொண்டிருக்கிறது. எனவே அது விரைவில் அவையில் வைக்கப்படும். ஏதோ குருவி உட்கார்ந்து பனங்காய் விழுந்ததைப்போல், இவர்கள் கேட்டால்தான் வைப்பது போலாகிவிடக் கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இந்த மகிழ்ச்சியைக் கூடவா எங்களுக்குத் தரக்கூடாது. இந்த குருவி உட்கார்ந்து பனங்காய் விழுந்ததாக இருக்கக் கூடாதா என்று கேட்க விரும்புகிறேன். நீங்கள் எத்தனையோ முறை பனங்காய் விழுந்தபோதெல்லாம் உங்களால்தான் விழுந்தது என்று சொல்லுகிறீர்களே ? ஆனால் நாட்டில் நடைபெற்ற கொடுமைகளுக்குப் பரிகாரம் வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன். நாளைக்கு உங்களுக்கே அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படுமானால் இப்படிப்பட்ட அதிகாரிகளை உற்சாகப்படுத்தியதாக ஆகிவிடக்கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, வேலை வாய்ப்பு அதிகரிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆட்சியே நீடிக்குமானால், இப்போது வேலையில் இருப்பவர்கள் கூட வேலையை இழக்கப் போகிறார்கள் என்பதுதான் உண்மை. தமிழ் நாட்டில் கிரானைட் இண்டஸ்ட்ரீஸ் இன்றையதினம் இந்த அரசாங்கத்தின் கொள்கையாலே முடக்கப்பட்டிருக்கிறது.





**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நீங்கள் இன்னும் எவ்வளவு நேரம் பேசப்போகிறீர்கள் ?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இன்னும் அரை மணி நேரத்தில் முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மணியைப் பாருங்கள். இன்னும் 10 நிமிஷத்தில் முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இந்த கிரானைட் இண்டஸ்ட்ரியில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் ஒரு 4 பேர் இருக்கிறார்கள். அ.தி.மு.க. எம்.எல்.ஏ.-க்களும் ஈடுபட்டிருக்கிறார்கள். கட்சி சார்பற்றவர்களும் ஈடுபட்டிருக்கிறார்கள். மொத்தம் 156 பேர் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தத் தொழிலில் சுமார் 25,000 பேர் வேலை செய்கிறார்கள்.

அந்தத் தொழிலை சர்க்கார் மேற்கொள்ள இருக்கிறது. நான் சொல்லுகிறேன். இந்தத் தொழிலை சர்க்கார் எடுத்துக்கொண்டால், சரிவர நடத்த முடியாது. அதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. வருகிற கற்களில் ஒரு சில மாறி வந்துவிட்டால், ஜப்பான் நாட்டில் இருக்கிற 'வாங்குகிறவர்கள்' வாங்கமாட்டார்கள். எனவே இந்த நுணுக்கங்களைத் தெரிந்த தனிப்பட்டவர்கள்தான் இந்தத் தொழிலை, இந்தச் சிறு தொழிலை நடத்த முடியும். சிறு தொழில்களை தேசியமயமாக்கக் கூடாது என்று மத்திய அரசு கொள்கையை அறிவிக்கிறார்கள். மத்திய அரசின் பாதையில் போகிறோம் என்று சொல்கிற இந்த அரசு இங்கே இந்தத் தொழிலை, திராவிட முன்னேற்றக் கழகத்தவர் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக நசுக்கப் பார்க்கிறது. நீங்கள் இதை எடுத்துக்கொண்டால், இந்த 20,000 குடும்பங்களின் கதி என்ன ? ஆண்டுக்கு 10 கோடி ரூபாய் அந்நிய செலவாணி தமிழகத்திற்கு இந்தத் தொழில் மூலம் கிடைத்து வருகிறது. அது நமக்குப் பெருமையல்லவா ? இப்படிப்பட்ட தொழிலுக்கு எப்போதும் கிராக்கி இருப்பதில்லை. ஜப்பான்காரன் இப்போது வாங்கிக்கொண்டிருக்கிறான். 4 ஆண்டுகளுக்குப் பிறகும் இதை வாங்குவான் என்று சொல்ல முடியாது. இதையெல்லாம் புரிந்துகொள்ளாமல் ஏதோ மனத்திற்குப் பட்டதையெல்லாம் அறிவித்துவிட வேண்டும் என்று முடிவு செய்தால், நாட்டு மக்கள் பாதிக்கப்படுவார்களே தவிர, பயனடைய மாட்டார்கள். எனவே கிரானைட் இண்டஸ்ட்ரியை எடுத்துக்கொள்வதைப் பற்றி தயவுசெய்து மறுபரிசீலனை செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். இதை திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்களுக்கு ஆதாயம் என்று நினைக்க வேண்டாம். அப்படி நினைப்பீர்களானால், தயவுசெய்து அந்த

4 திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்களுக்கு மட்டும் இதை மறுத்து விடுங்கள். மற்றவர்களுக்குக் கொடுத்துவிடுங்கள் என்று கேட்டுக்

(பிற்பகல் 1-30)

கொள்கிறேன். இன்று ஆந்திராவில், கருநாடக மாநிலத்தில் இவர்களுடைய தொழில்கள் இருக்கின்றன. இங்கு தொழில்களை மூடியவுடனே, அங்கே ஓடுகிறார்கள். இங்கு தொழிலாளர்கள் குடும்பங்கள் அலைந்துகொண்டிருக்கின்ற நிலைமைதான் ஏற்படுகின்றது.

புரட்சிகரமான ஆட்சி என்று சொல்கிறார்கள். புரட்சித் தலைவர் ஆட்சியிலே கிருஷ்ணா நதி நீர் வருகிறது, வருகிறது என்று சொன்னார்கள். இந்திரா காந்தி அம்மையார் அவர்கள்கூட கிருஷ்ணா நதி நீர் திட்டம் கொண்டு வந்துவிட்டார்கள் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். இங்கே பிப்ரவரி 1976-ல் கடற்கரைக் கூட்டத்தில் பேசியிருக்கிறார்கள். வீராணம் திட்டத்தில் ஊழல் கண்டுபிடிக்க முயற்சித்தார்கள். அதற்குப் பதில் கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு வந்துவிடுவதாகச் சொன்னார்கள். 15 டி.எம்.சி. தண்ணீர் நமக்குக் கிடைக்க ஆந்திர மாநிலம் ஒத்துக்கொண்டிருக்கிறது, கேரள மாநிலம் ஒத்துக்கொண்டிருக்கிறது. இதற்கு அடிப்படையான முக்கியமான அரசு மகாராஷ்டிரா மாநிலம்தான். அந்த அரசிடம் செல்ல வேண்டும். நமது தலைமைச் செயலாளர் திரு. கார்த்திகேயன் அவர்கள், நமது பி.டபிள்யூ. டி. செயலாளர் எல்லோரும் அங்கு ஓடினார்கள். அங்கே மகாராஷ்டிரத்தில் போராட்டம். நான் இங்கே இப்படிச் சொல்வதாலேயே இந்தத் திட்டம் வராமல் தடைப்பட்டுவிடக்கூடாது. அதை இந்த அரசு விரைவாகக் கொண்டுவந்தால், நாங்கள் மிக்க மகிழ்ச்சி அடைவோம். அதைக் கொண்டுவரக்கூடிய சாத்தியக்கூறுகள் எங்கே இருக்கின்றன? இந்தத் திட்டம் நிறைவேற ஆயிரம் கோடி ரூபாய் ஆகும். அதற்கு எங்கே போவது? எங்கே உள்ளது? அதையும் நீங்கள் திறந்த கால்வாய் மூலம் கொண்டு வரவேண்டும் என்று சொல்கிறீர்கள். யாராவது போக்கிரிகள் தவறாகக் கால்வாய் நீரைக் கெடுத்துவிட்டால், அது குடி நீர் ஆயிற்றே, மக்கள் பாதிக்கப்பட மாட்டார்களா? இதைப்பற்றி யோசிக்க வேண்டும்.

ஏற்கனவே சேலம் மாவட்டத்திலேயுள்ள பைப்பற்றி ஒருவர் கம்ப்ளெயிண்ட் சொன்னார்கள். அதை பிறகு எடுத்துவிட்டார்கள். சென்னைக்கு கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு வருவோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். அதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழக அரசு பேச்சு வார்த்தையும் நடத்தியது. ஆனால் அந்தத் திட்டம் நமக்கு உடனடியாகப் பலன் தராது என்றுதான் வீராணம் திட்டத்திற்குப் போனோம். இந்த அரசு வேண்டு மானால் கோர்ட்டுக்குப் போக வேண்டும் என்ற நோக்கத்திற்காகச் சொல்லிக்





கொண்டிருக்கலாம். இந்த வீராணம் நீர்தான் சென்னைக்கு வர வேண்டும். வீராணம் நீரை விட்டால், வேறு வழியில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். அதைத்தான் நாம் நிறைவேற்ற வேண்டும். அந்த நீர் தான் இந்த சென்னை மக்களைக் காப்பாற்றப்போகிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நிலச் சீர்திருத்தத்தைப்பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி பட்ஜெட்டிலே ஒன்றுமில்லை. அது போலவே, குத்தகைதாரர்களுக்கு நிலம் சொந்தம் என்று சொன்னார்கள். அது மேடைப் பேச்சோடு போய் சரியாகி விட்டது. வரி ஏழைகளுக்குத்தான் போடுகிறார்கள், பணக்காரர்களுக்குப் போடவில்லை. ஏழைகளுக்குத்தான் வரி நிறையப் போட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசு ஜனநாயக அடிப்படையிலே வந்த ஆட்சி, ஜனநாயக ஆட்சி என்று சொல்கிறார்கள். இங்கு ஜனநாயக முறையிலே ஆட்சி நடக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அது ஜனநாயகத்திற்கே விரோதமானதாகத் தான் இருக்கிறது. மாநிலம் முழுவதும் தேர்தல் உண்டா என்றால் இல்லை. அதைக் கேட்டால், கிராமங்களில் உள்ள பஞ்சாயத்துக்கள் கலைக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். அங்கே எல்லாம் நியமனம்தான் செய்திருக்கிறார்கள். வேறு பல துறைகளிலும்கூட நியமனம் செய்கிறார்கள். ஆட்சி இயந்திரம் நியமனங்கள் மூலமாகத் தான் நடந்துகொண்டிருக்கின்றது. இது என்ன ஜனநாயகம் என்று கேட்டுக்கொள்கிறேன். சர்வாதிகார நாட்டிலேகூட இப்படியெல்லாம் நடைபெற்றதில்லை. கிராமத்தில் எல்லை வரையிலேயே நின்றுவிட்டால், சாதாரண குடி மக்களிடையே ஜனநாயக உணர்வை நாம் எப்படிக் காண முடியும் என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பூச்சி மருந்து தெளிப்பதிலேகூட ஊழல் என்று சொல்லி, கலைஞர் கருணாநிதி அவர்களை கைது செய்ய வேண்டும் என்பதுதான் இன்றைய லட்சியம். நீங்கள் கைது செய்யுங்கள். கோர்ட்டுக்குப் போகப்போகிறோம். அங்கு உண்மைகள் தெரிந்துவிடும். அங்கு பார்த்துக்கொள்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதில் சம்பந்தப்பட்ட ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை சி. பி. ஐ. அதிகாரிகள் கைது செய்தார்கள். உங்கள் ஆட்சியில் அந்த அதிகாரியை ஏன் சர்வீசிலே வைத்திருக்கிறீர்கள்? ஊழலை, லஞ்சத்தை ஒழித்து விடுவதாகச் சொல்லுகின்றீர்கள். ஒரு ஊழல் அதிகாரியை, ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரியை, சி. பி. ஐ. அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட அதிகாரியை நீங்கள் எப்படி ஜாயிண்ட் செக்ரட்டரியாக, சோசியல் வெல்பேர் டிப்பார்ட்மெண்டில் வைத்திருக்கலாம் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் அவர்களுக்குத் தெரியும். அவரையே அப்ரூவராக ஆக்குவீர்கள். கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு எதிராகச் சாட்சி சொல்ல வைப்பீர்கள். இன்று

அவரை மன்னிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள் என்றால், ஊழலை ஒழிப்பதாகச் சொன்னவர்களைப்பற்றி மக்கள் என்ன நினைப்பார்கள்? ஏதோ கலைஞர் கருணாநிதி அவர்களைப் பழிவாங்க வேண்டும் என்ற கொள்கையே தவிர, வேறு ஒன்றுமில்லை என்றுதான் சொல்லவேண்டும். இங்கே கோப்புக்களை யெல்லாம் மாற்றிவிட்டார்கள் என்று மேடையிலே பேசுகிறார்கள் முதலமைச்சர் அவர்கள். அவர் முதலமைச்சர், அப்படித்தான் பேசுவார்கள். இந்த விஷயங்கள் எல்லாம் பத்திரிக்கைகளிலும் வந்திருக்கின்றன.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இது கோர்ட்டுக்குப் போக வேண்டிய பிரச்சினையாக இருக்கிறது. அவையிலே அதைப்பற்றிப் பேசுவது பொருத்தமாக இராது என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** பத்திரிகைகளிலே வரலாம். ஆனால் இங்கே பொதுச் சபையிலே பேசக்கூடாதா என்று கேட்டுக்கொள்கிறேன். நான் அந்த வழக்குக்குள்ளேயே போக விரும்பவில்லை. சந்திரமௌலி என்று ஒரு அசிஸ்டென்ட். அவள்தான் கண்டுபிடித்தது. அது தான் உண்மை. கடைசியில் அவள்தான் அகப்பட்டுக்கொண்டாள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒருவரைப் பற்றி இந்த அவையில் குறிப்பிட்டுப் பேசுகிறபோது, 'அவள்' என்ற வார்த்தையை உபயோகிக்கக் கூடாது என்று தெரிவிக்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அப்படிச் சொல்லும் எண்ணம் ஒன்றும் எனக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** யாராக இருந்தாலும், அப்படிச் சொல்லக்கூடாது. ஒரு கிளார்க்காக இருந்தாலும்கூட, அப்படிச் சொல்வது நல்லதல்ல.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நான் அப்படிச் சொல்லவில்லை. மைக்கிலே அப்படிக் கேட்டிருக்கும். கோப்பு திருத்தப்பட்டதாகச் சொல்கிறார்கள். உண்மையில் அதில் சம்பந்தப்பட்ட பெரிய அதிகாரியை விட்டுவிட்டு . . . .

**மாண்புமிகு திரு பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த வழக்கு புலன் ஆய்வில் இருக்கிற நேரத்தில், இந்த அவையில் அதைப்பற்றிப் பேசுவது முறையாக இருக்காது என்பது என் எண்ணம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நான் வழக்குக்குள்ளேயே போகவில்லை. நான் சொல்வது, தவறு செய்யாதவரைக் கைது செய்கிறார்கள். நிரபராதியாக இருப்பவரைக் கைது செய்கிறார்கள். கடைநிலை ஊழியனை, கீழ் அதிகாரியாக



இருக்கின்ற காரணத்தினாலே, 164 ஸ்டேட்மெண்ட் கொடுக்கச் சொல்லி அவர் பயந்துபோய் நீதிபதியிடம் போகிறார். அவர் துன்புறுத்தலுக்குள்ளாகி இருக்கிறார். துணைத் தலைவரவர்களே, இதைவிட அவலநிலை இந்த நாட்டிலே உண்டா என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நேரம் இல்லாத காரணத்தினாலே, அதைப்பற்றி மேலும் சொல்ல விரும்பவில்லை.

இந்த ஆட்சியினுடைய லட்சியம் என்ன? கலைஞர் கருணாநிதியின் பெயர் எங்குமே இருக்கக்கூடாது என்பது. அவர் உயிரோடு இல்லாவிட்டாலும்கூட, பரவாயில்லை. கலைஞருடைய பெயரை எல்லா இடங்களிலும் அகற்றுங்கள் என்று சொல்கிறார்கள். அவருடைய ஆட்சியினுடைய சாதனைகளைக்கூடவா மறைக்க முயலுவது? தமிழ்நாடு அட்மினிஸ்ரேடிவ் ரிப்போர்ட் 1974-75, இது 1976 செப்டம்பர் மாதம் 23-ந்தேதியில் அச்சிடப்பட்டு, நம்முடைய தலைமைச் செயலாளர் திரு. கார்த்திகேயன் முன்னுரை எழுதியிருக்கிறார்கள்.

"This Report on the administration of the State of Tamil Nadu during the financial year 1974–75 gives a comprehensive picture of the salient features of the activities of all the Departments of **the Government during the period 1974–75."**

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய சாதனைகளைக்கூடவா இந்த அரசால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இவ்வளவு அழகான புத்தகத்தை அச்சடித்து என்ன செய்திருக்கிறார்கள்? முக்கியமான இடங்களிலே வைத்துவிட்டு, மீதியை எரித்துவிடும்படி சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்குக் காரணம் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ரிப்போர்ட் எத்தனை பிரதிகள் அச்சடிக்கப்பட்டன? மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படுகின்ற ரிப்போர்ட் 1974-75-க்கு ஏன் வழங்கப்படவில்லை? அதை இரவோடு இரவாகக் கொளுத்த வேண்டிய நிலைமை எப்படி வந்தது? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய சாதனைகளைப்பற்றித் தலைமைச் செயலாளர் அவர்கள் அதில் எழுதியிருக்கிறார்கள். அதையே கொளுத்துகிறார்கள் என்று சொன்னால், அதைவிட இந்த ஆட்சியிலே பயங்கரமான நிர்வாகச் சீர்கேடு வேறு என்ன இருக்க முடியும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடைசியாக, நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஆட்சியில் ஊழலை ஒழிக்கப்போகிறோம், லஞ்சத்தை ஒழிக்கப் போகிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். குடிநீர் வாரியத்தில் * அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் பல கோடி ரூபாய் அளவுக்கு ஊழல்கள் செய்திருக்கிறார்கள்.

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** தயவுசெய்து மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தனிப்பட்ட அதிகாரிகள் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடாது. அவையில் பேசும்போது தனிப்பட்ட நபரைப்பற்றிச் சொல்வது தவறு. ஒரு அதிகாரியைப்பற்றிக் கூறும்போது அவர் அவரைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது. ஒரு அதிகாரி என்று மட்டும் பொதுவாகச் சொல்லலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதியை எடுத்துவிடவேண்டும்.

(பிற்பகல் 1-40)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** குடிநீர் வடிகால் வாரியத்திலுள்ள சீப் இன்ஜினியர் அவர். அங்கேயுள்ள எக்சிகியூடிவ் இன்ஜினியர் எழுதுகிறார். அரசாங்கத்திற்கு எழுதுகிறார். சீப் என்ஜினியர் எப்படியெல்லாம் ஊழல் செய்திருக்கிறார் என்பதுபற்றி எழுதுகிறார். 1 கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் செய்திருக்கிறார் என்று எழுதுகிறார். எழுதியவரின் நிலை என்னவென்றால், அவர் டிஸ்மிஸ் செய்யப்பட்டார். யாரைப்பற்றி எழுதப்பட்டதோ அந்த சீப் இன்ஜினியர்மீது நடவடிக்கை எடுப்பதுபோல், சி.பி.ஐ. மூலம் நடவடிக்கை எடுத்து, அவரை சஸ்பென்ட் செய்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய தகவல் எனக்குத் தெரியாது. உடனடியாக முழுத் தகவலையும் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். குடிநீர் வடிகால் வாரியத்தின் சீப் இன்ஜினியர் பெயர் அதுவல்ல. உறுப்பினரவர்கள் முழுத் தகவலையும், இன்றையதினம் மாலையே கொடுத்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** விவரங்களை அமைச்சரவர்களிடம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு ஒரு வேண்டுகோள். ஏற்கனவே திரு. தீக்ஷிதர் அவர்கள், ஒருசிலரை மட்டும் மணிக்கணக்கில் பேசவிடுகிறீர்களென்று கோபித்துக்கொண்டார்கள். நான் அப்போதே சொல்லியிருக்கிறேன். உறுப்பினர் என்ற முறையில் இவ்வளவு நேரம் எடுத்துக்கொள்ளக் கூடாது. சீக்கிரம் முடிக்கவும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** கையிலே உள்ள கடிதத்தின் எண்ணைச் சொல்கிறேன். லெட்டர் நெம்பர் 9 கான்பிடின்ஷியல்/76, 3—4—1976 தேதியில் எழுதப்பட்ட கடிதம். அது தமிழ் நாடு வடிகால் வாரிய அலுவலகக் கடிதம். ஒரு எக்சிகியூடிவ் இன்ஜினியர் எழுதியது. அதன் நகலை வைத்திருக்கிறேன். குற்றச்சாட்டு சாட்டப்பட்ட சீப் இன்ஜினியர்மீது





எந்தவித நடவடிக்கையும் இல்லை. நிரபராதி கந்தப்பன் கைது செய்யப்படுவதும், குற்றம் சாட்டப்பட்ட, கோடிக்கணக்கில் ஊழல் செய்தவர்கள் பாதுகாக்கப்படுவதும் முறைதானா என்பதைக் கேட்க விரும்புகிறேன். தவறுகள், ஊழல்கள் செய்கின்றவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கிறார்கள். அதே நேரத்தில் நிரபராதிகளை தண்டிக்கிறார்கள். இதைத் தவிர ஒன்றும் நடக்கவில்லை. ஏதோ ஒரு சம்பிரதாயத்திற்காக நிதிநிலை அறிக்கையை வைத்திருக்கிறார்கள். நான் ஏற்கனவே சொன்னதுபோல் அது புஸ்வாணமாக இருக்கிறதென்று சொல்லி, என்னுடைய பேச்சை முடிக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 10-30 மணிக்குக் கூடும்.

(பிற்பகல் 1-42)

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

## 7. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

292. Notification issued with G.O. Ms. No. 1969, Rural Development and Local Administration, dated the 9th December 1977 in regard to certain variation to the Mylapore Western Section Area Town Planning Scheme of Madras City sanctioned in the Rural Development and Local Administration Department Notification No. 311, dated the 22nd April 1949, published at page No. 311 of Part I-A of the *Tamil Nadu Government Gazette*, dated the 26th July 1949, as subsequently amended. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

293. Notification issued with G.O. Ms. No. 1936, Rural Development and Local Administration, dated the 2nd December 1977 in regard to certain variations to the Mylapore–Teynampet Area Town-Planning Scheme of Madras City sanctioned in the Rural Development and Local Administration Department Notification S.R. No. B. 578/1960, dated the 22nd January 1960 published at pages 297-313 of Part I-A of the *Tamil Nadu Government Gazette*, dated the 18th May 1960. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

294. Notification issued with G.O. Ms. No. 2039, Rural Development and Local Administration, dated the 20th December 1977 making the Planning Authority (Levy of Development charges) Rules, 1975. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

*B. Reports, Notifications and Other Papers.*

54. Returns of Assets of the following Members of the Tamil Nadu Legislative Assembly as on 31st March 1977 placed on the table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislative Assembly on the 27th August 1969:—

1. Thiru C. Govindarajan
2. Thiru Thazhai M. Karunanidhi
3. Thiru Y. S. M. Yusuff
4. Thiru D. Venugopal
5. Hon. Thiru G. R. Edmund, Minister for Food and Co-operation.

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

---

புதன்கிழமை, 1978 மார்ச் 1:

---

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Free Legal Aid Committees.*

* 156 Q.—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Law be pleased to state—

(a) whether there is any proposal with the Government to set up "Free Legal Aid Committees" at District and Taluk levels, for the poor;

(b) if so, this scheme will be implemented; and

(c) whether this scheme would be implemented throughout the State?

இலவச சட்ட உதவிக் குழுக்கள்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாவட்ட, வட்ட மட்டங்களில், ஏழைகளுக்காக இலவச சட்ட உதவிக் குழுக்கள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது இத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படும்?

(உ) மாநிலம் முழுவதும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுமா?

[1978 மார்ச் 1

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR : (a) Yes.

(b) The Tamil Nadu State Legal Aid and Advice Board has constituted District Committees for legal aid and advice in Madras City and other districts. The Taluk Committees will also be formed later after examining the working of the Committees constituted in the districts.

(c) Yes.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த நல்ல திட்டத்தை ஏழைகள் எப்படிப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பது தெரியவில்லை. அதற்கான 'கைட் லைன்ஸ்' ஏதாவது இருக்கிறதா? பாதிக்கப்பட்ட ஏழை, அதாவது 'அக்யூஸ்ட்' எந்த வழக்கறிஞரை எப்படி அணுகுவது என்று 'கைட் லைன்ஸ்' கொடுப்பதற்காக ஒரு அதிகாரியை நியமித்து உதவும் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIAR: Mr. Deputy Chairman, Sir, there are the District Committees and what are called the Counselling Committees. The potential litigant who is poor and indigent goes and appears before the Committee and undergoes the Means Test. After examining the litigant and his condition of poverty and indigence and after finding the *prima facie* nature of the case in which the litigant wants proceedings to be taken in the Court, the Counselling Committee comes to a conclusion. After coming to the conclusion, they advise and such advice of the Counselling Committee is followed by the District Committee.

திரு. வே. தங்கப்பாண்டியன் : அந்த ஸ்கிரீனிங் கமிட்டியில் முழுவதும் வழக்கறிஞர்களே இருப்பார்களா? அல்லது நான்-அஃபிஷியல் ( Non-officia யாராவது இருப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.
I want tc know whether the Screening Committee is composed of only lawyers or whether there will be others also in such Committee

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR : Sir, used the word "Counselling Committee". The Committee mostly consists of lawyers and those lawyers are nominated by the Distric Judge. They are quite competent in the profession.

திரு. எல். பலராமன் : இந்த இலவச சட்ட ஆலோசனைக் குழு, தொண்டு நிலையமாக ஏற்படுத்தப்படுமா, அல்லது தொழில் ரீதியாக ஏற்படுத்தப்படுமா தொண்டு நிலையமாக என்றால், தேவையான ஸ்டாம்ப் டியூட்டி, ( Stamp Duty) இன்னும் மற்ற செலவுகளுக்கு அரசாங்கம் என்ன உதவியைச் செல



1978 மார்ச் 1]

இருக்கிறது? மற்ற பொது மக்களிடமிருந்து வசூலித்து ஏழைகளுக்குச் செலவு செய்யலாம் என்ற அளவுக்கு அரசு பரிசீலித்திருக்கிறதா? இது குறித்த விதி முறைகள் ஏதாவது அரசிடம் இருக்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR: Sir, the question of the hon. Member comprises a number of questions and I think it needs a very detailed answer. A separate question may be put.

திரு. எம். சங்கரலிங்கம் : ஒரு வழக்குக்கு உதவி வேண்டி மனு கொடுக்கிற ஏழை யார் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா? இவ்வளவு ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்குத்தான் இலவசச் சட்ட ஆலோசனை வழங்குவது என்று ஏதாவது நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா?

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR : Sir, the Committee applies the means test and if a potential litigant satisfies the test of pauperism as in Order XXXIII of the Code of Civil Procedure, the Counselling Committee advises that the litigant can go ahead under the provisions of the said Order of the C.P.C. If it is otherwise, the Counselling Committee, on being satisfied about the poor condition of the litigant, takes further steps to prosecute his case in the court.

Thiru A. R. DAMODARAN: Sir, may I know whether this Free Legal Aid Committee is constituted by selection from advocates only. or whether Members of the Judiciary are also involved in this Committee?

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR : Sir, at the district level, the District Judge is practically the directing Head of the entire Committee. The other Members of the Committee are, I think, only lawyers.

Thiru A. R. DAMODARAN: Sir, if the District Judge is the Chairman of this Committee, would there not be a conflict of interests in relation to the Members of the Judiciary participating in such Committees?

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR : Sir, I see none.

திரு. எம். சங்கரலிங்கம்: ஏழைகளுக்கு இலவச சட்ட உதவியளிக்கிற வழக்கறிஞர்களுக்கு என்ன விதத்தில் ஊதியம் அளிக்கப்படுகிறது?

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR : Sir, I confess that I have no material at present. If a separate question is put, I will be able to reply.

திரு. ஆ. பாலசுப்ரமணியம்: ஏழைகளுக்கு இலவசச் சட்ட ஆலோசனை வழங்குவது அவசர நிலை இருந்தபோது தொடங்கப்பட்டது. ஆனால் இது வரையிலே அது அமுல்படுத்தப்படவில்லை. ஆகவே ஒரு குறிப்பிட்ட கால வரையறையை வைத்து, அமுல்படுத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon Thiru K. NARAYANASWAMY MUDALIYAR : Sir, I think the question is based on some amount of misapprehension. No doubt it is during the Advisers' regime that it started. But later on, there has been a good amount of progress in this branch of legal activity. The Madras District Committee and Mofussil District Committees were required to deal with the applications, after their constitution in July 1977. The Madras District Committee was inaugurated on 24th August 1977. The Committees at the various District Headquarters were constituted in September 1977. Thereafter a certain amount of screening and examination of these poor litigants has been done. Some litigants have been subjected to the means test. On 15th November 1977, 204 applications have been disposed of by various District Committees and in respect of eight cases, the Committees felt that legal aid should be given and such aid has been given. Again 16 more cases have been recommended for legal aid. Services of lawyers in proceedings in the court have been provided. Therefore, the hon. Member may rest assured that further steps have been taken in pursuance of what has been started during the Advisers' regime.

Thiru A. R. DAMODARAN: Sir, when I referred to conflict of interests. I meant this: Supposing the Chairman of the Committee feels that a particular case should be taken up by an Advocate and argued before the Court and supposing that the same case comes before the particular Judicial Officer, would there not be a conflict of interests?





The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR : Sir, I still see none. In the Committee which conducts the means test, the District Judge may not sit. Only the Counselling Committee conducts the means test and gives advice about the case. The District Judge presides over the District Committee and he is not going to be interested in any particular matter or litigant and in seeing whether X or Y brief is entrusted to A or B advocate.

*Naxalites.*

* 157 Q.—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Law be pleased to state the number of prisoners belonging to Naxalite movement in the Jails of Tamil Nadu as on 8th September 1977?

நக்ஸல்பாரிகள்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

8—9—1977 ஆம் நாளன்றுள்ளபடி, தமிழ்நாட்டு சிறைச்சாலைகளில் நக்ஸல்பாரி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் உள்ளனர்?

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR : Thirty-one.

திரு. வே. தங்கப்பாண்டியன்: நக்சலைட் என்று எப்படி அரசாங்கம் முடிவெடுக்கிறது? ஒரு குற்றவாளி நக்சலைட் என்று எந்த ஆதாரத்தின்மீது பெயர் கொடுக்கப்படுகிறது? முப்பத்தொன்று நக்சலைட் கைதிகளும் குறிப்பிட்ட குற்றங்களுக்காக தண்டனை பெற்றார்களா? வேறு அரசியல் நோக்கத்திற்காக முன்கூட்டியே கைது செய்யப்பட்டார்களா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: The hon. Member has characterised this as 'Naxalite movement' and so, I think that the hon. Member must be knowing why they are called 'Naxalites'. The hon. Member may please look into his question.

திரு. வே. தங்கப்பாண்டியன்: இன்னும் கொஞ்சம் விவரமாகச் சொன்னால் நாட்டுக்கு நல்லது என்று கருதுகிறேன். 'எக்ஸ்ட்ரீம்' கம்யூனிஸ்ட்க்கு நக்சலைட் என்ற பெயர் கொடுக்கப்படுகிறது. மத்திய சென்னைச் சிறைச்சாலையில் நாங்கள் இருக்கும்போது, பலர் அதைத் தான் சொன்னார்கள். நல்ல இளைஞர்கள், சட்டக் கல்லூரி, மருத்துவக் கல்லூரியில் படிக்கிறவர்கள் அங்கே அடைக்கப்பட்டிருந்தார்கள். பொதுவாக அவர்களை நக்சலைட்டுகள் என்று கொண்டு வந்து அடைத்திருப்பதாகச் சொன்னார்கள். வேண்டு

மென்றே போலீசாருக்கும், அரசாங்கத்திற்கும் வேண்டாதவர்களைக் கொண்டு வந்து அப்படி வைத்திருக்கிறார்களா? ஏதாவது ஆதாரத்தோடு கைது செய்து வழக்குப் பதிவு செய்து நக்சலைட்டுகளைக் கைது செய்கிறார்களா?

(முற்பகல் 10-40)

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR: Sir, if the police has mis-named any person and has falsely labelled any person as 'Naxalite', the matter may be brought to the notice of the Government and certainly the Government will look into that.

**திரு. எம். சங்கரலிங்கம்:** துணைத் தலைவர் அவர்களே, இப்போது நக்சல் பாரி என்று 31 கைதிகள் இருப்பதில் எத்தனை பேர் பட்டதாரிகள்? எத்தனை பேர் 30 வயதுக்குள்ளாக உள்ளவர்கள்? அவர்கள் எத்தனை வருடங்களுக்கு மேலாக இருந்து வருகிறார்கள்?

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR: Sir, I do not have these particulars. A separate question may be put.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம்:** தமிழ் நாட்டில் சிறைச்சாலையில் இருக்கிற நக்சலைட்டுகளைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது இல்லாமல் இப்போது தமிழகத்தில் இந்த நக்சல்பாரி இயக்கம் இருக்கிறதா? அதுபற்றி அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறதா?

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR: Sir, actually this does not arise from the principal question.

**திரு. எம். சங்கரலிங்கம்:** நக்சல்பாரிகளாக இப்போது இருக்கிறவர்களுடைய குடும்பத்திலிருந்து, வேண்டுமென்றே அவர்களுடைய வேலை கெடுக்கப்பட்டதால் வேறு விரோதப்போக்கினால் தீவிரமான நடவடிக்கையில் ஈடுபட்டார்கள் என்றும் வேண்டுமென்றே கைது செய்யப்பட்டு சிறையில் வைத்திருக்கிறார்கள் என்றும் அரசுக்கு மனு வந்திருக்கிறதா? அதுபற்றிப் பரிசீலனை செய்யப்பட்டதா?

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR: Sir, the Government have no such information at present.

**திரு. எல். பலராமன்:** இந்த நக்சல்பாரி இயக்கம் எந்த மாவட்டத்தில் தீவிரமாக இயங்கிக்கொண்டிருக்கிறது? கைது செய்யப்பட்டவர்கள் 31 பேர் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்? இந்த இயக்கம் தீவிரமாக இருக்கிற மாவட்டங்களில் அவர்களைத் திருத்தவும் நல்லமுறையில் நடத்தவும் ஆலோசனை கூற அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா?





The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR: Sir, I do not have the material particulars relating to the various questions of the hon. Member. I have got only this break-up.

At Vellore, there is one;

At Central Prison, there are six.

Thiru A. R. DAMODARAN: I think the hon. Member asked about the origin of the movement.

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR: Sir, I have no material. Anyhow, this does not arise from the main question.

**திரு. என். முத்து:** இந்த நக்சல்பாரிகள் 31 பேரும் எந்தக் காலத்தில் கைது செய்யப்பட்டார்கள்? அதற்கான விவரம் சொல்ல முடியுமா?

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR: Sir, a separate question may be put. In fact, after 8th September 1977 one person arrested under the MISA and another Naxalite prisoner were released. So, as on 14th December 1977, the number is only 29.

*Language Problem.*

* 158 *Q.*—Thiru ARCOT N. VEERASWAMI: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any letter was received by the Hon. the Chief Minister of Tamil Nadu from the Hon. the Prime Minister of India regarding the language problem, during the end of July, 1977; and

(*b*) if so, the details thereof?

**மொழிப் பிரச்சினை.**

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1977-ஆம் ஆண்டு ஜூலை இறுதியில் மொழிப் பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமரிடமிருந்து தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு ஏதாவது கடிதம் வந்ததா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) & (இ) இவ்வினாவிற்கு பதிலளிப்பது பொது நலனுக்கு ஒவ்வாது என்பதால் இவ்வினாவிற்கு பதிலளிக்க இயலாது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மொழிப் பிரச்சினை பொது நலத்தைப் பாதிக்கக் கூடிய பிரச்சினையாகக் கருதப்படுவதற்கு வாய்ப்பில்லை. நேற்று சட்டமன்றப் பேரவையிலே இது பற்றி விவாதித்திருக்கிறார்கள். ஆனால் ஒரு பிரதமர் இந்த நாட்டின் முதலமைச்சருக்கு மொழிப் பிரச்சினையில் கடிதம் எழுதியிருக்கும்போது அந்த மொழிப்பிரச்சினைபற்றி இந்த நாட்டு மக்களுக்கு எதுவுமே தெரியாமல் மூடு மந்திரமாக வைத்திருப்பது முறையா? அப்படி என்ன இந்த அரசாங்கத்திற்கு இக்கட்டான சூழ்நிலை அதில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மொழிப் பிரச்சினைபற்றி யாருக்கும் அபிப்பிராய பேதம் கிடையாது. முதலமைச்சருக்கும் பிரதமருக்கும் இடையிலே நடந்த கடிதத் தொடர்பைத் தெரிவிப்பது பொது நலனுக்கு ஒவ்வாதது என்று கருதியதால், தெரிவிக்க இயலாது என்று சொல்லலாம்.

திரு. எம். சங்கரலிங்கம்: பிரதமரும் முதலமைச்சரும் சொந்தக் காரியங்களைப்பற்றி எழுதியிருந்தால், இந்த நாடு தெரிந்துகொள்ள விரும்பாது. ஆனால் பிரதமரும் முதலமைச்சரும் எழுதிக்கொண்டது இந்த நாட்டின் மக்களுடைய எதிர் காலப் பிரச்சினையாக உள்ள மொழிப் பிரச்சினைபற்றி, மொழி வழி ஆட்சி பெறவும், அவர்களுடைய முன்னேற்றத்தில் ஈடுபடக் கூடியவர்களின் முக்கியமான உயிர்ப் பிரச்சினையாக உள்ள ஒன்றில் எழுந்த கடிதத் தொடர்பு பற்றியது இது. வேறு மாநிலங்களிலே, கேரளாவிலே மத்தியிலிருந்து கடிதம் வந்ததற்கு மலையாளத்தில் பதில் எழுதுவோம் என்று சட்டசபையில் அந்த முதலமைச்சர் அறிவித்திருக்கும்போது, அதேபோல இங்கேயும் கடிதம் வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. கடிதம் வந்ததாக ஒப்புக்கொள்ளப்படும்போது கடிதத்தில் என்ன இருந்தது, என்ன பதில் எழுதப்பட்டது என்று அறிய இந்த நாட்டு மக்களுக்கு உரிமை உண்டு. மத்தியிலே யார் எந்தப் பொறுப்பிலே இருந்தாலும், அந்த உரிமையை மறுக்க முடியாதாகையால், அந்தக் கடிதத்தின் சாரத்தையும், பதிலின் சாரத்தையும் முதலமைச்சர் அவர்கள் இன்றில்லாவிட்டாலும் நாளையோ அல்லது அதற்கு மறுநாளோ இந்த அவைமுன் வைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசாங்கம் நடத்துகிற எல்லாக் கடிதப் போக்குவரத்தையும் பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டிய நிலைமை இல்லை. அரசுக்கும் சில உரிமைகள் உண்டு. பொது



நலனுக்கு ஒவ்வாத வகையில் அவற்றை வெளியிடவில்லை என்று சொல்கிறோம். மொழிக்கொள்கையில் இந்த அரசின் கருத்தை பல்வேறு சந்தர்ப்பங்களில் விளக்கியிருக்கிறோம். அணுவளவாவது அதிலிருந்து விட்டுக் கொடுக்க இந்த அரசு தயாராக இல்லை என்ற உறுதியை அளிக்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: முதலமைச்சருக்கு வந்த கடிதத்தைப் பொதுநலம் கருதி வெளியிட மறுக்கிறார்கள். மொழிப் பிரச்சினைபற்றி அரசாங்கக் கொள்கையை விளக்கியிருப்பதாகவும் சொல்கிறார்கள். எனக்குக் கிடைத்த தகவல்படி, முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்ற நேரத்தில் முதலமைச்சரும் பிரதமரும் தனியாகப் பேசும்போது, நாட்டின் நன்மையைக் கருதி இந்தியைக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்பதில் அக்கறை செலுத்த வேண்டுமென்றும், பள்ளிகளில் கற்றுத்தர நடவடிக்கை எடுங்கள் என்றும் சொல்லியதைத்தான் கடிதத்தில் எழுதியிருப்பதாக அறிகிறேன். அதனால்தான் அந்தக் கடிதத்தை வெளியிடுவதில் அரசாங்கத்திற்கு இக்கட்டான சூழ்நிலை ஏற்படுகிறது, குழப்பம் வருகிறது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இந்தக் கேள்வி 19—8—77ல் கேட்கப்பட்டது என்று கருதுகிறேன். அதற்குப் பின்னால் ஏற்பட்ட சம்பவத்தை உறுப்பினர் குறிப்பிடுகிறார்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தேர்தல் முடிந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று இரண்டு மூன்று முறை பிரதமர் அவர்களைச் சந்தித்துப் பல்வேறு விவரங்களை விவாதித்த நேரத்தில், மொழிப் பிரச்சினையைக் குறித்து, நாட்டின் நிலைமையைப் பொறுத்து அகில இந்திய அடிப்படையில் இந்தியைப் பாட மொழியாக ஆக்குவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பிரதமர் முதலமைச்சரிடம் கேட்டுக்கொண்டதை ஒட்டி, பேச்சு வார்த்தை நடந்ததாகவும், அதைப்பற்றிக் கடிதம் வந்ததாகவும் சொல்லப்படுகிறதே, அது உண்மையா இல்லையா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படிச் சொல்வதற்கு ஆதாரம் இல்லை.

திரு. வே. தங்கப்பாண்டியன்: பிரதமர் தேசாய் அவர்கள் முதலமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் அப்படி என்ன பொதுமக்களுக்கு வேண்டாத கருத்துக்கள், தெரிந்துகொள்ளத் தகாதவை, சொல்லப்பட்டிருக்கின்றன? டைம் காப்ஸ்யூல் கூட மறுபடியும் தோண்டப்பட்டு எடுத்துப் பார்க்கிறார்கள்.

ஆகையால் கடிதத்தின் சாரத்தையாவது படித்துக் காட்டினால்கூட, மேலவைக்கு அது உபயோகமாக இருக்குமென்பதால் அமைச்சர் அவர்கள் அதைச் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பொது நலனுக்கு ஒவ்வாதது என்பதால் வெளியிடவில்லை என்று கூறினேன். எனக்குத் தெரியாமலேயே என்னிடமிருந்து அந்த விஷயத்தை வாங்குகிற முயற்சியில் உறுப்பினர் அவர்கள் ஈடுபடுகிறார்கள் என்று கருதுகிறேன். டைம் காப்ஸூலைப் பற்றிச் சொன்னார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் ஆட்சிக்கு வந்தவுடன், அதுபோன்ற காரியங்களைச் செய்வார்கள். ஒருவேளை நீங்கள் வர முடிந்தால், அந்தக் காரியத்தைச் செய்யலாம்.

திரு. ஜார்ஜ் கோமகன் : பிரதமர் தேசாய் அவர்கள் எந்த மாநிலத்தின் மீதும் அவ்வாறு மொழித் திணிப்பு இல்லை என்று சொல்லியது அமைச்சருக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அவர்களை அப்படிச் சொல்ல வைத்துக் கொண்டிருப்பதே இந்த அரசுதான்.

## *Teachers Provident Fund.*

* 159 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of Thiru P. R. THOMAS) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that teachers serving in Government Schools are eligible to withdraw up to a maximum of 70 per cent of the amount standing to their credit in the Teachers Provident Fund Account, as loans; and

(b) if so, whether this privilege will also be extended to the teachers serving in Aided Schools ?

## ஆசிரியர்கள் வருங்கால வைப்பு நிதி.

திரு. கே. எஸ். கணபதி (திரு. பி. ஆர். தாமஸ் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசினர் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், வருங்கால வைப்பு நிதிக் கணக்கில் அவர்கள் பேரில் உள்ள தொகையிலிருந்து உயர்வாக 70 சதவீதம் வரை கடன் வாங்குவதற்குத் தகுதியுடையவர்கள் என்பது உண்மையா ?



(இ) ஆமெனில், அரசு மானியம் பெறும் தனியார் பள்ளிகளில், பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் இச்சிறப்புரிமை கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) இது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

(முற்பகல் 10-50)

திரு. கே. எஸ். கணபதி : புதிதாக வெளியிடப்பட்டுள்ள அரசு உத்தரவின் படி. அரசு ஊழியர்கள் வருங்கால வைப்பு நிதியிலிருந்து, கடன்களைப் பெறுவதில் பல கட்டுப்பாடுகளை விதித்திருக்கின்றார்க. யாருக்காவது காது குத்தினால் இந்த நிதியிலிருந்து கடன் பெறலாம் என்று இருப்பதால், அவர்கள் யாருக்காவது காது குத்த வேண்டியிருக்கிறது. முன்பு இருந்ததைப்போல அதிலிருந்து சுலபமாகக் கடன்களைப் பெறுவதற்கான வழி முறைகளை அரசு ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதுபற்றிய கருத்துக்கள் தக்க நேரத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. எம். சங்கரலிங்கம் : இந்த நிதியிலிருந்து அரசு ஊழியர்கள் தங்களுக்கு வேண்டிய கடன்களைப் பெறுவதில் பல கட்டுப்பாடுகளை அரசு இப்போது விதித்திருக்கின்றது. முன்பெல்லாம் மனைவியோ குழந்தையோ நோய்வாய்ப்பட்டிருந்தால், அதிலிருந்து ஓரளவிற்குக் கடன் பெறலாம். ஆனால் இப்போது அப்படி ஏதாவது கடன்களைக் கேட்டுப் பெற வேண்டுமென்றால், மருத்துவச் சான்றுகள், மருந்துகளை வாங்குவதற்கு எவ்வளவு ஆகும் என்பது போன்றவற்றுக்குச் சான்றிதழ்கள் ஆகியவற்றை முன்கூட்டியே கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. இப்படிப்பட்ட விதிகளினால் அரசு ஊழியர்கள் பெருந்தொல்லைக்குள்ளாயிருக்கின்றார்கள். எனவே இவற்றைத் தளர்த்தி முந்தைய நிலையை மீண்டும் கொண்டுவர அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : உறுப்பினர்கள் சொல்லும் கருத்துக்களைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுகிறோம். இந்த நிதியே வருங்கால சேமிப்பு நிதி. அதனுடைய தன்மையையே அடியோடு இழந்துவிடத்தக்க காரியங்களைச் செய்ய வேண்டுமா என்று உறுப்பினர்களும் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும்

திரு. எம். சங்கரலிங்கம் : அவர்கள் இருந்தால்தானே அவர்களுக்கு வரும் காலம் என்று இருக்கப்போகிறது ? அவர்களுடைய வைத்தியச் செலவிற்காகத் தான் சில சமயங்களிலே கடன்தொகை வேண்டும் என்கிறார்கள். அந்த விதத்தில் முன்பு இருந்த விதிகள் போதுமானவையாக இருந்தன. இப் போது பிறப்பிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் கடுமையானதாக இருக்கின்றன. எனவே அவற்றைப் பரிசீலித்துத் தளர்த்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர் களுடைய யோசனையை நான் கருத்தில் கொள்ளுகிறேன்.

திரு. கே. எஸ். கணபதி : இந்த சேமிப்பு நிதி என்பது 'கிராசுவிடி' கொடுப்பது என்ற முறை வருவதற்கு முன்பு இருந்த ஒன்று. இப்போதும் அந்த சேமிப்பு நிதி முறையை வைத்திருக்கிறோம். ஆனால் கிராசுவிடி கொடுப்பது என்பது வந்த பிறகு இந்த சேமிப்பு நிதியின் முக்கியத்துவம் வெகுவாகக் குறைந்துவிட்டது. அந்த நிலையில், அரசு ஊழியர்கள் இந்த சேமிப்பு நிதியிலிருந்து தங்களுக்கு வேண்டிய கடன் வசதிகளைப் பெற வேண்டிய வழி முறைகளை எளிதாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வருங்கால சேமிப்பு நிதியின் முக்கியத்துவம் குறைந்துவிட்டது என்ற கருத்துக்கு அரசு வரவில்லை.

### Privately Run Nursery Schools.

* 160 Q.—Thiru K. S. GANAPATHI (on behalf of Thiru G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is any proposal with the Government to regulate the privately run nursery schools in the State;

(b) if so, the details thereof ;

(c) the reason therefor; and

(d) when the regulations are proposed to be implemented?



### தனியார் நடத்தும் பாலர் பள்ளிகள்.

திரு. கே. எஸ். கணபதி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) இம் மாநிலத்தில் தனியார் நடத்தும் பாலர் பள்ளிகளின் நிர்வாகத்தை முறைப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

(உ) அதற்கான காரணம் என்ன ?

(எ) ஒழுங்கு முறை விதிகள் எப்போது செயற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) & (இ) தனியாரால் நடத்தப் படும் நர்சரி பள்ளிகளை வரன்முறைப்படுத்துவதற்கான தக்க வழிமுறைகள் ஏற்படுத்துதல் குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

(உ) அங்கீகாரம் பெறாமல் நர்சரி பள்ளிகள் ஆரம்பித்தலை கட்டுப்படுத்து வதற்காக.

(எ) கூடிய விரைவில் செயல்படுத்தப்படும்.

Thiru A. R. DAMODARAN: Sir, any short supply in any commodity leads to black-market. The fact that the Government are not running nursery schools has led to black-marketing in English Medium education. May I know from the Government whether, as in Maharashtra State, fee-levying nursery schools would be started by the Tamil Nadu Government to stop this black-marketing in education?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல், அவ்வளவு கடுமையான வார்த்தைகளை உபயோகிக்க விரும்பவில்லை நான். நான் சொல்ல விரும்புவது, அவர் கூறுவதைப் போல அதிலே 'பிளாக் மார்க்கெட்' இருந்தாலும் அது 'அடல்டரேடெட்' ஆக இருக்கக்கூடாது என்ற முறையில்தான் நாம் அதை அணுக வேண்டும்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : தனியார் நடத்தும் பாலர் பள்ளிகள், இப்படிப்பட்ட பள்ளிகள், மாநிலத்தில் எவ்வளவு இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[1978 மார்ச் 1

**திரு. எல். பலராமன் :** தனியார் நடத்தும் இப்படிப்பட்ட நர்சரி பள்ளிகள் சிறந்த முறையில் நடப்பதால், தங்கள் குழந்தைகளுக்கு அதில்தான் நல்ல எதிர்காலம் இருக்கின்றது என்று ஓரளவிற்குப் பெற்றோர்கள் எண்ணுகின்றார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படியானால், அவற்றை ஊக்குவிக்க அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமா? அல்லது இவற்றுக்குப் பதிலாக வேறு பள்ளிகளை நடத்துவதற்கு அரசு மாற்றுவழிகளைப் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன். காரணம் அப்படிப்பட்ட கல்விக்கூடங்கள் நல்ல முறையில் நடக்கின்றன என்பதை இந்த அவையிலேயே பலர் ஒப்புக்கொள்ளுவார்கள் என்று எண்ணுகின்றேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அப்படிப்பட்ட நர்சரி பள்ளிகளின் தரம்தான் சிறந்தது என்று எண்ணுவதை, இந்த நாட்டிலே மக்களிடையே உள்ள பல்வேறு மூட நம்பிக்கைகளிலே இதுவும் ஒன்று என்றே கருத வேண்டியிருக்கின்றது. அதே நோக்கில், இந்த நர்சரி பள்ளிகள் முறையாக ஒழுங்காக நடப்பதற்கு, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அதிலே 'பிளாக் மார்க்கெட்' உருவாகாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Thiru A. R. DAMODARAN: Sir, I wish to explain my point. When I said "black-marketing in education", I merely wanted to say that there were some nursery schools which were levying Rs. 100 and Rs. 120 per month. So, to check the levy of such exorbitant fees, I would like the Government to consider whether they should not start fee-levying nursery schools so that this levy of high fees could be checked.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கருத்துக்களை, யோசனைகளை நான் கவனத்தில் எடுத்துக்கொள்ளுகிறேன்.

*Advisory Committees for Colleges in Madurai District.*

* 161 Q.—Thiru K. S. GANAPATHI (on behalf of Thiru G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is any proposal to form Advisory Committees for the Colleges in Madurai district;

(b) if so, the details thereof; and

(c) whether such Committees will be formed in other places of the State?



1978 மார்ச் 1]

**மதுரை மாவட்டத்திலுள்ள கல்லூரிகளுக்கு ஆலோசனைக் குழுக்கள்.**

திரு. கே. எஸ். கணபதி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்டத்திலுள்ள கல்லூரிகளுக்கு ஆலோசனைக் குழுக்கள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், அதுபற்றிய விவரங்கள் யாவை?

(உ) அதுபோன்ற ஆலோசனைக் குழுக்கள் மாநிலத்தின் பிற இடங்களிலும் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆலோசனைக்குழு என்ற பெயரில் இல்லை. மாணவர் நலக்குழு என்று செயல்பட்டு வருகிறது.

(இ) மாணவர் நலக்குழு அமைப்பில் கீழ்க்கண்டவர்கள் அங்கம் வகிக்கின்றனர் :—

1. கல்லூரி முதல்வர் (கன்வீனர்)

2. கல்லூரி ஆசிரியர்களில் மூத்தவர் ஒருவர்

3. கல்லூரி நிர்வாகத்தினரிலிருந்து ஒருவர்

4. பெற்றோர் சங்கச் சார்பில் இருவர் அல்லது பெற்றோர் சங்கம் இல்லையேல் கல்லூரி முதல்வரால் அங்கீகரிக்கப்பட்ட இரு பெற்றோர்

5. மாணவர் மன்றத் தலைவரும் செயலாளரும் அல்லது மாணவர் சார்பில் இருவர்

6. அரசாங்கத் துறையில் வருவாய்த்துறை மற்றும் காவல்துறை அலுவலர்கள்

(உ) ஆம். அமைக்கப்படும்.

**திரு. கே. எஸ். கணபதி:** இந்த மாணவர் நலக் குழுவின் கருத்துக்கள் அல்லது பரிந்துரைகள் எப்படி இருக்கலாம், எதைப் பற்றி இருக்கலாம், எதைப் பற்றி அவர்கள் பேசலாம், எதைப் பற்றி அவர்கள் பேசக்கூடாது என்ற விதி முறைகள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஆரம்பத்தில் பல்வேறு மாணவர்கள் போராட்டம் நடைபெற்ற நேரத்தில், அவற்றில் பல ஒரு தனிப்பட்ட கல்லூரியில் தோன்றியதை அடிப்படையாகக் கொண்டுதான் போராட்டம் நடைபெற்றது என்று அரசு அறிந்து, ஒரு கல்லூரிக்குள் ஏற்படும் பிரச்சினையைச் சுலபமாகத் தீர்த்து வைப்பதற்கு இப்படிப்பட்ட மாணவர் நலக் குழு

இருந்தால் நலமாக இருக்கும் என்று கருதி, இக்குழுக்கள் கல்லூரிகளில் தோற்றுவிக்கப்பட்டன. இப்படிப்பட்ட குழுக்கள் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுத்துக்கொண்டால், பிரச்சினைகள் அக் கல்லூரியோடு முடிவுற்று பல கல்லூரிகளுக்குப் பரவாத நிலை உருவாகும் என்று அந்த அடிப்படையில் தான் இவை தோற்றுவிக்கப்பட்டன.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** கல்லூரிகளில் மாணவர்கள் போராட்டம் என்று தோன்றும்போது, அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு இத்தகைய குழுக்கள் உதவிகரமாக இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பல்வேறு சந்தர்ப்பங்களில் பலன் ஏற்பட்டுள்ளதாகத்தான் அரசு கருதுகிறது. எனவே எல்லாக் கல்லூரிகளிலும் இத்தகைய குழுக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில்தான் அரசு இதுபற்றி யோசனை கூறியிருக்கிறது.

**திரு. எம். சங்கரலிங்கம் :** அரசு எல்லாக் கல்லூரிகளிலும் இத்தகைய குழுக்களை அமைக்க வேண்டுமென்று விரும்பி அதற்கான சுற்றறிக்கையை அனுப்பியுள்ளது என்று கருதுகிறேன். ஆனால் பல கல்லூரிகளிலே இன்னும் இப்படிப்பட்ட குழுக்கள் அமைக்கப்படாமல் இருக்கின்றன. அந்த முறையில் எவ்வளவு கல்லூரிகளில் அவை அமைக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** உறுப்பினர் அவர்களே ஒரு கல்லூரியின் தலைவராக இருக்கின்றார். அவர் அக் குழுவினை தமது கல்லூரியில் அமைத்திருப்பார் என்று கருதுகிறேன். ஆனால் எவ்வளவு கல்லூரிகளில் இன்னும் ஏற்படுத்தப்படாமல் இருக்கின்றது என்பதை அறிய தனிக் கேள்வி போட்டால் பரவாயில்லை.

**திரு. எம். சங்கரலிங்கம் :** தலைவரவர்களே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன்பே எனது கல்லூரியில் அத்தகைய ஒரு குழுவினை ஏற்படுத்தியிருக்கிறோம். அது நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. அது ஏற்படுத்திய அன்று முதல் இன்று வரையில் ஸ்ட்ரைக்கோ வேறு எந்தவிதமான தொல்லையோ ஏற்பட்டது கிடையாது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். கல்லூரி ஹாஸ்டல் பிரச்சினை, மாணவர்களுக்கு வேண்டிய சிறு வசதிகள் இவற்றை அவ்வப்பொழுது கவனித்துவிட்டால், எந்தத் தொல்லையும் ஏற்படுவதில்லை. இக்குழு நல்ல முறையில் செயல்பட்டால், பல பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்த்து வைக்க முடிகின்றது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** விவாதம் அல்லது கேள்விகள் தனி நபர்களின் சொந்தப் பிரச்சினையையொட்டியதாக இருத்தல் கூடாது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதிலிருந்து அந்தக் குழுவினால் நல்ல பலன்கள் கிடைத்து வருவதாகத் தெரிகின்றது. எனவே நிச்சயமாக அதைத் தீவிரப்படுத்துவதற்கும் அதை மேலும் நல்ல முறையில் செயல்படுத்துவதற்கும் அரசு ஆவன செய்யும்.

**திரு. கே. எஸ். கணபதி :** இக்குழு கல்லூரி நிர்வாகத்தில் தலையிட உரிமை பெற்றிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்தக் குழு எந்தச் சட்டத்தின் அடிப்படையிலும் அமைக்கப்பட்டதல்ல. ஆலோசனைக் குழுதான் அது. அதிலே கல்லூரி நிர்வாகம், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், அதிகாரிகள் ஆகியோர்களுடைய பிரதிநிதிகள் இடம் பெற்றிருக்கின்றார்கள். கல்லூரிகள் நல்ல முறையில் இயங்க வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டு அமைக்கப்பட்ட குழு அது. அந்த முறையில், சட்டங்கள் சொல்லுவதைக் காட்டிலும் இவ்வளவு பேர் பங்குகொண்டுள்ள இக்குழுவின் கருத்துக்களுக்கு அதிக முக்கியத்துவம் இருக்கும், நல்ல முறையில் மதிக்கப்படும் என்று கருதுகிறேன்.

### *Nagercoil Co-operative Housing Society.*

* 162 *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that the Nagercoil Co-operative Housing Society has not sanctioned any loan for constructing house for the last two years; and

(*b*) if so, the reason therefore?

### நாகர்கோவில் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நாகர்கோவில் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம், கடந்த இரண்டு வருடங்களாக வீடு கட்ட கடன் எதுவும் வழங்க வில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்குக் காரணம் யாது ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** (அ) & (இ) நாகர்கோவில் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் கடந்த இரண்டு வருடங்களாக வீடு கட்ட புதிதாக கடன் எதும் ஒப்பளிக்காவிடினும், ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட கடன்களுக்கு 1-7-1975 முதல் 22-10-1977 வரை ரூ. 16-58 லட்சம் வரை பட்டுவாடா செய்துள்ளது.

(முற்பகல் 11-00)

**திரு. எம் சங்கரலிங்கம்:** அமைச்சர் அவர்கள் இந்தச் சங்கத்தின் மூலம் எவ்வளவு தொகை பட்டுவாடா செய்யப்பட்டது என்ற விவரத்தைச் சொன்னார்கள். இவைகள் அனைத்தும் 1975 ஆம் ஆண்டுக்கு முன்னால் அனுமதிக்கப்பட்ட திட்டங்களுக்காகக் கொடுக்கப்பட்டது. 1975 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட புதிய திட்டங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படாமலிருப்பதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா, அவை ஏற்றுக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** சங்கத்தின் புதிய கடன் திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்படாததற்குக் காரணம் சங்கங்கள் பட்டுவாடா செய்த கடன் தொகை குறைவு. அவைகள் கேட்ட தொகையோ மிக அதிகம். எனவே எல்லோருக்கும் கொடுக்கப்படவில்லை. 1-7-1975-லிருந்து கடன் கொடுக்க வேண்டாம் என்று உத்திரவு வந்தது. அதற்குப் பின்னால் ரூபாய் 400 லட்சம் கிடைத்த பிறகு, அந்தப் பணத்தை "டிஸ்பர்ஸ்" பண்ணியிருக்கிறோம். அதே நேரத்தில் பாக்கித் தொகையை ரூபாய் 200 லட்சமாகக் குறைத்து விடவேண்டும் என்று சொல்லப்பட்டது. ஆனால் ரூபாய் 500 லட்சத்திற்குக் குறைக்கப்படவில்லை. எப்படி இருந்தாலும், சென்ற நவம்பரில் ரூபாய் 400 லட்சமும் இந்த ஜனவரியில் ரூபாய் 200 லட்சமும் எல்.ஐ.சி. யிலிருந்து நிதி கிடைத்து கடன் இப்போது கொடுக்கப்பட்டு வருகிறது.

THIRU A. R. DAMODARAN: Sir, in view of the recent relaxation regarding the receipt of loan applications by these societies, may I know from the Hon. Minister whether he expects the entire sum of Rupees Six Crores which has been given recently to be disbursed before 31st March, or whether he would be able to carry on the balance amount to the next year?

THE HON. THIRU S. RAGHAVANANDAM: Sir, we are in a mod hurry to disburse the entire amount.



THIRU A. R. DAMODARAN: While realising the mad hurry of the Hon. Minister and while recognising that we are also in a hurry to get the amounts from the Co-operative Societies, in view of the fact that a time lag is likely to be there between receipt of application and sanction, which takes two months, will the Government consider any relaxation to have the amount carried forward to next year?

THE HON. THIRU S. RAGHAVANANDAM: Sir, the valuable suggestion of the hon. Member will also be taken into consideration.

*Drinking-Water Facilities in Villages.*

* 163 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of Thiru G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether there is any proposal for collaboration between the Agriculture Department and the Tamil Nadu Water Supply and Drainage Board in the State, to augment drinking-water facilities in the Villages; and

(b) if so, the details thereof ?

**கிராமங்களில் குடிநீர் வசதிகள்.**

**திரு. கே. எஸ். கணபதி ( திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்):** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கிராமங்களில் குடிநீர் வசதிகளை அதிகரிக்க வேளாண்மைத் துறையும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும் சேர்ந்து செயல்படுவதற்கான செயல் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** (அ) இல்லை.

(இ) வினா எழ இடமில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிப்பார்க்கபட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்தி வைப்புத் தீர்மானங்கள்.

### (1) 'ஏ', 'பி' பிரிவு ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்கள் ஆகியோரின் இணைப்பு தாமதப்படுவது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எஸ். கணபதி அவர்கள் 'ஏ', 'பி' பிரிவுகளில் உள்ள ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் ஆகியோரின் இணைப்பு குறித்த விஷயங்கள் வெகுவாகத் தாமதப்படுவது குறித்து ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துள்ளார்கள். இது எந்த வகையில் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்குட்பட்டது என்பதைச் சுருக்கமாக விளக்கக் கோருகிறேன்.

## 3. தகவல் கோரல்.

### இஸ்மாயில் கமிஷன் அறிக்கை குறித்து.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் நீண்ட நாட்களாகக் கேட்டு வந்த ஜஸ்டிஸ் இஸ்மாயில் கமிஷன் அறிக்கையை தமிழக அரசு இன்றைய தினம் இந்த அவையிலே வைத்திருப்பதற்காக நான் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி தெரிவித்துக் கொள்கிற அதேநேரத்தில், அரசைப் பாராட்டுவதே இல்லை என்று சிலர் வருத்தப்படுகிறார்களே அவர்கள் திருப்தியடைவதற்காகப் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிற அதே நேரத்தில், ஒன்றைக் குறிப்பிடவும் வருத்தப்படுகிறேன்.

காரணம் அரசாங்க ஆணை 15-2-1978 தேதியிட்ட எண்....

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஏதாவது தகவல் கேட்பதாக இருந்தால் மட்டுமே கேட்கலாம். நீங்கள் விவரத்திற்குள் போகாதீர்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நான் விவரத்திற்குள் போகவில்லை. தகவலைத்தான் கேட்க விரும்புகிறேன்.

நாங்கள் எடுத்துச் சொன்ன குற்றச்சாட்டுகள் எல்லாம் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன என்று அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** தயவு செய்து அறிக்கைக்குள் போகாதீர்கள். நீங்கள் தொடங்கும் பாணியே விவாதப் பாணியாக இருக்கிறது. தகவல் என்ன வேண்டும் என்பதை மட்டும் சொல்லுங்கள்.



**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நான் அரசாங்கத்திடம் கேட்கவிரும்புவது, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதற்குரிய ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். எப்போது அந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும், எப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பார்களானால், அது இன்னும் நன்றாக இருக்கும் என்பதால் அரசாங்கத்தின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** நீதிபதி இஸ்மாயில் அவர்களுடைய விசாரணைக் கமிஷன் மீதான அறிக்கை இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிறது. அதில் 303 ஆம் பக்கத்திலே சுருக்கமாக அரசாங்கம் இந்த அறிக்கையின்மீது என்னென்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று வெளியிடப்பட்டிருக்கிறது. தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்கிற ஒன்றுக்கு அதிகமான விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் எதிர்பார்க்கிறார் என்று நினைக்கிறேன்.

இந்த அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 6 மாதத்திற்குள் சட்ட மன்றத்தில் வைக்க வேண்டும் என்று விதி இருந்தாலும்கூட, 25 நாட்களுக்கு முன்பாகவே அறிக்கை இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. எதையும் தாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கம் இந்த அரசாங்கத்திற்கு இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வளவு சீக்கிரமாக இந்த அறிக்கையை வைத்ததன் நோக்கம் இதன்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான். காரணம் இது ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சி பிரச்சினையல்ல. அரசியல் கைதிகளுக்குத் தக்க பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. இதில் இந்த அரசு உறுதியாக இருக்கிறது என்பதை மட்டும் இப்போது தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

## 2. ஒத்தி வைப்புத் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

### (1) 'ஏ', 'பி' பிரிவு ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்கள் ஆகியோரின் இணைப்பு தாமதப்படுவது குறித்து.

**திரு. கே. எஸ். கணபதி :** மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1966 முதல் இன்றுவரை முன்னாள் கழக உயர்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாதவர்களாகிய பணியாளர்கள் இன்னும் அரசு ஊழியர்கள் அந்தஸ்துக்கு உயர்த்தப்படாமல் இருக்கிறார்கள். அதற்குக் காரணம் அரசு உயர்நிலைப் பள்ளிகள் அனைத்தும் 'ஏ' விங் பள்ளிகளாக இருப்பதால், அதன் ஆசிரியர்களும் ஊழியர்களும் ஒரு தனி அமைப்பாகவும், முன்னாள் கழக உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் 'பி' விங்

[திரு. கே. எஸ். கணபதி] [1978 மார்ச் 1

பள்ளி ஆசிரியர்களாக ஒரு தனி அமைப்பாகவும், இந்த இரண்டு அமைப்புகளும் இணைக்கப்படாமல், 'Integrated service' இல்லாமல் இந்தப் பிரச்சினை இத்தனை ஆண்டுகாலம் காலதாமதப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. இன்னும் காலதாமதப்பட்டு வருகிறது. இந்தப் பிரச்சினை இப்போது பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அவசரப் பிரச்சினையாக மாறியதற்கான காரணத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

1978 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1 ஆம் தேதி, ஹையர் செகண்டரி பள்ளிகள் தொடங்கப்பட இருக்கின்றன. ஹையர் செகண்டரி பள்ளிகள் வந்தால், பெரும்பான்மையான அரசு உயர்நிலைப் பள்ளிகள் ஹையர் செகண்டரி பள்ளிகளாகச் செயல்பட இருக்கின்றன. 1978 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் வர இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ள 200 பள்ளிகளில் 95 பள்ளிகள் அரசுப் பள்ளிகளாக இருக்கின்றன. இந்த அரசுப் பள்ளிகள் ஹையர் செகண்டரி பள்ளிகளாக உயரும்போது, அங்குள்ள ஆசிரியர்களுக்குத்தான் பதவி உயர்வு வாய்ப்புகள் கிடைக்கும். அதாவது 'ஏ' விங் பள்ளிகளைச் சேர்ந்தவர்களுக்குத்தான் கிடைக்கும். 'பி' விங் ஆசிரியர்களுக்கு இந்தப் பதவி உயர்வுகள் கிடைக்காது என்பது உண்மை. காரணம், புதிதாக ஏற்படும் பணியிடங்கள், பதவிகள் 'ஏ' விங்கைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கே ஒதுக்கப்படும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. 'பி' விங்கில் இருப்பவர்கள் 'ஏ' விங்குக்குப் போக முடியாது. அதோடில்லாமல், இன்றையதினம் 17 நகராட்சிப் பள்ளிகளை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. இது குறித்த அரசாணையில் என்ன குறிப்பிட்டுள்ளது என்றால், இந்த 17 நகராட்சிப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களும் ஆசிரியர் அல்லாதவர்களும் அரசுப் பணியாளர்களாக ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். இந்த நிலைமையில் ஏற்கெனவே உள்ள அரசுப் பள்ளிகளோடு இந்த நகராட்சிப் பள்ளிகள் ஆசிரியர்களும் 'ஏ' விங்கில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

'பி' விங் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள் பதவிகள் காலியாகும்போது, அங்குள்ள 'பி விங் ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு கிடையாது. காரணம் இன்னும் அதற்கான 'அட்ஹாக் ரூல்ஸ்' தயாரிக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. இதன் காரணமாக இரண்டாண்டுகளாக, பதவி உயர்வு பெற்ற தலைமை ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு கூட கொடுக்கவில்லை. இது ஒரு சிக்கலான சூழ்நிலை. இதற்கு அரசு சொல்லிவரும் காரணங்களில், 'அட்ஹாக் ரூல்ஸ்' போட வேண்டும் என்பது ஒன்று. மற்றொன்று 'ஏ' விங் ஆசிரியர்களுக்குக் குறைபாடுகள் இருப்பதாக ஆணை பிறப்பிக்கப்பட்டால், அதை உடனே அவர்கள் நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்கிறார்கள்.



1978 மார்ச் 1] [திரு. கே. எஸ். கணபதி]

எனவே நீதி மன்றத்திற்குச் செல்லாத வகையில் ஆணை பிறப்பிக்கப்பட வேண்டியிருக்கிறது என்பதாகும். இப்படியே இரண்டாண்டுகளாகச் சொல்லி வருகிறார்கள். இந்தக் குறைபாடுகளைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிக நன்றாக உணர்ந்தவர்கள். சட்டப் பேரவையில் 'ஏ' விங், 'பி' விங், 'சி' விங் இவைகளைப் பற்றி மிகத் தெளிவாகப் பேசிய அமைச்சர் அவர்கள் இந்தக் குறைபாடுகளை உடனடியாகக் களைவதாக வாக்குறுதி கொடுத்தார்கள். இதுகாறும் இந்தக் குறைகள் களையப்படவில்லை. இது அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகும். ஏனெனில், இன்னும் 2 மாதத்தில் இந்தக் குறைபாடுகள் நீக்கப்படாவிட்டால், இவைகள் அதிகரிக்குமே தவிர, நீக்க முடியாத குறைகளாக மாறிவிடும், நீக்கக் கூடியவைகளாக இருக்காது என்பதைத் தெரிவித்து, இந்த முக்கிய பிரச்சினைபற்றி விவாதிக்க இந்த அவையின் நிகழ்ச்சியை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1960-61-ல் மாவட்ட கழகங்கள் கலைக்கப்பட்டு, ஊராட்சி ஒன்றியங்கள் தோற்றுவிக்கப்பட்டன. 1963-ல் முன்னாள் மாவட்டக் கழகப் பள்ளிகள், கல்வித் துறையின் தனி மாவட்டக் கல்வி அலுவலரின் ஆளுகைக்குக் கொண்டுவரப்பட்டன. 1966-ல், இம்மாவட்டக் கழகப் பள்ளிகள் அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 1—4—1966 முதல் அரசு (கழக) பள்ளிகள் என்று அழைக்கப்பட்டு வந்தது. 1—4—1966 முதல் இப்பள்ளிகள் அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், இப்பள்ளி பணியாளர்கள் 1—4—1970 முதல் தான் அரசுப் பணியாளர்களாகக் கருதப்பட்டு வந்தனர். அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மாவட்டக் கழகப் பள்ளிகள் 'பி' பிரிவு பள்ளிகள் என்றும், மற்ற நிரந்தர அரசுப் பள்ளிகள் 'ஏ' பிரிவு பள்ளிகள் என்றும் அழைக்கப்பட்டு வந்தது.

துணைச் செயலர், கல்வித் துறை, துணைச் செயலர், நிதித் துறை, பள்ளிக் கல்வி இயக்குநர் ஆகியோரை உறுப்பினராகக் கொண்ட "மூவர் குழு" ஒன்று அமைக்கப்பட்டு, அரசு கழகப் பள்ளிகள் மற்றும் அதில் பணி புரிவோரின் வருங்கால நலன்களைப் பற்றி ஆராய்ந்து, கருத்துரு சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. அக்குழு இவ்விரு பிரிவுகளின் ஒருங்கிணைப்புக்கு ஆதரவு தந்து, ஆசிரியர்களின் பணி மூப்பு நிலை அவரவர்களின் பணியில் சேர்ந்த நாளை அடிப்படையாகக் கொண்டு அறுதியிடப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்தது. இந்த அடிப்படையில் பள்ளிக் கல்வி இயக்குநரும் விரிவான குறிப்புரையை அனுப்பியுள்ளார்.

மொத்தம் தமிழ் நாட்டில் 300 'ஏ' பிரிவு பள்ளிகளும், 1,300 'பி' பிரிவு பள்ளிகளும் உள்ளன. அதில் முறையே 6,000, 29,000 பணியாளர்கள் பணி புரிகின்றனர். இவ்விரு பிரிவுகளையும் ஒருங்கிணைக்காது, தனித்தனியே இயங்க வைத்தால், 'ஏ' பிரிவு பணியாளர்களைப் பொறுத்தவரை, 300 பள்ளிகளிலும், 'பி' பிரிவு பணியாளர்களைப் பொறுத்தவரை 1,300 பள்ளிகளிலும் தான் பணி உயர்வு வாய்ப்பினை பெற்றவர்களாவார்கள். அவ்வாறு இல்லாமல், இரு பிரிவுகளையும் ஒருங்கிணைத்தால், பணியாளர்கள் மொத்தத்தில் 1,600 பள்ளிகளிலும் பணி உயர்வு வாய்ப்பினைப் பெறவும், பின் வரும், திறக்கப்படும் புதிய பள்ளிகளிலும், இவ்வாய்ப்பினைப் பெறவும் தகுதியுடையவர்கள் ஆவார்கள். பள்ளிக் கல்வி இயக்குநருடன் ஒருங்கிணைப்பைப் பற்றிக் கலந்து பேசியுள்ளனர். ஆகவே, பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துரு அரசினால் விரிவான முறையில் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. ஒருங்கிணைப்புக்கான முடிவை அரசு விரைவில் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'சி' பிரிவு பள்ளிகள் ஒருங்கிணைப்புப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளையும் சேர்த்து மொத்தம் உள்ள 154 நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளில் நிதிப் பற்றாக்குறையுள்ள நகராட்சிகளிலிருந்து இதுகாறும் 17 நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. மேற்சொன்ன 17 நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாதார் ஆகியோரை அரசுப் பணியில் இணைப்பது குறித்த பிரச்சினைகளைத் தவிர்க்கும் பொருட்டு உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு 100 விழுக்காடு மான்யம் அளிக்கப்படுவதைப் போன்று, மேற்கண்ட 17 நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளுக்கும் 100 விழுக்காடு மான்யம் அளித்து, மீண்டும் அப்பள்ளிகளை அந்தந்த நகராட்சிகளுக்கே திருப்பித் தந்துவிடலாமென்று ஒரு செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது. அடுத்த ஆண்டு திறக்க இருக்கின்ற உயர் செகண்டரி பள்ளிகளில் ஆசிரியர்களுக்குப் பதவிகள் உண்டாக்கிக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், அரசு அதற்கான முடிவுகளை விரைவில் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்த அவையின் நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை மாண்புமிகு தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. எஸ். கணபதி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கேள்வி ஒன்றும் கேட்கவில்லை. இதற்கான அறிவிப்பு இந்தத் தமிழ் புத்தாண்டுக்காவது வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இப்போது நீங்கள் கேட்பது கேள்வி அல்லவா? ஒரு மரபை நாம் வைத்துக்கொள்ள வேண்டும். ஒத்தி வைப்புத் தீர்மானத்தில், விளக்கம் கேட்பது என்பது இல்லை. ஒத்தி வைக்க



வில்லை என்று சொல்லிவிட்டால், அந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் அத்தோடு முடிந்துவிட்டது என்பதுதான் பொருள் என்பதை அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த அவை நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுவதால், இத்தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.

## (2). கன்னியாகுமரி மாவட்டத்தில் வருவாய்த் துறையில் வேலை பார்ப்பவர்களின் தொடர் உண்ணாவிரதம் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானம் எப்படி ஒத்தி வைப்புத் தீர்மானத்தின்கீழ் வருகிறது என்பதைப்பற்றி விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் வருவாய்த் துறையில் வேலை பார்க்கின்றவர்களில் 208 பேர் வேலை இழந்திருக்கிறார்கள். அவர்கள் இப்போது கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்கு முன்னால் 13-2-1978 முதல் தொடர் உண்ணாவிரதம் இருந்து வருவதோடு, 23-2-1978 முதல் போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் அரசினுடைய புதிய உணவுக்கொள்கை வருவதற்கு முன்னால், கன்னியாகுமரி மாவட்டம் கேரள மாநிலத்திற்கு ஒட்டியிருப்பதால், அங்கே முழு அளவுக்கு உணவுப்பொருள்கள் வினியோகத்தைக் கட்டுப்படுத்த அவர்கள் பயன்படுத்திக்கொள்ளப்பட்டார்கள். தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசுப் பணியாளர்களாக கன்னியாகுமரி மாவட்ட வருவாய்த் துறையில் பல்லாண்டுகளாகப் பணி புரிந்த 86 இளநிலை உதவியாளர்களும் கலெக்டரால் நியமிக்கப்பட்டு, பல ஆண்டுகள் தொடர்ந்து வேலை பார்க்கும் 122 கடைநிலை ஊழியர்களும் அந்தப் பணிக்குப் பயன்படுத்தப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் வருவாய்த் துறையிலே, கலெக்டர் அலுவலகத்தில், தாலுகா அலுவலகத்தில், மற்ற நிறுவனங்களில் வேலை பார்த்து வந்தவர்கள். உணவு விநியோக முறையை அரசு ஏற்றதற்குப் பிறகு பயன்படுத்தப்பட்டவர்கள். அதில் 86 பேர் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். 122 பேர் மாவட்ட வேலை வாய்ப்புத் தேடித் தரும் அலுவலகத்திலிருந்து வந்து முறையாக அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இவ்வாறு வேலையில் அமர்த்தப்பட்டு பத்தாண்டு காலமாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த உணவுக் கொள்கை மாற்றத்தால், திடீரென்று இவ்வளவு பேர் வேலை இழந்துவிட்டிருக்கிறார்கள். அப்படி வேலை இழப்பு ஏற்படும்போது வேறு ஏதாவது அரசு அலுவலகங்களில் அவர்களுக்கு வாய்ப்பளிப்பது வழக்கம். அவர்கள் 15-11-1977 முதல் வேலையிழந்து சம்பளம் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வேலையும் இல்லாமல், சம்பளமும் இல்லாமல் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அதைப் பற்றி அரசினிடத்திலும் 3 மாத காலமாக எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். அதனால் எந்தப் பயனும் இல்லாததால், அவர்கள் இப்போது போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள். இந்தப் போராட்டம் காலாவட்டத்தில், விரைவிலே தீவிரம் அடைந்து பரவுகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே இந்தப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு காணுகின்ற நிலையில், அரசினிடம் அதைப் பற்றி அறிந்துகொள்வதற்கும், அதே நேரத்தில் உறுப்பினர்களும் அதிகமான தகவலை வைப்பதற்கும் வாய்ப்பாக இந்த அவையினுடைய இதர நடவடிக்கையை ஒத்தி வைத்து, இப்பிரச்சினையைப்பற்றி விவாதிக்க தலைவரவர்களின் அனுமதி வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, தென் உணவு மண்டல அமைப்பில் கன்னியாகுமரி மாவட்டம் தனிப் பகுதியாக இருந்தது. வெளியிலிருந்து அம்மாவட்டத்திற்குள்ளும், மாவட்டத்திலிருந்து வெளியிலேயும் நெல், அரிசி எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டிருந்தது. தவிர கேரள எல்லையோரத்தில் 15 கிலோ மீட்டர் அளவில் அடங்கிய பகுதிக்குள் மாவட்டத்தின் மற்ற இடங்களிலிருந்து நெல், அரிசி போவது தடை செய்யப்பட்டிருந்தது. மாநில எல்லையில் 25 சோதனைச் சாவடிகளும், 15 கிலோ மீட்டர் எல்லையில் 14 சோதனைச் சாவடிகளும், கன்னியாகுமரி—நெல்லை மாவட்ட எல்லையில் 3 சோதனைச் சாவடிகளும் ஆக மொத்தம் 42 சோதனைச் சாவடிகள் இயங்கி வந்தன.

அனைத்திந்தியாவும ஒரே உணவு மண்டலமாக்கப்பட்டதையொட்டி, புதிய உணவுக்கொள்கையின்படி குமரி மாவட்டத்திலுள்ள கேரள எல்லையில் 25 சோதனைச் சாவடிகள் மட்டும், தமிழ் நாட்டை விட்டு கேரளா செல்லும் நெல், அரிசி லெவி கொடுக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்காக இயங்கி வருகின்றன. '15 கிலோ மீட்டர் எல்லையிலும் நெல்லை மாவட்டம் இடையிலும் இருந்த சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்ட பின் அதையொட்டி ஆட்குறைப்பு செய்ய வேண்டியதாயிற்று.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திலும் புதிய உணவுக்கொள்கையை அமுலாக்க முன்பிருந்த அலுவலர்கள் தேவைப் படாததால் வருவாய்த் துறையிலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றி வந்த சில





அலுவலர்கள் வருவாய்த் துறைக்கு திருப்பி அனுப்பப்பட்டார்கள். மொத்தத்தில் குமரி மாவட்டத்தில் குறைக்கப்பட்ட பணியிடங்கள் கீழ்க்கண்டவாறு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திலிருந்து அனுப்பப்பட்டவர்கள்: தாசில்தார்கள் 2, துணை தாசில்தார்கள் 11, உதவியாளர்கள் 4; உணவு வழங்குத்துறையில் பணிக் குறைப்பு செய்யப்பட்ட இடங்கள்: துணைத் தாசில்தார்கள் 15, தனி வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர்) 77, கடைநிலை ஊழியர் 85 என்று இருக்கிறது.

பணி நீக்கத்தை ஓரளவு குறைப்பதற்காகவும், ஆலை அதிபர்கள் லெவி முறையை தீவிரமாக செயல்படுத்துவதற்கும் கூடுதலாக ஒரு தாசில்தார், 13 துணை தாசில்தார்கள், 27 தனி வருவாய் ஆய்வாளர்கள், 28 கடை நிலை ஊழியர்கள் பதவிகள் அனுமதிக்கப் பட்டன. இதுபோக நிகரமாக பணிக்குறைப்பு செய்யப்பட்ட இடங்கள் கீழ்க்கண்டவாறு, தாசில்தார் 1, துணை தாசில்தார் 13, உதவியாளர் 4, தனி வருவாய் ஆய்வாளர் 50, கடைநிலை ஊழியர் 57 என்று இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் 86 இளநிலை உதவியர் பணி நீக்கம் செய்யப்பட்டதாக அறிக்கை அனுப்பியுள்ளார். உணவுத் துறையில் பணி நீக்கம் காரணமாக தனி வருவாய் ஆய்வாளர், உதவியாளர், துணை தாசில்தார், தாசில்தார் பதவிகள் எல்லாம் சேர்ந்து 68 பதவிகள் குறைந்திருக்கலாம். இது போக எஞ்சிய 18 இளநிலை உதவியாளர் பணி நீக்கம் செய்யப்பட்டதற்கு வருவாய்த் துறையில் வேறு பிரிவுகளில் (உணவுத் துறை தவிர) ஏற்பட்ட பணி நீக்கம் காரணமாக இருக்கக்கூடும்.

86 இளநிலை உதவியாளர்களில் 20 பேர் மீண்டும் கன்னியாகுமரி மாவட்டத்தில் வருவாய்த் துறையிலும், மற்ற துறைகளிலும் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர். எஞ்சியுள்ள 66 பேர்களுக்கும் கன்னியாகுமரி மாவட்டத்தில் பணி அளிக்க இயலாததால், மாவட்ட ஆட்சியர் தமிழ்நாடு தேர்வு ஆணைக்குழுவினை, மற்ற மாவட்டங்களில் அரசுத் துறைகளில் உள்ள காலியிடங்களிலும், மாவட்ட வேலை வாய்ப்புத் துறையின் மூலம் தற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்களுக்குப் பதிலாக நியமனம் செய்ய வேண்டியுள்ளார். தேர்வு ஆணைக் குழுவினை அரசும் மேற்படி மாவட்ட ஆட்சியரின் வேண்டுதல் மீது உடனடி நடவடிக்கை எடுத்து வேலையிழந்தோர்க்கு மாற்றுப் பணி அளிக்க வேண்டிக் கொண்டுள்ளது. மேலும் மாநிலத்தில் உள்ள எல்லா அரசுத் துறைகளிலும் உள்ள காலியிடங்களில் கன்னியாகுமரி மாவட்டத்தில் வேலையிழந்த இளநிலை உதவியாளர்களுக்கும் கடைநிலை ஊழியர்களுக்கும் நியமனத்தில் முன்னுரிமை அளிக்க ஆணை வெளியிட அரசு உத்தேசித்துள்ளது.

கடைநிலை ஊழியர் பொறுத்தவரை, பணி நீக்கம் செய்யப்பட்ட 57 பேர்களில் 47 பேர்கள் முறைப்படுத்தப்பட்ட ஊழியர்கள், 14 பேர்கள் தற்காலிக நியமனம் பெற்றவர்கள்.

[திரு க. உரொ. எட்மண்ட்] [1978 மார்ச் 1

தமிழ்நாடு கடைநிலை ஊழியர்கள் சங்கத்தின் கன்னியாகுமரி மாவட்டக் கிளை தங்கள் விண்ணப்பத்தில் அதிகாரிகள், அலுவல் சார்பாக வீட்டிற்கு நியமிக்கப் படும் கடைநிலை ஊழியர் பணியிடத்திற்கு ஈடாக ரொக்கப்படி பெறுதலை நிறுத்தினால் அவ்விடங்களில் வேலையிழந்த கடைநிலை ஊழியர்களுக்கு வேலையளிக்க வாய்ப்புள்ளதென தெரிவித்துள்ளது. இக்கோரிக்கை அரசின் ஆய்வில் உள்ளது. மேலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் பி.டி. பயிற்சி பெற்ற தலைமையாசிரியர் உள்ள 60 நடுத்தரப் பள்ளிகளில் கடைநிலை ஊழியர்களை நியமித்தால் பணியிழந்த கடைநிலை ஊழியர்களுக்கு மாற்றுப் பணி அளிக்க வாய்ப்பு உள்ளது எனவும் மேற்படி சங்கம் தெரிவித்துள்ளது. இது சம்பந்தமாக பள்ளி இயக்குநரின் கருத்து கேட்கப்பட்டுள்ளது. அவரிடமிருந்து பதில் வந்தவுடன் இதுபற்றி அரசு முடிவு எடுக்கும்.

புதிய உணவுக் கொள்கையைச் செயல்படுத்துவதில் மற்ற மாவட்டங் களிலும் இதே போல் ஆட்குறைப்பு ஏற்பட்டுள்ளது. சோதனைச் சாவடிகள் முன்பு அதிகம் இருந்த மாவட்டங்களில் ஆட்குறைப்பு அதிகமாக உள்ளது. முடிந்த அளவுக்கு புதிய பணியிடங்களை ஏற்படுத்த அனுமதியளித்து ஆட் குறைப்பு பெருமளவு தவிர்க்கப்பட்டுள்ளது. பணிக் குறைப்பு செய்ய வேண்டிய அளவும் அதனால் கீழ்க்கண்டபடி தவிர்க்கப்பட்டது.

பணிக் குறைப்பு ஏற்பட்ட அளவு 36 தாசிதொர்கள், துணைத் தாசில்தார்கள் 317, உதவியாளர் 136, தனிவருவாய் ஆய்வாளர் 619, கடைநிலை ஊழியர் 458 என கூடுதல் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டன. கூடுதல் பணியிடங்கள் போக நிகர பணிக் குறைப்பு, துணைத் தாசில்தார்கள் 64, உதவியாளர்கள் 84, தனிவருவாய் ஆய்வாளர் 232, கடை நிலை ஊழியர் 192. பணி நீக்கம் செய்யப்பட்ட அலுவலர் பட்டியல் ஒன்று மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும் என்றும் பல்வேறு துறையில் காலியாகும் பணிகளை பணி நீக்கம் செய்யப்பட்ட அலுவலர் களுக்கே தரவேண்டும் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது. இப்பட்டியலிலுள்ள வர்கள் அனைவருக்கும் வேலை கிடைக்கும்வரை புதிதாக நபர்களை நியமனம் செய்யக்கூடாதென்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

ஆகவே கன்னியாகுமரி மாவட்டத்தில் பணியிழந்தவர்களுக்கு மாற்றுப் பணி அளித்தல் சம்பந்தமாக அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருவதால் இந்தத் தீர்மானத்தின் மீது இந்த அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1978 மார்ச் 1]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர் களின் விளக்கத்திற்குப் பிறகு, இந்த அவை நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுவதால், இத்தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.

(முற்பகல் 11-20)

**(3) காரைக்குடி. தெற்கு காவல் நிலையத்தில் 1978 பிப்ரவரி 12 ஆம் நாள் பாலம்மாள் என்ற அபலைப்பெண் மானபங்கப்படுத்தப்பட்டது குறித்து.**

**திரு. ஜார்ஜ் கோமகன் (திரு. ஒய் வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சார்பில்):** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, காரைக்குடி தெற்கு காவல் நிலையத்தில் சென்ற 12 ஆம் தேதியன்று பாலம்மாள் என்ற அபலைப்பெண் மானபங்கப் படுத்தப்பட்டிருக்கிறார். காவல் துறை என்பது மக்களைப் பாதுகாக்க வேண்டிய, காக்க வேண்டிய பொறுப்புள்ள ஒரு துறையாகும். அப்படிப்பட்ட காவல் துறையைச் சேர்ந்த போலீஸ்காரர்கள், காவல் பணியில் இருந்தவர்கள் அந்தப் பெண்ணை மானபங்கப்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் அந்தப் பெண்ணின் கற்பிற்குக் களங்கத்தை உருவாக்கியிருக்கிறார்கள். இந்த வேதனையான செய்தி தமிழ் நாட்டில், காரைக்குடி தெற்கு போலீஸ் நிலையத்தில் நடைபெற்றிருக்கிறது. இந்தச் சம்பவம் நடைபெற்றதற்குப் பின்னாலே, முகவை மாவட்டத்தினுடைய ஜனதாக் கட்சித் தலைவர் திரு. பழ. கருப்பையா அவர்கள் இது சம்பந்தமாகத் துண்டு அறிக்கைகளை வெளியிட்டு, இப்படிப் பட்ட நிகழ்ச்சி நடைபெறலாமா என்று கேட்டிருக்கிறார். தாய்க் குலத்தைக் காக்கின்ற அரசு என்று இந்த அரசினர் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆசில் இப்படிப்பட்ட கொடுமையான நிக்ழ்ச்சி நடை பெறலாமா என்று அவர்கள் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே 25 ஆம் தேதியன்று இதைக் கண்டித்து ஒரு கண்டனக் கூட்டம் நடைபெற்றிருக்கிறது. அந்தக் கண்டனக் கூட்டத்திலே திரு. பழ. கருப்பையா அவர்களும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வலம்புரி ஜான் அவர்களும் பேசியிருக்கிறார்கள். அந்தக் கண்டனக் கூட்டத்தில் போலீஸ் காரர்களே புகுந்து, அத்து மீறி, அடித்திருக்கிறார்கள். திரு. பழ. கருப்பையா அவர்களும், வலம்புரி ஜான் அவர்களும் போலீஸ்காரர்களால் தாக்கப்பட்டிருக் கிறார்கள். அங்குள்ள சர்க்கிள் இன்ஸ்பெக்டர் இதைத் தலைமை தாங்கி நடத்தி யிருக்கிறார். அவர் பெயர் பால்ராஜ் என்பது. இதற்குப் பின்னாலே அங்குள்ள ...யூய் வீட்டுகளை உடைத்திருக்கிறார்கள். அதை வேறு யாரும் செய்யவில்லை. போலீஸ்காரர்களே திட்டமிட்டுச் செய்திருக்கிறார்கள், அதற்குப் பின்னால் ஜனதாக் கட்சியைச் சேர்ந்த திரு. விஜயராகவன், பழனி என்பவர்களைக்

கைது செய்திருக்கிறார்கள். அவர்கள் எங்கே கைது செய்யப்பட்டு வைக்கப்பட்டிருக்கிறார்களென்ற தகவலைக்கூட அறிந்திய முடியவில்லை. இந்த நிகழ்ச்சி மிகமிகப் பரபரப்பான நிகழ்ச்சியாக, செய்தியாக இருக்கிறது. அதுமட்டுமல்ல. ஒரு காவல்காரரைக் கைது செய்து, உடனடியாக ஜாமீனில் விட்டிருக்கிறார்கள். துன்புறுத்திய, கொடுமை செய்த, ஒரு பெண்ணுக்குக் களங்கம் விளைவித்து, கற்பழித்த காவல்காரர் கைது செய்யப்பட்டு, விடுவிக்கப்பட்டிருக்கிறார். அதைக் கண்டித்த பொது மக்களின் பிரதிநிதிகள், ஜனதாக் கட்சித் தொண்டர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கொடுமை காரைக்குடியில் நடந்திருக்கிறது. இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து விவாதிப்பதற்காக, அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று, துணைத் தலைவரவர்களே, தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, முகவை மாவட்டத்தில், காரைக்குடியில் 12—2—1978 ஆம் நாள் ஒரு சோகமான சம்பவம் நடைபெற்று, அதன் காரணமாக அந்த மாவட்டம் முழுவதும் சட்டம், ஒழுங்கு குலைந்துபோகும் சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. 12—2—1978 ஆம் தேதியன்று மாலை மாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த ஏழை பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்த பெண், பாலம்மாள் என்பவர் பஸ் ஸ்டாண்டிற்கு வந்திருக்கிறார். தான் செல்ல வேண்டிய பஸ் குறித்து அவர் அங்கே விசாரணை செய்திருக்கிறார். அப்போது சில சமூக விரோதிகள் தொந்தரவு கொடுப்பார்களோ என்று கருதி, தானாகவே காவல் நிலையத்திற்குச் சென்று, தான் இந்த ஊருக்குச் செல்ல வேண்டுமென்று முறையிட்டிருக்கிறார். அங்குள்ள துணைக் காவலர், இரவு காவல் நிலையத்தில் தங்கலாமென்று சொல்லியிருக்கிறார். அங்கேயுள்ள சோழன் என்ற சோஷியல் ஒர்க்கர் காவல் நிலையத்திற்குச் சென்று, 'இந்தப் பெண்ணின் குடும்பத்தை எனக்குத் தெரியும்; இந்தப் பெண் தனியாகக் காவல் நிலையத்தில் இருந்தால், பல்வேறு பிரச்சினைகள் உருவாகும்; எனவே நானே பொறுப்பேற்றுக்கொள்கிறேன்; அதற்காக எழுதிக் கொடுக்கிறேன்; அந்தப் பெண்ணை என்னுடைய பொறுப்பில் அனுப்பினால், அவருடைய சகோதரருக்குச் சொல்லி, அவர்கள் மூலம் வீட்டிற்கு அனுப்புகிறேன்' என்று உத்தரவாதம் கொடுத்திருக்கிறார். பொறுப்பில் இருந்தவர், 'நீர் ஆண்மகன், 16 வயதுப் பெண்ணை எப்படி உங்களுடன் நம்பி அனுப்புவது' என்று கேட்டிருக்கிறார். ஆனால் அவர், காவலர் சங்கரன் என்பவரை நம்பி காவல் நிலையத்திலேயே அந்தப் பெண்ணை விட்டுவிட்டுச் சென்றிருக்கிறார். அந்தப் பெண்ணைத் திட்டமிட்டு காவல் நிலையத்தில் தங்க வைத்திருக்கிறார்கள். அந்தப் பெண்ணைப்





பாதுகாப்பான இடத்தில் வைத்துக்கொள்கிறேன் என்று ஒரு பிரஜை சொல்லியிருக்கிறார். அதை சப்-இன்ஸ்பெக்டர் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தப் பெண் கருவூல அறையில் இருப்பாளென்று கூறி, காவலரிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்றிருக்கிறார். நான் எல்லாக் காவல் நிலையத்தையும் பற்றிக் குற்றம் கூறவில்லை. இப்படிப்பட்ட அக்கிரமங்கள் நடைபெறக்கூடாது . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** நிகழ்ச்சி எவ்வாறு அவையை ஒத்தி வைப்பதற்கு, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றி மட்டும் கூறுங்கள்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** இப்படிப்பட்ட பிரச்சினைகள் வருமென்று கருதித்தான், காவல் நிலையத்தில், இரவு நேரத்தில் எந்தக் காரணத்தை முன்னிட்டும் பெண்கள் இருக்கக்கூடாதென்று ஆணையிருக்கிறது. நமக்கு நிலைமைகள் தெரியும். குறிப்பிட்ட காவல்காரர் குடிபோதையில் இருந்தார். அந்தப் பெண் கசக்கிப் பிழியப்பட்டு, காலையிலே தூக்கி எறியப்பட்டிருக்கிறாள். அந்தப் பெண் பஸ் ஸ்டாண்டுக்கு வந்து அழுதிருக்கிறாள். கான்ஸ்டபிள் மட்டும் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். நான்கு காவற்காரர்கள் மானபங்கம் பண்ணியதாக அந்தப் பெண் சொல்லியிருக்கிறாள். முன் தினமே அந்தப் பெண்ணை ஒரு பாதுகாப்பான இடத்திற்கு அல்லது விடுதிக்கு அனுப்பியிருக்கலாம். ஆனால் இந்தக் கொடுமை காவல் நிலையத்தில் நடந்திருக்கிறது. அதன் விளைவாக மக்கள் நியாயம் கேட்டிருக்கிறார்கள். ஜனதாக் கட்சி தலைமையேற்று நிலைமையை விளக்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே கருப்பையாவை அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். அவரை அடித்துத் துன்புறுத்தியிருக்கிறார்கள். போலீசாரை நம்பி, ஒரு பெண் போகும்போது அங்கே பாதுகாப்பில்லை. தானாகப் போய் அந்தப் பெண் பாதுகாப்பு கேட்டபோது, குரங்கு கையில் கிடைத்த பூமாலை போல், மானபங்கப்படுத்தப்பட்டிருக்கிறாள். அரசு பெண்களுக்குப் பாதுகாப்பு கொடுப்போமென்று சொல்லியிருக்கிறது. இருந்தாலும், இந்த சம்பவம் நடந்திருக்கிறது. எனவே இதைப் பற்றி விரிவாகப் பேச இந்த அவையினுடைய இதர நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் அமைச்சரவைக்கும், மக்களுக்கும் அதிகமான ஆதாரங்களைக் கொடுக்க முடியும். அதன்மூலம் அரசு நடவடிக்கை எடுக்க வாய்ப்பாக இருக்குமென்று கூறி, இந்தப் பிரச்சினை குறித்துப் பேச அவை நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1978 மார்ச் 1

(முற்பகல் 11-30)

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவர் அவர்களே, காரைக்குடி தெற்கு காவல் நிலையத்தில் 12—2—1978 அன்று இரவு சங்கரன் என்ற காவலர் பாதுகாப்புப் பணியில் இருந்தார். அன்று இரவு 10-15 மணிக்கு மாத்தூர் கிராமம் மீனாட்சிசுந்தரம் என்பவரது மகள் பாலம்மாள் காவல் நிலையத்திற்கு வந்து, தன்னை அடையாளம் தெரியாத சிலர் பின் தொடர்வதாகத் தெரிவித்து, தான் திருச்சிக்குச் செல்ல வேண்டுமெனவும், இரவு நேரமாதலாலும், பஸ் வசதி இல்லாததாலும், காவல் நிலையத்தில் தங்குவதற்கு அனுமதி கேட்டிருக்கின்றார். இதுபற்றிக் காவல் நிலையப் பொதுக் குறிப்பேட்டில் பதிவு செய்துவிட்டு, மறுநாள் காலை பஸ்ஸில் திருச்சிக்கு அனுப்பி வைக்குமாறு காவலர் சங்கரனுக்குக் காவல் நிலையத்தில் இருந்த உதவிக் காவல் ஆய்வாளர் உத்தரவிட்டார். காவல் நிலையத்திற்கு அருகில் உள்ள துணைக் கருவூல வராந்தாவில் தங்குவதற்கு பாலம்மாள் அனுமதிக்கப்பட்டார். மறுநாள் 13—2—1978 அன்று காலை 9-30 மணிக்கு பாலம்மாள் சப்-இன்ஸ்பெக்டரின் முன்பு, முந்தைய இரவு 2-30 மணியளவில் தனது பெண்மைக்குக் காவலர் சங்கரனால் களங்கம் ஏற்பட்டுவிட்டது என்று முறையிட்டார். கிராம முன்சீப் எழுத்து மூலம் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு ஒன்று காவலர் சங்கரன் மீது இ.பி.கோ. 354 செக்ஷன்கீழ் பதிவு செய்யப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட காவலர் சங்கரன் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு, கைது செய்யப்பட்டார். கோர்ட்டில் அவர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். பாதிப்பிற்குள்ளான பாலம்மாள் அரசினர் மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டார். இச்சம்பவம், தேவகோட்டை சப்-கலெக்டருக்குத் தெரிவிக்கப்பட்டு, அவர் நிர்வாக மாஜிஸ்ட்ரேட் என்ற முறையில் ஒரு விசாரணை உடனே மேற்கொண்டுள்ளார். அவரது விசாரணை அறிக்கை கிடைத்த பின்பு காவலர் சங்கரன் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவிருக்கின்றது.

இந்த நிலையில் 25—2—1978 அன்று காரைக்குடியில் நடைபெற்ற ஜனதாக் கட்சி பொதுக் கூட்டத்தில் பேசிய சில பேச்சாளர்கள் காவல் துறையினரையும், முதலமைச்சரையும் மிகவும் தரக்குறைவான வார்த்தைகளால் விமர்சித்திருக்கின்றார்கள். திரு. பழ. கருப்பையா பேசும்போது, கூட்டத்தினரிடையே சலசலப்பு ஏற்பட்டது. அதனைக் காவல் துறையினர் அமைதிப்படுத்தினர். திரு. வலம்புரி ஜான் பேசும்போது, கூட்டத்தினரில் ஒரு பகுதியினர் கோபமடைந்து மேடையை நோக்கிக் கற்களை வீசியிருக்கின்றனர். கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டவுடன், பாதுகாப்புக்காக இருந்த காவலர்கள்



1978 மார்ச் 1] [திரு. கே. இராஜா முகமது]

இருவர் மேடைக்கு அருகில் கூட்டத்தினரை அமைதிப்படுத்த முயன்றனர். அக்காவலர்களை மேடையிலிருந்தவர்கள் சோடா பாட்டில்களால் தாக்கியிருக்கின்றனர். காவலர்கள் இருவருக்கும் காயம் ஏற்பட்டுள்ளது. நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே குறைந்த பலப்பிரயோகம் செய்து கூட்டத்தினரைப் போலீசார் கலைந்து போகச் செய்திருக்கின்றனர். கல்லெறிந்ததின் காரணமாக திரு. பழ. கருப்பையா மற்றும் சிலருக்குச் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன. அடிபட்ட காவலர் ஒருவர் கொடுத்த புகாரின் பேரில் திரு. பழ. கருப்பையா மற்றும் ஒன்பது பேர் மீது வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. திருவாளர்கள் அய்யாவு, சண்முகம் ஆகியோர் தங்களை பழ. கருப்பையா மற்றும் சிலர் தாக்கியதாகக் கொடுத்த புகாரின் பேரில் மேலும் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்டவர்களில் அறுவர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். அன்று இரவு மாவட்டக் கலெக்டரும், எஸ்.பி.யும் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று நிலைமையை அமைதிப்படுத்தியுள்ளனர். இந்நிகழ்ச்சிகள் சம்பந்தமாக இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணையில் இருக்கின்றன. புலன் விசாரணை முடிந்தவுடன் யார் மீது தவறு இருப்பினும் சட்ட ரீதியான மேல்நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது. நிலைமை அமைதியாக உள்ளது. எனவே இச்சம்பவம் குறித்து விவாதிக்க அவையின் ஏனைய அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு, இந்த அவையின் அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டியதில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(திரு. ஜார்ஜ் கோமகன் எழுந்து நின்றார்.)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஏற்கெனவே, நேற்றும், இன்றும் சொல்லியிருக்கிறேன், ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்த பின்னர், மேற்கொண்டு விளக்கம் கேட்கக் கூடாது என்று. நீங்கள் இதை கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொடுத்திருந்தால், விளக்கம் கேட்க முடியும். ஆகவே இதற்கு அனுமதியை மறுக்கிறேன்.

**திரு. ஜார்ஜ் கோமகன் :** இது குறித்து அரசு நீதி விசாரணை வைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1978 மார்ச் 1

## 4. மேலவை விதி 81-ன் படி அமைச்சரின் விளக்க உரை.

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைமைப் பொறியாளர் மீதுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** விதி 81-ன்கீழ் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

* The HON. THIRU S. RAGHAVANANDAM: Mr. Chairman, the hon. Member Thiru Arcot Veerasami mentioned yesterday, the 28th February 1978, about the Executive Engineer having written about the Chief Engineer and the Executive Engineer having been dismissed for that, that the Chief Engineer's action had not been thoroughly investigated, that only some action was made to appear that enquiry was being attempted into the action of the Chief Engineer and that this constituted a major corrupt situation in the Tamil Nadu Water and Drainage Board. The hon. Member also mentioned about the letter purported to have been written by the concerned Executive Engineer.

The details were verified and I am to understand that the Executive Engineer of the Tamil Nadu Water and Drainage Board had written a letter No. 7/Confdl./76, dated 27th March 1976 and also letter No. 8/Confdl./76, dated 3rd April 1976 wherein he has made false allegations against the Chief Engineer who was in charge of the Board as having been patronising rowdy elements conniving with the Chief Engineer in his deliberate mischief. This Executive Engineer's work was not satisfactory and he was also called upon to answer a number of charges framed against him for the misconduct and indiscipline on 19th May 1976. The details of the charges and action taken are available. After observing due procedural formalities, this Executive Engineer was dismissed from service on 23rd October 1976. He filed an appeal with the TWAD Board and the Board decided on 23rd January 1978 to reduce the punishment to that of compulsory retirement.

As regards the complaint against the Chief Engineer, it was true that the Executive Engineer had written letters alleging fabrication of accounts of materials of the Board and misappropriation of the Board's funds. The audit also has separately pointed out several irregularities in the purchase of stores for the periods prior to 31st March 1976. Based on these reports, charges had been framed against the Executive Engineers and others concerned who were in-



1978 மார்ச் 1] [திரு. எஸ். இராகவானந்தம்]

charge of the stores. Meanwhile, the investigation into irregularities in the Board during the period prior to 1st February 1976 had been taken up by a Special Investigation Wing attached to the Officer on Special Duty in the Public Department. This Investigation Wing had reported to the Secretary to Government, Rural Development and Local Administration Department, that some charges had clearly been made out against the then Chief Engineer regarding the purchase of stores among other things and requested to keep the Chief Engineer under suspension and not to permit him to retire on 30th April 1977, on which date he was due to retire. The TWAD Board, in instructions from the Secretary to Government. Rural Development and Local Administration Department, placed the Chief Engineer under suspension on 30th April 1977—I repeat this sentence : placed the Chief Engineer under suspension on 30th April 1977. On a similar report from the Investigation Wing, the Managing Director, TWAD Board also suspended the other Executive Engineer. The matter is under enquiry with the Police and further disciplinary action will be proceeded with after the results of the Police enquiry are known.

The allegation that no action was taken against the Chief Engineer is far removed from truth. The Hon. Member has given a wrong and baseless information to this august House. However, the details referred to by the hon. Member pertain to the period prior to 1st February 1976.

(திரு. ஆற்காடு நா. வீராசாமி எழுந்து நின்றார்.)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உட்காருங்கள், சொல்லுகிறேன். விதி 81-ன் முற்பகுதியில் இருக்கிற விதியைப் பயன்படுத்தித்தான் இதை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். அதே விதியினுடைய பிற்பகுதியில், அமைச்சர் அவர்கள் தன்னிலே விளக்கம் கொடுத்த பிறகு அந்த விளக்கத்தின்மீது எந்த விதமான விவாதமும் அனுமதிக்கக் கூடாது என்று தெளிவாக இருக்கிறது. நீங்கள், அமைச்சர் விளக்கம் அளித்த பிறகு, மீண்டும் கேட்டால் எப்படி? விதியினுடைய முன் பகுதியை மட்டும் உபயோகப்படுத்திக் கொள்ளுகிறீர்கள், ஆனால் பின் பகுதியைப் பார்க்கமாட்டேன் என்கிறீர்களே.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** துணைத் தலைவர் அவர்களே, விதி முறைகள் அப்படியும், இப்படியும் இருக்கின்றன. ஒரு சின்ன விளக்கம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள். ரொம்ப நாளாக நீங்கள் இப்படிக் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். வேறு ஒருவரும் இப்படிக் கேட்பதில்லை. நீங்கள்தான் இப்படிப் பண்ணுகிறீர்கள். அனுமதிக்கக் கூடாது என்று அந்த விதி முறையில் தெளிவாகப் போட்டிருக்கிறது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, அந்த விதியைப் பயன்படுத்தி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படி அரசின் தரப்பிலேயிருந்து விளக்கம் தர உரிமை இருக்கிறதோ, அதைப் போலவே .....

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: விதி அப்படி இருக்கிறது. வேண்டுமானால் இதையே ஒரு சான்றாக எடுத்துக்கொண்டு விதியை மாற்ற முயற்சி எடுத்துக்கொள்ளுங்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, தயவு செய்து .....

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உங்களுக்காகச் சொல்லவில்லை. இருக்கிற விதியைத்தான் சொல்லுகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் என்ற முறையில் சொல்லுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இந்த விதி உறுப்பினரைக் கட்டுப்படுத்ாதா? நீங்கள் இவ்வளவு நாள் விவாதத்திலே கலந்துகொண்டிருக்கிறீர்கள். நீங்களே இப்படிப் பிடிவாதம் செய்தால் எப்படி? இதை நான் அனுமதிக்க முடியாது.

(முற்பகல் 11-40)

**5. 1978-79 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கைமீது பொது விவாதம்—தொடர்ச்சி.**

திருமதி சத்தியவாணி முத்து: துணைத் தலைவர் அவர்களே, 1978-79 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கைமீது எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாகவே எதிர்த் தரப்பினர் பேசும்போது, வழக்கமாக நடைபெறும் கவர்னர் உரை இந்த முறை நடைபெறவில்லையே என்று வருத்தம் தெரிவித்தார்கள். ஆட்டுக்குத் தாடி இருப்பதைப் போல ஆட்சிக்குக் கவர்னர் இருக்கிறார் என்று பேசியவர்கள் இன்று அந்த கவர்னர் இந்த மன்றத்தின் முன்னால் கொள்கை விளக்கக் குறிப்பைத் தரவில்லையே என்று வருந்துகிறார்கள். அவர்



அப்படி வந்து பேசியிருப்பாரானால், மத்திய மாநில உறவு முறைபற்றிய கருத்தைத் தெரிவித்திருப்பார்: காவிரி நதி நீர்ப் பங்கீட்டைப்பற்றிக் கருத்துத் தெரிவித்திருப்பார்; இந்த ஆண்டிற்கான திட்டங்களைப்பற்றியெல்லாம் சில நல்ல யோசனைகளைச் சொல்லியிருப்பார், அவருக்கு அந்த வாய்ப்பைத் தரவில்லையே என்றும் பேசினார்கள். "ஆண்டுக்கு பத்து லட்சம் ரூபாய் கவர்னருக்காகச் செலவாகிறது, அது நமக்குத் தேவையா; மாநிலத்திலே மத்திய அரசின் பிரதிநிதியாக, கண்காணிப்பாளராக இருக்கிறார்; ஆகவே அந்தப் பதவியே கூடாது" என்று சொன்னவர்கள் இன்றைக்கு ஏன் அவர் பேசவில்லை என்று கேட்கிறார்கள். கவர்னருக்கும் இந்த அரசுக்கும் எந்தவிதமான கசப்பும் இல்லை. கவர்னர் பேசக் கூடாது என்று இந்த அரசு தடுக்கவும் இல்லை. வழக்கப்படி சட்ட மன்றத் தொடரை முடிக்காத காரணத்தால், தொடர்ந்து இந்த கூட்டத் தொடரை நடத்தலாம் என்று விதிமுறை இருப்பதால், கவர்னர் பேசாமல், அரசு அவர்களுக்குப் பேசுகிற வாய்ப்பைக் கொடுக்காமல் இருக்கிறது. ஆனால் அவர்கள் கவர்னர் உரையில் என்ன கொள்கை விளக்கத்தை எதிர்பார்த்தார்களோ, அதெல்லாம் இந்த நிதி நிலை அறிக்கையிலேயே இருக்கத்தான் செய்கிறது. அவர் பேசினால்தான் மத்திய மாநில உறவைப்பற்றிச் சொல்வார், பேசாத காரணத்தால் இந்த அறிக்கையில் அதைப்பற்றி எதுவும் கூறப்படவில்லை என்று இருக்குமானால், அதைக்கூட ஒத்துக்கொள்ளலாம். மத்திய மாநில உறவு முறையில் நமக்கு இருக்கிற சங்கடங்கள், போடப்பட்டிருக்கிற வரிகள், தேவையான நிதி ஆதாரங்கள், இவற்றிற்காக மத்திய அரசு என்ன செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை எத்தனையோ முறை எப்படியெல்லாமோ மத்திய அரசின் முன் வைத்திருக்கிறோம். மத்திய அரசு அவற்றை எப்படிப் புறக்கணித்துள்ளது என்பதையும் காண்கிறோம். இருந்தாலும், மீண்டும் வலியுறுத்துவோம் என்று தெளிவாகவும் விளக்கமாகவும் நிதி அமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். கவர்னர் கொடுத்தால்தான் அதை ஏற்றுக்கொள்வோம், நிதி நிலை அறிக்கையில் நிதி அமைச்சர் தந்தால், அதைக் கொள்கை விளக்கமாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று உறுப்பினர்கள் கருதுவது முறையாகாது என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு மத்திய அரசு மாநில அரசு கேட்கிற கோரிக்கைகளை சரிவரக் கவனிக்கவில்லை. மத்திய மாநில உறவு முறையைப்பற்றிப் பேச வேண்டும். இங்கேயிருந்து ஒரு குழு சென்றுவந்து, மத்திய அரசாங்கத்தில் நமது கோரிக்கைகளை வைத்துப் பேச வேண்டுமென்று முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால் உறவு முறைகளைப்பற்றி நான் பேசத்

தயாராக இல்லை என்று இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் கூறுகிறார். தனிப்பட்ட முறையிலே யார் வந்தாலும், நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்வேன்; அரசின் சார்பிலே குழுக்களாக எந்த மாநிலத்திலிருந்து வந்தாலும், மகாநாடுகள் மூலமாகவோ கருத்தரங்குகள் மூலமாகவோ, பிரதமர் என்ற முறையில் சந்தித்துப் பேசத் தயாராக இல்லை என்று அடித்துப் பேசியிருப்பதைப் பத்திரிகையில் பார்த்தேன். நமது மாநிலம் மட்டுமல்ல, பல மாநிலங்கள் அதிக அதிகாரம் தேவை என்று கேட்கின்றன. பல எதிர்க் கட்சிகள், முற்போக்குக் கொள்கையுடைய எதிர்க் கட்சிகள், மாநிலங்களில் தொழில் வளரவும் கிராமங்கள் மறுமலர்ச்சி பெறவும் மதுவிலக்கு அமுல் படுத்தப்பட வேண்டும் என்று கருதுகிற கட்சிகள் எல்லாம் கேட்டு வருகின்றன. ஒரு காலத்தில் ஒரு கட்சிதான் இந்த மாநிலத்திற்கான அதிக அதிகாரங்களைக் கேட்பதாக இருந்த நிலை மாறி, மற்ற எதிர்க் கட்சிக்காரர்கள்கூட ஒன்றுசேர்ந்து அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்கிற நேரத்தில், இந்தியப் பிரதமர் அதைப்பற்றி விவாதிக்கத் தயாராக இல்லை என்று சொல்கிறார் என்றால், அதற்கு மாநில அரசு என்ன செய்ய முடியும்? அதைத்தான் இந்த நிதி நிலை அறிக்கையில் நிதி அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். புயலாலும் வெள்ளத்தாலும் ஏற்பட்ட சேதத்தை ஈடுகட்ட நஷ்டஈடாக மானியம் கேட்டோம். நாம் கேட்டது ரூபாய் 126 கோடி. ஆனால், அவர்கள் அளித்தது 37 கோடி ரூபாய்தான். அதையும் திட்டச் செலவில் சேர்த்துக் கொண்டுதான் கொடுத்தார்களே தவிர, தனியாக, அதை ஒதுக்கீடாகத் தரவில்லை. மானியமாகக் கொடுக்கவில்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாநில சுயாட்சிக் கொள்கையைப்பற்றிப் பிரதமர் விவாதிக்க தயாராக இல்லை என்று சொல்லிய பிறகு, இந்த அரசு என்ன செய்தது? இந்திய நாட்டில் மற்றப் பகுதிகளில் மேற்கு வங்காளத்தில் முதலமைச்சர் கேட்டதைப்போல, கேரளாவில் குரல் எழுப்பியதைப்போல, தம்முடைய அரசும் குரல் எழுப்பலாமே. மாநில சுயாட்சி என்றால், நீங்கள் விரும்ப மாட்டீர்கள். அதிக அதிகாரம் வேண்டுமென்றாவது நிதி அமைச்சர் ஒப்புக் கொண்டிருக்கிறார். ஆறாவது நிதிக் கமிஷனில் நியாயமான நிதி வழங்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். நீங்கள் அந்தப் பிரச்சினையில் மத்திய அரசோடு விவாதிக்கத் தயாராக இருக்கிறீர்களா? விவாதித்தீர்களா?

**திருமதி சத்தியவாணி முத்து:** விவாதிக்கத் தயாராக இருக்கிறோம் என்பதோடு மாநில முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு குழுவையே அங்கே அனுப்பி வைக்க முன்வந்திருக்கிறார்கள். எதிர்க் கட்சிக்காரர்கள் எப்படியாவது மத்திய அரசோடு இந்த அரசு மோதிக்கொண்டு உடைபட்டுப்



போகுமா என்று நினைத்தார்கள். நிச்சயமாக அந்த எண்ணத்தில் தோல்விதான் அவர்கள் அடைவார்கள். உறவுக்குக் கை கொடுக்கவும் உரிமைக்குக் குரல் கொடுக்கவும் இந்த அரசு எப்போதும் தயாராக இருக்கிறது. சுமுகமாக இருந்த மாநில-மத்திய உறவு நாம் நடந்துகொண்ட தகாத முறை காரணமாகக் கெட்டுப் போய்விட்டது. இன்றைக்கு நல்ல உறவு முறை இருப்பதை நிதிநிலை அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். அப்படி ஒரு உறவு இருக்கக் கூடாது என்று எதிர்க் கட்சிக்காரர்கள் விரும்புவார்களானால், அதற்காக நாங்கள் வருத்தப்படாமல் இருக்கமுடியாது.

இரண்டு தினங்களுக்கு முன்னால் இந்தியக் குடியரசுத் தலைவர் இந்தியில் கருத்துக்களைத் தெரிவித்தார்கள் என்பதற்காக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எதிர்ப்புக் குரல் கொடுத்திருக்கிறார்கள். இந்தியில் உரையைப் படிக்கக் கூடாது, ஆங்கிலத்தில்தான் படிக்க வேண்டுமென்று கேட்டார்கள். இது நமது உரிமை. நாம் இந்தியை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே எந்த இடத்தில் அதை வலியுறுத்திக் கேட்க வேண்டுமோ, அந்த இடத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கேட்டோம். அதே நேரத்தில் மதுவிலக்கை அமுல்படுத்துவதால் நமக்கு ஏற்படுகிற நஷ்டம் முன்பு ரூ. 60 அல்லது 70 கோடியாக இருந்தது இப்போது ரூபாய் 140 கோடி அளவுக்கு வந்துவிட்டது. மத்திய அரசு இதை ஈடு கட்ட வேண்டுமென்று கேட்கிறோம். ராஜாஜி காலத்தில் விற்பனை வரியைப் போட்டு ஈடுகட்டவில்லையா என்கிறார்கள். ஏற்பட்டிருக்கிற நஷ்டம் ரூ. 140 கோடி. இதை நாம் ஈடுகட்ட வேண்டும். விற்பனை வரியில் வருவது குறைவான வருவாய்தான். விற்பனை வரியில் வருவதைக் கொண்டு ஈடுகட்ட வேண்டுமென்று கவர்னர் அவர்கள் பேசியதாகப் பத்திரிகையில் வந்த செய்தியை வைத்துக்கொண்டு மத்திய அரசோடு வாதாடி நஷ்ட ஈட்டைப் பெற்றுத் தராமல் அது கூடாது என்று மத்திய அரசின் சார்பாகப் பேசியிருக்கிறார்கள் என்றும் சிலர் பேசினார்கள். மற்ற மாநிலங்களைப் போலில்லாமல் மதுவிலக்கை அமுல் படுத்துவதையும் காந்தியின் கொள்கைக்கு உரிய விதத்தில் கிராமப் பொருளாதாரத்தை வளர்க்கத் திட்டமிடுவதையும் பற்றி பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். புயலாலும் வெள்ளத்தாலும் இயற்கையின் உத்பாதத்தால் விளைந்த பயங்கரமான கோரப் பிடியிலிருந்து மக்களை உடனடியாகக் காப்பாற்றுவதற்கு இந்த அரசு எடுத்த தீவிர முயற்சிகளை மத்திய அரசிலிருந்து வந்த அத்தனை அமைச்சர்களும் பாராட்டிச் சென்றிருக்கிறார்கள். இவ்வளவு செலவினங்களையும் சமாளித்துக் கொண்டு வருகிற இந்த அரசுக்கு காந்தியின் கொள்கையான மதுவிலக்குத் திட்டத்தை அமுல் படுத்துவதால் ஏற்படும் இழப்பை ஈடுகட்ட மற்ற மாநிலங்

களில் ஓட்டுகிற பார்வையை இங்கேயும் செலுத்தாமல், சற்று அதிகமான நிதி
ஒதுக்குவதற்கு ஏன் முயற்சி செய்யக்கூடாது? இந்தக் கோரிக்கையை நிதிநிலை
அறிக்கையில் வைத்திருக்கிறார் நிதி அமைச்சர் அவர்கள். முறையாக, நேர்மை
யாக சட்டமன்ற மேலவையில் சொல்லுவது மாநிலங்களுக்கு அதிக அதிகாரம்

(முற்பகல் 11-50)

வேண்டும் என்பது. நமக்கு அதிக நிதி ஒதுக்கீடு தேவை என்று குரல்
கொடுப்பதாக ஏன் எதிர்க் கட்சியினர் எடுத்துக்கொள்ளக்கூடாது?
'அடைந்தால் மாநில சுயாட்சி, இல்லையெனில் சிறைக்குச் செல்லுவோம்;
நீங்கள் கொடுக்கவில்லை என்றால், நாங்களே எடுத்துக்கொள்ளுவோம்' என்றெல்
லாம் சொல்லி, 'நீங்கள் யார் கொடுக்க, நாங்கள் யார் வாங்கிக்கொள்ள' என்று
கடுமையான பதங்களை உபயோகித்து, உரத்த குரலில் பேசுவதனால் பலன்
ஏற்படும் என்று கருதுவார்களானால், அந்த நிலைமைக்கு இந்த அரசு நிச்சய
மாக வராது. ஜனநாயக ரீதியில், முறையாக மத்திய அரசினை அணுகி,
கூடுதலான அதிகாரங்களை இந்த அரசு பெறும். அதிக அதிகாரங்கள் மாநிலங்
களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று பிற மாநிலங்களும் இப்போது
ஒவ்வொன்றாக ஒப்புக்கொள்ளுகின்றன. முதலில் நாம் குரல் கொடுத்
தோம். இப்போது அடுத்து அடுத்து பல மாநிலங்கள் அப்படிப்பட்ட குரல்களை
எழுப்புகின்றன. முறைப்படி எல்லா மாநிலங்களும் ஒன்றாகச் சேர்ந்து நின்று
தங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்கும் நல்ல நாள்
சீக்கிரமே வருகின்றது. இப்படி தம்மையறியாமல் தாங்களாகவே மாநிலங்கள்
முன்வந்து கேட்கும் நாள் நெருங்கிக்கொண்டிருக்கும் நேரத்தில், நாம் ஏன்
வீணை வம்புக்குச் செல்ல வேண்டும் என்றுதான் இந்த மன்றத்தில் கூறிக்
கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மத்திய மாநில அரசுகளினால் விதிக்கப்படும் மொத்த வரி விதிப்பு
களில், மொத்தத்தில் 68 சதவிகிதத்தை மத்திய அரசு எடுத்துக் கொள்
கின்றது. மிச்சமுள்ள 32 சதவிகிதம்தான் மாநிலங்களுக்குப் பகிர்ந்
அளிக்கப்படுகின்றது. இதைக் குறித்துத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு
சுவாமிநாதன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். எப்படி நிதி ஆணைக் குழு
வின் பெயரால் மத்தியப் பேரரசு மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடுகளைச் செய்
கின்றது, எப்படி நமது மாநிலத்திற்கான ஒதுக்கீடு கொஞ்சம் கொஞ்சமா
குறைக்கப்பட்டு வருகின்றது என்ற புள்ளிவிவரங்களை எடுத்துச் சொன்னார்
பல்வேறு நேரங்களிலே நம்மைப் பாராட்டிப் பேசும் மத்திய அரசு அண்மை
யில் ஏற்பட்ட புயல்-வெள்ளக் கொடுமைகளின்போது நமது மாநி
சிறப்பாகப் பணியாற்றியது என்று பாராட்டிப் பேசும் மத்திய அரசு, நம்



முறையாகச் சேர வேண்டிய நிதி ஒதுக்கீட்டை ஏன் தரக் கூடாது என்றுதான்
நாம் கேட்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நமக்குத் துண்டு விழும்
நிதியை வரி மூலமாகச் சற்று சரி செய்துகொள்ளலாம் என்று இருந்தாலும்,
ந்த அளவிலும் ஏழை மக்களைப் பாதிக்காமல், ஏழைகள் பயன்படுத்தும்
பொருள்கள்மீது வரி விதிக்காமல், குடிசைத் தொழிலாக நடக்கும் சோப்பின்
மீதோ வேறு எந்தப் பொருள்களின்மீதோ வரி விதிக்காமல், இன்னும் சொல்லப்
போனால் உள்ள வரிகளை சில இனங்களின்மீது குறைத்திருக்கிறோம் என்றால்,
அது சாதாரணமான காரியமில்லை. ஒரு நிதி நிலை அறிக்கை எப்படி இருக்க
வேண்டும் என்று கருதுகின்ற நல்லெண்ணம் படைத்தவர்கள், மத்திய-மாநில
உறவுகள் எப்படி இருக்க வேண்டும் என்று நல்ல முறையில் கருதுகின்றவர்கள்,
மாநிலத்தில் ஒரு நிலையான அரசு இருக்க வேண்டும், அதற்கு இடையூறுகள்
ஏற்பட்டால், மக்கள் பாதிப்புக்கு உள்ளாவார்கள் என்று எண்ணுகின்றவர்கள்
யாரும் இந்த நிதி நிலை அறிக்கையைப் பாராட்டாமல் இருக்க முடியாது.
ஆளும் கட்சியினர் பாராட்டுகின்றார்கள், எதிர்க் கட்சியினர் எதிர்க்கின்றார்கள்
என்று இதைச் சொல்லவில்லை. எதிர்த்துப் பேசுகின்றவர்கள்கூட முறையாக
இதிலே இன்னின்ன தவறுகள் இருக்கின்றன, கொள்கை அளவில் இவை
தவறாக இருக்கின்றன என்று யாரும் சுட்டிக்காட்டவில்லை. கொள்கை
அளவில் அவர்களால் தவறு காண முடியவில்லை. அவர்கள் திருப்பித் திருப்பிச்
சொல்லுவதெல்லாம், 'விவசாயிகளுக்கு நன்மையா, நாங்கள் செய்யவில்லையா?
ஏழை மக்களுக்கான நல்வாழ்வுத் திட்டமா?? நாங்கள் செய்யவில்லையா?
நதி நீர்ப் பங்கீடா, காவிரி நீரா, கிருஷ்ணா நீரா, நாங்கள் செய்யவில்லையா?
நாங்கள் அல்லவா அவற்றைத் துவக்கினோம்' என்று பேசுகின்றார்கள். துவக்கி
வைப்பது வேறு, அதைச் செய்து முடிப்பது வேறு. துவக்கி வைக்கிறோம்
என்று ஏதோ விழாவினை நடத்திவிட்டு, வேண்டிய விளம்பரத்தைத் தேடிக்
கொண்டு, பிறகு அந்தத் திட்டம் பற்றியே எண்ணாமல் இருந்துவிடுவது
என்பது வேறு. ஆனால் அதை நிறைவேற்றிவைப்பது என்பது வேறு.
கோலம் போடுவதற்குப் புள்ளிகளை வைத்துவிடலாம். அது சுலபம்தான்.
ஆனால் அவற்றை ஒன்றுக்கொன்று இணைத்து அழகான கோலமாக ஆக்கிக்
காண்பிப்பது என்பது முற்றிலும் வேறு. நாங்கள்தானே புள்ளிகளை வைத்
தோம் என்றால், வைத்த புள்ளிகள் முறையாக வைக்கப்படவில்லை என்றால்,
பின்னால் அவற்றை இணைத்துக் கோலமாகப் போட முயற்சிப்பவர்கள் பாடு
தான் திண்டாட்டம். இருந்தாலும் முன்பிருந்தவர்கள் எப்படிப் புள்ளிகளை
வைத்திருந்தாலும், அவற்றை அழகாக முறைப்படுத்தி, தமிழக மக்களின்
நல்வாழ்விற்காகத் தயாரித்த நல்லதொரு அறிக்கை இந்த நிதிநிலை அறிக்கை.
சொல்லுகின்றார்கள், புரட்சி எங்கே இதில் என்று. புரட்சி இல்லை. ஆனால்

துணிச்சல் இருக்கின்றது என்றும் கூடவே சொல்லுகின்றார்கள். இந்த நேரத்தில் நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச் சொன்னதைச் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். 'ஏழை மக்களுக்காக யார் நன்மை செய்ய நினைத்தாலும், அவர்களுடைய பிரச்சினைகளைக் கனிவோடு அணுக வேண்டும்' என்பார்கள். 'கனிவு இருந்தால்தான், தெளிவு ஏற்படும், தெளிவு ஏற்பட்டால் தான், துணிச்சல் பிறக்கும்' என்பார் நமது அண்ணா அவர்கள். எதிர்க்கட்சியினர் இந்த நிதிநிலை அறிக்கையில் துணிச்சல் இருக்கின்றது என்கின்றார்கள். துணிச்சல் என்பதும் ஒரு வகையான புரட்சிதான். ஏழை மக்களுக்கு நன்மைகளைச் செய்ய வேண்டுமானால், செய்தே முடிப்போம் என்ற துணிச்சல் இருப்பது மிகவும் அவசியம். அந்த முறையில், நமது ஆட்சி துணிச்சலுடன் பணியாற்றுவதாக எதிர்க் கட்சியினர் சொல்லுவது வரவேற்கத்தக்கதாகும். அந்தத் துணிச்சல் இருப்பதால்தான், நகர மக்களுக்குச் என்று செய்யப்படும் திட்டங்கள் பல கிராம மக்களுக்குச் செய்யப்படுவதில்லை என்பதை உணர்ந்து, நகர மக்களின் வருவாய் கிராமப்புற மக்களின் வருவாயைவிட அதிகமாக இருக்கின்றது. கிராமப்புற மக்களையும் அந்த அளவிற்கு மேம்பாடு அடையச் செய்ய வேண்டும் என்று அவர்கள் வளர்ச்சியில் நமது அரசு அக்கறை காட்டி வருகின்றது. "நாங்கள் கிராம மக்களுக்கு நன்மைகளைச் செய்யவில்லையா?" என்று கேட்கின்றார்கள் எதிர் வரிசையில் உள்ளவர்கள். 'நாங்கள் இணைப்புச் சாலைகளைப் போட வில்லையா, நாங்கள் குடிநீர் வசதியைச் செய்து தர வில்லையா, நாங்கள் தெ விளக்குகளைப் போட வில்லையா?' என்று கேட்கின்றார்கள். ஆனால் நான் கேட்கிறேன், இன்னும் எவ்வளவு கிராமங்கள், சமுதாயத்தில் புறக்கணிக்கப் பட்ட மக்கள் வாழும் காலனிகள் எவ்வளவு இன்னும் மின் விளக்கு இல்லாமல் இருக்கின்றன என்பது தெரியாதா? ஆனாலும் தமிழகம் முழுவதுமுள்ள கிராமங்களுக்கு மின் விளக்கு கொடுக்கப்பட்டு விட்டதாக விழாவே நடத்தப் பட்டது. கிராமப் பகுதியிலுள்ள சாலைகள் இன்னும் படுமோசமான நிலையில் இருக்கின்றன. ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சென்னையில், அண்ணா நகரிலுள்ள சாலைகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவரும் அந்தப் பகுதியில்தான் இருக்கிறார், நானும் அங்கேதான் வாழ்கிறேன். அண்ணா நகர் சாலைகள் அழகாக இல்லை என்று குறைபடும் அதே நேரத்தில் கிராமப் பகுதியிலுள்ள சாலைகள் எவ்வளவு மோசமாக இருக்கின்றன என்று எண்ணிப் பார்த்தாரா? அப்படி ஏழை எளிய மக்கள் லட்சக்கணக்கில் வாழும் கிராமப்புறங்களுக்கு அதிக வசதிகளைச் செய்து தர வேண்டும் என்றுதான் இந்த அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிவருகின்றது. நான் கேட்கிறேன், நடமாடும் மருத்துவ மனையை இதற்கு முன்பு எந்த அரசு ஏற்பாடு செய்தது? நான் நலத் துறை அமைச்சராக இருந்த காலத்தில் ஓரளவிற்கு அந்தத்



(நண்பகல் 12-00)

திசையில் செயல்பட முடிந்தது என்றாலும், இன்றைக்கு வீடுதேடி மருத்துவ
மனை செல்லுகின்றதே? வாழ்விழந்து நிற்கும் கிராமப்புற மக்களுக்கு இன்று
வாழ்வளிக்க நல்ல ஆரோக்கியத்தை அளிக்க நடமாடும் மருத்துவ மனைகள்
உள்ளன. சென்னை நகரிலும் பல்வேறு மருத்துவ மனைகள் இருக்கின்றன.
நகராட்சியால் நடத்தப்படும் மருத்துவ மனைகள் இருக்கின்றன. ஆனால் மக்கள்
இவற்றை விட்டுவிட்டு பெரிய பெரிய மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை
களுக்கும் இராயப்பேட்டை மருத்துவ மனைக்கும் சென்று மணிக்கணக்கில்
காத்து நிற்பதைப் பார்க்கிறோம். அதை விடுத்து, மாநகராட்சி நடத்தும்
மருத்துவ மனைகளில் சாதாரண வியாதிகளுக்குச் சிகிச்சை அளித்து, பெரிய
அளவிற்குச் சிகிச்சை பெறவேண்டியவர்களைப் பெரிய மருத்துவ மனைகளுக்கு
'ரெபர்' செய்தால், பெருங்கூட்டங்கள் அம்மருத்துவ மனைகளில் இராது என்ற
முறையில் சில நல்ல திட்டங்களையும் இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கின்றது.
கிராம மக்களுக்கு நடமாடும் மருத்துவ மனைகளைக் கொண்டுவந்திருப்பது
பெரியதொரு புரட்சி இல்லையா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். மின்
சக்திக்கு முன்பு 95 கோடி ரூபாய் அனுமதித்திருந்த நிலைமை மாறி, இந்த
ஆண்டு ரூபாய் 114 கோடிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏறத்தாழ
19 கோடி ரூபாய் மின்சக்திக்காக மட்டும் ஒதுக்கீடு அதிகப்படுத்தப்பட்டிருக்
கிறது. இந்த பட்ஜெட்டில் 34 கோடி ரூபாய்க்குத் துண்டு விழுகிறது என்று
சொன்னால், அதில் 19 கோடி ரூபாய் மின் சக்திக்கு அதிகமாக ஒதுக்கப்பட்ட
தால் ஏற்பட்டிருக்கிறது. அரசு அந்த அளவுக்கு மின் சக்தியைப் பெருக்கு
வதற்குத் திட்டம் தீட்டியிருக்கிறது. மின் சக்தி இருந்தால்தானே, தொழில்
அபிவிருத்தி அடைய முடியும், மின் சக்தி இருந்தால்தானே, விவசாயம்
அபிவிருத்தி அடைய முடியும், மின் சக்தி இருந்தால்தானே, கிராமப்புறங்
களுக்கு ஒளிதர முடியும் என்பதை உணர்ந்து இந்த அரசு திட்டங்களைத்
தீட்டியிருக்கிறது. வந்திருக்கிற அரசு புதிய அரசுதான். அனுபவம்
இல்லாத அரசுதான். எதற்கு எதைச் செய்வது என்று தெரியாமல் திக்கு
முக்காடுகிறார்கள் என்று சில எதிர்க்கட்சியினரால் சொல்லப்படுகிறவர்களின்
அரசு, ஏழை எளிய மக்களுக்கு எதைச் செய்ய வேண்டுமோ அதை எண்ணிப்
பார்த்துச் செய்திருக்கிறது. அந்த வகையிலேதான் மின்சக்தி தயாரிப்பதிலே
19 கோடி ரூபாய் அதிகமாகச் செலவிட திட்டம் தீட்டியிருக்கிறார்கள். மின்
சக்தி உற்பத்திக்கு 95 கோடி ரூபாயிலிருந்து 114 கோடி ரூபாயாக உயர்த்தி
ஒதுக்கீடு செய்திருப்பது பெரிய புரட்சியல்லவா?

"ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்" என்று கவி பாரதி பாடினார். அவர் பாடிய பாட்டை அவர் கட்சிக்காரர்களேகூட நினைவாக்கவில்லை. இன்றைக்கு 100 கோடி ரூபாய் செலவில் கரும்புச் சக்கையை மூலப் பொருளாகக் கொண்டு நியூஸ்-பிரிண்ட் எனக் கூறப்படும் காகிதத் தொழிற்சாலையை ஆரம்பிக்கத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. அதைப் பார்த்து "கரும்புச் சக்கை போதுமா? எதைப் போட்டு காகிதம் தயாரிப்பீர்கள்" என்று கேட்பதுதான் நியாயமா? பரிசீலனையில் இருப்பதாகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. இனிமேல் அந்தத் திட்டம் ஒப்புக்கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்பட வேண்டும். இந்தத் திட்டத்தைச் சொல்லுகிறபோது, இதை வரவேற்க வேண்டுமே தவிர, இந்தத் திட்டத்தாலே எத்தனை பேருக்கு வேலை கிடைக்கும், இதனால் அரசாங்கத்திற்கு எவ்வளவு வருமானம் கிடைக்கும், இங்கிருந்து மற்ற மாநிலங்களுக்குக் காகிதம் அனுப்ப முடியுமா, அதனாலே நமக்கு வருமானம் கிடைக்குமா என்று பார்க்க வேண்டுமே தவிர, கேலி பேசுவது நியாயமில்லை. எந்த வகையில் பார்த்தாலும், இந்த அரசு செய்திருக்கிற இந்த முயற்சி பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

மீனவர்களுடைய வீட்டு வசதிக்காக என்று ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இதைப் பாராட்டுகிறேன். மேலும் மீனள வளர்ச்சிக்காக ரூபாய் 92.4 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மீனளத் துறையிலிருந்து மீனவர்களுக்குப் படகு வாங்கக் கடன் கொடுக்கப்படுகிறது. அவர்களும் படகுகளைக் கொண்டு மீன் பிடித்து அந்தக் கடன் தொகையைத் திருப்பிக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதில் எனக்குக் கிடைத்திருக்கிற தகவல் என்னவென்றால் நிர்வாகச் செலவையும் இந்தப் படகுக்காரர்களின் மீதே சுமத்துகிறார்கள். விசைப் படகுக்காரர்கள்மீது நிர்வாகச் செலவையும் போடுகிறார்கள். இதனால் படகின் விலை கூடுதலாகிறது. அதோடு படகுக்காரர்கள் ஏழு ஆண்டுத் தவணைகளில் பணத்தைத் திருப்பிக் கொடுக்கலாம் என்றிருந்த நிலைமையை மாற்றி இப்போது ஐந்து ஆண்டுகளில் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் சொல்லியிருப்பதிலும் சங்கடம் இருக்கிறது.

அடுத்து, விசைப் படகுக்காரர்களுக்கும், கட்டுமரப் படகுக்காரர்களுக்கும் கரையோரப் பகுதியில் எங்கே பார்த்தாலும் சில தகராறுகள், கொந்தளிப்புகள் ஏற்படுகின்றன. தமிழகத்திற்குக் கிடைத்திருக்கிற நீண்ட கடல் பகுதி ஒரு பெரிய வரப்பிரசாதம். நாம் நீலப் புரட்சி என்று ஒரு புரட்சியை ஏற்படுத்தி, இந்தக் கடல் பொருள்களை எடுத்து, அயல்நாடுகளுக்கு அனுப்பி, நிறைய அந்நியச் செலாவணியை ஈட்டும் அளவுக்கு இதனை வளர்த்திருக்கிறோம். இந்தத் தொழில் ஒரு பெரிய தொழிலாகும். இந்தத் தொழிலை இந்த மீனவர் சமுதாய மக்கள் தவிர வேறு யாரும் செய்திட முடியாது. விசைப் படகில் போனாலும்



சரி, கட்டு மரத்தில் போனாலும் சரி, அவர்கள்தான் சென்று மீன் பிடித்தாக வேண்டும். எந்தத் தொழிலில் மற்றவர்களுடைய போட்டியிருந்தாலும், இந்தத் தொழிலைப் பொறுத்தவரையில், மற்றவர்கள் போட்டி என்பது இருக்க முடியாது. அவர்கள் பிறவியிலேயே பழக்கப்பட்டவர்கள். அப்படிப்பட்டவர்கள் இன்றைக்கு எவ்வளவு கேவலமான நிலையில் இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, வருந்தாமல் இருக்க முடியாது. அப்படிப்பட்ட மக்கள் இன்றையதினம் இரண்டு இனங்களாகப் பிரிந்துகொண்டு, சண்டை சச்சரவுகள் போடுவதும், நடுவீதியில் வந்து போக்குவரத்தை நிறுத்துவதும் போன்ற அவல நிலை ஏற்பட்டிருப்பதைப் பார்த்து, நான் உண்மையிலேயே வருத்தப்படுகிறேன். எனவே இது குறித்து அரசு தக்க நடவடிக்கை எடுத்து அந்தச் சமுதாய மக்கள் மத்தியில் ஒரு சுமுக நிலையை ஏற்படுத்த வேண்டும். அந்நியச் செலாவணியை அதிக அளவில் ஈட்டித் தரும் பெரிய தொழில் என்பதையும் மனதில் கொண்டு அரசு இந்தக் காரியத்தில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்களைப்போல இன்னும் சில சமுதாய மக்கள் மிகவும் பின்தங்கியோர் பட்டியலில் இருந்தார்கள். அண்மையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். எஸ். ராமசாமிப் படையாச்சி அவர்கள்கூடக் கேட்டார்கள். மிகவும் பின்தங்கியோர் பட்டியலை ஏன் நீக்கினீர்கள் என்று. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் வகையில், 'மீண்டும் அது வைக்கப்பட்டிருக்கிறது' என்று சொன்னார்கள். பின்தங்கிய மக்களுக்காகத் தனி இலாக்கா வைத்தோம் என்று இப்போதுகூடப் பேசுகிறார்கள். பின்தங்கிய மக்களுக்காக அத்தனையும் செய்தோம் என்று பேசுகிறார்கள். இவர்கள்தான் மிகவும் பின்தங்கியோர் பட்டியலை நீக்கியவர்கள். ஒருமுறை அப்போதிருந்த முதலமைச்சர் அவர்கள் "நான்கூட மிக மிகப் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்தவன்தான். எத்தனை 'மிக மிக' வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளுங்கள்; அத்தனை 'மிக மிக' பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவன் நான்" என்று சொல்லிக்கொண்டார்கள். அந்த மிக மிகப் பின்தங்கியவர் ஆட்சியின்போதுதான் இந்த மிகப் பின் தங்கியவர்களின் பட்டியல் நீக்கப்பட்டது. அந்த மிகப் பின் தங்கியவர்கள் பட்டியலில் மீனவர்கள், சலவைத் தொழிலாளர்கள் ஆகியோர் இருந்தார்கள். நான் அந்தத் துறையின் அமைச்சராக இருந்தபோது, ஹரிஜன நலத் துறை வேறு, பின்தங்கியோர் நலத் துறை வேறு என்று பிரிக்கப்பட்டது. அதற்குப் பிறகுதான் மிகப் பின்தங்கியோர் பட்டியல் நீக்கப்பட்டது. கல்லூரிகளில் அல்லது பள்ளிகளில் சேரும்போது, மிகப் பின்தங்கியோர் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் 40 எண்ணிக்கை வாங்கினாலே போதும்; சலுகைகள் கொஞ்சம் அதிகமாக இருக்கும். அதேபோல் அவர்களுக்குத் தொழில் கருவிகள் கொடுக்கப்படும்.

ஆனால் இவைகள் எல்லாம் இடைக்காலத்திலே நிறுத்தப்பட்டன. இந்த அரசு இவைகளை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்ற அடிப்படையில், மிகவும் பின் தங்கியோர் பட்டியலைக் கொண்டு வர வேண்டும் என்று இதில் தனிக் கவனம் செலுத்தியிருப்பது பற்றிப் பாராட்ட வேண்டாமா? புதிதாகக் கொடுக்கவில்லைதான். ஆனால் கொடுத்துவந்ததை இடையிலே நிறுத்தியிருந்தார்கள். இந்த அரசு வந்து அவ்வாறு நிறுத்தப்பட்டிருந்ததை மறுபடியும் தொடர்ந்து கொடுப்பது என்று முடிவெடுத்திருப்பது அந்தச் சமுதாய மக்கள் மீது கொண்டுள்ள அக்கறையைக் காட்டவில்லையா?

இந்த நிதி நிலை அறிக்கையிலே தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்கள், மற்றும் பின்தங்கிய மக்களுக்காக ரூபாய் 25 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். தாழ்த்தப் பட்ட மக்களுக்கு வீடு கட்டுவதற்கு என்று ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வீட்டு வசதி வாரியத்திற்கு இரண்டு கோடி ரூபாயும் நிலத்தை வாங்குவதற்கு ஒரு கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. நான் அமைச்சராக இருந்தபோது, படாதபாடுபட்டுக் கேட்டேன். அவைகளெல்லாம் இன்னும் ரெக்கார்டுகளில், தஸ்தாவேஜுகளில் இருக்கின்றன. அப்போது தாழ்த்தப் பட்ட மக்களுக்காக நிலம் ஆர்ஜிதம் செய்வதற்காகப் பணம் கொடுக்கவில்லை. நிலம் அவர்களுக்கு வாங்கவே வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். நிலம் இல்லை என்றால், எப்படி வீடு கட்ட முடியும்? நாளாக நாளாக நிலத்தின் விலை ஏறும். அந்த அளவுக்கு அப்போது கொடுமைகள் நடந்தன. ஆனால் இன்றையதினம் புதிய அரசு வீட்டு மனைக்காக என்று ஒரு கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை அவைக்குக் கொடுக்கக் கூடாது என்பதற்காக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தாழ்த்தப்பட்டவர்களுக்கு நிலம் வாங்க பணம் ஒதுக்கப்படவே இல்லை என்று குறிப்பிட்டார்கள். என்னுடைய ஆற்காடு தொகுதியில் மட்டும் 11 ஹரிஜன காலனிகளுக்கு நிலம் வாங்குவதற்குப் பணம் கொடுத்து, நிலத்தை வாங்கிக் கொடுத்து, அவர்களுக்கு வீடுகளையும் கட்டிக் கொடுத்திருக்கிறோம். இதை நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

**திருமதி சத்தியவாணி முத்து:** உறுப்பினர் குறிப்பிடுவது 1967-68 அல்லது 1968-69 ஆம் ஆண்டில் இருக்கும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** 1971 ஆம் ஆண்டு வடாற்காடு மாவட்டத்தில் ஆற்காடு தாலுக்காவில் 11 ஹரிஜன காலனிகளுக்கு வீட்டு மனைகளை வழங்குவதற்கு என்று நில ஆர்ஜிதம் செய்ய அரசாங்கம் பணம் கொடுத்திருக்



கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பல இடங்களில் இப்படி நடந்திருக்கிறது. 1969 ஆம் ஆண்டில் மட்டும்தான் என்று சொல்லுவது சரியல்ல. பேரறிஞர் அண்ணா அவர்கள் செய்ததை நாங்கள் எப்போதும் இருட்டடிப்புச் செய்ய முனைந்ததில்லை. ஆனால் நான் சொல்ல விரும்புவது, கலைஞர் அவர்களின் காலத்திலும் ஹரிஜன காலனிகளுக்கு நிலம் வாங்க பணம் ஒதுக்கப்பட்டு செலவிடப்பட்டது என்பதுதான்.

**திருமதி சத்தியவாணி முத்து:** நானே அமைச்சராக அந்தத் துறைக்குப் பொறுப்பேற்று இருந்தேன். எனக்கு மாண்புமிகு உறுப்பினர் தகவல் கொடுப்பது வேடிக்கையாக இருக்கிறது. நான் இப்போது ஆதாரத்தோடு சொல்லுகிறேன். அரசாங்க தஸ்தாவேஜுகளைப் புரட்டிப் பார்த்தால், உண்மை தெரியும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நானும் ஆதாரத்தோடுதான் சொல்லுகிறேன், உறுப்பினர் சொல்லுகிற விவரம் தவறு என்று.

**திருமதி சத்தியவாணி முத்து:** லேண்ட் அக்விசிஷனுக்குப் பணம் நிறுத்தப் பட்டது. வேண்டுமானால் இப்போதே போய் உறுப்பினர் அவர்கள் தங்கள் கட்சித் தலைவரைக் கேட்டுப் பார்க்கலாம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவரைப் போய்க் கேட்க வேண்டியதில்லை. எனக்குத் தெரிந்த விவரத்தை வைத்துத்தான் நான் சொல்லுகிறேன்.

**திருமதி சத்தியவாணி முத்து:** உறுப்பினர் அவர்களுக்கும் அந்தத் துறைக்கும், அந்த இலாக்காவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் அப்போது சட்ட மன்றத்திலே உறுப்பினராக இருந்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற "தகவல் தவறான தகவல் என்பதைத்தான் நான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன்.

**திருமதி சத்தியவாணி முத்து:** உறுப்பினர் சொல்லுகிற ஆண்டு வேறாக இருக்கலாம்.

ஆரம்பத்தில் வீட்டு மனைகளுக்காக நிலம் ஆர்ஜிதம் செய்ய பணம் கொடுக்கப்பட்டது. எப்போதும் கொடுக்கப்படவில்லை என்று சொல்லவில்லை. பின்னாலே அது நிறுத்தப்பட்டது. அதைப் போலத்தான் மிகவும் பின்தங்கியோர் பட்டியலும் முதலில் இருந்தது. பிறகு நீக்கப்பட்டது. நான் இந்த நில ஆர்ஜிதத்திற்காகப் பலமுறை பணம் கேட்டிருக்கிறேன். எவ்வளவு

கொடுத்தார் என்று போய்க் கேட்டுப் பாருங்கள். ரூபாய் 5 அல்லது 10 லட்சம் என்றுதான் கொடுப்பார். நான் அமைச்சராக இருந்து அதற்காகப் போராடி வெளியே வந்தவள். நீங்கள் எங்கேயோ மூலையிலே இருந்துவிட்டு அவருக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டிருக்கிறீர்கள்.

**மாற்றுத் தலைவர் (திரு. ஆ. பாலசுப்ரமணியம்):** தயவு செய்து உறுப்பினர்கள் தலைவரைப் பார்த்துப் பேச வேண்டும். நேரடியாகப் பேசிக்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் எந்த மூலையில் இருந்தேன், அம்மையார் அவர்கள் எந்தக் காரணத்திற்காக வெளியே போனார்கள் என்ற விவாதத்திற்கு இப்போது நான் வரவில்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1971 ஆம் ஆண்டுக்குப் பிறகு, 1969 ஆம் ஆண்டுக்குப் பிறகு, பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்து கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, ஹரிஜன நலத்துறை மூலமாக தாழ்த்தப்பட்டவர்களுக்கு நிலம் வாங்க பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அம்மையார் அவர்கள் அமைச்சராக இருந்தார்கள், மறுக்கவில்லை. இந்த மன்றத்தில் தலைவராக இருக்கிற தாங்கள் அதற்கான கோப்புகளை வரவழைத்து, பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதை விவாதிக்கத் தயாரா? தாழ்த்தப்பட்டவர்களுக்கு நிலம் வாங்குவதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது என்னுடைய வாதம். அம்மையார் அவர்கள் இல்லை என்கிறார்கள். எனவே உண்டா இல்லையா என்பதை விவாதிக்கத் தயாரா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு உறுப்பினர் பேசும்போது, இருக்கக்கூடிய மற்ற உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட காரியங்களாக இருந்தால்தான் குறுக்கிடலாம் என்ற மரபு ஒன்று இருப்பதாக அறிகிறேன். அந்த மரபு சரியாக இருந்தால், திரு. வீராசாமி அவர்கள் அடிக்கடி குறுக்கிடுவதைத் தவிர்ப்பது நன்றாக இருக்கும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** உறுப்பினர் அவர்கள் தவறான தகவல்களைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. எஸ். முத்து** தவறான தகவல்களை நீங்கள்தான் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.





**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தவறான தகவல்களைக் கொடுப்பது யார் ன்பது புள்ளிவிவரங்களைப் பார்த்தால் தெரியும்.

**திருமதி சத்தியவாணி முத்து:** மாற்றுத் தலைவரவர்களே, இந்த மன்றத்
தில் மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர் அவர்கள் அதைப்பற்றி விசாரிக்க
வேண்டும் என்று சொல்கிறார்கள். நானும் அதை ஏற்றுக் கொள்கிறேன்.
நான் 1974 வரையிலே அமைச்சராக இருந்திருக்கிறேன். 1974 வரையிலே
எந்த எந்த ஆண்டு எவ்வளவு கொடுக்கப்பட்டது, எந்த எந்த ஆண்டு
கொடுக்கப்படவில்லை என்ற புள்ளிவிவரங்களைக் கொடுக்கட்டும். அதற்கான
விவரங்களை அறிய தஸ்தாவேஜுகளைப் புரட்டிப் பார்க்க வேண்டும். இப்படிப்
பட்ட விளக்கம் இருந்தால்தான் மக்களுக்கும் தெரியும். மக்கள் ஏமாற
மாட்டார்கள். ஆளுங் கட்சி எதிர்க் கட்சி மரபுகள் இருக்கும். ஆகவே அதை
நான் ஏற்றுக்கொள்கிறேன். அதற்கு நீங்கள்தான் ஏற்பாடு செய்ய வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

ராணுவத்திலே உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் உயர் அதிகாரிகளாக உயர்வு
பெறுவதற்கு வாய்ப்புகளை உண்டாக்க வேண்டும். இன்றைக்கு ராணுவத்தில்
பெரும்பான்மையானவர்கள் அடி நிலை ஊழியர்களாகத்தான் இருக்கிறார்கள்.
மேலே

தாழ்த்தப்பட்ட மக்கள் பல ஆண்டுகளாகவே இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட
செல்லுகின்ற விமானத்தைக்கூட வீழ்த்துகின்றவர்கள் ஆறுமுகம்
மக்களில் இருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சுட்டு வீழ்த்தி
என்பவர், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர் அப்படி
யிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்டவர்கள்
ராணுவத்தில் நான்காம் தர ஐந்தாம் தர அதிகாரிகளாகத்தான் இருந்து
கொண்டிருக்கிறார்கள். அவர்கள் உயர்தர அதிகாரிகளாக வருவதில்லை.
அதற்கு வாய்ப்புகள் இல்லை என்ற குறைபாடு இருந்தது. இது மத்திய
அரசின் அதிகாரத்தில் இருந்தாலும், மாநில அரசு தாழ்த்தப்பட்ட மக்கள் பின்
தங்கிய மக்கள் பெரிய அதிகாரிகளாக வரவேண்டும் என்று அவர்களுக்காக
ஏற்பாடு செய்திருப்பதை நான் உள்ளபடியே வரவேற்கிறேன். அந்த
அளவுக்குத் தாழ்த்தப்பட்ட மக்களின்மீது இந்த அரசுக்குக் கவலை இருப்பதை
நான் பாராட்டுகிறேன். பின் தங்கியவர்கள், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்
பட்டவர்களுக்கு அவர்களுடைய பெற்றோர்களுக்கு வருமான எல்லை
ரூபாய் 2,000 என்று இருப்பதை ரூபாய் 2,500 ஆக உயர்த்தியிருக்கிறார்கள்.
இவைகள் எல்லாம், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பின் தங்கிய மக்களுக்கு
இருக்கின்ற சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு எடுத்திருக்கின்ற முயற்சி
ளாகும். ஆனாலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுமைகள் இழைக்கப்

படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு இவர்கள் விஷயத்தில் காவல் துறையினர் சரியாகச் செயல்படவில்லை என்ற மன வருத்தம் இருக்கிறது. ஆனால் இந்த சாதி சாக்காடு அழுக்கு நீக்கப்படுமா என்றால், அது நீக்கப்படாது என்று சொல்கின்ற அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் வாரணாசியில் டாக்டர் சம்பூர்ணனந்த் அவர்களின் சிலையைத் திறந்து வைத்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்திலே அமைச்சராக இருப்பவர்கள், நீண்டகாலமாக ஒரு நல்ல அரசியல் வாதியாக இருப்பவர்கள், இந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே அந்தச் சிலையைத் திறந்தார்கள் என்பதற்காக, அந்த உயர் ஜாதிக் காரர்கள் அந்தச் சிலையின் மீது கங்கை நீரைக் கொண்டுவந்து ஊற்றி அதைப் பரிசுத்தம் செய்திருக்கிறார்கள். இந்தக் கொடுமை காந்தியார் பிறந்த நாட்டிலே இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறது. இந்தக் கொடுமையை யார் தடுப்பது? தாழ்த்தப்பட்டவர்களுக்கு, அரிஜனங்களுக்கு இருக்கும் இந்தக் கொடுமையை அகற்ற வேண்டும். அதைச் செய்வது திரு. மொரார்ஜி பாய் அவர்களா, திருமதி இந்திரா காந்தி அம்மையாரா என்பதல்ல. அதைப் படிப்படியாகக் கொண்டுவருகின்ற இந்த நேரத்தில், பாபுஜி ஜகஜீவன்ராம் அவர்கள் போய் திறந்த சிலையைப் புனிதப்படுத்த கங்கை நீர் விடுகின்ற நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. உயர் ஜாதிக்காரர்கள், காசியிலே இருப்பவர்கள், கங்கை நீரைக் கொண்டுவந்து ஊற்றி புனிதப்படுத்துகின்ற நிலைமை எவ்வளவு மட்டரகமான, கீழ்த்தரமான காரியமாக இருக்கிறது. அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து, பல பேர்களைக் கைது செய்யலாம். நாம் திட்டம் தீட்டுகின்றோம், நாடு எங்கும் இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலே இப்படிப்பட்ட நிலைமைகள், கொடுமைகள் இருக்கின்றன. அதை மாற்றிக்கொள்ளக்கூடிய மனப்பக்குவம் எங்கே வந்திருக்கிறது? இப்படிப் பட்ட நிலைமைகளில் எங்கே தாழ்த்தப்பட்ட மக்கள் உயர முடியும்? அரசு திட்டங்களை அவர்களுக்காக நிறைவேற்றுவதாகச் சொல்லிக்கொண்டிருக் கிறார்கள். இந்த அரசு அதைச் சொன்னாலும், மக்கள் மத்தியிலே அந்த நிலைமைகள் மாறவில்லை. இன்றைக்கும் தீண்டாமையை ஒழிக்க முடியவில்லை. இன்றைக்குப் பெரிய பதவியில் இருப்பவர், மத்திய அமைச்சராக இருப்பவர், அவர் சிலையைத் திறந்திருக்கின்றார். அந்த அளவுக்கு உயர் ஜாதிக்காரர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் முத்தனுக்கும் முனியனுக்கும், குப்பிக்கும் சுப்பிக்கும் என்ன நிலை என்பதை நாம் உணர வேண்டும். எனவே

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

ஜாதி ஒழிப்புத் திட்டத்தை அமுல்படுத்துவது, நல்ல முன்னேற்றமான காரியங்களை பின் தங்கிய மக்களுக்குச் செய்வது, வருமான எல்லையை அதிக



மாக்குவது, ராணுவத்திலே உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உயர் அதிகாரிகள் பதவி கிடைப்பதற்கு வழிவகைகள் செய்வது என்ற பல காரியங் களைச் செய்திருக்கிறது இந்த அரசு.

இரண்டு தினங்களுக்கு முன்னால் கேள்வி நேரத்திலே, மலைவாழ் மக்க ளுக்குத் தனி ஒன்றியம் வைக்க வேண்டும் என்று கேட்டபோது, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மலை வாழ் மக்களுக்குத் தனி ஒன்றியம் வைக் கிறோம் என்று சொன்னார்கள். நானும் இங்கே கேட்டுக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தொகுதிகள் இருக்கின்றன. மற்றவர்களுக்கு நல்ல முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. குறைந்த அளவுக்காவது இவர் களுக்கு ஒரு முன்னேற்றம் வந்ததா என்றால், இல்லை. இன்னும் கொடுக்க வேண்டுமென்று இந்த சமுதாயத்தினரே கேட்டால்கூட, நாம் ஆச்சரியப் படலாம். ஆனால் இன்றைக்கு மற்றவர்களும் அந்தக் கருத்தையே சொல் கிறார்கள். அப்படி இருக்கும்போது, மலை வாழ் மக்களுக்குத் தனியான தொகுதியை, ஒன்றியத்தை அமைப்பதாக உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அது போலவே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் தொகுதிகள் அதிகமாக்கப்பட வேண்டும். இருக்கின்ற சில ஒன்றியங்களிலே அதிகப்படியான தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்றனர். அந்த ஒன்றியங் களைப் பிரித்தெடுத்து, தாழ்த்தப்பட்டவர்களுக்கு, பின்தங்கியவர்களுக்கு வாய்ப்பளிக்க, தொகுதிகளை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மலை வாழ் மக்களுக்குச் செய்து கொடுப்பது போல செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பீடி சுற்றும் தொழிலாளர்கள், கைத்தறி நெசவு செய்யும் தொழிலாளர்கள் இவர்களுக்கெல்லாம் சிகிச்சை அளிக்கும் ஒரு திட்டத்தை இந்த அரசு தொடங்கியிருக்கிறது. பீடி சுற்றுபவர்களுக்குக் காச நோய் வருகிறது; அதே போல காலை உயர்த்தி உயர்த்தி, பின் குனிந்து குனிந்து நெசவுத் தொழிலைச் செய்வதால் அவர்கள் வலிவிழந்து போகிறார்கள். அவர்களுக்கெல் லாம் இன்றைக்கு இதற்குமுன் இல்லாத ஒரு திட்டத்தை, சிகிச்சைத் திட்டத்தைச் சேர்த்திருக்கிறார்கள். சென்னை போன்ற நகரங்களில், சாக் கடை நீர் அடைத்துக்கொண்டால், சாக்கடையில் "man-hole" மனிதன் மூச்சைப் பிடித்து இறங்கி, அந்தச் சாக்கடையில் ஏற்படுகின்ற அடைப்பை எடுக்கிறார்கள். அப்படி இறங்கி வேலை செய்யும்போது, பிராணவாயு குறை வாக இருந்தால், மனிதன் இறந்துபோவதைக் காண்கிறோம். அப்படிப்பட்ட தொழில் செய்பவர்களுக்குச் சிகிச்சை அளிக்க சென்னையில் மருத்துவ மனை

யிலே வசதி இருக்கிறது. அந்தச் சிகிச்சையை அளிக்க, தனிப் பிரிவாக வைத்து கவனிக்க வேண்டும் என்று நான் இந்த அரசை மிகவும் விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

பிச்சாவரத்தில் அன்று அண்ணா கண்ட கனவு இன்றைக்கு நனவாகிறது. திராவிட நாடு பத்திரிகையிலே எழுதியிருக்கிறார்கள். பிச்சாவரத்திலே இருக்கும்போது, அங்குள்ள இயற்கை அழகு மன நிறைவை அளிக்கிறது என்றும், அங்கேயிருந்து தான் பல நூல்களை எழுதியிருக்கிறேன் என்றும் அவர் திராவிட நாடு பத்திரிகையிலேயே எழுதியிருக்கிறார்கள். அதை மனதிலே வைத்துக் கொண்டுதான், இந்த அரசு பிச்சாவரத்திலே ஒரு சுற்றுலா நிலையம் ஏற்பட வேண்டும் என்று செய்திருக்கிறார்கள். அப்போது நான் சுற்றுலாத் துறை அமைச்சராக இருந்தேன். உடனடியாக அதற்கான திட்டம் தீட்டினேன். அண்ணாவைப்பற்றிப் பெரிதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அண்ணாவே சொல்லியிருக்கின்றார் என்பதற்காக நான் திட்டமிட்டேன். அதை நான் செய்ய முற்படுகிறேன் என்பதற்காகவே அதை விட்டுவிட்டார்கள். இன்றைக்கு சுற்றுலாத் துறை அமைச்சராக இருப்பவர்கள், அங்கு சுற்றுலா நிலையத்தை உருவாக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். அது அண்ணா அவர்களுக்கு நாம் செலுத்துகின்ற காணிக்கையாகும். அவர் காலடியிலே நாம் இந்தத் திட்டத்தை வைக்கிறோம் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். அவரே விரும்பிய அந்தத் திட்டத்தை நாம் இப்போது நிறைவேற்றுகிறோம். அந்தத் திட்டத்தை இந்த அறிக்கையிலேயே சேர்த்து நிறைவேற்றக் கருதுவதால், நாம் அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு சிறப்புச் செய்கிறோம், முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-20)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இன்னும் எவ்வளவு நேரம் பேசப்போகிறீர்கள்?

**திருமதி சத்தியவாணி முத்து:** இன்னும் ஐந்து நிமிடங்களில் முடித்துக் கொள்கிறேன். பாலம்மாள் என்ற பெண் கற்பழிக்கப்பட்ட சோகக் கதையை அவையிலே சொன்னார்கள். முதல்வரவர்கள் இருந்திருந்தால், மிகவும் வேதனைப்பட்டிருப்பார்கள். எல்லோருக்கும் வேதனை தரக்கூடிய செய்திதான். குறிப்பாக முதல்வரவர்கள் தாய்க்குலத்தின்மீது அதிக அக்கறை செலுத்த வேண்டுமென்று விரும்புகிறவர்கள். அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்கள் போராட்டத்தின்போதுகூட, போராட்டத்தில் கலந்து கொண்ட பெண்களை விட்டுவிட்டார்கள். அது சட்டத்திற்குப் புறம்பாக இருக்கலாம். யாராக இருந்தாலும், போராட்டத்தில் கலந்துகொண்டால், போலீஸ் இலாகாவினருக்கு



ஒன்றுதான். அதில்கூட விதி விலக்காகப் பெண்களை விடுவித்திருக்கிறார்கள்.
மதுரையை எரித்த கண்ணகிகூட குழந்தைகள், தாய்மார்கள், வயோதிகர்களை
விட்டுவிட்டு, மதுரையை எரித்தாள். அதைப்போல புரட்சித் தலைவர் அவர்கள்
தாய்மார்கள் போராட்டத்தில் கலந்துகொண்டாலும், கைது செய்ய வேண்டா
மென்று கூறும் அளவுக்கு மனப்பக்குவம் படைத்தவர்கள். எனவேதான் 40
வயதான கைம்பெண்களுக்கு மாதம் 20 ரூபாய் அளிக்கும் திட்டத்தைக்
கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை நாம் உண்மையிலேயே
பாராட்ட வேண்டும்.

அடுத்து, மோட்டார் வாகன வரியிலிருந்து ஒரு சதவிகிதத்தை—50 லட்சம்
ரூபாயை முதலமைச்சர் நிவாரண நிதியிலே எடுத்துப் போட்டுக்கொண்டாரே,
அதை அப்படிப் போடலாமா; அது சர்வாதிகாரமாகிவிடாதா; சொந்தச் செல
விற்கு எடுத்துக்கொள்வார் என்று சொன்னார்கள். அவர் செலவிற்கு ஏன்
எடுக்கப் போகிறார்? சொந்தப் பணத்தை ஏழைகளுக்கு வாரி வாரிக்
கொடுத்துத்தான் புரட்சித் தலைவர், கொடை வள்ளல் என்று பெயர் பெற்
றார்கள். சொந்தப் பணத்திலிருந்து கொடுக்க மனம் இல்லாமல் இல்லை. அங்கே
பணமில்லை. அரசுக்கு வரும் பணத்தை, வரிப் பணத்தைச் சொந்தக் காரியத்
திற்கு, கட்சிக்காரர்களுக்குக் கொடுக்க முடியாது. மோட்டார் விபத்தில்
இறப்பவர்களின் குடும்பங்களுக்கு உதவித் தொகையாக 1,000 ரூபாய்
கொடுக்கத் திட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். முதலமைச்சர் நிதி
யிலிருந்து ஏழைகளுக்குத் தரப்படும். திடீரென்று முதல்வரவர்கள் தனக்
கென ஒரு நிதியைத் தேடி வைத்துக்கொண்டு, வேண்டியவர்களுக்கு உதவி
செய்வதற்காகத் திடீரென்று மோட்டார் வாகன வரியிலிருந்து ஒரு சதத்தை—
50 லட்சம் ரூபாயை எடுத்து, அந்த நிதியில் சேர்க்கவில்லை. காங்கிரஸ்
கட்சிக் காலத்திலிருந்து முதலமைச்சர் நிவாரண நிதி இருக்கிறது. அதிலே
வெவ்வேறு வகைகளிலிருந்து நிதி சேர்க்கப்படுகின்றது. மோட்டார் வாகன
வரியிலிருந்து ஒரு சதத்தை எடுத்து, அதில் சேர்த்து, அதிலிருந்து மோட்டார்
விபத்தில் இறக்கிறவர்களுக்குக் கொடுக்கிறார்கள். அதனால் 5,000 பேர்கள்
சாக வேண்டுமா என்றால், ஏன் அப்படி ஆசைப்படுகிறீர்கள்? அந்த நிதி
வளரட்டுமே. வேறு நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்துகிறார்கள். விபத்தில்
இறந்தவர்களின் குடும்பங்களுக்கு உதவியாகப் பணம் கொடுக்கிறார்கள்.
முதலமைச்சரவர்களின் செலவுக்காக அல்ல அது. எப்படி அவர் சர்வாதிகார
மாகச் செய்ய முடியும்? எல்லாவற்றுக்கும் கணக்குத் தரப்படுகிறது. பிறந்த
நாள் விழாவிற்காகக் கணக்கு வழக்கில்லாமல் பணத்தைச் சேர்த்து, செல
வழிக்க நிலை இப்போதில்லை. மோட்டார் வாகன வரியை சம்பந்தப்பட்ட

அரசு இலாக்கா வசூல் செய்கிறது. அதற்குக் கணக்கு இருக்கிறது. எவ்வள வசூல் ஆகிறது; எத்தனை பேர்கள் விபத்திற்கு ஆளானார்கள்; எத்தனை பே களுக்குக் கொடுத்தோம் என்று கணக்கிருக்கிறது. இப்படிப்பட்ட கணக்கை வைத்து, பாதிக்கப்படுகிறவர்களுக்குக் கொடுக்கும்போது, இப்படிப்பட்ட நி ஏற்படும்போது, பரவாதிகாரமாகச் செலவு செய்ய மோட்டார் வாகன வ யிலிருந்து இரு சதவிகிதத்தை எடுத்து முதலமைச்சர் நிவாரண நிதியில் சேர்க்கிறார்களென்று, ஏதோ சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லப்படுகிறது. இப்படி எதிர்க் கட்சிகள் சொல்லும் கருத்துக்கள் நேர்மையான, முறையான, நியாயமான கருத்துக்களா என்றால், இல்லை. தமிழர்கள், தமிழ் பண்பாடு என்றெல்லாம் முன்னாலே இருந்தவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். இன்றைக்கு நான் ஒன்றைக் கேட்கிறேன். மதுரையிலே இசை வேளாளர் சமுதாயமே இன்றைக்கு முதல்வரவர்களைப் பாராட்டுகிறது. 'நாங்கள்தான் செய்தோமென்று தாங்களாகவே பட்டத்தைக் கட்டிக் கொண்டவர்கள், முதல்வரவர்கள் தமிழரல்ல; தமிழுக்கு அப்பாற்பட்டவர்; மலையாளி; தமிழ் மக்களுக்கு ஒன்றும் செய்ய மாட்டார் என்று எதற்கெடுத்தாலும் மலையாளி சாயம் பூசுகிறார்கள். இன்றைக்கு தமிழ் பண்பாட்டைக் காட்டுவதற்காக கம்பர், வள்ளுவர் நினைவுச் சின்னம் அமைக்கப்படுகிறது. சிலைகளை வைக்கவில்லை. அவர்களுக்காக மையங்கள் அமைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. தமிழ் பண்பாட்டு மையம்; மதுரையில் இசைக் கல்லூரி; உமறுப் புலவருக்கு மையம் —இவைகளையெல்லாம் தமிழக அரசு ஏற்படுத்த இருக்கிறது. தமிழுக்காக நாங்கள் தான்; தமிழ் மொழி எங்களுடையதுதான்; நாங்கள்தான் தமிழர்கள்; வந்திருப்பவர் மலையாளி; அவருக்கும் தமிழுக்கும் தொடர்பில்லை; தமிழுக்கு அப்பாற்பட்ட அரசு இது என்று இன வெறியை ஏற்படுத்தி, அந்த இன வெறியால் தமிழ் மக்களைக் கூறுபோட வைத்து, அதனால் பல தொல்லைகளுக்குத் தமிழ் மக்களை ஒரு சிலர் உள்ளாக்கியிருக்கிறார்கள். அண்ணா அவர்கள் திராவிடம் என்று சொல்லும்போது, அனைவரும் ஒரு வயிற்று மக்கள் என்று சொல்லிய தத்துவத்திற்கு நேர்விரோதமாக தமிழர்கள்-மலையாளத்தார் என்று பிரித்துப் பேசியதற்கு முற்றுப்புள்ளி வைப்பதுபோன்று இன்றைக்கு உள்ள தமிழக முதல்வரவர்கள் தமிழ் இசைக் கல்லூரியைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இவைகளை எல்லாம் எதிர்க் கட்சிக்காரர்கள் பாராட்ட மாட்டார்கள். ஆனால் மக்கள் பாராட்டுகிறார்கள். சட்ட மன்றப் பேரவையிலே பேசுகிற கருத்துக்களையெல்லாம் நான் பத்திரிகையில் பார்க்கிறேன். எவ்வளவோ பாராட்டுதல்களை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். இந்த மன்றத்திலே, இந்த நிதி நிலை அறிக்கையிலே நாங்கள் பேசும்போது, எங்கள் கட்சியால் கொண்டு வரப்பட்ட நிதி நிலை அறிக்கையைப் பாராட்டுகிறோம் என்று நினை



காமல், நெஞ்சிலே கை வைத்துச் சொல்லுங்கள், உண்மையிலேயே இந்த நிதி நிலை அறிக்கை எவ்வளவு திறமையாக, எவ்வளவு சிறந்த வகையில், எவ்வளவு தேவையான வகையில், எவ்வளவு நிதி நெருக்கடிக்கு இடையிலே வந்திருக்கிறது என்பதை. இந்தச் சபையிலே இருக்கிற, ஆளுங்கட்சியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய அண்ணன் முத்து அவர்கள் பேசுகிறார்கள், நிர்வாகச் செலவு பாதிக்கு மேலாகிறதென்று. நிர்வாகச் செலவு பாதிக்கு மேலானாலும், யார் யாருக்கு என்னென்ன செய்ய வேண்டுமென்று வரையறுத்து, அந்த அடிப்படையிலே தயாரிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கை உண்மையிலேயே வரப்பிரசாதமென்று கூறி, முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எல். பலராமன் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய கொள்கைகளையும், மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவதற்காக வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்து, சமர்ப்பித்திருக்கிறது. ஆனால் இதற்கு முன்னால் ஆளுநர் அவர்கள் உரை என்ற மரபு நிலை இந்த நாட்டு அரசியலிலே இருந்தது. ஆளுநர் அவர்கள் உரை என்ற மரபு நிலை இந்த நாட்டு அரசியலிலே இருந்தது. பழக்கமாகச் செய்ய வேண்டிய அந்தச் சடங்கைச் செய்யாமல் இருப்பது அரசியல் வாதிகளுக்கும், பொது மக்களுக்கும் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நாம் மறுக்க முடியாது. அத்தை மகளாக இருந்தாலும், சம்பிரதாயப்படி நான்கு பேர்கள் சென்று பெண் கேட்பதென்பது மரபு நிலை. அதைப் போன்று கவர்னர் உரை என்ற மரபு நிலைக்கு மரியாதை தர வேண்டுமா, இல்லையா என்ற கேள்வி பொது மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பல விமர்சனங்கள் அனைத்துத் தரப்பிலும் தரப்படுகின்றன. ஒரு பக்கம், மத்தியிலே உள்ள ஜனதா கட்சிக்கும், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் தகராறு என்று சொல்லப்படுகிறது. இது மாநில சுயாட்சி கோர ஒரு வழிமுறை என்று ஒரு பக்கம் சொல்லப்படுகிறது. வேறு என்ன காரணத்தால் கவர்னர் அவர்கள் உரை நிறுத்தப்பட்டிருக்கிறதென்பது .......

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினரவர்களுக்குத் தகவலாக ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சரவர்கள், பின்னாலே கவர்னர் உரை வரலாமென்று சொன்னார்கள். முற்றிலும் கைவிடப்பட்டதென்று சொல்லவில்லை.

**திரு. எல். பலராமன் :** கல்யாணத்திற்கு முன்பு பெண் கேட்பது வழக்கம். அதுமாதிரி பட்ஜெட்டுக்கு முன்னால் கவர்னர் உரை வருவதென்பது மரபு நிலை. அதை மாற்றுவது நியாயமா என்றுதான் கேட்கிறேன். இதற்காகப் பல காரணங்கள் உருவாகிக்கொண்டிருப்பதைப் பொறுப்பிலே இருக்கிறவர்கள்

(பிற்பகல் 12-30)

மறுக்கக் கூடாதென்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். பிரிட்டிஷ் பாராளுமன்ற முறையை நாம் அனுசரித்து வருகிறோம். அங்கே மரபு நிலைக்கு மரியாதையும், அந்தஸ்தும் தரப்படுகிறது. அங்கே பார்லிமெண்டரி சட்டங்களைக் கடைப்பிடித்தாலும், அந்த நாட்டு ராணி பார்லிமெண்ட்டுக்குச் செல்லும்போது சில வழி முறைகள், சடங்குகள் நடைபெறுகின்றன. அந்தச் சடங்குகள் இன்றும் அனுசரிக்கப்படுகின்றன. அந்த நாட்டை ராணியே ஆளவில்லையென்றாலும், ராணி பார்லிமெண்ட்டுக்குச் செல்லும்முன் கதவை அடைப்பது, ராணி கதவின் அருகில் நிற்பது, பிறகு ஒரு நிமிடம் கழித்துத் திறப்பது, மீண்டும் சென்று அங்கே உட்கார்ந்து உரையாற்றுவது என்பது வழக்கமாக இருக்கிறது. கதவை ஏன் சாத்துகிறார்கள் என்றால், பார்லிமெண்ட்டில் ராணிக்கும் உயர்ந்த நிலை உண்டு என்ற வழிமுறையைக் கடைப்பிடிப்பதற்காகத்தான். அவர்கள் மரபுக்கு மரியாதை செய்து இன்றைக்கும் அந்தச் சடங்குகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தச் சடங்குகள் தேவைதான். அதை அரசாங்கப் பொறுப்பிலிருக்கிறவர்கள் உணர்ந்திருக்க வேண்டும். மரபு நிலை காப்பாற்றப்பட வேண்டும். அந்த மரபு நிலையை காங்கிரஸ் ஸ்தாபனம் என்றைக்கும் கடைப்பிடித்தது; அதே நிலையை இவர்களும் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த மரபு நிலையைப் பின்பற்றினால், நாடு நாடாக இருக்க முடியும். அதைத் தவிர்ப்போமானால், நல்ல வழிமுறையை மக்களுக்குக் காட்ட முடியாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதி நிலை அறிக்கையிலே 'ஏழை எளிய மக்களுக்கு உறுதுணையாக இருப்போம்' என்று பல அலங்கார வார்த்தைகளைக் கூறியிருக்கிறார்கள். ஏழையெளிய மக்களுக்குக் கை கொடுத்து உயர்த்துவோம் என்று சொல்லுவது எல்லா அரசியல் கட்சிக்கும் வாடிக்கையான நிலைதான் என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இவர்களும் அதையே செய்யப் போகிறார்களா என்பது கேள்விக்குரியதாகவே இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு ஜுன் மாதம் புதிய அரசாங்கத்தின் பொறுப்பை ஏற்றார்கள். அப்போது சமர்ப்பித்த பட்ஜெட்டைக் கன்னி பட்ஜெட் என்று கூறினார்கள். ஆனால், இரண்டாவது பட்ஜெட்டிலே மிகவும் விஸ்தாரமாக கிராமப்புற மக்களுக்கு இதை இதைச் செய்வோம்; அவர்களுக்கு வளத்தை உண்டாக்குவோம் என்று கூறியிருந்தாலும், அதற்காகச் செய்திருக்கிற ஒதுக்



கீடுகளைப் பார்க்கிறபோது, கடந்த ஆண்டு ஒதுக்கீட்டைக் காட்டிலும் குறைவாகவே இருக்கிறது. அந்த அளவுக்கு ஒதுக்கீடுகளைச் செய்திருந்தால், மக்களுக்கு உண்மையாகவே திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள் என்று பெருமையாகக் கூற முடியும். ஆனால் ஒதுக்கீடுகள் மிகவும் குறைவாகவே இருக்கின்றன. அதிலும் துண்டு விழக் கூடிய ஒரு பட்ஜெட்டாக இது இருக்கிறது. ரூபாய் 46.68 கோடி அளவுக்குத் துண்டு விழக் கூடிய வரவு-செலவுத் திட்டமாக இது அமைந்திருக்கிறது. ஆனால் தனி நபருக்குச் செலவிடக் கூடிய கணக்குகளை ஒப்பிட்டு, நகரங்களில் அதிகமாகச் செலவழிக்கிறோம்; இருந்தாலும் கிராமப்புற மக்களுக்கும் பரவலாக்கப் போகிறோம் என்ற வாசகத்தையும் கூறியிருக்கிறார்கள். மற்றவர்கள் போன பாணியிலேயேதான் இவர்களும் செல்லுகிறார்களே தவிர, கிராமப்புற ஏழையெளிய மக்களுக்கு, இவர்களுக்கு அதிகமாக வாக்குகளை அளித்து உயர்த்திய அந்த மக்களுக்கு, நன்றிக் கடனாக மேலும் தீவிரம் காட்டியிருக்கிறார்களா என்றால், இல்லையென்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மேலும் செயல்படும்போதாவது, இதை மனதிலே நிறுத்திச் செயல்பட வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கிராமப்புற மக்கள் தங்களுடைய பெருந் தொழிலாகக் கொண்டுள்ள வேளாண்மைக்கு அதிக முக்கியத்துவம் காட்டுவதாக இந்த அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். அதற்காக, நீர்நிலைகளைச் செப்பனிடப் போகிறோம், பாசன வசதிகளைப் பெருக்கப் போகிறோம் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் கடந்த ஓராண்டில் பெருவாரியான கிராமப்புற மக்களுக்காக என்ன திட்டங்களைச் செய்திருக்கிறார்கள் என்று பார்த்தால், ஒன்றுமில்லை. கிராமப்புற மக்களுடைய வாழ்வு வளம் பெற வேண்டுமென்றால், அதற்கு உப தொழில்களைப் பெருக்க வேண்டும். அவசரகால நிலையிலே, வங்கிகளின் மூலம் கடன்கள் கொடுக்கப்பட்டன. விவசாயிகள், கறவை மாடுகளையும், ஆடுகளையும் வாங்குவதற்காக கடன்களை வழங்கினார்கள். அவற்றை வளர்த்து, அதன் மூலம் கிடைக்கும் பயனால் அவர்களுடைய பொருளாதாரம் மேம்பட வேண்டுமென்று, அவசரநிலை இருந்த காலத்திலே கடன்கள் வழங்கப்பட்டன. ஆனால் அந்தக் கடன்களை இப்போது வழங்குகிறார்களா? வங்கிகளை மத்திய அரசு நடத்துகிறது, அதனால் நம்மால் வழங்க முடியவில்லை என்று சொல்லலாம். ஆனால் கூட்டுறவுத் துறையின் மூலம் அவ்விதமான கடன்களை வழங்கப் போகிறோம் என்று அறிவிப்பு இருக்கிறதா என்று பார்த்தால், அந்த அளவுக்கு இல்லை. கடந்த காலத்திலே செயல்பட்ட முறையில் இன்றைக்குக் கடன் வசதிகள் கிராமப்புற மக்களுக்கு இல்லையென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. எல். பலராமன்] [1978 மார்ச் 1

மேலும் கிராமப்புற மக்களுடைய பொருளாதார வளர்ச்சிக்கு என்ன செய்யப் போகிறார்கள் சன்ற விளக்கம் இல்லை என்பதையும் குறிப்பிட ஆசைப் படுகிறேன். ஏதோ மேல் போக்காக, பன்றி வளர்ப்போம், ஆடு வளர்ப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். மாவட்டத்திற்கு ஒன்று, இரண்டு அமைப் போம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது எந்த அளவுக்குச் செயல்படு கிறதோ, அந்த அளவுக்குப் பரவலாக்குவோம் என்று இருக்கிறதே தவிர, மாவட்ட வாரியாக எல்லா மாவட்டங்களிலும் இதை அமுல்படுத்துவோம் என்ற நிலை இல்லையென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த நிலைகள் எல்லாம் பழைய காலத்திலே இருந்ததுதான். ஏற்கெனவே கோழி வளர்ப்புக் காக கடன் வழங்கப்பட்டது. பன்றி வளர்ப்புக்குக் கடன் வழங்கப்பட்டது, மாடு வளர்ப்புக்குக் கடன் வழங்கப்பட்டது. அதிலே மாற்றம் இருக்கிறதா என்று பார்த்தால், இந்த அறிக்கையிலே அப்படி எதுவும் இல்லை. ஏற்கெனவே வழங்கப்பட்டு, நிறுத்தப்பட்ட கடன்களுக்குப் பதிலாக மற்ற கடன்களை எப்படி வழங்கப் போகிறார்கள் என்று சமர்ப்பித்திருந்தால், அது பாராட்டுக்குரியதா கவும், வரவேற்புக்குரியதாகவும் இருக்குமென்று கூறிக்கொள்ள ஆசைப்படு கிறேன்.

விவசாயம் வளர்வதற்கு பாசன வசதிகளை அபிவிருத்தி செய்வோம் என்று கூறியிருக்கிறார்கள். 500 ஏக்கருக்குக் குறைவாக பாசன வசதி உள்ள ஏரி களைத் தூர் எடுப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டம், நேரிடையான நீர்ப்பாசனம் உள்ள மாவட்டமல்ல. அங்குள்ள கிணற்று நீரையும், காலாகாலத்தில் பெய்யும் மழை நீரைத் தேக்கி வைக்கக் கூடிய ஏரிகளையும் நம்பித்தான் இருக்கிறது. அந்த ஏரிகள் எல்லாம், சேர, சோழ, பாண்டியர் காலத்திலும், அதற்குப் பின்னால் வந்த அரசர்கள் காலத் திலும் கட்டப்பட்டவைகள். அதெல்லாம் மூன்று மாத ஏரிகள் என்று அரசாங்கக் கணக்கிலே இருந்தாலும், அந்த ஏரிகளில் நீர் நிறைந்திருந்தால் கூட, 15 நாள் பாசனத்திற்குத்தான் போதுமானதாக இருக்கிறது. அங்கே நடந்த அபிவிருத்திக் கூட்டத்திலே இதை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டு, அதைப் பரிசீலிக்க வேண்டுமென்ற கருத்தையும் அரசுக்கு அனுப்பியிருக் கிறார்கள். அதை எந்த அளவுக்குப் பரிசீலிப்பார்கள் என்பது தெரியவில்லை. தூர் எடுப்பது என்பது குடிமராமத்தில் செய்யக் கூடிய காரியமல்ல. அரசாங்கம் அதற்காக ஒவ்வொரு மாவட்ட நிலையிலும் உற்சாகம் காட்டி, அந்த ஏரிகளைத் ஒதுக்கியிருக்கக் கூடிய ஒதுக்கீட்டில் செய்யக் கூடிய நிலையும் இல்லை. ஆகவே தூர் எடுப்பதற்கு பரவலாக ஒரு திட்டம் தீட்ட வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்பூடுகிறேன். ஒதுக்கீடு செய்த தொகை அந்த அளவுக்குக் குறைவாக



1978 மார்ச் 1] [திரு. எல். பலராமன்]

இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். கடந்த ஆண்டு எந்த அளவுக்குச் செய்திருக்கிறார்களோ அந்த அளவுக்குத்தான் இதை நாங்கள் செய்வோம் என்று ஒதுக்கீடு செய்திருப்பது என்பது, ஏதோ செய்கிறார்கள் என்ற ஆறுதலைத்தான் மக்களுக்கு அளிக்கும் நிலையிருக்கிறது. இதனால் இயற்கைப் பாசனம் இல்லாத எங்கள் மாவட்டத்துக்காரர்கள் இந்த அரசாங்கத்தை வியப்புடனும், ஆச்சரியத்துடனும் பார்க்கிறார்கள் என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நீர் நிலைகளை அபிவிருத்தி செய்வதற்காக தனித் திட்டங்களை வகுக்க வேண்டும். பாண்ட் ஸ்கீம் (Pond Scheme) ஏற்படுத்து வோம் என்று சொன்னார்கள். இது நீண்ட நாளாகக் கூறிக்கொண்டு வரக் கூடிய ஒரு திட்டம். எந்தெந்த இடங்களில் இதைச் செய்யலாம் என்று ஒரு மதிப்பீடு—சர்வே—செய்திருக்கிறார்கள். அந்த சர்வேயின் அடிப்படையில் பொறியாளர்கள் கொடுத்த அறிக்கையை அமுல்படுத்தினாலே இந்த நாடு மேலும் உணவு உற்பத்தியைப் பெருக்க சாதகமான நிலை ஏற்படுமென்பதால் அதைச் செய்ய வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 12-40)

அடுத்து, விவசாயிகள் தங்களுடைய தனி வாழ்க்கையில் வளமாக இருக்க வேண்டுமென்றால், நாட்டு மக்களுக்குத் தேவையான உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றால், அவர்களுக்கு மின் வசதியை அதிகமாகக் கொடுக்க வேண்டும். அதற்கு நிலையான ஒரு திட்டமும் இந்த அறிக்கையில் இல்லை. இந்த நாட்டில் பெரிய திட்டமாக இருக்கக்கூடிய ஓகேனக்கல் நீர்மின் திட்டத் தைப்பற்றி மத்திய அரசிற்குச் சுட்டிக்காட்டும் வகையில் இந்த அறிக்கையில் எந்த வாசகமும் இல்லை. கருநாடக மாநிலத்திற்கும் தமிழ் மாநிலத்திற்கும் இடையே உள்ள பிரச்சினைகளைப் பரிசீலிப்பதற்கு உரிய எந்த வாசகமும் இந்த அறிக்கையில் இல்லை. அது ஒரு பெரிய திட்டம். அதனால் அதிகமான மின் உற்பத்தியினைப் பெற வாய்ப்பு ஏற்படும். அதை ஞாபகப்படுத்தி அதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தூத்துக்குடி அனல் மின் திட்டத்தை மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டு மென்று கூறியிருந்தாலும், அதை ஒரு நீண்டகாலத் திட்டமாக அமைக்க

வேண்டும். வருங்கால வளர்ச்சிக்கு ஏற்ப திட்டம் அமைய வேண்டும். அனல் மின் திட்டத்தைப் பொறுத்துத்தான், விவசாயத்தைப் பெருக்க முடியும்; உணவு அபிவிருத்தியை நிறைவு செய்ய முடியும். ஆகையால் எந்தெந்த மாவட்டங்களில் அனல் மின் திட்டங்களை ஏற்படுத்த முடியுமோ அதற்கான வழிவகைகளை ஆராய்ந்து செயல்படுத்த முன்வர வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக இந்த ஆண்டு 35 ஆயிரம் மின் இணைப்புகளைத்தான் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் லட்சக்கணக்கான மனுக்கள் வந்திருக்கின்றன. ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் வைத்துள்ள ஏழை விவசாயிகள் மின் இணைப்பு இருந்தால்தான், உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். விவசாயிகளுக்கு உற்சாகமூட்ட வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கும்போது, அதற்கான திட்டம் எதுவும் இருக்கிறதா என்றால், இதிலே காணப்படவில்லை. ஆகவே உணவு உற்பத்திக்கு உறுதுணையாக விவசாயிகள் விளங்க வேண்டுமென்றால், அவர்களுக்கு அதிக அளவில் மின் இணைப்பு வழங்குவதற்கான திட்டத்தை வகுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். வட ஆற்காடு மாவட்டம் இயற்கைப் பாசனம் இல்லாத ஒரு மாவட்டம். இருந்தாலும் கிணற்றுப் பாசனத்தைப் பெரும்பகுதி நம்பி தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக உணவு உற்பத்தி செய்யும் மாவட்டம் அது. எந்த அரசாங்கம் பொறுப்புக்கு வந்தாலும், வட ஆற்காட்டுக்கு நன்றி சொல்லும் அரசாங்கமாக இருக்க வேண்டுமென்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். கடினமான உழைப்பைத் தந்து, அதிகமான உணவு உற்பத்தி செய்யும் மாவட்டம் வட ஆற்காடு மாவட்டம் என்பதை உணர்ந்து, அவர்களின் கோரிக்கையான மின் இணைப்புகளைத் தருவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும். 35 ஆயிரம் மின் இணைப்புகளைத்தான் தர முடியும் என்பதை மாற்றி, மின் இணைப்பு இல்லாமல் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை எண்ணி, அந்த இணைப்புகளை அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். மனுக்கள் போட்டு பல ஆண்டுகளாக அப்படியே இருக்கின்றன. பம்புசெட்டுகள் வாங்கி பல ஆண்டுகளாக இருக்கின்றன. ஆகையால் அந்தத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான திட்டத்தை வகுத்து, நிதி அமைச்சர் அவர்கள் அதற்கான நிதி ஒதுக்கி, வழங்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்போதுதான் அந்த மாவட்ட மக்கள் பெரு மகிழ்ச்சியடைவார்கள், நன்றி உள்ளவர்களாக இருப்பார்கள்,



கிராமப்புற வளர்ச்சி என்று கூறும்போது, கிராமங்களில் சிறு தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டுமென்ற கொள்கையைக் கூறியிருக்கிறார்கள். அது வரவேற்க வேண்டிய ஒன்றாகும். ஏதோ பெரும் தொழிற்சாலைகளைக்கூட கிராமப் பகுதிகளிலே ஆரம்பிக்க வேண்டுமென்பதைக் கொள்கையாக ஏற்றுக் கொண்டிருப்பதால், அதைச் செயல்படுத்துவதில் தயக்கம் காட்டினாலும், பொதுவாக வரவேற்க வேண்டிய திட்டம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும். எந்த அரசாங்கம் வந்தாலும், கிராமங்களை மேம்படுத்துவதில் அக்கறை காட்டுகிறார்களே தவிர, அதற்கான திட்டங்கள் வருவதில்லை. இதை யார் தடுக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். எடுக்கிற நடவடிக்கைகளைத் திசை திருப்புகிற சக்திகளைக் கண்டுபிடிக்க வேண்டும். எங்கே யார் திசை திருப்புகிறார்கள் என்று பார்த்து, கிராமப்புறங்களில் தொழில்களை ஆரம்பிக்கிற வாய்ப்பை உருவாக்கினால், அது நல்ல கொள்கையாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன். கிராமப்புறங்களில் வேலையில்லாத படித்த இளைஞர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்கள் பயிரிடுவதற்கு நிலமற்றவர்களாக இருக்கிறார்கள். ஒரு குடும்பத்தில் நான்கு சகோதரர்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்களுக்குள்ள இரண்டு மூன்று ஏக்கரில் எப்படிப் பயிர் செய்து வாழ முடியும்? தட்டுத் தடுமாறி இப்போதுதான் கிராம மக்கள் படித்து முன்னுக்கு வரக் கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். அவர்கள் பிழைப்பு நடத்தும் சூழ்நிலை இப்போது அங்கே இல்லை. வேலையில்லாத பிரச்சினை என்பது எவ்வளவு பெரிய பிரச்சினை என்பதை எல்லோரும் அறிந்திருக்கிறோம். விவசாயிகளின் பிரச்சினையை எடுத்துக்கொண்டால் மாநில அரசும் மத்திய அரசும் அதற்குப் பொறுப்பாவார்கள். அதே நேரத்தில் மாநில அரசு சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். வேலை இல்லாத படித்த இளைஞர்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ள விவசாயம் சம்பந்தப்பட்ட கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு போன்றவைகளை அவர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். அப்படி தொழில் மூலமாக வேலை வாய்ப்புகளை உருவாக்க அரசாங்கம் திட்டம் வகுக்க வேண்டும்.

பால் பண்ணை அபிவிருத்தி என்பது விவசாயிகளுக்கு ஏற்ற தொழிலாக இருக்கிறது. உழவு மாடுகளோடு, பால் கறக்கும் மாடுகளை வழங்குவதால், அதன் மூலமாக பாலைப் பெற்று பால் வள நிறுவனத்திற்குத் தருவதால் கிடைக்கிற வருமானம் விவசாயிகளுக்கு உதவியாக இருக்கிறது என்பதை

அனுபவ பூர்வமாகப் பார்க்கிறோம். அவற்றை விஸ்தரிப்பதற்கு அதிகாரிகள் தடையாக இருக்கிறார்கள் என்றால், அதை நீக்க வேண்டும். என்னுடைய அனுபவத்தைப் பொறுத்தவரையில், எங்கள் பகுதியில்கூட அந்த நிறுவனங்கள் மூலமாகப் பதிவு செய்து அவர்கள் பாலை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கோரிக்கை விட்டாலும், அதைத் தடை செய்கிறார்கள். அவற்றைப் போக்கி, அவர்கள் தருகிற பாலை மறுக்காமல் எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதில் நிறுவனம் தீவிரமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அது விவசாயிகளுக்கு உறுதுணையாக இருக்கும். அதுபோன்ற உப தொழில்களை வளர்க்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இயற்கையாக இருக்கிற காடுகளை வளர்க்க வேண்டும். இயற்கையாக நாட்டில் ஆறில் ஒரு பங்கு காடாக இருந்தால்தான், மழை பெய்வதற்கு வாய்ப்பாக இருக்குமென்று ஐ.நா. சபையில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நம் நாட்டில் காடுகள் இருக்கின்றன என்றாலும், அவை இன்றைக்கு இருக்கிற நிலையைப் பரிசீலிக்க வேண்டும். வட ஆற்காடு மாவட்டம் வளமான மலையைச் சார்ந்த பகுதி. ஜவ்வாது மலை, ஏலகிரி மலை போன்றவை சுற்றுலாவுக்கு ஏற்ற இடமாகக் கருதப்படுகிறது. நீலகிரி, ஊட்டி போன்று நல்ல இடங்களாக அவை இருக்கின்றன. அவற்றை அபிவிருத்தி செய்வதற்கு இந்த அரசாங்கம் திட்டமிட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். ஏழை எளிய மக்கள் மகிழ்ச்சியோடு அரை நாள், ஒரு நாள் தங்கக்கூடிய உதகையாக இருக்கின்றது ஏலகிரி. எனவே அதை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 12-50)

ஜவ்வாது மலைப்பகுதி சந்தன மரம் ஏராளமாக வளரும் பகுதியாகும். ஆனால் விலை உயர்ந்த சந்தனக் கட்டைகள் அந்தப் பகுதியில் எந்த அளவிற்குத் திருடு போகின்றன என்பதைப் பத்திரிகைகள் மூலம் பார்க்கலாம். வன இலாகாவினர் எவ்வளவுதான் தாங்கள் எச்சரிக்கையோடு இருப்பதாகச் சொன்னாலும், அவர்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல் லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள மரங்கள் திருடு போகவில்லை. இது அனுபவ பூர்வமான உண்மை. இவர்களால் அரசுக்குப் பல கோடி ரூபாய் ஆண்டுதோறும் இழப்பு ஏற்படுகிறது. எனவே இது விஷயத்தில், வன இலாகா அலுவலர்கள்மீது





அரசு இன்னும் அதிகக் கண்காணிப்புடன் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும் அந்தக் காடுகளிலுள்ள மரங்கள் பெரும்பாலும் அழிக்கப்பட்டு, இன்று அந்தப் பகுதியே வெறும் கல்லும் மண்ணுமாகக் காட்சி அளிக்கிறது.

பஞ்சாயத்துக் காடுகள் எல்லாம் வன இலாகா காடுகள் என்று அறிவிக்கப்பட்டு, அந்த இலாகாவின் கீழே வந்தவுடன், இன்று கேட்பாரில்லாது அழிக்கப்பட்டு வருகின்றன என்பதுதான் உண்மை. வன மரங்களைப் பாதுகாப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள சிப்பந்திகள் சாலையோரங்களில் ஆடுகள் மேய்ந்தால், ஆட்டுக்கு இரண்டு ரூபாய் மூன்று ரூபாய் என்று வசூலித்துக் கொண்டு காலத்தைத் தள்ளுகின்றார்கள். பஞ்சாயத்துக் காடுகளாக இருந்த வரையில், அவை பசுமையாக இருந்தன என்பதை இப்போது கிராம மக்கள் உணருகின்றார்கள். சொல்லவும் சொல்லுகின்றார்கள். அப்போது ஊர்க் கட்டுப்பாடு காரணமாக காட்டு மரங்களை யாரும் வெட்டுவதற்கு அச்சப்பட்டார்கள். காடுகள் பாதுகாக்கப்பட்டன. மழையும் நல்ல முறையில் அந்தப் பகுதிகளில் பெய்துகொண்டிருந்தது. இப்போது அந்த நிலை மாறி, காடுகள் கல்லும் மண்ணுமாகக் காட்சி அளிக்கின்றன. மழையும் இல்லை. காடுகள் அதிகமாக இருந்தபோது, தழைகளை எடுத்துவந்து உரமாகப் பயன்படுத்தினார்கள். சாகுபடியும் நல்ல முறையில் இருந்தது. எனவே நான் கேட்டுக்கொள்ளுவது அந்தப் பகுதியிலுள்ள காடுகளை மீண்டும் பஞ்சாயத்துகளுக்கே மாற்றிக் கொடுக்க வேண்டும் என்பது. மேலும் அந்தப் பகுதியில் சந்தன மரம் ஏராளமாக விளைவதால், அங்கே சந்தன எண்ணெய் தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டும். சந்தன மரங்கள் இப்போது பெருமளவில் திருடு போகின்றன. அவற்றைப் பாதுகாப்பதற்கு வன இலாகா தீவிரம் காட்டவில்லை என்பதை ஒரு குற்றச்சாட்டாகவே எடுத்து வைக்க விரும்புகிறேன். இவற்றை அரசு உடனடியாகக் கவனிக்க வேண்டும்.

அடுத்து, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள உள்ளாட்சித் துறை கிராம வளர்ச்சிப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை மிகவும் குறைவாக இருக்கின்றது. கிராம வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கும் நேரத்தில், உள்ள ஒதுக்கீட்டைப் பார்த்தால், அது மிகக் குறைவாக இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். அண்ணல் காந்தியடிகள் கிராம இராஜ்யம் என்று சொல்லி வந்தார்கள். அம்மையார் அவர்கள்கூட தமது உரையில் பாரதியாரின் பாடல்களை மேற்கோள் காட்டி, கிராம வாழ்வு மேம்பாடு அடைய வேண்டியதன் அவசியம்பற்றி வற்புறுத்திப்

பேசினார்கள். பாரதி கண்ட கனவு நனவாக வேண்டுமானால், கிராம வளர்ச்சிப் பணிகளுக்கென இன்னும் கூடுதலான தொகையை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கிராம வளர்ச்சிக்கென பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து ஒன்றியங்கள் என்று இருக்கின்றன. இன்று அவைகள் கலைக்கப்பட்ட நிலையில், அவை அதிகாரிகளின் ஆதிக்கத்தில் இருந்து வருகின்றன. அதிகாரிகள் தன்னிச்சையாக நடந்துகொள்ளுகின்றார்கள். அது கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக, ஒரு கமிட்டி அங்கங்கே அமைக்கப்படும் என்று அரசின் சார்பில் சொல்லப்பட்டது. ஆனால் நாளது வரையில் அப்படிப்பட்ட கமிட்டிகள் அமைக்கப்படவில்லை. கிராம வளர்ச்சிக்கான திட்டங்கள் நன்கு செயல்பட வேண்டுமானால், ஒன்றியங்கள் முறையாகச் செயல்பட வேண்டும். இன்று அந்த நிலை இல்லை. மேலும் இந்த ஒன்றியங்களுக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். இந்த ஒன்றியங்களின் வளர்ச்சிக்கென மத்திய அரசிடமிருந்து எந்தெந்த வகையில் அதிக நிதி உதவி கோரிப் பெற முடியுமோ அதையெல்லாம் நாம் பெற முயல வேண்டும். அதற்காகப் போராட்டங்களைக்கூட நடத்தி, அவற்றைப் பெறுவது நியாயம் என்று கருதுகிறேன்.

அடுத்து, கொல்லிமலை அபிவிருத்திக்காக ஒரு தனி ஏற்பாடே செய்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள் என்று கேள்விப்பட்டேன். அந்த வகையில், எங்கள் மாவட்டத்தில ஜவ்வாது மலையில் உள்ள மலைவாழ் மக்களின் நல்வாழ்விற்கென ஒரு ஒன்றியத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை இப்போதும் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். கிராம மக்களுக்கு அதிகக் கடன் வசதிகளைத் தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். குறிப்பாக, கூட்டுறவு வங்கிகளின் மூலம் இவற்றைத் தர ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். மேலும் கூட்டுறவுத் துறை செம்மைப்படுத்தப்பட வேண்டும். அந்தச் சட்டத்தைத் திருத்தப் போவதாகச் சொல்லுகின்றார்கள். ஆனால் இதுவரையில் அதற்கான நடவடிக்கை ஏதும் எடுக்கப்படாமல் இருக்கின்றது. கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் நடத்தப்படாமல், தனி அதிகாரிகள் மூலமே நடைபெற்று வருகின்றன. அதிலுள்ள அதிகாரிகள் தன்னிச்சையாக, சர்வாதிகாரப் போக்கில் நடந்து கொள்ளுகின்றார்கள். அந்தச் சட்டத்திற்கான திருத்தங்களை உடனடியாகக் கொண்டு வந்து, இந்தச் சங்கங்கள் செம்மையாக நடப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கிராம மக்களுக்காக அவை கடன் வழங்குவதில் தற்போதுள்ள முறைகள் மாற்றப்பட வேண்டும். இன்று பயிர்க் கடன்களை crop loan கொடுக்கின்றார்கள்.



ஆனால் சம்பா பயிரிடும்போது கொடுக்கப்படும் கடன் அறுவடையின்போது தான் கைக்கு வருகிறது. அது மட்டுமில்லை, மருந்துக்காக என்று கடன் கொடுக்கின்றார்கள். ஆனால் நேரத்தில் இடைக்காத நிலையில், விவசாயிகள் பிறகு அதை 10 ரூபாய் 20 ரூபாய் குறைத்து யாருக்காவது விற்கின்ற நிலைமை இருந்து வருகிறது. எனவே இப்போது கடன் கொடுக்கும் முறை மாற்றப்பட்டாக வேண்டும்.

அடுத்து, வட ஆற்காடு மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையில் மூன்று சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. இப்போது அங்கே உள்ள அதிகாரிகள் சரியான முறையில் நடந்துகொள்ளவில்லை. நிர்வாகம் அடியோடு பாழ்பட்டுக் கிடக்கிறது. விவசாயிகளிடம் கரும்பு உலர்ந்து போய்விடக் கூடிய நிலையில், ஐந்தாறு நாட்கள் கழித்துத்தான் எடுக்கின்றார்கள் ஆலையில். ஏற்படும் நஷ்டம் விவசாயிகளுக்கு. அது மட்டுமில்லை. அங்கே தொழிலாளர்கள் மத்தியிலே சரியான உறவுநிலை இல்லாத காரணத்தினால், லட்சக்கணக்கான ரூபாய் பெறுமான பிழிந்த சாற்றைக் கொட்டிவிடுகின்றார்கள். இது ஆம்பூர் சர்க்கரை ஆலையில் நடக்கிறது. இவற்றையெல்லாம் தவிர்ப்பதற்கு கூட்டுறவுத் துறையை மேலும் நல்ல முறையில் செயல்படும்படி செய்ய வேண்டும். மேலும் கிராம வளர்ச்சிக்கு ஏற்றவாறு இனி சிறு தொழில்கள் அனைத்தும் கிராமப் பகுதிகளிலே அமைக்கக்கூடிய சூழ்நிலை உருவாக வேண்டும். கிராமத் தன்னிறைவுத் திட்டம் பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது இந்த வரவு-செலவுத் திட்டத்திலே. தொழில்கள் பரவலாக ஆக்கப்பட வேண்டும். அதற்கான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்த வேண்டும் என்று கூறிக்கொண்டு இந்த வரவு-செலவு அறிக்கையின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றிதெரிவித்து என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன், வணக்கம்.

மாற்றுத் தலைவர் (திருமதி சத்தியவாணிமுத்து): இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 10-30 மணிக்குக் கூடும்.

(பிற்பகல் 1-00)

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

# தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

---

## வியாழக்கிழமை, 1978 மார்ச் 2.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் காலை 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் [திரு. ம. பொ. சிவஞானம்] அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### (1) உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Kumari Dam.*

* 164. *Q.*—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state :—

(*a*) whether it has been brought to the notice of the Government, that the crops in 3,000 acres have been damaged for want of irrigation facilities, consequent on the breach of the Kumari Dam across the Pazhayar in Kanyakumari district ; and

(*b*) if so, the action taken thereon ?

### குமரி அணை.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பழையாற்றின் குறுக்கே கட்டப்பட்டிருந்த குமரி அணை உடைந்ததன் காரணமாக 3,000 ஏக்கர் பரப்பளவில் உள்ள பயிர்கள் பாசன வசதியின்றி பாதிக்கப்பட்டுள்ளது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பழையாற்றின் குறுக்கே கட்டப்பட்டிருந்த அணை 1970-ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் சேதமடைந்தது.

(இ) மேற்கண்ட குமரி அணையை சீர்படுத்த ரூ. 12.57 இலட்சத்திற்கான மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது. குமரி அணையின் கீழுள்ள ஆயக்கட்டு நிலங்களுக்கு விவசாயம் பாதிக்காமல் இருப்பதற்கு மாற்று வழியில் தற்போது நீர் வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. எம். சங்கரலிங்கம்:** பழையாற்றின் குறுக்கே கட்டப்பட்டிருந்த இந்த அணை உடைந்து 8 ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் அதனைச் சீர்படுத்துவதற்கான வேலைகள் குறித்த மதிப்பீடுகள் ஆய்வில் இருந்தால், அதை நம்பி வாழ்கிற விவசாயிகளின் நிலை எவ்வளவு கஷ்டமாக இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மாற்று வழியில் தண்ணீர் கொடுக்கப்பட்டாலும் கூட, அவர்கள் மிகுந்த காவல் போட்டு, தண்ணீரை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதோடு, இதில் செலவு அதிகமாக இருப்பதால், உடனடியாக இந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்து, இந்த ஆண்டிலேயே செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** எட்டு ஆண்டுகளாகப் பொறுத்துக் கொண்டிருந்தவர்கள் இந்த ஆண்டும் பொறுத்துக்கொள்ளக்கூடாதா என்று கேட்கத் தோன்றும். இருந்தாலும், இந்தத் திட்டத்தினுடைய அவசியத்தைக் கருதி விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று உறுதி அளிக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** வினாக்கள் 165, 166 ஆகியவை இறுதியில் எடுத்துக்கொள்ளப்படும்.

## *Compensation for Patta Lands.*

* 167. *Q.*—THIRU D. V. D'MONTE: Will the Hon. the Minister for Labour be please to state—

(*a*) whether the Government have received any representations from landowners whose patta lands have been declared as Slum area and taken over for development by the Tamil Nadu Slum Clearance Board, that compensation has not been paid to them so far, for the said lands ; and

(*b*) if so, the reasons for the delay in the payment of compensation ?



## பட்டா நிலங்களுக்கு இழப்பீட்டுத் தொகை.

**திரு. டி. வி. டி'மாண்டி:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குடிசைப் பகுதியாக அறிவிக்கப்பட்டு அப்பகுதியை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள பட்டா நிலங்களின் சொந்தக்காரர்களிடமிருந்து, அந்நிலங்களுக்கான இழப்பீட்டுத் தொகை இதுவரையில் வழங்கப்படவில்லை என்று அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், இழப்பீட்டுத் தொகை வழங்குவதில் தாமதத்திற்குக் காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** (அ) & (இ) குடிசைப் பகுதி மாற்று வாரிய குடியிருப்புகள் கட்டுவதற்கு இதுவரை பயன்படுத்தப்பட்ட 2,718 மனைகளில் (கிரவுண்டு), 123 மனைகள் தனிப்பட்டவர்களுடையதாகும். குடியிருப்புகள் கட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள நிலங்களின் உரிமையாளர்களில் சிலர், இழப்பீட்டுத் தொகையை அளிக்கக் கோரி அரசினை அணுகியுள்ளனர். இத்தொகையை நிர்ணயம் செய்யும் தகுதி பெற்ற அதிகாரியாகிய, சென்னை மாவட்ட ஆட்சியாளர், உயர்நீதி மன்றம் இது சம்பந்தமான முந்தைய சட்டத்தை செல்லாது என்று அறிவித்து விட்டதால், ஏற்பட்டுள்ள சில சிக்கல்களை, அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். அவை அரசின் பரிசீலனையில் உள்ளன. அவை தெளிவாக்கப்பட்டபின், இழப்பீட்டுத்தொகை அளிக்கப்படும்.

THIRU D. V. D'MONTE: Sir, instances have come to my notice where the Tamil Nadu Slum Clearance Board have begun to put up permanent structures on lands which have been surrendered by landowners without paying compensation or acquiring the land under the Tamil Nadu Slum Clearance Act. This has been causing a great deal of hardship to middle-class people and others. May I know what steps are being taken by the Government to set right this position and if so, when ?

THE HON. THIRU S. RAGHAVANANDAM: Mr. Deputy Chairman, Sir, under section 17 of the Act, the Government can acquire land on payment of the cost. Under this section, Government have taken over 123 grounds of privately owned lands covered

by slums for clearance purposes. Section 20 of the Act stipulates that the compensation payable for any land acquired under this Act shall be the market value. Some of the lands taken over pertain to proceedings under the Tamil Nadu Slum Improvement (Acquisition of Land) Act, 1954, which was struck down by the High Court. There are some legal hurdles in bringing such land within the scope of the provision for determining the compensation under the Slum Areas (Improvement and Clearance) Act, 1971. The determination of compensation payable under the 1971 Act by the competent authority is held up on this account. As to the question of acquiring private land for slum clearance purposes, the gravity of the situation that the slum-dwellers are living there is the criterion.

THIRU D. V. D'MONTE: Sir, according to the provisions of the Act, as stated by the Hon. Minister, compensation must precede takeover. That is not being done.

THE HON. THIRU S. RAGHAVANANDAM: Mr. Deputy Chairman, Sir, I am not quite clear about it. If the hon. Member puts a separate question, I will answer it.

திரு. ஜார்ஜ் கோமகன் : இது போன்ற வழக்குகள் எத்தனை இருக்கின்றன என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*Section Officers in Highways Department.*

*168 *Q.*—THIRU V. THANGAPANDIAN: (on behalf of Thiru A. BALASUBRAMANIAM): Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) the number of persons promoted as Section Officers and Union Engineers in the Tamil Nadu Highways Department before 1973; and

(*b*) among them, the number of persons whose services have not yet been made permanent?



நெடுஞ்சாலைத் துறையில் பிரிவு அலுவலர்கள்.

**திரு. வே தங்கப்பாண்டியன் (திரு. ஆ. பாலசுப்ரமணியம் சார்பில்):** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலைத் துறையில் 1973-க்கு முன்னதாக பிரிவு அலுவலர்களாக (Section Officers, Union Engineers) பதவி உயர்வு பெற்றோர் எத்தனை பேர்?

(இ) இவர்களுள் இன்னும் பணி நிரந்தரம் செய்யப்படாமல் இருப்பது எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறையில் 1973-க்கு முன்னதாக 262 பேர்கள் பிரிவு அலுவலர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

(இ) இவர்களுள் ஒருவரும் இன்னும் நிரந்தரம் செய்யப்படவில்லை.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** 1973 ஆம் ஆண்டுக்கு முன்னால் ஏறக்குறைய 233 பேர் பதவி உயர்வு பெற்றதாகவும் அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாமலிருக்கிறது என்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அது தவிர செக்ஷன் ஆபீசர்கள், ஜூனியர் எஞ்சினியர்கள் போன்றவர்கள் அசிஸ்டண்ட் எஞ்சினியர்களாகப் பதவி உயர்வு பெறுவதற்கு பி.ஈ. டிகிரி பெற்றவர்களுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுப்பதால், இந்த அடிப்படை வேலையில் இருப்பவர்களுக்குப் பதவி வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. இதைப்பற்றி அரசு என்ன செய்ய இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பட்டதாரிப் பொறியியல் வல்லுநர்களுக்குப் பதவி உயர்வு அளிப்பதில் முன்னுரிமை அளிக்கப்படுவது ஏற்கெனவே அமுலில் இருந்து வருகிறது. காரணம் பட்டதாரிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. படிப்பை முடித்துவிட்டு—அதிலும் குறைவான மதிப்பெண்களைப் பெற்று—மூன்று ஆண்டுகளில் பட்டப் படிப்பை முடித்துவிட்டு பணிக்கு வருகிறார்கள். அவர்களோடு பட்டதாரி எஞ்சினியர்கள் என்று கருதப்படுகிற 5 ஆண்டுகளுக்கான பட்டப் படிப்பை முடித்துவிட்டு, வருகிறவர்களை ஒப்பிட்டு, வேலை உயர்வு கொடுக்க வாய்ப்பில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[1978 மார்ச் 2

திரு. வே. தங்கப்பாண்டியன் : 'பி.ஏ.' படித்திருக்கிறார்கள் என்பது One of the reasons ஆக இருக்க முடியும். பட்ட தாரிகளைப் பொறுத்த வரையில், அவர்கள் நீண்ட காலமாகத் தொடர்ந்த அனுபவம் உள்ளவர்கள். எனவே அவர்களின் அனுபவத்தைக் கணக்கில் கொண்டு அவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அவர்களின் அனுபவத்தின் அடிப்படையில்தான் பட்ட தாரிகளுக்கு 3:1 என்ற விகிதத்தில் பதவி உயர்வுகள் அளிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம்: அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட இந்த 230-க்கு மேற்பட்டவர்கள் தங்கள் பணிகளில் நிரந்தரப் படுத்தப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதைத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தற்போது 116 நிரந்தரப் பதவி இடங்களை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று அரசு பரிசீலித்து வருகிறது. 56 தற்காலிகப் பதவி இடங்களை நிரந்தரப் பதவி இடங்களாக ஆக்கும் செயற்குறிப்பு அரசாங்கத்தின் ஆய்வில் இருப்பதோடு 172 கூடுதல் பணி இடங்களை ஏற்படுத்த ஏற்பாடு செய்து வருகிறது.

### *Over-bridge across Railway line.*

*169 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether any proposal has been received from Thanjavur Municipality regarding reconstruction of the over-bridge across the Railway Line on the Medical College Road; and

(*b*) if so, the action proposed to be taken thereon ?

### இரயில் பாதையின் மேல் மேம்பாலம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மருத்துவக் கல்லூரிச் சாலையில், இரயில் பாதையின் குறுக்கே உள்ள மேம்பாலத்தைச் சீரமைப்பது தொடர்பாக தஞ்சாவூர் நகராட்சியிடமிருந்து செயற்குறிப்பு ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அது குறித்து எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?



1978 மார்ச் 2]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(இ) இது குறித்து தென் பிராந்திய ரயில்வேயுடன் கடிதத் தொடர்பு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-40)

திரு. ஜி. சுவாமிநாதன் : இது குறித்து கடிதம் எழுதியிருப்பதாகச் சொல்கின்றார்கள். தென் பிராந்திய ரெயில்வேய்க்கு எழுதிய கடித விவரம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ரெயில்வே லெவல் கிராஸிங்குகளால் போக்குவரத்துத் தடைகள் ஏற்படுகின்றன. அந்தச் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள ரெயில்வேயுடன் ஆலோசனை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. தஞ்சாவூர் நகராட்சியும் சேர்த்து செலவை ஏற்றுக்கொள்வது குறித்து செயற்குறிப்பு உள்ளது. ரெயில்வே 50 சதவிகிதமும், மாநகராட்சியும் அரசும் 50 சதமும் ஏற்றுக்கொள்வது குறித்து தென் பிராந்திய ரெயில்வேயுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : முதல் தடவை பாலம் போடுகிற போது மட்டும் தான் ரெயில்வே கொடுக்கிறதா, இரண்டாவது தடவை பழுதடைந்து இடிபாடுகள் ஏற்படும்போதும் ரெயில்வே கொடுக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பாலம் மிகவும் பழுதடைந்து விட்டால், மீண்டும் புதுப்பிக்க மத்திய அரசு உதவி கொடுக்கிறது. மாநில அரசு பாலத்தை விரிவுபடுத்தும்போது, ரெயில்வேயிடம் பங்கு பெறும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : அந்தப் பாலம் பழுதடைந்திருக்கிறதா, விரிவுபடுத்தப்பட இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பழுது அடைந்ததாகக் கருத்து சொல்லப்பட்டுள்ளது. எனவே ரெயில்வே நிதி தரவேண்டும் என்று மாநில அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது.

திரு. எம். சங்கரலிங்கம்: தம் மாநிலத்தில் ரெயில்வே கிராசிங் வருகின்ற இடங்களிலே அந்தந்த மாநகராட்சிகளே நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமையை மாற்றி மாநில அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு எல்லா நகரங்களிலும் உள்ள ரெயில்வே கிராசிங்குகளிலும் உள்ள மேம்பாலங்கள் அல்லது அண்டர் கிரவுண்ட் வழிகள் போன்றவைகளைச் சீரமைக்க செயற்குறிப்பு ஏதாவது உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :* மத்திய அரசு மற்றும் ரெயில்வே துறையோடு மாநகராட்சிகள் நேரடியாகத் தொடர்பு கொள்வதில்லை. மாநில அரசுதான் நேரடியாகத் தொடர்பு கொள்கிறது.

*திரு. ஜி. சுவாமிநாதன்:* இப்போது பஸ்களும், லாரிகளும் போய்க் கொண்டிருக்கின்றன. ரெயில்வேயின் அனுமதி இல்லாமல் ரெயில்வே கிராசிங்கில் உள்ள பாலத்தை விரிவுபடுத்த முடியாது என்று சொல்கிறார்கள். அதை அறிந்து இந்த அரசும் மாநகராட்சித் துறையும் பாலத்தை விரைவாகக் கட்ட ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:* இந்தப் பாலம் 18 டன் பளு தாங்க வேண்டியது. இப்போது தாங்கக்கூடிய நிலையில் இல்லை. மத்திய அரசு 50 சதம் கொடுக்க வேண்டும் என்று மாநில அரசு குறிப்பினை அனுப்பியுள்ளது. அதை விரிவுபடுத்த மாநில அரசும் தொகை ஏற்கவேண்டிய நிலையில் இருப்பதால், இதைப்பற்றி அரசு ஆலோசனை செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*Lalgudi Sivagnanam Co-operative Farmers' Marketing Society.*

* 165 *Q.*—THIRU V. THANGAPANDIAN (on behalf of Thiru T. V. MUTHUKRISHNAN): Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any irregularity in regard to the distribution of fertilizers in Lalgudi Sivagnanam Co-operative Farmers' Marketing Society, Tiruchirappalli district, has come to the notice of the Government;

(*b*) if so, whether any action was taken thereon; and

(*c*) the details thereof?

லால்குடி சிவஞானம் கூட்டுறவு விவசாய விற்பனை சங்கம்

*திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. தி. வி. முத்துகிருஷ்ணன் சார்பில்):* மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சி மாவட்டம், லால்குடி சிவஞானம் கூட்டுறவு விவசாய விற்பனை சங்கத்தில், உர விநியோகத்தில் முறைகேடு நடந்தது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்பேரில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?



(உ) அதன் விபரம் யாது?

*மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :* (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) இச்சங்கத்தில் உர விநியோகத்தில் முறைகேடுகள் தெரியவந்ததால் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 65-ன் கீழ் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. உர விற்பனைத் தொகையைக் குறைத்து வரவு வைத்தது, லாரி வாடகை மற்றும் பொருட்கள் ஏற்றும் இறக்கும் கூலிக்கு போலி ரசீதுகள் தயாரித்து பொய் கணக்கு எழுதியது மூலம் ரூ. 2,611.31 கையாடல் செய்யப்பட்டதாக விசாரணை அறிக்கை மூலம் வெளிப்படுத்தப்பட்டது. குற்றத்தில் சம்பந்தப்பட்ட நபர்கள் மீது சட்டப்படி குற்ற நடவடிக்கை தொடர காவல் துறையினருக்குப் புகார் கொடுக்கப்பட்டது. புலன் விசாரணை முடிந்து, காவல் துறையினர் குற்றச்சாட்டு வழக்கு தொடர்ந்துள்ளார்கள். இவ்வழக்கு திருச்சி கூடுதல் முதல் வகுப்பு (குற்றவியல்) நீதிபதி நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது.

*Subsidized Prices for Pulse varieties.*

* 166 *Q.*—THIRU V. THANGAPANDIAN (on behalf of Thiru K. S. MANI): Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any decision was taken at the Chief Ministers' Conference held recently in New Delhi, to fix subsidized prices for pulse varieties; and

(*b*) if so, the action taken thereon?

பருப்பு வகைகளுக்கு ஆதரவு விலை.

*திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. கோ. சி. மணி சார்பில்):* மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அண்மையில் புது டெல்லியில் நடைபெற்ற மாநில முதல்வர்கள் மாநாட்டில், பருப்பு வகைகளுக்கு ஆதரவு விலை நிர்ணயிக்க முடிவு செய்யப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

*மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:* (அ) இல்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

(2) உடுக்குறியிடாத வினாக்கள்.

*Electric Bill Collection.*

4 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether it is a fact that bills are pending collection for many months in various Revenue Units of the Tamil Nadu State Electricity Board;

(b) if so, the total amount involved on pending bills of over three months as on 31st October 1977; and

(c) the action proposed to be taken by the Government in the matter?

விடை.—(அ) ஆம்.

(இ) சுமார் ரூ. 2 கோடி.

(உ) விவசாயிகளின் போராட்டமே மின் கட்டண வசூலில் ஏற்பட்ட தாமதத்திற்கு முக்கிய காரணமாகும். விவசாயிகளின் மனுக்களைப் பரிசீலிக்க அரசு ஏற்கனவே ஒரு குழுவை நியமித்துள்ளது. 1—3—1977 முதல் 30—11—1977 வரையிலுள்ள நிலுவைகள் குழுவின் பரிந்துரைகள் பெறப்பட்ட பின்பு வசூலிக்கப்படும்.

நூலக வரி.

52.—திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971 முதல் 1976 வரையில் நூலக வரியாக ஆண்டுதோறும் வசூலான தொகை எவ்வளவு?

(இ) மேற்குறித்த ஆண்டுகள் ஒவ்வொன்றிலும் (i) நூல்கள் வாங்கவும், (ii) நூலகங்களை நிர்வகிக்கவும், (iii) புதிய நூலகங்களை ஏற்படுத்தவும், செலவிட்ட தொகை எவ்வளவு?

(உ) நூலக வரி வருமானத்தில் செலவு போக எஞ்சியுள்ள தொகை எத்தனை.



(அ)

| ஆண்டு. | 1971 முதல் 1976 வரை வசூலான நூலக வரி. தொகை. ரூ. | பை. |
|---|---|---|
| 1971–72 | 38,47,061 | 63 |
| 1972–73 | 45,12,452 | 79 |
| 1973–74 | 58,38,176 | 90 |
| 1974–75 | 53,44,988 | 36 |
| 1975–76 | 59,55,242 | 80 |

(இ) (1) நூல்கள் வாங்க செலவிட்ட தொகை.

| ஆண்டு. | தொகை. ரூ. | பை. |
|---|---|---|
| 1971–72 | 14,48,573 | 38 |
| 1972–73 | 17,05,643 | 03 |
| 1973–74 | 19,86,632 | 51 |
| 1974–75 | 20,23,415 | 83 |
| 1975–76 | 12,12,925 | 40 |

(2) நூலகங்களை நிர்வகிக்க செலவிட்ட தொகை.

| ஆண்டு. | தொகை. ரூ. | பை. |
|---|---|---|
| 1971–72 | 94,01,324 | 49 |
| 1972–73 | 98,06,627 | 78 |
| 1973–74 | 1,11,68,414 | 08 |
| 1974–75 | 1,13,22,078 | 94 |
| 1975–76 | 1,25,99,083 | 16 |

(3) புதிய நூலகங்களை ஏற்படுத்த செலவிட்ட தொகை.

| ஆண்டு. | தொகை. ரூ. | பை. |
|---|---|---|
| 1971–72 | 372 | 58 |
| 1972–73 | 11,471 | 96 |
| 1973–74 | .. | .. |
| 1974–75 | .. | .. |
| 1975–76 | .. | .. |

சென்னை நூலக ஆணைக்குழுவில் மட்டுமே மேற்கண்ட இனத்தில் செலவு செய்யப்பட்டுள்ளது.

(உ) ஏதுமில்லை நூலக வரியாக கிடைக்கும் வரவைக் காட்டிலும் ஏற்படும் அதிகபடியான செலவினங்களை ஈடுகட்ட, அரசின் நூலக வரி இணைமானியம், பராமரிப்பு மானியம், இதர வரவினங்கள் போன்றவைகளை அந்தந்த நிதியாண்டில் வசூலான நூலக வரியுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதால் நூலகவரி வருமானத்தில் மிஞ்சிய தொகை ஏதுமில்லை.

*மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :* வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

### (1) மதுரைப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் போடாத காரணத்தால் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து.

*மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :* திரு. வே. தங்கப்பாண்டியன் அவர்கள், மதுரைப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் பதவிக் காலம் முடிந்து, புதிய துணை வேந்தர் அங்கு போடாத காரணத்தால் அந்தப் பல்கலைக் கழகத்தில் ஏற்பட்டுள்ள நிர்வாகச் சீர்கேடு, பரபரப்பு, பதட்ட நிலை குறித்து விவாதிக்க இந்த அவையை ஒத்தி வைக்க வேண்டும் என்று கோரியுள்ளார்கள். இது, எந்த வகையில் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குட்பட்டது என்பதைச் சுருக்கமாக விளக்கக் கோருகிறேன்.

## 3. தகவல் கோரல்.

### இஸ்மாயில் கமிஷன் அறிக்கை குறித்து.

*திரு. ஆற்காடு நா. வீராசாமி :* மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, விதி 57 " Any member desirous of raising a discussion on an urgent matter of administration or public importance .............. என்று கூறுகிறது. நேற்றைய தினம் ஜஸ்டிஸ் இஸ்மாயில் கமிஷன் அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி விவாதிக்க இந்த அவையில் ஒரு அரை மணி நேரம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் இதை இங்கே எழுப்புவதற்குக் காரணம் இன்று கடைசி நாளாக இருப்பது தான்.



*மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :* விதி 57 (1)-ல் சொல்லப்பட்டிருப்பது இதுதான். "அவசர நிர்வாக அலுவல் அல்லது பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள் ஒன்றைக் குறித்து விவாதம் எழுப்ப விரும்பும் உறுப்பினர் எவரும், அதைப்பற்றித் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் குறிப்பிட்டு, செயலாளருக்கு எழுத்து மூலமாக முன்னறிவிப்புக் கொடுக்க வேண்டும் ". ஆகவே உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், இங்கு விதியைத் தப்பாக வியாக்யானம் பண்ணக்கூடாது.

*திரு. ஆற்காடு நா. வீராசாமி :* மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, நான் என்ன சொல்ல விரும்பினேன் என்பதைக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :* உறுப்பினர் அவர்கள் செயலாளருக்கு எழுத்து மூலம் முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்களா?

*திரு. ஆற்காடு நா. வீராசாமி :* தலைவர் அவர்களுடைய அனுமதியைக் கேட்டு விவாதிக்கலாம் என்பதற்காகத் தான் கேட்கிறேன்.

*மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :* நான் அனுமதி எப்படி கொடுக்க முடியும்? விதி முறையின்படி செயலாளருக்கு எழுத்து மூலம் முன்னறிவிப்புக் கொடுக்கவில்லை. இங்கே வந்து எழுந்து நின்றுகொண்டு என்னிடம் அனுமதி கேட்பது எப்படிச் சரியாகும்?

*திரு. ஆற்காடு நா. வீராசாமி :* அடுத்து, இந்த அறிக்கையைக்கூட தமிழிலேதான் கொடுத்திருக்கிறார்கள். சட்ட மன்றப் பேரவையிலே ஆங்கிலத்திலேயும் கொடுத்திருக்கிறார்கள், தமிழிலேயும் கொடுத்திருக்கிறார்கள். இது சட்ட மன்ற மேலவையில் தமிழில் மட்டும்தான் கொடுத்திருக்கிறார்கள்.

*மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :* அறிக்கையைத் தமிழிலேதானே கொடுத்திருக்கிறார்கள். அது ரொம்ப மகிழ்ச்சிகரமான விஷயம்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. ஆற்காடு நா. வீராசாமி :* துணைத் தலைவரவர்களே, ஒரு அவைக்கும் மற்றொரு அவைக்கும் வேறுபாடு இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

*மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :* மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழிலே கொடுக்கக்கூடாது என்று விதிமுறை கிடையாது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நான் இங்கு ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

*திரு. ஆற்காடு நா. வீராசாமி :* நான் தமிழில் கொடுக்கக்கூடாது என்பதற்காகச் சொல்லவில்லை.

[1978 மார்ச் 2

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : என்னுடைய கருத்துக்களை இது குறித்துச் சொல்வதற்கு ஒரு வாய்ப்பு வந்திருக்கிறது, சொல்கிறேன். தமிழிலேயே அறிக்கை வைத்திருந்தால், அது நல்லதுதான். அதனால் ஆங்கிலத்தில் வைக்கக்கூடாது என்பது அல்ல. ஆட்சி மொழிச் சட்டம் வந்து 20 வருடங்கள் ஆகிவிட்டன. ஆட்சி மொழிச்சட்டத்திலே, கூறப்பட்டிருப்பது ஆங்கிலம் இருக்கின்ற இடத்திலே தமிழ் வர வேண்டும் என்பது தான். அப்படியே, தமிழிலே கொடுத்திருக்கிறார்கள். அந்த அவையில் தமிழிலேதான் கொடுத்திருக்கிறார்கள் என்றால், உறுப்பினர் அவர்கள் வினா எழுப்பவே சந்தர்ப்பம் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அவையில் நடந்ததைப்பற்றி இங்கு நமக்குப் பிரச்சினையில்லை.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : ஆங்கிலத்திலே அறிக்கை கொடுத்ததாக உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அவர் சொன்ன கருத்து தவறு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கும் தமிழில்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN: Mr. Deputy Chairman, Sir, I have received an English report after specially asking the Secretary.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தமிழில் கொடுத்ததற்காக உறுப்பினர் அவர்கள் வினா எழுப்ப வேண்டியதில்லை.

*மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் கருத்து தவறு என்பதைச் சொல்லிக்கொள்கிறேன் ஆங்கிலத்தில் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டது என்று தவறாகச் சொல்கிறார்கள். அது குறிப்பேட்டிலே ஏறவேண்டுமா ?

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர்அவர்களே, சபைக்கு கொடுக்கிற தகவல் தவறாக இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் நானும் சொல்கிறேன்.

திரு. ஏ. ஆர் தாமோதரன் : இப்போது எனக்கு ஒரு தகவல் வேண்டும். ஆங்கிலத்திலே தேவைப்படுகின்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும். தலைவர் அவர்கள் (Completely barred) என்று சொன்னார்கள். அதனால் எனக்கு பயம் வந்துவிட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். ஆட்சி மொழிச் சட்டம் வந்து 20 வருடங்கள் ஆகின்றன. ஆங்கிலத்தின் இடத்தில் தமிழைப் பயன்படுத்த வேண்டும் என்பதுதான் கருத்து. ஆங்கிலத்தில் குறிப்புகள் இல்லாமல், தமிழிலேயே வைக்கப்படுமானால், அது மகிழ்ச்சியான ஒன்று என்பதைத்



1978 மார்ச் 2]

தெரிவித்துக்கொள்கிறேன். அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் அதற்காக ஒரு வினா எழுப்பத் தேவையில்லை. ஆங்கிலத்திலேயும் கொடுப்பது இருப்பதனால், அந்த வினா தேவையில்லை.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே, தமிழ் படிக்காதவர்கள், தமிழ் படிக்க முடியாதவர்கள் இருந்தால், அவர்களுக்கு, தமிழ் தெரியாதவர்களுக்கு ஆங்கிலத்திலும் கொடுக்கப்படுகிறது. அங்கத்தினர்கள் தனியாக அதைக் கேட்டு வாங்கிக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியன் : கேள்வியின் பகுதியில், உடுக்குறியிடாத வினாக்கள் என்று இருக்கிறது. அதற்கு பதில் அவையில் சொல்லப்படுவதில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள் நேரம் முடிந்துவிட்டது. விதி முறைகளின்படி 'அன்ஸ்டார்ட் கொஸ்ட்டியன்ஸ்'-க்கு துணை வினா எழுப்ப முடியாது. அப்படித்தான் விதிகள் இருக்கின்றன.

திரு. ஏ. ஆர் தாமோதரன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழ் தெரியாதவர்களுக்குத்தான் ஆங்கிலப் பிரதி கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். தமிழ் தெரிந்தவர்களுக்கு ஆங்கிலப் பிரதி கொடுக்கக்கூடாது என்பதும் தவறு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தமிழ் தெரிந்தவர்களுக்கும், எல்லோருக்கும் தரலாம். ஆங்கிலத்திலே படித்து தெளிவாகப் புரிந்து கொள்ளக்கூடியவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்குத் தனியாகக் கொடுக்கப்படுகிறது. அவர்கள் தனியாகக் கேட்டு வாங்கிக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் இன்று கடைசி நாள் என்று சொன்னார்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இன்றையதினமே பதில் சொல்கின்றார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இந்த நாளோடு முடிகிறதா இல்லையா என்பது பேச்சின் முடிவில்தான் சொல்ல முடியும். நேரம் வரும் போது சொல்கின்றேன்.

(முற்பகல் 10-50)

## 2. ஒத்தி வைப்புத் தீர்மானம்—தொடர்ச்சி

### (1) மதுரைப் பல்கலைக் கழகத்தில் துணை வேந்தர் போடாததால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து—தொடர்ச்சி.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மதுரைப் பல்கலைக் கழகத்திற்குத் துணை வேந்தர் போடப்படாத சூழ்நிலையில், அந்தப் பல்கலைக் கழகத்தோடு இணைந்துள்ள கல்லூரிகளில் ஏற்பட்டுள்ள நிர்வாகச் சீர்கேடு நம்முடைய அமைச்சரவர்களுக்குத் தெரியுமென்று கருது கிறேன். பல்கலைக் கழகத்தினுடைய நிர்வாகத்தின் மூல அதிகாரியாக உள்ளவர், நிர்வாகத்தின் உச்ச கட்ட அதிகாரியாக உள்ளவர் துணை வேந்தர் தான். துணை வேந்தரை நியமிக்க வேண்டுமென்பதற்காக காலாகாலத்தில் 'பேனல்' போட்டு, அக்குழு மூன்று பேர்களைச் சிபாரிசு செய்திருக்கிறது. அவர்களிலே ஒருவரை நியமிப்பதுதான் முறை, மரபு. மரபைத் தொடர்ந்து மீறுவதென்று இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது. அக்குழு மூன்று பேர்களை சிபாரிசு செய்திருக்கிறது. எந்தக் காரணத்தாலோ அதில் ஒருவரை ஏற்றுக்கொள்வதில் அரசு தயக்கம் காட்டுகிறது. இப்போது பரீட்சைகள் நடக்கிற நேரம். எல்லாக் கல்லூரிகளிலும் கதவடைப்பு, போராட்டம் நடந்துகொண்டிருக்கின்றன. பிளஸ் 2 ஸ்கீம் வரப்போகிறது. அது சம்பந்தமாகப் பல முடிவுகளை எடுக்க வேண்டும். ஆனால் பல்கலைக் கழகத்தில் துணை வேந்தர் இல்லை. ஆனால், இதற்காக ஒரு குழுவைப் போட்டிருக்கிறோமென்று ஒரு வாதத்தை அரசு எழுப்பலாம். அந்தக் குழு உறுப்பினர்களுக்கு ஒவ்வொருவர் மீது இன்டரஸ்ட் இருக்கலாம். இதெல்லாம் வரக் கூடாது என்பதற்காகத்தான் மரபுப்படி பல்கலைக் கழகத்தில் துணை வேந்தர் ஒருவரும் சின்டிகேட், செனேட் என்றும் அமைப்புகள் இருக்கின்றன. அதற்காகத்தான் அதை ஒரு அடானமஸ் பாடியாக வைத்திருக்கிறார்கள். அதிலே அரசாங்கம் தலையிட்டுக்கொண்டிருக்கிறது. மதுரைப் பல்கலைக் கழகமும் புதிய பல்கலைக் கழகம். அரசாங்கத்தின் மடமையான தலையீட்டின் காரணமாக என்ன நன்மை ஏற்படும்? பல்கலைக் கழக நடவடிக்கைகள் ஸ்தம்பித்துப் போயிருக்கின்றன. அரசாங்கத்திற்கும் கவர்னருக்கும் இடையே கருத்து வேறுபாடு இருக்கிறது. அரசாங்கத்திற்கு யாரையோ போட வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறதா? அப்படிப்பட்ட எண்ணம் இருந்தால், துணை வேந்தர் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னால் முடிவெடுத்து அறிவிப்பு வந்திருக்க வேண்டும். வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன், கல்வித் துறை இன்று குழப்பமான நிலையில் இருக்கிறது. திட்டவட்டமான அறிவிப்புகள், உத்தரவுகள வராமல் இருக்கின்றன. எரிகின்ற தீயில் எண்ணெயை ஊற்றுவது போல், இன்னமும் துணை வேந்தர் நியமனம் செய்யப்



படவில்லை. பேனலை ஏற்றுக்கொள்ளாமலிருப்பது நியாயமா? அங்கே குழு உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டு, நான் பெரியவனா, நீ பெரியவனா என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இது தென் பகுதியிலே, கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய பிரச்சினை எனவே வழக்கமாக வரும் சடங்கென்று கருதாமல் இதைப்பற்றி விவாதிக்க அவை நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்க வேண்டும். அவையிலே கல்வித் துறை விற்பன்னர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் பேச வாய்ப்பு ஏற்படும். எனவே இந்தப் பிரச்சினை குறித்துப் பேச அவை நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவர்களே, மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. எஸ். வி. சிட்டி பாபுவின் பதவிக் காலம் 23-2-1978 அன்றுடன் முடிவடைந்தது. மதுரைப் பல்கலைக் கழகச் சட்ட விதிகளின்படி துணை வேந்தர் நியமிப்பதற்கென முதற்கண் மூவர் கொண்ட ஒரு குழு அமைக்கப்படுதல் வேண்டும். இம்மூவரில் ஒருவர் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவினாலும், மற்றுமொருவர் பல்கலைக் கழகப் பேரவையினாலும், மேலுமொருவர் பல்கலைக் கழக வேந்தராலும் நியமனம் செய்யப்பட்டவராக இருத்தல் வேண்டும். மேற்படி விதிகளின்படி, மூவர் கொண்ட ஒரு குழு ஒன்றினை நியமித்து அரசு ஆணை எண் 192, கல்வி, நாள் 2—2—1978ல் உத்தரவு வெளியிட்டது. இக்குழு பல்கலைக் கழக வேந்தருக்கு துணை வேந்தர் நியமிப்பதற்கென மூன்று நபர்களைக் கொண்ட பட்டியலை அனுப்பியது. இப்பட்டியல் குறித்து வேந்தர், அரசுடன் கலந்தாலோசித்து வருகின்றார். மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் நியமனத்திற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

துணை வேந்தர் நியமிக்கப் பெறும்வரை, மதுரைப் பல்கலைக் கழக விதிகளின்படி தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பதிவாளருக்கு அரசு உத்தரவு பிறப்பித்தது. இவ்வுத்தரவிற்கிணங்க, துணை வேந்தர் நியமனம் வரையில், பல்கலைக் கழக நிர்வாகத்தினை மேற்கொள்ள எழுவர் கொண்ட ஒரு குழுவினை ஆட்சிக் குழு அமைத்துள்ளது. இக்குழு பல்கலைக் கழகத்தின் அன்றாட அலுவல்களைச் சீரிய முறையில் கவனித்துக்கொள்ளும். எனவே பல்கலைக் கழகத்தின் அன்றாட அலுவல்களில் இடர்பாடுகள் ஏதும் ஏற்படவில்லை.

கவர்னர் அவர்களோடு இது சம்பந்தமாக அரசு கலந்தாலோசிப்பது என்பது, அரசு பல்கலைக் கழக விவகாரத்தில் தலையிடுவதாகாதென்பதையும், மாண்புமிகு உறுப்பினரவர்கள் நினைக்கின்றபடி எந்தவிதக் குழப்பமான

நிலையும் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொண்டு, இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க அவையின் நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்பதையும் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. வே. தங்கப்பாண்டியன் எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உட்காருங்கள். எதுவும் கேட்கக் கூடாது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** விதிக்குப் புறம்பாக நான் எதுவும் கேட்க விரும்பவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** விளக்கம்தான் கேட்பீர்கள். உட்காருங்கள்.

மாண்புமிகு அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இந்தப் பிரச்சினை குறித்து அவை நடவடிக்கைகளை ஒத்தி வைத்துப் பேச வேண்டிய அவசியமில்லை என்று கருதி, ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.

## (2) கைத்தறி நெசவாளர்கள் தங்களுடைய உற்பத்திப் பொருள்களை அயல் நாடுகளுக்கு அனுப்புவதில் உள்ள சிரமம் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** திரு. ஜி. சுவாமிநாதன் அவர்களும், திரு. கே. எஸ். அப்துல் வகாப் அவர்களும், பல ஆயிரக்கணக்கான கைத்தறி நெசவாளர்கள் தங்களுடைய உற்பத்திப் பொருள்களை அயல் நாடுகளுக்கு அனுப்புவதில் உள்ள சிரமத்தினால் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து விவாதிக்க இந்த அவையை ஒத்தி வைக்க வேண்டுமென்று கோரியுள்ளார்கள். இது, எந்த வகையில் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்குட்பட்டது என்பதைச் சுருக்கமாக விளக்கக் கோருகிறேன்.

**THIRU G. SWAMINATHAN:** Sir, my adjournment motion relates to several lakhs of handloom weavers in the State who have been affected because of the difficulty in, or impossibilty of, exporting their goods abroad. I may bring to your knowledge, Sir, that during the year 1976, cloth worth Rs. 246 crores was sent abroad from India. Out of this, 70 per cent constituted handloom cloth. Of this handloom cloth which was exported, 50 per cent was exported from Tamil Nadu. Many lakhs of people are now involved in this industry. As per the directions of the Government of India, it has now been indicated that 25 per cent of the goods to be sent abroad will be goods from ready stock, whether it is mill stock or handloom stock. Again, 50 per cent has to be only by way of



costly garments, each garment costing over Rs. 28. Because each piece of handloom garment does not cost Rs. 28, this 50 per cent of handloom garments could not also be exported by the handloom weavers. The remaining 25 per cent should be against firm contracts. On this basis, I understand that none of our handloom weavers and people who are dealing in export of this item will be able to export anything abroad during the present year. This is because of the topsy-turvy policy being followed in the matter. The autonomous body constituted by the Government of India gives quota as per the directions of the Government of India. I have brought it to the notice of the Hon. Minister here only because of the fact that 50 per cent of the exports relates to Tamil Nadu. Several lakhs of people will be affected and already there is a glut in the handloom market. Therefore, I wish that, in the interests of the handloom trade, we may be allowed to have a discussion on this for half-an-hour, adjourning the other business of the House.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** துணைத் தலைவரவர்களே, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம், நம்முடைய மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்கள் பெருமளவுக்கு வேலை வாய்ப்பு இழக்கக்கூடிய நிலை உருவாகியிருப்பதன் காரணமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு கைத்தறி ஆடைகள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, நமக்கு நிறைய 'பாரின் எக்ஸ்சேஞ்' கிடைத்தது. வேலை வாய்ப்பும் நெசவாளர்களுக்கு நல்ல நிலையிலே கிடைத்து வந்தது. ஆனால் 2, 3 ஆண்டுகளாக நமக்குள்ள வெளி நாட்டு ஆர்டர்கள் குறைந்து, கைத்தறி ஆடைகளை அனுப்பும் பல நிறுவனங்கள் நம் மாநிலத்தில் பாதிக்கப்பட்டு மூடப்பட்டன. இந்த நிலை 6 மாதங்களாக இல்லை. இப்போது கூடுதலான ஆர்டர்கள் வரக்கூடிய நிலை மறுபடியும் ஏற்பட்டிருக்கிறது. வியாபாரம் நல்ல நிலையிலே உருவாகக் கூடிய நிலை ஏற்பட்டது. ஆனால் இப்போது மில்களில் தயாரிக்கப்படும் ஆடைகளை அனுப்ப மத்திய அரசு உத்தரவு பிறப்பித்திருப்பதன் காரணமாக கைத்தறி ஆடைகளை அனுப்பக்கூடிய நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கொள்கையை மத்திய அரசு மாற்றியமைக்க வேண்டுமென்பதற்காக நம்முடைய மாநில அரசு, மத்திய அரசைக் கேட்டு, கைத்தறி ஆடைகளை கூடுதலாக அனுப்பக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்துவதற்கும், வேலை வாய்ப்பு கிடைக்கவும் உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்லவும் இந்த அவை நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கோருகிறேன்.

(முற்பகல் 11.00)

*** மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துணி ஏற்றுமதியில் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி குறித்து இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகின்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்களும், திரு. அப்துல் வகாப் அவர்களும் இங்கே ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தை முன் மொழிந்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டு அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்பதற்கான காரணங்களை நான் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். காரணம், இந்த நெருக்கடி நிலை குறித்து அரசுக்கு அதிகாரபூர்வமான தகவல்கள் எதுவும் வரவில்லை. இது முழுக்க முழுக்க மத்திய அரசினுடைய கொள்கையின்பால் நேர்ந்தது என்றாலும், நெசவாளர்களுடைய பிரச்சினை மாநிலத்தினுடைய பிரச்சினையாக மாறிவிடும் என்ற காரணத்தால், அப்பிரச்சினையில் நமக்கிருக்கிற அக்கறையை வெளிப்படுத்துகிற வகையில் எடுத்துக்கொண்ட நடவடிக்கையைப்பற்றி அரசின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

1976-77 ஆம் ஆண்டில், இந்தியாவிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குக் கிட்டத்தட்ட ரூ. 240 கோடி மதிப்புள்ள ஆடைகளையும், துணிகளையும் அனுப்பியிருக்கிறோம். அதிலே கிட்டத்தட்ட 70 சதவீதம் கைத்தறித் துணியினால் தைக்கப்பட்ட ஆடைகள்தான். ஆனால் அதற்குப் பிறகு ஐரோப்பிய நாடுகளுக்கு ஆடைகளை அனுப்புவதிலே தடையிருந்த காரணத்தால், 1977-78 ஆம் ஆண்டிலே நமக்குக் கொஞ்சம் சிரமம் ஏற்பட்டது. பிறகு, நாடாளுமன்றத் தேர்தலின் முடிவுக்குப் பிறகு, மத்திய ஆட்சிக்கு ஜனதா கட்சி வந்ததற்குப் பிறகு, அந்தத் தடை நீக்கப்பட்டு இப்போது திரும்பவும் ஆடை, துணிகளை ஏற்றுமதி செய்யலாம் என்கிற நிலை உருவாகி இருக்கிறது. அதோடு, 'ஒதுக்கீடு முறை' என்ற ஒரு புதிய முறையையும் அவர்கள் இப்போது அறிவித்திருக்கிறார்கள். 'ஒதுக்கீடு முறையை' அறிவிப்பதற்கு முன்னால், குறைந்த பட்சம் மாநில அரசுகளையும், மாநில அரசின் சார்பிலே இந்தத் துறையில் பணியாற்றக் கூடிய கைத்தறி இயக்குநரையும், மற்றவர்களையும் அவர்கள் கலந்து முடிவு செய்திருந்தால் பொதுவாகச் சிரமம் இல்லாமல் இருந்திருக்கும். இது ஒரு பெரிய பிரச்சினையாக ஆகக் கூடியது என்பதற்காகத்தான், இப்போது நாங்கள் துரிதமான நடவடிக்கைகளை எடுப்பதில் இறங்கியிருக்கிறோம். இந்த உத்தரவு சென்ற மாதம் 14 ஆம் தேதி வந்ததாக ஏற்றுமதி வணிகத்திலே ஈடுபட்டிருக்கக் கூடியவர்கள் நமக்குத் தெரிவித்தார்கள். அவர்களிடமிருந்து அதிகாரபூர்வமாக எதையும் அரசு பெற்றிருக்கவில்லை. டெக்ஸ்டைல் கமிஷன் உத்தரவின்படி இந்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன என்று அவர்கள் சொல்லுகிறார்கள், ஆனால் அந்த



ஆணையின் எண் என்ன, ஆணை எப்போது வெளியிடப்பட்டது என்பது தெரியவில்லை. ஆணையினுடைய நகல் இன்னும் நமக்கு வந்து சேரவில்லை. ஒதுக்கீடு முறை பின்பற்றப்படுகிறது என்பது உண்மைதான். அந்த அடிப்படையிலேதான், நாங்கள் கேள்விப்பட்டவுடன், மத்திய அமைச்சர்களாகிய மதிப்பிற்குரிய திரு. ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்களுக்கும், திரு. மோகன் தாரியா அவர்களுக்கும், நேற்றைய தினம் கடிதம் எழுதப்பட்டு, இன்றைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இதற்கிடையிலே நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அந்தத் தகவல்களைக் கொடுத்து, இந்த ஒதுக்கீடு முறையில் தயவு செய்து மாறுதல்களைச் செய்ய வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அப்படிப்பட்ட மாறுதல்களைச் செய்தால்தான், இங்கே நெசவுத் தொழிலைக் காப்பாற்ற முடியுமென்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஏற்றுமதி என்று வரும்போது, தமிழ் நாட்டிலிருந்துதான் அதிகமான ஏற்றுமதியைச் செய்கிறோம். இந்தியாவிலே உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளில் நான்கில் ஒரு பங்கு தமிழகத்தில் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. 150 கோடி ரூபாய் அளவிலே உற்பத்தி செய்து வருகிறோம். அதிலே இந்த ஆண்டு மட்டும் ஏற்றுமதி செய்ததைக் கணக்கெடுத்துப் பார்த்தால், ரூ. 45 கோடிக்கு அனுப்பியிருக்கிறோம்.

இதனால் பாதிக்கப்படக் கூடியவர்கள் நெசவாளர்கள் மட்டுமல்ல, மற்றும் ரெடிமேட் ஆடைகளைத் தைப்பதில் ஈடுபட்டிருக்கக் கூடிய தையல் தொழிலாளர்களும் ஆயிரக் கணக்கிலே பாதிக்கப்படுவார்கள். சென்னையிலே மட்டும் கிட்டத்தட்ட பத்தாயிரம் பேர் இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் பாதிப்பு ஏற்படும் என்பதால்தான், உடனடியாக நடவடிக்கைகளை எடுப்பதில் இறங்கியிருக்கிறோம். முழுமையான விவரம் கிடைத்தால்தான், என்னவென்று சொல்ல முடியும். இதைச் செய்ய வேண்டியது மத்திய அரசுதான் என்றாலும்கூட, இதில் நம்முடைய அரசு உடனடியாகத் தலையிட்டு, இதில் நம்முடைய அக்கறையைக் காட்டுகிற வகையில் துரிதமாகச் செயல்பட்டு வருகிற காரணத்தால் இந்த நிகழ்ச்சி குறித்து விவாதிக்க இந்த அவையினுடைய மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டாமென்று மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு, இந்த அவையின் அலுவல்களை ஒத்தி வைக்க **வேண்டாமென்று கருதுவதால், இதற்கு அனுமதி மறுக்கிறேன்.**

### 4. கவன ஈர்ப்பு.

**(1) அரசு உயர்நிலைப் பள்ளிகளில் முதல் நிலை தமிழாசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்றவர்கள் பதவியை வரன்முறைப்படுத்தும் தேதியை 21—3—1974க்கு மாற்றியதால் ஏற்பட்டுள்ள அவதி குறித்து.**

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

"25—2—1971ல் அரசாணை எண் 326-ன்படி அரசு உயர்நிலைப் பள்ளிகளில் முதல் நிலை தமிழாசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்றவர்கள், முதல்நிலை தமிழ் ஆசிரியராகப் பதவி பெற்ற அந்த நாளிலிருந்து அவர்களுடைய பணியை வரன்முறைப்படுத்த வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்திருந்தது. தற்போது குறிப்பாணை எண் 89091/பி.2/77-2, நாள் 27—9—77-ன் படி அரசுப் பணியிற் சேரும்போது 30 வயதுக்கு மேற்பட்ட காரணத்தால் வரன்முறைப்படுத்தும் தேதியை 21—3—1974க்கு மாற்றியுள்ளார்கள். ஊதியக் குறைப்புச் செய்தும், நிலுவையினைப் பிடித்தம் செய்தும் ஆணை பிறப்பித்துள்ளமையால் திருநெல்வேலி மாவட்டத்தில் 11 தமிழாசிரியர்களும், மாநில அளவில் நூற்றுக்கும் மேற்பட்ட முதல்நிலைத் தமிழாசிரியர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த ஆணை பள்ளிக் கல்வி இயக்குநர் நடவடிக்கை எண் 1969/76 பி1/72, நாள் 6—10—72படியும், மெமோ எண் 55399/72 கல்வி, நாள் 18—10—72 படியும் 40 வயது வரை, பணியில் சேர்த்துக்கொள்ளலாம் என்ற விதிக்கு மாறுபட்டுள்ளது என்பதை குறித்து."

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** துணைத் தலைவர் அவர்களே, 1—4—1970க்குப் பின்னர் அரசினர் 'பி' பிரிவு உயர்நிலைப்பள்ளியில் நேரிடையாக இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் நியமனம் செய்யப் பட்டனர். இவ்வாசிரியர்கள் முதல்நிலை தமிழ் ஆசிரியர் பணிக்குரிய கல்வித் தகுதிகளைப் பெற்றிருந்தால் அரசாணை எண்கள் 325, கல்வி, நாள் 25—2—1971 1724, கல்வி, நாள் 28—10—1972 மற்றும் 63, கல்வி, நாள் 17—1—1974-ன் படி முதல் நிலைத் தமிழாசிரியர் பணிக்கு மாற்றி பதவி உயர்வு அளிக்கப்பட்டனர்.

இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் பணியிலிருந்து முதல்நிலைத் தமிழாசிரிய பணிக்கு மாற்றி பதவி உயர்வு அளிக்கப்பட்ட முதல் நிலைத் தமிழாசிரியர்க இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் பணியில் தகுதிகாண் பருவம் முடிக்க தேவையில்லையென்றும் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் பணியிலிருந்து மாற்



முதல் நிலைத் தமிழாசிரியர் பணியில் பதவி உயர்வு அளிக்கப்பட்ட தேதியில் (முதல்நிலை தமிழ் ஆசிரியர் பணியில்) வரன்முறை செய்யலாமென்றும் அரசு குறிப்பாணை எண் 5471—பி2/76-9 கல்வி, நாள் 17-8-1970-ல் ஆணையிடப் பட்டுள்ளது. இவ்வரசாணையின்படி இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலை தமிழ் ஆசிரியர் பணிக்கு மாற்றி பதவி உயர்வு அளிக்கப்பட்ட முதல்நிலைத் தமிழ் ஆசிரியர்கள் யாவருக்கும் பணி வரன்முறைப்படுத்தி ஆணை பிறப்பிக்கப் பட்டது.

ஸ்தல ஸ்தாபன நிலை விதிகளில் (Statutory Rules) வயது வரம்பு இல்லாததால் 1-4-1970-க்குப் பின் ஒரு சிலர் 30 வயதிற்கு மேற்பட்டவர்கள் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் பணியில் நியமனம் செய்யப்பட்டனர். இவ்வாசிரியர்களை இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் பணியில் 21-3-1974-ல் தான் வரன்முறை செய்யப்படவேண்டுமென்று அரசாணை எண். 765, கல்வி நாள் 16-5-1974-ல் ஆணையிடப்பட்டது. ஆனால் இவ்வாசிரியர்கள் புத்தி ...ன்றில், குறிப்பிட்டுள்ள அரசாணைகளின்படி 26-2-1971, 28-10-1972 மற்றும் 1—1—1974 ஆகிய தேதிகளில் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் பணியிலிருந்து மாற்றி முதல் நிலைத் தமிழ் ஆசிரியர் பணிக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டுவிட்டனர்.

எனவே இவ்வாசிரியர்களை முதல்நிலைத் தமிழ் ஆசிரியர் பணியில் அரசு குறிப்பாணை எண் 5471-1 பி2/76-9, கல்வி, நாள் 17-8-1976-ன படி, இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் பணியிலிருந்து மாற்றி முதல் நிலைத் தமிழ் ஆசிரியர் பணிக்கு பதவி உயர்வு, அளிக்கப்பட்ட தேதியில் வரன்முறைப்படுத்தி ஆணை பிறப்பிக்கப்பட்டது சரியல்ல என்றும் 21—3—1974-லிருந்துதான் பணி வரன்முறை செய்யவேண்டுமென்றும் அரசு குறிப்பாணை எண் 89091/பி2 77-2, கல்வி, நாள் 27-9-1977-ல் ஆணையிடப்பட்டது.

ஆகையால் அரசு குறிப்பாணை எண். 89091/பி2/77-2 கல்வி, நாள் 27-9-1977-ன் படி வயது வரம்பு மீறியவர்களுக்கு ஏற்கனவே பணிவரன் முறை செய்து பிறப்பித்த ஆணையை ரத்து செய்தும், அவர்கட்கு வழங்கப் பட்ட அதிக உயர்வுத் தொகையை பிடித்தம் செய்யும்படி ஆய்வு அலுவலர் களுக்கு அறிவுரை வழங்கப்பட்டதென்றும் பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது. பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க. எண். 196976/பி1/72, நாள் 6-10-1972-ல் கண்டுள்ள உத்தரவின்படி 40 வயது வரை வயது வரம்பு விதி யினை தளர்த்துவது ஆரம்பப் பள்ளியில் பணி புரியும் ஆசிரியர்கள் பி.டி. பட்ட தாரிகளாகவும் முதல் நிலைத் தமிழாசிரியர்கள் பதவிக்குத் தகுதி பெற்றிருந்

தாலும் ஐந்து ஆண்டுகள் ஆசிரியர் பணி புரிந்திருந்தால் அவர்கள் மற்ற வகைகளில் அப்பதவிக்குத் தகுதியுடையவரெனத் தேர்வாணைக் குழுவினால் கருதப்பட்டு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு மட்டுமே பொருந்தும். தமிழாசிரியர்களை பொதுப்பணி தேர்வாணைக் குழுவினால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு மட்டுமே மேற்படி ஆணை பொருந்துமே தவிர முதல்நிலைத் தமிழாசிரியராக பதவி உயர்வு பெற இவ்விதி பொருந்தாது.

(முற்பகல் 11-10)

**திரு. எம். சங்கரலிங்கம்:** துணைத் தலைவர் அவர்களே, கல்வி இயக்குநருடைய நடவடிக்கை 6-10-1972-ன்படி ஒரு ஆசிரியரை, முன்பு ஐந்தாண்டுகளாகப் பணி புரிந்தவரை, தேர்ந்தெடுக்கலாம் என்று தேர்வாணைக் குழு ஒப்புதல் கொடுத்திருக்கிறது. நான் குறிப்பிடுவது அவர் அதற்கு முன்னால் இடைநிலை இரண்டாம் நிலை தமிழாசிரியராக 30 வயதுக்கு முன்னால் நியமிக்கப்பட்டு, அதே பள்ளியில் முதல் நிலைத் தமிழாசிரியர் பதவி உயர்வு பெற்றவர். அவர்கள் எந்தத் தேதியில் பதவி உயர்வைப் பெற்றார்களோ அந்தத் தேதியில் வரன்முறைப்படுத்தப்பட்டு, தகுதிகாண் பருவம் முடியப் பெற்றவர். திரும்பவும் மாறுதல் உத்தரவைத் தேர்வாணைக் குழு அளித்ததால், அதில் அவருக்குச் சலுகை அளிக்க அரசு பரிசீலனை செய்ய வேண்டும். இல்லாவிட்டால், பல ஆசிரியர்கள் தங்கள் சம்பளத்தில் ரூ. 90-க்கு அதிகமாகத் திருப்பிக் கொடுக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறார்கள். அரசு அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** உறுப்பினர் கருத்து பரிசீலனை செய்யப்படும்.

## (2) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காட்டூரில் உள்ள கோத்தாரி சர்க்கரை ஆலை மூடப்பட்டுள்ளது குறித்து.

**திரு. கே. எஸ். கணபதி:** துணைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காட்டூரில் உள்ள கோத்தாரி சர்க்கரை ஆலையின் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததனால் இந்த ஆலை மூடப்பட்டது. இதனால் இப்பகுதிகளில் உள்ள தொழிலாளர் வகுப்பினருக்கும், விவசாயிகளுக்கும் ஏற்பட்டுள்ள இடர்பாடு குறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** துணைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் உள்ள கோத்தாரி சர்க்கரை மற்றும் கெமிகல்



லிமிடெட் என்ற நிறுவனம் சுமார் 832 தொழிலாளர்களைக் கொண்டது. இவ்வாலையில் உள்ள தொழிலாளர்கள் கீழே குறிப்பிட்டுள்ள தொழிற்சங்கங்களில் அங்கத்தினராக உள்ளனர் :—

1. திருச்சி ஜில்லா சர்க்கரை ஆலை அண்ணா தொழிலாளர்கள் சங்கம் (ஏ.டி.யு.).

2. கோத்தாரி சர்க்கரை தொழிற்சாலை தொழிலாளர்கள் யூனியன், காட்டூர் (சி.ஐ.டி.யு.).

3. காட்டூர் சர்க்கரை கம்பெனி தேசிய தொழிலாளர்கள் யூனியன் (ஐ.என்.டி.யு.சி.).

4. காட்டூர் சர்க்கரை தொழிலாளர் முன்னேற்ற யூனியன் (எல்.பி.எப ;

மேற்சொன்ன யூனியன்கள் வெவ்வேறு தேதிகளில் கீழ்க்காணும் சில கோரிக்கைகளை வற்புறுத்தி, 16-2-1978 தேதியன்றோ அல்லது அதற்குப் பிறகு எந்த தேதியிலும் வேலை நிறுத்தம் செய்யலாம் என்று நிர்வாகத்தினருக்கு வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுத்தனர்.

(1) 1974-75, 1975-76, 1976-77-ஆம் ஆண்டுக்கான போனஸ்.

(2) 67 தொழிலாளர்களின் வேலை முறைபடுத்துவது.

(3) பருவ கால வேலை செய்யும் தொழிலுக்கு (Seasonal workers) ஒவ்வொரு வருட சர்வீஸ் உள்ள தொழிலாளர்களுக்கு 15 நாட்கள் ஊதியம் கொடுப்பது பற்றி. (ஆனால் இது பருவ கால தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கு இல்லை).

(4) நிரந்தர தொழிலாளர்களுக்கு லே-ஆப் இல்லாமல் இருப்பதுபற்றி.

(5) கரும்பு பிழியும் திறன் அதிகமானதால் ஊதிய உயர்வு கொடுப்பது பற்றி.

(6) வேலை காலி இடங்களை நிரப்புதல் பற்றி.

(7) வீட்டு வாடகைப் படி உயர்த்துவது பற்றி.

(8) வேலை நீக்கம் செய்த (Dismissed) 3 தொழிலாளர்களை வேலையில் சேர்த்தல் பற்றி (இன்னும் மற்றவை).

வேலை நிறுத்த நோட்டீஸ் கிடைத்த உடனேயே திருச்சி தொழிலாளர் துறை அலுவலர், 13—2—1978ல் பேச்சு வார்த்தை நடத்தினார். மாவட்ட ஆட்சியாளரின் ஈடுபாட்டினால், நிர்வாகத்தினர் சட்டப்படியான குறைந்த பட்சமான 8.33 சதவிகிதம் போனஸ் கொடுக்கும்படி அறிவுறுத்தப்பட்டனர். நிர்வாகம் 15—3—1978க்குள் 8.33 போனஸ் முன் பணமாகக் கொடுக்க ஒப்புக்

கொண்டனர். மேலும் தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்ய வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டது. திருச்சி தொழிலாளர் துறை அலுவலர், இதர கோரிக்கைகளின் பேரில் 23—2—1978ல் பேச்சு வார்த்தை நடத்தினர்.

எனினும் தொழிலாளர்கள் 19—2—1978ல் "உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில்" ஈடுபட்டனர். நிலைமை அமைதியாக இருந்ததாகக் கூறப்படுகிறது. சென்னை தொழிலாளர் துறை ஆணையரின் வேண்டுகோளுக்கு இணங்க, திருச்சி மாவட்ட ஆட்சியாளர் 19—2—1978ல் சமரசப் பேச்சு நடத்தினர், அச் சமரச பேச்சில் திருச்சி தொழிலாளர் துறை அலுவலரும் பங்கு கொண்டனர். இருதரப்பினரையும் விசாரித்த பிறகு, திருச்சி மாவட்ட ஆட்சியாளர் கீழ்க்காணும் ஆலோசனைகளை நிர்வாகத்தினருக்கு வழங்கினர் :—

1. 8.33 சதவிகிதம் 1976-77க்கு போனஸ் முன் பணமாகக் கொடுக்க வேண்டும்.

2. 1979ல் 67 தொழிலாளர்களின் வேலையை முறைப்படுத்த வேண்டும்.

3. எல்லா நிரந்தர தொழிலாளர்களுக்கும் 15 நாட்கள் ஊதியத்தையும் பருவ கால தொழிலாளர்களுக்கு 7 நாட்கள் ஊதியத்தையும் பணிக்கொடையாகக் கொடுக்க வேண்டும்.

4. சீரான கரும்பு பிழியும் வேலை இருப்பதை முன்னிட்டு, நிரந்தரத் தொழிலாளர்களுக்கு 1978-79 சீசனில் லே-ஆப் கொடுக்கக் கூடாது.

வேலையிலிருந்து நீக்கிய மூன்று தொழிலாளர்களைத் திரும்பவும் வேலையில் சேர்க்க வேண்டும் என்று யூனியன்கள் வற்புறுத்தியதால் இதில் ஒப்பந்தம் ஏதும் ஏற்படுத்த இயலவில்லை. ஆனால் திருச்சி மாவட்ட ஆட்சியாளரின் அறிவுரைக்கு இணங்க, தொழிற் சங்கங்கள் தாங்கள் பின்பு வேலை நிறுத்தம் செய்யும் உரிமைக்குப் பாதிப்பு இல்லாத வகையில், தற்காலிகமாக இந்த வேலை நிறுத்தத்தை நிறுத்தி வைப்பதாக ஒத்துக் கொண்டனர்.

21—2—1978 மாலை 7-45 மணிக்கு வேலைக்குப் போவதாக திருச்சி மாவட்ட ஆட்சியாளர் முன்னிலையில் ஒத்துக்கொண்டபடி, தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

நிர்வாகத்தினர், தொழிற் சங்கங்கள் ஆகிய இரு தரப்பினருடன் 27—2—1978 அன்று சென்னை தொழிலாளர் துறை இணை ஆணையாளர் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தினர். இதில் சுமுக முடிவு ஏற்படவில்லை. மீண்டும் இன்று பிற்பகல் 3-30 மணிக்கு தொழிலாளர் நலத் துறை ஆணையர் முன் பேச்சு வார்த்தை நடக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. கே. எஸ். கணபதி :** அமைச்சர் அவர்கள் அளித்த அறிக்கையின்படி, ஸ்டிரைக் செய்வது நிறுத்தப்பட்டிருக்கிறதே தவிர அவர்களுக்கிடையில் நல்ல தொடர்பு ஏற்படுவதற்கான பேச்சுவார்த்தை ஒன்றும் முடிவடையவில்லை. இன்று பிற்பகல் பேச்சு வார்த்தை நடக்கப்போகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மூன்று தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மறுபடியும் பணி கொடுக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறார்கள். தற்காலிகமாக ஏற்றுக்கொள்வதாக வேலை நிறுத்தம் செய்வதற்கான உரிமைகளுக்கு பாதிப்பு இல்லாத வகையில் தான் ஒப்பந்தம் ஆகியிருக்கிறது. இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை. இந்த மூன்று தொழிலாளர்களும் பணியில் அமர்த்தப்பட்டால்தான், நிச்சயமாக சுமுகமான நிலை ஏற்படும். விவசாயிகளுக்கு இதனால் பெருத்த பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதுபற்றி அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்த மூன்று தொழிலாளர்களும் பணியில் அமர்த்தப்படுவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான தொழிலாள சகோதரர்கள் என்னோடு பல்லாண்டு காலமாகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள். எனவே என்னுடைய வார்த்தையில், இந்த அரசின் வார்த்தையில் மதிப்பு வைத்திருக்கிறார்கள். நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அனைவரும் வேலைக்குச் சென்றுவிட்டார்கள். திடீரென்று வேலை நிறுத்தம் செய்ய மாட்டார்கள். மூன்று பேரைப் பொறுத்தவரையில், வழக்கு அட்ஜுடிகேஷனுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அட்ஜுடிகேஷனுக்கு அனுப்புகிறோம் என்றாலே அரசைப் பொறுத்தவரையில், வேலை நீக்கம் செய்தது சரியல்ல என்பதால், விசாரணைக்கு அனுப்புகிறோம் என்றுதான் நோட்டில் எழுதி அனுப்புவோம். நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்பார்க்கிறோம் என்று எழுதுவோம். இன்று பேச்சு வார்த்தை நடக்க இருக்கிறது. அதற்கு நானே செல்வதாக இருந்தேன். அவர்கள் ஒரு வாரம் கழித்து நடத்தலாமே, திருச்சிக்குப் போய்விட்டு வந்துவிடுகிறேன் என்று தொலைபேசியில் சொன்னார்கள். பிறகு இன்றே பேசலாம் என்றார்கள். நான் வேறு ஒரு பணிக்கு ஏற்கெனவே ஒத்துக்கொண்டுவிட்டதால், லேபர் கமிஷனர் கலந்துகொள்வார். பேச்சு வார்த்தை நடக்கும். சுமுகமான உறவு ஏற்பட்டுவிடும். உறுப்பினருக்கு எந்தவிதமான அச்சமும் இருக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

5. 1978-79ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**திரு என். சுந்தரேசத் தேவர்:** துணைத் தலைவர் அவர்களே, 1978-79ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு அறிக்கையின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த ஆண்டு வரவு ரூ 712.42 கோடியாகவும் செலவு ரூ 746.46 கோடியாகவும் பற்றாக்குறை ரூ 34.5 கோடி என்றும் புதிதாக வரி மூலமாக ரூ. 9.55 கோடி என்றும் துண்டு விழுவது ரூ. 24.50 கோடி என்றும் போடப்பட்டிருக்கிறது. புதிய வரிகள் பல துறைகளில் போட்டிருந்தாலும், குறிப்பாக மண்ணெண்ணெய்க்கு வரியைக் குறைத்திருக்கிறார்கள். இன்று மத்திய அரசாங்கம் மண்ணெண்ணெய்க்கு வரியைக் கூட்டியிருக்கிறது. இந்த அரசாங்கம் கருதியதற்குப் பலனில்லாமல் போய்விட்டது. தங்கம், வெள்ளி போன்றவைகளுக்கு 1 சதவிகிதம் வரி போட்டிருக்கிறார்கள். ஒரு பெர்செண்ட் என்பது அதிக பட்சமாக இல்லாவிட்டாலும், தங்கத்தின் விலை அதிகமாக ஏறி விட்டதால், மத்திய அரசாங்கம் தன் கையிலுள்ள தங்கத்தை வெளியிட முன் வந்திருக்கும்போது, வரி 1 சதவிகிதம் போட்டாலும் கூட கொள்கை அளவில் சரியானதாகத் தோன்றவில்லை. சிமெண்ட், எவர்சில்வர், கண்ணாடி, ஓட்டுப் பலகை போன்றவைகளுக்கு வரி போட்டிருப்பது அவ்வளவு விரும்பத் தக்கதாக இல்லை என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. கோ. சி. மணி தலைமை)

(பிற்பகல் 11-20)

எவர்சில்வர் பாத்திரத்தின் மீது வரி என்னும்போது, ஓரளவிற்குப் பணக்காரர்களை அல்லது சற்று வசதி உள்ளவர்களைப் பாதிக்கிறதே தவிர ஏழை மக்களை அவ்வளவாகப் பாதிக்கவில்லை. கண்ணாடி சாமான்களை ஏழை எளியவர்கள் உபயோகிக்கின்றார்கள். அதன்மீது இப்படி வரி விதிப்பதால் அவர்களும் பாதிக்கப்படுகிறார்கள். பெட்ரோல், டீசல் எண்ணெய்க்கு வரி போட்டிருக்கின்றார்கள். இங்கேயும் போட்டிருக்கின்றார்கள், மத்தியிலும் போடுகின்றார்கள். பெட்ரோலை உபயோகிக்கின்றவர்கள் எல்லாம் பணக்காரர்கள்தானே என்று சொல்லிவிடலாம். ஆனால் அவர்களுக்கும் பாதகம் ஏற்பட்டிருக்கிறது. யாருக்குப் பாதகம் ஏற்பட்டாலும், ஒரு அரசாங்கம் அதைக் கவனிக்க வேண்டும். டீசலை எடுத்துக்கொண்டால், அதன் மீது போடப்பட்டுள்ள வரி காரணமாக ஏழை மக்களும் பெருமளவிற்குப் பாதிக்கப்படுகின்றார்கள். சாதாரண விவசாயிகள் டீசல் என்ஜினை வைத்துக் கொண்டு, எப்படியோ ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கர் நிலத்தை வைத்துக் கொண்டு பிழைக்கலாம் என்று எண்ணி, விவசாயத்தில் இருப்பவர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இவற்றையெல்லாம் மீண்டும் அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும்.



இப்போது பஸ்களின் மீதான வரிகளில், இருக்கைக்கு இவ்வளவு என்று இருந்த வரிகளில் பெரிய மாற்றங்களை அரசு கொண்டுவந்திருக்கிறது. ஏற்கனவே பஸ் தொழில் நசித்துக் கொண்டிருக்கிறது. சீட்டின் மீது உள்ள வரியை உயர்த்திவிட்டு பயணக் கட்டணத்தை உயர்த்தக் கூடாது என்கின்றார்கள். இது எப்படி என்று எனக்குப் புரியவில்லை. எந்த அளவிற்கு இருக்கை மீதான வரிகளை உயர்த்தியிருக்கின்றார்கள் என்றால், வெளியூர் பஸ்கள் சீட்டின் மீதான வரியை ரூ 215லிருந்து ரூ. 230 என்றும், ஒப்பந்த பஸ்களுக்கு இருந்த வரி ரூபாய் 200 என்பதை ரூ. 280 என்றும், ஒரேயடியாக ரூ. 80 அதிகப்படுத்தியிருக்கின்றார்கள். டவுன் பஸ்களைப் பொறுத்த வரையில், சீட்டுக்கு ரூ. 90 என்று இருந்ததை ரூ. 25 உயர்த்தி ரூ. 115 என்று ஆக்கியிருக்கின்றார்கள். சுற்றுலா பஸ்களுக்கு சீட்டுக்கு ரூ. 100 என்று இருந்ததை ரூ. 140 எனறும் உயர்த்தியிருக்கின்றார்கள். வெளியூர் பஸ்கள் மீதான வரி பெரிய அளவிற்கு உயர்த்தப்பட்டுவிட்டது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதே போல ஒப்பந்த பஸ்கள் விஷயத்திலும் ஒரேயடியாக 80 ரூபாய் என்று உயர்த்தியிருப்பது மிகக் கொடுமையானது என்று தோன்றுகிறது. இதையும் அரசு பரிசீலனை செய்ய வேண்டும். டவுன் பஸ்கள் சுற்றுலா பஸகளைப் பொறுத்த மட்டில், அவற்றுக்கு நல்ல டிமாண்டு இருக்கிறது. எனவே அவை இந்த வரி உயர்வினைத் தாங்கக்கூடும். ஆனால் வெளியூர்களுக்கு . . . .

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இவ்வளவு உருக்கமாக வாதாடும்போது, அவர் பஸ்களை வைத்து நடத்தி வந்தார், இன்னும் அவர் பஸ் அதிபராக இருக்கின்றாரா அறிய விரும்புகிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** நான் அவற்றை விற்று விட்டேன். வெளியூர் பஸ்களைப் பொறுத்தவரையில், இப்படி வரி விகிதங்களை உயர்த்தியிருப்பதிலிருந்து, அரசு பஸ்களுக்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து, தனியார் பஸ்களை அடியோடு அகற்றிவிட வேண்டும் என்ற எண்ணத்தில், மறைமுகமாக இப்படி வரி விகிதங்களை உயர்த்தியிருக்கின்றார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. அப்படி ஒரு எண்ணம் வேண்டாம் அரசுக்கு. இன்று தனியார் பஸ்களைத்தான் மக்கள் பெரிதும் விரும்புகின்றார்கள். அவை நன்றாகப் பராமரிக்கப்பட்டு, நல்லவிதத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆனால் அரசு பஸ்களிலே பயணம் செய்ய வேண்டுமென்றால் நிச்சயமாக இன்சூர் செய்து கொண்டுதான் அவைகளிலே பயணம் செய்ய வேண்டிய நிலை. அதிலே பயணம் செய்தால், போய்ச் சேர வேண்டிய இடத்துக்குத்தான் போய்ச் சேருவோமா என்ற ஐயப்பாடு வேறு. திடீர் திடீரென்று வேலை நிறுத்தம் செய்துவிடுகின்றார்கள். விபத்துக்களைப்பற்றிச் சொல்லவே வேண்டாம். தனியார் பஸ்களின் விபத்துக்களைக் கணக்கெடுத்துப் பார்த்தால் நிச்சயமாக அது

மிகமிகக் குறைவாகவே இருக்கிறது. அரசாங்க பஸ்களில் அந்த நிலைமை இல்லை. சென்னையிலிருந்து திருச்சிக்கு அரசு பஸ்ஸில் போகிறோம் என்றால், வழியில் அரசு பஸ்கள் தினம் ஒன்றாவது கவிழ்ந்து கிடப்பதைப் பார்க்கலாம். வரக்கூடிய கார்களோடு, பிற வண்டிகளோடு மோதிவிடுகின்றன. அரசாங்க பஸ்களே ஒன்றுக்கொன்று மோதிக்கொண்டு நிற்பதை சென்னை நகரில் பார்க்கிறோம். சாதாரணமாக அரசு பஸ்களைப் பொறுத்தவரையில், விபத்துக்கள் இல்லாத நாளே இல்லை. இப்படிப்பட்ட நிலையில், இருக்கும் தனியார் பஸ்களை அடியோடு நசுக்கிவிட்டு, முழுக்க முழுக்க அரசு பஸ்களைக் கொண்டுவந்தால், மக்களின் நிலைமை என்னவென்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாற்றுத் தலைவர்களே, நேற்று திருவெ...ம்பூர் பி.எச்.இ.எல். போராட்டமே, பொதுத் துறை நிறுவனமே பஸ்களை ஏற்று நடத்த வேண்டும், தனியார் பஸ்களால்தான் விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன என்று சொல்லி நடத்தப்பட்டது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** மாற்றுத் தலைவர்களே, மக்களின் எண்ணத்தைத்தான் தெரிவிக்கிறேன். இன்று அரசு பஸ்களைப்பற்றி மக்களின் கருத்து என்ன என்பது அனைவருக்கும் தெரிந்ததுதான். அரசு போக்குவரத்தை ஏற்று நடத்துவதில் யாருக்கும் ஆட்சேபணையில்லை. தேசிய மயமாக்கும் கொள்கையை நான் எதிர்க்கவில்லை. அரசாங்கம் அதைத் திறமையாக நடத்தினால் பரவாயில்லை. ஆனால் திறமையற்ற ஒரு நிர்வாகத்தினால் நடத்தும் போதுதான் அதற்கு மக்கள் எதிர்ப்பினைத் தெரிவிக்கின்றார்கள்.

அடுத்து, புயல் நிவாரணம் பற்றி நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. என் கட்சியைச் சார்ந்த நண்பர் திரு. பாலசுப்ரமணியம் அவர்கள் இதன்மீது சில கருத்துக்களைச் சொல்லும்போது, சற்று கோபமாகவேகூட குறிப்பிட்டார்கள். எப்போதும் அவர் கோபமாகப் பேசமாட்டார். ஆனால் இம்முறை சற்று கோபத்தோடு பேசினார் என்னும்போது, எனக்கே சற்று ஆச்சரியமாகத்தான் இருந்தது. அதே நேரத்தில் திரு. தங்கப்பாண்டியன் போன்றவர்களுக்கு அது மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் அவர் தமது பகுதிவாழ் மக்களின் குறைகளைப்பற்றிய கோரிக்கைகளை அமைச்சரிடத்திலும் அதிகாரிகளிடத்திலும் சொல்லியும், அரசாங்கம் அதில் கவனம் செலுத்தவில்லை என்ற நிலையில்தான் சற்று கோபப்பட்டிருக்கின்றார். அவர் சொன்னபடி கொல்லிமலைப் பகுதியில் பெருவெள்ளம் ஏற்பட்டு, அதன் விளைவாக திருச்சி நகரத்தில் வெள்ள அபாயம் ஏற்பட்டது. கொல்லிமலைப் பகுதியிலேயே 250 ஏக்கர் நிலம் மூடப்பட்டுவிட்டது. பம்பு செட்டுகள் எல்லாம் அடித்துச் செல்லப்பட்டன. அங்கே சாதாரண சிறு விவசாயிகள், 2 அல்லது 3



ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் பெரும் நட்டத்துக்குள்ளானார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு அரசு எந்த உதவியையும் நிவாரணத்தையும் கொடுக்கவில்லை என்றால், அவருக்குச் சற்று கோபம் வருவது இயற்கை. அதேபோல தஞ்சை விவசாயிகள், அங்கேயும் வெள்ளம், புயலால் மக்களும், விவசாயிகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அரசும் அவர்களுக்கு நிவாரணம் அளிப்பது என்ற முறையில், குடிசைவாழ் மக்களுக்கு தலா 200 ரூபாய் மற்றும் 5 கிலோ அரிசி, மண்ணெண்ணெய், புடவை, வேட்டி ஆகியவற்றைக் கொடுத்து உதவினார்கள். ஒரு ஏக்கர் 2 அல்லது 2½ ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டிருக்கும் சிறு விவசாயிகளுக்கும் ஏதோ ஒரு சில உதவிகளைச் செய்தார்கள். அரசாங்கத்தில் ஆனால் நடுத்தர விவசாயிகளுக்கு ஏதாவது உதவி செய்தார்களா என்றால், இல்லை. உண்மையில் அவர்கள்தான் இந்த நாட்டின் முதுகெலும்பாக இருக்கின்றார்கள். ஆனால் அவர்களைப்பற்றி அரசு சிறிதுகூட கவலைப்படவில்லை. ஒருகால் அவர்களையெல்லாம் பெரிய பெரிய பண்ணையார்கள் என்று அரசு நினைக்கிறதோ என்னவோ தெரியவில்லை. அவர்கள் நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. அவர்கள் கடன்களை வாங்கியே பிழைக்கின்றார்களே தவிர, இன்று விவசாயத்தினால் அவர்கள் பிழைக்க முடியவில்லை. புயல் வெள்ளத்தின் போது குறுவை பயிர் சாகுபடி அவர்களுடைய நிலங்களின் விளைவு எல்லாம் 100க்கு 90% பாழ்பட்டுவிட்டது. புயலுக்குப் பிறகு ஏற்பட்ட நிலைதான் இன்னும் பரிதாபகரமானது. காவிரியில் ஏற்பட்ட உடைப்பைச் செப்பனிட அரசுக்கு 40 நாள் ஆயிற்று. அந்த நாற்பது நாட்களில் எஞ்சியிருந்த பயிரை அவர்கள் காப்பாற்றப்பட்ட பாடு கொஞ்ச நஞ்சமில்லை. டீசல் எஞ்சின்களை எங்கெங்கிருந்தோ கொண்டு வந்து, 3, 4 மைல் தூரத்துக்குக்கூட குளம், குட்டைகளைத் தேடிச் சென்று வாய்க்கால் வெட்டி சிறிது தண்ணீரைக் கொண்டு வந்து பயிரைக் காப்பாற்ற நினைத்தார்கள். இவ்வளவுக்கும் பிறகு 20 கலம் கிடைக்க வேண்டிய இடத்தில் நாலைந்து கலங்கள்தான் கிடைத்தன. இவ்வளவு அவதிப்படும் அவர்களுக்கு அரசு எந்தவிதமான உதவியும் செய்யவில்லை. இவர்கள் விஷயத்தில் கூட்டுறவுக் கடன்கள் ஒத்திவைப்பு என்பது கிடையாது. சென்ற ஆண்டில் ஏற்பட்ட வறட்சி நிலையின்போது, கூட்டுறவுக் கடன்களை ஒத்திவைத்தார்கள். அப்போது ஒத்தி வைத்திருக்க வேண்டியதில்லை. ஆனாலும் செய்தார்கள். இப்போது அதை வசூலித்து வருகின்றார்கள். இந்த ஆண்டுதான் அவர்களுக்கு அவற்றை ஒத்தி வைத்திருக்க வேண்டும். ஒத்திவைக்கவும் இல்லை, வேறு எந்தவிதமான உதவியும் செய்யவில்லை. இந்த நிலையில் எட்டு பத்து ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள், நடுத்தர விவசாயிகள் தங்கள் நிலத்தையே விற்றுத்தான் கட்டவேண்டிய நிலை. இதையெல்லாம் அரசு பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். இந்த நேரத்தில் மத்திய அரசோடு தொடர்புடைய கூட்டுறவு ஸ்தாபனங்களிடமிருந்து இவர்களுக்காக உதவிகளைக் கோரிப் பெற முடியுமா, அதைச் செய்து, அரசாங்கம்

தலைக்குச் சேரவேண்டிய கடன்களை, கூட்டுறவுக் கடன்களை வசூல் செய்வதை ஒத்திவைக்க முடியுமா என்று பார்த்து, அதை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(முற்பகல் 11-30)

அதோடு வரிவஜா செய்ய வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கூரை இல்லாத வீடுகளுக்கெல்லாம் 200 ரூபாய் மான்யம் வழங்கினார்கள். சில இடங்களில் அதிகமாக வழங்கிவிட்டார்கள் என்றுகூட குறைபாடுகள் வந்தன. அப்போது என்ன கூறினார்கள்? "ஏதோ ஏழை எளிய மக்கள், விவசாயிகள், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் அவர்களுக்குக் கொஞ்சம் அதிகமாகக் கொடுத்துவிடுவதில் தவறில்லை. அதை ஒரு கருணையாக எடுத்துக் கொள்ளுங்கள். எனவே தாராளமாக நடந்து கொள்ளுங்கள்'' என்று அதிகாரிகளுக்குக்கூட உத்தரவிட்டார்கள். ஆனால் இன்றைய தினம் ஒரு விவசாயி தன்னுடைய நிலத்திலிருந்து ஏதோ 4 கலம் அல்லது 5 கலம் பயிர் செய்து அறுவடை செய்துவிட்டான் என்பதற்காக நில வரி வசூல் செய்வது என்பது எந்த வகையிலும் நியாயமில்லை. எனவேதான், கூட்டுறவுக் கடன் வசூலை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிற அதே நேரத்தில் வரி வஜாவும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளைப் பற்றிப் பேசுகிற நேரத்தில் ஒன்றைக் குறிப்பாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். முன்னாள் அமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் இங்கே அரசாங்கத்தில் இருந்தபோது, 1955-ல் முதல் முறையாக விவசாய வருமான வரியைக் கொண்டு வந்தார்கள். அது 1964-ல் புதுப்பிக்கப்பட்டது. பிறகு அது 1972-லும் புதுப்பிக்கப்பட்டது. 1973-லும் புதுப்பிக்கப்பட்டது. அதனையொட்டி இன்றைய தினம் இந்த வருமான வரி விகிதத்தை இந்த அரசாங்கம் மாற்றியிருக்கிறது என்று கருதுகிறேன். திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் மத்திய அரசாங்கத்தில் நிதியமைச்சராகப் போனபோது "விவசாயிகளிடம் ஏகப்பட்ட பணம் முடக்கப்பட்டிருக்கிறது'' என்று குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட கருத்துக்களைச் சொல்வது துரதிருஷ்டவசமானதாகும். விவசாயப் பொருள்கள்மீது வரி விதிக்க வேண்டும் என்று அரசாங்கத்திற்கு எண்ணம் ஏற்படுவதே ஒரு துரதிருஷ்டமாகும். நல்ல ஆட்சியாளர்களுக்கு விவசாயிகள் மீது வரி விதிக்க வேண்டும் என்ற எண்ணமே வரக்கூடாது. இந்த நாட்டின் முதுகெலும்பாக இருப்பவர்களே விவசாயிகள்தான். அவர்கள்தான் இந்த நாட்டின் மிக அத்தியாவசியமான பொருளாகிய உணவுப் பொருள்களைத் தயாரிக்கிறார்கள். அந்த விவசாயிகள் முன்புபோல பெரிய நிலச்சுவான்தார்களாக இல்லை. காரணம், பெரிய நிலச்சுவான்தாரர்களையெல்லாம் மாற்றி, நில உடைமைக்கு உச்சவரம்பு கொண்டு வந்து, சாதாரணமாக ஒரு விவசாயி 15 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் வைத்துக்கொள்ள முடியாதபடி 'சீலிங் ஆக்ட்' கொண்டு வந்துவிட்டோம். இந்த நிலையில் இந்த விவசாயிகளையெல்லாம் பெரிய பணக்காரர்களைப்போல் கருதிக்கொண்டு, அவர்களுடைய வருமானத்தின்மீது வரி விதிப்பது என்பது சரியில்லை. விவசாயிகளைப் பொறுத்த வரையில், அவர்கள் இன்றைய தினம் 'இன்கம் டாக்ஸ்' கட்ட வேண்டியிருக்கிறது. நில வரி கட்ட வேண்டியிருக்கிறது. போதாததற்கு கவர்மெண்ட் 'சர்சார்ஜ்' டாக்சேஷன் கட்ட வேண்டியிருக்கிறது. இத்தனை வரிகளையும் விவசாயி கட்ட வேண்டியிருக்கிறது. எந்த வரியும் இல்லாமல் கலப்பையை எடுத்துக்கொண்டுபோய் பயிர் செய்து கொண்டிருந்த விவசாயி இன்றைய தினம் கணக்கெழுத வேண்டிய நிலைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறான். எந்த நேரத்தில் எந்த அதிகாரி வருவாரோ, என்ன கேட்பாரோ என்று வீட்டு வாசலைப் பார்த்துக் கொண்டிருக்கிற நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. இந்த விவசாய வருமான வரி விதிப்பில் மாற்றம் செய்திருக்கிறார்கள். அதைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.





1973-ல் முதல் 5,000 ரூபாய் விவசாய வருமானம் உள்ளவர்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. அவர்களுக்கு விவசாய வருமான வரி இல்லை என்று வைத்திருந்தார்கள். இப்போது ரூ. 5,பு00-லிருந்து இந்த வரம்பை ரூ. 10,000 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். அடுத்து ரூ. 10,000 முதல் ரூ. 15,000 வரையிலான வருமானங்களுக்கு 1973-ல் 20 சதம் வரி போட்டிருந்தது. இன்றைய தினம் 20 சதம் என்பது 15 சதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதே போல் ரூ. 15,000 முதல் 20,000 வரையிலான வருமானத்திற்கு 1973-ல் 30 சத வீத வரியாகப் போடப்பட்டிருந்தது. இன்றைய தினம் 20 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. மேலும் ரூ. 20,000 முதல் தூ. 26,000 வரையிலான வருமானத்திற்கு ஏற்கெனவே 35 சதவீத வரி இருந்ததை 25 சதவீதமாகக் குறைத்திருக்கிறார்கள். ரூ. 25,000 முதல் ரூ. 30,000 வரையிலான வருமானத்திற்கு 46 சதவீத வரி என்றிருந்ததை 30 சதவீதமாகக் குறைத்திருக்கிறார்கள். 30,000 முதல் 50,000 ரூபாய் வரை உள்ள வருமானத்திற்கு 60 சதவீத வரி என்றிருந்ததை மாற்றி இப்போது 46 சதவீத வரியாக மாற்றியிருக்கிறார்கள். அடுத்து ரூ. 50,000 முதல் 70,000 வரையிலான வருமானங்களுக்கு 55 சதவீத வரி என்று போட்டிருக்கிறார்கள். கடைசியாக ரூபாய் 70,000 முதல் 1,00,0000 வரையான வருமானத்திற்கு 60 சத வீத வரி என்...ம் ரூபாய் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட வருமானத்திற்கு 66 சதவீத வரி என்றும் மாற்றி அமைத்திருக்கிறார்கள். இதை நான் ஒப்புக்கொள்கிறேன். இந்த மாறுதல்களைப் பொறுத்தவரையில், நான் ஆதரிக்கிறேன்.

ஆனால் அதே நேரத்தில் விவசாயிகள் கணக்கு எழுதவேண்டும் என்று வைத்திருப்பதும் அவர்கள் கம்பவுண்டிங் செய்து கொண்டு இணக்கமாகத்

தீர்த்துக்கொள்ள வேண்டிய வசதியை நீக்குவதும் விவசாயிகளுக்கு மிகுந்த கஷ்டத்தை உருவாக்கும். இதனால் அவர்கள் மிக மோசமான அளவுக்கு பாதிக்கப்படக்கூடிய நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. சாதாரணமாக ஒரு ஏக்கருக்கு ரூபாய் 600 வருமானம் வரும் என்று கணக்கிட்டு இதைப் போட்டிருக்கிறார்கள். ஆனால் இதையும் இப்போது மாற்றியிருக்கிறார்கள் என்று கருத வேண்டியிருக்கிறது. ஒருவருக்கு 10 ஏக்கர் இருந்தால், அவருக்கு ரூபாய் 5,000 வருமானம் என்று 5,000 ரூபாய் வரை வரி விலக்கு அளித்திருக்கிறார்கள். அதேபோல் 10 ஏக்கர் வரை கம்பவுண்டிங் வரியில்லை. ஆனால் 10 முதல் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் பரப்பிற்கு 1973-ல் 15 ரூபாய் வரியாக இருந்தது இப்போது ரூபாய் 30 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. 15-க்கு மேல் 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் பரப்பிற்கு முன்னால் ரூபாய் 25 வரியாக இருந்தது இப்போது ரூபாய் 50 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதே போல் 20-க்கு மேல் 25 ஸ்டாண்டர்டு ஏக்கர் பரப்பிற்கு முன்னே ரூபாய் 35 என்றிருந்தது இன்றைய தினம் ரூபாய் 70 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. 25-க்கு மேல் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் பரப்பிற்கு 90 ரூபாய் இன்றைய தினம் இணக்க முறையில் வரி செலுத்தலாம் என்று போடப்பட்டிருக்கிறது. முன்னாலே 50 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை கம்பவுண்டிங் முறையில், இணக்க முறையில் வரி கட்டலாம் என்று இருந்தது. இப்போது எல்லாவற்றையுமே ஏட்டிக்குப் போட்டியாக ஏற்றியிருக்கிறார்கள். போட்டிருக்கிற விகிதங்கள் மிகவும் அதிகம் என்பதை மீண்டும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நெல் ஏக்கருக்கு ரூபாய் 500 வருமானம் வரும் என்ற முறையில் இத போடப்பட்டிருக்கிறது. ஏக்கருக்கு ரூபாய் 500 நிகர லாபம் கிடைக்கு என்று சொல்ல முடியாது. ரூபாய் 500 நிகர லாபம் கிடைக்காது என்று நான் சேலஞ்சு பண்ணத் தயாராக இருக்கிறேன். இது தவறான புள்ளி விவரத்தின் மீது கணக்கிடப்பட்டிருக்கிறது. எனவே இதை அரசாங்க மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் கணக்குக் காட்டும் முறை என்பது தேவையில்லாதது கம்பவுண்டிங் முறையிலே எதையாவது போடலாம். காரணம் நம் விவசாயி களைப் பொறுத்த வரையில், இன்னும் கணக்கு வைத்துக்கொள்ளும் பழக்க ஏற்படவில்லை. வருமான வரி கட்டுகிற அளவுக்கு விவசாயிகள் உயர்ந் விட்டால், கணக்கு வைத்துக்கொள்ள அவசியம் ஏற்படும். அதுவரையில் கம்பவுண்டிங் முறை விவசாயிகளுக்கு இருப்பது மிகவும் அவசியம். இப்போ விவசாய வருமான வரி கட்டவேண்டும் என்று ரூபாய் 500, ரூபாய் 1,000 கட் வேண்டுமென்றாலும், அதிகாரிகளிடம் கணக்கைக் கொண்டு போனால், அவ களுக்கு ரூபாய் 500 லஞ்சம் கொடுத்தால்தான் கணக்கை வாங்குகிறார்கள் விவசாய வருமான அதிகாரிகளிடம் இது அதிகமாகப் புகுந்துவிட்டது. நிச்ச





மாகச் சொல்கிறேன், வருமான வரிக் கணக்கு காட்டுவது என்று வைத்தால், லஞ்சத்தை ஊக்குவிப்பதாகத்தான் இருக்கும். எனவே இவைகளையெல்லாம் அரசாங்கம் சரியாகப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக, விவசாய உற்பத்திப் பொருளைப்பற்றி ஒரு சில வார்த்தை களைச் சொல்ல விரும்புகிறேன். நெல்லுக்கு 95 அல்லது 90 ரூபாய் விலை குவிண்டாலுக்கு என்று அறிவித்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்தபோது மிகவும் சந்தோஷமாக இருந்தது. எனக்கேகூட மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் தஞ்சை ஜில்லாவில் மட்டும் இதைப் போட்டுவிட்டு, மற்ற ஜில்லாக்களில் இல்லை என்று மற்ற உறுப்பினர்கள் சொல்லுகிறார்கள். தஞ்சை ஜில்லாவில் குவிண்டாலுக்கு ரூபாய் 95 விலை என்று போட்டுவிட்டு, கல்லுக்கும் மண்ணுக்கும் 3 கிலோ அதிகமாகக் கொடுங்கள் என்று விவசாயிகளிடம் வாங்கு கிறார்கள். இதற்கு மேலே ஈரப்பசைக்காக என்று ஒரு கிலோ. இப்படி மூட்டைக்கு 61 அல்லது 62 கிலோ வாங்குகிறார்கள். இதைத்தான் அரசாங்கக் கொள்முதல் நிலையத்தில் செய்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் தனியார் வியாபாரிகள் மூட்டை ரூபாய் 46, ரூபாய் 47 என்றுதான் வாங்குகிறார்கள். நான் விளையாட்டுக்குச் சொல்லவில்லை, இந்த நிலைமையிலும் யாராவது எந்த விவசாயியாவது அரசாங்கக் கொள்முதல் நிலையத்தில் அவர்களுடைய நெல்லைக் கொண்டு போய் விற்கிறார்களா என்றால், இல்லை. அரசாங்கக் கொள்முதல் நிலையத்திற்கு யாருமே போவதில்லை. எல்லோரும் தங்கள் இருப்பை தனியார் கொள்முதல் நிலையங்களில் தான் கொண்டு போய் விற்கிறார்கள்.

'மாய்ஸ்ச்சர்' என்கிற ஈரப்பசைக்கு 1 அல்லது 2 கிலோ முதலில் வாங்கினார் கள். இப்போது கல் மண் எல்லாம் இருக்கிறது என்று 2, 3 கிலோ அதிக மாகக் கேட்கிறார்கள். அரசாங்கக் கொள்முதல் நிலையங்களில் இப்படி ஒரு புதிய சகாப்தத்தை உண்டாக்கி விட்டார்கள். இதைப் பார்த்து விவசாயி கள் தாங்களே இனிமேல் 2, 3 கிலோவுக்குக் கல்லும் மண்ணும் கலக்கக் கற்றுக் கொள்வார்கள் போல் இருக்கிறது. இதைக் கொள்முதல் செய்யும் அதிகாரிகள்தான் ஊக்குவிக்கிறார்கள். அரசாங்கம் சொல்லி அவர்கள் செய்வ தாக நான் சொல்லவில்லை. ஆனால் அவர்கள் இதைச் செய்து கொண்டிருக் கிறார்கள். இப்படித் தவறு செய்யும் அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களையெல்லாம் 'சஸ்பெண்டு' செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏதோ அரசாங்கத்தின்மீது குறை சொல்ல வேண்டும் என்பதற்காக இதைச் சொல்லவில்லை. இதுதான் உண்மையான நிலை என்பதால் இதைச் சொல்லுகிறேன்.

[திரு. என். சுந்தரேசத் தேவர்] [1978 மார்ச் 2

(முற்பகல் 11-40)

இப்பொழுது ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றி இங்கே கூற மறந்து விட்டேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்னதாக நான் பத்திரிகையிலே பார்த்தேன். உரம், பூச்சி மருந்தினுடைய விலை உச்ச கட்டத்தில் இருக்கின்றது. அதற்கு மத்திய அரசு வரியைக் குறைக்க வேண்டுமென்று விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டிருப்பதாகப் பத்திரிகையிலே பார்த்தேன். உரம், பூச்சி மருந்தினுடைய விலைகள் உச்ச கட்டத்திற்குத்தான் போயிருக்கின்றன. விவசாயி அந்த விலைக்குப் பொருள்களை வாங்கி விவசாயம் செய்தால், பலனில்லை. அவனால் சாகுபடி செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது மத்திய அரசினுடைய பொறுப்பிலே இருந்தாலுங்கூட, அடக்க விலையையாவது குறைத்து இவைகளை விவசாயிகளுக்கு வழங்கக்கூடிய நிலைமைகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உரம், பூச்சி மருந்து போன்ற பொருள்கள் எல்லாம் அவர்களுக்குக் குறைந்த விலைக்குக் கிடைக்கக்கூடிய நிலைமைகளை இந்த அரசு ஏற்படுத்தித் தர வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தென்னை உற்பத்திக்காக இந்த அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுப்பதாகக் குறிப்பிலே இருக்கிறது. இதற்குத் தீவிரமான விவசாயத் திட்டங்களைக் கொண்டு வந்து, கன்னியாகுமரி, இராமநாதபுரம், கோயம்புத்தூர் மாவட்டங்களில் எல்லாம் தென்னை அபிவிருத்தி செய்வதாகக் குறிப்பிலே இருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். அது சம்பந்தமாகச் சில ஆலோசனைகளைக் கூற விரும்புகிறேன்.

சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை கடலோரப் பகுதியை எடுத்துக் கொண்டால், அது ஏறக்குறைய 550 மைல் தூரம் வரையில் உள்ளது. எண்ணெய் வித்துக்களை வெளி நாடுகளிலிருந்து வரவழைக்கக்கூடிய நிலைமையில் நாம் இருக்கிறோம். 1,500 கோடி ரூபாய் மதிப்பிற்கு நாம் இறக்குமதி செய்திருக்கிறோம். தென்னை உற்பத்தி சம்பந்தமான புள்ளி விவரங்கள் சரியாக இல்லை. புள்ளி விவர இலாகா சரியான புள்ளி விவரங்களைத் தரவில்லை என்பதைத்தான் இது காட்டுகின்றது. தென்னை உற்பத்திக்கு சென்னை மாநகரம் மிகவும் சிறந்த நகரம். $2\frac{1}{2}$ லட்சம் ஏக்கர் தென்னை சாகுபடி செய்வதாகப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. இது ஒரு தவறான புள்ளி விவரம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கேரளாவிலே அதிகமாக உற்பத்தி ஆகின்றதாக புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதனால் கேரளாவிலே கமிட்டி வைக்கிறார்கள். காயர் போர்டு கமிட்டி வைத்தால், அது கேரளாவிலே; கோகோனட் கமிட்டி வைத்தால், அது கேரளாவிலே. இப்படி எல்லாக் கமிட்டிகளையும் கேரளாவிலே வைக்கின்றார்களே தவிர



1978 மார்ச் 2] [திரு. என். சுந்தரேசத் தேவர்]

தமிழ்நாட்டிலே இல்லை. மத்திய அரசின் சார்பில் உள்ள கமிட்டிகள் எதுவும் இங்கு இல்லை. அவர்கள் புள்ளி விவரங்களை மிகைப்படுத்திக் கொடுக்கிறார்கள். அதைச் சுட்டிக்காட்டி அவர்கள் அங்கே போட்டுக்கொள்கிறார்கள். தென்னையைப் பொறுத்த வரையில், கேரளாவை விட நியாயமாகத் தமிழ் நாட்டில்தான் அதிகமான விளைச்சல் இருக்க முடியும். கிட்டத்தட்ட 550 மைல் தூரத்திற்கு சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை கடலோரப் பகுதியாக இருக்கிறது. அந்த நிலம் தகுதியான நிலமாக இருக்கின்ற காரணத்தினால், அதை ஊக்குவிக்க வேண்டும். அப்படி ஊக்குவிக்காத காரணத்தினால்தான், கேரளா முதன்மை ஸ்தானத்தில் இருக்கின்றது. இல்லையென்றால், தமிழ் நாடுதான் முதல் ஸ்தானம் வகிக்கக்கூடிய நிலைமையை உண்டாக்க முடியும். புள்ளி விவரங்களில் கடந்த பல ஆண்டுகளாக $2\frac{1}{2}$ லட்சம் தென்னை என்றுதான் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் அரசாங்கம் வந்த காலத்தில் $2\frac{1}{2}$ லட்சம் தென்னை மரங்கள் என்று போட்டிருந்தார்கள். 10, 15 வருட காலமாக இந்தப் புள்ளி விவரங்கள்தான் இருக்கின்றன. செங்கல்பட்டு, வட ஆற்காடு, மாவட்டங்களில் எங்கு பார்த்தாலும், தென்னை பயிராகத்தான் இருக்கின்றது. 15 வருட காலமாக $2\frac{1}{2}$ லட்சம்தான் என்று போட்டு வருகின்றார்கள். இந்தப் புள்ளி விவரம் தவறான புள்ளி விவரம். இப்போது தென்னை சாகுபடி செய்யும் நிலத்தின் விஸ்தீரணத்தைப் பற்றிப் புதிய அளவு எடுத்துப் புள்ளி விவரங்களைக் கொடுக்க வேண்டுமென உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் புள்ளிவிவர இலாகா என்ன செய்துகொண்டிருக்கின்றது என்பது எனக்குப் புரியவில்லை. இந்தப் புள்ளி விவரங்கள் சரியில்லை. இந்தப் புள்ளி விவரங்களைப் பார்த்தால், நமக்கு ஐயப்பாடுதான் ஏற்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முன்னால் போட்ட புள்ளி விவரங்களைப் பார்த்தே அதைத் தொடர்ந்து போட்டுக்கொண்டிருக்கின்றார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். தென்னை மரங்கள் நம் தமிழ் நாட்டில் வளர்ந்திருக்கிறதைப் பார்த்தால்கூட, இது நமக்குத் தெரிகிறது. தஞ்சை மாவட்டத்திலே கூட புள்ளி விவரங்களைப் பார்த்தால், தெரிகிறது. அந்தப் புள்ளி விவரங்களைப் பார்க்கின்றபோது, அங்கு 46 ஆயிரம் ஏக்கர்தான் தென்னை சாகுபடியாகிறது என்று தெரிகிறது. இப்போது 50 ஆயிரம் ஏக்கர் இருக்கும் என்று சொல்கிறேன். சென்னையைப் பொறுத்தும், சரியான புள்ளி விவரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது மாநில அரசுக்கு மிகுந்த வருமானத்தைக் கொடுக்கக்கூடியது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சுமார் 1,500 கோடி ரூபாய்க்கு நாம் எண்ணெய் வித்துக்களை வெளி நாடுகளிலிருந்து வரவழைத்துக்கொண்டிருக்கிறோம். இந்த நிலைமைகளை மாற்ற நாம் தீவிரமான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நிலச் சீர்திருத்தம் செய்யப் போவதாகச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற தென்னை சாகுபடியாகும் நிலங்கள் அந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் வருகின்றவா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஒரு பிரச்சினையைக் கிளப்பினார்கள். நமது அவையிலே அமைச்சர் அவர்கள் இல்லை. இது ஒரு துரதிர்ஷ்டமான நிலை. நம்முடைய தலைவர் அவர்கள் அவை நேரத்தைக் காலைக்கு மாற்றினார்கள். அப்படி மாற்றியதால், சௌகரியமாக இருக்கிறது. இங்கே நம்முடைய முன்னவர் அவர்கள் இருக்கின்றார்கள். அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் அந்தந்த இலாகா மந்திரிகள் இந்த அவையிலே இருந்தால், நல்லதாக இருக்கும். அமைச்சர்கள் இல்லையென்றால், ஒரு திருப்தி இல்லை. அமைச்சர்கள் இங்கே இருந்தால், நமக்கு மனதிலே ஒரு நிம்மதி இருக்கிறது. மாண்புமிகு முன்னவர் அவர்களுக்குப் பொறுப்பு இல்லை என்று சொல்லவில்லை. வேண்டிய அமைச்சர் இருந்தால், சந்தோஷமாக இருக்கும். இப்போது விவசாய அமைச்சர் இருந்திருந்தால், நல்லது. வேறு ஒன்றுமில்லை. கன்னியாகுமரி, இராமநாதபுரம், கோயம்புத்தூர் மாவட்டங்களில் இதைத் தீவிர திட்டமாகக் கொண்டு வரப்போவதாகச் சொன்னார்கள். நல்ல வருமானம் வரக்கூடிய திட்டம். அப்படிப்பட்ட தென்னை மரங்களை நமது மாநிலமெங்கும் உற்பத்தி செய்யவேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். தென்னை மேம்பாடு உற்பத்திக் கழகம் என்று ஒன்றை உண்டு பண்ண வேண்டும். சென்ட்ரல் கோகனட் கமிட்டி என்று வைத்திருக்கிறார்கள். அதன் மூலம் தேவைப்பட்டதைச் செய்து கொள்கிறார்கள். அவர்கள் பண்ணுகிறார்களோ, இல்லையோ நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில், நம் மாநிலமே தென்னை வளர்ப்பதை முக்கியமாக எடுத்துக்கொண்டு, தென்னை மேம்பாட்டுக் கழகம் என்று ஒன்றை ஏற்படுத்த வேண்டும். நல்ல ஒரு ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்த வேண்டும். டி. & டி. என்று ஒரு ரகம். சாதாரண மரங்கள், 30, 40 காய்கள் காய்க்கின்ற மரங்கள் இருக்கின்றன. இந்த T and D ரகத்தில் 100 காய்கள்கூட காய்க்கின்றன. வேப்பங்குளத்திலே போய் அங்கு செய்கின்ற ஆராய்ச்சிகளைப் பார்த்து அறிந்து கொண்டேன்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. பலராமன் அவர்கள் ஒரு வருடமாக டி & டி பயிரிட கன்று வேண்டும் என்று கூறி ஒரு வருடமாகியும் கிடைக்கவில்லை என்றார்கள். இந்த வேப்பங்குளம் ரிசர்ச் ஸ்டேஷன் மாதிரி 4 அல்லது 6 இடங்களிலே வைக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். அம்மாதிரிச் செய்தால் மாநிலம் பூராவுக்கும் சப்ளை செய்யலாம் என்று சொல்லிக் கொள்கிறேன். இது ஒட்டு சேர்க்கின்ற விதம். சுலபம் தான். நம்முடைய





தோட்டத்திலேயே கூட பண்ணலாம். அப்படிப்பட்ட ஆராய்ச்சி நிலையங்களை ஏற்படுத்த என்ன செய்ய முடியுமோ அவைகளைச் செய்ய வேண்டும். அதைப் பயிரிடுவதில் அதிகமான செலவே இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மாதிரி ஆராய்ச்சி நிலையங்கள் வேப்பங்குளத்திலே மட்டும் தான் இருக்க வேண்டும் என்பதல்ல. எல்லா இடங்களிலும் அந்த மாதிரியான ஆராய்ச்சி நிலையங்களை அமைக்க வேண்டும். அந்த ஒட்டுத் தென்னையைப் பயிரிடுவது அவ்வளவு கஷ்டமானதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாமே செய்துகொள்ளலாம். அந்தக் குட்டை மரத்திலேயிருந்து அந்த மகரந்தத்தூளை துணியை வைத்துப் பிடித்து ஒட்டு செய்ய வேண்டிய தென்னையின் குரும்பை நுனியில் ஒட்ட வேண்டும். இது அப்படி ஒன்றும் பெரிய வேலையில்லை. அது ஒரு சாதாரண விஷயம். இது எல்லாம் வேப்பங்குளத்திலே மட்டும் இருக்கக்கூடாது. மற்ற எல்லா இடத்திலேயும் இருக்க வேண்டும். தஞ்சையிலே, பட்டுக்கோட்டை பகுதியிலே இருக்கிறது. அப்படி பல இடங்களிலே இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டது என்னுடைய கவனத்திற்கு வருகிறது. புயல் காற்று அடித்தால், தென்னை மரம் வளையாமல் நிமிர்ந்திருப்பதால் கீழே விழுந்துவிடுகின்றது. வளைய வேண்டியவர்கள் எல்லாம் வளையாத காரணத்தினாலே, முறிந்து விழவேண்டியதாகிவிட்டது. இந்தப் புயல் காற்று அடிக்கும்போது, நிற்க முடியாமல் விழ்ந்து விடுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தென்னை மரத்தைப் பொறுத்த வரையில், அதற்கு நோய் ஏற்பட்டு விடுகிறது. மனிதனுக்குத் தீராத நோய் வந்தால், மனிதன் எப்படி கெட்டுவிடுகின்றானோ, அது போல நிலைமைதான் தென்னை மரத்திற்கும். அது மீண்டும் நல்ல மரமாக ஆகாத நிலை ஏற்பட்டு விடுகிறது என்பதை நாம் பார்க்கலாம். தென்னை பயிரிடுவதற்கு அதிகப்பணம் போட வேண்டும், வருடக் கணக்கில் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும். 10 வருடங்களுக்குப் பணம் கையில் வைத்துக்கொண்டு அதைப் பயிர் செய்ய வேண்டியதாக இருக்கின்றது. அதற்கு வேண்டிய பாதுகாப்பு செய்யவேண்டும். வியாதி வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆட்கள் வைத்து வேலை செய்யவேண்டும். இந்த நிலத்திற்கும் சீலிங் வைத்தால், தென்னை உற்பத்தி தான் பாதிக்கப்படும் என்பதைத் தெரிவித்துகொள்கிறேன். தென்னைக்கு இருந்த சீலிங்கை ரத்து செய்கிறார்களா, அல்லது சீலிங் எல்லாம் வருமா என்பது போல மாண்புமிகு அங்கத்தினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கேட்கிறார்கள். அவர்கள் கேட்டதால் நான் இதைச் சொல்கிறேன். அப்படி சீலிங் வருவதாக இருந்தால்கூட, அதையெல்லாம் செய்யவேண்டாமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. என். சுந்தரேசத் தேவர்] [1978 மார்ச் 2

(முற்பகல் 11-50)

அடுத்தபடியாக, பாசனம்பற்றிக் கூற விரும்புகிறேன். பாசனத்தைப் பொறுத்தவரையில், காவிரித் தாவா முடியாமல் இருக்கிறது. அதற்கு ஒரு முடிவு காண வேண்டும்

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அது யாராலே ஏற்பட்டதென்பது பிரச்சினையல்ல. இன்று அரசுக்குத்தலையாய கடமையாக இருப்பது காவிரி தாவாவில் முக்கியமான பொறுப்பு எடுத்துக் கொண்டு, ஒரு முடிவிற்கு வர வேண்டுமென்பதுதான். அப்படிப்பட்ட ஒரு முடிவிற்கு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேற்கு மலையிலே உற்பத்தியாகும் ஆறுகளின் தண்ணீரையெல்லாம் நாங்கள் பயன்படுத்தப் போகிறோம், இணக்கமான பேச்சு இருக்கிறதென்ற செய்தியைப் பார்க்கும் போது, உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்கிறது. அந்த மகிழ்ச்சியான செய்தியைச் செயல்படுத்த முடியுமானால், இராமநாதபுரம், கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை மாவட்டங்களுக்கு அது மிகுந்த உபயோகமாக இருக்கும். தஞ்சை மாவட்டம் மட்டும்தான் விவசாயம் செய்ய ஏற்றதாக இருக்கிறதென்று திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் குறை பேச முடியாதவாறு எங்கும் செழுமையாக இருக்கும் காட்சியை, இந்த அவையிலே உள்ள உறுப்பினர்கள் பார்க்க முடியும். மேற்கு மலையிலிருந்து வருகின்ற ஆற்றுத் தண்ணீரை, கேரளாவிற்குத் தேவையில்லாத தண்ணீரைப் பெறுவதில் அரசு தன் திறமையைக் காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏரிகளைத் தூர் வாரிச் சீரமைக்க 4.21 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஏரிகளைத் தூர் எடுப்பது பெரிதல்ல. அங்குள்ள ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்த வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக அரசு கூட ஏரிகளைச் செப்பனிட பெருவாரியான பணத்தைச் செலவு செய்தார்கள். இரண்டு வருடங்கள் கழித்து ஏரி பூராவும் சாகுபடியாகி இருக்கும். செலவழித்த ரூபாய் வேஸ்ட். ஏரி தூர்ந்துவிடும். இன்றைக்கு விவசாயத்திற்காக பாசன ஆதாரம் அது. கிராமங்களில் சிறிய நிலச்சுவான்தார்களும் இருக்கிறார்கள், பெரிய நிலச்சுவான்தார்களும் இருக்கிறார்கள். எந்த நிலமாக இருந்தாலும், தண்ணீர் ஏரியிலிருந்துதான் பாய வேண்டும். ஏரிகளை ஆக்கிரமிப்புச் செய்பவர்களை அந்தக் காலங்களில் சமூக விரோதிகள் என்று வைத்திருந்தார்கள். இப்போது அப்படிப்பட்ட காரியங்களைச் செய்யும்போது, அரசாங்கம் பார்த்துக்கொண்டிருக்கக்கூடாது. அதைத் தடுக்க வேண்டும்.

அடுத்து, கங்கை-காவேரி இணைப்பு என்பது முக்கியமான பிரச்சினை. தென் மாநிலங்களைப் பொறுத்தவரையில், குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்தவரையில், கங்கை-காவிரி இணைப்பென்பது முக்கியமான பிரச்சினை.



1978 மார்ச் 2] [திரு. என். சுந்தரேசத் தேவர்]

துரதிருஷ்டவசமாக இதைப்பற்றி 30 ஆண்டுகளாகப் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். யாரும் அந்தத் திட்டத்தைச் செயல்பாட்டுக்குக் கொண்டு வராத நிலைமைதான் இருக்கிறது. அதைச் செயல்பாட்டிற்குக் கொண்டுவரும் அவசியமான நிலை தமிழ் நாட்டிற்கு ஏற்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் ஜீவ நதிகள் இல்லை. கர்நாடகத்திலும், ஆந்திராவிலும், கேரளாவிலும் ஜீவ நதிகள் இருக்கிற காரணத்தால், அவர்களிடமிருந்து நாம் இரவல் வாங்கக் கூடிய தன்மை, பிச்சை எடுக்கக்கூடிய தன்மைதான் இருக்கிறது. கங்கை-காவிரி இணைப்பை வற்புறுத்திக் கூறினாலொழிய, அரசாங்கம் அந்தப் பிரச்சினையில் முயற்சி எடுத்துக்கொண்டாலொழிய, அந்தத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று புரட்சி செய்தாலொழிய, நமக்கு அந்தத் தண்ணீர் பிரச்சினை தீராது. நம்முடைய மாநிலம் மட்டும் போராட வேண்டுமென்பது இல்லை. ஆந்திரம், கர்நாடகம், கேரளம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களையும் சேர்த்துக்கொள்ளலாம். தென் பகுதியைப் பார்ப்போமானால், வறட்சியான பிரதேசங்கள் நிறைய இருக்கின்றன. மைசூரில் ஒரு பீடபூமியே இருக்கிறது. இந்தத் திட்டம் செயல்பட்டால், காவிரித் தண்ணீரை, எதுவும் தாவா இல்லாமல், பாசனத்திற்குக் கொடுக்க முடியும். எனவே, கங்கை-காவிரி இணைப்பு குறித்து, இந்த அரசு பெரு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். வருஷா வருஷம் கூட்டம் போட வேண்டும். *அரசாங்கம், அதைக் கோரிக்கையாக மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும். பொதுமக்களிடையே பறை சாற்ற வேண்டும். பிற மாநிலங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். இது ஒன்றும் பெரிய விஷயமில்லை. 2,000 கோடி ரூபாய் இருந்தால் போதும், இந்தத் திட்டத்தைப் பற்றி டாக்டர் கே. எல். ராவ் சொல்லியிருக்கிறார். முன்பு வெள்ளைக்காரன் காலத்திலேயே அதை இணைக்கும் திட்டம் இருந்திருக்கிறது. ஆதலால் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மின்சாரத்தைப் பொறுத்து, ஓரிரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த ஆண்டில் ரூ. 95 கோடியாக ஒதுக்கப்பட்டது ரூ. 114 கோடியாக அடுத்த ஆண்டிற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். மிக்க சந்தோஷம். தூத்துக்குடியில் ரூ. 141 கோடி செலவில் 210 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட இரண்டு பிரிவுகளை அமைக்க மத்திய அரசின் அனுமதி பெற்றிருப்பதற்குப் பாராட்டு. மேலும் 71 கோடி ரூபாய் முதலீட்டில் அதே உற்பத்தித் திறனுள்ள மற்றொரு பிரிவைக் கொண்டு வருகிறார்கள். அதற்கும் பாராட்டு. 630 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட மின் நிலையத்தை அமைக்கும் பொருட்டு, நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டும் பணியை மேற்கொள்ளவிருப்பது குறித்து நான் சந்தோஷப்படுகிறேன். எப்படியோ நம்முடைய மின்சார உற்பத்தியிலே தன்னிறைவு பெறும் காலம் வர வேண்டும். அதற்காக நான் என்னுடைய சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராம மின் வசதித் திட்டத்திற்காக 11.5 கோடி ரூபாய் செலவிட இருக்கிறார்கள். அது குறித்து ஒரு குறைபாட்டைக் கூற விரும்புகிறேன். நம்முடைய நண்பர் திரு. வீராசாமி அவர்கள், முந்தைய ஆட்சிக் காலத்தில் எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்பு கொடுத்ததைப்பற்றிச் சொன்னார்கள். அவர்களுடைய ஆர்வத்தைப் பாராட்டுகிறேன். எங்கும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டது; பம்புசெட்டுகளுக்கு மின்னிணைப்பு கொடுக்கப்பட்டதென்று சொன்னார்கள். ஆனால் கிராமங்களிலே டியூப் லைட்டுகள் எரிகிறதா என்றால் இல்லை. மின்சாரம் சரியாக வருவதில்லை. 230 வோல்ட்க்கு பதிலாக 180 வோல்ட், 160 வோல்ட்தான் வருகிறது என்பதை, தலைவரவர்களே, உங்கள் மூலமாக அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால் விவசாயப் பம்புசெட்டுகள் எறிந்துபோய் விடுகின்றன. அதைச் சீர்படுத்த 700, 800 ரூபாய் ஆகின்றது. அந்த நிலையைப் போக்கி, மேம்பாடு செய்ய இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராம மின்சாரத் திட்டங்களை மேம்பாடு செய்யவேண்டும்; சரியான முறையில் மின்சாரத்தைக் கொடுக்க வேண்டும்; அந்த வகையிலே கம்பிகள் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

35,000 பம்புசெட்டுகளுக்கு மின்சார இணைப்புகள் கொடுக்கப் போவதாக அரசாங்கக் குறிப்பு இருக்கிறது. 35,000 பம்புசெட்டுகள்தானா என்று அவர்கள்கூட வருத்தப்பட்டுக் கொண்டார்கள். 35,000 பம்பு செட்டுகளுக்கு இணைப்பு கொடுத்தால், நிச்சயமாக விவசாய உற்பத்தியிலே வளர்ச்சியைக் காண முடியாது. விவசாயத்திற்கு முன்னுரிமை கொடுத்து, கேட்கும் இடங்களிலெல்லாம் மின் இணைப்பு கொடுக்க வேண்டும். இல்லையென்றால், விவசாயத் துறையிலே முன்னேற்றம் காண முடியாதென்று கூறிக்கொண்டு, மின் இணைப்பை நிறைய தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(தலைவர் மணி அடித்தார்)

நேரம் அதிகமாகிவிட்டதால், தலைவரவர்கள் மணி அடிக்கிறார்கள். ஓரிரு நிமிடங்களில் முடித்துக்கொள்கிறேன்.

நகர, கிராம மேம்பாடு என்பது இன்றைக்கு மட்டும் இல்லை. நகரங்கள் வாழ்வதும், கிராமங்கள் தேய்வதும் எப்போதும் இருக்கிறது. நகரங்கள் மேம்பாடு நாளுக்கு நாள் மேலே போகிறது. குட்டக் குட்ட குனிகிறவனும் மடையன்; குட்டுகிறவனும் மடையன். கிராமங்களில் உள்ளவர்கள் சட்டையில்லாமல் இருக்க வேண்டுமென்று அரசாங்கம் ஆசைப்படுகிறதோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. அரசாங்கம் இப்படிச் செய்துகொண்டே போகிறது. நகரங்களில் எங்கே பார்த்தாலும் கார்கள். வைத்தியசாலைக்கு மேலே வைத்தியசாலை இருக்கிறது. கட்டிடங்களைப் பார்த்தால், மாடிக்கு மேலே



மாடி இருக்கிறது. டாக்டர்கள் நிறைய இருக்கிறார்கள். சிமெண்ட் ரோடுகள் இருக்கின்றன. தார் ரோடுக்கு மேலே சிமெண்ட் ரோடுகளைப் புதிதாகப் போடுகிறார்கள். அளவுக்கு அதிகமான குடிநீர்த் திட்டங்கள் இருக்கின்றன. ஆனால் கிராமங்களிலே ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறதா? அரசாங்கம் வீட்டு வசதி வாரியம் வைத்திருக்கிறார்கள். அவர்கள் நகரங்களில் குடிசைகளை மாற்றி வீடுகளாகக் கட்டித் தருகிறார்கள். சென்ற ஆட்சியில் குடிசைகளை மாற்றினோமென்று சொன்னார்கள். குடியிருக்க முடியாத இடங்களில் கட்டுகிறார்கள். கட்டிய இடங்கள் எத்தனையோ காலியாக இருக்கின்றன. ஏன் அப்படிக் கட்டுகிறார்கள்? அது தேசிய நஷ்டமில்லையா? குடியில்லாத இடத்தில் வீடுகளைக் கட்டி தேசிய நஷ்டத்தை உண்டாக்க வேண்டுமா? ஏழைத் தொழிலாளி தான் வாழ்க்கை நடத்த, தன் குடும்பம் கஞ்சி குடிக்க வழி பார்க்கிறான். எங்கேயிருந்தால் கஞ்சி கிடைக்குமென்று நினைக்கிறானோ அங்கே அவனுக்கு வீட்டைக் கட்டிக் கொடுக்கவில்லை. சுடுகாட்டில் கட்டுகிறார்கள். ஒருத்தனும் அங்கே போய் இருப்பதில்லை. அதைப் பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டும். இப்போது ஹரிஜன, பின் தங்கிய மக்களுக்கான குடியிருப்புக் கட்டிடங்கள் கட்ட இருக்கின்றன. அவைகளிலே எத்தனை இடங்கள் கட்டினால் நல்லது என்பதைப் பரிசீலிக்க வேண்டும். முன்மாதிரி மீண்டும் செய்தால் மீண்டும் அரசாங்கம் தவறு செய்கிறது என்...தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(நண்பகல் 12-00)

ஆகையினால் குடியிருக்கக்கூடிய இடங்களில் பட்டா கொடுக்கலாம் என்று சொல்லுகிறார்கள். ஏற்கெனவே 3 செண்ட் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே கூட நிலச் சொந்தக்காரர்களுக்கும், குடியிருப்பவர்களுக்கும் ஒப்பந்தம் ஏற்படுகிறது. மூவாயிரம் ரூபாய்க்குக் கட்டிடம் கட்டினால், ஒரு 1,500 ரூபாயைக் கொடுத்து அரசும் நிலச்சுவானும் கூட்டு ஒப்பந்தம் செய்து கட்டிக் கொடுக்கலாம்.

புயல் காற்றினால் விழுந்துவிட்ட குடிசைகளுக்குப் பதில் குடிசை கட்டிக் கொடுத்தார்கள். அரசாங்கத்திலும் கட்டிக் கொடுத்தார்கள். வேறு பல்வேறு நிறுவனங்களும் கட்டிக் கொடுத்தார்கள். அதற்காக பல இலட்சம் ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். ஆனால் யாரும் அந்த இடங்களில் குடியிருக்கப் போவதில்லை. இதெல்லாம் தேசிய நஷ்டம் என்று குறிப்பிட விரும்புகிறேன். குடியிருக்கக் கூடியவர்களுடைய அனுமதியைப் பெற்று, அவர்கள் அங்கே குடியிருக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறதா என்று தெரிந்து, இப்படி வீடுகளைக் கட்ட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

குடி நீர் வாரியமும், குடிசை மாற்று வாரியமும் எதிரியைப் போலவே எனக்குக் காட்சியளிக்கின்றன. இதையெல்லாம் அரசாங்கமே ஏன் வைத்திருக்கிறது என்று புரியவில்லை. இதையெல்லாம் பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களிடமே ஒப்படைத்தால், அவர்கள் எந்த இடத்தில் வீடு கட்ட வேண்டும், எந்த இடத்தில் நீருக்கான தொட்டியைக் கட்ட வேண்டுமென்று தெரிந்து செய்வார்கள். உதாரணமாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். குடி நீர் வாரியத்தில் மேல்நிலைத் தொட்டிகளைக் கட்டியிருக்கிறார்கள். ஏறத்தாழ இரண்டு இலட்சம் ரூபாய் செலவு செய்து, நான்கு குடிநீர் தொட்டிகளைக் கட்டுகிறார்கள். ஆனால் அந்தத் தொட்டியிலிருந்து உப்பு நீர்தான் வருகிறது. உப்பு நீர் வர தண்ணீர் தொட்டியா? நிச்சயமாகச் 'சேலஞ்ச்' பண்ணி சொல்லுகிறேன், கிராமங்களுடைய வாழ்க்கை மேம்பாடு அடைய ஒன்றும் செய்யவில்லையென்று. ஆகவேதான் இந்தக் குடிநீர் வாரியப் பொறுப்பைப் பஞ்சாயத்துக்களிடம் கொடுத்தால், கிராமத்தில் இருக்கக் கூடிய நிலையைப் பார்த்து அவர்கள் தகுந்த இடத்தில் தொட்டியைக் கட்டுவார்கள். இதை அரசாங்கமே பண்ணவேண்டியதில்லை. ஆகவே உள்ளாட்சித் துறைக்குக் குடிநீர் வாரியத்தை மாற்றலாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, குடிநீர் வாரியத்தில் உப்பு நீருக்காகத் தொட்டி கட்டப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். எந்த நீராக இருந்தாலும், பரிசோதனை செய்த பிறகுதான் தொட்டி கட்ட திட்டமிடப்படுகிறது. உப்புத் தண்ணீராக இருந்தால், அதை இலாக்காவினரே நிராகரித்து விடுகிறார்கள். அப்படியிருக்கும்போது, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவது முறைதானா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. வீராசாமி அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளுகிறேன், என்னுடைய வட்டாரத்தில் உப்பு நீர் இருக்கிறது என்று, வேண்டுமானால் கொண்டு வந்து காண்பிக்கிறேன். இது 1972-73-ல் கட்டப்பட்டது. நான் யாரையும் குற்றம் சாட்டுவதற்காக இதைக் குறிப்பிடவில்லை. இப்படிப்பட்ட தவறுகள் நடக்கின்றன. அப்படிப்பட்ட தவறுகளை, திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கமாக இருந்தாலும், காங்கிரஸ் அரசாங்கமாக இருந்தாலும், அவற்றை நிவர்த்தி பண்ண வேண்டுமென்றுதான் நான் சொல்லுகிறேன்.

அடுத்து, கிராம மேம்பாடு, நகர மேம்பாடு என்பதைக் குறித்துச் சொல்ல விரும்புகிறேன், கிராமத்திற்கு 7.9 கோடி ரூபாய், குடிநீருக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். மூன்றரை கோடி மக்கள் வாழக்கூடிய கிராம மக்களுக்கு இந்த அரசாங்கம் ஒதுக்கியிருக்கக்கூடிய தொகை 7.9 கோடி ரூபாய்தான். ஒரு உதாரணத்திற்காகச் சொல்லுகிறேன், நகரத்திற்குச் செய்ய வேண்டாமென்று சொல்லவில்லை. சாதாரணமாக 45 இலட்சம் மக்கள் வாழக்கூடிய சென்னை



நகர மக்களுக்காக தண்ணீர் கொண்டு வர, வீராணம் திட்டத்திற்காக 22 கோடி ரூபாய் செலவு ஆகியிருக்கிறது. இன்னும் அது தீர்ந்தபாடில்லை. மேலும் ஒரு 50 கோடி ரூபாய் ஆகுமோ என்னவோ தெரியவில்லை. பிறகு இன்றைக்குக் கிருஷ்ணா நீரைக் கொண்டுவர ரூபாய் 70 கோடி ஆகலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் தொகை இன்னும் இரண்டு வருஷத்திற்குள் 200 கோடி ரூபாயாக ஆனாலும் ஆகும். இந்த அளவுக்கு இதிலே வித்தியாசம் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இன்னும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேச வேண்டும்.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** இன்னும் 5 நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** துணைத் தலைவர் அவர்களே, நான் காலையிலேயே கேட்டேன், நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலை இன்று சொல்லுகிறார்களா, அல்லது நாளை சொல்லுகிறார்களா என்று.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இப்போது இல்லை. பிற்பகல் மூன்று மணிக்கு மேல் அவை கூடும். அப்போது பதில் அளிப்பார்கள்.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** துணைத் தலைவர் அவர்களே, அடுத்து பால் பண்ணையைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். ஸ்ரீரங்கத்திலே, திருச்சியிலே, சென்னையிலே, மதுரையிலே பால் பண்ணைகள் இருக்கின்றன. ஆனால் கிராமங்களிலே எங்கே பால் பண்ணைகள் இருக்கின்றன? வசதியுள்ளவர்கள் மாடுகளை வைத்துத் தங்களுக்குத் தேவையான பாலைக் கறந்துகொள்ளுகிறார்கள். கிராமங்களிலுள்ள மற்றவர்களுக்கு என்ன வசதியிருக்கிறது? அவர்கள் வீட்டில் விருந்தாளிகள் வந்தால், காபி போடக் கூட பால் இல்லை. டீக்கடையில்தான் வாங்க வேண்டும். டீக்கடையில் என்னென்னவோ கலப்படம் செய்து விற்கிறார்கள். இதனால் சிக்னஸ் வருகிறது. சிக்னஸ் வந்தால், கவனித்துக்கொள்ளுவதற்குக் கூட அங்கே ஆஸ்பத்திரிகள் இல்லை. ஆகவே இதையெல்லாம் அரசு கவனிக்க வேண்டும். ஆகவே கிராமங்களில் கூட்டுப் பண்ணையை வைக்க வேண்டும். அவர்களுக்கு லம்ப்-சம் மானியம் கொடுங்கள். நிலம் கொடுத்து சைட்-ஹெல்ப் பண்ணுங்கள். ஆகவே இதையெல்லாம் அரசாங்கமே நேரிடையாகச் செய்ய வேண்டுமென்பதல்ல. பொது நோக்குடைய மற்றவர்களுக்கும் அரசாங்கம் ஊக்கம் கொடுக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, விசைப் படகுகாரர்களுக்கும், நாட்டுப் படகுக்காரர்களுக்கும் இடையே தகராறுகள் இருக்கின்றன. அந்தத் தரோறுகள் தீர்ந்துவிடுமென்று நினைத்தேன். இந்தப் பிரச்சினைகள் தீரவில்லை. இந்தத் தகராறுகளின் காரணமாக பல கொலைகள் நடக்கின்றன. நம்முடைய கடல்களிலே அந்த அளவுக்கு மீன் வளம் இருப்பதுதான் காரணம். விசைப் படகு உடையவர்கள் மீன்களையெல்லாம் பிடித்துவிடுகிறார்கள். அவர்கள் ஒவ்வொரு நாளும், ஐநூறு, ஆயிரம், இரண்டாயிரம் என்று சம்பாதிக்கிறார்கள். விசைப் படகை வாங்கியவர்கள் எல்லாம் ஒரு சில நாட்களுக்குள்ளாகவே விதவிதமான சட்டைகளைப் போட்டுக்கொண்டு உல்லாசமாக இருக்கிறார்கள். இதை யெல்லாம் பார்க்கிற நாட்டுப் படகுக்காரர்கள் பொறாமையினால் சண்டை யிடுகிறார்கள். ஆகவே இதை அரசு கவனிக்க வேண்டும். இதற்கு ஒரு சர்வே செய்து இவ்வளவு தூரத்திற்குத்தான் நாட்டுப் படகுகள் செல்ல வேண்டும், இவ்வளவு தூரத்திறகு அப்பால்தான் விசைப்படகுகள் மீன் பிடிக்க வேண்டு மென்று வைக்க வேண்டும். இது சரியாக நடக்கிறதா என்று ஸ்டீம் லான்ச் மூலம் போலீஸ் காவல் போட்டு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதைச் சரிகட்ட விசைப்படகுக்காரர்களிடம் வசூல் செய்து கொள்ளலாம்.

அடுத்து, மதுவிலக்கிலே இந்த அரசாங்கம் சரியாக கவனம் செலுத்தவில்லை. நமது பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய்தான் இதற்காக உயிரை விடுகிறார்கள். எங்கே பார்த்தாலும், இப்போது கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்கள். இதிலே போலீஸ் தரப்பிலே ஒன்றும் செய்வதில்லை. ஆகவே இதையும் அரசு கவனிக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அறநிலையத் துறையிலே டிரஸ்டிகள் இல்லை. கூட்டுறவுத் துறையிலே தேர்தல் இல்லை. உள்ளாட்சித் துறையிலே தேர்தல்கள் இல்லை.

**திரு. ஜார்ஜ் கோமகன் :** கொள்கைக்காக பிரதமர் அவர்கள் உயிரை விடுகிறாரா ? அல்லது எதற்காக என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஏன் சந்தேகம் உங்களுக்கு அதில் வந்தது ?

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** நிச்சயமாக மதுவிலக்கிலே உயர்ந்த எண்ணத்தை நமது பிரதமர் திரு. மொரார்ஜி அவர்கள் கொண்டிருக்கிறார் என்பதிலே எனக்கு எந்தவிதக் கருத்து வேறுபாடும் இல்லை. நான் சொன்ன அந்த மூன்று துறைகளிலும் அரசாங்க அதிகாரிகள் பல தவறான கணக்கு களைக் கொடுக்கிறார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன். வெளியே இருக்கும் போது, எல்லோரும் இதைச் சொல்லுகிறார்கள். ஆனால் அரசாங்கத்திலே வந்த





பிறகு, அவர்களும் அந்த அதிகாரிகள் சொல்லுவதையே ஏற்றுக்கொள்ளு கிறார்கள். அந்த அதிகாரிகள், யூனியனு, அதிலே நான்-ஆபிஷியல் ஊழல் செய்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். கூட்டுறவுத் துறையா, அதிலும் ஊழல் செய்கிறார்கள், டிரஸ்டி நியமனமா, அதிலும் கோயிலில் கொள்ளையடிக்கிறார்கள் என்... சொல்லுகிறார்கள். ஆனால் இன்றைக்கு மட்டும் என்ன நடக்கிறது ? நிறைய திருட்டு நடக்கிறது. கோயில்களிலே உள்ள எல்லாவற்றையும் சாப்பிட்டுவிட்டார்கள். அதிகாரிகளும் தேங்காய், பால் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். டிரஸ்டிகள் கொள்ளையடிக்கிறார்கள் என்று சொல்லுகிறார்களே, எக்சிகியூட்டிவ் ஆபீசர்கள் மட்டும் புண்ணியவான்களா என்ன ? அவர்கள் மட்டும் புண்ணியவான்கள் என்று கருதினால், அது தவறானது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே உடனடியாக கோயில்களுக்கு டிரஸ்டிகளை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். டிரஸ்டிகளை நியமனம் செய்யுங்கள். பிறகு அவர்கள் சரியாகச் செய்கிறார்களா என்று ஆய்வு செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. எஸ். முத்து :** கோயில்களில் திருடு போகிறது என்றால், அந்தக் கோயில்களே வேண்டாமே.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்து அவர்கள் ஒரு நிலையைச் சொன்னார்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** அதே அடிப்படையிலே கூட்டுறவுத் துறையும், பஞ்சாயத்தும் தேவையில்லை என்று சொல்லலாமா ?

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** நான் காந்திய வழியில் வந்தவன். ஆகவே பஞ்சாயத்துக்கள் வேண்டும், அதைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று சொல்லுகிறேன். ஊழல் இருக்குமானால், அதை சீர்திருத்தம் செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன். "ஜனநாயகத்திலே, எவ்வளவுக்கெவ்வளவு கீழே அதிகாரத்தைத் தள்ளுகிறோமோ அந்த அளவுக்கு மேல்மட்டத்திலேயும் உள்ளவர்களுக்குப் பயம் இருக்கும். அதிகாரம் ஒரே இடத்திலே இருந்தால், எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற துணிவு ஏற்படும்" என்று காந்தி யடிகள் மிகவும் அழகாகச் சொன்னார்கள். ஆகவே கீழ்மட்டத்திலே இருப்பவர்களுக்கு அதிகாரங்களை மாற்ற வேண்டுமென்று சொல்லுகிறேன். அறநிலையத் துறையை மேம்படுத்த இந்த அரசாங்கம் கொஞ்சம் வழிவகையைக் காணவேண்டும். கடந்த பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளாக அறநிலையத் துறையை மிகவும் மோசமாக ஆக்கிவிட்டார்கள். கோயில்களை நடக்க முடியாத அளவுக்குக் கேவலமாக ஆகிவிட்டது. இந்த நிலையை அரசாங்கம்

கட்டுப்பாடு களைந்து மேம்பாடு செய்ய வேண்டும். ஐகோர்ட் ஜட்ஜுகள்கூட சமயப் பிரச்சாரங்கள் செய்கிறார்கள். ஆகவே இதற்காக நம்முடைய சங்கராச்சாரியார் சுவாமிகளைத் தலைவராகப் போட்டு . . .

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** துணைத் தலைவர் அவர்களே, கோயில்கள் கடந்த பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளாக மிகவும் மோசமாக இருக்கின்றன என்று சொன்னார். கவர்னர் ஆட்சியிலும் சீர்கெட்டு இருந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** அந்த நேரத்தில் கவர்னர் அவர்கள் சீர்கேடுகளையெல்லாம் பார்த்து கண்டு பிடித்து ஆட்சியை நீக்கினார்கள். அதற்குப் பிறகு வேறு அரசாங்கம் வந்ததால் கவர்னரே நீங்கி விட்டார். ஆகையால் ஹைகோர்ட் ஜட்ஜ்களைப் போன்றவர்கள், தங்களைப் போன்றவர்கள், இன்னும் கி. வா. ஜ. போன்றவர்கள் பலர் சமயப் பிரசாரத்தைத் திருப்திகரமாகத் தமிழகத்தில் செய்து வருகிறார்கள். மக்கள் அவர்களைப் போற்றுகிறார்கள். அவர்கள் பண்போடு வாழ்கிறார்கள்.

**திரு. க. அறிவழகன் :** தலைவர் அவர்கள் சமயப் பிரசாரம் செய்கிறார்கள் என்று கூறுவதை மறுக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அதில் மறுப்பதற்கு ஒன்றுமில்லை.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** அது விஷயத்தில் அரசாங்கம் ஆராய்ந்து உயர்ந்த கமிட்டியைப் போட்டு முக்கியமான சமயப் பிரசாரகர்களையும் அரசாங்க அதிகாரிகளையும் போட்டு ஆய்வு செய்து, சமய நிறுவனங்கள் எப்படிக் காப்பாற்றப்படலாம் என்பதை யோசிக்க வேண்டும். திரு. காமராஜ் அவர்கள் காலத்தில் 1962-63-ல் ஒரு யோசனையைச் சொன்னார்கள். சமய அற நிலையங்களுக்கு நிலங்கள் வேண்டாமென்றும், அதற்கு உடன்பாட்டுக்கு வர வேண்டுமென்றும் கேட்டார்கள். யாரும் வரவில்லை. நிலங்கள் இருப்பது தொந்தரவாக இருக்கிறது. அவற்றை எடுப்பது என்றாலும், எப்படி எடுப்பது என்பதையும், சமயத் துறையை எப்படி மேம்படுத்தலாம் என்பதையும் ஒரு கமிட்டி போட்டு சட்ட பூர்வமாக அரசாங்கம் டிக்ளர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை சர்வகலாசாலையில் ஆனை வேந்தரை இன்னும் ஏன் போடவில்லை என்று உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் கேட்டார்கள். போடாமலிருப்பது மாபுக்கு நன்றாக இல்லை. அதைக் கவனிக்க வேண்டும். இந்த அரசாங்கத்தை ஒரு விஷயத்தில் பாராட்ட வேண்டும். இதற்கு முன்பு [illegible] நன்கொடை வசூலிக்க எந்த அதிகாரி வருவார்,





எவ்வளவு ரூபாய் கேட்பார் என்று மக்கள் பயந்து கொண்டிருந்தார்கள். சமீபத்தில் முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் புதுக்கோட்டைக்கு வந்திருந்தபோது, அங்குள்ள கலெக்டர் இத்தனை லட்சம் ரூபாய் வசூல் செய்திருக்கிறேன் என்று சொன்னதும், அங்கேயே பகிரங்கமாக முதலமைச்சர் அவர்கள் அவற்றைத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள் என்று சொன்னார்கள். அதைப் பாராட்ட வேண்டும். முன்பெல்லாம் சேல்ஸ் டாக்ஸ் ஆபீசர், இன்கம் டாக்ஸ் ஆபீசர், ஆர். டி. ஓ. இவர்கள் எல்லாம் பஸ்காரர்களையும் வியாபாரிகளையும் கெடுபிடி செய்து வசூலிப்பார்கள். பத்து லட்சம் ரூபாய் வசூல் செய்தால், இரண்டு மூன்று லட்சத்தை அரசிடம் கொடுப்பார்கள். மற்றதை 'சுவாகா' செய்துவிடுவார்கள். அந்த நிலைமைகள் இப்போது இல்லாதது பாராட்ட வேண்டிய அம்சமாகும். இந்த நட்சத்திர விழாவைப்பற்றிப் பரவலாகப் பேசப்படுகிறது. தயவு செய்து அமைச்சர்கள் அதில் கலந்து கொள்ளாமலிருந்தால், எந்த அவப்பெயரும் எடுக்காமல் இருக்கலாம்.

கவர்னரைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். கவர்னர் என்பவர் அரசியல் ஞானத்திற்கு அப்பாற்பட்டவர், அரசியலுக்கு அப்பாற்பட்டவர் என்று மரபு வைத்திருக்கிறோம். அவரைப்பற்றிச் சபையில் பேசக் கூடாது என்றும் மரபு வைத்திருக்கிறோம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் அரசியல் ஞானத்திற்கு அப்பாற்பட்டவர் என்று உறுப்பினர் சொன்னார்கள். அப்படி என்றால் . . .

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டவர் என்ற முறையில் தான் சொன்னேன். ஒரு செய்தியைப் பத்திரிகையில் பார்த்தேன் ராஜ்பவனில் நடந்ததாக வந்திருந்தது. அரசியல் கட்சியைச் சார்ந்த மதிப்பிற்குரிய ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களுக்கு குழு ஒன்று போட்டு ராஜ்பவனத்தில் வைத்து வசூல் செய்ததாகப் பார்த்தேன். அது மரபிற்குச் சங்கடமாக இருக்கிறது. கவர்னர் இது போன்ற வேலையில் ஈடுபட வேண்டாமென்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜார்ஜ் கோமகன் :** துணைத் தலைவர் அவர்களே, திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் அரசியல் கட்சியைச் சார்ந்தவர் அல்ல. சர்வோதயத் தலைவர்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** பெரிய அரசியல் இயக்கத்தை நடத்தி எங்களை அதள பாதாளத்திற்கு அனுப்பவேண்டுமென்ற புரட்சிக்குத் தலைமை வகித்தது ஜெயப்பிரகாஷ் நாராயணனைத்தான் சாரும். (சிரிப்பு).

* **திரு. ஆர். சக்திமோகன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1978-79 ஆம் ஆண்டிற்கான . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவைக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்று காலையிலே எதிர்க் கட்சித் தலைவர் பேச்சு முடிய வேண்டும். எல்லோரும் இன்றைக்குத்தான் பேசுவதற்குப் பெயர் தருகிறார்கள். நான் முன்பு அமைத்தபோது, யாரும் வரவில்லை. ஆகையால் பேசுகிறவர்கள் சுருக்கமாக ஆளுக்குப் பத்து நிமிஷங்கள் எடுத்துக்கொண்டு பேசி முடிக்க வேண்டும்.

**திரு. ஆர். சக்திமோகன் :** 1978-79 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது எனது கட்சி சார்பில் சிலவற்றைக் கூற முற்படுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கை இந்த அரசாங்கத்தின் இரண்டாவது அறிக்கையாகும். நீண்டதொரு விமர்சனத்திற்கு இடம் வைக்காமல் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தொடுவாயிலிலேயே கடந்த மூன்று நான்கு மாதங்களுக்கு முன்பு நாட்டில் ஏற்பட்ட இயற்கையின் கொந்தளிப்பால் உண்டான அழிவுகளை மனதில் கொண்டு இந்த அறிக்கையைத் தயாரித்திருக்கிறார்கள். ஆகவே எல்லாமே இந்த அறிக்கையில் அடங்கிவிட்டதாகக் கூறி ஏமாற்றிக்கொள்ள விரும்பவில்லை. என்றாலும், கழனிகளில், பஞ்சாலைகளில் காடுகளில் அரும்பாடுபட்டு வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிற பாட்டாளிகள் பல கோடி மக்களுக்காக உழைக்கிற ஏழை விவசாயிகள் ஆகியோரின் நிலையை மனதில் கொண்டு, இந்த அறிக்கையைத் தயாரித்திருக்கிறோம் என்று கூறிய பிறகு, இதில் விமர்சனம் தேவையில்லை என்று கருதுகிறேன். குறிப்பாக இந்த பட்ஜெட் ஏழைகளைப்பற்றியும், ஏழை விவசாயிகளைப்பற்றியும், பாட்டாளிகளைப் பற்றியும், கிராம மேம்பாடுகளைப் பற்றியுமே கூறிக்கொண்டு செல்வதால், இது உண்மையிலேயே ஏழைகளுடைய வாழ்க்கையை மையமாகக் கொண்ட ஏழைகளின் பட்ஜெட் என்று கூறிக்கொள்கிறேன். அந்த வகையில் பாராட்டுகிறேன். நம் நாட்டில் மொத்தம் ஏழு லட்சம் கிராமங்கள் இருப்பதாகக் கணக்கு. 700 அல்லது 800 சிறிய நகரங்கள் இருக்கலாம். இதில் ஒரு சில கோடி மக்கள் வாழ்கிறார்கள். அவர்களை வாழவைப்பதற்காக ஏழு லட்சம் கிராமங்களில் பல கோடி மக்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். சுதந்திரம் பெறுவதற்கு முன்பும் அதற்குப் பிறகும் கிராமங்கள் மேம்பட வேண்டும் என்று பேசப்பட்டு வருகிறதே தவிர, அதற்கான திட்டங்கள் சரிவரச் செயல்படுத்தப்படவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் அமைந்துள்ள புதிய அரசாங்கம் எந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்றாலும், கிராம மக்களைப்பற்றி, ஏழை விவசாயிகளைப்பற்றி அவர்களின் மேம்பாடுகளைப்பற்றி என்ன செய்யலாம் என்று எண்ணமிட்டே செயல்பட வேண்டுமென்ற லட்சியத்தின் முதல் அடையாளமாக இந்த பட்ஜெட்டைத் தந்திருக்கிறது. என்னுடைய கட்சியின் சார்பில் அதற்குப் பாராட்டுத் தெரிவித்துக்கொண்டு, இதற்கு மேல் விரிவாக





விமர்சிக்க வேண்டாமென்று கருதுகிறேன். வரவுக்கும்-செலவுக்கும் போக ரூ. 34 கோடி துண்டு விழுவதில் ரூ. 10 கோடிக்கு வரி போட்டிருக்கிறார்கள். 10 கோடிக்குக் கூட வரி போடாமல் ஒரு பட்ஜெட் தயாரிக்க முடியாது. இன்றைக்கு மேலாதிக்க நிலையில் உள்ள மத்திய அரசாங்கத்தையும் அதிகப் பற்றுக்குறையில் இருக்கிற மாநில அரசுகளையும் ஆராயும்போது இதைவிட சிறப்பான ஒரு பட்ஜெட்டை எந்தப் பொருளாதார நிபுணராலும் தயாரிக்க முடியாது. மாநிலத்தில் சில வரிகளைக் குறைத்தார்கள். மத்தியில் அதைக் கூட்டிவிட்டார்கள். மத்திய சர்க்காரைப்பற்றி இங்கே விமர்சிக்க முடியாது. பட்ஜெட் என்றால், வரி போட்டுத்தான் ஆகவேண்டியிருக்கிறது. போடா விட்டால், விளம்பரத்திற்காகப் போடாமல் விட்டுவிட்டார்கள் என்பார்கள். இந்த பட்ஜெட்டில் பத்து கோடி ரூபாய்க்கு வரி போட்டு அது ஏழைகளைப் பாதிக்காத அளவுக்கு விளக்கமாகத் தயாரித்திருக்கிறார்கள். குறிப்பாக நான் பாராட்டிப் போற்றுவது, இதுவரையில் இல்லாத அளவுக்கு இராணுவ முகாம்கள் ஏற்பாடு செய்து, நம் நாட்டு வீரத்தைப் பிரபலப்படுத்தும் அளவுக்கு சிறப்புச் செய்திருக்கிறார் முதலமைச்சர் அவர்கள். நேற்று நடந்த ஆரம்ப விழாவில் ஏறக்குறைய ஒரு லட்சம் மக்கள் அதைப் பார்த்திருக்கிறார்கள். ஏராளமானவர்கள் நான், நீ என்று இராணுவத்தில் சேருவதற்காக வந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். இது நாம் காணும் புதுக் காட்சி. முன்பு போலீஸ் ஸ்டேஷனில் போலீஸ் வேலைக்கு ஆள் எடுக்கிறார்கள் என்றால் தான் வருவார்கள். ராணுவத்திற்குத் தேவையென்றால், யாரும் வர மாட்டார்கள். இன்றைக்கு இராணுவத்திற்கு ஆள் தேவை என்று அழைத்த உடனே, பல்லாயிரக் கணக்கான மக்கள் முன் வந்திருக்கிறார்கள் என்றால், மக்களிடையே மனமாற்றம் ஏற்பட்டு நாடு காக்கும் பொறுப்பேற்க மக்கள் முன்வந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

(பிற்பகல் 12-20)

கிராமப்புறங்களில் மருத்துவ மனை இல்லை என்ற புகார் இருப்பதால், அதற்கு மாற்று ஏற்பாடாக நடமாடும் மருத்துவ மனைகளை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். கிராமப்புறங்களில் பள்ளி வசதிகள் சரிவர இல்லாததால்—இருந்தாலும் அதில் ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால், பிள்ளைகள் பள்ளிக்குச் சென்றாலும், பெயரைக் கொடுத்துவிட்டு வெளியே செல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்நிலை மாற வேண்டும். இப்போது அந்த நிலையை மாற்றி, கிராமப்பகுதிகளில் நடமாடும் மருத்துவ மனைகள் என்று ஏற்படுத்தியிருப்பது வரவேற்கத் தக்கதாகும். இப்போது கிராமப்பகுதிகளில் டாக்டர்களே இல்லாத நிலையை இது மாற்றக்கூடியதாக அமைந்திருக்கிறது. ஆண்டுதோறும் ஒரு ஆயிரம் டாக்டர்கள் பட்டம் பெற்று வருகின்றார்கள். ஆனால் அவர்கள் கிராமப்புறங்களுக்குச் சென்று மருத்துவம் செய்ய 'வசதியின்மை காரணமாகப்

பயப்படுகின்றார்கள். தங்களுக்குப் போதிய வருமானம் இல்லாது போய்விடுமே என்றும் அஞ்சுகிறார்கள். நான் சொல்ல விரும்புவது, மாணவர்களுக்குக் கட்டாயப் படுத்தியாவது, பட்டம் கொடுக்கும்போதே இப்படி ஒரு நிர்பந்தத்தை ஏற்படுத்தி அவர்கள் கிராமப்பகுதிகளில் இரண்டொரு வருஷம் மருத்துவம் பார்க்க வேண்டும் என்ற நிலையை உருவாக்க வேண்டும். ஜனநாயகம் என்று இருப்பதால் எவரையும் கட்டாயப்படுத்த இயலாது எனக் கருதாமல் மக்களின் அவசியத் தேவை என்ற அடிப்படையில் ஜனநாயகத்திற்கும் ஒரு எல்லை, 'ஸீலிங்' வைத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்து, மதுரையில் தமிழிசைக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்துவது என்பது வரவேற்கத் தக்கதாகும். மேலும் கம்பர், வள்ளலார் போன்ற தமிழினச் சான்றோர்களுக்கு நினைவுச் சின்னமாய், சென்னையில் தமிழ்ப் பண்பாட்டு மைய நிலையம் ஏற்படுத்த இருப்பது பற்றியும் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். வள்ளலார் அவர்களைப்பற்றிச் சொன்னால், அவர் தமிழகத்தின் கார்ல் மார்க்ஸ் என்று சொல்லலாம். அந்த அளவிற்கு பக்குவப்பட்ட பொதுவுடைமைவாதி அவர். கார்ல் மார்க்ஸ் அவர்களுக்கு முன்பே பொதுவுடைமைத் தத்துவத்தை அறிமுகப்படுத்தியவர் அவர்தான். சமரசம் வேண்டும், சன்மார்க்கம் வேண்டும், இரண்டும் சமாதான சன்மார்க்க முறையில் வளர வேண்டும் என்று சொன்னவர் முதன்முதலாக வள்ளலார் அவர்கள்தான். அவரது கருத்துக்களெல்லாம் சாதாரணமானவை அல்ல. அவருக்கு ஏதோ ஒரு விழா எடுப்பதன் மூலமாகவோ அல்லது அவரது கருத்துக்கள் பற்றி பொருட்காட்சி ஒன்றை நடத்திவிடுவதோடு நின்றுவிடாமல், அப்பெருமகனுடைய கருத்துக்கள் அடங்கிய புத்தகங்கள் வெளியிடப்பட்டு, அவை மக்களிடம் தாராளமாகக் கொடுக்கப்பட வேண்டும். ஆகவே அதற்கான ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, நாட்டிலுள்ள பத்திரிகைகளுக்கான காகிதம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை பற்றி இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சுதந்திரம் பெற்று 30 ஆண்டு காலத்துக்குமேல் ஆகிறது. இன்னும் நாம் நமது பத்திரிகைகளுக்கு வேண்டிய 'நியூஸ் பிரிண்ட்' என்று சொல்லப்படும் அந்தக் காகிதத்தை சுவிட்ஸர்லாந்து, பின்லாந்து, நார்வே ஆகிய நாடுகளிலிருந்து தருவித்துக்கொண்டுள்ள சூழ்நிலைதான் இருக்கிறது. இதை நாமே தயாரித்துக் கொள்ள வேண்டும் என்று 'நேபா' என்ற ஒரு தொழிற்சாலையை மத்திய அரசு ஆரம்பித்து இரண்டாண்டுகளுக்குப் பிறகு முக்கியமான மெஷின் பகுதி உடைந்துவிட்டது என்று அந்த நிறுவனம் உற்பத்தியை நிறுத்திவிட்டது. இப்போது ஆண்டுதோறும் பல கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள அந்நியச் செலாவணியை இந்தக் காகிதத்தைத் தருவிப்பதில் செலவிட்டுக் கொண்டிருக்கிறோம். எனவே இந்தக் காகிதத் தொழிற்சாலையை மீண்டும்



நமது நாட்டிலேயே ஏற்படுத்த வேண்டும், அதையும் குறிப்பாக மதுரை மாவட்டத்தில் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, அறங்காவலர் குழுக்களை உடனடியாக அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதை விரைவாகச் செய்ய வேண்டும். குறிப்பாக எந்தத் தவற்றையும் செய்யாதவர்கள், தெய்வ பக்தி உள்ளவர்கள் இதிலே உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டு, அறநிலையங்கள் செம்மையாகச் செயல்பட, வேண்டியவற்றைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட அண்மையில் மதுரை வந்திருந்த போது, கோவில்களில் உள்ள பிரசாதங்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படுவது பற்றிக் குறிப்பிட்டு தமது வருத்தத்தைத் தெரிவித்தார். கோவில் பிரசாதங்கள் என்பது கோவிலிலேயே தயாரிக்கப்பட்டு, கோவில்களிலேயே விற்கப்பட வேண்டும் என்பது போய், அது ஏலத்தில் விடப்பட்டு சில வியாபாரிகளால் வெளியே விற்கப்படுவது குறித்து அவர் வருந்தினார். கோவில் பிரசாதங்களை அங்கேயே தயாரிப்பதன் காரணமாக மேலும் ஒரு 10 அல்லது 100 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவும் வழியிருக்கிறது.

அடுத்து, மதுரை நகரில் அரசு சார்பில் மேலும் பெண்களுக்கான ஒரு கல்லூரி ஒன்றைத் தொடங்க வேண்டும் என்று வற்புறுத்திச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்த கல்வி ஆண்டு வந்துவிட்டது. அங்கே உள்ள நிலைமை மிகவும் பரிதாபகரமானதாக இருக்கிறது. அட்மிஷன் நேரங்களிலே தொல்லைகள் பொறுக்க முடியாமல், முதல்வர் 10, 15 நாள் லீவே போட்டுவிட்டுச் சென்று விடுகின்றார். ஆகவே கட்டிடங்கள் என்று முறையாக இல்லாவிட்டாலும், இருக்கிற கட்டிடங்களில் ஏதேனுமொன்றில் உடனடியாக ஒரு பெண்கள் கல்லூரிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, இந்த மறவர் மறுவாழ்வுத் திட்டம். கடந்த சில ஆண்டுகளாக இதுபற்றி அரசை வேண்டி வருகிறேன். இந்த அமைப்பிற்கான ஏற்பாட்டை செய்யும்படி மீண்டும் வேண்டுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இன்னும் பிற உறுப்பினர்கள் பேச வேண்டும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேச வேண்டும். 10 நிமிஷத்தில் கண்டிப்பாக முடித்துவிடுகிறேன் என்று சொல்லிவிட்டு, இப்படி அதிகமாக நேரத்தை எடுத்துக்கொண்டால் என்ன செய்வது?

**திரு. ஆர். சக்திமோகன்:** ஆகவே அது அது பற்றி நிதி அமைச்சர் அவர்கள் தமது உரையில் குறிப்பிடுவார் என்று எண்ணுகிறேன்.

[1978 மார்ச் 2

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: (மணியை அடித்து) மணியடித்து உங்களை அமரச்செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால் நாம் ஒரு முறையை வகுத்துக்கொண்டு இவற்றை நடத்துகிறோம். உங்கள் உரையை முடித்த பிறகு மேலும் சில உறுப்பினர்கள் பேசி, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பேச வேண்டும். நேற்று வரையில் பேசவேண்டும் என்று கூப்பிட்டால், யாரும் முன்வரவில்லை. ஆனால் இன்றைக்கு வருகின்றீர்கள். அடுத்து உறுப்பினர் அவர்களைப் பேசும்படி கூப்பிட்டுவிடுவது சுலபம். அது வேண்டாம், நீங்களாக நேரத்தில் முடித்துக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

திரு. ஆர். சக்திமோகன்: தலைவரவர்களே, சீக்கிரமே முடித்துக்கொள்ளுகிறேன். வேலையில்லாத் திண்டாட்டம் பற்றி ஒரு வார்த்தை சொல்லி முடித்துக் கொள்ளுகிறேன். படித்த பட்டதாரிகள் பல ஆயிரக்கணக்கானவர் நாட்டிலே வேலையில்லாது அவதிப்படுகின்றார்கள். நேற்று பத்திரிகையில் பார்த்தோம், மேற்கு வங்கத்தில் இப்படி வேலையில்லாது அவதிப்படுகின்றவர்களுக்கு அரசே ஒரு உதவித் தொகையை கொடுக்க முன்வந்திருக்கிறது என்று. ஏற்கெனவே வேலையிலிருப்பவர்களில் ரூ. 800 போதாது ஆயிரம் ரூபாய் வேண்டும் என்று கேட்பவர்களும் இருக்கின்றார்கள். ஆனால் படித்துவிட்டு வேலையில்லாத லட்சக் கணக்கானவர்கள் வெளியே இருக்கின்றார்கள். அவர்களும் இந்த நாட்டு பிரஜைகள்தான். அவர்களும் அரசுக்கு வரி கொடுக்கின்றார்கள். வேலையில்லாமல் தவிக்கும் அவர்கள் விஷயத்தில் கொஞ்சம் கவனமெடுத்து அவர்களின் துயரைப் போக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 12-30)

*Thiru D. V. D'MONTE: Mr. Deputy Chairman, Sir, before offering my comments on the Budget proposals for 1978-79, I wish to make a passing reference to the break in the traditional Governor's Address to both House of the Legislature this year. Whatever may be the reasons, whether it is a hangover of the British Tradition or not, I can only deplore this departure from the convention.

Coming to the Budget, I feel that whilst it is lofty in its ideals and promises, it appears to be inert in its programme for the fulfilment of the basic objectives of the Government. What are those ideals, Sir? The Government are committed to the reduction of poverty, creation of avenues of employment and uplift of the downtrodden. I cannot see how these basic objectives can be achieved in any really worthwhile manner. I may be pardoned for saying so, Sir, but I feel that we need a Fairy Godmother to use a magic wand to transform the ideals into accomplished facts.



1978 மார்ச் 2] [Thiru D. V. D'MONTE]

Coming to power, next to Defence, power needs the highest priority for the development of both industry and employment. The step-up in outlay from Rs. 95 crores to Rs. 114 crores certainly carries no conviction unless the Government are capable of utilising their resources of energy generation in a secretary manner. We find that the thermal units at Tuticorin are still to be completed though there is sanction for one more unit. Then, there is the question of transmission and distribution. For this provision has been made in the Budget but it is still to see the light of day. How the Government propose to meet the energy needs of industry and bring about rural electrification including the energisation of 35,000 pump-sets for villages is a matter which is left to the imagination of the public.

On rural development, the Hon. the Minister for Finance has conceded that the abnormal inequalities that exist between rural and urban areas should be removed. Unfortunately, I find that there is no indication in the proposals of the steps that the Government intend to take to effect this removal. While it is magnanimously conceded that " there should be no reduction in expenditure for providing greater facilities and services in urban areas ", I find that there is no counter-proposal for providing opportunities for employment, improving the conditions of life, medical care and other essential factors to prevent rural people from migrating to cities. Many incentives have been mooted for sending medical graduates to urban areas, to open dispensaries and to employ engineering graduates. But the posts are still to be created for these people. The proposed setting up of a Land Army is still a fantasy in my opinion and its implementation will depend on the size of the carrot and the thickness of the stick.

So far as education is concerned, the allocation of Rs. 180.9 crores is a step in the right direction. But, I feel that the provision of Rs. 4 crores for the 10 + 2 + 3 pattern of education appears to be inadequate. The success of the new pattern will depend on the financial resources available for the + 2 stage. I would urge the Government to ensure that additional means are found if they are to succeed in their desire to introduce the new pattern.

Sir, I will take a few minutes to bring an important factor about a minority community, the Anglo-Indian community, to the notice of the Government. I have been speaking on this point in the past and I am sorry the Hon. the Minister for Education is not here. The Government of Tamil Nadu have been most gracious to provide free education to all students up to P.U.C. level. Unfortunately, this concession cannot be made use of by all Anglo-Indian

students. The mother-tongue of the Anglo-Indian community is English and, therefore, these students are forced to study in Anglo-Indian institutions and to attend schools which have English as medium of instruction. The Anglo-Indian High Schools which were originally established to cater to the needs of the Anglo-Indian community are fee-levying schools with the result that many Anglo-Indian students, especially the poor, are unable to have their education in these schools because they have to pay fees which are much above their means. This has hit the Anglo-Indian community very drastically. A large number of children are being compelled to give up education; they are unemployed and unemployable and become a drag on the community. At the same time, affluent non-Anglo-Indians who are able to pay high fees get their education in Anglo-Indian Schools. In the whole State, not more than 7,000 Anglo-Indians are able to have English-medium education. I would, therefore, appeal to the Government, on behalf of this microscopic minority community, that these students should be given an opportunity of free education in those schools.

Sir, another point which I wish to make in passing is the teaching of Tamil in Anglo-Indian Schools. I feel that greater emphasis should be paid on the development of oral skills. Both the non-Anglo-Indian and Anglo-Indian students will certainly benefit from this. I feel that this is a must, Sir, if members of the community should play their full role in national life. Future generations at least will benefit from this provision, if not we who have not had the benefit of good Tamil education in our schools.

Sir, coming to civic amenities, the Hon. the Minister for Finance has conceded that " On the various schemes for rural development there will be no curtailment of expenditure for providing greater facilities and services to the urban areas ". Strangely enough, there is no mention of what are the services which the Government propose to provide. I feel that many disparities must be removed, first of all. This will certainly create a sense of confidence in the people. I would refer to instances due to the serious health hazard posed to the residents of Royapuram, Madras by the iron-ore dust which comes out from the Port Trust. The berthing of ships is done very near Royapuram and iron-ore dusts enter into the houses creating a red layer all over inside the houses and also into the food and a serious health hazard is created. So also, fertilizers are dumped in the harbour and are then removed in open lorries without any covering throughout the streets of Royapuram. These fertilizers enter into the houses and create a health hazard to the residents there. Especially, it creates irritation of the skin and a burning sensation. These are matters which should receive urgent attention of the Government. I would only deplore the casual manner in which this matter has been treated so far although I for one have brought it to the notice of the Government and have even raised a Call-attention notice which has not been answered so far. I would like the Government to urgently look into this matter very seriously. It can brook no delay at all because it is certainly going to affect not only residents of Royapuram but all the other adjoining areas like Kasimode, etc.

Sir, mention has been made that the requirements of Government will be obtained from small industries, rural industries and cottage industries. Let us take first things first. Today, about 50 per cent of our small-scale industries, about 25,000 units, are sick. It is basically due to lack of means of credit and power-energy. I am sorry to say that the nationalised banks have never been able to really understand the needs of small-scale industries nor have they been able to take necessary interest in the problem. I would say that these banks work as Shylocks wanting their pound of flesh. The problems of small-scale industries do not receive adequate attention either with regard to credit generation or with regard to meeting their credit-needs. I would urge that these sick units should be given a chance to come up before adding on additional units so far as small-scale and rural industries are concerned. Sir, I would like to mention another point. The small scale industries have become a plaything of big business houses to the extent to which they are completely in the hands of these houses for exploitation. Especially, the small-scale industries are forced to accept a very meagre price for their products in regard to ancillaries and other requirements.

Sir, I would refer to the need for a crash programme for providing drinking water to our people. I note that nearly 15 lakhs of people suffer from want of drinking water. My own opinion is that it is very much more. This is a basic necessity of life. We have entered a nuclear age and still we are not able to provide drinking water to a large number of people. I hope that the Government will take this matter into serious consideration and come up with an urgent crash programme to see that this basic necessity is provided.

One more point and I have done, Sir. I would refer to a sort of confrontation that is now taking place between the bureaucracy of the State and the Ministry. The Hon. the Chief Minister had made

[Thiru D. V. D'MONTE] [1978 மார்ச் 2

(பிற்பகல் 12-40)

mention of this and he has gone on record to state that many of these officers—bureaucrats are either not co-operating fully or indulging in anti-national activities. I would like to see that full harmony is restored between them so that the Government are able to carry on the task of administration. In the recent past, we had two eminent Advisers during Emergency functioning as super-Ministers and they had all the officers in their pockets. I would like to see that the present confrontation ceases and the entire Governmental machinery functions efficiently in the larger interest of the people. Thank you.

Thiru P. YELLAMANDA: Honourable Deputy Chairman, Sir, my humbly opinion is to-day I feel hurt, since, in spite of my repeated requests to the Chair for an opportunity to speak on 27th and 28th, I have not been given a chance till now.

*மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்* : நேரம் கொடுப்பது பற்றிப் பேசி அவருடைய கால அளவு வீணாகிறது. 28 ஆம் தேதிக்குப் பிறகு நேற்றைய தினம் முதல் தேதிகூட வந்தது. கேட்ட நேரத்திலேதான் பேச வேண்டும் என்பதல்ல. கேட்ட நாளிலே பேசவிடவில்லை என்றால், உறுப்பினர் அவர்கள் பேசமாட்டேன் என்று சொல்கிறார்களா? தலைவர் சொல்கின்றபடி கேட்டால், அதுவே தங்களுக்குப் பலஹீனம் என்று நினைத்துக்கொள்ளக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Thiru P. YELLAMANDA: The Hon. Members of this House had at length discussed the various subjects like agriculture, irrigation, education, power, sales-tax, Sixth and Seventh Finance Commissions and they have offered their views on them. I am very glad that I have been given an opportunity to participate in the Budget discussion this year and to offer my views.

Sir, after a careful study of the entire Budget speech, I have come across a wonderful sentence, which has attracted me more than anything else. It is stated thus: "Economists and politicians have, for a long time, drawn attention to the conflict of interest between workers and capitalists, the poor and the rich, the illiterate and the educated, backward and more advanced areas and the like. No one can deny that these disparities exist and should be removed. However, in the circumstances of our country, the most important inequality is that between rural and urban areas."

Sir, this portion of the speech is found in the very beginning of the chapter on "Rural Development" in the Budget speech. Sir, it is not an exaggeration to say that the essence of the entire Budget lies in the above subject. Each and every Budget has to allot some funds for the uplift, development and growth and prosperity of the rural folk who have been neglected hitherto. There are a number of items mentioned like rural housing, rural roads, rural health and so many other things; but funds have not been allotted and the places have not been mentioned in the Budget. That is the only pity in this Budget. In Economics, the needs can be classified into three categories, namely, necessities, comforts and luxuries. If we compare and contras the rural and urban population, no doubt, the urban population have, to some extent, reached up to the level of luxuries, whereas the rural population are yet to get even the basic requirements. It is a pity, it is a great wonder, and it is a paradox that even after 30 years of independence and even after man has reached the moon, the rural people have not yet got their basic requirements. Sir, a time has come even to suspect the honesty of the urban people, because we have deprived them of the basic fundamental necessities which are very essential for the existence of the human being. To set right this injustice and to remove the glaring inequality between the rural people and the urban people, our Hon. Finance Minister has, in a fitting manner, given top priority to the development of the villages. When the urban people have got some of their necessities, is it not the duty and obligation of the urban population to think of the vast majority of the rural population suffering without even clothing food and shelter So a time has come to judge all these things and in my opinion, the Government deserve congratulations for having given top priority to the development of rural areas, though they have not allotted sufficient funds for the purpose.



1978 மார்ச் 2] [Thiru P. YELLAMANDA]

Sir, schemes like rural roads, supply of drinking water to rural areas and rural housing will definitely help the rural population and I think they are the only solutions for the chronic sufferings of the villagers who are the backbones of this country. Sir, I have got my own doubt about the feasibility and practicability of these schemes. The Government should take proper care in implementing these schemes. When the village industries are started, sufficient raw materials should be provided and technicians should be provided to them for the smooth running of all the schemes.

Sir, coming to the N.G.G.Os. problem, it has become a big issue. Now they want to picket the Government offices on the 3rd. Our Honourable Finance Minister has just now come and I hope that he will use his good offices to settle the problem amicably without giving room for agitation, because the N.G.G.Os. constitute an essential part and without their co-operation, the administration would become paralysed. Sir, if our Hon. Chief Minister and Hon. Finance Minister take some pains to solve this problem, definitely the problem will be solved. We have to place some faith in them.

[Thiru P. YELLAMANDA] [1978 மார்ச் 2

Coming to the last, but not the least, the burning issue is the problem of language. I cannot understand why the Budget speech is silent about this. What prevented the Finance Minister from including this in the Budget Speech? Tamil Nadu has got a pride of place in protecting the non-Hindi speaking people by being firm in adopting the two-language formula.

(The Deputy Chairman sounded the gong. The Member resumed his seat).

(மாற்றுத் தலைவர் திருமதி சத்தியவாணி முத்து தலைமை).

(பிற்பகல் 12-50)

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, 1978-79 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது எனது கருத்துக்களை எடுத்து வைப்பதற்குமுன் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். சென்ற கூட்டத் தொடர் வரை இந்த மன்றத்தை மாலையில் கூட்டினோம். இந்தத் தடவை காலையிலே நடந்து வருகிறது. அதாவது ஏக காலத்தில் இரு அவைகளும் நடந்து வருகின்றன. இதனால் அமைச்சர் பெரு மக்கள் நண்பகலுக்குப் பின்னால் அலுவலக வேலைகளைப் பார்க்கவும், அன்றாட நிர்வாகத்தைக் கவனிக்கவும் முடியும். உறுப்பினர்களும் நண்பகலுக்குப் பின்னர் வேறு பல வேலைகளைப் பார்க்கவும், மறுநாள் சட்ட மன்ற அலுவலுக்கு அவர்கள் தங்களைத் தயார் செய்துகொள்வதற்கும் இதனால் வசதி ஏற்படுகிறது. அதனால் இந்த நேரத்தை அமைத்திருக்கிறார்கள். ஏக காலத்தில் எல்லா அமைச்சர்களும் ஒரே அவையில் இருக்க முடியாதென்ற நிலை இருக்கத்தான் செய்கிறது. இருந்தாலும் சில நேரங்களில் நாங்கள் பார்க்கிறபோது, இந்த அவையிலே ஒரு அமைச்சரும், அந்த அவையிலே ஒரு அமைச்சரும் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே நான் அமைச்சரவைக்கு, மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே உங்கள் மூலமாக ஒன்றை வேண்டிக்கொள்கிறேன். இரண்டு அவையும் ஒரே காலத்தில் நடைபெறுவதாலும், அலுவலக வேலைகளைப் பார்ப்பதற்கு நண்பகலுக்கு மேல் மிகுந்த நேரமிருப்பதாலும், அவை நடக்கும்போது அமைச்சர்கள் இங்கு இருக்க வேண்டும் அல்லது அங்கிருக்க வேண்டுமென்ற நிலையை உருவாக்க வேண்டும். அதற்காக முதல்வரவர்கள் ஏதாவது ஒரு அவையில் இருந்தால் தான், மற்ற அமைச்சர்களும் அவையில் இருக்கக்கூடிய சூழ்நிலை உருவாகுமென்று நான் கருதுவதில் தவறில்லை என்று கருதுகிறேன். அந்த நிலைக்கு மாறாக அமையும்போது இன்னொரு ஏற்பாட்டைச் செய்யலாம். டெபுடி மினிஸ்டர்ஸ்-ஐப் போட்டுக்கொண்டால், அவர்கள் அந்தந்தத் துறை குறித்து பதிலளிக்கலாம். இப்போது 'டூ டையர்' என்று எல்லா மாநிலங்களிலும்



1978 மார்ச் 2] [திரு. எம். சங்கரலிங்கம்]

இருக்கிறது. ஏக காலத்தில் இரண்டு அவைகளும் நடக்கும்போது, டெபுடி மினிஸ்டர்ஸ் ஒரு அவையில் இருந்துகொண்டு பதில் சொல்லுவார்கள். கூட்டுப் பொறுப்பு அமைச்சர்களுக்கு இருந்தாலும்கூட, அந்தந்தத் துறைப் பொறுப் புடையவர்கள் பதில் சொல்லும்போதுதான், எங்கள் வினாக்களுக்கு என்ன பதில் எதிர்பார்க்கிறோமோ அது வருகின்ற நிலையை ஏற்படுத்தும் என்பதை வேண்டுகோளாகச் சொல்கிறேன். இதைத் தவறாகக் கருதாமல், இதற்குத் தக்க பரிகாரம் கண்டால், மீண்டும் இரு அவைகளும் ஒரே நேரத்தில் நடக்க வாய்ப்பிருக்குமென்று சொல்லிக்கொள்கிறேன்.

1978-79ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நமது மாண்புமிகு நிதி யமைச்சரவர்கள் இங்கு தந்து, அந்த உரையை நிகழ்த்தும்போது மாநிலத் திற்கு இருக்கக்கூடிய நிதிச் சிக்கல்களையும், பற்றாக் குறையையும் சுட்டிக்காட்டி, அவைகள் எவ்வாறு சரிக்கட்ட முடியாதபடி இருக்கின்றன என்பதைச் சொல்லி யிருக்கிறார்கள். ஒரு மாநில அரசின் நிதிநிலை அறிக்கை, மாநில அரசினுடைய சக்திக்கு உட்பட்ட நிதியைக் குறிப்பிடும். அந்தக் குறித்த நிதியை, அந்த அரசு ஏற்றுக்கொண்ட கொள்கைகளுக்கேற்ப பகுத்து செலவு செய்வதுதான் அந்த நிதிநிலை அறிக்கையின் அமைப்பாக இருக்கிறது. இருக்கிற நிதியைக் கூறாக்குகிறபோதும், அதைப் பகுத்து பணிக்கு அனுப்புகிறபோதும் அந்த அரசு என்ன கொள்கையை ஏற்றிருக்கிறதோ அந்தக் கொள்கை வழியைக் கடைப்பிடித்துச் செய்ய வேண்டும். இந்த இரண்டு பணிகளும் நிறைவேற்றப் பட்டிருக்க வேண்டும். இந்த அரசு எடுத்த கொள்கை அண்ணா வழி. அண்ணா வழியிலே அந்த இரண்டு பணிகளும் சிறக்க நடைபெற்றிருக்குமானால், உண்மையிலேயே நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அப்படி நடை பெற்றிருக்கிறதா என்பதை நான் ஆராய்ந்து பார்த்த அளவிலே முதல் பகுதி நிதியை ஈட்டிச் சேர்த்துக்கொள்வதாகும். இந்தப் பணி மாநில அரசைப் பொறுத்த அளவில் எப்படி நடைபெறுகிறதென்பதைப் பார்க்க வேண்டும். இந்திய நாட்டில் மத்திய அரசிடமிருந்து தனக்குரிய பங்கைப் பெறுகிறது மாநில அரசு. மாநில மக்கள் மீது வரியைச் சுமத்தி, பல்வேறு துறைகளில் மாநில அளவில் நிதி ஆதாரங்களைத் தேடி நிதியைச் சேர்க்கும். மத்திய அரசு நிதியை மாநிலங்களில் . . .

**Thiru P. YELLAMANDA:** Before the completion of my speech, the Chairman has stopped me.

**மாற்றுத் தலைவர் (திருமதி சத்தியவாணி முத்து):** உங்கள் பேச்சு முடிவுற்று, இப்போது எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. பி. எல்லமந்தா :** நான், என்னுடைய பேச்சை முடிக்கும் முன்னாலேயே தலைவரவர்கள் என்னை நிறுத்திவிட்டார்கள்.

மாற்றுத் தலைவர் (திருமதி சத்தியவாணி முத்து): அதை விட்டு விடுங்கள். இப்போது எதிர்க் கட்சித் தலைவர் பேசிக் கொண்டிருக்கிறார்.

THIRU P. YELLAMANDA: Anyhow, I am not satisfed with the procedure. I go out as a protest.

(பின்னர் திரு. பி. எல்லமந்தா வெளிநடப்பு செய்தார்)

திரு. எம். சங்கரலிங்கம்: முதலிலே ஒவ்வொரு மாநிலத்திற்கும் மத்திய அரசிலிருந்து வர வேண்டிய நிதிப் பங்கினை நாம் பெற்று, மாநிலத்தில் மக்கள் மீது சுமத்தப்படுகிற வரிகள், இதர வரி வாயில்களில் வரும் வரியைக் குறைத்து நிதியைக் கணக்கிட்டிருக்கிறார்கள். 680 கோடி ரூபாயை வரவாகக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு இந்தியாவிலேயுள்ள மாநிலங்களுக்கு எப்படி நிதியை ஒதுக்க வேண்டுமென்பதை அரசியல் அமைப்பு நிர்ணயித்த விதத்தில், திட்டக் குழுவாலும், நிதியாணைக் குழுவாலும் பரிந்துரைக்கப்பட்டு, அது நிதியை ஒதுக்கி நமக்குத் தருகிறது. இந்த நிதி ஒதுக்கீடு சமஷ்டி ஆட்சி முறையிலே ஏற்றுக் கொள்ளப்பட்ட சில விதிகளின் அடிப்படையிலே செய்யப் படுகிறதா என்பதை நாம் பல ஆண்டுகளாக ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். இதற்கு முந்தி இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு, அதற்கு முந்தி இருந்த காங்கிரஸ் அரசு இவைகளைப் பற்றி எண்ணுகிற கருத்திலே மாறுபாடு உண்டு. காங்கிரஸ் அரசு, மத்திய அரசு என்ன கொடுக்கிறதோ அதை வைத்து ஆட்சி நடத்துவதென்று இருந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் பொறுப் பேற்ற பிறகு, திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒன்றை வலியுறுத்தியது. இந்தியாவில் நாம் சமஷ்டி ஆட்சி முறையை ஏற்றிருக்கிறோம்; எனவே மாநிலங் களுக்குரிய பங்கை ஒதுக்க வேண்டும்; ஒதுக்குவதில் புறக்கணிப்பு இருக்கக் கூடாது; அந்தப் பங்கைப் பெறுவதற்கான வழி முறைகளைக் காண வேண்டு மென்று ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையிலேயும் வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். எப்படி மாநில அரசுகள் புறக்கணிக்கப்படுகின்றன என்பதை—மாநில அரசு களுக்கு நிதி வழங்கும் முறையிலே மத்திய அரசு ஒரு புறக்கணிப்புக் கொள் கையைக் கடைப்பிடிப்பதால் பாதிக்கப்படுகிற மாநிலங்கள் தங்கள் நிலையை விளக்கி, அதனதன் நிதி ஆதாரத்தை மத்தியிலிருந்து பெற பேரறிஞர் அண்ணா அவர்கள் வழி காட்டினார்கள். நமக்கு உரிய பங்கினை அவர்கள் தயவை நாடிப் பெறுவதல்ல அவர் காட்டிய வழி. நம்முடைய உரிமையை, உரிய முறையிலே பெறுவதற்கான வழி முறைகளை நிரந்தரமாக அரசியல் அமைப்புச் சட்டத்திலே, செய்ய வேண்டிய திருத்தங்கள் மூலம் செய்து உருவாக்க வேண்டுமென்று அழுத்தந்திருத்தமாகச் சொன்னார்கள். 1967-68ஆம் ஆண்டிலிருந்து, 1975-76 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு நிதிநிலை அறிக்கையை வைத்ததுவரை, பேரறிஞர் அண்ணா அவர்கள் விரும்பிய இந்தக் கோட்பாடு,





கொள்கை ஆங்காங்கு வலியுறுத்தப்பட்டு வந்ததென்பதை மறந்துவிடுவதற் கில்லை. இப்போது மத்திய அரசு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கும்போது, எந்தெந்த மாநிலங்களுக்குப் புதிய புதிய திட்டங்கள் தேவை என்பதைப் பார்த்து—அதிலும் குறிப்பாக, பின் தங்கிய மாநிலங்களுக்கு அதிகமாக நிதி ஆதாரங்களை ஒதுக்குகின்ற நிலைமைகளைப் பார்க்கிறோம். 6-வது நிதி ஆணைக் குழு நமது மாநிலத்தைப் பொறுத்த அளவில், நாமெல்லாம் முன்னேறிய மாநில மென்று சொல்லி, நிதியைக் குறைவாக ஒதுக்கியது தண்டனை கொடுப்பதைப் போல் இருந்தது. பீகார், உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு, மிகப் பின் தங்கிய மாநிலங்களாக அவைகள் இருக்கின்றன என்று சொல்லி, மிகுந்த நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். நாம் திட்டச் செலவிற்கு நிதி பெறுகிறோம். நம் மாநிலத்திலிருந்து மத்திய அரசு வரியாக எடுத்துச் செல்லும் வருமான வரி, எக்சைஸ் டியூட்டி, கார்ப்பரேஷன் டாக்ஸ் இவைகளிலே நமக்கு வர வேண்டிய பங்கை இன்ன சதமென்று நிலையாகப் பெற வேண்டுமென்ற விதிகளை நாம் இதுவரை நிர்ணயம் செய்துகொள்ளவில்லை. 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தோன்றி மறைகிற நிதி ஆணைக் குழுக்கள் அதைப்பற்றி ஆராய்ந்து ஒரு வழி முறையை நமக்குத் தருகிறார்களே தவிர, நிரந்தரமாக சமஷ்டி அரசாங்கச் சாயலில் ஒரு மாநிலத்திற்குரிய நிதியை ஒதுக்கும் முறையை மத்திய அரசு கொள்கையாக ஏற்றுக்கொள்ளவில்லை. 1967ஆம் ஆண்டிலிருந்து அதை வலியுறுத்தித் தெரிவிக்கின்ற ஒரு கருத்தைப் பாராட்டி வருகிறார்கள்.

(பிற்பகல் 1-00)

தென்கோடியிலே அறிஞர் அண்ணா அவர்களால் எழுப்பப்பட்ட அந்தக் கருத்து இன்று மேற்கு வங்கத்திலே ஒலிக்க அதே மாதிரி மேற்குப் பகுதியிலே குஜராத்திலும் ஒலிக்க, நமக்கு அடுத்தாற்போல் உள்ள மகாராஷ்டிரா மாநிலத்திலே வேரூன்றி எடுத்துச் சொல்லப்படுகின்றபோது, கேரளாவிலும் எடுத்துச் சொல்கின்றபோது, அந்தக் கருத்தை, அந்தக் கருத்தின் தலைநாயகர்களான நாம் வளர்க்க வேண்டிய நிலையில் இருக்கும்போது, மௌனம் சாதிக்கிற நிலையை இந்த நிதிநிலை அறிக்கையிலே என்னால் காண முடிகிறது.

இங்கே அப்படிச் சொல்லவில்லையா என்றால், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபோது சொல்லலாம், "நான் நிதிநிலை அறிக்கையின் மூன்றாவது பக்கத்திலேயே சொல்லியிருக்கிறேன்" என்று. "இந்த அரிய வாய்ப்புகள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு, வளர்ச்சியின் வேகம் முடுக்கு விக்கப்பட வேண்டும். நிறைவேறத் தயாராயுள்ள நல்ல திட்டம் எதுவும், நிதிப் பற்றாக்குறையின் காரணமாகத் தடங்கலோ, தாமதமோ அடையக் கூடாது. இந்த அடிப்படையிலே மத்திய அரசு மாநிலங்களுக்குப் போதிய நிதி உதவி செய்து, அவர்களுடன் தோளோடு தோள் நின்று செயல்பட வேண்டுமென்பதே நம்முடைய விருப்பமும் வேண்டுகோளுமாகும்" என்று

வேண்டுகோளாக வைத்திருக்கிறார்களே தவிர, வேறு ஒன்றுமில்லை. அடுத்து, "தமிழக மக்களின் நல்வாழ்விற்கும், வளர்ச்சிக்கும் வேண்டிய நியாயமான தேவைகளை மத்திய அரசு மனமுவந்து நிறைவு செய்ய வேண்டும் என எதிர்பார்ப்பது நமது உரிமையாகும்" என்று உரிமையைச் சொல்லியிருக்கிறார்களே தவிர, உரிமையாகக் கேட்டிருக்கிறார்களா என்றால், இல்லை. இந்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டிலும், நிதியாணைக் குழுவிலும், நம்முடைய மாநிலத்திற்குரிய உரிமைகளை எடுத்துக்காட்டி இன்னின்ன செயல்முறைகளைச் செய்ய வேண்டுமென்று "கைட்லைன்ஸ்" கொடுத்திருக்கிறதா என்றால் இல்லை. மத்திய அரசு இதை இதைக் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு வலியுறுத்தவில்லை. ஏனென்றால், 1967-லே இருந்த நிலையைவிட இப்போது 1978-லே இருக்கிற நிலை, மரபுப்படி தலைமை தாங்க வேண்டிய நிலையில் இவ்வரசு இருக்கிறது. ஆனால் தளர்ந்து செல்ல வேண்டிய நிலையில் இல்லை. முதலிலே வேண்டுகோளாகவும், இறுதியிலே உரிமை என்று சொல்லப்பட்டாலும் கூட உரிமையை உரத்த குரலில் சொல்லவில்லை. உரிமையைச் சொல்லும் போது தயங்கக் கூடாது என்பதை என் வேண்டுகோளாக வைத்துக்கொள்ளுகிறேன். இப்படிச் சொல்லும்போது, ஒருவேளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சொல்லை உரக்கப் படித்துவிடலாம் என்று சொல்லலாம். அது அப்படியல்ல. சொல்லப்படவேண்டிய விதம் எப்படி என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1967-68 ஆம் ஆண்டிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் நிதிநிலை அறிக்கையை வைக்கிறபோது இங்கே சொல்லியிருக்கிறார்கள், "நமது கூட்டாட்சி அமைப்பில் எத்தகைய வரம்புகளுக்கு உட்பட்டு மாநில அரசுகள் இயங்க வேண்டியுள்ளன என்பதை நாட்டத்திற் கொள்ளுதல் வேண்டும். அரசியலமைப்பின் விதித்துறைகள் மத்திய அரசுக்கு ஊட்டங்கொடுக்கும் முறையிலே அமைந்திருப்பது ஒருபுறமிருக்க, கடந்த பதினைந்து ஆண்டுகளாக திட்டமிட்ட பொருளாதார அமைப்பின் கீழ் எழுந்த நெறிமுறைகளும், வளர்ந்த மரபுகளும் மாநிலங்களை மெலியச் செய்து மத்திய அரசினை மேலும் வலுவூட்டும் போக்கில் அமைந்துள்ளன" என்று மிகவும் அழகாகத் திட்டவட்டமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

1968-69 ஆம் ஆண்டில், பேரறிஞர் அண்ணா அவர்கள் நிதிநிலை அறிக்கையைத் தருகிறபோது, "சென்ற இரண்டாண்டுகளில் உரிய நிதி உதவி பெறாத மாநிலங்களில் நமது மாநிலம் ஒன்றுதான். நான்காவது நிதியாணைக் குழு திட்டமில்லாத தலைப்பில் நமக்குரிய பங்கினைத் தரவில்லை. இதனைக் கணக்கில் கொண்டு நமது வேண்டுகோள் கவனிக்கப்பட வேண்டும்" என்று அழுத்திச் சொல்லியிருக்கிறார்கள்.



அதற்கப்பால் 1969-70 ஆம் ஆண்டில் அன்றைய நிதியமைச்சராக இருந்த திரு. மதியழகன் அவர்கள் இங்கே நிதிநிலை அறிக்கையைத் தருகிறபோது கூட, "உண்மையான கூட்டுறவு மனப்பான்மை கொண்டு ஒரு கூட்டாட்சியை வளர்க்க வேண்டுமெனில், மத்திய மாநில அரசுகளுக்கிடையேயுள்ள நிதி வாயில்களை மேலும் தகைவானதோர் அடிப்படையிலே மறு ஒதுக்கம் செய்யப்பட வேண்டும்" என்று அவர்களும் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கடுத்த ஆண்டு, 1970-71-லே நிதிநிலை அறிக்கையை அளிக்கும்போது அவரே சொல்லியிருக்கிறார், "முக்கிய வரிகளை விதிப்பதற்கும் வட்டி வீதங்களை மாற்றுவதற்கும், நாட்டின் நாணயச் செலவாணி மதிப்பைச் சரிக்கட்டுவதற்கும் உரிய அதிகாரங்கள் அனைத்தும் இந்திய அரசிடமே ஒருங்கு குவிந்துள்ளன. எனவேதான் மத்திய அரசு மேற்கொள்ளும் முடிவுகளின் துரதிர்ஷ்டவசமான விளைவுகளை மாநில அரசு அடிக்கடி எதிர்நோக்கி நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அதிகாரப் பொறுப்பில் இவ்வாறு பிரிந்து நிற்கும் நிலை, நமது கூட்டாட்சி முறையில்—பொருளாதார முறையிலும், அரசியல் முறையிலும் ஏற்பட்டுள்ள கேட்டிற்குக் கருவாக அமைந்துள்ளது" என்று தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

அதற்கடுத்த ஆண்டு 1971-72-லே நிதிநிலை அறிக்கையைத் தந்த எங்கள் தலைவர் கலைஞர்—முன்னாள் முதல்வர் அவர்கள், "அரசியல் வழியிலும், புவியியல் அளவிலும் சிறப்புமிகு அமைப்புகளாய் உள்ள மாநிலங்களுக்குத் தன்னாட்சி உரிமை வழங்குவதுதான், இந்தியாவைப் போன்றதொரு பெரிய நாட்டில் சோஷலிசக் கொள்கையை நிலைநாட்டுவதற்கு எளிதான வழியாகும். மாநிலங்கள் வளமாகவும், மத்திய அரசு பலமாகவும் இருக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்ற தன்னாட்சி இலட்சியத்தை நாம் வலியுறுத்துகிறோம்" என்று வலியுறுத்தியிருக்கிறார்கள்.

அதற்கடுத்த ஆண்டு, 1972-73-ல் அவர் வலியுறுத்தியதற்கு அப்பால் இறுதியாக, "இந்த நிலைமைகளில், மாநிலங்கள் முழுப் பயன் அடையத்தக்க மாறுதல்கள் தேவை" என்று கூறி, "மாநில சுயாட்சி என்பது அதிகார உரிமைகளை மாநிலங்கள் பெறுவது மட்டுமல்ல; தங்குதடையின்றி வளமிகு திட்டங்களை மாநிலங்களில் நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதிவாயில்களை மத்திய அரசிடமிருந்து பெற்றிட வேண்டுமென்பதும் இன்றியமையாத ஒன்று" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப் போலவே அடுத்த ஆண்டிலும், 1973-74 ஆம் ஆண்டிலும், "மாநில அரசுகள் மத்திய அரசிடமிருந்து நிதி பெற வழி வகுப்பதில் நிதியாணைக் குழுவே தலையாய இடம் பெற வேண்டும். இத்தகைய ஏற்பாடே நிதியாதாரங்களைப் பல்வேறு மாநிலங்களுக்குப் பிரித்தளிப்பதில், நியாயமாகவும், உறுதியாகவும் செயல்பட ஏற்புடையதாகும்"

என்று வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அவர் கூறிய எல்லாவற்றையும் நான் சொல்லவில்லை, ஒரு சில பகுதிகளை மட்டும் கோடிட்டுக் காட்டுகிறேன். 1974-75 ஆம் ஆண்டிலே குறிப்பிடுகிறபோது, "பின்தங்கிய மாநிலங்கள் என்று காரணத்தைக் காட்டி வேறு சில மாநிலங்களுக்குத் தேவைக்கு மேலாகவே நிர்வாகத்தின் தரத்தை உயர்த்துதல் என்ற கணக்கில் நிதி வசதிகளை வாரி வழங்கிய ஆறாவது நிதியாணைக் குழு நம்முடைய மாநிலத்திற்கு நிதி ஒதுக்கீட்டிலே தவறிழைத்திருக்கிறது" என்று அழுத்தம் திருத்தமாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

1975-76 ஆம் ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த அவையிலே தந்த கடைசி நிதிநிலை அறிக்கையிலே, "மத்திய-மாநில அரசுகளுக்கிடையிலான நிதி உறவுகள் இவ்வாறு உறுதியாக அமையாத நிலையில், ஒரு புறம் வளர்ச்சித் தேவைகளையும், மறுபுறம் சீரான நிதி நிர்வாகத்தையும் கருத்தில் கொண்டு சூழ்நிலைக்கேற்ப வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டியிருக்கிறது" என்ற நிலையைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

**திரு. க. அறிவழகன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள், அதற்குப் பிறகு நிதியமைச்சராக இருந்த திரு. மதியழகன் அவர்கள், முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி ஆகியவர்கள் கொடுத்த நிதிநிலை அறிக்கையைப் படித்தார்கள். அவர் படித்த அறிக்கைகள் அத்தனை பக்கங்களிலும் அடக்கமாகத்தான் சொல்லியிருக்கிறார்களே தவிர, அன்றைய தினம் வெளியிலே அவர்களால் பேசப்பட்ட மாநில சுயாட்சி பற்றி எதுவும் குறிப்பிடாமல் இருப்பதை நான் உணர்கிறேன் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளுகிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்கள் எந்தவிதத்திலும் உணர அவருக்கு உரிமையுண்டு. நான் உணர்கிற வகையில்தான் அவரும் உணர வேண்டுமென்ற கருத்தைக் கொண்டவனல்ல நான். அவரவர்கள் அவரவரது வழியிலே உணரலாம். நான் எடுத்து வைக்க விரும்புவதெல்லாம், இதற்கு முன்பிருந்த மத்திய அரசு, நிதி ஒதுக்கீடு செய்வதிலே இந்த மாநில அரசைப் புறக்கணித்திருக்கிறது என்ற நம்முடைய மாநில அரசின் கருத்தை நிதிநிலை அறிக்கையின் வாயிலாக, இதற்கு முன்பிருந்த அத்தனை முதலமைச்சர்களும், நிதியமைச்சர்கள் அத்தனை பேரும் அழுத்தம் திருத்தமாகச் சொல்லியிருக்கக் கூடிய காலக் கட்டத்திலே, அந்தக் கருத்தை இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் இருக்கிற பிற மாநில முதலமைச்சர்கள் ஏற்றுக்கொண்டு, அவர்களும் மத்திய-மாநில உறவுகளைப் பற்றியும், மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதைப் பற்றியும் பேச்சு வார்த்தையைத் தொடங்க வேண்டுமென்று





சொல்லக்கூடிய கால கட்டத்திலே, இந்தக் கருத்தைத் தொடங்கி வைத்த இந்த மாநில அரசு அதற்குத் தலைமை தாங்குவதற்குப் பதிலாக பழைய பாணியிலேயே தளர்ந்து வேண்டுகோளாக வைக்க வேண்டிய தேவை என்ன என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்க ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 1-10)

நமக்கு மத்தியிலிருந்து உரிய பங்கை நாம் பெறாமல் போனால், வளர்ச்சித் திட்டங்களுக்கானாலும், நாம் நிறைவேற்ற வேண்டிய திட்டங்களுக்கானாலும் மாநில மக்கள் வரிப் பளுவை அதிகமாக ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது. மத்தியிலிருந்து அவர்கள் நிதியைப் பிரித்து அனுப்புகிறபோது, திட்டங்களுக்கு எந்தெந்த மாநிலங்கள் பின் தங்கியிருக்கின்றனவோ அவற்றிற்கு அதிக நிதியை ஒதுக்குகிறார்கள். எந்தெந்த மாநிலங்கள் நிர்வாகத்தில் பின் தங்கியிருக்கின்றனவோ, எந்தெந்த மாநில மக்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறதோ அவற்றிற்கு அதிகமாக நிதியை ஒதுக்கீடு செய்கிறார்கள். உதாரணமாக தமிழ்நாடு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நான்காவது இடத்தில் இருந்தது நிதி பெறுகிற நிலையில். நான்காவது திட்டத்தில் பத்தாவது இடத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. காரணம் இங்கே திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதுதான். இந்திய நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, எல்லா மாநிலங்களுக்கும் ஒன்றுபோல வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கி, அதில் சில மாநிலங்கள் அந்த வளர்ச்சித் திட்டங்களை அமுல் படுத்தாதபோது, நாம் அதில் கண்ணும் கருத்துமாக இருந்து, மாநில வருவாயை முறைப்படுத்தி நல்லமுறையில் திட்டங்களை உருவாக்கிவிட்ட காரணத்தால், நல்ல முறையில் ஆட்சி நடத்திய காரணத்திற்காக வளர்ச்சித் திட்டங்களுக்காக மக்கள் வரிப் பளுவைத் தாங்கிக் கொண்டதற்காக தண்டிக்கிற சூழ்நிலையைத்தான் இன்று மத்திய அரசு மாநில அரசு நிதி உறவில் கொள்கையாகக் காண முடிகிறது. பீகார், உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்கள் பின் தங்கியிருக்கின்றன என்றால், அதற்குக் காரணம் என்ன? அவர்கள் அங்கே வளர்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தாமல் இருப்பதே அவர்களுக்கு ஆதாயமாக இருக்கிறது. நிதியை மத்தியிலிருந்து அதிகமாகப் பெறுவதற்கு ஆதாயமாக அது கருதப்படுகிறது. இங்கே நாமே நிதி ஆதாரங்களைப் பெருக்கி திட்டங்களை நடத்துவதால், நமக்கு நஷ்டமாக இருக்கிறது. இங்குள்ள பொருள்களுக்கு மத்திய அரசாங்கம் 5 சத விகிதம் வரி விதித்திருக்கிறது. வளர்ச்சித் திட்டங்களை நல்ல முறையில் செயல் படுத்திய மாநிலங்கள் இந்த வரி விதிப்பின் மூலமாக மத்திய அரசிற்கு அதிக அளவில் கொடுக்க வேண்டியிருக்கிறது. கொடுக்கும் திட்டங்களை அமுல் படுத்தாத மாநிலங்கள் அதிக நிதி வசதியை மத்தியிலிருந்து பெறுகின்றன. உதாரணத்திற்காக ஒன்றைச் சொல்லலாம். ஒரு வீட்டில் ஆயிரம் ரூபாய் சம்பளம் பெறுகிற ஒருவரும், வேலையில்லாத ஒருவரும், ஐநூறு ரூபாய் சம்ப

ளம் பெறுகிற ஒருவரும் இருந்தால் சம்பாதிக்கிறவர்கள் வேலையில்லாதவருக்கு வேலை கிடைக்கும் வரையில் உதவி செய்வது நியாயம். ஆனால் வேலைக்கே முயற்சி எடுக்காத நிலையில் அவரை எப்படிக் காப்பாற்றுவது? அதைப் போல சில மாநிலங்கள் கவனிக்கப்படுகின்றன. வளர்ச்சித் திட்டங்களை அமுல் நடத்தி முற்போக்கு முறையில் கால் எடுத்து வைத்துள்ள இந்த மாநிலம் போன்றவை புறக்கணிக்கப்படுகிற நிலை இந்தியாவில் மத்தியில் வருகிற வருவாய்களைப் பகிர்ந்தளிக்கும் முறையில் மத்திய அரசு கடைப்பிடிக்கிற கொள்கையில் அமைந்திருக்கிறது என்று சொன்னால் தவறாகாது. அந்த நிலைமையை நாம் அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொல்லாது போனால், நமக்கு அதனால் பெரிய இழப்பு ஏற்படுமென்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தக் கருத்தை முதலில் பேசிய பல நண்பர்கள் சுட்டிக் காட்டுகிறபொழுது ஆளும் கட்சித் தரப்பிலிருந்து சில உறுப்பினர்கள் ஒன்றைச் சொன்னார்கள். நீங்கள் இப்படியெல்லாம் பேசி மத்திய மாநில உறவைக் கெடுத்துவிட முயன்றால், அதற்குச் செவி சாய்க்க நாங்கள் ஏமாளிகள் அல்ல என்று சொன்னார்கள். நாங்கள் என்ன சந்தேகப்பட்டோமோ அதுதான் தங்களுடைய எண்ணம் என்று அவர்கள் ஒப்புதல் கொடுத்ததற்காக மகிழ்ச்சியடைகிறோம்.

**திரு. ஜார்ஜ் கோமகன் :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மத்திய அரசு மாநில அரசுக்கு இடையே மோதுதல் வரவேண்டுமென்று விரும்புகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** மத்திய அரசிற்கும் மாநில அரசிற்கும் இடையே மோதல் வர விரும்புகிறவர்கள் நாங்கள் இல்லை. ஆனால் மோதல் என்ற பெயரில் உரிமையைக் கேட்கத் தயங்குகிறவர்கள் நாங்களல்ல. இந்த மாநிலத்திற்குள்ள உரிமையை நாங்கள் ஆட்சியில் உள்ளபோதும் கேட்டோம். எதிர்க் கட்சியில் இருக்கும்போதும், அதை வலியுறுத்துகிற கட்டாயத்தில் நாங்கள் இருக்கிறோம். மாநிலத்திற்கான உரிமையைத் தயங்காமல் சொல்கிற உரிமையையும் உரத்தையும் பெற்றவர்கள் நாங்கள் என்பதை 1972-73 ஆம் ஆண்டிலேயே சொல்லியிருக்கிறோம்.

**திரு. க. அறிவழகன் :** இப்போதுள்ள தலைவர் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே நல்ல உறவு வேண்டுமென்று சொல்கிறார். எதிர்க் கட்சியினர் இடையில் மத்தியில் கூட்டாட்சி என்று கூண்டோடு சேர்ந்துகொள்வதற்கு சந்தர்ப்பம் வந்தால் சேர்ந்துகொள்ளலாம் என்ற கருத்துத்தான் நிலவி வந்தது.

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் முதலில் சொன்னேன், உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்களுக்கு எந்தக் கருத்தையும் கொள்ள உரிமை உண்டு. சொல்வதற்கும் உரிமை உண்டு. நாடு ஏற்றுக்





கொள்ளத்தக்க கருத்து நாளாவட்டத்தில் வெற்றி பெறும். இந்தக் கருத்தை இப்போது மட்டும் நாங்கள் சொல்லவில்லை. 1972-73லேயே எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் நிதிநிலை அறிக்கையைத் தரும்போது சொன்னார்கள். "உரிமைக்குக் குரல் கொடுப்போர் மாநில அரசிலும், உறவுக்குக் கை கொடுப்போர் மத்திய அரசிலும் இருந்திடும் இந்தக் காலத்திலேயே, தமிழகத்தின் முறையீடுகள் பல தட்டிக் கழிக்கப்படுகின்றன என்றால், தயவுக்குத் தவம் இடப்போர் மாநிலத்திலும், தாராள சிந்தையற்றோர் மத்திய அரசிலும் இருந்திட்டால் மாநிலத்தின் வேண்டுகோள்கள் விழலுக்கிறைத்த நீராகும் என்று நான் சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போது எடுத்துக் கூறியதை இப்போது நினைவூட்டுகிறேன்" என்று எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னதை இப்போது உறுப்பினர் திரு. அறிவழகனுக்கு நினைவூட்டிக் கொள்வதிலே தவறில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதன் மூலம் வற்புறுத்த விரும்புவதெல்லாம் நம்முடைய மாநில அரசு மத்திய அரசிடம் உரிய நிதிப் பங்கீட்டைக் கேட்டால், உறவு கெட்டுவிடும் என்றோ பூசல் வந்துவிடும் என்றோ தயங்காமல் கேட்க வேண்டும். கிராமங்களில் சொல்வார்கள், "முதுகில் அடித்தால் பட்டுக் கொள்வேன், வயிற்றில் அடித்தால் படமாட்டேன்" என்று. நிதி உறவில் நமது உரிமையைப் பறி கொடுத்துவிட்டால், வளர்ச்சி நிலையில் இருள் சூழ்ந்த காலம் வந்துவிடும் என்பதை எச்சரிக்கையாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உதாரணமாகச் சொல்கிறேன், இந்த நிதி ஆணைக்குழு நிதி ஒதுக்குகிறபொழுது, எந்தெந்த மாநிலங்கள் பின் தங்கிய நிலையில் இருக்கின்றன என்பதைக் காணுவதோடு, எந்தெந்த மாநிலங்களில் உள்ள மக்கள் பெருத்த வரிச்சுமையைச் சுமந்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும் கண்டு நிதி ஒதுக்குகிற முறை வேண்டும். திட்ட ஆணைக் குழுவும் நிதி ஆணைக்குழுவும் இணைந்து செயல்பட வேண்டும். நிதி ஆணைக்குழு என்பது தோன்றி மறைவது. சமஷ்டி நாடுகள் அமைப்பைப் பார்த்தால், பல நாடுகளில் நிதிக்குழு நிரந்தரமாக இருப்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. உதாரணமாக, ஆஸ்திரேலியாவில் நிதி ஆணைக் குழு காமன்வெல்த் கிராண்ட்ஸ் கமிஷன் நிரந்தரமாக இருக்கிறது. அங்கே மத்திய அரசு மாநில அரசுக்கு நிதிப் பங்கீடு செய்யும்போது, அந்த காமன்வெல்த் நிதி ஆணைக்குழு மாநிலங்களோடு தொடர்பு கொண்டு நிதி ஒதுக்கீடு முறைப்படுத்தப்படுகிறது. இன்னும் பல கருத்தரங்குகள் வழியாகவும் சட்ட மன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர், பொதுமக்கள் கூடிப் பேசுகின்ற நிலைமையையும் உருவாக்கியிருக்கிறார்கள். ஆகவே, ஏதோ ஐந்தாண்டுகளுக்கு இவைதான் என்று மத்திய அரசு காட்டுகிற வழிமுறையில் நாம் திட்டங்களைக் கையாளுகின்ற முறையைத் தடுத்து நிறுத்த வேண்டும். வரவு செலவுத் திட்டத்தில் கூட மாநிலத்தைச் சார்ந்த வளர்ச்சிக்கு ஒரு நிரந்தர கமிஷன் அமைக்கலாம், கவுன்சில் அமைக்கலாம் என்று விதி முறையில்

சொல்லப்பட்டிருக்கிறது. இண்டர்-ஸ்டேட் கவுன்சில் அமைத்துக்
லாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை அமைத்து நமக்குரிய ப
பெறுவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை என்பது
லுடைய குற்றச்சாட்டு. எட்டு, ஒன்பது ஆண்டுகளாக வளர்ந்து
கருத்தை பேரறிஞர் அண்ணாவின் பெயரால் நடத்த வேண்டியவர்கள் அ
வின் கொள்கை என்று சொல்லிக்கொண்டிருப்பவர்கள், மற்ற மாநில
அதைப் பார்த்து வேகமாக வளரத் துடிக்கின்ற நேரத்தில், அதைவிட்டு ஒ
கியிருப்பதும் அண்ணாவின் கொள்கை அல்ல, அண்ணாவின் நெறி அல்
என்று நாங்கள் கருதுகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**புலவர் புலமைப் பித்தன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, அண்ணாவி
கொள்கை மாநில மத்திய உறவைப் பொறுத்த வரையில் என்ன என்பன
அருள் கூர்ந்து நண்பர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொ
கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, நமது உறுப்பின
அவர்கள், அவர்களுடைய முதல் பேச்சிலேயே கற்பனை வளத்தோடு ஒன்றை
சொன்னார்கள். அவர் புலமைப் பித்தன், கவிஞர், கற்பனை வளத்தோ
சொல்வது இயல்பு. கற்பனையில் இயற்கை அடர்ந்த கற்பனை, இயல்போ
ஒட்டிய கற்பனை என்று உண்டு. இயற்கைக்கு அப்பாற்பட்ட கற்பனையி
அவர்கள் சொன்னார்கள். அத்தகைய கற்பனையில் சொல்லி அவர்களுக்கு
புரிய வைக்க முடியும் என்று நாம் எண்ணவில்லை. சூரியனை இரட்டை இ
சுட்டெரித்து நமது புரட்சித் தலைவர் ஆட்சியில் வந்துள்ள நிதிநிலை அறிக்
என்று சொன்னார்கள். சூரியனை உலகத்தில் எங்கேயும் இரண்டு இலைக
சுட்டெரித்தது கிடையா, சுட்டெரிக்கவும் முடியாது.

(பிற்பகல் 1-20)

இரட்டையிலை என்பது இரண்டு மாத காலம் அல்லது அதிகபட்சமா
இரண்டாண்டு காலத்திற்கு கொஞ்சம் நிழலைக் கொடுத்திருக்க முடியு
அல்லது சூரியனுடைய ஒளியை மறைத்திருக்கக் கூடும். ஆனால் நீண்
நெடு நாள் மறைத்துக் கொண்டிருக்க முடியாது என்பது இயற்கையா
உண்மை. இயற்கை இணைந்த கற்பனையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்க
ஏதேதோ சொன்னார்கள். அவற்றை நான் திரும்பச் சொல்ல வேண்டும் என்
கூட நினைக்கவில்லை. ஆனால் அவர் அதைக் குறிப்பிட்ட காரணத்தினால்
அவருக்குள்ள அந்த இயற்கைத் தன்மை நிறைந்த ஒரு கற்பனை வளத்தோ
சொல்லும் திறமை எனக்கு இல்லாவிட்டாலும், என்னிடமுள்ள திறமையின்
அடிப்படையில் அது பற்றி ஒரு அரை மணி நேரமாவது எடுத்துச் சொல்





அண்ணா அவர்கள் காட்டிய வழியின் அடிப்படையில் இந்த நிதி நிலை
றிக்கை அமைந்திருக்கிறது என்று ஆளும் தரப்பில் சொல்லப்பட்டது. ஆனால்
ண்ணா அவர்கள் இருந்த இரண்டாண்டு கால ஆட்சியிலும் சரி, பிறகு இருந்த
ராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1975-76 வரையில் சமர்ப்பிக்கப்பட்ட
தி நிலை அறிக்கைகளை எடுத்துக்கொண்டாலும் சரி, அவற்றோடு இந்த நிதி
லை அறிக்கையினை ஒப்பிட்டுப் பார்த்தால், இனி எந்த அரசும் எப்போதும்
ங்கேயும் அந்த மாதிரி செய்யப்போவதில்லை என்று நிச்சயமாக எடுத்துச
சால்ல முடியும். நிதி நிலை அறிக்கையில் பக்கங்கள் 3, 42, 43 இவற்றிலே
ார்த்தால், 'மத்திய அரசிடம் முறையிட்டிருக்கிறோம்', 'கேட்டிருக்கிறோம்',
வலியுறுத்தியிருக்கிறோம்' என்று தான் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர எதை
ும் எடுத்துச் சொல்லி, கேட்டதாகத் தெரியவில்லை. மத்திய அரசிடமிருந்து
மாநில அரசுகள் பெறவேண்டிய உரிமைகளைப் பெறுவதற்கு இன்று மேற்கு
வங்க அரசு ஒரு நல்ல வழி முறை வகுத்துக் கொடுத்து, மத்திய அரசோடு
பிற மாநில அரசுகளும் பேச்சு வார்த்தைகள் நடத்தி, தங்கள் உரிமைகளைக்
கோரிப் பெறுவதற்கான வழிமுறைகளை எடுத்துக் காண்பித்திருக்கிறது. அந்த
அடிப்படையில்தான், பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்களும்
'நான் எந்த ஒரு மாநில முதலமைச்சரோடும் பேச்சு வார்த்தைகள் நடத்து
வதில்லை. நண்பர்கள் என்ற முறையில்தான் பேச்சுவார்த்தைகள் நடத்து
கிறேன். முதலமைச்சர்களோடு உரிமையின் அடிப்படையில் பேச்சு வார்த்தை
களை நடத்த நான் தயாராக இல்லை. ஆனால் வேதாந்த நிலையில் பேச்சுவார்த்தை
நடத்துகிறேன்" என்று சொல்லும் ஒரு கால கட்டத்தில், எழுப்பப்பட
வேண்டிய குரல் எழுப்பப்படுகிறதா, வலியுறுத்த வேண்டிய முறையில் உரிமை
கள் பற்றி வலியுறுத்தப்படுகிறதா என்றால், இந்த அரசு அவற்றைச் செய்ய
வில்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஒரு வேலை பதுங்குவ
தெல்லாம் பாய்வதற்காகத்தான் என்று இருந்தால், அதை வரவேற்கிறேன்.
இதையெல்லாம் குறித்து நிதி அமைச்சர் அவர்கள் தங்கள் பதிலில் எடுத்துச்
சொல்லுவார்கள் என்றே கருதுகிறேன். ஆட்சியில் உள்ளவர்கள், 'இதோ
பாருங்கள், இதைச் செய்திருக்கிறோம், அதைச் செய்திருக்கிறோம்' என்று
சொல்லுவார்களானால், அதைத்தான் நாங்கள் எதிர்பார்க்கிறோம். இதைத்
தவிர வேறு ஒன்றுமில்லை. இப்படி நாங்கள் உங்களிடம் சொல்லுவதன் காரண
மாக, மத்திய அரசுக்கும் இங்குள்ள மாநில அரசுக்கும் மோதல் ஏற்பட்டுவிடும்
என்று நப்பாசைப்படும் அளவிற்கு நாங்கள் அரசியலில் பின் தங்கிய நிலையில்
இல்லை. மேலும் ஒன்றைச் சொல்லிக்கொள்ளுவேன், மாநில அரசுகள் தங்கள்
உரிமைகளைக் கேட்கும் நேரத்திலே, மத்திய அரசும் அம்மாநில அரசுகளை
மதிப்பார்களே தவிர, அதன் காரணமாக மாநில அரசின் மதிப்பு உயருமே
தவிர குறைந்துவிடாது. அந்த நிலையில் தான் நான் எடுத்துச் சொல்ல

[திரு. எம். சங்கரலிங்கம்] [1973 மார்ச் 2

விரும்புகிறேன், புயல் நிவாரண நிதிக்கு என ரூபாய் 140 கோடி கேட்ட நேரத்திலே கொடுத்த தொகை ரூபாய் 34 கோடி. அதையும்கூட நமது மாநில வளர்ச்சித் திட்டங்களுக்காகக் கொடுக்கப்படும் முன்பணமாகத் தருவதாகச் சொல்லி, பின்னர் திட்டத்திற்கான பணத்தில் இதைக் கழித்துக் கொள்ளுவோம் என்றும் சொல்லியிருக்கின்றார்கள். இப்படி மாநிலங்களிலே இயற்கையின் சீற்றம் காரணமாக சில பகுதிகள் பாழடையும்போது, மத்திய அரசிடமிருந்து கொடுக்கப்படும் உதவி நிதியை வளர்ச்சித் திட்டங்களின் ஒதுக்கப்படும் பணத்துடன் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்பது தான் நமது வாதம். கடந்த காலத்திலே பீகார் மாநிலத்திலும் வேறு சில மாநிலங்களிலும் இயற்கையினால் ஏற்பட்ட கொடுமைகளின் போது எவ்வளவு நிதி உதவியை வாரி வழங்கியிருக்கின்றார்கள் என்பதைப் பார்த்தோம். கொடுத்திருப்பதற்காகப் பாராட்டுகிறோம். ஆனால், அதே நேரத்தில் நாம் சொல்லிக் கொள்ளுவதெல்லாம், அதே நிலையில் நம்மையும் பாருங்கள் என்பதுதானே தவிர, வேறு ஒன்றுமில்லை. இனி நிதி ஒதுக்கீட்டு முறையில் நமது அண்ணா அவர்களுடைய கொள்கையினை இந்த அரசு போதிய வகையில் வலியுறுத்தவில்லை என்பது என்னுடைய குறைபாடு. அண்ணா அவர்களுடைய கொள்கையின்படி சொல்லப்போனால், மத்திய அரசிடமிருந்து நமக்கு வரவேண்டிய நிதியினை மேலும் கூட்டிப் பெறுவது என்பது ஒன்று. மொத்தமுள்ள ரூபாய் 650 கோடியில் ரூபாய் 350 கோடி திட்டத்துக்கு என வரும்போது, இதை இன்னும் கூட்டிப்பெற வேண்டும் என்பார். அதுதான் அண்ணா சொல்லி வந்தது. அந்த முறையில் பார்த்தால், அப்படி நாம் கூடுதலாகக் கேட்டுப் பெறவில்லை என்பதுதான் என்னுடைய குறைபாடு. அடுத்து, வரி விதிப்பு என்று சொல்லும்போது, மாநில மக்களுடைய வாங்குகிற சக்திக்கு ஏற்ப வரியிட்டு நாம் எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு அதைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். இங்கே ஆளும் தரப்பிலுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இந்த வரவுசெலவுத் திட்டத்தினைப் பாராட்டிப் பேசிய நேரத்திலே, எதிர்த் தரப்பிலுள்ளவர்கள் பாராட்டவில்லையே என்று குறைபடக் கூறினார்கள்; அங்கலாய்த்துக் கொண்டார்கள். பாராட்டுதல் என்பது நல்ல பண்பைச் சேர்ந்ததுதான். நானே மண்ணெண்ணெய்க்கு வரியைக் குறைத்தது பற்றிப் பாராட்ட வேண்டும் என்றுதான் இருந்தேன். ஆனால் இடையிலே மத்திய அரசு மேலும் கூட்டிவிட்டார்கள். உங்களைப் பாராட்டுகிறேன். ஆனால் அவர்களைப் பாராட்ட முடியவில்லை. இப்போது அரை பைசாதான் குறைத்திருக்கின்றீர்கள்.

**மாற்றுத் தலைவர் (திருமதி சத்தியவாணி முத்து):** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசி முடிக்கும் வரையில் அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது. அவர் சீக்கிரம் பேசி முடித்துக் கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.



1978 மார்ச் 2]

**திரு. எம். சங்கரலிங்கம்:** மண்ணெண்ணெய் மீதான வரியில் அரை, சதவிகிதம் குறைத்திருக்கின்றீர்கள், பாராட்டுகிறேன். எனவே, நமது மாநிலத்தில் மட்டுமின்றி, எந்த ஒரு மாநிலத்திலும், வரி விதிக்கும் முறையில், நமது அண்ணா அவர்கள் எடுத்துக்காட்டிய கொள்கை, தாங்குகின்றவர்களிடத்தில் வரியைக் கூடுதலாகப் பெற்று, தளர்ந்து இருப்பவர்களிடத்தில் சிறிது சலுகை காட்டி, அவர்கள் மேலுள்ள வரிப் பளுவினைக் குறைத்து, இப்படி நாம் நமது மாநிலத்தின் வருவாயைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பதாகும். அந்த முறையில்தான் 8½யை 8 என்று குறைத்துக்கொண்டார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் குறைத்தது அரை சதவிகிதம்தான். 9½ என்று இருந்து அதை 8 என்று குறைத்திருந்தால், அதைப் பாராட்டியிருக்கலாம். இதைத்தான் கருத்தில் கொண்டு ஐக்கியக் கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டார்களோ என்னவோ தெரியாது. ஆனால் பேருந்துகளின் இருக்கைகள் மீதான வரியை அதிகப்படுத்தியிருப்பதானது சாதாரண மக்களைத்தான் தாக்கப்போகிறது என்பதில் ஐயப்பாடு இல்லை. இப்படி நாம் சொல்லும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்து அவர்கள், எதிர்க் கட்சி உறுப்பினர்களே பேருந்து வைத்திருப்பவர்களுக்குக் கற்றுத் தந்து விடுவார்கள் போல இருக்கிறது என்று குறிப்பிட்டார். பேருந்து நடத்துகின்றவர்களுக்கெல்லாம் எதை எப்படிச் செய்ய வேண்டும் என்று நன்கு தெரியும். ஆகவே, அவர்களுக்கு நாம் எதையும் கற்றுத் தர வேண்டியதில்லை. நான் சொல்லுவதெல்லாம், இப்படி ஒரு வரியைப் போடும் போது, எக்காரணத்தைக் கொண்டும் இது மக்களின் மீது திணிக்கப்பட்டு விடக் கூடாது என்ற விதியையும் கூடவே சேர்த்துப் போட்டால்தான் நலமாக இருக்கும் 1ட ரூபாய், 25 ரூபாய், 35 ரூபாய் என்று உயர்த்தியிருப்பதைச் சாக்காக வைத்துக்கொண்டு அவற்றைப் பயணிகள்மீது ஏற்றிவிடக்கூடாது என்பதுதான் என் கோரிக்கை. போடும் வரி ஏழை எளியவர்களைப் பாதிக்காத வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகளை நீங்கள் எடுத்துக்கொண்டால், உங்களைப் பாராட்டலாம்.

அடுத்து, விவசாயிகள் மீதான விவசாய வரிவிதிப்பு விஷயத்தில் விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறதைப் பார்க்கிறோம். அதைப் பாராட்டிப் பேசினார்கள் பலரும். என்னைப் பொறுத்த மட்டில், தற்போதுள்ள ஐயாயிரம் ரூபாய் என்ற வரம்பை பத்தாயிரம் ருபாய்க்கு உயர்த்தியிருப்பதைப் பாராட்டுகிறேன். 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 15 ஆயிரம் ரூபாய் வரையில் இருந்ததைக் கொஞ்சம் குறைத்திருப்பதைக்கூடப் பாராட்டுகிறேன். அதற்கு மேலே 75

ஆயிரம் ரூபாய் வரையில், அதாவது இடையிலுள்ள 50 ஆயிரம் ரூபாய் வரையில் அவர்கள் கொடுக்க வேண்டிய வருமான வரியில் 5 சதவிகிதம் முதல் 10 சதவிகிதம் வரையில் குறைத்துக் கொள்ளுகிறது என்பது தாங்குகின்றவர்களிடம் சலுகை காட்டுவதாகாதா என்பதுதான். ஆக, நிதி நிலை அறிக்கையில், மத்திய அரசிடமிருந்து கேட்டுப் பெற வேண்டியதையும் கேட்டுப் பெற முடியாத நிலை மாநில மக்களிடமிருந்து வரி வசூலிக்கும்போது, தாங்குகின்றவர்களிடத்தில் அதிகமாகப் பெருமல் தளர்ந்துள்ளவர் மீது அதிகமான அளவிற்கு வரி விதிக்கப்படுகின்ற ஒரு நிலை என்று சற்று வேதனைப்படுகிறோம். வரியைப் பகிர்ந்து கொடுப்பதில் பெரிய குறை ஏதுமிருப்பதாகச் சொல்ல முடியாது. பகிர்ந்து கொடுப்பது என்னும்போது, உள்ளதைத்தான் பகிர்ந்து கொள்ள முடியும். அதிலும் குறிப்பாக நமது மாநிலம் வளர்ச்சித் திட்டங்கள் பலவற்றைக்கூட ஆண்டுகளில் திட்டி பெருமளவிற்கு அவற்றை நிறைவேற்றி, 1974-75 அல்லது 1795-76 ஆம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கையில் நமது மாநில அரசு பல திட்டங்களை நிறைவேற்றியதன் காரணமாக, வளர்ச்சி பெற்ற மாநிலமாக இருக்கிறது என்றெல்லாம் சுட்டிக்காட்டியிருக்கிறது. அதற்குப் பொறுப்பு இதற்கு முன்பிருந்த அரசுதான் என்பதை யாரும் மறுக்க முடியாது. வளர்ச்சியுற்ற மாநிலம் என்று இப்படியே விட்டுவிடாமல், அந்த வளர்ச்சி மேலும் மேலும் பலப்படுத்தப்பட்டால்தான், மாநிலமும், மக்களும் நல்ல நிலைமையில் இருக்க முடியும். ஏற்பட்டுள்ள வளர்ச்சிக்கு நாம் மேலும் ஆக்கம் கொடுக்காமலிருந்தால், நாம் கீழ் நோக்கிப் போய்விடுவோமோ என்றுதான் நான் கவலைப்படுகிறேன். ஆகவே, அதற்கு உரிய முறையில், இங்கே அமைந்துள்ள அரசு எந்தெந்த வகையில் நிதி ஒதுக்கீட்டினைப் பெற வேண்டுமோ அதைப் பெற்று நமது மாநிலத்தின் மேம்பாட்டுக்கென பாடுபட வேண்டும். இதைச் செய்தோம், அதைச் செய்தோம் என்று சொல்லுகின்றார்கள். ஆனால் எதையும் புதிதாகச் செய்துவிடவில்லை. எடுத்துச் சொல்லப்பட்டுள்ள திட்டங்களில், வேளாண்மைத் துறை முதல் சுற்றுலாத் துறை வரையில் போடப்பட்டுள்ள 25 துறைகளுக்கான வளர்ச்சித் திட்டத்தில் ஒவ்வொரு ஆண்டு நிதி நிலை அறிக்கையிலும் எந்த அளவிற்கு ஒதுக்கீடு செய்திருக்கின்றார்களோ—கடந்த கால நிதி நிலை அறிக்கைகளை வைத்துக்கொண்டு பார்த்தால், இதன் உண்மை நன்கு புரியும். அப்படி ஒதுக்கப்பட்டுள்ள பெர்ஸெண்டேஜோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இப்போதும் அதே அளவில்தான் அனைத்துத் துறைகளுக்கும் ஒதுக்கியிருக்கின்றார்களே தவிர புதிதாக எந்த ஒரு திட்டத்தையும் இவர்கள் ஒதுக்கித் தந்துவிடவில்லை என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.





(பிற்பகல் 1-30)

ஆனால் ஒன்றிரண்டு புதிய திட்டங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. அதில் ஒன்றுதான் காகிதத் தொழிற்சாலை. காகிதத் தொழிற்சாலையைப் பற்றிப் பேசும்போது, தற்போது தலைமை தாங்கும் மாண்புமிகு உறுப்பினர் திருமதி சத்தியவாணி முத்து அவர்கள்கூட நேற்றைய தினம் பாரதியாரின் பாடலைச் சொல்லி, 'காகிதம் செய்வோம், நல்ல ஆயுதம் செய்வோம்' என்று குறிப்பிட்டார்கள். நான் அதைக் கேட்டு அப்போது மகிழ்ச்சியடைந்தேன். காகிதத் தொழிற்சாலைக்கான மூலப் பொருள் இருக்கும் நமது மாவட்டத்திற்கும் அப்படிப்பட்ட ஒரு காகிதத் தொழிற்சாலையை கேட்க வேண்டும் என்றுகூட நான் நினைத்தேன். ஆனால் அதற்கான துணிவு எனக்கு வரவில்லை. காரணம் அந்தத் தொழிற்சாலைக்கான நிதி ஒதுக்கீடு இந்த நிதிநிலை அறிக்கையிலே எங்காவது இருக்கிறதா என்று பார்த்தால், எங்கேயும் இருப்பதாகத் தெரியவில்லை. இதற்காக நிதி ஒதுக்கீடு செய்ததாகவே தெரியவில்லை எனவே நான் எங்கள் மாவட்டத்திற்கும் ஒரு தொழிற்சாலை வேண்டும் என்று கேட்கிற துணிவு எனக்கு வரவில்லை. நிதி ஒதுக்கீடு ஏதுமில்லாமல் அறிக்கையிலே மட்டும் சொல்லப்பட்டிருக்கிறது. இது ஒரு காகிதத் திட்டம். காகித ஆலையைப் பற்றிய திட்டமாகையால், இதையும் காகிதத் திட்டமாகவே கொடுத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். நிதி ஒதுக்கீடு செய்தால் அல்லவா தொழிற்சாலையைத் துவங்கலாம். எனவே அதைப்பற்றிப் பேசிப் பயனில்லை என்று நான் எண்ண வேண்டியிருக்கிறது. இவ்வாறு இந்தத் திட்டத்திற்காக நிதி ஒதுக்காதது ஒரு குறைபாடு என்பதைச் சொல்லிக்கொண்டு, நிதியமைச்சர் அவர்கள் இது குறித்து பதில் சொல்லும்போது விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 111 கோடி ரூபாய் குளங்களைத் தூர் வார செலவழிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனக்கு சரியாகப் படிக்கத் தெரியாமல் இருக்கலாம். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பொருளாதாரத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள். நான் பொருளாதாரத்தில் எம்.ஏ. பட்டம் பெறவில்லை. ஆனால் எனக்கிருக்கும் அனுபவத்தை வைத்துப் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே இதைப் பற்றியும் நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே ஒருவருக்கும் தெரியாமல் ஒரு இடத்திலே நிதி அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. இதைப் பகிரங்கப்படுத்தினால் நல்லது என்று சொல்லிக்கொள்கிறேன்.

[திரு. எம். சங்கரலிங்கம்] [1978 மார்ச் 2

சென்ற ஆண்டுகூட நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டது. வீடுகள் தோறும் மருந்து வந்து நிற்கும் என்று சொன்னார்கள். எங்கே வந்தது என்று பார்த்தால், பழைய மொபைல் வேன்கள்தான் மருந்துகள் எதுமில்லாமல் சுற்றிக் கொண்டிருக்கின்றன. மருந்தோடு சுற்றுகிற வேன்களைக் காண முடியவில்லை. இப்படித் திட்டங்களை அறிவிக்கிறோமே, தவிர, அவைகளை அமுல்படுத்துகிறோமா என்றால், இல்லை. எங்கள் ஆட்சியில் உருவாக்கப்பட்ட வளர்ச்சித் திட்டங்கள்தான்—அவைகள் முறையாக உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டதால் இன்னும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனவே தவிர, புதிய திட்டங்கள் எதுவும் காணோம். பழைய வளர்ச்சித் திட்டங்களை நிறுத்த முடியாத காரணத்தால், அவைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. நீங்கள் அவைகளை நிறுத்திவிட்டால், அந்தப் பகுதியிலே வளர்ச்சி ஏற்படும் என்று தொடர்ந்து கொண்டிருக்கிறீர்களே தவிர, புதிய திட்டங்கள் எதும் இல்லை.

அடுத்து, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் சொல்லும் கருத்து தவறோ சரியோ தெரியாது. தவறு என்றால் சொல்லுங்கள், திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். சென்ற ஆண்டுகூட நிதித் துறை எல்லா இலாகாத் தலைவர்களையும் அழைத்து, ஆண்டுக் கடைசியில் இந்த அளவுக்கு நிதிப் பற்றுக்குறை இருக்கிறது, எனவே திட்டங்களை எங்கெங்கே நிறுத்த முடியுமோ அங்கங்கே நிறுத்துங்கள் என்று கூறியதாம். சாமர்த்தியமாக நிதியைக் குறைவாகச் செலவு செய்த துறையினர் பாராட்டப்பட்டதாகக் கூட கூறப்பட்டது. இந்தத் தகவல் தவறாக இருந்தால், திருத்திக் கொள்கிறேன். இப்படி மக்கள் மத்தியில் விளம்பரத்திற்காக அல்லது மக்களுக்கு ஓரளவுக்குத் திருப்தி ஏற்படுத்துவதற்காக திட்டங்களை அறிவிக்கிறோமே தவிர, அமுல்படுத்துவதற்கான எண்ணத்தோடு செயல்படுவதில்லை என்று குற்றம் சாட்டுகிறேன். அப்படியே இந்தத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்று எண்ணம் இருந்தாலும், இந்தத் திட்டங்களுக்கான உதவியையும், நிதி ஆதாரத்தையும் போரிட்டுப் பெறுகிற, உரிமையோடு கேட்டுப் பெறுகிற உரிமையோடு வாதிட்டுப் பெறுகிற திறமை இல்லையோ என்று ஐயப்படுகிற சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**திரு. பி. மாணிக்கம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, அவை இன்னும் எவ்வளவு நேரம் நீடிக்கும் என்பதை அறிவித்தால், நன்றாக இருக்கும்.



1978 மார்ச் 2]

**மாற்றுத் தலைவர் (திருமதி சத்தியவாணி முத்து):** இன்னும் ஒரு பத்து நிமிஷத்தில் முடிந்துவிடும்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** என்னைப் பொறுத்தவரையில், அவையை இப்போது முடித்துக்கொண்டு, மீண்டும் பிற்பகலில் அமைச்சர் அவர்கள் பதில் கூறுவதற்கு முன்னால் 15 நிமிஷம் எனக்குத் தந்தாலும் போதும்.

**மாற்றுத் தலைவர் (திருமதி சத்தியவாணி முத்து):** இல்லை. இல்லை. அவை உறுப்பினர்கள் விரும்பும் வகையில் நீங்கள் இப்போதே பேசி முடித்து விடலாம்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** எனவே, நமது அரசு இந்த நிதியைத் திரட்டுவதிலே தன்னுடைய கடமையைச் செய்யத் தவறி விட்டது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்து அவர்கள் இங்கே பேசுகிறபோது, மிக அழுத்தந்திருத்தமாக ஒன்றைக் குறிப்பிட்டார்கள். இதற்கு முன்னாலே பதவியில் இருந்த அரசு இந்த நாட்டு மக்களையெல்லாம் குடிக்கச் செய்து விட்டது. குடிக்க மறந்திருந்தவர்களையெல்லாம் குடிக்கச் செய்து, மீண்டும் குடிபழக்கத்தைக் கொண்டு வந்துவிட்டது என்று சொன்னார்கள். இந்தச் சந்தர்ப்பத்திலே நான் ஒன்றை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முன்னாலே இருந்த அரசு, மதுவிலக்குத் திட்டத்தைத் தற்காலிகமாக ஒத்தி வைக்கிறபோது, எவ்வளவு வருத்தத்தோடு அந்தக் காரியத்திலே ஈடுபட்டது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அந்த நிதிநிலை அறிக்கையிலேயே அப்போது இருந்த சூழ்நிலையை அன்றைய முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டினார்கள். இதைப் போன்ற நிதிநிலை அறிக்கையில் கூட அதைப்பற்றிச் சொல்லாமல் ஒருவேளை யாராவது அதைக் கவனிக்காமல் விட்டுவிடுவார்களோ என்று நினைத்து, மது விலக்குத் திட்டத்தை ஒத்தி வைக்கவேண்டிய சூழ்நிலையைக் குறித்து, அன்றைய பொருளாதார சூழ்நிலையைக் குறித்து தனியானதோர் நிதிநிலை அறிக்கை ஒன்றில் சொல்லிவிட்டு, மதுவிலக்குத் திட்டத்தை ஒத்தி வைத்தார்கள். அப்போது அவர் சொன்னார். இதை நான் தற்காலிகமாக ஒத்தி வைக்கிறேன். மத்திய அரசு, ஒன்று இழப்பைத் தர வேண்டும், இல்லை என்றால் இந்தியா முழுவதும் மதுவிலக்கைக் கொண்டு வரவேண்டும் என்ற வேண்டுகோளையும் அவர்கள் விடுத்தார்கள். இந்த அரசு மதுவிலக்குத் திட்டத்தைத் தீவிரமாக அமுல் நடத்தப்

போகிறோம் என்று கூறுவதுபற்றி எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. ஆனால் இந்த நேரத்தில் மதுவிலக்குத் திட்டத்தை அமுல் படுத்துவதன் காரணமாக நாம் இழக்கின்ற 140 கோடி ரூபாயை மத்திய அரசு தந்தாக வேண்டும் என்று அழுத்தந்திருத்தமாக வலியுறுத்தி அதைப் பெறுவதற்கு நீங்கள் என்ன முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

இப்படி அதைப் பெறுகிற முயற்சியில் ஈடுபடாமல் முன்னாலே இருந்த ஆட்சியைப்பற்றிக் குறை சொல்லிக்கொண்டிருப்பதிலே பயனில்லை. ஒன்று மதுவிலக்கை இந்தியா முழுவதும் மத்திய அரசு அமுல் செய்ய வேண்டும்; இல்லையென்றால் ஏற்படுகிற இழப்பை மாநில அரசுக்குத் தர வேண்டும். அதுவரை மதுவிலக்குத் திட்டத்தை ஒத்தி வைக்கிறோம் என்று எங்கள் ஆட்சியில் சொல்லி மீண்டும் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினோம். தற்காலிகமாக ஒத்தி வைத்தபோது, யாராரெல்லாம் தங்களுடைய சொந்தக்காரர்கள் பேரில் உரிமம் பெற்று, லைசென்ஸ் பெற்று பயன் அடைந்தார்களோ அவர்கள்தான் இன்றைய தினம் மேடைகளில் மதுவிலக்குத் திட்டத்தை அப்போது ஒத்தி வைத்தது குறித்து மிகுந்த குறைபட்டுக் கொண்டிருக்கிறார்களே தவிர, உண்மையிலேயே இந்த நாட்டின் மீது அக்கறை கொண்டவர்கள் இன்னமும் முந்தைய ஆட்சியைப் பாராட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

திரு. எஸ். முத்து: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மதுவிலக்குத் திட்டத்தை ஒத்தி வைத்தபோது அதற்கு யார் வழிகாட்டியாக இருந்தார்கள் என்பதையும், அப்போது யார் யார் லைசென்ஸ் எடுத்து வியாபாரம் செய்தார்கள் என்பதையும் தெரிந்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். முதலில் இதை ஆரம்பித்தவர் அவருடைய தலைவர்தான் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அவருடைய தலைவருடைய குடும்பத்தார்தான்.

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்து அவர்கள் எங்களுடைய தலைவருடைய குடும்பத்தினர்தான் அந்தத் தொழிலை ஆரம்பித்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். அவர் இந்தத் தகவலை அவையில் சொன்னதால், அதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்வது நல்லது. யார் யார் என்று விவரம் சொன்னால், எங்களுக்கும் அவைக்கும் தெரிந்துகொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது சொல்லாவிட்டாலும், அவர் பின்னாலாவது சொல்லலாம்.





திரு. எஸ். முத்து: இப்போதே சொல்கிறேன். உங்கள் தலைவர் அவர்களுடைய சொந்தப் பத்திரிகையில் கேஷியராக இருந்த ஒருவரை அங்கேயிருந்து வெளியேற்றி, அவருடைய பெயரில் மாநிலம் முழுவதற்கும் ஒரு கம்பெனியினுடைய ஏஜென்சி எடுத்தார்கள். பல ஆண்டுக்காலம் 'முரசொலியில்' வேலை பார்த்து வந்த கேஷியர் பேரில் லைசென்ஸ் எடுத்து, இந்த மாநிலம் முழுவதற்குமான ஒரு கம்பெனியின் ஏஜென்சியை எடுத்தார்கள்.

திரு. எம். சங்கரலிங்கம்: மாற்றுத் தலைவர் அவர்களே, முதலில் உறுப்பினர் திரு. முத்து அவர்கள் பேசும்போது, எங்களுடைய தலைவரின் குடும்பத்தினர் என்று குறிப்பிட்டார்கள். இப்போது முரசொலிப் பத்திரிகையில் இருந்த கேஷியர் ஒருவர் என்று சொல்கிறார்கள். முதலில் சொன்னதை மாற்றிவிட்டு முரசொலிப் பத்திரிகையில் கேஷியராக இருந்தவரைக் கொண்டு ஏஜென்சி எடுத்தார்கள் என்று சொல்கிறார்கள். முரசொலிப் பத்திரிகையில் எழுதிக்கொண்டிருந்த 'அடியார்' இப்போது எங்கிருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியும். அன்றைக்கு அந்தப் பத்திரிகையில் இருந்தவர்கள் இன்றைக்கு எங்கெங்கே இருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். மதுரை நகரத்திலே பெறப்பட்ட பல்வேறு விதமான லைசென்ஸ்களெல்லாம் யார் பேரில் இருந்தன என்பதும், அப்போது அவர்கள் யார் யாரோடு உறவு வைத்துக் கொண்டிருந்தார்கள் என்பதும் எல்லோருக்கும் தெரியும். நான் இப்போது யாரையும் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை. யாராக இருந்தாலும், நான் அதை வற்புறுத்த விரும்புகிறேன். மதுவிலக்குப் பற்றி மற்றவர்கள் குறை சொல்லாத அளவுக்குப் பார்த்துக் கொள்ள வேண்டும். அந்த நிலைமைகள் நீடிக்காத அளவுக்குப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். எனவே இந்த பிரச்சினையை நான் இப்போது வளர்த்துக்கொள்ள விரும்பவில்லை.

திரு. எஸ். முத்து: தலைவரவர்களே . . . . .

மாற்றுத் தலைவர் (திருமதி சத்தியவாணிமுத்து): அந்த மூன்று நிமிட விவாதத்தைக் குறிப்பேட்டிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அறிவழகன்: . . . . . *

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

திரு. எம். சங்கரலிங்கம் : அடுத்து, நான் சொல்ல விரும்புவதெல்லாம் இந்த மதுவிலக்குக் காரணமாக மாநிலம் நிதி இழப்புக்கு ஆளாகிவிடாமல் இருக்கவேண்டும். நம் இழப்புத் தொகையை ஈடாகப் பெறவேண்டிய முயற்சியிலே ஈடுபட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மதுவிலக்கை நாம் சிறப்பாக அமுல் நடத்துகிறோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எல்லா இடங்களிலும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் சொல்வதை நான் பாராட்டுகிறேன். ஆனால் மது விலக்கு அமுல் நடத்தப்படுவதைப்பற்றிச் சொல்லும்போது, நாம் இன்னும் ஐயப்பாட்டு நிலையில்தான் இருக்கிறோம். மதுவிலக்கை யார் அமுல் நடத்த வேண்டுமோ அந்தப் போலீஸ் அதிகாரிகளில் சிலர் ஈடுபட்டிருக்கிறார்கள். நேற்றுக்கூட இந்த மாமன்றத்திலே மாண்புமிகு அங்கத்தினர் திரு. தங்கப்பாண்டியன் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசுகின்றபோது, காரைக்குடியில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். போலீஸ்காரர் செய்த தவறான செய்கையைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். மது போதையில் இருந்ததால்தான், அத்தகைய தவறு நேர்ந்தது. மனிதனையும் மிருகமாக ஆக்குகின்றது. மதுவிலக்கினை அமுல் படுத்தவேண்டிய அதிகாரிகளே இழுக்கினைத் தேடித் தந்திருக்கிறார்கள். அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக 13-2-1978ல் பூதப் பாண்டி என்ற ஊரில், ஜீவா அவர்கள் பிறந்த ஊரிலே ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது. அந்த ஊர் போலீஸ் ஸ்டேஷன் சப்-இன்ஸ்பெக்டர் இரவு 12 அல்லது 12-30 மணி அளவிலே மது போதையிலே சென்று இன்னொரு பஞ்சாயத்து யூனியன் கல்வி விரிவு அதிகாரியாக இருக்கின்றவர் ஒருவர் வீட்டுக் கதவைத் தட்டியிருக்கிறார். அவர் கதவைத் திறந்து பார்த்த போது, அந்த அதிகாரி முழு குடிபோதையிலே அங்கே நிற்பதைப் பார்த்து விட்டு அவர் கதவை அடைக்க, இவர் திறக்க, ஊரார் கூச்சலிட்டு போலீஸ் ஸ்டேஷனிலே போய் சொன்னார்கள். அந்த ஹெட் கான்ஸ்டபிள் எண். கே. கே. 569, சப் இன்ஸ்பெக்டர் பொறுப்பில் இருப்பவர் இப்படி நடந்திருக்கிறார். போலீஸ ஸ்டேஷனில் சொன்னபோது, அவரை எப்படிக் கைது செய்வது என்று இருந்துவிட்டிருக்கிறார்கள். அதன் பிறகு ஊரே திரண்டு அவரைப் போலீசிலே ஒப்படைக்க வேண்டுமென்று முயற்சித்தது. அவரைக் கட்டாரியாலேயே குத்திவிட்டார்கள். அதற்குப் பின்னர் அங்கே நகரில் இருந்த திரு. கிருஷ்ணன், எம்.எல்.ஏ.விடம் சென்று, பிறகு அவர்கள் மாவட்ட ஆட்சியாளரிடமும், போலீஸ் அதிகாரிகளிடமும் சொல்லி, பிறகு ரிசர்வ் போலீஸ் வேன் வந்தது. குடிபோதையில் இருந்த அவரைப் பிடித்து அவர்களிடம் ஒப்படைத்தார்கள். இது குறித்து அந்தப் போலீஸ் அதிகாரிகள் அந்





ஊரைச் சேர்ந்த ஆறு பேர்களை அழைத்து, விசாரணை செய்தார்கள். அங்கே வந்து விசாரணை செய்துவிட்டுப்போன பிறகு மாலை 6 மணிக்கு இந்த ஆறு பேர்களின்மீதும் பெரிய குற்ற வழக்குகளைப் போட்டுவிட்டு, போலீஸ் அதிகாரி மட்டும் குடிபோதையிலே இருந்தார் என்று வழக்குப் போட்டிருக்கிறார்கள். நமது ஜீவா அவர்கள் ஊரிலே இது நடந்திருக்கிறது. அதுபற்றி என்னிடம் ஒரு மனுகூட கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடம், தலைவரவர்களே, தங்கள் அனுமதியோடு கொடுக்கின்றேன். எதற்காக இதைச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால், மதுவிலக்கினாலே நமக்கு நிதி இழப்பு, மேலும் அவமானம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிதி இழப்பை ஈடுகட்ட வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சுட்டிக்காட்டினேன்.

நிறையப் பேச வேண்டும் என்றுதான் நினைக்கிறேன். நேரமில்லை என்பதற்காகச் சுருக்கிக்கொள்கிறேன். நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மற்ற அமைச்சர்கள் எல்லோரும் இப்போது அவை முடிந்தவுடனே சட்ட மன்ற விடுதிக்குப் போய்ப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஸ்பீக்கர் இருக்கக்கூடிய இடத்தின் சுற்றுப்புறம், மற்றும் சட்டமன்ற விடுதியின் சுற்றுப்புறங்கள் எல்லாவற்றையும் பார்க்க வேண்டும். பாதை எல்லாம் குப்பையாக இருக்கின்றது. நமது சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்கியிருக்கக்கூடிய அந்த விடுதியைச் சுற்றிலும் எங்கு பார்த்தாலும், சாம்பல், இலைகள் என்று கிடக்கின்றன. அங்கு சுத்தமே இல்லை. அங்கு எப்படி இருக்கின்றது என்பதைப் பார்க்க வேண்டும். இதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாட்டையே எப்படியெல்லாம் சுத்தப்படுத்துவது, எந்த இடம் எப்படி இருக்கவேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் இங்கு பேசுகிறோம். சட்ட மன்ற உறுப்பினர்கள் விடுதி எப்படி இருக்கிறது என்று முதலில் பார்க்க வேண்டும். நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஐரோப்பா கண்டமெல்லாம் சுற்றிப் பார்த்தவர். சட்ட மன்றங்கள் கேரளாவிலே, கர்நாடகத்திலே, மகாராஷ்ட்ராவிலே போய்ப் பார்த்தால், எவ்வளவு அழகாக அமைந்திருக்கின்றன; இதையெல்லாம்பற்றி நாம் சிந்திக்க வேண்டும். நேற்றுக் கூட விடுதிப் பகுதிகளைப் பார்த்தேன். சட்ட மன்ற விடுதிக்குப் பின்னாலே விளக்கில்லாமல் இரவு நேரத்திலே அண்ணா சாலையிலிருந்து நடந்து வந்திருக்கிறேன். கூடுமான வரையில் நடந்துவர முடியாத அளவுக்கு இருள் சூழ்ந்திருக்கின்றது. ஆகவே நடந்து வருகிறபோது, 8½ அல்லது 9 மணி அளவிலேயே லைட் இல்லாமல் வரவேண்டியதாக இருக்கிறது. அதை நீங்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாம் பெரிய வளர்ச்சித் திட்டங்களை எல்லாம் தீட்டிக்கொண்டிருக்கிறோம். ஆனால் நாம் தங்கி

வாழ்கின்ற பகுதியிலே நமது திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றது. நமது அமைச்சர்களும் அந்த வழியாக அடிக்கடி செல்கின்றார்கள். அந்தப் பகுதிகளே இப்படி இருந்தால், மாநிலம் முழுவதும் எப்படி இருக்கும் என்பதை அரசு எண்ணிப்பார்க்க வேண்டும். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். முதல் சோறே இப்படி இருக்கின்றது. மற்ற இடங்கள் எப்படி இருக்கும் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். நமது நிதிநிலை அறிக்கையிலே அவர்கள் மாநில மத்திய உறவுபற்றிக் குறைப்பட்டதாகச் சொன்னார்கள். மத்திய மாநில உறவைச் சீரமைப்பதற்கும் நமது நியாயமான உரிமைகளைப் பெறுவதற்கும் நாம் அழுத்தந்திருத்தமாக மத்திய அரசிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். நமது முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் இந்த மாதிரி சபையும் அறிஞர் அண்ணா அவர்கள் பாதையில் நின்று இந்த உரிமைக் குரலைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்தியாவிலேயே நீங்கள்தான் தலைமை ஸ்தானத்தில் இருப்பவர்களாக, தலைமை தாங்குபவர்களாக இருக்க வேண்டுமே தவிர, தாழ்ந்துவிடக்கூடாது என்று எங்கள் கட்சி சார்பிலே சொல்லிக்கொள்கிறேன். நீங்கள் எடுக்கின்ற எந்த முயற்சிக்கும் எங்களுடைய உறுதுணை உண்டு என்பதைச் சொல்லி அமைகிறேன், வணக்கம்.

மாற்றுத் தலைவர் (திருமதி சத்தியவாணிமுத்து) : அவை மீண்டும் பிற்பகல் 4 மணிக்குக் கூடும். அதுவரையில் அவை ஒத்திவைக்கப்படுகிறது.

(பிற்பகல் 1-50)

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 4-00)

(அவை பிற்பகல் 4 மணியளவில் மீண்டும் கூடியது.)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

## 5. 1978-79 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, 1978-79 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை நான் இங்கே தாக்கல் செய்து, அதை அடிப்படையாகக் கொண்டு மேலவை உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துக்களை வெளியிட்டிருப்பதை நீங்களும் கேட்டிருக்கிறீர்கள். சில சந்தர்ப்பங்களில் நானும் அந்தப் பேச்சுக்களை கேட்கின்ற வாய்ப்பினைப் பெற்றேன். இரண்டு அவைகளும் ஒன்றுக்கொன்று ஒரு மணி நேர இடைவெளியில், ஒரே நேரத்தில் நடைபெறுகிற காரணத்தாலே, இங்கு





[ந]டைபெற்றுக் கொண்டிருந்த நிதிநிலை அறிக்கை பற்றிய விவாதங்களை, [அ]னைவருடைய பேச்சுக்களைக் கேட்கின்ற வாய்ப்பை நான் பெறாமல் போனேன். [அ]தற்காக மிகவும் வருந்துகிறேன். வேறு வழியில்லாத நிலைமை காரணமாக, [அ]ந்தச் சூழ்நிலை ஏற்பட்டுவிட்டதென்பதை எதிர்க் கட்சித் தலைவரவர்கள் [இ]ன்றைக்குக் காலையிலே சுட்டிக் காட்டினார்கள். இருந்தாலும் நான் இங்கே [இ]ல்லையே தவிர, இங்கே உறுப்பினர்கள் என்னென்ன கருத்துக்களைச் சொன்[னா]ர்களோ, அந்தக் கருத்துக்களை எல்லாம் நமது மேலவை முன்னவரவர்களும், [மே]லவையில் செயலாளராகப் பணியாற்றுகிறவர்களும் திரட்டி, எனக்கு [வ]ழங்கினார்கள். அந்த அடிப்படையிலே எனது கருத்துக்களைத் தெரிவிக்க [வி]ரும்புகிறேன். அந்தக் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு முன்பு, நான் எனது [பே]ச்சைப் பேரவையிலே தொடங்கும்போது, நிதிநிலை அறிக்கையின் கடைசிப் [ப]க்கத்தோடு தொடங்கினேன் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அந்தப் [ப]குதியை இங்கே படித்துக் காட்ட நான் விரும்புகிறேன்.

"தலைவரவர்களே, மன நிறைவோடு இந்த நிதி நிலை அறிக்கையை அவையின் முன் வைக்கிறேன். அமரர் அண்ணாவின் ஆசைக் கனவுகளுக்குப் படிப்படியாக வடிவம் சமைத்திடும் முயற்சிகளில் இது ஒன்று எனக் கூறிக் கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன். எல்லாம் இதிலே அடங்கியிருக்கிறது எனக்கூறி என்னை ஏமாற்றிக் கொள்ள விரும்பவில்லை; சென்றடைய விரும்பும் இலட்சிய முகட்டின் தோற்றம் கண்ணெதிரே தெரிகிறது. வயற்காடுகளில், தொழிற்சாலைகளில், மலைப் பகுதிகளில், கடலோரப் பகுதிகளில், பின் தங்கிய இடங்களில் தங்களது வியர்வையைச் சிந்தி, பிறருக்காக காலாகாலம் உழைத்து, தங்களை உருக்குலைத்துக் கொண்டு, மற்றையோர்களை உருவாக்கி வாழ வைக்கும் அந்த நடமாடும் தெய்வங்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை, மன மகிழ்ச்சியை, நிறைவை, நம்பிக்கையை ஏற்படுத்திட அரசு மேற்கொள்ளும் பல முயற்சிகளின் ஒரு கூறுதான் இந்த நிதிநிலை அறிக்கை" என்று குறிப்பிட்டேன். இங்கே பேசுகிறபோது, நான் அதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கைபற்றிக் கருத்துத் தெரிவித்தவர்களிலே சிலர் இதிலே என்ன இருக்கிறது என்று கேட்டவர்கள் உண்டு; இதிலே ஒன்றுமில்லை என்று சொன்னவர்கள் உண்டு; இதிலே புதுமையில்லை, புரட்சியில்லை என்று புகன்றவர்கள் உண்டு; இது ஒரு பட்ஜெட்டா என்று கேட்டவர்கள் உண்டு; இதுதான் அரசாங்கத்தின் கொள்கை அறிவிப்பா என்று குமுறியவர்கள் உண்டு; தாங்கள் இருந்திருந்தால், இதைவிட ஒரு படி மேலே போவோமென்று சொல்ல முயற்சித்தவர்கள் உண்டு. நான் ஒன்றைத் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையில் வாண வேடிக்கையில்லை, ஒத்துக்கொள்கிறேன்;

வான வில்லின் வண்ண ஜாலங்கள் இல்லை, மறுக்கவில்லை. ஆனால் நம்பிக்கை ஊட்டுகிற நட்சத்திரமாக, சமுதாயத்திலே ஒரு சந்தடியற்ற பெரிய புரட்சியை உண்டாக்குகிற அளவுக்கு நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறதென்பதில் ஐயமில்லை என்று கூறிக்கொள்வதில் பெருமிதம் அடைகிறேன், மகிழ்ச்சி அடைகிறேன் என்று அவை அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கே சமர்ப்பிக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையில் ஒருசில குறிப்பிட்ட வரி விதிப்பு முறைகளை நீங்கள் அறிவீர்கள். அதிலே ஒன்று, மோட்டார் வாகனங்களுக்குப் விதிக்கப்பட்ட வரி. அதைப்பற்றிப் பேசும் போது, சில கருத்துக்கள் சொல்லப்பட்டன. இவைகளைப் பற்றியெல்லாம் நான் சொல்வதற்கு முன்னால், நமது மாண்புமிகு உறுப்பினர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நிதிநிலை அறிக்கையைப் படிக்கிறபோது, ஒரு பக்கத்தை எடுத்து வைத்துக்கொண்டு கருத்துக்களை எடுத்துச் சொல்லும் பக்குவம் வராமல், அனைத்துப் பக்கங்களையும் படித்துப் பார்த்த பிறகு, தங்களுடைய மேலான கருத்துக்களை வெளியிடுவது நியாயமாக இருக்குமென்ற எனது உணர்வை அவையின் முன்வைக்க விரும்புகிறேன். இந்த பட்ஜெட்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு; அதிலே எவ்வளவு துண்டு விழுகிறது என்பதுபற்றி உறுப்பினர்களெல்லாம் சொன்னார்கள். இதில் விழுகின்ற துண்டுத் தொகை ஏறத்தாழ 34 கோடி இருக்குமென்றும், போடப்பட்டிருக்கிற வரி விகிதங்கள் மூலம் ஏறத்தாழ 9.5 கோடி ரூபாய் கிடைக்க வாய்ப்பு இருக்குமென்றும், அதன் மூலம் ரூ. 24 கோடிக்குப் பக்கத்தில் பட்ஜெட் துண்டு விழுந்திருக்கிறதென்றும் இங்கே உள்ள உங்கள் எல்லோருக்கும் தெரியும் எடுத்துச் சொன்னால். பேசியவர்களிலே சிலர், 9½ கோடி ரூபாய் என்பது 20 கோடி ரூபாய்க்கு மேலே வந்தாலும் வருமென்று தெரிவித்தார்கள். எந்த அடிப்படையில் இதைத் தெரிவித்திருப்பார்கள் என்று கருதிப் பார்க்கிறேன். மிகத் தந்திரமாக இந்த பட்ஜெட்டில் வரிகளைப் போட்டு, அதன் மூலம் கிடைக்கக்கூடிய தொகை ரூ. 9½ கோடி என்று சொல்லிவிட்டு, 20 கோடி ரூபாய்க்கு இதன் மூலம் வசூல் செய்ய இருக்கிறார்களென்று அவர்கள் தெரிவித்தது உண்மையானால், எங்களது ராஜதந்திரத்தைப் பாராட்டியதற்காக நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 4-10.)

அவ்வளவு தொகை வருமானால், அது எவ்வளவு உதவிகரமாக இருக்குமென்று அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று நான் இந்த நல்ல சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



நமக்கு நிதிப் பற்றாக்குறை இருக்கிறது. அந்தப் பற்றாக்குறை இருக் றது என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் எனக்கு ஒன்று ட்டும் புரியவில்லை. இங்கேயிருக்கிற பெரிய, பொறுப்புணர்ச்சியுள்ள, படிப் ள்ள, விவரம் தெரிந்த, அனுபவத்தில் முதிர்ச்சி பெற்ற பெரியவர்கள் எனக்கு ழிகாட்டியாகவும், துணையாகவும்- guide philosopher and friend ஆக ருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். வரி விதித்திருக்கிறார்களே ன்று ஒரு பக்கம் சகதி வாரிவீசுகிறார்கள்; எப்படி துண்டு விழுவதைச் சரிக் ட்டப் போகிறார்கள் என்று ஒரு பக்கம் வேதனையோடு சங்கடப்படுகிறார்கள். ரி விதிக்கக் கூடாது என்று ஒரு பக்கத்திலே சொல்லிவிட்டு, இந்தத் திட்டங் களுக்கு ஒதுக்கியிருக்கிற பணம் போதுமா என்று கேட்கும்போது, இன்னின்ன பொருள்களுக்கு வரி போடுங்கள், அப்படி வரி போட்டால் இவ்வளவு பணம் கிடைக்கும் என்று வழிகாட்டி உதவுவதற்கும், சொல்வதற்கும் இங்கு யாரும் தயாராக இல்லை. "நீ நிதியமைச்சராக இருக்கும்போது, நான் ஏன் யோசனையைக் கூற வேண்டும்?" என்று சொல்லக் கூடும். என்னை நிதியமைச்சராகப் பிரித்துப் பார்க்காமல், மொத்தத் தமிழகத்தைக் கட்டிக் காத்து வருகிற அரசின் ஒரு அங்கம் என்ற முறையிலே அதிலே உங்களுக்கும் பங்கு உண்டு என்ற அடிப்படையில் நீங்கள் எல்லாம் ஒத்துழைக்கலாம். எந்தெந்த இனங்களில் வரி போடலாம் என்று தெரிவித்திருப்பார்களேயானால், நான் அவர்களுக்கு நன்றியுள்ளவனாக இருப்பேன்.

அதற்கு மாறாக வரி போடப்பட்டிருக்கிறது என்று சொல்லிவிட்டு, "சோப்புக்கு வரியா? பிறகு டீசலுக்கு வரியா?" என்று இப்படியெல்லாம் அடுக்கடுக்காகக் கேட்டுக்கொண்டு போய் எனது அருமை நண்பர் திரு தாமோதரன் அவர்கள் பேசும்போது, "சென்ற முறை சமர்ப்பித்த பட்ஜெட்டில் பெர்ஃபியூமுக்கு வரி போட்டார், இந்த முறை சோப்புக்கு வரி போட்டிருக்கிறார். அவர் கொஞ்சம் 'நீட்'டாக வருபவர்தானே; இப்படியெல்லாம் எப்படி வரி போட்டார்?" என்று வேடிக்கையாகக் கூடச் சொன்னதாகக் கேள்விப் பட்டேன். என்னை உணர்ந்ததற்காக அவருக்கு மிகவும் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவர் என்னை அந்த அளவுக்குக் கூர்ந்து கவனித்திருக்கிறார் என்று தெரிந்துகொள்ள நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இங்கே போடப்பட்ட வரிகளைப்பற்றிக் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மோட்டார் வாகனங்களுக்கு வரி போடப்பட்டிருக்கிறது. அது பெருமளவுக்கு ஏழைகளைப் பாதிக்குமென்று இங்கே கூறப்பட்டது. அப்படி மோட்டார் வாகனங்களுக்குப் போடப்பட்ட வரியின் மூலம் எந்த அளவுக்கு அதிகப்படியாக ஆகுமென்று நான் பணிவன்போடு

தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தரப்பட்டிருக்கிற புள்ளிவிவரத்தின்படி சொல்லுகிறேன், 3.2 பைசா per kilometer per seat என்ற நிலைமையில் இந்த வரி போட்டால், அதன் மூலம் ஒரு கிலோமீட்டருக்கு அதிகமாகத் தர வேண்டிய வரி 0.08 பைசாதான் என்பதை தயவு செய்து மறந்துவிட வேண்டா மென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இது ஒரு பெரிய அளவுக்குப் போடப்பட்ட வரியென்று கருதுவார்களேயானால், இந்த அரசின் சார்பாகவும், முதல்வர் அவர்கள் சார்பாகவும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் அதைத்தான் குறிப்பிட்டார்கள்—அப்படிப்பட்ட வண்டி களை ஓட்டுபவர்கள் கட்டணத்தை உயர்த்துவார்களானால், அதை இந்த சர்க்கார் தடுத்து நிறுத்தும் என்ற உறுதியை இந்தச் சந்தர்ப்பத்திலே வழங்க விரும்புகிறேன். அவர்கள் கட்டணத்தை உயர்த்துவதை ஒருபோதும் அனு மதிக்க மாட்டோம்.

இரண்டாவது, "டீசலுக்கு இரண்டு பைசா ஏற்றியிருக்கிறார்களே, சோப் புக்கு $5\frac{1}{2}$ சதவீதத்திலிருந்து 6 சதவிதமாக ஏற்றிவிட்டார்களே, இது என்ன நியாயம்?" என்... திரு. தாமோதரன் அவர்கள் கேட்டார்கள். நான் திரு. தாமோதரன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன், மிகவும் மதிக்கின்ற தலைசிறந்த பாராளுமன்றவாதியாக அவரைக் கருதுகிறேன். அவருக்குத் தெரி வித்துக்கொள்ளுகிறேன்; ஒரு குடும்பத்தில் உள்ள ஒரு மனிதன் சராசரி இரண்டு முறை குளித்தால் அவனுக்கு ஆகக் கூடிய சோப் ஒரு கேக்தான். ஒரு ஸ்டாண்டர்ட் குடும்பத்தில் 5 பேர் இருப்பார்களேயானால் அவர்களுக்குத் தேவைப்படுகிற 5 கேக்குகளை வாங்குகிறபோது, ஒரு சோப்புக்கட்டி இரண்டு ரூபாயானால், 5 கட்டிக்குப் பத்து ரூபாய் ஆகும். தற்போது போடப்பட் டிருக்கிற வரியின் காரணமாக அவர்கள் அதிகமாகத் தர வேண்டியது பைசாதான் என்பதைப் புள்ளிவிவரத்தின்படி சொல்லுகிறேன். இதை மறந்துவிட்டு, இது ஒரு பெரிய வரி என்று நினைப்பார்களானால், எப்படித்தான் ஆட்சி நடத்தச் சொல்லுகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் போன்றவர்கள் தயவு செய்து சொல்லக் கடமைப்பட்டிருக் கிறார்கள்.

அதற்குப் பிறகு, "சிமெண்ட், வண்ணப் பூச்சுக்கள், வண்ணக் கலவைகள், ஒட்டுப் பலகைகள், கண்ணாடிச் சாமான்கள் ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் விற்பனை வரியை 8 சதவீதத்திலிருந்து பத்து சதவீதமாக அதிகப்படுத்தியிருப் பதால், அதன் மூலம் கன்ஸ்ட்ரக்ஷன் காஸ்ட் (Construction cost) உயரும் அதனால் பில்டிங் ஆக்டிவிட்டிஸ் (building activities) பெருமளவுக்குப் பாதிக்கப்படும். மேலும் அதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டம் எழக் கூடும்" என்றும் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த கன்ஸ்ட்ரக்ஷன்



காஸ்டை நான் பார்த்துவிட்டேன். இதன் மூலம் பெரிய அளவுக்குப் பாதிப்பு இல்லையென்பதை மிகப் பணிவோடு நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளு கிறேன். இதன் மூலம் ஏற்படுகிற கன்ஸ்ட்ரக்ஷன் காஸ்ட் 0.31 சதவீதம்தான் வருகிறது. உதாரணத்திற்குச் சொல்லுகிறேன், ஒரு இலட்ச ரூபாய்க்கு ஒரு மனிதன் வீடு கட்ட ஆரம்பித்தால், இந்த வரியின் மூலம் அவன் மேலும் அதிக மாகச் செலவழிக்க வேண்டியது, வரியாக ரூ. 310 மட்டும் என்பதை நான் அவை அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். இது ஒரு பெரிய வரியா என்பதைக் கேட்டறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மற்றவர்கள் இன்னொன்றையும் எடுத்துச் சொன்னார்கள். அக்ரிகல்சரல் இன்கம் டாக்ஸ் (Agricultural Income-tax) பெரும் பணக்காரர்களுக்கு உதவியாக இருக்குமென்று சொன்னார்கள். அவர்கள் எந்த அடிப்படையிலே சொன்னார்கள் என்பதை என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. போடப் பட்டிருக்கிற கணக்குகளைப் பார்ப்பார்களேயானால், அதிலே கொஞ்ச நிலம் வைத்திருப்பவர்களுக்கு எவ்வளவு போட்டிருக்கிறோம், அவர்களது சீலிங்கை எந்த அளவுக்கு ஒழுங்குபடுத்தியிருக்கிறோம், முறைப்படுத்தியிருக்கிறோம் என்பதைப் பார்த்த பிறகும், இது பெரும் பணக்காரர்களுக்குப் பலன் உள்ள தாக இருக்குமென்று சொல்ல முடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ரூபாய் எழுபதாயிரத்திலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வரை வருமானம் உள்ள வர்களுக்கு 60 சதவீதம் என்று நாங்கள் வரி விதித்திருக்கிறோம். அது எந்த அளவுக்கு பணக்காரர்களைப் பாதிக்கும் என்பதை அருள் கூர்ந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

அதற்குப் பிறகு இங்கே அருமை நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். அந்தக் கருத்தை வலியுறுத்தி பெரு மதிப்பிற்குரிய திரு. சுவாமிநாதன் அவர்களும் சொன்னார்கள். அவர்கள் சொன்ன கருத்து, "பைனான்ஸ் கமிஷனை நீங்கள் சந்தித்தீர்கள். அந்தக் கமிஷனுக்கு ஒரு ரிப்போர்ட்டை நீங்கள் தந்திருக்கிறீர்கள். அந்த ரிப்போர்ட்டை நீங்கள் அவையின்முன் வைக்கவேண்டும்" என்பது. இதை திரு. தாமோதரன் அவர்கள் கேட்டதாக நான் பத்திரிகையிலே பார்த்தேன். நான் அவருக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளுகிறேன், பைனான்ஸ் கமிஷன் தனது வேலையை இன்னும் முடிக்கவில்லை. இன்னும் சொல்லப் போனால், கர்நாடகாவுக்கும் போகவில்லை, ஆந்திராவுக்கும் போகவில்லை. இன்னும் பல மாநிலங்களுக்குச் செல்லவில்லை. பல மாநிலங்களின் பொருளாதார அமைப்பில் இருக்கிற நிலைமைகளில் வேறுபாடுகள் இருக்கின்றன என்பது நமக்கெல்லாம் தெரியும். ஆகவே இப்போதே அந்த ரிப்போர்ட்டை

[திரு. கி. மனோகரன்] [1978 மார்ச் 2

அவையின் முன்னே வைப்பதன் மூலம், அவை மற்ற மாநிலங்களுக்குத் தெரியுமானால், அதன் மூலம் ஏற்படக் கூடிய சூழ்நிலையைத் தவிர்ப்பதற்காகத் தான் அந்த ரிப்போர்ட்டை இங்கே வைக்கவில்லை. பைனான்ஸ் கமிஷன் எல்லா மாநிலங்களுக்கும் சென்று மொத்த அறிக்கையைத் தந்ததற்குப் பிறகு, அதோடு நாம் கொடுத்த மெமோராண்டத்தையும் சேர்த்து இந்த அவையிலே வைக்க இந்த அரசு தயாராக இருக்கிறது என்று சொன்னால் திரு. தாமோதரன் அவர்கள் திருப்தி அடைவார்கள் என்று நம்புகிறேன். இதையேதான் மதிப்பிற்குரிய திரு. சுவாமிநாதன் அவர்களும் கேட்டதாகக் கருதுகிறேன். திரு. சுவாமிநாதன் அவர்களுக்கும் நான் இந்தக் கருத்தையே தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதற்குப் பிறகு மற்ற உறுப்பினர்கள் குறிப்பிட்ட நிலைமைகளை இங்கே விளக்கியாக வேண்டும். "சாதனை எங்கே? 7 மாதங்களாக உள்ள சாதனைகள் எங்கே? ஓராண்டுக்கான சாதனைகள் எங்கே?" என்று ஏழாண்டுகளுக்கு மேலாக ஆண்டவர்கள் கேட்கிறார்கள் நம்மைப் பார்த்து. அப்படிக் கேட்கக் கூடாது என்று நான் வாதிடவில்லை. அவர்கள் ஏழாண்டுகளில் சாதித்த சாதனைகளை இந்த ஏழு மாதத்திற்குள் சாதிக்க வேண்டுமென்று எங்களிடம் எதிர்பார்ப்பார்களேயானால், அது எங்கள் திறமைக்கு அவர்கள் தருகிற அத்தாட்சிப் பத்திரமாக விளங்குகிறது என்பதாக நாங்கள் எண்ணுகிறோம். அப்படியில்லாமல் நாங்கள் சாதனைகளைச் செய்யவில்லை என்று எங்கள் மீது குற்றச்சாட்டு சுமத்தினால், அது சரியாக இருக்குமா என்று எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இருந்தாலும் சிலவற்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். முதன் முதலாக 'Opening of fair price shops in all revenue villages' பெருமளவுக்குக் கவர் (cover) செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**With regard to tank modernisation scheme, we shall cover all tanks having an ayacut of 500 acres and above. This will result in substantial increase in agricultural output.**

(பிற்பகல் 4-20)

அதற்குப் பிறகு தூத்துக்குடி புராஜெக்ட் எக்ஸ்பேன்ஷன் (Tuticorin Project expansion) அதற்கு ரூபாய் 56.04 கோடி ஒதுக்கியிருக்கிறோம் என்பது தெரியும். ஏழு டிஸ்ட்ரிக்ட் செண்டர்கள் கிராமத் தொழில்களை விரிவு செய்வதற்காக அமைத்திருக்கிறோம். அந்தக் கிராமத் தொழில்களில் ஈடுபடுகிறவர்களுக்கு யோசனை சொல்லவும் என்னென்ன தொழிலை



1978 மார்ச் 2] [திரு. கி. மனோகரன்]

அவர்கள் செய்யலாம் என்பதற்கான அறிவுரை கூறவும் அப்படிப்பட்ட சென்டர்களை அமைப்பது நல்லது. அதை இந்த அரசு பெருமையோடு இந்த பட்ஜெட்டில் கொண்டு வந்திருப்பது பாராட்டுக்குரியது என்று நாங்கள் கருதுகிறோம். இது நடைமுறைக்கு சாத்தியமானதா என்று சிலர் கேட்கக்கூடும். அவர்களுக்குச் சொல்கிறேன், கொஞ்சம் அமைதியாக பொறுமையாக ஐந்தாண்டு காலம் எங்களை விடுங்கள். அதற்குப் பிறகு உங்களுக்குத் தெரியும். நீங்கள் இப்படிச் சின்னஞ்சிறு தொழிற்சாலைகளை ஆரம்பிக்கிறீர்களே, பல கிராமங்களை Integrated villages என்று எடுத்து ஆரம்பிக்கிறீர்களே அந்தந்த இடத்திற்கு ஏற்ற முறையில் அவர்கள் உருவாக்குகிற பொருள்கள் விலை போக மார்க்கெட்டுக்கு எங்கே போவார்கள் என்று சிலர் கேள்வி எழுப்பினார்கள். அரசுத் தரப்பில் முதலமைச்சர் அவர்கள் மிக உற்சாகத்தோடு என்னைச் சொல்லச் சொன்னார்கள். இந்த சர்க்கார் எல்லாத் துறைகளிலும் Biggest consumer என்பது உங்களுக்குத் தெரியும். எதை எடுத்துக் கொண்டாலும், குண்டூசி முதல் மோட்டார் வரையில் கொள்முதல் செய்கிற Biggest consumer ஆக இந்த சர்க்கார் இருக்கும். இதில் நாங்கள் எடுத்திருக்கிற முடிவுப்படி, இப்படிப்பட்ட சின்னச் சின்ன தொழிற்சாலைகளிலிருந்து வருகிற பொருள்கள் அரசாங்க அலுவலகத்திற்கு என்று அந்தனையையும் அரசாங்கமே வாங்கிக் கொள்ளும் என்ற உறுதியை இந்தச் சந்தர்ப்பத்தில் அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே உற்பத்தி செய்கிற பொருள்கள் தேங்கிவிடுமே, மார்க்கெட் இல்லாமல் மாய்ந்து போகுமே என்ற மாயை யாருக்கும் வேண்டியதில்லை, அச்சம் யாருக்கும் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பிறகு மினி ஹெல்த் சென்டர் ஆரம்பிப்பது என்ற முயற்சியில் அடுத்த ஆண்டு முடியும் கட்டத்தில் 104 மினி ஹெல்த் சென்டர்கள் உருவாக்கப்பட்டுவிடும் என்ற நல்ல செய்தியை இந்தச் சபையில் வைப்பதற்கு மகிழ்ச்சியடைகிறேன். அதற்குப் பிறகு ஒவ்வொரு கிராமத்திற்கும் குடிநீர் வசதிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை 1978-79 ஆம் ஆண்டுக்குள்ளாக பெருமளவுக்கு நிச்சயமாகச் செலவு செய்யப்பட்டு கிராமங்கள் Protected drinking water பெறுகிற வாய்ப்பை நிச்சயம் பெறும் என்ற உறுதியை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். லிங்க் ரோடுகள் பற்றிக் கூறப்பட்டிருக்கின்றது. Link roads to villages will be upgraded கிராவல் ரோடுகளாக அவற்றை ஆக்குவதற்குத் திட்டமிருக்கிறது. அதற்கான ஜி. ஓ. போட்டாகிவிட்டது. வேலை ஆரம்பிக்கிற அளவுக்கு வளர்ந்து கொண்டிருக்கிறது. தமிழ்நாடு கிராமப்புற வீட்டு வசதித் திட்டம் கிராமப்புறங்களில் 1975 ஆம் ஆண்டு வரையில் இருந்தது. மீண்டும் இந்த சர்க்கார் அதை எடுத்து, சென்ற பட்ஜெட்டில் ரூபாய் 2 கோடியும், இந்த பட்ஜெட்டில் வருகிற ஆண்டுக்கு ரூபாய் 3 கோடியும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் ஒதுக்கி வைக்கச் செய்துள்ளோம்.

அதில் பெருமளவில் அரிஜனங்கள், கைத்தறியாளர்கள் வாய்ப்பைப் பெற இருக்கிறார்கள். தொழிலாளர் நல அமைச்சர் இங்கே இருக்கிறார். subsidised housing for industrial works என்ற அளவுக்கு முதன் முறையாக ஹவுசிங் போர்டு சார்பாக ரூபாய் 20 லட்சம் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவற்றை நடத்தி வெற்றி காண்பதற்கான முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், அரிஜனங்களுக்கு வீடு கட்டுகிற திட்டம் ஏற்கெனவே அமுலில் இல்லையா என்று கேட்கக் கூடும். இருந்தது. எனது எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் காலத்தில் ஒரு லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று சொல்லிவிட்டு கடைசியில் ஆட்சியை விட்டு இறங்குகிற நேரத்தில் 30 ஆயிரம் கட்டி முடிக்கப்பட்டது. குறை சொல்லவில்லை. அவர்களது லட்சிய முகட்டை எட்டிப் பிடிப்பதற்கு இந்த அரசு நிச்சயம் உழைக்கும் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரிஜனங்கள் வாழ்வு பெறவும் பொருளாதாரத் துறையில் நல்லதொரு நிலையைப் பெறுவதற்காகவும் கூட்டுறவு கமர்ஷியல் பாங்கு வழியாக ஏறத்தாழ ரூபாய் 1.5 கோடியிலிருந்து ரூபாய் 2 கோடி வரையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. விதவைகளுக்கு இது வரையில் பென்ஷன் தொகை கொடுத்து வந்தோம். அதற்குரிய வயது 45 ஆக இருந்தது. இப்போது அது 40 ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அதன் மூலம் சர்க்காருக்கு ஏற்படுகிற இழப்பு ரூபாய் 12 லட்சம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ரூபாய் 12 லட்சம் பெரிதல்ல. கண்ணீர் சிந்துகிற விதவையின் மனப்புண்ணை ஆற்றுவதுதான் இந்த சர்க்காரின் லட்சியம் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இதுவரை இல்லாத அளவுக்கு நாங்கள் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அந்தத் திட்டத்தையெல்லாம் பாராட்டுகிற மன வளம் இல்லையே என்று எதிர்க் கட்சிகளைப் பொறுத்த வரையில், தெரிவித்துக்கொள்கிறேன்.

There was no separate plan for the tribal population under the previous Government. There is a separate plan under the present government and a sum of Rs. 2 crores is proposed to be spent in the coming year for the benefit of tribals. அதற்குப் பிறகு கேட்பார்கள். போலீஸ்காரர்களுக்கு என்ன செய்தீர்கள் என்று கேட்கக்கூடும். சென்ற பட்ஜெட்டிலே ரூபாய் 38 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போது ரூபாய் 90 லட்சம் என்ற அளவில் உயர்த்தப்பட்டிருக்கிறது என்ற செய்தி மகிழ்ச்சியான செய்தியாக மற்றவர்களுக்குத் தெரியவில்லையா என்று கேட்க விரும்புகிறேன்.



புதிய திட்டங்களை இந்த சர்க்கார் நாட்டுக்கு அளித்திருக்கிறது. உடல் வலிவுள்ள திடகாத்திரமான வாலிபர்களைப் பயன்படுத்தி பயிற்சி அளித்து இண்டியன் டிபென்ஸ் சர்வீசுக்கு அவர்களை அனுப்புவதன் மூலமாக ராணுவ வீரர்களாக ஆக்கி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ராணுவத்தில் நம்மவர்கள் அதிகமாகச் செல்கிற வாய்ப்பைப் பெருக்கி அவர்கள் பெறுகிற சம்பளத்தைக் கொண்டு அவர்கள் குடும்பத்தைப் பாதுகாக்கும் அளவுக்கு இந்த சர்க்கார் திட்டம் வைத்திருக்கிறது. இது திட்டம் இல்லை என்று யாராவது சொன்னால், திட்ட மாட்டேன். இப்படியும் சொல்கிறார்களே என்று மட்டும் நான் வருத்தப்பட்டுக்கொள்வேன். Recruitment of Scheduled Caste and Scheduled Tribe students at Officers' level in the Defence Services என்ற அளவில் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதுவரையில் இந்த மாநிலத்தில் நடைபெறாத ஒன்று "Services Commission" இதுவரையில் இது இல்லை. முதன் முறையாக இந்த அரசுதான் "Services Commission" ஐ அமைத்திருக்கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை பட்ஜெட்டில் படித்திருப்பீர்கள். ஏற்கெனவே இரண்டு சம்பளக் கமிஷன்கள் அமைக்கப்பட்டன. முதல் கமிஷன் இம்ப்ளிமெண்டேஷனுக்கு எடுத்துக் கொண்ட மாதங்கள் 16. பிறகு அமைக்கப்பட்ட சம்பளக் கமிஷன் எடுத்துக் கொண்ட மாதங்கள் 13. இன்றைக்கு நாங்கள் அமைத்த சம்பளக் கமிஷன் எடுத்துக்கொண்டிருக்கிற மாதங்கள் 8. இதைவிட புரட்சிகரமான ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சம்பளக் கமிஷன் ரிபோர்ட் தருவதற்கு முன்பாகவே ஏப்ரல் 1ஆம் தேதி முதல் ரெட்ராஸ்பெக்டிவ் ஆக பணத்தைப் பெறுகிறார்கள் என்று அறிவித்த முதல் புரட்சிகரமான அரசு புரட்சித் தலைவரின் தலைமையில் இயங்குகிற இந்த அரசு என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்

இங்கே பலர் பல கருத்துக்களைச் சொன்னார்கள். அவர்கள் பேசிய கருத்துக்களுக்கு ஒவ்வொன்றாக வருகிறேன். நாங்கள் போட்ட திட்டத்தைத் தானே நீங்கள் தொடர்ந்து செய்கிறீர்கள், இது ஒரு அதிசயமா என்று கேட்டார்கள். வெள்ளைக்காரன் கூடச் சொன்னான், 'அடிமைப்பட்டு பொருளாதாரத்தின் அடித்தளத்தில் கிடந்தீர்களே, உங்களை கைதூக்கி விட்டு இந்த பாரதத்தை சொர்க்க பூமியாக ஆக்கியவர்களே நாங்கள்தான். ரயில் பாதையைப் போட்டோம். கட்டிடங்கள் கட்டினோம். எலக்டிரிக் விளக்கு கொண்டு வந்தோம். கம்பங்கள் நட்டோம்' என்று சொல்லிவிட்டு 'நாங்கள்தானே இந்த நாட்டை ஆள வேண்டும்' என்று கேட்டார்கள். அவர்கள் போட்ட இன்ஃப்ராஸ்ட்ரக்சர் (infrastructure) ஒழுங்காக இருக்கிறது. பெருமளவில் இந்தியாவில் ரயில் ஓடிக்கொண்டிருக்கிற பாதைகளில் சில இடங்களில்தான் மாற்றம் ஏற்பட்டிருக்கிறதே தவிர, வெள்ளைக்காரன்

காலத்தில் போடப்பட்டவைதான் அத்தனையும். ஏராளமான மாற்ற
தேவை என்பதை மறுக்கவில்லை. Infrastructure அமைத்த
காரணத்தாலேயே அடிமைப் பிடிப்பிலேயிருந்து விடுபடாமல் அடிமை
வாழ முடியாது என்று பேசிய தலைவர்கள் விலங்கொடிக்கும் போராட்டத்
கடுபட்டு வெள்ளைக்காரனை வெளியே அனுப்பிய பிறகு, காங்கிரஸ் கட்
ஆட்சிக்கு வந்தது.

(பிற்பகல் 4-30)

காங்கிரஸ் கட்சி ஆண்டது, தமிழகத்திலும் காங்கிரஸ் கட்சி ஆண்ட
தமிழகத்திலே காங்கிரஸ் கட்சி ஆண்டபோது எதையும் செய்யவில்லை என்
சொல்லும் பேதமைப் புத்தி எனக்கில்லை. அவர்கள் பல காரியங்களைச் செய்தா
கள். காமராஜர் காலத்தில் பல காரியங்கள் நடைபெற்றன. திரு. ஆர். வெங்க
ராமன் அவர்கள் தொழில் அமைச்சராக இருந்தபோது, சென்னை மாநகரத்தை
எனது தமிழகத்தை ஒரு தொழிற்புரியாக மாற்றிய பெருமை அவருக்குண்
என்பதை நான் மனநிறைவோடு இந்த அவையிலே ஏற்றுக்கொள்ளத் தயார
இருக்கிறேன்.

1967-க்குப் பிறகு அவர்களுடைய நடவடிக்கைகள் காரணமாக அவ
களுடைய ஆட்சியை மக்கள் வேண்டாம் என்று சொல்லியதற்குப் பிறகு
திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியை அமைக்கட்டும், பேரறிஞர் அண்ணா
அவர்கள் தலைமையில் ஆட்சியை அமைக்கட்டும் என்று மக்கள் தீர்ப்பு வழங்கிய
பிறகு, அண்ணா அவர்காளலே ஆரம்பிக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்
தைப் பார்த்து, இதே காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் சொன்னார்கள்.
“எங்கள் தலைவர் காமராஜர் அவர்கள் போட்ட திட்டத்தைத்தானே நீங்கள்
செயல்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். இதிலே என்ன புதுமை இருக்கிறது?
என்ன புரட்சி இருக்கிறது?” என்று கேட்டார்கள். அதையேதான் இப்போது
நீங்களும் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். “எங்களுடைய திராவிட முன்
னேற்றக் கழகத் தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் போட்ட திட்டங்களைத்
தானே நீங்கள் தொடர்ந்து நடத்துகிறீர்கள்” என்று. நான் சொல்லு
கிறேன், இவைகளெல்லாம் ஒரு continuous process தவிர, திடீரென்று
ஒரு பட்ஜெட் மூலம் ஒரு புரட்சியை உருவாக்க முடியும் என்றால், திரு
கருணாநிதி ஒரு புரட்சியைத் தமிழகத்தில் உருவாக்கி, எந்த சர்க்
காரையும் எதிர்பார்க்காமல் இந்த நாட்டை ஒரு காமதேனுவாக மாற்றியிருக்க
முடியும். எனவேதான் நான் தெரிவிக்க விரும்புகிறேன்; தம்முடைய அணுகு
முறை ஒழுங்காக இருக்க வேண்டும். அணுகு முறை, அணுகு முறை என்று
பல முறை இங்கே சொல்லப்பட்டது. இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்
கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு,



எத்தனை போராட்டங்கள் நடைபெற்றன? எவ்வளவு கதவடைப்புகள்? எவ்வளவு
லாக் அவுட்டுகள்? எவ்வளவு அடிதடிகள் நடைபெற்றன? இத்தனை போராட்டங்
களிலும் நமது முதலமைச்சர் அவர்களின் அணுகுமுறையைப் பாராட்டாதவர்
கள் தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவிலேயே இல்லை என்று சொல்லுகிற
அளவுக்கு நமது முதலமைச்சர் அவர்களின் அணுகுமுறை இருந்தது. இரும்புக்
கரத்தால் அடக்குவேன் என்று ஒரு சந்தர்ப்பத்திலாவது நமது முதலமைச்சர்
அவர்கள் பேசியதில்லை. அதற்கு மாறாக, அவர் பேசிய ஒவ்வொரு நேரத்தி
லும் அன்பாலே அரவணைத்து அவர்களோடு உட்கார்ந்து பேசி, அவர்களின்
மனக் கபாடங்களைத் திறப்பதின் மூலம் கருத்துக்களைப் பிரயாணம் செய்ய
அனுமதிப்பதின் மூலம் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண முடியும் என்று
செயல்பட்டாரே தவிர, தடி எடுப்பேன், அடிப்பேன், சுடுவேன் என்று சொல்
லாத ஒரு முதலமைச்சரை இந்த நாடு பெற்றிருப்பது நமக்கெல்லாம் பெருமை
தேடித் தரக்கூடிய விஷயம் என்பதை இந்த நேரத்திலே இந்த அவைக்குத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

வேறு ஒரு கருத்தும் பேசப்பட்டது. அதைப் பேசியவர்கள் மாண்புமிகு
உறுப்பினர்கள் திரு. தாமோதரன் அவர்களும், திரு. சுவாமிநாதன் அவர்களு
மாவர். இதனால் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எதையும் பேசவில்லை என்று
நான் சொல்லவில்லை. அவர்களும் சில கருத்துக்களைப் பேசி, அதையெல்லாம்
செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர் ஒன்றைப்
பற்றி மிக அழுத்தம் திருத்தமாகப் பேசியிருக்கிறார். நீங்கள் உரிமையைப்
பெறுவதில் தயங்கக்கூடாது, உரத்த குரல் கொடுக்க வேண்டும், உறும
வேண்டும், கர்ஜிக்க வேண்டும் என்று இந்த வார்த்தைகளில் சொல்லவில்லையே
தவிர, அந்த உணர்வுகள் அப்படித்தான் இருந்தன என்பதைச் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். அவர்களைக் கேட்டுப் பெற்றாக வேண்டும். அவர்கள்
வழங்குகிற முறையில், இருக்கிற அவல நிலையைப் போக்க வேண்டும் என்றும்
அவர் சொல்லியிருக்கிறார். நான் சொன்ன வார்த்தைகளில் அவர் சொல்லா
விட்டாலும், அவர் இந்த எண்ணங்களைத்தான் கூறியிருக்கிறார். இதற்காக
நீங்கள் மத்திய அரசோடு போராடி, வாதிட்டு, உரத்த குரலில் பேச வேண்டு
மென்றெல்லாம் சொல்லி, கடந்த 5, 6 பட்ஜெட்டுகளில் மத்திய சர்க்காரோடு
நாம் எப்படிப்பட்ட அணுகுமுறையை வைத்திருக்கிறோம் என்றும் சொல்லி,
பிறகு என்னுடைய பட்ஜெட்டில் நான் சமர்ப்பித்த பட்ஜெட்டில் திரு. சேதல்
வாட் அவர்களின் கருத்தை நான் ஆதாரமாகச் சொல்லியிருப்பதையெல்லாம்
சுட்டிக்காட்டி, அதிலே சிலவற்றைப் படிக்காமல் விட்டுவிட்டு, அந்த பட்ஜெட்டு
களில்தான் புரட்சி இருந்தது என்பதைப் போல பேசியிருக்கிறார். நான் என்து
அருமை நண்பர் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்
களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மிகுந்த அவை அடக்கத்தோடு அதைத்

தெரிவிக்க விரும்புகிறேன். எனக்கு உங்களை விட திரு. மொரார்ஜி தேசாயைத் தெரியும். இன்னும் சொல்லுகிறேன், திரு. மொரார்ஜி தேசாய் அவர்களுக்கும் என்னைப் புரியும். அதைவிடச் சொல்லுகிறேன். யார் இந்த நாட்டின் முதலமைச்சர் என்பதையும் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் எடை போட்டு வைத்திருக்கிறார். விட்டுக் கொடுக்கிற மனப்பான்மை உள்ளவர் இந்த நாட்டின் முதலமைச்சராளுைம், உரிமைகளைப் பாதுகாத்து, காப்பாற்றி உரத்த குரல் கொடுப்பவர் என்ற மிக நல்ல பெயரைச் சம்பாதித்து வைத்திருக்கிறார்கள்.

அவர்கள் மும்மொழித் திட்டம் (Three language formula) என்று சொன்னபோது, இங்கே இருமொழித் திட்டம்தான் Two language formula) என்று சொன்னவர் நமது முதலமைச்சர் அவர்கள் என்பதை தயவு செய்து நீங்கள் மறந்துவிடக் கூடாது. நான் பத்திரிகையிலே பார்த்தேன். யாரோ பேசினார்களாம். "முதலமைச்சர் அங்கே போகிறார். நாங்களும் நீங்களும் ஒரே கொள்கை உள்ளவர்களாக இருக்கிறோம் என்று சொல்லிவிட்டு, இங்கே வருகிறார்" என்று சொன்னார்களாம். நான் இந்த நேரத்தில் ஒன்றைக் கூற விரும்புகிறேன். சில கொள்கைகளில் ஒன்றிப் போவதில் தவறில்லை. கிராமப் புறங்கள் முன்னேற வேண்டும் என்பதிலும், மினி ஹெல்த் சென்டர்ஸ் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதிலும் protected drinking water supply கொடுக்க வேண்டும் என்ற திட்டத்திலும் நாமெல்லாம் ஒன்றாக இருக்கிறோம் என்று சொல்லுவது என்பது என்ன மிகப் பெரிய பாப காரியா? அதே நேரத்தில் ஆங்கிலத்தை எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த நாட்டை விட்டு அகற்ற உறுதுணையாக இருக்க மாட்டோம் என்றும், இருமொழிக் கொள்கை தான் எங்கள் திட்டம் என்றும், எங்களோடு கரெஸ்பான்டென்ஸ் வைத்துக் கொள்ளும்போது ஆங்கிலத்தில்தான் வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் ஆங்கிலத்தில் வைத்துக் கொள்ளாமல் இந்தியில் வைத்துக் கொள்வீர்களானால், அதை நாங்கள் ஏறிட்டும் பார்க்க மாட்டோம் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியானதற்குப் பிறகும் இத்தகைய குறைகளைக் கூறுவதற்கு காரணம் என்ன? இதிலே என்ன நியாயம் இருக்கிறது என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

இன்னொன்றையும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நாடாளுமன்றத்தில் மாநில சுயாட்சி கோரிக்கையைப்பற்றி என்னைப்போல் பேசியவர்கள் இருக்க மாட்டார்கள் என்று சொல்லும்போது, ஏதோ என்னைப்பற்றி நானே பறை சாற்றிக்கொள்கிறேன் என்று தயவு செய்து எண்ண வேண்டாம். டெல்லியில் உள்ளவர்கள் நமது உணர்வுகளைத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும், நம் உணர்வு



களுக்கு மதிப்புக் கொடுக்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்புவது தவறல்ல. நாம் அவர்களோடு இணைந்து, தோளோடு தோள் நின்று பணியாற்ற வேண்டும் என்று கூறுவதில் தவறில்லை. அப்படிக் கூறுகிற காரணத்தாலேயே நாம் அடிமைப்படுத்தப்பட்டு விட்டோம். மூன்றுலே நீட்டிய [illegible] தொகையைக் குறிக்காமல் கையெழுத்துப் போட்டு விட்டு எவ்வளவு [illegible] வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டதைப் போல், ஏதோ ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டதைப் போல் பேசுவது, மூலாம் பூசுவது அரசியல் முதிர்ச்சியடைந்தவர்கள் செய்கிற காரியமல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் தெரிவித்துக் கொள்வேன், Centre--State Relations என்பது இதற்கு முன்பெல்லாம் ஒரு academic exercise ஆகத்தான் இருந்தது. 1967க்கு முன்பு Centre State Relations என்ற [illegible] எழவில்லை. காரணம் எல்லா மாநிலங்களிலும் ஒரே கட்சி ஆட்சி முறை இருந்தது. மத்தியிலும் ஒரே கட்சி, மாநிலங்களிலும் ஒரே கட்சி. நான் முறை தவறிப் பேசுவதாகக் கருதக்கூடாது. பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்தின் பிரதமராக இருந்தபோது, மாநிலத்தின் முதலமைச்சர்கள் அத்தனை பேரும் அவருக்கு முன்னால் சென்று தங்கள் எண்ணங்களை எடுத்து வைத்தபோது, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ஒரு வணக்கம் என்று வணக்கம் முறை முறைத்துப் பார்த்தால், பிறகு வருகிறேன், போட்டுவிட்டு வந்தவர்கள்தான். கடந்த காலங்களிலே அப்படிப்பட்டவர் கள் முதலமைச்சர்களாக இருந்தார்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் [illegible] மாநிலங்களில் பல கட்சி [illegible] ஒரே கட்சி ஆட்சி முறை [illegible]. 1967க்கு முன்பு இருந்த நிலைமை என்ன? இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியல் சட்டத்தில் இருக்கிற inter-State Council-Article 263 என்பதைப் பற்றிக் கல்லூரி மாணவர்கள் படித்திருக்கக்கூடுமே தவிர, பேராசிரியர்கள் கற்றுக் கொடுத்திருக்கலாமே தவிர, இதைப்பற்றி ரிசர்ச் ஸ்காலர்கள் எழுதி இருக்கக்கூடுமே தவிர 1967க்கு பிறகுதான் Article 263 என்ற ஒன்று இருக்கிறது என்றும் அது மாநிலங்களிடையில் ஏற்படும் விவகாரங்களைத் தீர்த்து வைக்கும் வகையில் குடியரசுத் தலைவர் தலையிடலாம் என்பதற்காக உருவாக்கப்பட்டது என்ற உணர்வும் வந்தது. அது மட்டுமல்ல. இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தியத் துணைக் கண்டத்தின் பெருமதிப்பிற்குரிய பிரதம அமைச்சர் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் இந்த நாட்டு மக்களிடத்திலே பேசிய பேச்சுக்கள் என் காதில்

[திரு. கி. மனோகரன்] [1978 மார்ச் 2.

இன்னும் ஏங்காரமிட்டுக் கொண்டிருக்கின்றன. அவர் சொன்னார், Central Government must be definitely strong என்று சொல்லிவிட்டு, அடுத்த வரியில் சொல்லுகிறார் if the States are weak, the Centre can never be strong ஆக, மாநில அரசுகள் உறுதியான, பலமான அரசுகளாக இருந்தால்தான் மத்திய அரசு உறுதியாக இருக்க முடியும் என்ற கருத்தைச் சொன்னார்கள். பாரதத்தின் பிரதமர் அந்தக் கருத்தை மறுதளிப்பார் என்று நான் நம்பவில்லை. மறுதளிக்கிற அளவுக்கு அவர் போவார் என்றும் நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் சில பத்திரிகைகளில் வருகிற தகவல்களைப் பார்க்கிறபோது, சங்கடமாக இருக்கிறது. நான் மேலே இருக்கிற சர்க்காரைக் குறைகூறுவதாக தயவு செய்து யாரும் கருதிவிடக்கூடாது. இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் ஒரு தலையங்கம் வந்திருக்கிறது,—ஒரு எடிட்டோரியல் வந்திருக்கிறது. அதை, அவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு இந்த அவையிலே படித்துக் காட்ட விரும்புகிறேன்.

லோக் சபையில் ஒரு விவாதத்தின்போது அங்கே ஸ்டேட் மினிஸ்டராக இருக்கிற திரு. தனிக்லால் மண்டல்—உள்துறை மாநில அமைச்சரான அவர்—ஒரு ஸ்டேட்மெண்ட் வாசித்தார். அது Centre-State Relations பற்றியது. அதைப்பற்றிச் சொல்லும்போது 'இப்போது அதைப்பற்றிய ரெவ்யூ தேவையில்லை, நாடு தழுவிய டிபேட் தேவையில்லை, அதுபற்றிய டயலாக் தேவையில்லை' என்ற அடிப்படையில் பேசினார். அதையொட்டி இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை எழுதுகிறது.

"There is no ambiguity in Mr. Dhanik Lal Mandal's statement in the Lok Sabha on the question of Centre-State relations. But can it be taken as a definitive stand of the Janata Government? Doubts arise because of the spate of contradictory statements from the ruling leadership. At the first meeting of the Union and State Governments after the elections last year, Mr. Desai implicitly favoured greater federalism when he warned that a "strong Centre with weak States can lead to dictatorship". Then came the bombshell in Bangalore when the Prime Minister rejected not only the demand for greater State autonomy but even the need for a dialogue on the subject. A few days later, in Calcutta, Mr. Desai said he was not opposed to such a dialogue and would never countenance a strong Centre at the cost of the States. Similarly, the Janata Party President, Mr. Chandrasekhar reportedly described the demand for greater autonomy as politically motivated and said there was no question of reviewing Centre-State relations, only to contradict himself four days later by saying that the party was not opposel to giving more powers to the States and was "prepared for discussions on the matter."



1978 மார்ச் 2] [திரு. கி. மனோகரன்]

These contradictions notwithstanding, the categorical statement in Parliament by the Minister of State for Home presumably reflects the considered view of the Janata Government. In rejecting the suggestion for a debate on the question, and thereby the growing demand for a more federal polity, Mr. Mandal made two remarkable party is committed, did not end with transfer of more powers to the party is committed, did not and with transfer of more powers to the States. Nobody has argued otherwise. Greater autonomy to the States is in fact the first step towards greater decentralisation within the States. The second point is the reason given by him for not agreeing to a national debate—that the present time is not propitious for it. This raises the question, what must happen before the time becomes "propitious"? Quite apart from the Janata Party's own pronouncements on decentralisation of decision-making, etc., the fact is that one-third of the States are in favour of a review of Centre-State relations.

If the Union Government has strong reasons why the present dispensation should not be altered, is it not all the more necessary for it to participate in a national debate, if only to convince the States demanding a review? Postponing the dialgue for a hopefully more propitious point of time may well prove to be shortsighted and bring about precisely the kind of situation that the Centre wishes to avoid."

(பிற்பகல் 4-40)

இதையெல்லாம் சுட்டிக்காட்டியிருப்பது இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை என்பதை நான் இங்கு தெரிவித்துக்கொள்கிறேன். ஆக இன்றைக்கு இது ஒரு Live issue வாக, உயிருள்ள பிரச்சினையாக இருக்கிறது என்பதை அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இந்த அரசின் சார்பாகவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பாகவும். நான் சொல்லிக்கொள்கிறேன். நமது மாண்புமிகு பிரதமர் அவர்கள் இப்படிப்பட்ட ஒரு டிபேட்டுக்கு ஆளாவதன் மூலம், அவர் இழப்பது எதுவுமே இல்லை. நாங்கள் எங்கள் மனதிலே இருக்கின்ற கருத்துக்களை எடுத்து வைக்கின்றோம். நீங்களும் இதயம் திறந்து பேசுங்கள். இருக்கின்ற வேறுபாடுகளை ஆராய்ந்தறிந்து கொள்ளுங்கள். அதைச் செய்வதற்கு ஏற்ற சந்தர்ப்பம் இன்றைக்கு நமது பிரதமர் திரு. மொரார்ஜி பாய் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. அந்தக் கனிவைச் செய்வதற்கு, கனிவான உள்ளம் படைத்த பிரதமர் திரு. தேசாய் அவர்கள் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அண்மையிலே

[திரு. கி. மனோகரன்] [1978 மார்ச் 2

பிரதமர் அவர்கள் பேசும்போது, ஒரு கருத்தைப் பேசியது, இந்தியன் எக்ஸ்பிரசில் வந்திருக்கிறது. நமது பிரதமர் அவர்கள் பேசும்போது சொன்னார். "National dialogue is no necessity. I am prepared to meet individuals. I can have a dialogue or taluk with individuals on Centre-State relations."
என்று அந்த சென்டர் ஸ்டேட் ரிலேஷனைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

நான் நமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு மனப்பூர்வமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சித்தாந்தங்களைத் தனி அறையிலே கொளுத்துவதால், அது கொழுந்துவிட்டு எரியும் தீயாக மாறிவிட்ட பிறகு, அந்த சித்தாந்தங்களை குளிர் சாதனப் பெட்டியிலே அடைப்பது என்பது எவ்வளவு அறியாமை என்று நான் இங்கு எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இதற்கு 1/3 பங்கு பகுதியினர்,, மாநிலங்கள் எதிர்ப்பு ஆரம்பமாகி விட்டது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இருக்கின்ற மற்ற அரசுகளையும் கூட்டி அவர்களே உரையாடுவார்களானால், நிச்சயமாக பல வேதனைகளைக் குறைக்கலாம், குறைகளை நீக்கலாம், சந்தேகங்களைப் போக்கிக்கொள்ளலாம். அப்படிச் செய்வார்களானால், மத்திய மாநிலங்களுக்கு இடையே நல்ல உறவுகளை உருவாக்க முடியும் என்பதை நமது பிரதமர் அவர்களுக்கு இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு, நான் இங்கே இன்னொரு கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அமைச்சர்கள் எல்லாம் அங்கே சென்று நிதி ஆதாரத்திற்காக வற்புறுத்திக் கேட்பீர்களா என்று நம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். வற்புறுத்துகிறீர்களா என்று கேட்கின்றார்கள். ஏதோ நாங்கள் எல்லாம் வற்புறுத்தாமல் இருப்பது போலவும், அங்கே சென்று நாங்கள் பூனையாக இருப்பதுபோலவும், அவர்கள் புலிகளாகச் சீறுவது போலவும், அதைப் பார்த்துவிட்டு நாங்கள் அணைத்துக்கொண்டு வருவதாகவும் கருதிக்கொண்டு பேசுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. நான் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பத்திரிகையிலே கூட செய்திகள் வந்திருக்கின்றன.

இப்போது பைனான்ஸ் கமிஷன் தலைவராக ஷேலாட் என்பவர் இருக்கின்றார். "The State has forcefullly Argued its case' என்று அவரே சொல்லியிருக்கிறார். நான் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த பட்ஜெட்டைப் படித்த பிறகு இப்படி ஒரு பட்ஜெட்டை இந்த அரசு தயாரித்திருக்கிறது, புரட்சிகரமான பட்ஜெட் என்று பாராட்டியிருக்கலாம். இந்த மாதிரி புரட்சிகரமான



1978 மார்ச் 2] [திரு. கி. மனோகரன்]

பட்ஜெட்டை இந்த அரசைத் தவிர வேறு அரசு தயாரிக்க முடியுமா என்று சொல்கின்ற அளவுக்கு இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுவிலக்கு காரணமாக ஏற்படும் நிதி இழப்பை எப்படிச் சரிக் கட்டப் போகிறோம்? அதற்காகவாவது நிதி ஆதாரத்தைக் கேட்கக் கூடாதா என்று கேட்டார்கள். இங்கு இப்போது திரு. வெங்கடேஸ்வர தீக்ஷிதர் இல்லை. அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர் யாராவது இருப்பார்களானால் . . மாண்புமிகு அங்கத்தினர் திரு. டிமான்டே அவர்கள் இருக்கிறார்கள். நான் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். நாங்கள் டீசலுக்கு 2 நயா பைசா வரி போட்டோம். அவர்கள் பெட்ரோல் விலை லிட்டருக்கு 11 பைசா ஏற்றியிருக் கிறார்கள். எலக்ட்ரிசிடி ஜெனரேஷனுக்கு வரி விதித்திருக்கிறார்கள். அதன் காரணமாக இந்த சர்க்காருக்கு ஏற்படுகின்ற இழப்பைக் கணக்கிட்டால், 16 கோடி ரூபாய். இதை நாம் எப்படி இழக்க முடியும்? அதைப் பற்றி நான் என்ன கருதுகிறேன்? எண்டையர் ஏரியாவை டிமார்கேட் செய்ய வேண்டும். இந்த இந்த ஏரியா இவர்களுக்குத்தான், அந்த அந்த ஏரியா அவர்களுக்குத் தான் என்று நிர்ணயிக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் வகுத்துக்கொள்வதற்கு நாம் மனம் விட்டுப் பேச வேண்டாமா? எந்த எந்தத் துறையில் நிதி ஆதாரத்தைப் பெருக்கிக்கொள்ளலாம் என்பதை விரிவான முறையிலே பேச வேண்டாமா? காலாகாலமாக நாம் அதற்காகப் பிச்சைப் பாத்திரம் எடுத்துக்கொண்டு செல்ல வேண்டுமென்ற துர்பாக்கியம் நமக்கு வேண்டும் என்று கருதுகிறார்களா? அப்படிப்பட்ட சூழ்நிலை அமைவது நல்லதா? இந்தியப் பேரரசு தன்னை தந்தை என்ற அளவிலேயும் மாநிலங்களைத் தனயர்கள் என்ற அளவிலும் பார்க்க வேண்டும் என்று சொல்லிக்கொள் கிறேன். மகனை ஓரளவுக்குத்தான் வளர்க்க முடியும், படிப்புச் சொல்லிக் கொடுக்க முடியும். அவனுக்கு திருமணம் செய்ய முடியும். அதற்குப் பிறகு மகனையும் மருமகளையும் தனி வீட்டுக்குத் தனிக் குடித்தனம் அனுப்புவதுதான் நல்லது. அதுதான் தாய் தந்தையர்களின் அருமையான கடமையாக இருக்க முடியுமே தவிர, 28 வயது ஆன பிறகும்கூட, திருமணம் ஆன பிறகும்கூட, 3 குழந்தைகளுக்குத் தந்தையான பிறகும்கூட, டீ வாங்கிக் குடிப்பதற்காக தாயிடம், தந்தையிடம், 4 அணா தா என்று கேட்கும் அளவுக்கு இருப்பது ஏற்றதா? அது போலவே ஒவ்வொரு மாநிலமும் தன் காலிலேயே நிற்கக்கூடிய அளவில் ஆக்கவேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிறதா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அன்றைக்கு ஷேக் அப்துல்லா சொன்னார், ஜோதி பாசு அவர்கள் சொன்னார்கள் என்பதெல்லாம் சரியல்ல. அரசியல் மாறிக்கொண்டே இருக்கிறது என்று நாங்கள் பயமுறுத்துவதாக யாரும் கருதக்கூடாது. பய உணர்ச்சியை அடிப்படையாகக்கொண்டு நாங்கள் அரசியலை வளர்க்க விரும்பவில்லை. அங்கே ராஜதந்திரம் விளையாடி

யிருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்தை ஒருங்கிணைத்துக் கட்டியாள வேண்டிய காலம் இது. பிரிந்து வருகின்ற கட்சி எதுவாக இருந்தாலும், அது பின்னாலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் போகாது என்பதை நான் இங்கே அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-50)

## We stand for the integrity and the Sovereignty of the country

தயவுசெய்து யாராவது எங்களது அதிக உரிமைகள் வேண்டுமென்ற லட்சியத்தைப் பிரிவினை கோரும் லட்சியமாக எடுத்துக்கொள்வார்களேயானால், அவர்களுடைய சிந்தனையில் இருக்க வேண்டிய ஏதோ ஒன்று கொஞ்சம் கொஞ்சமாக நழுவிக்கொண்டு ஓடுகிறதென்று கருதிக்கொள்வேனே தவிர, அவர்கள் சரியாக எங்களைப்பற்றிச் சிந்தித்து முடிவு செய்கிறார்களென்று நான் கருதமாட்டேன் என்பதை நான் அடக்கத்தோடும், பணிவோடும் தெரிவித்துக்கொள்கிறேன். நாங்கள் திரும்பவும் டெல்லிக்குப் போவோம். திரும்பவும் வலியுறுத்துவோம். இந்தப் பிரச்சினைகளையெல்லாம் அங்கே முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். இது ஒரு நல்ல அருமையான சந்தர்ப்பம்; எல்லோரையும் அணைத்துச் செல்வதற்கேற்ற சந்தர்ப்பம் இது. இப்படி கொந்தளிப்புகள் வெடிக்கக்கூடாது; எரிமலைகள் வெடிக்கக்கூடாது. ஒவ்வொரு மாநிலமும் தன்னிறைவு பெற்ற மாநிலமாக வளர வேண்டுமென்ற லட்சியங்களை எல்லாம் எடுத்துச் சொல்கிற வாய்ப்புக்களை முதலமைச்சரவர்கள் பயன்படுத்த இருக்கிறார்கள். நான் திருச்சியிலே ஒரு கூட்டத்தில் பேசும்போது கூடச் சொன்னேன். ஒரு பெரிய மகாநாடு கூட்ட வேண்டுமென்று ஜோதி பாசு சொல்கிறார்; வேண்டியதில்லை; நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்தில் முதலமைச்சர்களைக் கூட்டி வைத்தாவது பிரதம அமைச்சரவர்கள் விவாதிக்கக்கூடாதா என்று கேட்டேன். அதை இந்தச் சந்தர்ப்பத்திலே வலியுறுத்த விரும்புகிறேன். அவர் அந்தக் காரியத்தைச் செய்யலாம். தயவு செய்து கதவை அடைக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். கதவை அடைக்கின்ற முயற்சியில் ஈடுபடுவார்களானால், தட்டுகின்ற முயற்சி தவிர்க்க முடியாததாகும். ஒரு முறை தட்டித் திறக்க முடியாமற்போனால், தட்டுகிற வேகம் மறுமுறை அதிகமாகும். நான் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புவது அப்படித் தட்டுகிற கரங்கள் மேலும் வேகம் பெற்றுத் தட்டினால், கதவுகள் தானாகவே திறக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டால், பெருவெள்ளப் பெருக்கின் கதவுகளைத் திறந்து விடுவதாக அமையுமென்ற அச்சம் எனக்கு இருக்கிறதென்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். இவைகளையெல்லாம் நினைவிலே வைத்துக்கொண்டு, நிச்சயமாக பாரதப் பிரதமர் அந்த அடிப்படையிலே இயங்குவார் என்று மனதார நம்புகிறேன்.



மொழிப் பிரச்சினைபற்றி இங்கே பேசப்பட்டது. மொழிப் பிரச்சினையிலே நமது கருத்து மிகத் தெளிவாக இருக்கிறது. நிச்சயமாக நான் ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. வி. டி. 'மாண்டி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். திரு. டி'மாண்டி அவர்கள்கூட ஆங்கிலத்திற்காக இவ்வளவு வாதிட்டிருக்க மாட்டாரென்று நம்புகிறேன். இருந்தாலும் அவர் நம்மோடு இல்லை. கட்சியைப் பொறுத்தவரை சொல்கிறேன். உணர்வைப் பொறுத்தவரைக்கும் ஒற்றுமையோடு இருக்கிறோம். நாடாளுமன்றத்தில் இந்தப் பிரச்சினை வந்தபோது 8-வது ஷெட்யூலில் ஆங்கிலத்தைச் சேர்க்க வேண்டுமென்று வாதிட்டவர்களில் நான் ஒருவன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. டி'மாண்டி அவர்களுக்காகச் செய்யவில்லை. மனித சமுதாயத்தின் வாழ்க்கை வளர வேண்டுமென்றால், அறிவு பெற்ற சமுதாயமாக உயர வேண்டுமென்றால், 'வின்டோ ஆஃப் டெவலப்மெண்ட்' ஆக ஆங்கிலம் இருக்கிறது. அதை அழிக்கும் முயற்சி எதுவானாலும் அதன்மூலம் விஞ்ஞான வளர்ச்சியை—டெக்னலாஜிகல் டெவலப்மெண்ட்—அழித்துக் கொள்ள, நம்மை நாமே தற்கொலை செய்துகொள்ள எடுத்துக் கொள்ளப்படும் முயற்சியாக இருக்குமென்ற நம்பிக்கையில் இந்த அரசு பணியாற்றுகிறது. இன்னும் ஒன்றைத் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை, தமிழுக்கு முதல் இடம்—எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பதுதான் நமது முதலமைச்சரவர்களின் வாதம். இந்த வாதத்தை வலியுறுத்துகின்ற விதத்தில் நமது எதிர்க்கட்சித் தலைவர், திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசினார்கள். அங்கே சட்டப் பேரவையில் எதிர்க் கட்சித் தலைவராக இருக்கிற திரு. கருணாநிதி அவர்கள் இதுபற்றிப் பேசினார்கள். எங்கும் தமிழ், எதிலும் தமிழ்—இதிலே துளிக்கூட மாற்றமில்லை. எந்தக் காரணத்திற்காக ஆங்கிலத்தை அகற்ற வேண்டுமென்ற முயற்சியில் சில பேர்கள் ஈடுபட்டிருக்கிறார்களோ அந்த முயற்சியை முறியடிக்க இந்த அரசு தயாராக இருக்கிறது, தயாராக இருக்குமென்பதை உங்களுக்கெல்லாம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படியே ஆங்கிலத்தை விட்டு விடுகிறோமென்று வைத்துக் கொள்ளுங்கள், சுயநலம் காரணமாகச் சொல்கிறேன்—திரு. தாமோதரன் அவர்களுடைய அழகான ஆங்கிலப் பேச்சைக் கேட்க முடியுமென்று கருதுகிறீர்களா? அதற்காகவாவது ஆங்கிலம் இருக்க வேண்டாமா? ஆகையால் தெரிவித்துக் கொள்கிறேன் . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இந்த அவையிலே ஆங்கிலம் பேச வேண்டாம்; டெல்லியிலேதான் பேச வேண்டும்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** இருமொழிக் கொள்கை என்று சொலலும்போது, யார் யார் தங்களது கருத்துக்களை, எந்த மொழியில் தெளிவாகச் சொல்ல முடியுமோ, அந்த மொழியில் பேச அனுமதிக்கும் பெருந்தன்மை பெற்றவர்கள் நீங்கள் என்பதால் சொல்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** தினமும் அனுமதிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** அருமை நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் தமிழில் பேச முயற்சி எடுத்துக்கொண்டால், அதிலும் அருமையாகச் பேசுவார்களென்ற நம்பிக்கை இருக்கிறது. அவரது தந்தையாரும், தந்தையாரின் சகோதரரும்—இரட்டையர்கள் என்று அழைக்கப்பட்ட டாக்டர் ஏ. ராமசாமி முதலியார் அவர்களும் டாக்டர் ஏ. லக்ஷ்மணசுவாமி முதலியார் அவர்களும் அகில உலகமும் தெரிந்த அற்புதமான ஆங்கிலப் பேச்சாளர்கள் என்பதை மறந்துவிடவில்லை. அதனாலேதான் நம்மை வெறுக்கிறார்கள். அது சோகச் செய்தியாகக்கூட இருக்கலாம். ஏன் ஆங்கிலம் பற்றி அவ்வளவு அருவருப்பு? இதைப்பற்றி ரிசர்ச் நடத்திப் பார்த்தேன். அதற்குப் பிறகு கிடைத்த உண்மை இதுதான். குறைத்து மதிப்பிடுவதாகக் கருத வேண்டாம். அங்கே பேசுபவர்களின் ஆங்கிலத்தை இங்கே இருப்பவர் களில் சிலர் கேட்டிருப்பார்களென்று நினைக்கிறேன். ஒரு தடவை நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்களை டெல்லியிலே சந்தித்தேன். திரு. சுவாமி நாதன் அவர்களுக்கு அவர்கள் பேச்சைக் கேட்க வாய்ப்பு இருக் கிறது. திரு. ஏ. ஆர். தமோதரன் அவர்களெல்லாம் டெல்லி செல்கிறார்கள். நான் ஒரு முறை வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருக்கும்போது ஒன்றைச் சொன்னேன். House of commons லிருந்து ஒரு டெலிகேஷன் இந்தியப் பாராளுமன்றத்திற்கு உள்ளே வந்து, மேலே நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு ஒரு சில மாநிலங்களிலிருந்து வந்துள்ள உறுப்பினர்கள் ஆங்கிலத்தில் பேசும் பேச்சைக் கேட்ட பிறகு, தாயகத்திற்குத் திரும்பியவுடன், உடனடியாக பிரைவேட் மெம்பர்ஸ் ரெசல்யூஷன் ஒன்றை ஹவுஸ் ஆஃப் காமன்ஸ்-இல் கொண்டு வந்து "Recall English from India" என்று சொன்னால், ஆச்சரியப்பட மாட்டேன் என்று வேடிக்கையாகச் சொன்னேன். அவர்களுக்கு வரமாட்டேன் என்கிறது. அதற்காக வேதனைப்படுவதைத் தவிர, வேறு ஒன்றுமில்லை. நாம் நமது கொள்கையில் திட்டவட்டமாக, உறுதியாக இருக் கிறோமென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக, எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் தந்த யோசனைகளை நாங்கள் மனதிலே ஏற்றுக் கொண்டுள்ளோம். இன்னொரு கருத்தை பக்கர் அவர்கள் சொன்னதாக நினைவு. அதாவது துபாய் போன்ற வெளிநாடுகளுக்கு இங்கேயிருந்து ஏராளமானவர் கள்—தமிழகம், கேரளம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களிலிருந்து செல்கிறார்கள்; அவர்களை அனுப்ப ஒரு கும்பலே பணியாற்றுகிறது; ஒரு ராக்கெட்டே நடை பெறுகிறது; பாஸ்போர்ட் வாங்கித் தருவதற்கும், 'நோ அப்ஜக்ஷன் சர்ட்டிபிகேட்' வாங்கித் தருவதற்கும் 3,000 ரூபாய், 4,000 ரூபாய் என்று அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்; இதைப் போக்க வேண்டுமென்று



திரு. பக்கர் அவர்கள் பேசியதாக நினைவு. இதற்காக கேரளத்தில் ஒரு கார்ப்பரேஷனை உருவாக்கியிருக்கிறார்கள். என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால், அருமை நண்பர் திரு. அப்துல்லா அதன் தலைவராகப் பணி யாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சரவர்கள்கூட, இது அருமையான யோசனை, நாமும் ஒரு கார்ப்ப ரேஷனை உருவாக்கி, இங்கே வேலையில்லாமல் இருக்கிறவர்களை அங்கே அனுப்பி, அவர்களுக்கு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுத்தர வழி இருக்கிறதா என்று பார்க்க வேண்டுமென்று சொன்னார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. பக்கர் அவர்கள் நிதிநிலை அறிக்கையைப் பாராட்டித்தான் பேசியிருக் கிறார்கள். எல்லோருக்கும் பாராட்ட வேண்டுமென்றுதான் தோன்றுகிறது. என்ன காரணத்தாலோ சிலருக்குத் தயக்கம் ஏற்படுகிறது. அந்தத் தயக்க நிலையிலிருந்தும், மயக்க நிலையிலிருந்தும் வெளியே வருவார்களேயானால், நிச்சயமாக ஒளிக்கற்றையைப் பார்ப்பதற்கு உதவியாக இருக்குமென்று கூறி நான் அமைகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் பல்வேறு வாக்குறுதிகளைத் தந்தார்கள். அதிலே ஒன்று கிராமப்புறங்களில் துவக்கப்படுகிற தொழில். அங்கு தயாரிக்கப்படுகிற பொருள்களை அரசாங்கமே கொள்முதல் செய்யும் என்றும் குண்டூசியில் இருந்து இயந்திரங்கள் வரையில் எல்லாவற்றையும் கொள்முதல் செய்யும் என்றும் சொன்னார்கள். நான் பேசுகிறபோது கூட குறிப்பிட்டேன். "இந்த நாட்டிலே இருக்கிற விவசாயிகள் உற்பத்தி செய்கிற நெல்லையே இந்த அரசாங்கம் கொள்முதல் செய்ய முடியாத நிலையில் இருக்கிறது" என்று. அதை முதலிலே மனதிலே வைத்துக்கொண்டு எங்கெங்கே விவசாயிகள் நெல்லை உற்பத்தி செய்கிறார்களோ, அங்கெல்லாம் அந்த நெல்லைக் கொள்முதல் செய்வதற்காக கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுமா? அதற்காக இந்த அரசாங்கம் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யவிருக்கிறது என்பதைத் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** துணைத் தலைவர் அவர்களே, அருமை நண்பர் திரு. வீராசாமி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன், இரண்டு பிரச்சினைகளையும் போட்டுக் குழப்ப வேண்டாமென்று. இருந்தாலும்

அவருடைய பிரச்சினைக்குப் பதில் சொல்லுகிறேன். மற்றவற்றை அரசாங்கம் ஒழுங்காகக் கவனிக்கும். இரண்டாவது பிரச்சினையைப் பற்றியும் அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் 15—3—1978, புதன்கிழமையன்று காலை 10-30 மணிக்குக் கூடும்.

(பிற்பகல் 5-00)

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

Nil.

B. Reports, Notifications and Other Papers.

$ 55. The Hon'ble Thiru Justice M. M. Ismail Commission Report on the Inquiry into the incidents of beating and ill-treatment alleged to have taken place in the Central Prison, Madras, during February 1976 to February 1977 and Government Orders thereon. (Tamil)

56. Answers to unstarred questions Nos. 4 and 5.

---

$ Laid on the table of the House on 1st March 1978.

# INDEX TO
# TAMIL NADU LEGISLATIVE COUNCIL
## DEBATES.

---

## FIFTY-THIRD SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

---

*27th and 28th February, 1st and 2nd March* 1978.

Volume CXLVI (Nos. 1-4)

PAGES

A

ABDUL WAHAB, THIRU K.S.—

Adjournment motion *re* handloom weavers, difficulties in exporting goods abroad by .. .. .. .. 253

Budget for 1978–79, general discussion on .. .. 48–58

Information *re* absence of Chief Minister from the House 25

ADJOURNMENT MOTION *re*—

Handloom weavers, difficulties in exporting goods abroad by.. .. .. .. .. .. .. 252–255

Hunger strike by staff of Revenue Department discharged from service in Kanyakumari district due to change in food policy .. .. .. .. .. .. 193–197

Misbehaviour of Police with a girl (Balammal) in Karaikudi South Police Station on 12th February 1978 .. 197–201

Non-appointment of Vice-Chancellor in Madurai University .. .. .. .. .. .. .. .. 246, 250–252

A—*cont.*


PAGES

ADUTHURAI PADDY RESEARCH CENTRE—

Question *re* supply of paddy to staff of—against recovery of cost from salary .. .. .. .. .. 18–20

AGRICULTURISTS—

Question *re* constitution of Commission to go into economic conditions of .. .. .. .. .. .. 20–22

ALLOWANCES—

Question *re* City Compensatory Allowance to employees in Aided High Schools within radius of 16 kilometres of City limit of Tiruchirappalli, payment of .. .. .. 1

ARANGANAYAGAM, THE HON. THIRU C.—

Adjournment motion *re*—

Integration of services of teachers and non-teaching staff of A and B wing schools.. .. .. .. 191–192

Non-appointment of Vice-Chancellor in Madurai University .. .. .. .. .. .. 251–252

Information *re* answer by Education Minister to Question No. 155 .. .. .. .. .. 110

Tamil Pandits, Grade I in Government High Schools, statement *re* hardship due to change in date of regularisation as 21st March 1974 .. .. .. 256–257, 258

ARIVAZHAGAN, THIRU K.—

Budget for 1978–79, general discussion on .. .. 125–282, 300, 302

B

BAKKAR, THIRU M.M.—

Budget for 1978–79, general discussion on .. .. 57




B—*cont.*


PAGES

BALARAMAN, THIRU L.—

Budget for 1978–79, general discussion on .. .. 223–232

BALASUBRAMANIAM, THIRU A.—

Budget for 1978–79, general discussion on .. .. 118–129

BALASUBRAMANIAM, THIRU Ku. Ma.—

Budget for 1978–79, general discussion on .. .. 50

Information *re* Ismail Commission Report .. .. 249

BRIDGES—

Question *re* over-bridge across Railway Line on Medical College Road in Thanjavur Municipality, reconstruction of .. .. .. .. .. .. .. 240–242

BUDGET FOR 1978–79—

General discussion on .. .. .. .. .. 25–75, 118–167, 204–233, 262–338,

BUSINESS ADVISORY COMMITTEE—

*See* Committees.

C

CITY COMPENSATORY ALLOWANCE—

*See* Allowances.

COLLEGE TEACHERS—

*See* Teachers.

COLLEGES—

Question *re* formation of Advisory Committees for .. 182–185

PAGE

COMMITTEES—

Business Advisory Committee, decision of .. .. 114–115

Question *re* Free Legal Aid Committees, setting up of— at district and taluk levels .. .. .. .. 169–173

CONFERENCES—

Question *re* Chief Ministers' Conference at New Delhi, decision to fix subsidized prices for pulse varieties .. 243

CO-OPERATIVE SOCIETIES—

Question *re* Lalgudi Sivagnanam Co-operative Farmers' Marketing Society, Tiruchirappalli district, irregularities in distribution of fertilizers at .. .. .. 242–243

Nagercoil Co-operative Housing Society, non-sanction of loans by .. .. .. .. .. .. .. 185–187

CULTIVATING TENANTS—

Question *re* conferment of ownership rights on .. .. 79–84

D

D'MONTE, THIRU D.V.—

Budget for 1978–79, general discussion on .. 288–292

DAIRY DEVELOPMENT CORPORATION LIMITED—

Second and Third Annual Reports of—for 1973–74, 1974–75 and 1975–76, laid on the table .. .. .. 76

DAMODARAN, THIRU A. R.—

Information *re* Ismail Commission Report .. .. 248, 249

DAMS—

Question *re* Kumari Dam across Pazhayar in Kanyakumari district, crops damaged due to breach in .. 235–236



PAGES.

DEPUTY CHAIRMAN—

Adjournment motion *re* handloom weavers, difficulties in exporting goods abroad by .. .. .. .. 252, 255

Hunger strike by staff of Revenue Department in Kanyakumari district discharged from service due to change in food policy .. .. .. .. .. 193, 197

Integration of services of teachers and non-teaching staff of A and B wing schools .. .. .. .. 188, 192–193

Misbehaviour by Police with a girl (Balammal) in Karaikudi South Police Station on 12th February 1978 .. 199, 201

Non-appointment of Vice Chancellor in Madurai University .. .. .. .. .. .. .. .. 246, 252

Threatened boycott of examination by College teachers. 111, 112, 114

Announcement *re* Business Advisory Committee's decision .. .. .. .. .. .. .. 114–115

Budget for 1978–79, general discussion on .. .. 55, 56, 59, 60, 73, 75, 118, 124, 125, 127, 128, 137, 138, 139, 159, 161, 164, 166, 167, 220, 223, 279, 280, 282, 284, 287, 288, 292, 335, 336.

Information *re*

Absence of Chief Minister from the House .. 23,24

Action taken on Justice Ismail Commission Report .. 188

D cont.

PAGES

INFORMATION *re*—*cont.*

Answer by Education Minister to Question No. 155 .. 109–110

Ismail Commission Report .. .. .. .. 247, 248, 249.

N.G.G.Os'. agitation consequent on failure of talks .. 109

DRAVIDA MANI, THIRU A.—

Budget for 1978–79, general discussion on .. .. 68–75

DRINKING WATER—

Question *re* collaboration between Agriculture Department and Water Supply and Drainage Board to augment —facilities in villages .. .. .. .. .. 187

E.

EDMUND, THE HON. THIRU G. R.—

Adjournment motion *re* hunger strike by staff of Revenue Department in Kanyakumari district discharged from service due to change in food policy .. .. .. 194–196

ELECTRICITY BOARD—

Question *re* electricity bills of State—, pendency of collection in various Revenue units .., .. .. .. 244

F.

FAMILY BENEFIT SCHEME—

Question *re* denial of—to teachers in Private Colleges 8–10

FREE LEGAL AID COMMITTEES—

Question *re* setting up of—at district and taluk levels .. 169–17[illegible]



G.

PAGES

GANAPATHI, Thiru K. S.—

Adjournment motion *re* integration of services of teachers and non-teaching staff of A and B Wing Schools .. 189–191, 192

Threatened boycott of examinations by College teachers. 111–114

Information *re* answer by Education Minister to Question No. 155 .. .. .. .. .. .. .. 109

Kothari Sugar Mills, Kattur, calling Minister's attention to closure of .. .. .. .. .. .. 258, 261

GEORGE KOMAGAN, Thiru—

Adjournment motion *re* misbehaviour by Police with a girl (Balammal) in Karaikudi South Police Station on 12th February 1978 .. .. .. .. .. 197–198, 201.

Budget for 1978–79, general discussion on .. .. 50, 56, 57, 280, 283 302.

H.

HANDLOOM WEAVERS—

Adjournment motion *re* difficulties in exporting goods abroad by .. .. .. .. .. .. .. 252–255

HIGHER SECONDARY COURSE (PLUS 2 COURSE)—

Question *re* number of High Schools and Colleges introducing—in 1978–79 .. .. .. .. .. 10–1[illegible]

HIGHWAYS DEPARTMENT—

Question *re* Section Officers and Union Engineers in—, number of persons promoted as—before 1973 and not yet confirmed .. .. .. .. .. 238–2[illegible]

I.

PAGES

INFORMATION *re*—

Absence of Chief Minister from the House .. .. 23–25

Ismail Commission Report .. .. .. .. 246–249

INTEGRATED URBAN DEVELOPMENT PROGRAMME—

Question *re* bringing Madurai Metropolitan areas under. 99–101

ISMAIL COMMISSION REPORT—

Information *re* action taken on .. .. .. .. 188–189

Laid on the table .. .. .. .. .. 338

K.

"KALKI", "GOKULAM" AND "SWARAJYA"—

Question *re* closure of Offices of .. .. .. .. 106–108

KOTHARI SUGAR MILLS, KATTOOR—

Closure of—, Minister's attention called to .. .. 258–261

KUMARI DAM—

*See* Dams.

L.

LALGUDI SIVAGNANAM CO-OPERATIVE FARMERS MARKETING SOCIETY—

*See* Co-operative Societies.

LANDS—

Question *re* patta—declared as slum area and taken over by Tamil Nadu Slum Clearance Board, non-payment of compensation to landowners .. .. .. 236–23[illegible]



PAGES

LANGUAGE PROBLEM—

Question *re* Prime Minister's letter to Chief Minister of Tamil Nadu *re* .. .. .. .. 175–178

LIBRARY CESS—

*See* Libraries.

LIBRARIES—

Question *re* Library cess, yearwise collection from 1971 to 1976 and expenditure on purchase of books, administration of libraries and opening of new libraries .. 244–246

LOCAL LIBRARY AUTHORITIES—

Question *re* regularisation of services of employees of 3–6

M.

MADURAI UNIVERSTY—

*See* Universities.

MAGAZINES—

Question *re* "Kalki", "Gokulam" and "Swarajya", closure of offices of .. .. .. .. 106—108

MANI, Thiru K. S.—

Information *re* absence of Chief Minister from the House. 24

MANICKAM, Thiru P. —

Budget for 1978–79, general discussion on .. .. 310

MANOHARAN, THE Hon. Thiru K. —

Budget for 1978–79, general discussion on .. .. 316–338

PAGES

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—

Giant size Tube Wells in Paralachi revenue firka in Arup-pukkottai constituency and subsequent lowering of water table in irrigation wells, calling attention to agitation by agriculturists .. .. .. .. 115–118

Kothari Sugar Mills, Kattur, calling attention to closure of .. .. .. .. .. .. .. 258–261

Tamil Pandits, Grade I, in Government High Schools, calling attention to hardship due to change in date of regularisation as 21st March 1974 .. .. .. 256–258

MEMBERS OF LEGISLATURE—

Returns of Assets of certain members of the Assembly as on 31st March 1977, laid on the table .. .. 168

MUTHU, Thiru S.—

Budget for 1978–79, general discussion on .. .. 216, 281, 312, 313

N.

NAGERCOIL CO-OPERATIVE HOUSING SOCIETY—

*See* Co-operative Societies.

NURSERY SCHOOLS—

*See* Schools.

P.

PARERS LAID ON THE TABLE OF THE HOUSE—

Dairy Development Corporation Limited, Second, Third and Fouth Annual Reports for 1973–74, 1974–75 and 1975–76 .. .. .. .. .. .. 76

Ismail Commission Reports .. .. .. .. 338

Members of Legislature—

Returns of Assets of certain Members of the Assembly as on 31st March 1977 .. .. .. 168





PAGES

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Planning Authority (Levy of Development Charges) Rules, 1975, making of—(G.O. Ms. No. 2039, Rural Development and Local Administration, dated 20th December 1977) .. .. .. .. .. .. 168

Questions and Answers—

Unstarred Questions 4 and 5, answers to .. .. 338

Town and Country Planning Act, 1971—

Variation to sanctioned Mylapore-Teynampet area Town Planning Scheme of Madras City. (G.O. Ms. No. 1936, Rural Development and Local Administration, dated 2nd December 1977.) .. 167

Variation to sanctioned Mylapore Western Section Area Town Planning Scheme of Madras City (G.O. Ms. No. 1969, Rural Development and Local Administration, dated 9th December 1977) .. 167

PENSION—

Question *re* Payment of—to Teacher pensioners by Money Order .. .. .. .. .. .. 2–3

PLANNING AUTHORITY (LEVY OF DEVELOPMENT CHARGES) RULES, 1975—

Making of—, notification laid on the table .. .. 168

PLUS 2 COURSE—

Question *re* High Schools and Colleges introducing—in 1978–79, number of .. .. .. .. .. 10–18

POLICE—

Adjournment motion *re*—

Misbehaviour by — with a girl (Balammal) in Karaikudi South Police Station on 12th February 1978 .. .. .. .. .. .. 197–201

PAGES

PRISONERS—

Question *re* number of Naxalite—as on 8th September 1977 .. .. .. .. .. .. .. 173–175

PULAMAI PITHAN, PULAVAR—

Budget for 1978–79, general discussion on .. .. 50, 304

PULSE(S)—

Question *re* fixation of subsidized prices for —varieties at Chief Ministers' Conference at New Delhi.. .. 243


## Q.


QUESTIONS AND ANSWERS—

Balsubramaniam, Thiru A.—

Question *re* Section Officers and Union Engineers in Highways Department, number of persons promoted before 1973 as—and not yet confirmed. .. 238–240

Balasubramaniam, Thiru Ku. M.—

Question *re* Library Cess, yearwise collection from 1971 to 1976 and expenditure on purchase of books, administration of libraries and opening of new libraries. .. .. .. .. .. .. .. 244–246

D'Monte, Thiru D. V.—

Question *re*—

Patta lands declared as slum area and taken over by Tamil Nadu Slum Clearance Board, non-payment of compensation to landowners .. .. 236–238

Ganapathi, Thiru K. S.—

Question *re* City Compensatory Allowance to employees in Aided High Schools within radius of 16 Kilometres of City of Tiruchirappalli, payment of .. .... .... .... .... .. 1





PAGES.

QUESTIONS AND ANSWERS—*cont.*

Mani, Thiru K. S.—

Question *re*—

Aduthurai Paddy Research Centre, supply of paddy to staff against recovery of cost from salary .. .. .. .. .. .. 18–20

Pulse varieties, decision at Chief Ministers' Conference in New Delhi to fix subsidized prices for 243

Muthukrishnan, Thiru T. V.—

Question re—Lalgudi Sivagnanam Co-operative Farmers' Marketing Society, Tiruchirappalli district, irregularities in distribution of fertilizers at .. .. 242–243

Neelanarayanan, Thiru—

Question *re*—"Kalki", "Gokulam" and "Swarajya" closure of offices .. .. .. .. .. 106–108

Periannan, Thiru V. R.—

Question *re*—Drinking Water Supply Scheme for Kalappanayakkanpatti, Senthamangalam and Namagiripet Town Panchayats, stage of .. .. 101–105

Sankaralingam, Thiru M.—

Question *re*—Assistant to Private Schools having more than thousand students, representation from Teachers of Government Aided High Schools for sanction of post of .. .. .. .. .. 6–8

Kumari Dam across Pazhayar in Kanyakumari district, crops damaged due to breach in .. .. 235–236

Nagercoil Co-operative Housing Society, non-sanction of loans by .. .. .. .. 185–187

PAGES

QUESTIONS AND ANSWERS—*cont.*

Sankaralingam, Thiru M.—*cont.*

Question *re*—*cont.*

Rest Houses for Teachers, construction of—in certain towns and at district headquarters with Government grant .. .. .. .. .. 93–95

Santosham, Thiru D.—

Question *re*—Family Benefit Scheme, denial to teachers in Private Colleges .. .. .. .. 8–10

Integrated Urban Development Programme, bringing Madurai Metropolitan area under .. .. 99–101

Swaminathan, Thiru. G.—

Question *re*—Agriculturists, constitution of Commission to go into economic condition of .. .. 20–22

Colleges in Madurai district, formation of Advisory Committees for .. .. .. .. .. 182–185

Cultivating tenants, conferment of ownership rights on .. .. .. .. .. .. .. 79–84

Drinking water facilities in villages, collaboration between Agriculture Department and Water Supply and Drainage Board to augment .. .. .. 187

Electricity bills of State Electricity Board, pendency of collection in various Revenue units .. .. 244

Headquarters of Ramanathapuram district at Madurai, shifting of .. .. .. .. 84–90

Nursery Schools, regulation of privately run .. .. 180–182

Over-bridge across Railway Line on Medical College Road in Thanjavur, re—construction of .. 240–242

Plus Two Course, number of High Schools and Colleges introducing—in 1978–79 .. .. .. 10–18



PAGES.

QUESTIONS AND ANSWERS—*cont.*

Thangapandian, Thiru V.—

Question *re*—Free Legal Aid Committees, setting up of—at district and taluk levels .. .. .. 169–173

Local Library Authorities, regularisation of services of employees of .. .. .. .. .. 3–6

Naxalite prisoners, number of—as on 8th September 1977 .. .. .. .. .. .. .. 173–175

Sivakasi Revenue Division, bifurcation of—and constitution of Aruppukottai Division .. .. .. 76–79

Thomas, Thiru P. R.—

Question *re*—Increments granted to different categories of teachers prior to 1st January 1975, refund of .. .. .. .. .. .. .. .. 95–99

Non-teaching staff in High Schools within the diocese of Madurai and Ramanathapuram transfer of .. .. .. .. 91–93

Pension to Teacher pensioners, payment by Money Order .. .. .. .. .. .. .. 2–3

Teachers, eligibility for Earned Leave benefits for attendance in M.E.L.T. Training to—of Government, Panchayat Union and Aided Schools .. .. 95

Teachers Provident Fund, eligibility of Aided School teachers to withdraw up to 70 per cent of amount in .. .. .. .. .. 178–180

Unstarred Questions 4 and 5, answers to—, laid on the table .. .. .. .. .. .. 338

Veerasami, Thiru Arcot N.—

Question *re*—Language problem, Prime Minister's letter to Chief Minister of Tamil Nadu *re* .. .. 175–178

R

PAGES.

RAGHAVANANDAM, THE HON. THIRU S.—

Budget for 1978-79, general discussion on .. .. 126, 127, 128, 145, 151, 166, 216, 264

Giant size tube wells in Paralachi revenue firka in Aruppukottai Constituency and consequent lowering of water table in irrigation wells, statement *re* agitation by agriculturists .. .. .. .. 115-118

Kothari Sugar Mills, Kattur, statement *re* closure of .. .. .. .. .. .. .. 258-260, 261

Statement under rule 81 of Council Rules *re* action on allegations against Chief Engineer of Water and Drainage Board .. .. .. .. .. .. 202-203

RAJA MOHAMMED, THE HON. THIRU K.—

Adjournment motion *re*—

Difficulties in exporting goods abroad by handloom weavers .. .. .. .. .. .. .. 254-255

Misbehaviour by Police with a girl (Balammal) in Karaikudi South Police Station on 12th February 1978 .. .. .. .. .. .. .. 200-201

Budget for 1978-79, general discussion on .. 55, 56-57, 58, 141, 142, 144, 147, 152, 155, 160

Information *re*—

Absence of Chief Minister from the House .. .. 23

Action taken on Ismail Commission Report .. .. 189

Ismail Commission Report .. .. .. .. 248, 249

Ramakrishna Thevar, Thiru S.—

Budget for 1978-79, general discussion on .. .. 42-48



PAGES

RAMANATHAPURAM DISTRICT HEADQUARTERS AT MADURAI—

Question *re* shifting of .. .. .. .. .. 84-90

REST HOUSES FOR TEACHERS—

Question *re* construction of—in certain towns and at district headquarters with Government grant .. 93-95

REVENUE DEPARTMENT—

Adjournment motion *re* hunger strike by staff of—in Kanyakumari district, discharged from service due to change in food policy .. .. .. .. .. 193-197

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR—

Adjournment motion *re*—

Delay in integration of service of teaching and non-teaching staff of 'A' and 'B' Wing Schools—Consent to raising of the matter withheld after the statement of the Minister for Education .. .. 193

Difficulties in exporting goods abroad by Handloom Weavers—Consent to raising of the matter withheld after the statement of the Leader of the House 255

Hunger strike by staff of Revenue Department retrenched in Kanyakumari district—Consent to raising of the matter withheld after the statement of the Minister for Food .. .. .. .. .. 197

Misbehaviour by Police with a girl in Karaikudi South Police Station on 12th February 1978—Consent to raising of the matter withheld after the statement of the Leader of the House .. .. 201

Non-appointment of Vice-Chancellor in Madurai University—Consent to raising of the matter withheld after the statement of the Minister for Education .. .. .. .. .. .. .. 252

Threatened boycott of examinations by College teachers—Consent to raising of the matter withheld after the statement of the Minister for Education .. .. 114

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR—*cont.*

Committees—

Joint Select Committee's proceedings :

When a member referred to what took place at the meetings of the Joint Select Committee on a Bill, the Chairman observed that the convention that no reference should be made to what took place at the meetings of a Joint Select Committee on Bills before the report was presented to the House should be followed and that in the instant case since the Committee had concluded its deliberations and made its recommendations, the reference was permitted .. .. .. ..

Debate—

Members should get prior permission of the Chair to quote from newspaper extracts .. .. ..

Reference should not be made to individual officers by name since they cannot defend themselves on the floor of the House .. .. .. .. ..

Expression (Parliamentary)—

'கூப்பாடு' held parliamentary .. .. .. ..

Questions and answers—

Answering of questions addressed to Chief Minister—

In regard to a point raised about the answering of questions addressed to Chief Minister, the Deputy Chairman observed as follows :

"முதலமைச்சர் அவர்கள் வரவில்லையென்றால், அவருக்காகப் பதில் சொல்லக்கூடிய பொறுப்பு அவை முன்னவருக்கு உண்டு. கேள்விகளைத் தள்ளிப் போடுவது நோக்கமாக இருந்தால், தலைவர் தலையிட்டுத் தவிர்க்க முடியும். கேள்வி தவிர்க்கும் முயற்சி வரவில்லை. விளக்கம் பெற வேண்டுமென்றால், முன்னவரிடம் பெற முடியும். அதற்கு எவ்விதத் தடையும் இருப்பதாகத் தெரியவில்லை" .. .. .. .. ..



PAGES.

AKTHI MOHAN, THIRU R.—

Budget for 1978–79, general discussion on .. .. 283, 284–288

ANKARALINGAM, THIRU M.—

Adjournment motion *re* hungerstrike by staff of Revenue Department in Kanyakumari district discharged from service due to change in food policy 193–194

Budget for 1978–79, general discussion on .. .. 294–316

Information *re*—

Answer by Education Minister to Question No. 155 .. 110

N.G.G.Os'. Agitation consequent on failure of talks 108

Tamil Pandits, Grade I in Government High Schools, calling Minister's attention to hardship due to change in date of regularisation as 21st March 1974 256, 258

ANTOSHAM, THIRU D.—

Budget for 1978–79, general discussion on .. .. 58–68

ATHYAVANI MUTHU, THIRUMATHI—

Budget for 1978–79, general discussion on .. .. 204–223

CHOOL ASSISTANTS—

*See* Schools.

CHOOLS—

Question *re*—

Assistant to Private Schools having more than one thousand students, representation from teachers of Government Aided High Schools for sanction of post of .. .. .. .. .. .. .. 6–8

Non-teaching staff in High Schools within the diocese of Madurai and Ramanathapuram, transfer of .. 91–93

Nursery—, regulation of privately run .. .. .. 180–182

PAGES

SIVAKASI REVENUE DIVISION—

Question re bifurcation of- and constitution of Aruppukkottai Division .. .. .. .. .. 76-79

SOUNDARAPANDIAN, THE HON. THIRU P.—

Budget for 1978-79, general discussion on .. .. 59, 159, 164

STATEMENT UNDER RULE 81 OF THE COUNCIL RULES re— .. ..

Water and Drainage Board, action on allegations against Chief Engineer of .. .. .. .. 202-203

SUNDARESA THEVAR, THIRU N.—

Budget for 1978-79, general discussion on .. .. 53, 262-283

SWAMINATHAN, THIRU G.—

Adjournment motion re handloom weavers, difficulties in exporting goods abroad by .. .. .. .. 252-253

Budget for 1978-79, general discussion on .. .. .. .. 25-42, 272, 279, 281, 283

Information re—

Absence of Chief Minister from the House .. .. 24

Answer by Education Minister to Question No. 155 .. 110

Ismail Commission Report .. .. .. .. 249

T

TEACHERS—

Adjournment motion re— .. ..

Integration of services of— and non-teaching staff of A and B Wing Schools .. .. .. .. .. .. .. .. 188, 189-193



PAGES.

TEACHERS—cont.

Adjournment Motion re—cont.

Threatened boycott of examinations by College .. 111-114

Question re—

Eligibility for earned leave benefits for attending M.E.L.T. Training by Teachers of Government, Panchayat Union and Aided Schools .. .. 95

Increments granted to different categories of– prior to 1st January 1975, refund of .. .. .. .. 95-99

Rest Houses for– , construction in certain towns and at district headquarters .. .. .. 93-95

Teachers Provident Fund, eligibility of Aided School teachers to withdraw up to 70 per cent of the amount in .. .. .. .. .. .. .. 178-180

Tamil Pandits, Grade I in Government High Schools, Minister's attention called to hardship due to change in date of regularisation as 21st March 1974 .. 256-258

TEACHERS PROVIDENT FUND—

See Teachers.

THANGAPANDIAN, THIRU V.—

Adjournment motion re—

Misbehaviour by Police with a girl (Balammal) in Karaikudi South Police Station on 12th February 1978 .. .. .. .. .. .. .. 198-199

Non-appointment of Vice-Chancellor in Madurai University .. .. .. .. .. .. 250-251, 252

Budget for 1978-79, general discussion on .. .. 49, 50, 263

Giant size tube wells in Paralachi revenue firka in Aruppukottai constituency and consequent lowering of water table in irrigation wells, calling Minister's attention to agitation by agriculturists .. .. .. 115, 117

T—*cont.*

| | PAGES |
|---|---|
| TOWN AND COUNTRY PLANNING ACT, 1971— | |
| Variation to sanctioned Mylapore—Teynampet Area Town Planning Scheme of Madras City, notification laid on the table .. .. .. .. .. | 167 |
| Variation to sanctioned Mylapore Western Section Area Town Planning Scheme of Madras City, notification laid on the table .. .. .. .. .. .. | 167 |

U

| | |
|---|---|
| UNIVERSITIES— | |
| Adjournment Motion *re* non-appointment of Vice-Chancellor in Madurai University .. .. .. .. | 246, 250–252 |

V

| | |
|---|---|
| VEERAPPAN, THE HON. THIRU R. M.— | |
| Budget for 1978–79, general discussion on .. .. | 148, 149 152, 156, 157, 158 |
| VEERASAMI, THIRU ARCOT N.— | |
| Budget for 1978–79, general discussion on .. .. | 136–137, 138–167, 206, 206, 214, 215, 216, 217, 276, 282, 337 |
| Information *re*— | |
| Absence of Chief Minister from the House .. .. | 23 |
| Action taken on Ismail Commission Report .. | 188–189 |
| Ismail Commission Report .. .. .. .. | 246, 247 248 |
| VENKATESWARA DIKSHIDAR, THIRU Y.— | |
| Budget for 1978–79, general discussion on | 50, 128–139 |



V—*cont.*

| | PAGES. |
|---|---|
| VICE-CHAIRMAN (THIRU A. BALASUBRAMANIAM)— | |
| Budget for 1978–79, general discussion on .. .. | 216 |
| VICE-CHAIRMAN (THIRU K. S. MANI)— | |
| Budget for 1978–79, general discussion on .. .. | 49, 50, 51 |
| VICE-CHAIRMAN (TMT. SATHYAVANIMUTHU)— | |
| Budget for 1978–79, general discussion on .. .. | 295, 296, 306, 311, 313, 316 |
| VICE-CHANCELLOR— | |
| Adjournment motion *re* non-appointment of—in Madurai University .. .. .. .. .. | 246, 250–252 |

W

| | |
|---|---|
| WATER AND DRAINAGE BOARD, TAMIL NADU— | |
| Statement under rule 81 of Council Rules *re*— | |
| Action on allegations against Chief Engineer of .. | 202–203 |
| WATER SUPPLY— | |
| Giant size tube wells in Paralachi revenue firka in Aruppukottai constituency and consequent lowering of water table in irrigation wells, Minister's attention called to agitation by agriculturists .. .. .. | 115–118 |
| Question *re* Drinking—Scheme for Kalappanayakkanpatti, Senthamangalam and Namagiripet Town Panchayats, stage of .. .. .. .. .. .. | 101–105 |

Y

| | |
|---|---|
| YELLAMANDA, THIRU P.— | |
| Budget for 1978–79, general discussion on .. .. | 292–294, 295, 296 |

D
V2:1l.32 'N78
N78-146;2
12943

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7. C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9. C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Thanjavore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 3/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-2.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot., Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B. B. Ganguli Street, Calcutta-17.

---

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS ON THE AUTHORITY OF THE CHAIRMAN OF THE LEGISLATIVE COUNCIL.